வினையும் பயனும்

அல்லது

மறுபிறப்பு வரலாறுகள்

★

1. ரோகிணி
2. திருவாதிரை

A. சொக்கலிங்கம்

இலஞ்சி
1957

வினையும் பயனும்

அல்லது

மறுபிறப்பு வரலாறுகள்

★

1. ரோகிணி
2. திருவாதிரை

★

1. தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பர்.
2. நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவன் அன்று ஆங்கால் அல்லற் படுவ தெவன். (திருக்குறள்)

★

A. சொக்கலிங்கம்

இலஞ்சி
1957

விற்பனையாளர்கள் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: May, 1957.

Copies can be had from:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1

IN MEMORY OF

Thiru, I. S. Muthukumaraswamy Pillai Avergal,

Ilanji, Tenkasi Taluk, Thirunelveli Dist.

One of the truest friends I ever had, and who left me desolate abruptly on Thai Pongal Day, 1936.

★

He served the public at various periods of his earthly life as Taluk Board & District Board Member; District Educational council member; President of the Tenkasi Bench Court; Trustee, Tiruchendur Subramaniaswami Devasthanam, Tirukuttalanathaswami Temple, Tiru-Ilanji Kumarar Koil; Member Tinnevelly Devasthanam Committee etc., and above all, acted throughout his entire life as the Peacemaker and unofficial arbitrator in many a local dispute and factions of the surrounding villages.

May Peace be on him and his.

Thai Pongal Day, 1937. *A. C.*

எனது ஆருயிர் நண்பர்

இலஞ்சி, திருவாளர்

I. S. முத்துக்குமாரசுவாமி பிள்ளை அவர்கள்

ஞாபகார்த்தமாக.

அப்பாத்துரைப்பிள்ளை என்ற அருமைப் பெயர் புனைந்த திருவாளர் I. S. முத்துக்குமாரசுவாமி பிள்ளை அவர்கள் 1057-ஆம் ஆண்டு ஆடிமீ 7உ வெள்ளிக்கிழமை அஸ்த நட்சத்திரத்தில் (21st July 1882), தென் தமிழ்நாட்டில், திருக்குற்றாலத்தை யடுத்த இலஞ்சியூரிற் பிறந்து, திருசிராப்பள்ளி சென்று ஆங்கிலம் முதலியன பயின்று, தம் பத்தொன்பதாவது வயதில், ஐப்பசி மாதத்தில், இலஞ்சிப் பெரியார், செல்வர், அ. முத்துக் குமாரசுவாமியா பிள்ளை அவர்களின் மகளாகிய சித்திரப்பதுமை போன்ற இசக்கியம்மை அம்மாளை மணந்து, பல மக்களை ஈன்று இனிது பெற இல்லறம் நடத்தியும், தம் வாழ்நாளில் பல அமையங்களில் தாலுகாபோர்டு, ஜில்லாபோர்டு மெம்பராகவும், தென்காசி பெஞ்சுக்கோர்ட்டுத் தலைவராகவும், ஜில்லாவிற் பெரியதும் நமது நாடெங்கும் புகழ்பெற்றதுமாகிய திருச் செந்தூர்ச் சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், திருக்குற்றாலநாத சுவாமி தேவஸ்தானம் முதலிய ஆலயங்களின் தர்மகர்த்தராகவும் இருந்து, ஊதியமில்லாத இக் கடமைகளை ஒழுங்குபெற நடத்திப் பலருக்கும் நன்மைபுரிந்து பேரும் புகழும் பெற்றதோடு, இலஞ்சியிலும் அதன் சுற்றுக்கிராமங்களிலுமிருந்து நாள் தவறாது தம்வாயில் தேடிவரும் வழக்குகளைச் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போலத் தீர்த்துவைக்கும் உத்தமராகவும், தாம் இறக்கும் வரை பொதுமக்களுக்குத் தொண்டுபுரிந்து, 14-1-1936 ஆகிய 1111-ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று செவ்வாய்க் கிழமை இரவு 2 மணிக்கு, தேய்பிறை ஷஷ்டி திதியில் அஸ்த நக்ஷத்திரம் அடுக்கத் தமது ஐம்பத்து மூன்றரை வயது பூர்த்தி யாகும்போது திடீரெனப் பூதவுடம்பை நீத்தார்கள். அவர்கள் தாமும் தமரும் அமைதியுற இறைவன் அருள்புரிவாராக.

A. C.

முகவுரை

"வீட்டிற்கு வீடு வாயிற்படி உண்டு" என்ற பழமொழிப் படி, உலகத்தில் துன்பம் இல்லாத மக்களைக் காண்பது அரிதினும் அரிது. நாகரிகமும் பணச்செழிப்பும் உள்ள நாடு களிலுங்கூடத் துன்பம் இல்லாமல் இல்லை. "கூழுக்கு உப்பில்லை என்பாருக்கும் பாலுக்குச் சீனியில்லை என்பாருக்கும் துன்பம் துன்பமே," என்றபடி அந் நாடுகளில்தான் துன்பம் அதிகமாக உணரப்படுகின்றது. அவ்விதத் துன்பத்திற்குக் காரண மறியாமல்—அஃதாவது, "தாம் தாம் செய்தவினை தாமே அனுப விப்பர்" என்ற நியதியைச் சிறிதும் அறியாதவராய்—அம் மக்கள், கடவுளையும் மனிதரையும் கண்டகண்டபேரையும் திட்டவும் ஏசவுமாகக் குறைகூறிக்கொண்டு திரிகிறார்கள். அதனால் உலகக் குழப்பம் அதிகரிக்கின்றதே தவிர, அவர்கள் துன்பம் மாறியதாக இல்லை. உலகிலுள்ள துன்பத்தையும் அதற் குக் காரணத்தையும் அதன் நிவாரணத்தையும் நன்கு எடுத்துக் காட்டுவது, "மறுபிறப்பு வரலாறுகள்," என்ற இந் நூல்.

"அன்னை எத்தனை எத்தனை அன்னையோ,
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ!
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ,
பெண்டிர் எத்தனை எத்தனை பெண்டிரோ!
முன்னம் எத்தனை எத்தனை சென்மமோ,
மூடனாய்அடி யேனும் அறிந்திலேன்!
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ,
என்செய்வேன் கச்சி ஏகம்ப நாதனே!"

என்ற பெரியோர் வாக்குக்கு எடுத்துக்காட்டாகும் இந்த நூல், படிப்பவருக்கு, அதன் போக்கிலிருந்து கட்டுக்கதையாகத் தோன் றலாம். ஆனால், "உண்மை கட்டுக்கதையைவிட விசித்திர மானது," என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியிருக்கின்றது. அறிந்தவர், உண்மையைவிட அதிசயமாக வேறொன்றையும் காணமாட்டார்கள். இங்கு பண்டைப் புராணங்களிற்போல இயற்கைக்கு விரோதமான நிகழ்ச்சிகள் எதுவும் காணப்பட வில்லை. அத்துடன் நெற்றிக்கண் திறந்த யாவராயினும், இவற்றை இன்றைக்கு விரும்பினும் கண்கூடாகச் சோதித்துக் கண்டு கொள்ளலாமென்றும், வேண்டிய முயற்சி யெடுப்பவர் அநுபூதி மூலமாகவே அவற்றின் உண்மைகளை ஐயந்திரிபற அறிந்து கொள்ளலாமென்றும், இந் நூலின் காரணராகிய வங்கப்பனி டிவர் உறுதி கூறுகின்றனர்.

தற்காலத்தில், மேல்நாட்டு நாகரிகத்தின் பலனுக, இப் பிறப்பு ஒன்றைத்தவிர முன்பின் பிறப்புகளுண்டோ என்ற ஐயப்பாடு அதிகமாய் உலவுகின்றது. மனிதர் நல்வினை தீவினை களுக்குத் தகுந்த பலன்களும் அவற்றை அவரவரே அனுபவிக்க முன்பின் பிறப்புக்களும் இல்லையாயின், உலகத்தில் பெரிதும் காணப்படும் உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம் யாதென்று அவர் களைக் கேட்போமாயின், அவர்கள் அதற்குச் சரியான காரணம் சொல்லமுடியாதவர்களா யிருக்கின்றனர். பிறவியிலேயே சிலர் கூன், குருடு, செவிடராயும், வறியோராயும் பிறப்பதும், சிலர் நல்ல தேகக்கட்டுடன் செல்வராய்ப் பிறப்பதும், தீயோர் சிலர் தண்டனைக்குப்பதில் உயர்வு பெறுதலும் நல்லோர் துன்புறு தலும் ஏன்? என்று அவர்களிடம் கேட்பின், அதற்குத் தக்க பதில் கிடைப்பதில்லை. மேலும், முற்பிறப்புக்களைக் காணக் கூடிய மகான்கள் இன்றைக்கும் பலர் இருக்கின்றனர். சாதாரண மக்களிலும் அத்தகைய சிலர் அங்கங்கே காணப்படுகின்றனர். 1935-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திய பத்திரிகைகளில் வெளி யிடப்பட்ட சாந்திதேவியின் வரலாற்றை அநேகர் படித் திருக்கலாம். இப்போது டில்லியில் பிறந்திருக்கும் சாந்திதேவி என்னும் பெண்குழந்தை, தான் முற்பிறப்பில் மதுரா நகரத்தில் பெண்ணுகப் பிறந்திருந்ததாகவும், அப்போதைய கணவன் மாமன், மாமி முதலியவர் இன்னின்னுரென்றும் சொல்ல, அங்கு சென்று சோதித்தபோது அவைமுழுவதும் சரியாயிருந்ததையும் மதுரா ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அவள் பூர்விக வீடுவரை யாரும் வழிகாட்டாமலே அப் பெண் சென்றதையும், அவ் வீட்டில் அவள் முற்பிறப்பில் நேர்த்திக் கடனுகப் புதைத்து வைத்திருந்த சிறு பணத்தொகையைக்கூடத் தோண்டி யெடுத் துக் கொடுத்ததையும், பல பிரமுகர்கள் சாட்சியாகப் பத்திரிகை கள் பல வெளியிட்டிருந்தன. அறியவேண்டுமென்னும் ஆவலோடு தேடுவோருக்கு இம்மாதிரியான அனேக சாட்சியங்கள் அகப் படும்.

இன்று மறுபிறப்புண்மையை ஒப்புக்கொள்பவர் இருசாரர் ஆவர். ஒருவகையார் அது தம் அறிவுக்குப் பொருத்தமாவதைக் கண்டு அதனை ஒப்புக்கொள்பவர்; மற்றவர் தம் அனுபவத்தி லிருந்து அதன் உண்மையை எடுத்துக் கூறுபவர்.

உலகத்தில் உடைமைகள், வீடுவாசல்கள், நிலபுலன்கள், பணம் தட்டுமுட்டுகளை மக்களுக்குள் சமமாகப் பங்கிட்டு கொடுக்க இயலும். ஆனல் அறிவையும் ஆற்றல்களையும் இன் துன்பங்களையும் அவ்வாறு செய்வது இயலாதென்பது உலக அனுபவம். நம் பள்ளிகளில் ஒரே வகுப்பில் பல மாண

கல்வி புகட்டப்படுகின்றனர். ஒரேவிதமாக அவர்கள் கற்பிக்கப் படினும் அனைவருக்கும் ஒரே அளவில் அக் கல்வி மூளைக்குள் ஏறுவதில்லை. அவ் வேறுபாடுகளைக் கூர்ந்து ஆராய்வோருக்கு இவ் வேற்றுமைகள் பிறப்பிலேயே ஏற்பட்டுள்ளனவென்றும் அவற்றிற்குக் காரணம் முற்பிறப்பின் பயிற்சி வேறுபாடுகள் ற்றி இருக்கலாமென்றும் ஐயம் நிகழ்கின்றது. அன்றி மேலே கூறியபடி ஒருவன் பிறவியிலேயே கூன் குருடாகப் பிறக் கின்றான்; மற்றொருவன் ஒரு ஊனமின்றியும், ஒருவன் அழகிய ருவத்தோடும், ஒருவன் அருவருப்பான வடிவிலும் பிறப்ப தற்கும் காரணம் புலப்படவில்லை. உடல்நூல் அறிவுக்குறைவால் வை ஏற்படுவன என்று ஒருசாரார் இலகுவில் கூறிவிடுவர். ஆனால் அக் குறைவு அவருக்கு ஏற்படக் காரணமோ அதனை விர்த்திக்கு முறைகளையோ அவர்கள் கூற முடிவதில்லை. அது பான்றே ஒருவன் ஆணாகவும் ஒருத்தி பெண்ணாகவும் ஒருத்தி ரேபியப் பாலைவனத்திலும் ஒருத்தி இந்தியப் பண்பாட்டிலும் ருவன் உகாண்டாக் காட்டுமிராண்டிக் கூட்டத்திலும் ஒருவன் ஸ்கிமோக் குளிரிலும் ஒருவன் ஐரோப்பியச் செழிப்பிலும் திக்கத்திலும் பிறந்து வாழ்ந்து இறப்பதற்கும் காரணம் ளக்குவது கடினமாயிருக்கிறது.

சாலைமரம் சாய்ந்து விழுகின்றது அவ் வழியே கூட்ட கப் பயணஞ்செல்வோரில் ஒன்றிரண்டு பேர் கொல்லப்படுகின் னர். மற்றவர்கள் உயிர் தப்பிவிடுகின்றனர். அவ்வாறே ஆகாய மானம், ரயில், கப்பல் விபத்துக்களிலும் காணப்படுகின்றது. டு இடிந்து விழுகின்றது. உள்ளிருப்பவர் யாவரும் இறந்து ஒரு குழந்தை மாத்திரம் சரிந்து விழுந்த உத்திரத்தின் ப்பில் உறங்கிக்கொண்டிருக்கிறது. இவையெல்லாம் மாத்தாய், தற்செயலாய் நடைபெறுவன என்பர் ஒரு ர். ஆனால் விண்ணில் சூரிய சந்திரர்களும் மண்ணில் மரஞ் களும் ஆகாயத்தில் மழையும் வெயிலும் நியதிகளை, வது காரணகாரிய முறைகளைப் பின்பற்றி நடக்க, இந்த த்துக்களும் லாப நஷ்டங்களும் மாத்திரம் அகஸ்மாத்தாக டபெறுகின்றனவென்றால், அஃது ஒருசாராருக்குத் திருப்தி ிப்பதில்லை. அதனால் அவர்கள் முற்பிறப்புகள் காரணமாக, ப்போது இயற்றப்பட்ட நல்வினை தீவினைகளுக்குப் பலனாக வை ஏற்படுகின்றன என்று நம்புகிறார்கள். அன்னோர், "இன்பமும் துன்பமும் தான்தர வருமே," என்பதும், "நெல் தைத்தவன் நெல் அறுப்பான், புல் விதைத்தவன் புல்லையே றுப்பான்," என்பதும் வினைக்குத் தகுந்தபலன் என்ற ணகாரிய நியதிகளெனக் கொண்டு, அதன்படி நல்லனசெய்து

தீயனவற்றை விலக்க முயலுகிறார்கள். அவர்களுக்கு அதிகமும் உதவுவன இந் நூற் படிப்பினைகள்.

இனி மற்றொரு மிகச் சிறு கூட்டத்தினர், மெய் வாய் கண் மூக்குச் செவிகளைக் கொண்டு நாம் சாதாரண மக்கள் இவ் வுல நிகழ்ச்சிகளை அறிவதுபோல, தமது சூட்சும உடம்பின் விரி பெற்ற புலன்களைக்கொண்டு மனிதனுடைய மறுபிறப்புக்களை நேரே கண்டறிகின்றனர். ஒருவன் பிறந்ததுமுதல் இறக்கு வரை நாம் அவனைக் கண்கூடாகக் காண்பதுபோல, இந்த யோக காட்சியர் மனிதன் ஒரு ஸ்தூல உடம்பில் இருக்கும்போதும் அதை நீத்துவிட்டு இறந்தானென்று சொல்லப்பட்டபோதும் அடுத்த ஸ்தூல உடம்பெடுத்து உலகிற் பிறக்கும்போதும் ஒரே தொடர்ச்சியாக அவனைக் காண்கின்றனர். அத்தகையோரே இ மறுபிறப்புண்மையைப்பற்றி யாதொரு ஐயப்பாடுமின்றி ஊன கண் மக்களாகிய நமக்கு அறிவுறுத்தி, அதனாலாகும் கார காரிய ஒழுங்குகளைப் பகுத்தறிவோடு கையாண்டு இன் வாழ்க்கையைப் பெறுமாறு ஏவுகின்றனர். அன்னோர் வாக் விருந்து எழுந்ததே இந் நூலின்மூலம்.

உலகத்தில் இன்பமும் துன்பமும் எங்கும் மலிந்து கலந்துமே காணப்படுகின்றன. ஒருவன் கண்ணைக் கட்டி கொண்டு காட்டுக்குள் புகுவானானால், அங்கு மேடுபள்ளங்களி இடறி விழுந்து கைகால்களை ஒடித்துக்கொண்டு துன்பப்படுவா கண்ணைத் திறந்துகொண்டு நடப்பானானால், சுகமாக நினைத் இடம் போய்ச்சேருவான். அவ்விதமே, வழிதெரியாமல் குரு டுப்போக்காக உயிர் வாழ்பவனுக்குத் துன்பமே அதிகமு நேரும். உலகத்தில் காணும் இன்பதுன்பங்களுக்கு உ காரணங்களை அறிந்தவன், விலக்கவேண்டியவற்றை இன்பகரமாகவே உலகவாழ்க்கையை நடத்தக்கூடும். அ வேண்டிய உண்மைகளையே இந் நூல் ஒருசிறிது விளக்குகின்

இந் நூலில், விகாசமுறை, மரணத்தின்பின் மனிதர் நி மறுபிறப்பு, கர்மநியதி, ஜீவன்முக்தி, வித்தகச் சித்தர் முதலியவற்றைப்பற்றி வேறு நூல்களில் ஒருங்கே கா கூடாதனவும் அறிவு விளக்கக்கூடியவையுமான பல குறிப்பு சமயத்திற்குத் தக்கவாறு ஆங்காங்கேசேர்க்கப்பட்டிருக்கின்ற இந்த ஒரு நூலைக் கற்பதே ஒரு மதத்திலுள்ள பல நூல்களை கற்பதற்கு ஒப்பாகும்.

இனி, "உலகம் இறைவனுடைய திருவிளையாடல்" என்ப இந்துமதத்தின் கொள்கை. அந்த நாடகத்தில், அவரவர் வி குத் தக்கபடி ஒவ்வொரு ஆன்மாவும், ஆணாகவும் பெண்ணாக

அரசனாகவும் அடிமையாகவும், பறையனாகவும் பிராமணனாகவும், இந்துவாகவும் கிறிஸ்தவனாகவும் இப்படிப் பல பிறவிகளில் பல வேஷங்கொண்டு நடிக்கிறபடியால், படிப்போருக்கு மனக் குழப்பம் உண்டாகாதிருக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஆரம்பமுதல் கடைசிவரையில் ஒரே பெயர் கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஓர் ஆன்மாவின் பிறவிகளனைத்தையும் இந்தச் சிறிய நூலுக்குள் அடக்குவது இயலாதாகையால், சமீபத்திலெடுத்த அதன் சில பிறவிகள் மாத்திரமே இங்குச் சுருங்கக் கூறப்பட்டிருக்கின்றன. பெயர்கள் எளிதில் ஞாபகத்திலிருக்கும் பொருட்டுத் திதிகள், நட்சத்திரங்கள், மாதங்கள், வாரங்கள் இவற்றின் பெயர்களே மிகுதியும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. லக்கினங்களின் பெயர்கொண்ட ஆன்மாக்கள், இப்போது ஜீவன்முத்திநிலையில் நிற்பவர்கள்; பிறப்பு இறப்பைக் கடந்த பெரியார்கள்; இறைவனோடு ஒன்றிநிற்கும் மகரிஷிகள்; வித்தகச் சித்தர்கண மாதவர்கள். அவர்கள் தேவர், மகவி என்ற அடைமொழி கொடுக்கப்பெற்றிருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் இச் சரித்திர ஆரம்பகாலத்திற்குப்பின் ஜீவன்முத்தி யடைந்தவர்; தற்கால உலக அதிகார புருஷர்; இன்றைய ஆன்மாக்களுக்குக் குருநாதர்கள். அவர்களைப்பற்றி விரிவாக அறிய விரும்புவோர் "The Masters and The Path" என்ற ஆங்கில நூலில் கண்டுகொள்க.

கற்றாரும் மற்றாரும் எளிதில் அறியும் பொருட்டு இந் நூல் தமிழில் மிக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. வலியாரும் எளியாரும் வாங்கிப்படிக்கும் பொருட்டு, இஃது அடக்க விலைக்கே விற்கப்படுகின்றது. லாபத்திற்காக எழுதப்படாமல், பரோபகார நோக்கத்துடனே இஃது எழுதப்பட்டிருத்தலால், "இதை எல்லாரும் வாங்கிப்படித்து, இதில் காணும் உண்மைகளின்படி நடந்து துன்பம் நீங்கி இன்பம் எய்துவாராக," என்பதே என்னுடைய மனப்பூர்வமான பிரார்த்தனை.

A. Chockalingam.

கல்வி புகட்டப்படுகின்றனர். ஒரேவிதமாக அவர்கள் கற்பிக்கப் படினும் அனைவருக்கும் ஒரே அளவில் அக் கல்வி மூளைக்குள் ஏறுவதில்லை. அவ் வேறுபாடுகளைக் கூர்ந்து ஆராய்வோருக்கு இவ் வேற்றுமைகள் பிறப்பிலேயே ஏற்பட்டுள்ளனவென்றும் அவற்றிற்குக் காரணம் முற்பிறப்பின் பயிற்சி வேறுபாடுகள் பற்றி இருக்கலாமென்றும் ஐயம் நிகழ்கின்றது. அன்றி மேலே கூறியபடி ஒருவன் பிறவியிலேயே கூன் குருடாகப் பிறக்கின்றான்; மற்றொருவன் ஒரு ஊனமின்றியும், ஒருவன் அழகிய உருவத்தோடும், ஒருவன் அருவருப்பான வடிவிலும் பிறப்பதற்கும் காரணம் புலப்படவில்லை. உடல்நூல் அறிவுக்குறைவால் அவை ஏற்படுவன என்று ஒருசாரார் இலகுவில் கூறிவிடுவர். ஆனால் அக் குறைவு அவருக்கு ஏற்படக் காரணமோ அதனை விர்த்திக்கு முறைகளையோ அவர்கள் கூற முடிவதில்லை. அது போன்றே ஒருவன் ஆணாகவும் ஒருத்தி பெண்ணாகவும் ஒருத்தி ஐரோப்பிய பாலைவனத்திலும் ஒருத்தி இந்தியப் பண்பாட்டிலும் ஒருவன் உகாண்டாக் காட்டுமிராண்டிக் கூட்டத்திலும் ஒருவன் எஸ்கிமோக் குளிரிலும் ஒருவன் ஐரோப்பியச் செழிப்பிலும் ...திக்கத்திலும் பிறந்து வாழ்ந்து இறப்பதற்கும் காரணம் ...ளக்குவது கடினமாயிருக்கிறது.

சாலைமரம் சாய்ந்து விழுகின்றது அவ் வழியே கூட்டமாகப் பயணஞ்செல்வோரில் ஒன்றிரண்டு பேர் கொல்லப்படுகின்றனர். மற்றவர்கள் உயிர் தப்பிவிடுகின்றனர். அவ்வாறே ஆகாய விமானம், ரயில், கப்பல் விபத்துக்களிலும் காணப்படுகின்றது. வீடு இடிந்து விழுகின்றது. உள்ளிருப்பவர் யாவரும் இறந்து ... ஒரு குழந்தை மாத்திரம் சரிந்து விழுந்த உத்திரத்தின் ...ப்பில் உறங்கிக்கொண்டிருக்கிறது. இவையெல்லாம் ...மாத்தாய், தற்செயலாய் நடைபெறுவன என்பர் ஒரு ...ர். ஆனால் விண்ணில் சூரிய சந்திரர்களும் மண்ணில் மரங் ...களும் ஆகாயத்தில் மழையும் வெயிலும் நியதிகளை, ...வது காரணகாரிய முறைகளைப் பின்பற்றி நடக்க, இந்த ...த்துக்களும் லாப நஷ்டங்களும் மாத்திரம் அகஸ்மாத்தாக ...டபெறுகின்றனவென்றால், அஃது ஒருசாராருக்குத் திருப்தி ...ளிப்பதில்லை. அதனால் அவர்கள் முற்பிறப்புகள் காரணமாக, ...ப்போது இயற்றப்பட்ட நல்வினை தீவினைகளுக்குப் பலனாக ...வை ஏற்படுகின்றன என்று நம்புகிறார்கள். அன்னோர், "இன்பமும் துன்பமும் தான்தர வருமே," என்பதும், "நெல் விதைத்தவன் நெல் அறுப்பான், புல் விதைத்தவன் புல்லையே அறுப்பான்," என்பதும் வினைக்குத் தகுந்தபலன் என்ற காரணகாரிய நியதிகளெனக்கொண்டு, அதன்படி நல்லனசெய்து

தீயனவற்றை விலக்க முயலுகிறார்கள். அவர்களுக்கு அதிகமும் உதவுவன இந் நூற் படிப்பினைகள்.

இனி மற்றொரு மிகச் சிறு கூட்டத்தினர், மெய் வாய் கண் மூக்குச் செவிகளைக் கொண்டு நாம் சாதாரண மக்கள் இவ் வுல நிகழ்ச்சிகளை அறிவதுபோல, தமது சூட்சும உடம்பின் விரி பெற்ற புலன்களைக்கொண்டு மனிதனுடைய மறுபிறப்புக்கள் நேரே கண்டறிகின்றனர். ஒருவன் பிறந்ததுமுதல் இறக்கு வரை நாம் அவனைக் கண்கூடாகக் காண்பதுபோல, இந்த யோக காட்சியர் மனிதன் ஒரு ஸ்தூல உடம்பில் இருக்கும்போதுப் அதை நீத்துவிட்டு இறந்தானென்று சொல்லப்பட்டபோதுப் அடுத்த ஸ்தூல உடம்பெடுத்து உலகிற் பிறக்கும்போதும் ஒ தொடர்ச்சியாக அவனைக் காண்கின்றனர். அத்தகையோரே இ மறுபிறப்புண்மையைப்பற்றி யாதொரு ஐயப்பாடுமின்றி ஊன கண் மக்களாகிய நமக்கு அறிவுறுத்தி, அதனாலாகும் கார காரிய ஒழுங்குகளைப் பகுத்தறிவோடு கையாண்டு இன் வாழ்க்கையைப் பெறுமாறு ஏவுகின்றனர். அன்னோர் வாக் லிருந்து எழுந்ததே இந் நூலின்மூலம்.

உலகத்தில் இன்பமும் துன்பமும் எங்கும் மலிந்து கலந்துமே காணப்படுகின்றன. ஒருவன் கண்ணைக் கட்டி கொண்டு காட்டுக்குள் புகுவானானால், அங்கு மேடுபள்ளங்கள் இடறி விழுந்து கைகால்களை ஒடித்துக்கொண்டு துன்பப்படுவா கண்ணைத் திறந்துகொண்டு நடப்பானானால், சுகமாக நினை இடம் போய்ச்சேருவான். அவ்விதமே, வழிதெரியாமல் குரு டுப்போக்காக உயிர் வாழ்பவனுக்குத் துன்பமே அதிகமு நேரும். உலகத்தில் காணும் இன்பதுன்பங்களுக்கு உ காரணங்களை அறிந்தவன், விலக்கவேண்டியவற்றை இன்பகரமாகவே உலகவாழ்க்கையை நடத்தக்கூடும். அ வேண்டிய உண்மைகளையே இந் நூல் ஒருசிறிது விளக்குகின்

இந் நூலில், விகாசமுறை, மரணத்தின்பின் மனிதர் நிலை மறுபிறப்பு, கர்மநியதி, ஜீவன்முத்தி, வித்தகச் சித்தர் முதலியவற்றைப்பற்றி வேறு நூல்களில் ஒருங்கே கா கூடாதனவும் அறிவு விளக்கக்கூடியவையுமான பல குறிப்பு சமயத்திற்குத் தக்கவாறு ஆங்காங்கேசேர்க்கப்பட்டிருக்கின்ற இந்த ஒரு நூலைக் கற்பதே ஒரு மதத்திலுள்ள பல நூல்களை கற்பதற்கு ஒப்பாகும்.

இனி, "உலகம் இறைவனுடைய திருவிளையாடல்" என்ப இந்துமதத்தின் கொள்கை. அந்த நாடகத்தில், அவரவர் வினை குத் தக்கபடி ஒவ்வொரு ஆன்மாவும், ஆணாகவும் பெண்ணாக

பொருளடக்கம்

1. ரோகிணி
(ORION)

2. திருவாதிரை
(ERATO)

பக்கம்

வினையும் பயனும்

அல்லது

மறுபிறப்பு வரலாறுகள்

★

1. ரோகிணி

(ORION)

★

தமிழாக்கம் :

A. சொக்கலிங்கம்

இலஞ்சி

வினையும் பயனும்

அல்லது

மறுபிறப்பு வரலாறுகள்

விளக்க உரை

"மறுபிறப்பு" என்று ஒன்று உண்டா இல்லையா என்பது பற்றி இங்கு ஆராய வரவில்லை. ஒன்றின் உண்மையானது சுருதி, யுக்தி, அநுபவம் என்ற மூன்று முறைகளால் தெளியப் படும். அவற்றுள் அநுபவம் என்பது அவரவரே அறிவது. அவனவன் சுய அநுபவம் எய்தாதவரை, அத்துறையில் அநுபூதிமான் கூற்றை உண்மை என்று நம்பி ஒப்புக்கொள்வதே சுருதி எனப்படுவது. அந்தச் சுருதி வாக்குகளைக் கற்றுத் தம் தம் யுக்திக்கேற்றவாறு தீர்மானித்துக் கொள்வதே அவரவருக்கு அச்சமயம் ஏற்பட்ட உண்மை; அதுவே அவரவர் நிற்கும் சமய ?லை. இக்காலத்தில், இறப்பு பிறப்புகளைப்பற்றிக் கூறப்பட் ள்ள நம் பண்டைய நூல்களேயன்றி, மேனுடுகளில் மரித் தாரை வருவித்துப் பேசும் ஒருவகைக் கூட்டத்தார் அக்கூட் ங்களில் (Spiritualistic Seances) நடைபெறும் சம்பாஷணை ளைத் தொகுத்து ஆயிரக்கணக்கான நூல்களை வெளியிட்டுள் ளனர். அவற்றையும் கற்று நோக்கி அவரவர் யுக்திக்குப் பொருந்தியவாறு இம் மறுபிறப்புண்மையைத் தீர்மானித்துக் கொள்க. இங்கு இனிக் கூறப்போவது மறுபிறப்புண்டென்று கொள்வோருக்கு மாத்திரமேயாம்.

ஓர் அறையில் ஒரு நிலைக்கண்ணுடி முன்பு நின்று அதனுள் நோக்குவோமானுல், அங்கு நம்முடைய சாயையும் நமக்குப் பின் னுள்ள வேறு சில பொருள்களின் சாயைகளும் புலப்படும். ்ந்த இடத்தைவிட்டு வலப்புறமோ இடப்புறமோ நகர்ந்து

கொண்டே போவோமானல், முன்னைய பொருள்கள் மறைந்து, அப்போது காணப்படாத வேறு வேறு புதியபொருள்கள் அங்குப் புலப்படும். அதனல் முன்னைய பொருள்களின் சாயை அங்கு இல்லையென்று சொல்வதற்கில்லை; ஏனெனில் அச்சமயம் வேறொருவன் பழைய இடத்தில் நிற்பானனல் அவனுக்கு அவை யாவும் விளங்கிக்கொண்டே யிருக்கும். இதில் வேறொரு அற்புதம் யாதெனில் வலப்புறம், இடப்புறமாக நாம் நகர்ந்து கொண்டே போகும்போது அறையிலுள்ள பொருள்களில் கண்ணாடியில் காணவே ஒண்ணாதென்று நாம் நம்பும் பொருள்களுங் கூட அங்குக் காணப்படுவது நமக்கே அதிசயமாக இருக்கும். இதை அநுபவத்திற் காண்க. அப்போது அவ்வறையிலுள்ள பொருள்கள் யாவுமே அக்கண்ணாடியிற் புதைந்து கிடக்கின்றன வென்றும், நின்று நோக்கும் இடத்தைப் பொறுத்து அவை யாவற்றையும் காணலாகுமென்றும் நமக்குப் புலப்படும்.

அம்மாதிரியே நூறு ரேடியோப் பெட்டிகளை ஒரே இடத்தில் வைத்து, நூறு வெவ்வேறு ஊர்களை நோக்கித் திருப்புவோமானல், அந்த நூறு ஊர்க் கூச்சல்களும் ஒன்று திரண்டு அவ்விடத்தைப் பாதாள லோகமாக மாற்றிவிடும். ஆனல் ஒரு பெட்டி மாத்திரம் தொழிற்படும்போது ஓர் ஊர் நிகழ்ச்சி மாத்திரமே நமக்குக் கேட்கப்படும். ஆயினும், மற்றத் தொண்ணூற்றொன்பது ஊர் நிகழ்ச்சிகளும் அங்கு ஆகாயத்தில் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கின்றன வென்பதை இன்று சிறுவர்களும் நன்கறிவர்; வேண்டுவது அவற்றைக் கேட்க வல்ல கருவி யொன்றே. அம்மாதிரியே "டெலிவிஷன்" (Television) என்ற கம்பியில்லாக் காட்சியும். ஒரே இடத்தில் அக்கருவிகள் பலவற்றை யமைத்து, உலகிலுள்ள பல ஊர் நிகழ்ச்சிகளையும் ஒரே நேரத்தில் காணலாகும். அதனல் உலக நிகழ்ச்சிகள் யாவும் அங்குள்ள ஆகாயத்திற் பதிந்து கிடக்கின்றனவென்றே பெறப்படும். அவற்றைக் காண்பதற்கு வேண்டுவது தக்க கருவி யொன்றேயாம்.

சென்ற சிலகாலமாக, ஐரோப்பா அமெரிக்கா முதலிய வெள்ளையர் நாடுகளில் புதுவகையான நிகழ்ச்சியொன்று நடைபெற்றுவருகின்றது. அதில், பணஆசை காரணமாகப் பல ஏமாற்றங்கள் நடைபெறினும், ஒருசில உண்மை நிகழ்ச்சிகளாகவுங் காணப்படுகின்றன. மக்களிற் சிலருடைய உடம்புகளில் நரம்புகள் நெகிழ்ச்சி பெற்றிருப்பதால், அவர்கள் மெஸ்மரிஸம், ஹிப்நட்டிஸம் போன்ற வசீகர சக்திகளால் எளிதில் ஒருவகை மயக்க உறக்கத்தை (Trance) அடைகின்றனர். அந்த நிலையில்

அவர்கள் உடம்பின்மீது, அதாவது கை, நெற்றி முதலிய இடங்களில் யாதாமொரு பொருளை வைத்தால், அப்பொருள் சம்பந்தமான பல பழைய நிகழ்ச்சிகளை அவர்கள் கண்ணால் கண்டனுபவிப்பது போலக் கூறிவிடுகின்றனர். ஒரு மோதிரத்தை அம்மாதிரி அவர்கள்மீது வைப்போமானால், அம்மோதிரத்தின் சொந்தக்காரன், அவன் ஊர், பெயர் முதலியன, அம்மோதிரத்தைச் செய்தவன், அதன் பொன் விளைந்த இடம் முதலிய பல குறிப்புகள் வெளியிடப்படுகின்றன. அந்தக் கருவி (Medium) சத்தியவந்தனாயிருக்கும்போது அவையாவும் உண்மை நிகழ்ச்சிகளாகவே காணப்படுகின்றன. இச்சோதனைகளைப் பலகாலமாகப் பலவேறு இடங்களில் பல பல மக்களைக் கொண்டு நடத்திப் பார்த்து, அந்த ஆராய்ச்சியின் பலனாக அந்நிகழ்ச்சிகளில் நம்பிக்கை கொண்டுள்ள மேதாவிகள், புகைப்படமெடுக்கிற கண்ணாடியில் அதிற்படும் உருவங்கள் பதிந்து கொள்கிறமாதிரி, உலகில் ஒவ்வொருபொருளின் ஒவ்வொரு அணுவிலும் அதைச் சுற்றி நடைபெறுங் காரியங்களெல்லாம் சித்திர ரூபமாய்ப் படம் பிடித்ததுபோலப் பதிந்துகிடக்கலாமென்றும், அவற்றை அகக்கண்கொண்டு காணக்கூடியவருக்கு இன்றைய திரைப்படம் போல அவை வெளியாகுமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்கு நேரடியான அகக்கண் பார்வையில்லாமையால், அவர்கள் உண்மை இதுவென வரையறுத்துக் கூறமாட்டாது தயங்குகின்றனர்.

இனி, நம் தமிழ் நாட்டில், "பெண்கள் பாடல்" என்றும், "புகழேந்தி பாடல்" என்றும் பேர்கொண்ட ஒருவகைத் தமிழ் நூல்கள் நடமாடுவதைப் பலர் அறிந்திருப்பர். அவற்றுள் சித்திர புத்திர நயினார் கதை என்பது ஒன்று. அது இறைவனுடைய கணக்கராகிய சித்திர புத்திரர் வரலாற்றைக் கூறுவது. புராண இதிகாசங்கள் வெறும் ஆபாசக் களஞ்சியங்களென்று நினைக்கப்படும் இந்த நவநாகரிகக்காலத்தில், இறைவன் இருப்பைப்பற்றியே மக்கள் ஐயப்படும்போது, அந்த இறைவனுக்கு ஒரு கணக்கரும் உளர் என்றால் அது ஒரு கேலிக் கூத்தாகவே முடியும். அதனால் இறைவனைப்பற்றியோ அவருடைய கணக்கரைப்பற்றியோ ஒன்றும் ஆராயாமல், அந்த நூலிலுள்ள ஒன்றிரண்டு விஷயங்களை மாத்திரம் இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்ற ஆங்கிலேயர் இன்றைய மேனாட்டு விஞ்ஞானிகளுள் ஒரு பெரும் மேதையர். அவர், "அணுவின் பாகங்களாகிய அணுக்கருவும் மின்னுருக்களும் (Nucleus and Electrons) பொருள்களல்ல, அவை மின்சார சக்தியின் சுழற்சித் தோற்றங்களே" யென்று கூறும் தற்கால விஞ்ஞான முடிவைக்

கண்டு, "பொருள்கள்" என்பது ஒன்றுமே இல்லையென்றும், எல்லாம் நினைவுருவங்களே (எண்ண உருவங்கள்) என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இதுவே நம் பண்டைய நூல்களில் "அண்டமெல்லாம் இறைவனுடைய சங்கற்பம்," அஃதாவது நினைவுருவம், பாவனை என்று கூறப்பட்டுள்ளது. இதனை "பிரம்மாவின் மனத்திலிருந்து உலகம் பிறந்தது," என்றும் "பிரம்மா தியானத்தில் அமர்ந்து உலகை உண்டாக்கினார்," என்றும் கூறுவதுமுண்டு. இப்போது சித்திரபுத்திர நயினர் கதையைக் கவனிப்போம்:

"சிவனார் கயிலையினிற் சிறப்பாயிருக்கையிலே,
அரனார் மிக மகிழ்ந்து ஆனபராசக்தியுடன்,
கேளாய் உமையவளே கிருபையுடன் சொல்லுகிறேன்
...ழின் விதிப்படியே உள்ளபடியே உலகில்
அவரவர் செய்த புண்யபாவங்கள் தானறியார்
பிறர் சாட்சியால் கணக்குப் பிரபஞ்சந்தானிருக்கும்
இந்த வகைக்கணக்கு எழுதி வரும்படிக்கு
நல்வினைகள் தீவினைகள் நன்றாய் எழுதிவர."

ஒரு கணக்கன் வேண்டுமென்று கூறுகின்றனர்.

"என்றரனார் சொல்ல இயல்பான பார்வதியும்,
நல்லதுதான் சொல்லவந்தீர் நாயகரே உம்முடைய
திருவுளத்துக் கேற்றபடி செய்யுமென்றாள் பார்வதியும்.
இருந்து மிகப்பேசி ஈசரு மேது சொல்வார்,"

பூமாதை நோக்கிப் பொற்பலகையும் சித்திரக்கோலும் பஞ்சவர்ணங்களும் கொண்டுவரச் சொல்ல, அந்தப்படியே அம்மை உமை கொண்டுவர, அரனார் பஞ்சவர்ணங்களை நெறியாகச் சேர்த்துப்,

"பால் நிறமுமாகப் பாவித்தார் பலகையின் மேல்,
சாலவே தம்மைப் போலாக வென்று தயாநிதியும்
கோலமுடனிருக்கக் குறித்தாரே சித்திரத்தில்.
தம்மைப் போலிருக்கவென்று தானே யெழுதலுற்றார்."

பின், "சித்திரத்தைப் பார்த்துப் புத்திரரை அழையு"மென்று திரிபுரையிடம் கூற,

"ஆருமறியாத அரனார் தம் பொருளால்"

சித்திரத்திலே யுதித்த புத்திரனைச் சித்திரபுத்திரர் மாதாகையில் பிறந்தனர்.

இது சித்திரபுத்திரர் பிறப்பைக் கூறுவது. இங்குக் கயிலை எனப்படுவது இமயத்தைச் சேர்ந்த கயிலையங்கிரியல்ல; சப்த உலகங்களுக்கும் அப்பாலான நாதவிந்து தத்துவ லோகத்தை. இதனை அதிட்டித்து நிற்பவர் சிவமும் சத்தியுமாவர். இந்தச் சித்திரபுத்திரர் பிறப்புக்கு முன் நாதவிந்து லோகத்தைத் தவிர வேறு உலகங்கள் எவையுமில்லை. அவை யாவும் பிரளயத்தில் அடங்கிக் கிடக்கின்றன. புதிய சிருஷ்டி தொடங்க வேண்டிய சமயம் வரவும், இறைவன் புதிய பரிணம முறையைச் சங்கற்பஞ் செய்கின்றனர். இங்கு "பாவித்தார்" என்ற பதமும், "சாலவே தம்மைப்போலாக வென்று, கோலமுடனிருக்கக் குறித்தார்," என்பதும், "தம்மைப்போ லிருக்கவென்று தானே யெழுத லுற்றார்" என்பதும் கூர்ந்து ஆராயத்தக்கது. இறைவனுடைய ஆதிப் படைப்பாகிய இந்தப் பாவனைச் சித்திரத்தை, "அபர ஜாதிகளை" பிளேட்டோ (Plato) என்ற கிரேக்க ஞானியர் "அபர ஜாதி வடிவங்கள்" என்ற "பரிணம லட்சிய உலகம்" (The Archetypal World) என்றழைக்கின்றனர். இந்தப் பரிணமப் படம் நாதவிந்து லோகமாகும். இது நம் பண்டை நூல்களில் "அபரஜாதி உலகம்" என்றழைக்கப்படுகிறது. கயிலையிலேயே உள்ளது. சித்திரபுத்திரர் கதையின்படி, இந்திரன் பின்னர் கடுந்தவம் புரிந்து சித்திரபுத்திரரைக் கீழுலகங்களுக்கு இறங்கச் செய்கின்றான்; அஃதாவது, பரிணம முறை என்ற விகாசத் திட்டத்தின்படி கீழுலகங்களும், "நீக்கி முன் எனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்த" ஆன்ம வர்க்கங்களும் படிப்படியாக ஸ்தூல நிலைக்கு வருகின்றன. இந்தப் பரிணம முறையாகிய விகாச முறை, முன்னேக்கி நடப்பதற்கு இன்றி யமையாத இரு கால்களாக இருப்பன, கர்ம நியதியும் மறு பிறப்பு நியதியுமாம். கர்ம நியதி என்பது "தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பர்." என்ற ஒழுங்கு. ஆனல், பலவகைப் பட்ட கர்மங்கள் யாவும் ஒரே பிறப்பினுள் பயனுக்கு வர இயலா தாகையால், கர்ம நியதியிலிருந்து மறுபிறப்பு நியதி வலிந்து கொள்ளாமலே தானே பெறப்படும். பலவகைப்பட்ட மரங்கள் பலன் கொடுக்கும் வயது, பருவ வேறுபாடுகள் போன்றதே இது. இந்தச் சித்திரபுத்திரருக்குச் சித்திரகுப்தர் என்ற வேறொரு பெயரும் உண்டு; அதாவது, ஊனக் கண்ணுக்குப் புலப்படாத குப்தமான, மறைவான, சித்திர உருவினர் என்பது அதன் பொருள். இக்கருத்தை (Ideation of the universe) என்று இன்றைய மேல்நாட்டுத் தத்துவ ஞானிகள் கூறுகின்றனர்.

இங்ஙனம் தோன்றிய சித்திரபுத்திரர் இறைவனைத் தெண்ட னிட்டு நிற்க,

"நிற்குமந்த உத்தமரை நீலகண்டர் தான்பார்த்து,
எங்களுட மனதில் இருக்கும் நினைவுகளும்
தேவர், அசுரர், ரிஷிமுனிகள், மாதவர்கள்
எறும்புகடை யானைதலை எண்பத்து நாலுநூ
றுயிரம் யோனிபேதம் ஆகுமுயிர்க ளெல்லாம்
செய்கின்ற தெல்லாம் திறமா யெழுதுமென்றார்,
கைலாசத்துள்ள கணக்கெல்லாம் எழுதுமென்றார்,
மகமேரு நற்கணக்கும் வைகுண்ட நற்கணக்கும்
பிரமலோகக் கணக்கும் பின்பு மற்றுமுள்ள தெல்லாம்
எல்லாக் கணக்கும் எழுதவருள் கொடுத்து
அதிகாரஞ் செய்கணக்கும் ஐயனே தந்தோமென்றார்."

கணக்கை ஒப்புக்கொண்டு, தன்னை வணங்கி நிற்கும் மைந்தனை அம்மையார் அன்போடு நோக்கவும், தாயுள்ளம் தயங்குகின்றது. "பையனோ சிறு பிள்ளை, மனிதரோ பலபல யுகங்களாகக் கச்சேரி கரையேறி அழிவழக்காடுவதில் தேர்ச்சி பெற்றவர்கள்; கண்கண்ட சாட்சிகளையே கலைத்து விடுவார்கள். அவருக்கு ஒருபடி மேற்போனவர்கள் அவர்களைச் சுரண்டிப் பிழைக்கும் வழக்கறிஞர்கள். அவர்கள் கையில் இச்சிறு பிள்ளை எப்பாடு படுமோ? அவர்களை எதிர்த்து வழக்காட இவனலா ஆகப் போகின்றது!" என்று எண்ணுகின்றாள். அன்னை பராசக்திக்கு ஆகாதது என்ன உண்டு! உடனே அவள் அதற்குப் பரிகாரமும் அமைத்து விடுகின்றாள். "அப்பா மகனே, மனம் மொழி மெய்களாலாகும்,

"கரும நிழல்வந்து கணக்கில் தினசரியும்
எழுதித் தொகைபடுத்தி இயற்றும் பயன்படியே
பழுதுகள் வாராமல் பார்த்தவுடன் அவ்வேடு
எதிர்த்தவர்கள் வாசிக்க இந்தவரம் தந்தோம் நாம்.
தடுத்து அவர்கள் பேசாமல் தன்னிழலே சாட்சி சொல்லும்.
இச்சாட்சி வந்து இயல்பாய்க் கணக்கெழுதும்.
உனக்குப் பிரயாசை ஒன்றுமில்லை என்று சொல்ல,"

வையகம் வாழவென்று அன்றுடம் கணக்கு எழுதுகிறார் உத்தமனார்.


"இருந்து கணக்கு எழுதுகிறார் உத்தமனார்
சிவனார்தம் வாசலிலே சிறப்பாக எழுதுகிறார்."

இவை சித்திரபுத்திரர் கதையிலுள்ள பாட்டு வரிகள். சித்திரமெழுத்து முதல் முதலுண்டான விதம் கிரேக்க நாட்டுக் கதையொன்றில் கூறப்படுகின்றது. ஒரு வீரன் போருக்குச் செல்லுகின்றான்; அவனுடைய காதலி அவனைச் சுவரருகே

நிறுத்தி அவன் நிழலைச் சுவரில் வரைந்து கொள்கிறாள். அதுவே சித்திரக் கலையின் ஆரம்பம் என்பது அந்நாட்டுக் கொள்கை. சூட்சுமமான சித்திரங்களுக்கு நிழல் என்ற பெயர் மிகப் பொருத்தமாகும். இந்தக் குப்தமான நிழல்கள் செயலால் மாத்திரமன்றி எண்ணத்தாலும் உண்டாகுமென்று தெரிகிறது. இந்த நினைவுருவங்கள், யோகக் காட்சியாகும் நெற்றிக்கண் ஆராய்ச்சி மூலம் எழுதப்பட்டுள்ள "நினைவுருவங்கள்" (Thought Forms) என்ற திவ்ய ஞான (தியாஸபி) நூலில் பல சித்திரப் படங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

இந்தச் சித்திரபுத்திரர் வரலாற்றிலிருந்து, எந்த அண்டத்தில், எந்த மூலையில், யாது நடப்பினும், அது சொல்லாயினும் செயலாயினும் நினைவாயினும், அவை யாவும் சித்திரமாகப் பிறந்து (Matter) மாயையில் பதிந்து கிடக்குமென்றும், அப் பதிவு இறைவனுடைய சங்கற்பமாகிய இயற்கை நியதியின்படி நடைபெறுவதால், அப்படத்தில் இம்மியும் பிழை இருத்தல் இயலாதென்றும், அத் திரைப்படத்தை ஆராய வல்லவருக்குப் பண்டு யுகம் யுகமாக நடந்த பழங் கதைகளெல்லாம் கண்ணாடியிற்போல காணப்படுமென்றும் பெறப்படுகின்றது. இப்படங்களை ஆராயும் ஆற்றல், யோகப் பயிற்சியின் பலனாகும் நெற்றிக் கண் பார்வையால் பெறப்படுவதொன்றென்று அறிஞர் கூறுகின்றனர்.

சென்னையில், அடையாற்றில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டுள்ள அகில உலக சங்கமாகிய (Theosophical Society) திவ்ய ஞான சங்கத்துப் பெரியாருள், அனிபெஸன்த் அம்மையாரும் பிஷப் லெட்பீற்றர் துரை அவர்களும் இருவராவர். அவர்கள் யோகப் பயிற்சியால் நெற்றிக்கண் திறக்கப் பெற்று, அந்தச் சூட்சும பார்வைமூலம் சித்திரபுத்திரர் கணக்கை ஆராய்ந்து, "காலத் திரையிற் சில கிழிசல்கள்" (Rents in the Veil of Time) என்ற தலைப்பின்கீழ் பல முற்பிறப்பு வரலாறுகளை வெளியிட்டுள்ளனர். அவற்றிலிருந்து கர்ம நியதி, மறு பிறப்பு நியதி, விகாசமுறையென்ற பரிணாமமுறை (Evolution) இவற்றைப்பற்றிய பலபல நுணுக்கங்கள் தெரிய வருகின்றன. அவற்றைத் தமிழ் மக்களும் அறிய வேண்டுமென்ற ஆவலால், அந்த வரலாற்றுள் ஒன்றாகிய 'ஓரையன்' (Orion) என்பவர் பிறப்புகளை யொட்டி இந்நூல் எழுதப்படுகின்றது. இஃது ஆங்கிலத்தின் நேர் மொழிபெயர்ப்பல்ல; ஆனால், மூல நூலின் கருத்துப் பிறழாமல் எழுதப்பட்டுள்ளது. அன்றியும் மூல நூலில் இல்லாத பல விளக்கங்கள் "குறிப்புகள்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.



பிறப்பிடங்களைக்காட்டும்
உலகப்படம்

கதையில் வரும் பெயர்கள் யாவும் இடுகுறிப் பெயர்களே. அவை எளிதில் ஞாபகத்திலிருக்கும் பொருட்டுப் பிறப்புகள் எல்லாவற்றிலும் அதே பெயரே ஒவ்வொருவருக்கும் தொடர்ச்சியாக இடப்பட்டிருக்கிறது; இவருட் பலர் இன்றைய மேதையருட் பிறந்து, சிலர் சமீப காலத்தில் இறந்தவரும், சிலர் இன்று உயிர்த்திருப்பவருமாக உள்ளனர் என்று இந்த நூல் நெற்றிக்கண் ஆராய்ச்சியாளரால் கூறப்பட்டுள்ளது.

ரோகிணியின் இற்றைக்கு முந்திய இருபத்துநான்கு பிறப்புகள்

வரிசை	பிறப்பு	இறப்பு	பால்	பிறந்த இடம்	வயசு	இறந்த பின் மேலுலக வாசம்
...	கி. மு. 29700	...	ஆண்	பாரசிகம்	...	...
	கி. மு.	கி. மு.				
1	23875	23815	ஆண்	ஹாவேயிதீவு	60	837
2	22978	22921	பெண்	மடகாஸ்கர்தீவு	57	713
3	22208	22152	பெண்	மலாக்கா	56	612
4	21540	21504	பெண்	தென்னிந்தியா	36	—
5	21504	21456	பெண்	ஷை	48	—
6	21456	21392	பெண்	ஷை	64	1775
7	19617	19546	ஆண்	பாக்ற்றீரியா	71	1245
8	18301	18234	ஆண்	மொராக்கோ	67	1006
9	17228	17137	ஆண்	போஸிதானிஸ்தீவு	91	1447
10	15690	15632	ஆண்	தார்த்தாரி	58	1125
11	14507	14451	ஆண்	கானடா	56	780
12	13671	13633	பெண்	போஸிதானிஸ்தீவு	38	1543
13	12090	12005	பெண்	பெரு	85	2319
14	9686	9673	பெண்	சீனு	13	70
15	9603	9564	பெண்	போஸிதானிஸ்தீவு	39	1239
16	8325	8260	பெண்	எற்ரூரியா	65	1502
17	6758	6706	பெண்	தார்த்தாரி	52	1077
18	5629	5567	பெண்	இந்தியா	62	1552
19	4015	3944	ஆண்	எகிப்து	71	1208
20	2736	2688	ஆண்	தென்னுபிரிக்கா	48	809
21	1879	1862	ஆண்	பெர்ஸியா	17	341
22	1521	1490	ஆண்	ஆசியாமைனர்	31	991
23	499	423	ஆண்	கிரீஸ்	76	2020
	கி. பி.	கி. பி.				
24	1597	1620	ஆண்	வெனிஸ்	23	276
25	1896	—	ஆண்	வடஅமெரிக்கா	—	—

உறன்முறைக் குறிப்புகள் சில: ரோகிணிக்கு

ரோகிணியின் பிறப்பு வரிசை	ரோகிணியின் பால்	(1) ஆயிலியன் (Alastor)	(2) கேட்டை (Eta)	(3) மூலம் (Cancer)
1	ஆண்	தகப்பன்	தாய்	(5) அஷ்டமன் காதலி - ரோகிணி வலிந்து மணந்து கொன்ற பெண்
2	பெண்	தகப்பன்		ரோகிணியை உபத்திரவித்துக் கொன்ற கிழட்டுக் கணவன்
3	”			
4	”	மகன்		தகப்பன்
5	”			
6	”			
7	ஆண்			
8	”			வேசி ஐப்பசியின் கூட்டுக் காதலன், ரோகிணியால் கொலையுண்டவன்
9	”			
10	”			
11	”			
12	பெண்	தகப்பன்	தாய்	
13	”	உறவினன் - செவ்வாயின் மகன்		உறவினள் - செவ்வாயின் மகள்
14	”			
15	”	தால்தக் பிரபு, செவ்வாயின் தகப்பன்	தால்தக் பிரபு, ரோகிணியை அடிமை கொண்டவன்	
16	”			ரோகிணி மகனால் கற்பழிந்த கீழ்குலப் பெண்.
17	”			ரோகிணியை மணம் பேசிய அஸ்தம் () கற்பழித்த கீழ்குலப் பெண்
18	”			
19	ஆண்			
20	”			
21	”	ரோகிணி ஊரான், அரபி மாந்தரீகன்		ரோகிணி ஊரான், அரபி மாந்தரீகன்
22	”			
23	”			
24	”			
25	”			

உறன்முறைக் குறிப்புகள் சில: ரோகிணிக்கு

ரோகிணியின் பிறப்பு வரிசை		(4) மங்களம் (Cygnus)	(5) அஷ்டமன் (Gamma)	(6) மிருகசீரஷம் (Egeria)	(7) ஆனி (Nu)
1	ஆண்	மகன்	ரோகிணியால் சதி செய்யப்பட்ட நண்பன்		
2	பெண்	ரோகிணி கணவனால் கொல்லப்பட்ட ரோ. கள்ளப் புருஷன்	ரோகிணி சக்களத்தி, பழிவாங்கியவள்		
3	,,				
4	,,	மகன்		தமையன், மலைக்குறவன்	சக்களத்தி
5	,,				
6	,,		சோரம்போன மருமகள் (மகன் அமாவாசன் மனைவி)		
7	ஆண்	மனைவி		தங்கை	
8	,,				
9	,,		விபசாரி - காதலன் ரோகிணியை அடிமையாக விற்றவள்		
10	,,		ரோகிணியைக் களவாடச் செய்த வைப்பாட்டி		தங்கை மகள்
11	,,		மாற்றாந்தாய்		முதல் மனைவி
12	பெண்	உறவினன் அரண்மனை அதிகாரி			
13	,,	தாயாதி உறவினன்		உறவினள்	
14	,,				
15	,,	உறவினள்-இழி குலத்தாரோடு எடுத்தேறிப் போனவள்	கூட்டு அடிமைப் பெண்	பேர்த்தி கணவன்	
16	,,		ரோகிணி மகன் அமாவாசனைப் பிடித்த பேய்		
17	,,	ரோகிணியின் இரண்டாவது கணவன்			
18	,,		காவாலி மகன்-ரஜபுத்ர அரசகுமாரன்		
19	ஆண்	உறவினன்	ரோகிணி முன்னேற்றத்திற்குத் தடையான தோழன்	காதலி	
20	,,		ரோகிணிக்காக உயிரைக் கொடுத்த உண்மையுள்ள அடிமை		
21	,,				தகப்பன்
22	,,			தங்கை	
23	,,			தமயன் மகள்	
24	,,	கிரேக்க மாது-ரோகிணி ஊரினன்	செவிலித்தாய்	ரோகிணியால் கற்பழிக்கப்பட்டுத் தற்கொலை செய்து கொண்ட காதலி	தகப்பன்
25	,,				

உறன்முறைக் குறிப்புகள் சில: ரோகிணிக்கு

ரோகிணியின் பிறப்பு வரிசை		(8) சதுர்த்தி (Sigma)	(9) அகபதி (Alcyone)	(10) புனர்பூசம் (Bellatrix)	(11) தசமி (Theseus)	(12) மகம் (Mira)
1	ஆண்					
2	பெண்					
3	,,					
4	,,	சக்களத்தி ஆனி (7) மகள்				
5	,,		மகன்	மகள்	மகள்	
6	,,				ஆற்றில் அமிழ்த்திக் கொல்லப் பட்ட மகள்	மகன்
7	ஆண்		பூட்டன்	மகன்		பேரன்
8	,,	திரஸ்கரிக்கப் பட்ட மனைவி				
9	,,					
10	,,			பாட்டியின் தகப்பன்		பாட்டி (தகப்பன் தாய்)
11	,,	கற்பழித்து, பின் மணஞ் செய்த 2-வது மனைவி			மகன்	
12	பெண்		மருமகள்	பேரன் மனைவி		பேர்த்தி
13	,,			தமையன்	மகள்	தாய்
14	,,				அன்டை வீட்டு விளையாட்டுத் தோழி	
15	,,		தாயாதித் தமையன்			
16	,,			பேரன்	மகள்	பேர்த்தி
17	,,				மகன்	
18	,,		கணவன் தங்கை (மதினி)		மதினி மகள்	மதினிமகன்
19	ஆண்		தாயாதித் தம்பி	தாயாதி		
20	,,	ரோகிணியின் எஜமானன்- அரசன்				
21	,,					
22	,,				தங்கை	
23	,,			தாயாதி	மகள்	தம்பி
24	,,					
25	,,					

உறன்முறைக் குறிப்புகள் சில: ரோகிணிக்கு

ரோகிணியின் பிறப்புகள்		(13) பிதிரை (Sirius)	(14) அனுஷம் (Achilles)	(24) அமாவாசன் (Aldob)	(25) சுவாதி (Selene)	(26) புதன் (Muni)
1	ஆண்					
2	பெண்					
3	,,					
4	,,					
5	,,					
6	,,	கணவன்	மகன்	மகன்	மகள்	
7	ஆண்	பூட்டன்	தமையன்	மருமகள்	பேரனுடைய மனைவி	புதையல் காட்டிய ஏழை
8	,,					
9	,,					
10	,,	பாட்டியின் தாய்		(களவாடிக் கடத்தப் பட்ட) மகன்		தம்பியின் மனைவி
11	,,	தாய்				
12	பெண்	மகன்		பேர்த்தியின் கணவன்	பேரன்	
13	,,	மைத்துனன்	தங்கை	கணவன்	கணவனுடைய தகப்பன் (மாமன்)	
14	,,					
15	,,	கூட்டு அடிமைப் பெண்				
16	,,	மைத்துனி	கள்ளப் புருஷன், பின் 2-வது கணவன்	அஷ்டமிப் பேய் கொண்ட மகன்	உறவினள்	தகப்பன்
17	,,					
18	,,	கணவன்	உறவினன் தகப்பன்		மதினியின் மகள்	
19	ஆண்	உறவினன்		தாய்	மகன்	உறவினன்
20	,,					
21	,,	சுவிகாரத் தந்தை			உறவினன்	தகப்பன்
22	,,				தாய்	
33	,,	தகப்பன்	மனைவி	மனைவியின் உடன் பிறந்தவன்	தமையன்	
24	,,					தாய்
25	,,					

ரோகிணி

வாழ்க்கை (வால்) ஆற்றில் ஒரு திருப்பம்

கி. மு. 29700—ஆண்

ரோகிணியின் இற்றைக்கு முந்திய இருபத்துநாலாவது பிறப்பு சுமார் இருபத்தாறுயிரம் வருஷங்களுக்கு முந்தியது. அதைத் தொடங்குமுன் அதற்கு ஆறுயிரம் வருஷங்களுக்கு முந்திய பிறப்பொன்றில், அதாவது கி. மு. 29700-ல் நடந்த ஒரு சிறு சம்பவம், பின் வரும் பிறப்புகளை விளக்க உபயோகமாக இருக்குமாகையால், அது முதலில் சுருக்கமாகச் சொல்லப்படும்.

இப்போதைய பாரசிகமானது இன்றைக்கு முப்பத்திராயிரம் வருஷங்களுக்கு முன்பு நீர்வளம் நிலவளம் நிறைந்து மேம்பட்ட நாகரிகத்தையடைந்து மிகவும் செழிப்பான நாடாயிருந்தது. அந் நாட்டில் மேற்சொன்ன கி. மு. 29,700-வது ஆண்டில் அரசாண்டுவந்த மன்னனுக்கு மகரதேவர் என்ற பெயரை வைத்துக் கொள்வோம். அவர் மனைவி விருச்சிக தேவி. அவருக்குப் பிறந்த பல மக்களுள் மூத்தவனை அசுபதி யென்றும், அவன் தம்பியை ரோகிணியென்றும் அழைப்போம். அரசன் தங்கை மேடதேவியின் புதல்விக்குச் சித்திரை யென்ற பெயரையும் இட்டுக் கொள்வோம். இப் பெயர்களெல்லாம் உண்மைப் பெயர்களல்ல. முகவுரையில் சொல்லியபடி இவை இடுகுறிப் பெயர்களே. ஒவ்வொரு ஆன்மாவுக்கும் ஒவ்வொரு பிறப்பில் ஒவ்வொரு பெயராயிருக்கும். அவை முழுவதையும் சொல்வதானால் அவற்றை ஞாபகத்தில் வைக்க முடியாமையோடு, எல்லாம் சேர்ந்து படிப்போர் மனதையும் குழப்பிவிடும். ஆகையால் ஆரம்பமுதல் முடிவுவரை ஒவ்வொரு ஆன்மாவும், அது ஆணுடம்பிலிருப்பினும் பெண்ணுடம்பிலிருப்பினும் ஒரே இடுகுறிப் பெயரால் அழைக்கப்படுகின்றது. அவற்றுள் வாரங்கள், மாதங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவற்றின் பெயர்கள் சாதாரணமாக எல்லோரும் அறிபவையாகையால் அவைகளே பெரும்பாலும் இங்கு இடுகுறிப் பெயர்களாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தமையனும் தம்பியுமான அசுபதியும் ரோகிணியும் முற்றிலும் எதிரிடையான குணங்களையுடையவரா யிருந்தனர். அசுபதி மனம்போன போக்கெல்லாம் போகாத மாண்புடையவன்; தன்னலம் மறந்து நன்மையே கடைப்பிடித் தொழுகு

பவன் ரோகிணியோ இச்சைபோன வழியெல்லாம் செல்பவன். ஆசைப்பட்டவற்றை நல்வழியிலாயினும் தீவழியிலாயினும் அடைய முயற்சி செய்பவன். அவர்கள் வளரவளர, தம் விளையாட்டுத் தோழியும் மைத்துனியுமாகிய சித்திரைமீது இருவரும் ஒரே ஆர்வத்துடன் காதல் கொண்டனர். இருவரும் ஒன்றுபோல் காதல்கொண்டிருப்பதை அண்ணனும் தம்பியும் அறிந்திராவிடினும் சித்திரை அதை நன்கறிந்திருந்தாள்.

சித்திரைக்கு மணப்பருவம் வந்தது. மூத்தமகனாகிய அசுபதிக்கு அவளை மணஞ்செய்யலாமென்று அவர்கள் பெற்றோர் பேசித் தீர்மானித்தார்கள். உடனே அவர்கள் அசுபதியின் நோக்கத்தை அறிவதற்காக அவனுக்குச் சொல்லியனுப்பவும், அவனும் "அதுவே தான் நெடுநாளாகக் கோரிக்கொண்டிருந்த வரமென்றும் சித்திரை தன்னை ஒப்புக்கொள்வாளானால் தன்னைப் போல் பாக்கியசாலி உலகத்திலில்லை," என்றும் மறுமொழி புரிந்தான். சித்திரையின் தகப்பனும் தன் மகளை வரவழைத்து, "அம்மா, உன் அத்தான் அசுபதிக்கு உன்னை மனைவியாகக் கொள்ள அரசன் பிரியப்படுகிறார். நீ இதைவிடப் பெறும் பேறு வேறில்லையென்றே உன் தாயும் நானும் கருதுகிறோம். ஆனால் உண்மையான அன்பில்லாதவனைக் கணவனாகக் கொள்வது பின்னால் மனக்கவலைக்கும் பெருந்தீங்குக்கும் இடங்கொடுக்குமாதலால் உனக்கு அசுபதியை ஒப்புக்கொள்ளக்கூடிய அன்பும் மதிப்பும் உளவோ என்பதை ஆய்ந்தறிந்து சொல்" என்றார். நாணித் தலை கவிழ்ந்து நின்ற சித்திரையும் தன் காதலை ஒப்புக்கொள்ளவே, பெற்றோர் இருவரும் சந்தோஷங் கொண்டு, இருவர் கையையும் ஒன்று சேர்த்து, அவர்களை ஆசீர்வதித்து அனுப்பிவிட்டு, முகூர்த்த நாளையும் நிச்சயித்தனர்.

அசுபதியும் சித்திரையும் வெளியே செல்லும்போது, "ரோகிணிக்கு இது பிடிக்காது" என்றாள் சித்திரை. தன் தம்பியின் காதலை அதுவரை அறியாதிருந்த அசுபதி திடுக்கிட்டு, உடனே சித்திரையுடன் அரசனிடம் திரும்பிச் செல்லவே, அரசன் ஆச்சரியத்துடன் "அதற்குள் பிணங்கிக் கொண்டீர்களா" என்று கேட்டார். "அரசே, என் தம்பி ரோகிணியும் இந்த மங்கையை மிகவும் காதலிப்பதாகத் தெரிகிறது. இந்த ஏற்பாட்டை அறிந்தால் அவன் துன்பத்திற்கு அளவிராது என்று சித்திரை சொல்லுகிறாள். அதை அறியாமல் தாங்கள் ஏற்பாடு செய்துவிட்டபடியால் அதை அறிவிக்க வந்தேன்" என்றான் அசுபதி. "ஓ! உன்னுடைய தீர்மானம் என்னம்மா?" என்று கேட்டார் அரசன். "அரசன் ஆணை

யைக் கடப்பதாகத் தனக்கு அபிப்பிராயமில்லை," என்று நாணத்துடன் சித்திரை சொல்லவும், அரசன் சிரித்துக் கொண்டு, "ஒரே பெண் இரண்டு பேரையும் மணந்துகொள்ள இயலாதாகையாலும், மூத்தவனுக்கு முதலில் மணம் புரிவதே முறையாகையாலும், ரோகிணிக்கு வயது கொஞ்சமாகையால் அவன் பொறுத்து வேறு பெண்ணைப் பார்த்து மணந்து கொள்ளலாமென்றும்" சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

இந்தச் செய்தி காதுக்கெட்டியதும் ரோகிணிக்குண்டான கோபத்திற்கு அளவே கிடையாது. இதில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் அவதூறாகப் பேசினான். "எந்த அரசன் தலையிட்டாலும் சரி, இந்தக் கலியாணத்தை நடக்கவொட்டேன்" என்று சபதங் கூறினான். அல்லாதவரையில் தன் கையாலேயே அசுபதியையும் சித்திரையையும் கொன்று விடுவேனென்றான். எந்த விதத்திலும் அசுபதி சித்திரையை அடையக் கூடாதென்று தீர்மானித்தான். இந்த வீராவேசத்தில் தன்னுடைய அந்தரங்கத் தோழனாகிய அஷ்டமனுக்கு ஆளனுப்பினான்.

அஷ்டமன் ஓர் இழிகுலத்திற் பிறந்த இளைஞன்; பெரும் வஞ்சகன்; முகஸ்துதியாலும் வேறு அந்தரங்க தந்திரங்களாலும் ரோகிணியைக் கைக்குள்ளாக்கிக் கொண்டவன். காற்றடிக்கிற விதத்தை அவன் கண்டதும், அரச குமாரருக்குள் பெரும் விரோதமேற்பட்டால், தனக்கு அது பலவிதத்திலும் அநுகூலமென்பதை உணர்ந்து, ரோகிணியின் கோபத்தைக் கொழுந்துவிட்டெரியத் தூண்டினான். அந்திப்பொழுது வரவும், அன்றிரவே செய்வன செய்யவேண்டுமென்று ரோகிணியைத் தயார் பண்ணினான். சற்று நேரத்திற்கெல்லாம் அரண்மனைக்குப் பின்புறமாகவுள்ள பூங்காவனத்தை நோக்கி, பட்டாளத்தில் பாடுகிற வெற்றிப் பாட்டொன்றை உல்லாசமாகப் பாடிக் கொண்டு அசுபதியானவர் செல்லவும், அதைக் கண்ட ரோகிணி ஆவேசத்தோடு ஒரே பாய்ச்சலாக அவருக்குப் பின்புறமாகப் பாய்ந்து, தன் கை ஈட்டியால் அவரைக் குத்தி வீழ்த்தினான். அரவங்கேட்டு ஓடி வந்த அஷ்டமன், "நன்று செய்தீர். இனிச் சித்திரையைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டால் அவள் உம் மனைவியாகாமல் தீராது. தாமதியாமல் ஓடி வாரும்," என்று ஆசிகூற, இருவரும் சித்திரையின் மாளிகையை நோக்கி விரைவாய் நடந்தார்கள்.

இவர்கள் சித்திரையம்மாள் வீட்டுக்கு எந்த நேரமும் செல்லும் வழக்கமுடையோராகையால் யாரும் இவர்களைக் கண்டு

சந்தேகிக்க இடமில்லாமலிருந்தது. வீட்டுக்குள் சென்று தேடி வரும்போது ஒரே வேலைக்காரியுடன் சித்திரை ஒரு தனியிடத்தில் தென்படவே, அதுவும் தங்கள் நல்வினைதானென்று அவர்கள் களிப்படைந்தார்கள். போன வேகத்தில் அஷ்டமன் வேலைக்காரியை அடித்து வீழ்த்தினன். சித்திரையம்மாள் கூக்குரலிடுமுன், ரோகிணி அவள் வாயை அடைத்துவிடவும், இருவருமாக அவளைக் கையையும் காலையும் கட்டித் தோளிலெடுத்துப் பின்புறமாகத் தோட்டத்தைக் கடந்து, யார் கண்ணிலும் படாமல் அருகேயிருந்த வனத்திற்குள் பறந்து விட்டார்கள்.

இருட்டில் ஏதோ சுமந்துகொண்டு இருவர் விரைவாய் நடப்பதை ஒரு வேலைக்காரன் தூரத்திலிருந்து கண்டான். "அவர் யாராயிருப்பார்? அந்த அந்தி நேரத்தில் அரண்மனைக்குள் திருடர் வந்திருக்க முடியாது. ஆனல் இருவர் தூக்கும்படியான சுமை யாதாயிருக்க வேண்டும்! அவர்களைப் பின்தொடர்ந்து பார்ப்பதா, அல்லது அரசனிடம் சென்று தெரிவிப்பதா?'' இவ்விதம் தன் கூட்டு வேலைக்காரரோடு அவன் தர்க்கித்துக் கொண்டிருக்கும் போது, அடிபட்ட தாதி மூர்ச்சை தெளிந்தாள். தன் தலைவியை அருகில் காணாமையால் கூக்குரலிட்டாள். வேலைக்காரர் உள்ளோர் ஓடி உண்மையை அறிந்தார்கள். படைகள் திரண்டன. வேலையாட்களும் வெளிச்சங்களும் பல கூடின. சுமை தூக்கிச்சென்ற திக்கை நோக்கி எல்லோரும் விரைந்தார்கள். அதற்குள் அசுபதி குத்துண்டு கிடப்பதைக் கண்டு சிலர் ஓடி வந்தார்கள். அவருக்கு உதவி செய்ய ஓடினர் சிலர். ரோகிணியும் அஷ்டமனுமே குற்றவாளிகளென்பது உடனே புலப்பட்டுவிட்டது. மணமக்கள் இருவருக்கும் ஒரே சமயத்தில் நேர்ந்த ஆபத்தால் ஊரெங்கும் அல்லோல கல்லோலமாயது.

கிழக்கே நிலவு வீசத்தொடங்கியது. வீரர் பலர் வனத்தைச் சூழ வளைந்தார்கள். வனத்திற்குள்ளும் பலர் சென்று தேடினர்கள். அஷ்டமனும் ரோகிணியும் செய்த அக்கிரமங்கள் உடனே கண்டு பிடிக்கப்பட்ட படியால், அவர்கள் எதிர்பார்த்தபடி வெகு தூரம் செல்லக்கூடிய தாமதம் ஏற்படவில்லை. வனத்தையும் எல்லோரும் சூழ்ந்துகொள்ளவே அவர்கள் தப்பியோடத் தீர்மானித்திருந்த வழியும் அடைபட்டுப் போனதை அறிந்து, வேறு வழியுங் காணதவராய், கொஞ்ச தூரத்தில் தென்பட்ட குன்றின் சரிவில் வெறிகொண்டார் போலத் தொற்றினர்கள். சுமையைத் தூக்கிக்கொண்டு மேலே ஏறுவது மிகவும் பிரயாசையாயிருந்தது. பிறகே வேட்டை நாய்கள் போலப் பலர் விரட்டிக்கொண்டும் வந்தார்கள். இவ்வளவு ஆபத்தோடு குன்றின் உச்சியை யடைந்து மறுபுறத்தை நோக்கவும், அங்கே செங்குத்தான ஒரு கெபியும்

அடியில் ஓர் ஆழ்ந்த தடாகமும் தவிர வேறு இறங்கும் வழி யொன்றும் காணப்படவில்லை. பிடிபடாமல் வேறொரு பக்கமும் திரும்ப வழியுமில்லை யென்று கண்டதும், அஷ்டமன் எரிச் சலோடு சுமையை எறிந்துவிட்டுத் தெய்வத்தைத் திட்டிக் கொண்டு "இனி எல்லாம் தலைவிதி போல்," என்று தரையில் குப்புறப் படுத்துக் கொண்டான். ஆனால், அரசனுடைய ஆட்கள் கையில் அகப்படுவதான எண்ணம் ரோகிணிக்குச் சிறிதும் இல்லையாகையால், அதைவிடச் சித்திரையையும் கொன்று தானும் இறந்துவிடுவதே நலமென்று தீர்மானித்து அவளையும் தூக்கிக்கொண்டு ரோகிணி தடாகத்திற்குள் குதித்து விட்டான்.

கீழே ஒரே இருள். பனிநீர் ஜில்லென்று குளிர்ந்திருந்தது. விழுந்த வேகத்தில் ரோகிணி மூர்ச்சையடைந்து விட்டான். சித்திரை தன் அறிவோடிருந்தாளாயினும், கையும் காலும் வாயும் கட்டப்பட்டு ஒன்றும செய்ய இயலாதவளாயிருந்தாள். துரத்திக் கொண்டு சென்ற சிலர், முன்னமேயே தடாகத்தை அறிவார் களாகையால், இருவரும் திடீரென்று மறைவது கண்டு ஏக்க முற்றார்கள். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உயர ஓடினார் கள். சந்தேகப்பட்டபடியே நடந்து விட்டதைக் கண்டு ஒன்றும் செய்யத்தெரியாமல் கூச்சலிட்டார்கள். ஏரிக்கரையை அடைய வெகுதூரம் சுற்றி இறங்கவேண்டு மாகையால் அதற்குள் இரு வரும் இறந்துவிடுவது திண்ணமென்பதை அறிந்து அவர்கள் மனம் பதைத்துக்கொண்டு நிற்கும்போது, நற்காலமாக ஓடிப் போனோரைத் தேடிச்சென்ற வேறொரு கூட்டம், கெபியின் அடி வாரம் வழியாக வருவதைக் கண்டார்கள். மேலிருந்து இரைச் சலையும் எதிரொலியையும் கேட்டு, கீழே நின்றவர்கள் உண்மையை உணர்ந்து, தடாகத்திற்குள் குதித்து, மிதந்து கொண்டிருந்த இருவரையும் இழுத்துக் கரை சேர்த்தார்கள். ரோகிணியும் சித்தி ரையும் நாலிழை தப்பினரே யொழிய மற்றப்படி இறந்து விட்டா ரென்றே சொல்லவேண்டும். அந் நிலையில் இருவரும் அரண் மனைக்குத் தூக்கிச் செல்லப்பட்டுச் சிகிச்சை செய்யப்பட்டார் கள். குன்றின் சிகரத்தில் காவலாட்கள் கைப்பட்ட அஷ்டமன் ஏதாவது எதிர்க்கவா, உதைபட்டபோது தன் குற்றத்தை ஒளிக்கவா ஒன்றுமின்றி, அலக்ஷியமாக உள்ளதை உள்ளபடியே சொல்லிவிட்டான்.

மறுநாள் காலையில் அஷ்டமனும் ரோகிணியும் அரசன் முன்பு கொண்டுவரப் பட்டார்கள். அரசனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. இருவரும் குற்றத்தை ஒப்புக் சொள்ளவும், அஷ்டமனிடம் அவர் ஒன்றுமே சொல்லவில்லை. தன் மகனாகிய ரோகிணியை நோக்கி, "நீ அரச குடும்பத்தில்

முந்திருந்தும், இழிகுலத்தானுகிய அஷ்டமனுக்கும் உனக்கும் ஒழுக்கத்தில் ஒரு பேதமுமில்லை. அரசனுடைய மகனே ஆக்கினை கடந்தானென்று நமது குடும்பத்திற்கும் அபகீர்த்தி உண்டு பண்ணினுய். நாட்டார் நியாயந் தவறி அவரவர் ஆசையின் பிறகே செல்வதற்கு நீ வழிகாட்டியாகவும் வந்து சேர்ந்தாய். ஆதலால், நீ என்னுடைய மகனுகவே யிருப்பினும், நீதி முறை யையும் நமது நாட்டு நன்மையையும் கருதி, இக் குற்றத்திற்குரிய தண்டனையைப் பக்ஷபாதமின்றி விதிக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் நீங்கள் இருவரும் இந் நாட்டை விட்டுக் கடந்து, இறக்கும் வரையில் என் எல்லைக்குள் வராதிருப்பீராக'' என்று அனுப்பிவிட்டார். நொடிப்பொழுது கூடத் தாமதியாமல் காவலாளர்கள் இருவரையும் நாடுகடத்தி விட்டார்கள்.

இவ் வரலாறு நிகழ்ந்த காலத்தில் பாரசீக நாட்டில் ஒரு மகத்தான சம்பவம் நடந்துகொண்டிருந்தது. அது ஸோரோஸ்தர் அவதாரமாம். அக் காலத்துப் பாரசீக மக்கள் இயற்கைப் பொருள்களையும் சூரியன், சந்திரன் முதலிய நவநாயகர்களை யுமே தெய்வங்களாக வழிபட்டு வந்தார்கள். அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி, உலகப் பொருள்களெல்லா வற்றையும் சுட்டெரித்து அழுக்கு நீக்கித் தூயதாக்கவல்ல அக்கினியைக் கடவுளுடைய சின்னமாகப் பாவித்து வழி படுவதான புது மதத்தை, ஸோரோஸ்தர் பகவான் வந்து அக் காலத்தில் ஸ்தாபித்துக் கொண்டிருந்தார். அவதார காலம் என்பது உலகத்திற்கே ஒரு சிறப்பான காலமாம். அக் காலத்தில் பல திறப்பட்ட பெரியாரும், மகான்களும், முத்தர்களும், சித்தர்களும் அவதார புருஷரைச் சுற்றியும் உலகத்தின் மற்ற பாகங்களிலும் பிறந்து, அவர்மூலம் உலகில் இறங்கும் அருட்பொழிவை எங்கும் பரப்பிக் கொண்டிருப்பார்கள். அக்காலத்துச் செய்யும் நல்வினை தீவினைகள் மற்றக் காலங்களை விட ஆயிரமடங்கு அதிகமான பலனைத் தரும், நெல்லாயினும் புல்லாயினும் கோடை காலத்தைவிட மாரிகாலத்தில் விதைத்தவை கூடுதல் பலன் தருவன போல.

ஸோரோஸ்தரும் அரச குடும்பத்திலேயே உடம்பெடுத்திருந்தபடியால் அவரும் அரண்மனையிலேயே தங்கியிருந்தார். ரோகிணி நாடுகடத்தப்படுமுன் அவன் தாயாரையாவது உடன் பிறந்தோரையாவது பார்க்க இடங்கொடுக்கப் படவில்லை. ஆனல் போகுமுன், ஸோரோஸ்தரானவர் அவனுக்குச் சொல்லியனுப்பி, அன்பும் விசனமும் நிறைந்த கண்களோடு அவனை நோக்கி, "மைந்தனே! நீ மிகவும் மதியீனமாய் நடந்து விட்டாய். நீ செய்தது மிகவும் பெரிய தவறேயானுலும், அதைப்பற்றி

இப்போது சொல்ல வரவில்லை. கொன்றால் பாவம் தின்றால் தீரும் என்றபடி, செய்த தீவினை பின் அநுபவிக்கத் தீரும். ஆனால் தொன்றுதொட்டே என்னோடு கர்மதொந்தமுள்ள ஆன்மாக்களில் ஒருவனாகிய நீ, இந்தப் பெரும் புண்ணிய காலத்தில் எங்களைவிட்டு நீங்கிப்போவது தான் வருந்தத் தக்கது. அறிவை மறந்து ஆசைவழியே செல்வது என்றுமே துன்பத்தை விளைக்கும். அதிலும் இப்போது அது இருபங்கு துன்பத்தை உண்டாக்கும்.

“உலகிலுள்ள பிறவிகளில் மனிதப் பிறவியே மேலானது. அதில் கூன், குருடு முதலிய ஊனங்களில்லாமல் பிறப்பது பெரும் பேறாகும். ஊனமில்லாமல் பிறந்தாலும் உயர் குடியிற் பிறப்பது அதிலும் பெரும் பேறாகும். உயர் குடியிற் பிறந்தாலும் உத்தம அறிவும், கல்வியும் புகட்டப்படுவது அதிலும் பெரிய பேறாகும். இவற்றுடன், பல்லாயிரம் ஆண்டுகளுக்கொரு தடவை நேர்வதான உலக குருவின் அவதார காலத்தில் அவன் பிறந்து, அந்த உலக குருவின் உபதேசம் கேட்கப்பெறுவது, மனிதன் பெறும் பேறுகள் எல்லாவற்றிலுமே மிகவும் உயர்ந்த பேறாகும். இந்த எல்லாப் பேறுகளும் உனக்கு ஒருங்கே ஏற்பட்ட காலத்தில், அப்பேர்ப்பட்ட நல்வினைப் பலனை நீ இழந்து போவதுதான் மிகவும் இரக்கத்தைக் கொடுக்கிறது. உன்னுடைய காம இச்சையை அடக்கமாட்டாமல், மனம் போன போக்கெல்லாம் போய், நீ பழவடியார் கூட்டத்திலிருந்து உன்னைப் பிரித்துக்கொண்டாய். இனி வெளியே சென்று, வேறு பலருடன் அடியும் மிதியும் பட்டு, அறிவும் ஒழுக்கமும் திருந்தி, நெடுங்காலப் பயணத்தின் பின் அடுத்த ஜகத்குரு உலகத்தில் தோன்றும்போது உபயோகப்படுவாயாக.” என்று ஆசிர்வதித்து அனுப்பிவிட்டார்.

பாரசிக நாட்டைச் சுற்றி மலைகளும் பெருவனங்களும். அங்கே வசித்து வந்தவர் ஆடுமாடு மேய்த்துத் திரியும் ஈனமக்கள்; நாகரிகமற்றவர்; முரடர்; நிலையான ஊரெதுவும் இல்லாதவர்; மேய்ச்சலும் வேட்டையும் தேடிக் குடிலைத் தூக்கிக்கொண்டு இடம் இடமாகச் செல்பவர்; அவர்களுடன் மழையில் நனைந்தும், வெயிலில் உலர்ந்தும், பனியில் மெலிந்தும், பஞ்சணை மறந்து பாறையில் உறங்கியும், பசி வந்தபோது வேட்டையில் கிடைத்தது புசித்தும், இப்படியாக ரோகிணியும் அஷ்டமனும் அரண்மனையிற் பிறந்து ஆரணியத்தில் வாழ்ந்து இறந்தார்கள்.

குறிப்புகள் :—அசுபதியின் முற்பிறப்புக்களை யாராவது எழுத முன் வருவாரானால், வினையின் பலன் விளையும் விதம் கொஞ்சம் கூடத் தெளிவாகக் காணப்படும். ஏனெனில் சித்திரையம்மாள் மேல்கொண்ட

காதல் இருவருக்கும் ஒன்றாயிருப்பவும், அசுபதியானவர், "உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை" என்ற தவமுறைக்கு உதாரண மாகத் தம் துன்பத்தைப் பொருட்படுத்தாது தம்பியினுடைய வருத்தத் தையே ஒழிக்க விரும்பித் தன் காதலியையும் இழந்துவிடத் தயாரா யிருந்த உத்தம குணமும், ரோகிணியானவர் "அன்பிலார் எல்லாம் தமக் குரியர்" என்ற அறமுறைக்கு உதாரணமாக யாரெப்படிப் போயினும் தன்னுடைய இச்சையும் சுகானுபவமும் தவறாமல் நடைபெறவேண்டு மென்று காட்டிய அதமகுணமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரு வேறு பலன்களையே கொடுத்திருக்குமென்பது நிச்சயம். இடையி லுள்ள பிறப்புக்களைக் கவனிக்காவிட்டாலும் இன்றைக்கு இருவரும் எடுத்திருக்கும் பிறப்புக்களை அறிந்தாலே அந்தப் புண்ணிய பாவ பலன் கள் நன்கு விளங்கும். இன்று அசுபதியானவர் புண்ணிய பூமியாகிய பரதகண்டத்தில் தெலுங்கு தேசத்தில் மதனப்பள்ளியில் பிராமண குலத்தில் அவதரித்து ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி என்ற திருநாமம் பெற்று, ஜீவன் முத்தியை அடைந்து, உலகம் போற்றும் உத்தம ஞானாசிரியராக விளங்குகின்றனர். அவருடைய பிறவிகள் இத்துடன் ஒழிந்தன. ஆனால் நமக்குக் கீழ்ப்பூமியாகிய அமெரிக்கா தேசத்தில் இன்று வெள்ளையருள் பிறந்திருக்கும் ரோகிணியோ இப்பிறவியில்தான் தன் னுடைய பழைய பிரவர்த்தி மார்க்கத்தைக் களைந்து, குருநாதர் திரு வடியை அடைந்து நிவர்த்தி முறையாகிய முத்தி நெறியில் கால் வைத் திருக்கின்றார்.

1. ஹாவேயி தீவு — ஆண்

கி. மு. 23875 — கி. மு. 23815

வயது: 60 - பின் பிதுருலகவாசம்: 837 ஆண்டுகள்

மேலே சொல்லப்பட்ட பாரசீகப் பிறப்பிற்கும் இப்பிறப் பிற்கும் இடையிலுள்ள பல பிறப்புக்கள் எழுதப்படாமல் போயின. இனி, பசிபிக் மகாசமுத்திரத்தின் மத்தியில், ஹாவேயி என்ற பெயர்கொண்ட ஒரு கூட்டம் எரிமலைத்தீவுகள் இருக்கின்றன. அவற்றிலுள்ள எரிமலைகளிலெல்லாம் பெரியது கிலனியாமலை. அதன் அடிவாரத்தில் ஓரிடத்தில், இன்றைக்கு ஏறக்குறைய இருபத்தாறாயிரம் ஆண்டுகளுக்குமுன், ஆணும் பெண்ணும் பிள்ளைகளுமாக ஒரு பெருங்கூட்டம் கூடி நின்றது. அம் மக்கள் காக்கையைவிடக் கறுத்த நிறத்தவர். கண்கள் கோவைப் பழம்போலச் சிவந்தவர். தடித்துத்தொங்கும் உதடு களை உடையவர். மனிதரை உண்ணும் பழக்கமுடையவர். இறகும் தோலுமே அவர்கள் ஆடைகள். சிப்பியும் சங்கு களுமே அவர்கள் ஆபரணங்கள். பண்டைய நிகிரோவருக்குள் ளும் ஒரு தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர், அந்த ஹாவேயியர்.

அவர்கள் கிலனியாமலைத் தெய்வத்திற்குக் கொடையிட்டு வழிபாடு செய்யக் கூடியிருந்தார்கள். பலி கொடுப்பதற்காக

அநேக மிருகங்களும் சில மனிதரும் கொண்டுவந்து விடப்பட்டிருந்தனர். சற்று நேரத்தில் பயங்கரமான பொய்த்தலையும் இரத்தச்சிவப்பான இறகாடையும் அணிந்து, கையில் கட்டாரியும் ஏந்தி, கண்டோர் அஞ்சும்படியாகப் பூசாரி வந்து சேர்ந்தான். அவன் பிறகே இருவர் இளைஞர் வாளும் கையுமாக வந்தனர். எல்லோரும் ஆரவாரித்தார்கள். அநேக மிருகங்களைப் பலியிட்டார்கள். கட்டிவைத்திருந்த சில மனிதரையும் வெட்டினார்கள்; ஆடினார்கள்; பாடினார்கள்; பிழே விழுந்து புரண்டார்கள்; தீயை வளர்த்து இறைச்சியைக் காய்ச்சித் தின்றார்கள். காலைவரையில் களியாட்டாடிக் கொடையை முடித்து எல்லோரும் விடிந்து வீடு சென்றார்கள்.

பூசாரியின் பின்னே வந்த இளைஞரே அஷ்டமனும் ரோகிணியும். கருமபலன் வந்த விதத்தைக் கவனியுங்கள். நாகரிக நாட்டில், உத்தம உற்றார் உறவினரோடு, அழகான உடம்பில் அரசகுடும்பத்தில் பிறந்த அனுகூலங்களை எல்லாம் உதறியெறிந்து, வெறுங் காமங்காரணமாகக் கொலை பாதகத்தித் தொழிலில் இறங்கின பலன், ஆறாயிரம் ஆண்டுகளாகப் பல ஈன இடங்களில் பிறந்தும் தீராமல், அப்புறமும் இந்த நரபலி நிகிரோவருக்குள்ளேயே வந்து பிறக்கவேண்டி வந்தது. அவனைத் தீத்தொழிலில் ஏவி, அவனுக்கு உடந்தையாயிருந்த அஷ்டமனும் கூடவே வரவேண்டியுமிருந்தது. பூசாரியின் பெயர் ஆயிலியன். அவன் மனைவி கேட்டையம்மாள். அவர்கள் மூத்த புதல்வன் ரோகிணி. திரும்பவும் அருமைத் தோழனுயமைந்தவன் அக்கூட்டத்திலேயே பிறந்த அஷ்டமன்.

கூட்டத்தீவுகளில் ஒரு சிறிய தீவு ஒவாரு. அத் தீவானுகிய ஆயிலியன் அவ்விடத்து வயிரபுடி என்ற எரிமலைக்குப் பூசாரியாய் இருந்தான். அவனுக்கு கி. மு 23,875-ல் கேட்டையம்மாள் வயிற்றில் ரோகிணியானவன் பிறந்தான். பிறந்த கொஞ்சக் காலத்திற்குள் ஆயிலியனுடைய மந்திரதந்திரங்கள் எங்கும் பெயர் வாங்கவே, அரசன் அவனை எல்லாத் தீவுகளுக்கும் பெரிய பூசாரியாக்கி, ஹாவேயி தீவுக்குத் தருவித்துக்கொண்டான். கிலனியாமலை அவ்விடத்திலேயே உள்ளது. அவ்விடத்தில்தான் அஷ்டமன் பிறந்திருந்தது. புதிதாய் வந்த ரோகிணி அஷ்டமனைக் கண்டதும், காந்தமும் ஊசியும் போலப் பழைய தொந்தம் இழுக்கவே இருவரும் திரும்பவும் நண்பரானார்கள்.

நிகிரோவருக்குள் இன்றும் பூசாரிகளே மந்திரவாதிகளும் வைத்தியர்களும் ஆகவே அக்காலத்துப் பூசாரிகளும் மந்திரங்களால் வசியம் செய்வார்கள்; பில்லி சூனியம் வைத்துக்

கை, கால் முடக்குவார்கள்; பேய் பிசாசுகளை வருத்துவார்கள், விரட்டுவார்கள்; மந்திரத்தின் பேரால் ஊராரைப் பயமுறுத்துவார்கள்; பயப்படாதவரைச் சபிப்பார்கள்; மந்திரம் பலிக்காத இடங்களில் தந்திரங்களாலும் விஷமருந்துகளாலும் உயிரை வாங்குவார்கள்; கேட்டபடி கூலிகொடுக்காத நோயாளிகளை வைத்தியத்தாலேயே கொன்றுவிடுவார்கள்; எல்லாம் தங்கள் தெய்வத்தினுடைய வல்லமை என்பார்கள். எந்த யுகத்திலும் எந்த நாட்டிலும் பூசாரிகள் இயற்கை ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்கிறது. ஆகையால் ஹாவேயில் அரசனுக்கஞ்சாத குடிகளுங்கூட பூசாரிகளுக்கஞ்சினர்கள்.

மூத்தமகனை ரோகிணியும் பூசாரியாக வேண்டியவனுகையால் எல்லா மந்திர தந்திரங்களும் இளமையிலேயே கற்பிக்கப் பட்டிருந்தான். அவற்றைக்கொண்டு அவன் தகப்பன் ஊரில் நடத்திவந்த ஆக்கினை அநியாயங்களை இவனும் தன் தரத்துப் பிள்ளைகள் பால் பழகிவந்தான். எடுத்த காரியம் முடிப்பதில் பழி பாவங்களுக்குப் பின் வாங்கமாட்டான். அதிகாரத்தில் அதிக அவா வுடையவன். தன்னிடம் தாழ்மையாக நடக்காதவர்களை எந்த வழியிலாவது அடக்கி வைப்பதில் தன் தகப்பனை விடச் சாமர்த்திய சாலியானுன். ஆகவே எல்லாத் தோழர்களும் அவனுக்குப் பயந்தார்களேயொழிய, அஷ்டமன் ஒருவனைத் தவிர அவனை நேசித்தவர் யாருமில்லை. அந்த ஒரே நண்பனிடமும் ரோகிணி நடந்த முறையிலிருந்து அவன் கொடுங் குணமும் வெறியும் நன்கு விளங்கும்.

அஷ்டமனுக்கு மூலம் என்ற பெண்ணை மணஞ் செய்யத் தீர்மானித்திருந்தது. அவர்கள் இருவரும் நெடுநாளைய உண்மைக் காதலர். அதை ரோகிணி நன்கறிந்திருந்தான். அஷ்டமனைத் தவிரத் தன்னை நேசிப்பவர் யாருமில்லை என்பதையும் அவன் அறிந்திருந்தான். இருந்தும் மூலத்தம்மாளிடம் மோகங் கொண்டான். அஷ்டமன் விவாகத்துக்கு வேண்டி நடத்தி வரும் கோரிக்கைகளையும், அவனுக்கும் மூலத்துக்கும் உண்டாயிருந்த நெடுநாளைய நேசத்தையும் சிறிதும் பொருட் படுத்தாமல், சிநேக வாஞ்சை சிறிதுமில்லாத ரோகிணி, மூலத்தைத் தனக்கு மனைவியாக்கும்படி அஷ்டமனைப் பலவிதத்திலும் வற்புறுத்தினன் அவன் சம்மதியாதது கண்டு ஒதுங்கிக்கொள்ளாமல், அஷ்டமனைத் தன் முழுச் சாமர்த்தியத்தையுங்கொண்டு துன்புறுத்தத் தொடங்கினன். ஆனல் ரோகிணியின் சாபங்களும், மந்திரங்களும், செய்வினைகளும், மூலத்தம்மாளைத் தனக்குப் பிராணனுகப் பாவித்துவந்த அஷ்டமனிடம் பாறையிலெய்த அம்புகளைப்போலப் பயனற்றுப் போவதைக்கண்டு, தன்

பழைய நண்பனை வின்னுல கேற்றுவதே வழியென்று தீர்மானித்து, நஞ்சு கலந்த மருந்தொன்றை அவனுக்கு உபாயத்தால் ஊட்டி வைத்தான். அது காரணமாக நெடுங்காலம் நோயிலழுந்திய அஷ்டமனுக்குத் தான் இறந்து போவோமென்ற ஐயமுண்டாகவே, தன் காதலியை அழைத்து “இனி நீ எனக்காகக் காத்திருப்பதில் யாதொரு பயனுமில்லை. உன் மனதுக்கிசைந்த மணவாளர் இன்னும் பலர் கிடைப்பாராயினும், கல்நெஞ்சனுங் கொடும்பாவியுமான ரோகிணி உன்னைக் கைப்படுத்துகிறவரை உன்னையும் உன் பெற்றோரையும் பந்துக்களையும் புண்படுத்திக் கொண்டேயிருப்பான். ஆகையால் அந்தத் துரோகியை மணந்து கொள்வதே உத்தமம்,” என்று வேண்டிக் கொண்டான். அஷ்டமனைப்போலவே அவளும் ரோகிணியை அருவருத்தாளாயினும் தன் உறவினருக்குண்டாகுந் துன்பங்களுக்குப் பயந்து கடைசியாக அவனையே மணந்து கொண்டாள்.

மணந்தும் அவளுக்குத் துன்பம் மாறியபாடில்லை. கைக்கொண்ட சில நாளில் காமவெறி தீர்ந்த கணவன், மூலத்தை மிகவும் கொடுமையாக நடத்த ஆரம்பித்தான். அவள் ஏதாவது முறுமுறுத்தால், அவளை ஆக்கவும் அழிக்கவும் தன்னுல் முடியுமென்று பயமுறுத்துவான். இப்படி யிருக்குங்காலத்தில், ரோகிணியின் தகப்பனுன ஆயிலியனுக்கும் அரசனுக்கும் சில பிணக்குகள் ஏற்பட, அரசன் ஆயிலியனை நாட்டை விட்டு விரட்டி, அந்தப் பதவிக்கு ரோகிணியை நியமித்தான். இயற்கையாகவே குரூர குணமுள்ளவனுக்கு இந்த அதிகாரமும் வந்தபோது, எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போலாயிற்று. தன்னுடைய புதிய நிலமைக்குத் தன் மனைவி தகுதியற்றவளென்று கருதினுன். உடனே அவளைத் தகுந்த பக்குவங்களால் எமலோகத்திற் கனுப்பிவிட்டு அரசன் தங்கையை மணந்து கொண்டான். அவளிடம் மங்களன் என்ற மகனையும் பெற்ருன்.

நாளுக்குநாள் ரோகிணியின் கொடுஞ் செயல்களும் அதிகாரமுங் கூடிக்கொண்டே வந்தன. தன்னிடந் தீர்ப்புக்காக வரும் வழக்குகளில், நியாயத்தை நன்ருயறிந்திருந்தாலும், அதிக லஞ்சங் கொடுப்போருக்கே அனுகூலஞ் செய்து வைப்பான். இவ்விதமாக அவன் எண்ணில்லாத இறகு ஆடைகளையும், ஆடு மாடுகளையும், இன்னும் அனேகவிதமான சொத்துக்களையுஞ் சம்பாதித்தான். கோவில் விக்கிரகங்களின் வாயில் குழாய்களைக் கொடுத்து அவற்றைப் பின்னுலிருந்து பேசுவிப்பான். நேரே தன் சொற்கேளாதவரை இவ்விதத் தெய்வ வாயிலாக ஆட்டிவைப்பான்.

முன்பு சாகக்கிடந்த அஷ்டமன் தெய்வசகாயத்தால் சீக்குத் தெளிந்தெழுந்து, ரோகிணி தனக்குச்செய்த வஞ்சனைக் காக அவனை எப்பொழுது தொலைப்போமென்று எதிர் பார்த் திருந்தான். அவன் காதலியுங் கொலையுண்ட பிறகு தனக்குத் தீங்குண்டாக்குவதில் கணமுந் தாழ்க்க மாட்டானென்று கண்ட ரோகிணி, அவனுக்கு முந்திக்கொள்ள வெண்ணி, அரசனிடஞ் சென்று, “அரசே, என் தகப்பனை ஆயிலியன் இந்நாடுவிட்டுச் சென்றதும், அபாயமெல்லாம் நீங்கியதாக தாங்கள் நினைத்த தென்ன! அஷ்டமன் தங்களுக்கு விரோதமாய்ச் செய்துகொண் டிருக்குஞ் சூழ்ச்சிகளை அறிந்ததில்லையோ” வென்ன, அரசன் “நீ எப்படி அறிவா” யென்று கேட்க, சரிப்படுத்தி வைத்திருந்த சாட்சிகளைக்கொண்டு ரோகிணி நிரூபிக்கவும், அஷ்டமனை அரசன் சிறையிலடைத்து வைத்தான். அடைபட்டுக் கொஞ்ச நாளில், காவலாளர் சகாயத்தையுந் தன் கைமருந்தையுங் கொண்டு, ரோகிணி அவனை மேலுலகுக் கனுப்பிவிட்டான். இவற்றையும் இவன் பிற செயல்களையுங்கவனிக்கும்போது, இவன் அறிவே சிறிதுமற்ற நிகிரோவருக்குள் பிறந்திருந்தபோதிலும், அவரினும் அதிகப் புத்திக்கூர்மை யுடையவனா யிருந்தானென்பது புலப்படும். ஆயினும், மங்களனென்ற தன் மகன் மேல் வைத்த வாஞ்சையைத் தவிர, வேறு அன்பென்பதை அறிந்தவனல்லன்; அறிவில் அவ்விடத்து மிருகாண்டிகளுக்கு மேலாயிருந்தாலும், அன்பில் அவரினுந் தாழ்ந்தவனாகவே யிருந்தான்.

தன் இரண்டாவது மனைவியின் தமையன் உயிரோடிருக்கும் வரை, ரோகிணியே அவன் பேரை வைத்து ஆண்டு வந் தான். அவன் இறந்தபின் அவன் மகன் இவனை அலட்சியமாய் நடத்தவே, பெரிய பூசாரியும் அரசனும் பிணங்கவாரம்பித்தார் கள். இருவரும் ஒருவரை யொருவர் அடக்கும் வழிகளை ஆலோ சித்துக் கொண்டிருக்குங் காலத்தில், அடுத்துள்ள கௌவை யென்னுந் தீவிலிருந்து சிலர் அரசனைக்காண வந்தனர்: ரோகிணி யின் துர்ப்போதனையின் பேரில் அரசன் அவர்களைக் கௌரவக் குறைவாய் நடத்தவே, கௌவைத்தீவார் கோபங்கொண்டு உடனே படையெடுத்து வந்தார்கள். அதுகண்ட அரசன், “கடவுளைக் கைக்குள் வைத்தாட்டுங் குருவே! கௌவைக்காரர் படகிலிருந்து நம் கரையில் வந்திறங்குமுன், கடலில் ஆழ்ந்து போகும்படி சபித்தருளும்.” என்று வேண்ட, ரோகிணியுந் தன் சக்தி யெல்லாங் கொண்டு சபித்தும் ஒன்றும் பயன்படா மல், கடைசியாய் அரசன் சேனைகளோடு சென்று சண்டை செய்து அவர்களைத் துரத்தவேண்டி வந்தது. ரோகிணியின் தோல்வியைத் தீவார் அறிந்ததுமுதல் அவன் செல்வாக்குங்

குறையத் தொடங்கிற்று. பயந்தொதுங்கியிருந்த அவனுடைய பழம் பகைவரெல்லாரும், இதுதான் சமயமென்று அரசனோடு சேர்ந்துகொண்டு அவனை அலட்சியஞ் செய்ய, அதைக்கண்ட ரோகிணி மிகவுங் கோபங்கொண்டு, ஊரில் அநேக இடங்களில் அரசனுக்கு விரோதமாகக் கலகங்கள் உண்டுபண்ணத் தொடங்கினான். அதைக் காரணமாகக் கொண்டு அரசன் அவன் பட்டத்தையும் பறித்து அவனையும் ஊரைவிட்டு ஓட்டும்படி உத்தரவு பிறப்பித்தான்.

ரோகிணி சம்பாதித்திருந்த பகைவர் அனேகரில், ஐப்பசி யென்பானொருவன். அவன் சதயமென்ற ஒரு பெரிய வீட்டுப் பெண்ணின் காதலன். பூசாரியின் அனுமதியில்லாமல் பெண் கட்டக் கூடாதென்ற அவ்வூர் விதிப்படி அவன் ரோகிணியின் சம்மதங் கேட்கச் சென்றபோது, சதயத்தின் தகப்பனிடத்திருந்த சொத்தில், அதாவது, இறகாடை ஆடுமாடுகளில் பெரும்பங்கைத் தனக்குக் கொடுத்தாலொழியத் தான் சம்மதங் கொடுப்பதில்லை யென்று சொல்ல, சதயத்தின் தகப்பன் அதற்குடன்படாமையால், விவாகம் நின்று போயிற்று. ரோகிணி அதோடு நில்லாமல், சொத்தின் பேரிலுள்ள ஆசை மிகுதியால் தகப்பனைச் சம்மதிக்கச் செய்யும்படி சதயத்தை மந்திர தந்திரங்களால் பயமுறுத்தவும், இயல்பாகவே பயந்தவளான சதயம் பைத்தியங்கொண்டு இறந்தாள். இந்தப் பழியைத் தீர்க்கப் பதைத்துக்கொண்டிருந்த ஐப்பசியானவன், அரசனுக்கு ஒளித்தோடிக்கொண்டிருந்த ரோகிணியைப் பின்சென்று குத்திக் கொன்றான்.

ரோகிணி கொலையுண்டபோது அவனுக்கு வயது அறுபது. இறந்தவுடன் பேய்வடிவத்தோடு நரகத்திற்குச் சென்றான். இவனால் அகால மரணமடைந்த ஆண்களும் பெண்களும் அங்கே பேய்களாய் காத்திருந்தார்கள். அவர்கள் கையில் இவன் பட்ட பாடு சொல்லற்கரிது. நெடுங்காலம் நரகத்துன்பத்திலேயே அழுந்திக்கிடந்தான். எந்தக் கொடுங்குணத்தானுக்கும் தன் பிள்ளையின் பேரிலாவது பற்றிருக்குமாகையால், அந்த அன்பின் பலனாக ரோகிணி சிலகாலம் சொர்க்கலோகம் சென்று தங்கினான். சொர்க்கம் நரகம் இரண்டிலும் தங்கித்திரும்பப் பூமியில் வந்து பிறக்குமுன் ஆண்டுகள் 837 கழிந்தன.

குறிப்புகள் : மனிதன் தன் தீவினைக்கேற்ப மிருகங்களாய்ப் பிறப்பானென்று நம்மவர் நம்புகிறார்கள். அது தவறான கொள்கை. கடன்வாங்கித் திரும்பக்கொடாதவன் உழவுமாடாய்ப் பிறந்து கடன் கொடுத்தோருக்கு உழைப்பானென்றும் செய்நன்றி யறியாதவன் நாயாய்ப் பிறந்து உண்ட வீட்டுக்கு காவலாயிருப்பானென்றும் பல கதைகள் நமக்குள் வாய்மொழி

யாக வழங்குகின்றன. இவையெல்லாம் கடவுள் நியதியை அறியாதார் கட்டிவிட்ட வெறும் கதைகள். ஒரு தரம் மனிதனாய்ப் பிறந்தவன் திரும்ப மிருகமாய்ப் பிறப்பதில்லை. விதையைத் தரையிலிட்டால், அது முளைத்து வளர்ந்து மொட்டுவிட்டுப் பூத்துக் காய்த்துப் படிப்படியாய் மேலேறிப் பலன் கொடுக்குமே தவிர, பழம் காயாகவும், காய் பூவாகவும், மலர்ந்த பூ மொட்டாகவும், கீழ்நோக்கி இறங்குவதில்லை. செப்படி வித்தைக்காரன் அப்படிச் செய்தாலும் அது இயற்கைக்கு விரோதமானது. அதுபோல ஆன்மாவும் ஆரம்பத்தில் ஒரு கல்பகாலம் உலோக வர்க்கத்தில் கல், மண், செம்பு, இரும்பு, நவரத்தினங்கள் முதலியவைகளாயிருந்து, அடுத்த கல்பத்தில் தாவர வர்க்கத்தில் புல், பூண்டு, மரங்களாகி, மூன்றாவது கல்பத்தில் பிராணிகள், பறவைகள், மிருகங்களாயிருந்து, நான்காவது கல்பத்தில் மனிதனாக முன்னேறி வரும். அதற்கு மேல் அதினுடைய முயற்சியால் பிறப்பு, இறப்புக் கடந்த முத்தனாக வேண்டுவதைத் தவிர கீழ்நோக்கிப் பிறப்பதில்லை. மிருகத் தன்மையான குணங்களிருந்தாலும் வினைகள் செய்தாலும், அவற்றின் பலனாக அவ்வான்மாக்கள் ரோகிணி பிறந்த மாதிரி மிருகத் தன்மையுள்ள மக்களிடையில் பிறக்கும்; அல்லது நாகரிக நாடுகளிலும் கள் கஞ்சா குடித்து மிருகங்களைப்போல் அலைதல், மனைவி மக்களை அடித்தல், கொலை களவு செய்தல் முதலிய மிருக குணங்களுடைய ஈன ஜாதிகளிலே வந்து பிறந்து, துன்புற்று மேற்செல்லுமேயன்றி மிருகங்களாய்ப் பிறப்பதில்லை. அப்படிப் பிறக்குமென்று பெரு நூல்களில் சொல்லியிருப்பின் அப்பாகங்கள் ஞானிகள் எழுதியவையாகா. பின்னால் உண்டான இடைச்செருகல்களாம்.

கோடி வழி—I

ஹாவேயிதீவு — ஆண்.
கி. மு. 23875 — கி. மு. 23315.
வயது—60 — பின் பிதுருலகவாசம்—337.

ஆயிலியன் : பூசாரி. (மனைவி) கேட்டை (மகன்) ரோகிணி.

ரோகிணி : பூசாரி. (மனைவி) 1. மூலம். 2. (மகன்) மங்களம். (நண்பன்) அஷ்டமன். (கொலையாளி) ஐப்பசி.

அஷ்டமன் : (காதலி) மூலம்.

சதயம் : (காதலன்) ஐப்பசி.

2. மடகாஸ்கர் தீவு—பெண்

கி. மு. 22978—கி. மு. 22921.
வயது : 57 - பின் பிதுருலகவாசம் : 713 ஆண்டுகள்

இந்துமகா சமுத்திரத்தில் தென்னாப்பிரிக்காவின் கீழ்கரையருகில், ஆயிரமைல் நீளமும் முந்நூறு மைல் அகலமுங்கொண்ட "மடகாஸ்கர்" என்றொரு தீவிருக்கிறது. அதில், நாம் கவனிக்கிற காலத்தில், முன் சொன்ன ஹாவேயி நிகிரோவரிலும் கீழ்மக்க

ளான ஒரு ஜாதியார் குடியிருந்து வந்தார்கள். அவர்கள் வீடுக ளெல்லாம் பனைபோலைக் குடிசைகள்; அணிவது சிப்பிகளுங் கூழாங்கற்களும். ஹாவேயித்தீவில் தோலும் துணியும் அணிந்து வந்தார்கள். ஆனால் இவர்கள் இடுப்பைச் சுற்றிச் சில தொங்கட் டங்களைத் தவிர வேறு உடையைக் கண்டவரல்லர். இவர்கள் ஹாவேயரினுங் கொடியவர்; மிகவும் முரடர்; ஈன இரக்கமில்லா தவர்.

இவர்களுடைய மதம் மிகவும் பயங்கரமானது. அத் தீவுக் குள், சமுத்திரத்திலிருந்து பிரிந்த ஒரு சிறு கடல் இருந்தது. சமுத்திரம் வறண்டு அக் கடல் வேறான காலத்தில் அதில் தங்கி விட்ட அநேகம் பிராணிகளுள் பெரிய ஆக்டோபஸ் (Octopus) ஒன்று. ஆக்டோபஸ் என்பது ஒரு பயங்கரமான எட்டுக்கால் நீர்ப்பிராணி. இப்போதும் சமுத்திரங்களில் காணப்படுவது. நம் மைச் சுற்றி நிலத்தில் காணப்படும் எட்டுக்கால் பூச்சி, கடுவாய்ப் பூச்சிகள் போன்றதாய் உருவத்தில் மிகமிகப் பெரியது. நீரி லேயே வாழ்வது. சமுத்திரத்திலுள்ள பெரும் பிராணிகளையும் விழுங்கவல்லது. நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உயிர்வாழ்வது. உடம்பு மாத்திரம் ஒரு பலூன் விமானம் போன்றிருக்கும். அதன் கால்கள் ஒவ்வொன்றும் நாற்பது, ஐம்பது அடிக்குக் குறையாமல், உருவத்திலும், நீளத்திலும், வண்ணத்திலும் பனை போலவே இருக்கும். அதன் நுனியில் தட்டுப்பட்ட இரை அப்புறம் உயிரோடு திரும்பாது. அது பார்வைக்கு மிகவும் பயங் கரமும் அருவருப்புமானது. விருப்பமுடையவர் படங்களில் பார்த்துக் கொள்க. இத் தீவில் தங்கிய பிராணியின் வயது இரு நூறு, முந்நூறுக்கு மேலிருக்குமென்று மதிக்கப்பட்டது.

இந்தப் பெரிய மிருகத்தையே தெய்வமாகக் கொண்ட அவ் விடத்து மனித மிருகங்கள், இதற்குப் பூஜை செய்யும் முறைமை யிலிருந்து பேய்ப் பிறப்பென்றே சொல்லத்தகுவர். இந்தக் கடவுளுக்கு உயிரோடுள்ள மானிடரே நித்திய நைவேத்தியம். ஒரு நாளைக்கொரு மனிதன் வீதம் இந்த மிருகத்திற் கிரையாக ஊரார் தள்ளி விடுவார்கள். உற்சவகாலங்களில் ஒன்றுக்கு மேல் நரபலி கொடுப்பார்கள். யுத்தக் கைதிகள் உள்ளபொழுது ஊராருக்கு உபத்திரவமில்லை. இல்லாத பொழுது ஊருக்குள் ளேயே ஆள் தேடவேண்டும். பலியைத் தெரிந்தெடுக்க வேண்டி யது பூசாரிகள் வேலை. தம்மைப் பொருட்படுத்தாதவரைச் சமயங்கண்டு கடவுளுக்குப் பொங்கல் வைத்து விடுவார்கள். செயலுள்ளோர் பூசாரிக்குக் கப்பமும், பதிலுக்கு ஆளுங் கொடுத்துத் தப்பித்துக் கொள்வர். அவருள் எவ்வளவு தீரராயி னும், இந்தக் கொடிய ஏற்பாட்டினால் எந்த நிமிஷத்திலும் தம்

சீட்டுக் கிழிபடுமென்கிற திகிலும், அது காரணமாகச் சித்தப் பிரமை போன்ற அனேக வியாதிகளும், எல்லாரிடத்தும் குடி கொண்டிருந்தன. சிலர் இத் திகிலினலேயே பித்துப்பிடித்து மெய்மறந்த நிலையில் தாங்களாகவே கடலுக்குள் போய் இறங்கி அந்தப் பிராணிக்கு இரையாவர்கள். இவர்களுக்குப் பெரிய பக்த ரென்று பெயர்.

இத்தகைய மனிதருக்குள் பழைய ஆயிலியன் பிறந்து வேட்டையில் பெயர்பெற்ற வீரனயிருந்தான். ரோகிணியும் அவனிடமே திரும்பவந்து, இப்போது அவனுக்குப் பெண் மகவாய்ப் பிறந்தாள். அது கி. மு. 22,978. முற்பிறப்பில் நெருங்கிய தொந்தப் பட்ட பலரும் ரோகிணிக்குப் பழைய வினைப்பலன்களை ஊட்ட இந்த ஊரிலேயே முன் பின்னக வந்துபிறந்தார்கள். அஷ்டமன் பெண்ணானன். மூலம் ஆணுனள். ஹப்பசியும் சதயமும் பால் மாருமலே பிறந்தார்கள். வேட்டை ஒன்றே வயிற்றுப் பிழைப்புக்கு வழியாகையால், ஆயிலியன் ஆண் மக்களுக்காசைப்பட்டவன். வேட்டைக்குதவாத ரோகிணியைச் சிறிதுங் கவனிப்பவனல்லன். பெண்மக்கள் பேரில் பாசம்வைத்த தாய்மாத்திரம் ரோகிணியைப் பிரியத்தோடு பாதுகாத்து வந்தாள். அழகுவாய்ந்த ரோகிணி பருவம் வந்ததும், அவ்விடத்தில் தன் பந்துக்களுள்ளேயே பிறந்திருந்த மங்களனைக்கண்டு அடங்காக் காதல் கொண்டாள். இம் மங்களனே முற்பிறப்பில் ரோகிணிக்கு மகனகப் பிறந்திருந்தவன். அவனுக்கும் பண்டு தாய் பேரில் வைத்திருந்த பாசத்தின் பலனக, இந்தப் பிறப்பிலும் ரோகிணியைக் கண்டதும் அன்பு பெருக இருவருங் கலியாணஞ் செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டார்கள் ஆனல் ஆயிலியன் அவர்கள் விவாகத்திற்குடன்படாமல், கிழவனை வேறெருவனுக்கு மகளை விற்று விட்டான். அக் கிழவனே முந்திய பிறப்பில் மனைவியாயிருந்து ரோகிணி கையில் கொடுந் துன்ப மனுபவித்த மூலம். அம் மூலத்திற்கு இப்போது மூத்தமனைவி அஷ்டமி. அவள் போன பிறப்பில் ஆணயிருந்ததும், ரோகிணியினல் அனுபவித்த துன்பங்களும், நன்ருக ஞாபகத்திலிருக்கலாம். அந்த அஷ்டமியும், ரோகிணியும் இப்பொழுது சக்களத்திகளானர்கள். இருவருக்கும் காதலியாயிருந்த மூலம், இப்போது இருவருக்கும் கணவனுனன்.

சக்களத்திமார் சரித்திரங்களை நம்மவர்கள் எத்தனையோ கண்டும் கேட்டுமிருப்பார்கள். ஆகையால் இவர்களுடைய அனுபோகத்தைப்பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. அஷ்டமியம்மாள் மூத்தகுடியாள் பரீக்ஷயில் முதல் வகுப்பில் தேறினவள். போன பிறப்பிலேயே அன்புக்கயிற்ருல் கட்டப்

பட்டிருந்த மூலத்தை இப்போதும் கைக்குள் வைத்து ஆட்டிக் கொண்டிருந்தவள். புதிய சக்களத்தியின் வாழ்வைப் பொறுமை யோடு பார்த்துக்கொண்டிருப்பவளல்ல. கணவன் ரோகிணியின் இளமையில் காதல் கொண்டிருந்தவரை, அவளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் அதிகமாக ஒன்றும் செய்யமுடியாமற் போனாலும், தன்பேரில் பழிவாராத விதங்களிலெல்லாம் அவர் களைப் பாடுபடுத்திவந்தாள். கொஞ்சநாட்களில் மூலம் சதய மென்ற ஓர் பெண்ணைக்கண்டு காமங்கொண்டு ரோகிணியை அலட்சியம்செய்து மற்றவளைப் பின்பற்றவும், அதற்குச் சம்ம திக்காத பெற்றோர்கள் சதயத்தை வேறொருவனுக்கு விவாகம் பண்ணிக் கொடுத்து விட்டார்கள். காமக்கோட்டி கொண்ட கிழவன் காரியம் முற்றுப்பெருமையால் வீட்டிலுள்ளோரை வருத்தத் தொடங்க, அஷ்டமியும் அவனோடு சேர்ந்து இல்லாத கதைகளைச் சொல்லி ரோகிணிக்கு விரோதமாய் அவனை ஏவினாள். இருவரும் இளையாளையும் பிள்ளைகளையும் இம்சிக்காத நாள் கிடையாது அவர்கள் கொடுத்த அடிக்கும் மிதிக்கும் கணக்கில்லை. வயிறு நிறைய அன்னாகாரம் இட்ட நாளில்லை. ரோகிணிக்கோ, தன் துன்பம் போதாமல் தன் பிள்ளைகள் படும் பாட்டையுங்காணக் கணவன்வீடு பூலோக நரகமாயிற்று.

இந்த நிலைமையில், இன்னும் இளமை நீங்காத ரோகிணிக்குப் பழைய காதலனாகிய மங்களன்மேல் மனம் நாட, இருவருக்கும் அந்தரங்க அன்னியோன்னியம் உண்டாயிற்று. அதை யறிந்த அஷ்டமி, சமயம் நோக்கியிருந்து இருவருங் கூடியிருக்கும் வேளையில் கணவனிடம் காட்ட, கிழவன் கோபாவேசங்கொண்டு ரோகிணி கண்முன்னேயே மங்களனைத் துடிக்கத் துடிக்க மழுவால துண்டு துண்டாக வெட்டி, எட்டுக்கால் மிருகத்திற்கு இரையாகக் கொண்டுபோயெறிந்தான். ரோகிணியைத் தன் வீட்டு அடிமைகளிலொருத்தியாக்கி அஷ்டமி கையிலொப்புவித்தான். அவள் அடிமையாக இருபது வருஷம் பட்டபாட்டை எடுத்துச் சொல்லமுடியாது. சக்களத்தியாயிருக்கும்போதே ரோகிணியைச் செக்கிலிட்டாட்டிய அஷ்டமியம்மாள், இரண்டு ஜென்மமாகக் கதும்பித்தின்ன ஏங்கிக்கொண்டிருக்கும் அடிமையை என்னதான் செய்திருக்கமாட்டாள்! இருபது வருஷமும், 'நித்தியகண்டம் பூரணாயுசென்று' நாள் கழித்துவந்த ரோகிணி, கடைசியாய்த் தனக்கு விதித்த கொடுமைகளைச் சகிக்கமாட்டாமல், சக்களத்தி கண்ணுக்குத் தப்பிச் சாக வழியுங் காணாதவளாய், தானிட்ட பயிரையே அறுப்பதறியாமல், அஷ்டமிமே லாங்காரங்கொண்டு, அவள் பிரியப் பேரனாகிய ஐப்பசியென்னும் பையனைப் புலால் காய்ச்சுந் தீக்குழியில் தள்ளிவிட்டாள். பேரன் தீயில் விழுந்

திறந்ததைப் பொறுத அஷ்டமி ஆவேசங்கொண்டு, ரோகிணியைப் பிடித்து அவள் அரையிலிருந்த சல்லடத்தையும் உரிந்து, காட்டுக்குள் இழுத்துக்கொண்டுபோய், கடுவாயெறும்புப் புற்று களுக்கிடையில் அம்மணமாகக் கிடத்தி ஆப்புகளைச் சுற்றி அடித்து அதில் பலமாகக் கட்டிவிட்டாள்.

கடுவாயெறும்பென்பது அத்தீவில் ஓர்வகைக் கட்டெறும்பு. கறுத்துப் பருத்துப் பெரிய சல்லரிக்கட்டைபோன்றிருப்பது. பல்லுக்கெட்டிய எதையும் பிய்த்துத் தின்றுவிடுந் தன்மையது. மனிதரும் மிருகங்களும இவற்றின் பேரைக் கேட்டமாத்திரத் திலேயே மருண்டோடுவார்கள். இவை இப்போதும் ஆப்பிரிக்கா வின் சில பாகங்களிலிருப்பதாகத் தெரிகிறது. இந்த எறும்பு களுக்கிடையில் ரோகிணியானவள் கட்டுப்படவே—ஐயோ பாவம்! அவள்பட்ட துயரத்தை ஆயிரம் நாக்குடையோனுலுஞ் சொல்ல முடியாது. கரும் பழம்போன்ற சாண்வண்ணமுள்ள எறும்புகள் கூட்டங் கூட்டமாய் நாலாபக்கத்திலிருந்தும் மொலோரென்று வந்து மொய்த்தன. உடம்பின் எல்லா உறுப்புக்களையும் ஒன்று போல் வந்து ஊசி நாட்டக்கூட இடமில்லாமல் இடுக்கியிட்டுப் பிடுங்கவே, வேதனை பொறுக்கமாட்டாமல் ரோகிணி கதறினுள்; புழுவாய்த் துடித்தாள்; உயிர் போகமாட்டாமல் பதை பதைத்தாள்; கூக்குரலிட்டாள். உடம்போ திருப்பமுடியாது. கைகாலசைக்க முடியாது ஆயிரங்கோடி ஊசிகளை அங்க மெல்லாம் அடித்தேற்றினுலும் அத்தனை வேதனை யனுபவித் திருக்கமாட்டாள். அவள் அலறிய கூச்சலினுல் காட்டு மிருகங் களும் பறவைகளும் பயந்தோடி யொளித்தன. அவ் வூசிநாக் கெறும்புகள் எலும்பு தவிர மற்றெல்லாவற்றையும் தின்று, எலும்பையுந் துப்புரவாய் நக்கித் துடைத்தன. அவள் உடம் பத்தனையுந் தின்றுதீர ஒருநாள் முழுதுஞ்சென்றது. பாதிநேரம் வரை ரோகிணி பரிதபித்துவிட்டு, கடிவேதனை பொறுக்க மாட்டாது கடைசியா யிறந்தாள். அப்பொழுது அவளுக்கு வயது ஐம்பத்தேழு.

தான் பூமியிற்பட்ட துன்பமெல்லாம் பூர்வ கருமத்தின் பலனென்பதை யறியாது, அஷ்டமி மேலும், அவள் பிள்ளைகள் மேலுங் கொண்ட கோபதாபங்களாகிய கொடுங் குணங்கள, ரோகிணி இறந்ததும் அவளை நரகம்கொண்டு சேர்த்தன. அங்கே அஷ்டமியோடு வழக்கிடுவதாகவும், ஐப்பசியைத் தீயில் தள்ளுவ தாகவும், தன்னைக் கட்டெறும்புகள் மொய்ப்பதாகவும், அனேக கால மனுபவித்துத் துடிதுடித்து, கடைசியாய்த் தன் பிள்ளைகள் மேலுங் கள்ளக்காதலன் பேரிலும் வைத்த அன்பின் பலனைக் சிலகாலஞ் சொர்க்கலோகத்திலும் கழித்து, இறந்து சுமார்

எழுநூறு வருஷத்திற்கப்புறம், மீண்டும் பூமியில் வந்து பிறந்தாள்.

குறிப்புகள்: மனிதன் இறந்தவுடனேயே உலகத்தில் திரும்பப்பிறந்து விடுவானென்று நம்மவர் சிலர் நம்புகிறார்கள். அது தவறான கொள்கை. இறந்தவுடன் பிரேதமாயிருந்து, கல்குழி, கருமாதி சிரார்த்தம் முதலிய அபரக்கிரியைகள் முடியும்போது பிதிர்க்களாகி புவர்லோகத்திலிருப் போர்க்கே, அவர்கள் ஆன்மதிருப்தியின் பொருட்டு ஆண்டுதோறும் திதி கொடுப்பது. அவர்கள் உடனே பிறந்து விட்டார்களென்றால் திதி கொடுப்பது யாருக்காக? திதியும் மூன்று தலைமுறை வரையில் கொடுக் கலாமென்று நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்று தலைமுறை என்பது 75 முதல் 100 வருஷம் வரையாகும். ஆகவே இறந்தோர் அவ்வளவு காலம் புவர்லோகத்திலிருக்கலாமென்பது சாஸ்திரக் கொள்கை. அதை அறியாத சாதாரண மக்கள் இறந்தோர் புவர் லோகத்திலிருப்பதாகத் திதியுங் கொடுத்துக் கொண்டு, உலகத்தில் பிறந்துவிட்டதாக அதற்கொவ்வாத கொள்கையையும் நம்பி வருகி றார்கள்.

மனிதனுக்குப் பல உடம்புகளிருக்கின்றன. நாம் காண்பது பூலோக உடம்பு; அதாவது பூவுடம்பு. அன்றிக் கண்ணுக்குப் புலனாகாத பல நுண்ணுடம்புகளும் அவனுக்கு இருக்கின்றன. அவற்றிலொன்று புவர் உடம்பு. அது புவர்லோகத்திலுபயோகப்படுவது. மூன்றாவது உடம்பு சுவர்க்கவுடம்பு. அது சுவர்க்கலோகத்திலுபயோகப்படுவது. இம் மூன்றுமே பிறப்பு, இறப்புக்களுக்கு அடங்கினவை. அதனால் மனிதன் திரிலோக சஞ்சாரி யென்னப்படுகின்றான். இவை யொவ்வொன்றிற்கும் வேறுபல பெயர்களும் உண்டு; அவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்க.

இனி, பூவுடம்பில் ஒருவேளை உண்டால் உடனே திரும்பப் பசிக் காது. உண்ட ஆகாரத்திற்கேற்ப கொஞ்ச நேரமோ நெடுநேரமோ கழிந்து எல்லாம் ஜீரணமான பின்பே அடுத்த பசி கிளம்பும் அவ்விதமே, நமக் குண்டாகும் பலவித இச்சைகளும் ஆசைகளும் புவர் உடம்பின் பசி. அவற்றைப் பூர்த்தி செய்ய எடுக்கும் முயற்சிகளே அந்த உடம்புக்கு உணவு. உலகத்திலிருக்கிறவரை, ஒரு ஆசையிலிருந்து மற்றொரு ஆசைக்கு இடைவிடாது நாம் முயற்சி செய்வதே தவிர அம் முயற்சி ஜீரணமாக நேரங்கொடுப்பதில்லை. மனிதன் இறந்த பின், அம் முயற்சி களெல்லாம் புவர்லோகத்திலேயே ஜீரணமாகும். உட்கொண்ட ஆகாரத் திற்கேற்ப அதன் காலம் நீடித்தோ குறைந்தோ இருக்கும். அவ்விதமே நமது அறிவிலும் மனதிலும் சங்கற்பவிகற்பமாகிய எண்ணங்கள் தோன்றுவனவெல்லாம் சுவர்க்க உடம்பின் பசி. அதற்காக எடுக்கும் முயற்சிகளும் உயிருள்ளவரை ஓயாது நடந்து கொண்டே இருக்கிறபடி யால், அவை ஜீரணமாவதற்கு நீடித்தோ, குறைந்தோ, சுவர்க்கலோகத் தில் நாள் செல்லும். அப்புறமே ஆன்மா திரும்பப் பூ உடம்பை எடுத்து உலகத்தில் வந்து பிறக்கும். ஆகையால் இறந்தவுடன் மனிதர் பிறந்து விடுவாரென்ற நம்பிக்கை அறியாமையே யாகும்.

"குழிப்பிள்ளை மடியில்" என்றொரு பழமொழி உண்டு. அது உண்மையே. ஏனெனில், பிறந்த குழந்தை அதன் இச்சையும் அறிவும் பசி எடுக்குமுன்னமே இறந்துபோகிறபடியால் அதற்கு மேலுலகில் தங்க வேண்டிய வேலையொன்றுமில்லை. ஆகையால் அது தாமதமன்னியில்

திரும்பப் பிறந்துவிடும். மற்றையோர் அவர்கள் இச்சைக்கும், அறிவிற்கும், அவற்றைத் திருப்தி செய்ய எடுத்துக் கொண்ட முயற்சிக்கும் தக்கபடி கொஞ்சக் காலமோ நெடுங்காலமோ மேலுலகங்களில் தங்கிய பின்னரே திரும்பப் பிறப்பார்கள்.

கோடி வழி—II.

மடகாஸ்கர் தீவு– பெண்.
கி. மு. 22978—கி. மு. 22921.
வயது 57—பின் பிதுருலகவாசம்: 713.

ஆயிலியன்: வேடன். (மகள்) ரோகிணி.

ரோகிணி: (கணவன்) மூலம். (சக்களத்தி) அஷ்டமி. (காதலன்) மங்களம்.

ஐப்பசி: அஷ்டமி பேரன்.

சதயம்: கிழக் கணவன் மூலம் என்பவன் காதலி—அறியாமலே ரோகிணிக்குச் சனியனானவள்.

3. மலாக்கா—பெண்

கி. மு. 22,208—கி. மு. 22,152.
வயது: 56 - பின் பிதுருலக வாசம்: 612-ஆம்.

இந்தப் பிறப்பில் ரோகிணியுடன் சதயத்தைத் தவிர வேறு பழைய கூட்டத்தார் யாருங் காணப்படவில்லை. முன்னொருகால், சதயத்தை மணக்க ஒட்டாமலும் அமைதியாய் இருக்கவொட்டாமலும் செய்த கொடுமையால், சதயம் கோட்டிகொண்டிறந்தது ஞாபகமிருக்கலாம். அடுத்த பிறப்பில் கிழட்டுக் கணவனுக்குச் சதயம் கைக்கிட்டாத காரணமாக ரோகிணி துன்பமடைந்ததும் ஞாபகமிருக்கலாம். இந்தப் பிறப்பில் சதயம் ஆணாகப் பிறந்து தன்னை அறியாமலே பழைய பழியைத் தீர்த்துக்கொண்டமாதிரி தோன்றுகிறது.

சீனதேசத்திற்குத் தெற்கே, சிங்கப்பூருக்குச் சமீபத்திலுள்ளது மலாக்காநாடு. அதில் அக்காலத்திருந்த மக்கள் அதிக நாகரிகமடைந்திராவிட்டாலும், முன்னிரண்டு பிறப்பிலும் கண்ட நிகிரோவரைவிட எவ்வளவோ மேன்மையுற்றிருந்தார்கள். ஆடையாபரணங்கள் அணிந்திருந்தார்கள்; வீடுவாசல் வைத்திருந்தார்கள்; துணி நெய்வார்கள்; சாயங் காய்ச்சுவார்கள்; கடலோரத்திருந்தவர்கள் அநேகம் படகுகள் வைத்து அந்நிய ஊர்களில் சென்று தேங்காய் வியாபாரம் செய்தார்கள். அக்காலத்தில் உன்னத நாகரிகமடைந்திருந்த சீனதேசத்திலிருந்து, படகு முதலியன கொண்டுவந்து வெளிநாட்டில் விற்பார்கள். அந்த

மக்களுக்குள், கடற்கரையிலிருந்த ஒரு பெரிய வியாபாரிக்கு மகளாக, கி. மு. 22,208-இல், அதாவது இறந்து 713 வருஷம் கழித்து ரோகிணி திரும்பப் பிறந்தாள்.

ரோகிணியின் பெற்றோர்கள் அவள் பிழைத்திருப்பாளென்றே எண்ணவில்லை. பிள்ளை பிறந்த பொழுதே மிகவும் மெலிந்து மரப்பாச்சி போன்றிருந்தது. மாதஞ் செல்லச் செல்ல, ஊர்வனவற்றைக் கண்டால் உடனே இழுப்பு நோயுண்டாகும். நெருப்பைக் கண்டால் நடுக்குவலி வந்து வேதனைப்படும். எதைக் கண்டாலும் பயந்து ஒதுங்கும். புத்தி சுவாதீனமில்லாத பிள்ளை போல மருண்டு மருண்டு விழிக்கும். பாதித் தூக்கத்தில் பதறி விழித்தலும் அடிக்கடி மூர்ச்சையாகும். முந்திய எட்டுக்கால் ஜந்துவும், எறும்புக் கூட்டங்களும், மற்றக் கோர சம்பவங்களும் சொப்பனத்தில் தோன்றிக்கொண்டேயிருக்கும். ஆகவே, நாளாக நாளாக, பெற்றோர் எவ்வளவு கவலையெடுத்தும் குழந்தை கிழாரப் போயிற்றே யொழியத் திருந்தவில்லை. கடைசியாக, ஒன்றும் செய்யத் தோன்றாமல், பேய்க்குற்றமாயிருக்கலாமென்று ஒரு மாந்தரீகனை வரவழைத்தார்கள். அவன் மந்திரத்தால், இரவுகளில் நேரிட்ட கொடுஞ் சொப்பனங்கள் ஒருவாறு மறைய, அவள் அயர்ந்து தூங்கத்தொடங்கினாள்.

அதனால் கொஞ்சங் கொஞ்சமாக உடம்புக்கு ஓரளவு ஆரோக்கியம் உண்டானபோதிலும், அவள் புத்திக்குப் பூரணத் தெளிவு ஒரு நாளும் உண்டாகவேயில்லை. இந்த நிலைமையில் வளர்ந்து வாழ்க்கைப்பட்டு இரண்டு பிள்ளைகளையும் பெற்றாள். அப் பிள்ளைகள்மேல் அதிக வாஞ்சையுடையவளாயுமிருந்தாள். நாள்தோறும் வந்து கொண்டிருந்த மாந்திரீகன் குடும்பத்துக்கு நெருங்கிய நண்பனாகவே, அவன் மகன் சதயரும் அடிக்கடி அவ் வீட்டுக்கு வரலானான். கொஞ்ச நாளில் ரோகிணிமேல் மோகமுங் கொண்டான்.

ரோகிணிக்குச் சதயத்தைக் காணும்போதெல்லாம் பூர்வ வாசனையால் பயமும் வெறுப்பும் தோன்றிக்கொண்டேயிருக்கும். அத்துடன் அவன் காமத்தை வெளியிடவும் அவள் கொண்ட வெறுப்புக்கு அளவேயில்லை. அவள் வெறுக்கவெறுக்க சதயத்திற்குண்டான விருப்பிற்கும் அளவேயில்லை. எவ்வளவு வேண்டியும் ரோகிணி தன் விருப்பத்திற்கு இணங்காததைக் கண்டு, அவளை எவ்விதத்திலும் கைக்கொள்ள அவாக்கொண்ட சதயம், போன பேயைத் தகப்பனைக்கொண்டு திரும்ப வருவித்துவிடுவதாகப் பயமுறுத்தினான். அதனால் புத்தி பழையபடி பேதுற்றுவருகிற காலத்தில் அவள் மூத்தபிள்ளை நெருப்பில் விழுந்திறக்கவும், நெருப்பென்றால் என்றைக்குமே நடுங்கும்

ரோகிணி, அரைகுறையாயிருந்த அறிவும் நீங்கி முழுப்பைத்தியங் கொண்டவளானாள்.

குடும்பத்தார் அவளைக் கூடியவரை நன்கு பேணிவந்தார்கள். மந்திரவாதிக்கும் அடங்காத தேவதையெனவே அவளுக்கு மதிப்பு அதிகப்பட்டது. அவள் அமைதியாயிருக்கும் வேளைகள் மிகவும் சுருக்கம். அக்காலங்களில் அவள், கேட்ட குறிகளுக்கு உத்தரவு சொல்லுவாள். அவற்றுள் சில பலித்தபடியால் அவள் பெரிய குறிகாரியென்று பெயரும் பெற்றாள்.

ஐம்பத்தாறு வயதுவரை ரோகிணி உயிரோடிருந்த போதிலும், பிறந்த நாள்முதல் இறக்கும் நாள்வரை அவளுக்கு நீண்ட துன்பத்தைத்தவிர சுகமுண்டான நாளே கிடையாது. ஆகையால் இறுதியிலும் அவளுக்குத் துர்மரணமே நேர்ந்ததாயினும் அது விடுதலையாகவே கருதப்பட்டது. அவ்வூரார், திருநாளொன்றைப் பெரிய சொக்கப்பனை கொளுத்திக் கொண்டாடும் போது, அத் தீயைக்கண்ட ரோகிணி, தேகம் பதறி வெறிகொண்டோடி நெருப்புக்குள் பாய்ந்தாள். வெளியே எடுக்குமுன் புழுவாய்த் துடித்து வெந்திறந்தாள். அவள் உயிரோடிருக்கும்போது நல்வினை ஒன்றும் செய்யாவிடினும், தீவினை செய்ய இடமில்லாமையாலும் தன் மக்கள்மீது கொண்ட உண்மை அன்பின் பலனாகவும் மேலுலகங்களில் 612 ஆண்டுகள் தங்கினாள்.

குறிப்புகள்: இறந்தபின் என்ன நடக்கும் என்பதை அறிய விரும்புவோர் உலகத்தில் மனிதருடைய முயற்சிகளைப்பற்றிச் சிறிது ஆராயவேண்டும். அஃதாவது மனிதனுடைய முயற்சிகளெல்லாம் அவனிடமிருக்கும் மூன்று கருவிகளால் நடைபெறும். அக் கருவிகள் எண்ணம், ஆசை, செய்கை என்பன. இவை மனம் வாக்குக் காயம் என்றும், அறிவு இச்சை செயல் என்றும் சாஸ்திரங்களால் அழைக்கப்படும். இவை மூன்றுமே மனிதன் செய்யும் எல்லா வினைகளுக்கும் இன்றியமையாத கருவிகள். அவன் ஒன்றை நினைப்பது எண்ணம், ஒன்றை விரும்புவது ஆசை, ஒன்றை நடத்துவது செய்கை. இனி இந்த முயற்சிகள் தன்னலத்தைக் கருதிச் செய்யப்படும் வினைகளென்றும், பிறர் நலத்தைக் கருதிச் செய்யப்படும் வினைகளென்றும் இருவகைப்படும். தன்னலத்திற்குச் செய்யும் வினைகளெல்லாம் புவர்லோகத்தில் அனுபவிக்கப்படும். பிறர் நலத்திற்குச் செய்யும் வினைகளெல்லாம் நெடுங்காலம் சுவர்க்கலோகத்தில் அனுபவிக்கப்படும்.

புவர்லோகமானது பூலோகத்தை ஊடுருவி அதற்கு அப்பாலும், நெடுந்தூரம் எல்லாப் பக்கத்திலும் பரவி, பூலோகத்தைப்போலவே உருண்டையாயிருக்கும். கொலை, களவு, கள்குடித்தல், விபசாரம் செய்தல், பிறரைக் கெடுத்தல் போன்ற தீவினைகளிலேயே இவ்வுலகத்தில் முயன்றவர்கள், புவர்லோகத்தின் அடிப்பாகமாகிய நரகத்தில் கிடந்து அழுந்துவர். அங்குள்ள துன்பத்தை எடுத்துச் சொல்லமுடியாது. மேற்சொன்ன தீவினைகள் செய்யாவிடினும், வெட்டிப்பேச்சுப் பேசி, சீட்டு முதலிய விளையாடிச் சோம்பேறித்தனமாய் வீண்நேரம் போக்குவோர்

புவர்லோக மத்தியபாகத்தில் வேலையில்லாமல் நேரமும் போகாமல் வேசடைப்பட்டு அலுத்துக்கிடந்தலைவர். இவ்விரண்டுமின்றி, தனக்கு நற்பதவி கிடைக்கவேண்டுமென்று, அஃதாவது தன்னலங்கருதி, சாஸ்திரம் பயின்று, கடவுளைத்தொழுது, தருமங்கள் செய்வோர்க்குப் புவர்லோக மேற்பாகத்தில் கவலையில்லாத இன்பம் கைகூடும். தன்னை மறந்து மனைவி மக்களுக்குச் செய்யும் உதவிகளும், தன்னுடைய சௌகரியங்கள் போனாலும் பொருட்டாக்காமல் உற்றார் உறவினர் பிற உயிர்கள் இவர்களுக்காகப் பாடுபடுவதும் சொர்க்கலோகத்தில் இன்பத்தைக் கொடுக்கும். அந்த இன்பத்தை அளவிடமுடியாது. இந்த இரண்டு இடத்திலும் வாழுங்காலம், அவரவர் இவ்வுலகத்தில் இருக்கும்போது செய்த வினைகளின் அளவைப் பொறுத்துக் கூடியும் குறைந்தும் இருக்கும். ஆயினும் விஷயம் தெளிவாய் விளங்கும் பொருட்டு ஒரு சராசரி அட்டவணை இதனடியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இறப்பிற்கும் மறுபிறப்பிற்கும் இடையிலுள்ள காலம் சராசரி

	மக்கள் இயற்கை	புவர் லோக வாழ்வு	சுவர்க்க லோக வாழ்வு	மகர் லோக வாழ்வு	ஆக சராசரி ஆண்டுகள்
1	கொடுந் தொழிலாளர்	5	...	...	5
2	ஈனமக்கள்: மனைவி மக்களை அடிப்போர், கள், கஞ்சாப் போதையர், களவு, பொய், வஞ்சகம், முதலியவற்றால் காலம் கழிப்பவர்	40	...	...	40
3	கூலியாளரில் மரியாதைக்காரர்	40	160	...	200
4	விவசாயிகளில் மரியாதைக்காரர்	40	260	...	300
5	வியாபாரிகளில் மரியாதைக்காரர்	25	475	...	500
6	வைத்தியர், ஆசிரியரில் மரியாதைக்காரர்	25	975	சிறிது காலம்	1000
7	பகுத்தறிவுடைய உத்தமர்	சிறிது காலம்	1150	50	1200
8	தம்மையே மறந்து பிறர் நலம் பேணும் பெரியார்	...	2150	150	2300

இவை சராசரி அளவு. சிலர் நூறு, இருநூறு ஆண்டுகள் புவர்லோகத்தில் தங்குவதுமுண்டு. அவை எல்லாம் அபூர்வம். அவை தனிப்பட்ட காரணங்களால் உண்டாகுபவை.

கோடி வழி—III.

ரோகிணி: *கோட்டிப்பெண்.*

சதயம்: *மந்திரவாதிமகன். ரோகிணியை மோகிப்பவன்.*

4. தென்னிந்தியா—பெண்

கி. மு. 21,540—கி. மு. 21,504

வயது: 36 - பின் பிதுருலகவாசம்: இல்லை

கி. மு. 21,540—*அன்றே தமிழ்நாடாயிருந்த தென்னிந்தியாவில், நீலகிரிமலைக் கானக்குறவருக்குள்ளே, மூலம் பிறந்திருந்தான். அவனுக்கு மேற்சொன்ன ஆண்டில் ரேவதி வயிற்றில் ரோகிணி மகளாகவும், மிருகசீரளன் மகனாகவும் வந்து பிறந்தார்கள். ரோகிணி குறத்தியாயினும் மிகவும் வனப்பு வாய்ந்தவள். அவள் வளர வளர அங்குள்ள வாலிபரெல்லாம் அவளை வளைய வர ஆரம்பித்தார்கள். ரோகிணியோ மலையைவிட்டு அடிக்கடி அடிவாரத்தில் இறங்கும் காலங்களில் அவ்விடத்து நாகரிகங்களையும் சௌகர்யங்களையும் கண்டு அவற்றின்மேல் அவாக்கொண்டிருந்தாள். ஆகையால் அதிகாரத் தோரணையில் மிகுந்த விருப்பமுள்ளவளாயினும், தன்னைச் சூழ்ந்த வாலிபரையெல்லாம் அவமதித்து விரட்டிவிட்டு, தனது 15-ஆவது வயதில், அடிவாரத்தில் இப்போது பெங்களூர் என்று வழங்கப்படும் ஊருக்கு வந்து சேர்ந்தாள். குறமக்களுள் கல்வியென்பதே கிடையாதாயினும், பின் வருவதைக்கருதி, ரோகிணி தமிழை எழுதவும் படிக்கவும் நன்றாய்க் கற்றிருந்தாள். மலையைவிட்டிறங்கியதும், அடிவாரத்தில் ஒரு பெரிய சீமான் வீட்டில் வேலைக்கமர்ந்து, அவ்வீட்டு அருமை மகளாகிய அவிட்டத்துக்குப் பணிப்பெண்ணானாள். இருவரும் ஒரே வயதினராயிருந்தபடியால், சில நாளில் இவள் அவளுக்கு அந்தரங்கத் தோழியானாள்.*

தமிழபிமானிகள் இன்றைக்கு இருபத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே தமிழும் தமிழ் நாடும் செழிப்புற்றிருந்ததைக் கேட்டுப் பெருமிதம் எய்துவார்கள். மேற்சொன்ன தமிழ்ச் சீமான் வீட்டில் பரம்பரையாகப் பத்திரப்படுத்தி வைக்கப்பட்ட ஒரு பெரிய மரகதம் இருந்தது. அது அநேக ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கடல் கொள்ளப்பட்ட அத்லாந்திய நாட்டிலிருந்த ஒரு பெரிய மாந்தரீகனால் மந்திரிக்கப்பட்டது. அந்த மந்திர மணியை யுடையோர் விரும்பிய வரத்தைப் பெறுவரென்றும், ஆயினும், முடிவில் தீமையே எய்துவரென்றும், ஒரு கொள்கையிருந்துவந்தபடியால், அவ்வீட்டில் அது உபயோகிக்கப்படாமலே பாதுகாக்கப்பட்டு வந்தது. தன்மேல் மிகுந்த ஆர்வமுடைய

தகப்பனைக் கேட்டு அவிட்டத்தம்மாள் அக்கல்லை வாங்கி, அதன் சக்தியால் அடுத்த ஊர்ச் சிற்றரசனுக்கு வாழ்க்கைப்பட விரும்பித் தன் தகப்பனை அதற்காக முயற்சிக்கும்படி தூண்டினாள். துவாதரனென்பவன் அடுத்த ஊரரசன். சீமானோ அரசவமிசத்தைச் சேர்ந்தவனல்லன். ஆயினும் மரகதக்கல்லின் மகிமையினால் பெண்ணைப் பார்த்துவரும்படி அரசன் ஆளனுப்பவும், சென்றவன் அவிட்டத்தின் அழகைப் பலவாறு வியந்து வந்துரைக்க, அரசனும் ஆசைகொண்டு பெண்ணை மணக்கத் தீர்மானித்துத் தன்னாட்டுக்கு அழைத்துவரும்படி பரிவாரங்களை அனுப்பினான். பெற்றோரும் அக் காலத்து வழக்கத்தின்படி பெண்ணை நிறைய முக்காடிட்டுப் பல்லக்கிலேற்றித் துணைக்கு ரோகிணியையும் வேறு இரண்டு வேலைக்காரிகளையும் கூட்டி, வந்த பரிவாரத்தோடு அனுப்பிவிட்டார்கள். தூரப்பயணமானதால், அரசனாட்கள் இரவில் கூடாரங்களில் தங்கியும் பகலில் வழி நடந்தும் சென்றார்கள். இதைத் தவிர வேறு வேலையொன்றுமில்லாமையால் ரோகிணியின் மனம் உள்ளூர வேறு வேலைசெய்யத் தொடங்கிற்று. 'மனமுண்டானால் இடமுண்டு' என்பது உண்மைப்பழமொழி. ரோகிணியின் மனவுறுதியையோ முன் ஜென்மங்களிலேயே நாம் பார்த்திருக்கிறோம். "மலையை விட்டு நாட்டில் இறங்கினதே நல்லகாலம். அதிலும் வனப்புடைய குமரியாய்த் தீயோர் வாய்ப்பட்டு உழலாமல், சீமான் வீட்டை அண்டினது அதைவிட நல்லகாலம். அங்கிருந்து அரண்மனை செல்வது, ஒரு மலைக்குறத்திக்குப் பெரிய யோகமென்றே சொல்லவேண்டும். அப்புறம்—அரண்மனை அடைந்த பின்—" இவ்வாறாக அவள் மனம் பலவாறு நினைத்தது.

இதே நினைவாய் வழி நடந்துகொண்டிருந்தாள் ரோகிணி. "பேதைப்படுக்கும் இழவூழ், அறிவகற்றும் ஆகலூழ் உற்றக்கடை" என்றபடி அவள் ஆசைப்பேய், கொஞ்சம்கொஞ்சமாய்த் தலைவிரித்தாடத் தொடங்கிற்று. புதுப்பெண் முக்காட்டை மணமகனைத் தவிர வேறு யாரும் மாற்றக்கூடாதாகையால், வந்த பரிவாரத்தில் பெண் முகத்தைப்பார்த்தவர் யாருமில்லை. அதோடு அரசனும் பெண் முகத்தைப் பார்த்திரான் என்ற எண்ணம் ரோகிணிக்குத் தோன்றவே, அவள் மனதில் ஒரு வலிமையான துராசை பிறந்து வளரத்தொடங்கிற்று. அரசனும் மற்றப் பரிவாரங்களும் பெண்ணைப் பார்த்திராமையாலும், உருவத்திலும் உயரத்திலும் தானும் அவிட்டமும் ஏகதேசம் ஒத்திருந்தமையாலும், அரசனுடைய நாடு செல்வதற்குமுன், அவிட்டத்தைக் கொன்று மரகதக்கல்லைப் பிடுங்கித் தானே அவிட்டமாக நடித்தால், அரசியாகும் பேறு தனக்கே கிடைத்துவிடுமென்று

எண்ணினாள். நாளாக நாளாக அந்த எண்ணம் துணிவாயிற்று. ஆகவே சமயம் பார்த்திருந்து, அவிட்டத்தை ஒருநாளிரவு உறங்கிக்கொண்டிருக்கும்போது குத்திக் கொன்றுவிட்டாள். அச் சமயத்தில் வெளியே படுத்திருந்த வேலைக்காரி அரவங்கேட்டு உள்ளே வரவும், அவளையும் மேலே விழுந்தமுக்கிக் கையிலிருந்த ஆயுதத்தால் குத்திக் கொன்றுவிட்டு, மிகவும் இளம் பெண்ணாகிய மற்ற வேலைக்காரியைத் தட்டியெழுப்பினாள். இவர்களுக்குள் முன்னமேயே அந்தரங்க நட்பேற்பட்டிருந்தபடியால் நடந்த காரியத்தைக்கேட்டதும், வேலைக்காரியாகிய குரு வென்பவள் உடம்பெல்லாம் விதிர்த்து நடுங்கினாள். அதைக் கண்டு தன் கையிலிருந்த கத்தியைக் காட்டி அவளைத் தன் கருத்துக் கிணக்கிக்கொண்டு, இருவருமாக இரண்டு பிணங்களையும் அப்புறப் படுத்தினார்கள்.

பெண்ணழைக்க வந்த பரிவாரங்கள் கூடாரத்தைச் சுற்றிக் கொஞ்ச தூரத்தில் காவலாகப் படுத்திருந்தார்கள். அவர்களுக்குப் புலப்படாமலும், பொழுது விடியுமுன்பாகவும், அந்த இரண்டு பிணங்களையும் அப்புறப்படுத்துவதற்கு இவர்கள் பட்ட பாடு இவ்வளவவ்வளவென்று சொல்ல முடியாது. மலைப்பளியருட் பிறந்து மிருகங்களோடு வளர்ந்த பயிற்சியாலும், மிகுந்த துணிவும் புத்திக் கூர்மையும் இயற்கையாக அமைந்திருந்ததாலும், ரோகிணியால் இந்தக் காரியம் நடத்த முடிந்தது.

பொழுது விடிந்ததும் ரோகிணி அவிட்டத்தின் ஆடையாபரணங்களை யணிந்து நிறைய முக்காடிட்டுக்கொண்டாள். குருவையழைத்து, அவிட்டம் விடியுமுன்னதாகவே தன் வேலைக்காரிகளிருவரையும் தகப்பனாருக்கனுப்பி விட்டதாக அரசனுடைய ஆட்களுக்குத் தெரிவிக்கச் சொன்னாள். தங்களரசனுக்கழைத்துப் போகும் மனைவி நொடிக்கொரு நினைவும் முரண்டுப்பிடிப்பு முடையவளென்பதை, அரசன் வகைஆட்கள் பிரயாணத்தின்போது கண்டுகொண்டபடியால், அச் செய்தியைப்பற்றி யாதொரு சந்தேகமுங் கொள்ளாமலே, பெண்ணையழைத்துக் கொண்டு ஊர்போய்ச் சேர்ந்தார்கள். ரோகிணி இயற்கையில் வனப்பும் நடையுடைகளில் நாகரிகமும் வாய்ந்திருந்தமையாலும், அவள் கையிலிருந்த மரகதத்தின் மாய்கையாலும். துவாதசனுக்கு அவள் தெய்வலோகத்துப் பெண்ணாகவே தோன்றினாள். இருவருக்கும் வெகு சிறப்போடும் விமரிசையோடும் கலியாணம் நடந்தேறியது. ரோகிணியும், அவள்மேல் மட்டற்ற காதல் கொண்டிருந்த துவாதசனும், வெகு இன்பமாகக் காலங்கழித்து வந்தார்கள். ஆரம்பத்தில் ரோகிணிக்கு மனதில் திகிலேற்பட்டிருந்தபோதிலும், நாளாக நாளாக இனித் தன் குற்றத்தை

யாரும் கண்டு பிடிக்கமாட்டார்களென்ற தைரியம் ஏற்பட, அதனால் அரசனிடத்தில் மிகுந்த வாஞ்சையும் அவனை நினைத்த படியெல்லாம் நடத்தும் வலிமையும் அவளுக்கு உண்டாயிற்று.

துவாதசன் வேட்டைப்பிரியன். இன்பந்துய்த்தலே பெரிதாகக் கொண்டவன். அரசியற்றுதலைப் பொருட்படுத்ாதவன். அவன் நியாயவிசாரணை நடத்தும்போது ரோகிணி மறைந்திருந்து வழக்கை நன்ருய் உற்றுக்கேட்டு, அரசன் உள்ளே வந்த பிற்பாடு தீர்ப்பு இன்னபடி யென்று சொல்லிக்கொடுப்பாள். அவள் புத்திக்கூர்மையாலும், வனத்தில் பிறந்து வறுமையென்னும் பள்ளியில் படித்த பழக்கத்தாலும், அவள் தீர்ப்புகள் அனேகமாய் நியாயமாயும் யூகமாயுமிருந்தன. அதனால் அரசனுக்கும் மிகுந்த அறிவாளி யென்ற புகழேற்பட்டபடியால், அவன் தன் மனைவியை மிகுந்த பெருமையோடு பாராட்டிப் போற்றிவந்தான். ஆயினும் பெருந்தொகை கிடைக்கிற காலங்களில் ரோகிணி லஞ்சம் வாங்கக் கூச்சப்படுவதில்லை. பொதுவாக அவள் தன்னுடைய நிலைமையில் திருப்தியும் சந்தோஷமுமடைந்தவளாய்க் காலங்கழித்து வந்தபோதிலும், தன் பழைய குற்றம் வெளியாகிவிடுமென்ற பயம், ஊடே ஊடே அவளைத் துன்புறுத்திக்கொண்டே யிருந்தது. அவிட்டத்தம்மாளின் தகப்பன் தன் மகளைப்பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு அதிகப் பிரயாசையெடுத்து வழிநடந்து வந்து சேர்ந்தபோது, அவன் கண்ணிற்படாமல் தப்புவதற்காக ரோகிணி செய்த சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் அறிந்த ஊரார், உண்மையை அறியாமல், அவளுடைய கல் நெஞ்சையும் பெருமையையும் பற்றி அவளைத் திட்டினர்கள். தகப்பனும் தான் அரச குடும்பத்தில் பிறவாததால் தன்னை மகள் அவமதித்தாளென்று மனமுடைந்து ஊர் போய்ச்சேர்ந்தான். உண்மையில் ரோகிணி கல்நெஞ்சுடையவளல்ல. தான் ராணியானதும் யாரும் அறியாமல் மலையிலிருந்த தமையனை வரவழைத்து, தன் தமையனென்று வெளிக்குக் காட்டாமலே அவனைத் தக்கபடி படிப்பித்து, உயர்ந்த குலத்தில் பெண்கட்டிவைத்து, உத்தியோகமும் கொடுத்து ஆதரித்தாள்.

ரோகிணியின் மூத்தமகன் மங்களன். முற்பிறப்புக்களில் ரோகிணியோடு காதலால் கட்டுப்பட்டவன். மிகவும் அழகான பையன். அவனை ரோகிணி தன் உயிர்போலப்பாவித்து வந்தாள். அவனை அரசனாக முடிசூட்டிப் பார்த்து மகிழ வேண்டுமென்ற அவா ஒன்றே அவளை இரவும் பகலும் இடைவிடாது பிடித்துக் கொண்டிருந்தது. பழைய தொந்தத்தால் பிறந்த மற்றொரு மகன் ஆயிலியன். இவன் பழைய இருபிறவிகளில் தகப்பனாயிருந்தவன். ரோகிணியை மணந்த பத்தாவது வருஷத்தில்,

துவாதசன் அரசாங்க காரணத்தை முன்னிட்டு அடுத்த ஊர் அரசனுடைய மகள் ஆனியம்மையை இரண்டாவதாகக் கலியாணம் செய்துகொண்ட போதிலும், தனக்கு அரசன் மீதுள்ள அதிகாரம் கொஞ்சமும் குறையாதிருந்தபடியால், ரோகிணி இளையாளை ஒரு எதிரியாகப் பாவிக்கவில்லை. இளையாளுக்கும் ஆணொன்றும் பெண்ணொன்றுமாக இரண்டு குழந்தைகள் பிறந்தன.

இப்படியிருக்குங் காலத்தில் ரோகிணிக்குத் தீவினைப்பயன் தொடங்கிற்று. ஊருக்குத் திரும்பிவிட்டதாகச் சொல்லப்பட்ட இரண்டு பெண்களையும் பற்றி யாதொரு செய்தியும் கிடைக்காததால், அவர்கள் வழியில் காட்டு மிருகங்களாலோ அல்லது கள்வர் கைப்பட்டோ மாண்டிருக்க வேண்டுமென்று கருதப்பட்டது. கூடவந்த குருவானவள் ரோகிணியால் மிகமதிப்பாக நடத்தப்பட்டு, அரசனை அடுத்திருந்த ஒரு சீமானுக்கு மணஞ்செய்து கொடுக்கப்பட்டிருந்தும், அவளாலேயே தீவினை தொடங்கிற்று. ரோகிணிக்குத் துணையாயிருந்த குருவானவள் தன்னையறியாமலே அவள் துன்பத்திற்கும் குருவானாள். தன் அந்தரங்கத்தை நெடுங்காலம் அடக்கமாட்டாதவளாய் அவள் எல்லாவற்றையும் தன் கணவனிடம் சொல்லிவைத்தாள். அவன் அரசியின் வாழ்வு தன் கையில் அகப்பட்டதையறிந்து அதுமுதல் ரோகிணியைப் பயமுறுத்தத் தொடங்கினான். நினைத்தபோதெல்லாம் பணம் பறித்து வந்தான். மற்றும் நினைத்த காரியங்களையும் அவளைக்கொண்டு நடத்திவந்தான். தன் நிலைமையைக் கண்ட ரோகிணி எந்த விநாடியிலும் ஆபத்து நேரிடுமென்று கருதி, வேண்டும்போது உட்கொள்ள மடியில் கொஞ்சம் நச்சுமருந்து வைத்துக்கொண்டேயிருந்தாள். குருவின் கணவன் நாளுக்கு நாள் துணிவு கொண்டு கடைசியில் நாட்டையே கைப்பற்றக் கருதி அரசனைக் கொல்லச் சதியாலோசனை செய்தான். அதில் ரோகிணியையும் சேரும்படி பலவந்தப்படுத்தினான்.

அது கண்டுபிடிக்கப்படவே அரசன் ஏவலால் குருவின் கணவனைப் பிடித்துவந்தார்கள். தன் உயிர் தப்புவதற்காக அவன் குறத்தி கதையைச் சொல்லிவிட்டான். குட்டுவெளிப்பட்டுவிட்டது. நாடெங்கும் அல்லோல கல்லோலமாயிற்று. குறத்தியை மணந்து அரசகுலத்திற்குப் பங்கம் விளைத்தது அரசனுக்கு ஆருத்துயரத்தையும் ஆங்காரத்தையும் உண்டு பண்ணியது. ரோகிணிக்குச் சிரசாக்கினை விதித்தான். அவள் பிள்ளைகளை ஊரைவிட்டு ஓட்டும்படி உத்திரவிட்டான். அன்று நேரமாய்விட்டபடியால் ரோகிணியைச் சிறையிலடைத்து வைத்தார்கள்.

ரோகிணி வெறிகொண்டவளானாள். இத்தனை வருஷமாகச் செய்த முயற்சியும் சூழ்ச்சியும் வீணானது மாத்திரமல்லாமல் தன் அருமை மகன் இனி அரசாளுவதற் கில்லையே யென்ற ஏக்கம் அவள் நெஞ்சைப் பிளந்தது. தன்னையும் தன் மக்களையும் மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டுப்பார்த்தாள். அரசன் ஒன்றுக்கும் இரங்கவில்லை. கடைசியாய் ஏதும் செய்யத் தோன்றாதவளாய் ரோகிணி திகிலடைந்திருந்த பொழுது, திடீரென்று மரகதக்கல் ஞாபகத்திற்குவரவும், அதை இடுப்பில் மறைவாய்த் தொங்கவிட்டிருந்த பையிலிருந்து எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, அதோடு சம்பந்தப்பட்ட ஏதாவது தேவதை யிருக்குமானால் அதை உடனே வந்து உதவி செய்யும்படி மிகவும் உருக்கமாய்ப் பிரார்த்தித்தாள். அப்போது கொடும்பார்வையுள்ள கறுத் துயர்ந்த ஒரு மனிதன் திடீரென்று அறைக்குள் தோன்றினான். ரோகிணியை அவன் அலட்சியமாய்ப் பார்த்து "என்னவேண்டும்," என்று வினவ, ரோகிணி உடல் நடுக்கத்தோடு தன் விருப்பத்தைச் சொன்னாள். அவன், சிறைச்சாலைச் சன்னலுக்கு வெளியே அரண்மனைக்குப் பின்புறத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு பெண் குழந்தையைச் சுட்டிக் காட்டி, "மரகதக் கல்லை அந்தப் பிள்ளையினிடம் எறிவாயானால் உன்னைக்காப்பற்றலாம்," என்றான். வெளியே விளையாடிக் கொண்டிருந்த பிள்ளை இளைய ராணியின் பெண்ணாகிய சதுர்த்தி யென்னும் ஆறுவயசுக் குழந்தை. ரோகிணி மரகதத்தை வெளியே எறிந்ததும் "உன்னிடமிருக்கும் நஞ்சை உண்," என்றான். ரோகிணி நஞ்சையுண்டு மாள, வெளியே விளையாடிநின்ற சதுர்த்தியும் மயங்கி வீழ, அந்த உடம்பில் ரோகிணியின் உயிரைப் புகுத்திவிட்டு மாந்தரிகன் மறைந்தான்.

5. தென்னிந்தியா—பெண்

சதுர்த்தியுடம்பில் புகுந்த ரோகிணிக்கு உயிர்த் தெழுந்ததும் ஒன்றுமே தோன்றவில்லை. எல்லாம் பனிமூடம் போலிருந்தது. கூடப்பிறந்து பழகாத உடம்பாகையால் முதல் முதல் அதை அவளுக்கு அடக்கியாள முடியவில்லை. அவள் ஒன்று நினைத்தால் அது ஒன்று செய்யும். சிரிக்கவென்றால். அழும், இருக்க வென்றால் நடக்கும். பேச வென்றால் சிரிக்கும். அந்த நிலைமையில் மரகதக்கல்லின் மந்திரவாதி, இரகசிய மொன்றும் வெளியாகி விடாதிருக்கும் பொருட்டு, பழகும் வரையில் தானே உடம்பை ஆட்டிவந்தான். ரோகிணி உயிர்த்தெழுந்தவுடனேயே அவளைக் கொண்டு மரகதக்கல்லை ஒரு மறைவான இடத்தில் புதைத்து வைக்கச் செய்தான். சற்று நேரத்தில் அரசனுடைய

காவலாளர் பழைய ராணியைக் கொலைக்களத்திற்குக் கூட்டிப் போக வந்தபோது, அவள் சிறைச்சாலையில் இறந்து கிடக்கக் கண்டு அரசனிடம் சென்று தெரிவித்தார்கள். அவன் உடனே மரகதக் கல்லை அவள் உடம்பிலும் அரண்மனையின் மற்ற இடங்களிலும் தேடிக்காணுமல், அது களவு போய்விட்டதாக எண்ணி, அவளை எடுத்து அடக்கம் பண்ணும்படி கட்டளை யிட்டான்.

சதுர்த்தி என்னும் சிறுமி துவாதசனுக்கு இளைய மனையாளாகிய ஆனியிடம் பிறந்த பெண்ணென்று முன்னமே சொல்லப் பட்டது. ரோகிணிக்குப் புதிய உடம்பில் புகுந்து கொஞ்சக் காலம் வரையில், தன் ஓர்மையோடு எதுவும் செய்வதாகவே புலப் படவில்லை. அவள் தன் உடம்பை அடக்கியாளவும், 36-வயதான வகையை வெளிக்குக்காட்டாமல் ஆறு வயசுக் குழந்தை மாதிரி நடக்கவும், எவ்வளவோ முயற்சியும் பிரயாசையும் எடுத்துக்கொண்ட போதிலும், அவளுடைய மாறுபாடான நடையிலிருந்து, வெகு நாள்வரையில் குழந்தைக்கு நன்ருய்ப் புத்தி சுவாதீன மில்லையென்றே அவள் பெற்ரேர் நினைத்தார்கள். ரோகிணிக்குத் தான் மலையில் பிறந்ததுமுதல் சிறைச்சாலையில் மாண்டது வரை நடந்த ஒவ்வொன்றும் நன்ருய் ஞாபகத்தி லிருந்தபடியால், அநேகந் தடவைகளில் தன்னை யறியாமலே பழைய காரியங்களைச் சொல்லிவிடுவாள். அவள் தன் உடம்பை எவ்வளவு கட்டுப் படுத்தி நடந்தபோதிலும் சில சில சமயங்களில் அவளுடைய கைச்சைகைகளையும் பேச்சினுடைய பாவனையையுங் காணும் போது பழைய ராணியின் பேய் தன்மகளைப் பிடித்திருப்பதாகப் பயந்து, ஆனி மகளுக்கு மந்திர சிகிச்சை செய்து வைப்பாள்

கொஞ்ச நாளில் ரோகிணியும் வளர்ந்து, மிகவும் இளம் பருவத்திலேயே இப்போதைய மசூலிப்பட்டணத்திற் கருகாமையிலிருந்த ஒரு அரசகுமாரனுக்கு மணஞ் செய்யப்பட்டாள். வெளியே காட்டப் பயந்து அதுவரை புதைத்து வைத்திருந்த மரகதத்தைப் புதிய கணவன் ஊருக்குப்போகும்போது ரோகிணி தோண்டி எடுத்துக்கொண்டுபோனுள். புதிய கணவனுகிய திருதிகன் முற்கோபி; மனம்போல் திரிபவன்; ஆயினும் ரோகிணியை அன்பாகவே நடத்திவந்தான். அவளும் மரகதக்கல்லைத் தன் சீதனப் பொருளாகக்காட்டிக் கணவனையும் மாமனையும் சந்தோஷப்படுத்தினுள். இந்தப் பெயர்பெற்ற மரகதக்கல் பிலக்ஷத்தீவென்று புராணங்களில் சொல்லப்படும் அத்லாந்திய நகரத்துப் பெரிய சூனியக்காரன் ஒருவனுல் அபிமந்திரிக்கப் பட்டு, அதனை உபயோகப்படுத்துவோர் அந்த மந்திரவாதிக்கு அடிமையாகும் விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதற்குக் கைம்மாருக, மணியின் உடைமைக்காரர்க்கு மனிதர்மேல் ஆதிக்

கம் பண்ணவும் விரும்பிய காதலைப்பெறவும் ஒருவாறு வலிமை கொடுக்கப்பட்டது.

ரோகிணிக்குத் தன் கணவன் அதிகார மில்லாமல் இளவரசனயிருப்பது பிடிக்கவில்லை. மரகதத்தை உபயோகித்து மாமனை மயக்கி, ராஜ்யத்தை இரு கூறுக்கித் தானும் கணவனுமாகப் பாதி நாட்டை ஆண்டார்கள். கணவன் அவள் கைப்பாவையாக ஆடினபோதிலும், அந்த அதிகாரமும் அவளுக்குப் போதவில்லை. உடனே அரண்மனை ஜோசியருக்கு வேண்டும் கப்பம் கொடுத்து அவனுடைய உதவியைக்கொண்டு மாமனை வானப்பிரஸ்தம் செல்லவைத்து நாடு முழுவதையும் கைப்பற்றினள். ஆரா இயற்கை அவாவுடைய ரோகிணிக்கு அதுவும் திருப்தியாகவில்லை; அடுத்த நாட்டை வசப்படுத்த முயன்றாள். அது கண்ட அண்டை நாட்டரசர் இருவர் ஒன்று சேர்ந்து இவர்மேல் படையெடுக்கவும், எதிர்க்க ஆற்றலில்லாமல் ரோகிணி அத்லாந்திய சக்கரவர்த்தியின் சகாயத்தைத் தேடும்படியாயிற்று; தன் நாட்டை எதிரி கைப்படாமல் காப்பாற்றினல் சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டுவதாக அவள் தூதனுப்பினள். ஆகவே ஆற்று வெள்ளம் வந்து கிணற்று நீரையும் கொண்டுபோனமாதிரி, அதிக ஆசைப்படப்போய் உள்ளதற்கே ஆபத்தாயிற்று.

அந் நாளில் அன்றைய உலகில் ஓங்கி நின்றவர் அத்லாந்தியர். தென்னிந்தியாவின் பெரும்பாகமும் அவர்கள் ஆளுகைக்குள்ளேயே இருந்தது. அவர்கள், இன்று கடல் கொள்ளப்பட்டு அத்லாந்திக் சமுத்திரத்தில் அழுந்திக்கிடக்கும் போஸிதானிஸ் கண்டத்தில் (படம் பார்க்க.) தமது தலைநகராகிய பொற்கபாடபுரத்திலிருந்து ஒரு தலைவனையும் வேறு சில அதிகாரிகளையும் தமக்குக் கீழ்ப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி ஒரு சிறிய கப்பத்தை வாங்குவதைத் தவிர, பழைய சிற்றரசர்களை நீக்கிவிடுவதில்லை. ரோகிணியும் அண்டையிலிருந்த இரு சிற்றரசரும் அவ்விதம் கட்டுப்படாத சுய ஆட்சியையுடையவர். ரோகிணி தன் பேராசையால் அத்லாந்தியருக்குத் தலை வணங்கவே, அக்காலத்திய நாகரிக உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்த அச் சக்கரவர்த்திக்குப் பயந்து, படையெடுத்த இருவரும் ஒதுங்கிக்கொண்டார்கள். நாடு தப்பின போதிலும், அதன் சுதந்திரம் போய்விட்டபடியால் ரோகிணியினிடம் குடிகளுக்கு மிகுந்த வெறுப்புண்டாயிற்று.

கொஞ்ச நாளில் ரோகிணிக்குப் புற்றுநோய் கண்டது. நாளுக்குநாள் மெலியத்தொடங்கினள். நோய் குணமாகாதென்று கண்டதும் சாவு நெருங்கியதை அறிந்தாள். நெருங்க நெருங்க மனம் நடுக்குற்றது. மரகதக்கல் மந்திரவாதியையே திரும்பவும்

பிரார்த்தித்தாள். நெடுநாளாக ஒரு பதிலும் இல்லை. கடைசியாகச் சொப்பனத்தில் ஒரு நாள் அவன் தோன்றி, "இந்த உடம்பைக் குணமாக்க முடியாது. வேறு உடம்பு வேண்டுமானல், தசமி உடம்பைத்தரலாம்'' என்றான். தசமி அவளுடைய அருமை மகள். இரண்டாவது கணவனாகிய திருதிகனுக்குப் பிறந்தவள். அக் குழந்தை தரையில் நடக்கச் சகிக்க மாட்டாள் ரோகிணி. அவளை அவ்வளவு அன்பாகப் போற்றி வந்தாள். ஆகவே மந்திரவாதி சொன்னதைக் கேட்டதும் அவள் திகில் கொண்டு, வேறொரு வழி தெரிவிக்கும்படி அவனை வேண்டிப்பார்த்தாள். ஈன இரக்க மொன்றுமறியாத அந்தச் சூனியன் "வேண்டுமானல் தசமியைக்கொல், இல்லாவிட்டால் சும்மாயிரு'' என்று சொல்லிவிட்டு மறைந்துவிடவும், ரோகிணி உறக்கம் நீங்கி மறுநாள் முழுவதும் தன் சொப்பனத்தையே எண்ணி எண்ணி ஏக்கமுற்றாள். இறுதியில் தன் மகளைக் கொன்று தான் வாழ்வதைவிடத் தான் இறந்து போவதே மேன்மையென்று தீர்மானித்துக் கொண்டாள். ஆனல் நாளுக்கு நாள் அவள் வேதனை அதிகப்பட அதையும் பொறுக்க ஆற்றாமல் தன்னுயிரும் போக மாட்டாதவளாய்த் தசமியைக் கொன்றாவது துன்பத்தை நீக்கிக் கொள்ள வேண்டுமென்று மெள்ள மெள்ளத் தீர்மானிக்கலானாள். கடைசியாய், ஆசையும் துன்பமும் அன்பை வெல்ல, சூனியக்காரன் ஆக்கினைப்படியே தசமியைக் கொண்டுபோய், மிகுந்த மன உளைச்சலோடும் பீதியோடும் அரண்மனைக்கு அருகாமையிலோடிக் கொண்டிருந்த ஆற்றினுள் தன் கையாலேயே அமுக்கி, மூச்சடங்கினதும் கரையில் கிடத்திக் கழுத்தில் மரகதக்கல்லைக் கட்டிவிட்டுத் தானும் தண்ணீரில் குதித்து இறந்தாள். அவளுடம்பை ஆற்றுவெள்ளம் அடித்துக் கொண்டு போயிற்று. மந்திரவாதியும் தோன்றி அவளுயிரைக் கரையில் மயங்கிக்கிடந்த தசமியுடம்பில் புகுத்தி வைத்தான். சற்று நேரத்திற்கெல்லாம், காணமற்போன குழந்தையைத் தேடி வந்த வேலைக்காரியொருத்தி கரைமேல் சவம்போல்கிடந்த தசமியைக் கண்டெடுத்து மார்போடணைத்து அழுதுகொண்டிருக்கும் போது, ரோகிணி மூன்றாவது உடம்பில் மூர்ச்சை தெளிந்து உயிர்த்தெழுந்தாள். ராணியின் காலடித் தடத்தைக் கண்டவர்கள், நோய் வேதனை பொறுக்கமாட்டாமல் அவள் ஆற்றில் விழுந்திறந்தாளென்று அனுமானித்துத் தேடி எடுத்தார்கள்.

ரோகிணிக்கு இரண்டாவது கணவனிடம் பிறந்த மக்களுள், எண்ணுயிரம் வருஷங்களுக்கு முன்பு பாரசீகத்திலிருந்து விலகிய பலரும் வினைவலியால் திரும்பவந்து சேர்ந்தார்கள். அன்று தமையனைப்பிறந்து ரோகிணி கையால் குத்துண்ட அசுபதியும்,

அத்தைமகளாயிருந்த பஞ்சமியும், சிற்றப்பன் மகனுயிருந்த ஆதியும், இப்போது அவள் வயிற்று ஆண் பிள்ளைகளானர்கள். அன்று அண்ணன் மகளான புரட்டாசியும் மற்றொரு அத்தை மகளாயிருந்த தசமியும் இப்போது ரோகிணிக்குப் பெண்மகளாகப் பிறந்தார்கள்.

குறிப்புகள்: வினைக்கடன் வாங்க வருவோருள் முதல் உரிமையுடையவர் தமக்குப் பிறக்கும் மக்கள். அவர்களிடம் திரும்ப ஒன்றும் விரும்பாமல் அவர்களுடைய நன்மையை மாத்திரம் கருதி அவர்களை வளர்த்துப் புணர்த்தி ஆளாக்கி விட்டு விட்டால் அக் கடன் பெரும்பாலும் தீர்ந்து போகும். ஆனல் மனிதர் பழைய கடன் பற்றப் பிள்ளைகளாய்த் தம்மிடம் வந்தாரென்று அறியாமல், புதுக்கடனுகத் தம் மக்களிடமிருந்து அன்பையும் ஆதரவையும், ஆயுள் வரை கீழ்ப்படிதலையும் விரும்பி, அவரை வற்புறுத்துகிறார்கள் அது வாழையடி வாழையாக வேறு வினைகளை விளைவித்து, மேலும் மேலும் வலைப்பின்னல் போல அவர்களைக் கூட்டிப்பிணைத்து, இருகூட்டத்தாரையும் விடுதலை பெறவொட்டாமல் தடுக்கின்றது.

இதுவே சமுசாரபந்தம் எனப்படுவது. முறையான இல்லற வாழ்வு சமுசாரபந்தமல்ல. வாங்கிய கடன்களை மாத்திரம் மனதோடு கொடுத்து விட்டு, மேற்கடன் விரும்பாதவர்களுக்குச் சமுசாரம் விடுதலை மார்க்கமேயாகும்; பந்தமாகாது. இந் நூலின் உட்கருத்தை நன்றாய் உணர வேண்டுமாயின் ஒவ்வொரு பிறப்பும் முடிந்தவுடன் கொடிவழியைத் திருப்பி, மீண்டும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்போது உற்றார் உறவினருடன் ஒழுகவேண்டிய முறை அறியப்படும். ஒவ்வொரு பிறப்பும் தொடங்கும் போது உலகப்படம் ஒன்றைவைத்துப் பிறந்த இடங்களையும் குறித்து வந்தால், அது பிறநாட்டாரிடமும் பிறமதத்தாரிடமும் ஒழுகவேண்டிய முறையைக்காண்பிக்கும். உண்மையில் தமரென்றும் பிறரென்றும் இல்லாமல், எல்லாம் தமது மதங்களாகவும் தமது மக்களாகவுமே காணப்படும்; சாதி சமயவேற்றுமை பாராட்டுவது அறியாமை யென்பது விளங்கும். இன்று இந்துவாயிருப்பவன் நாளைக் கிறிஸ்தவனுகப் பிறக்கக் கூடும். இன்று பிராமணனுயிருப்பவன் நாளை வேறு குலத்திற் பிறப்பான். இன்றைய இங்கிலீஷ்காரன் நாளைய இந்தியனுவான். ஆகையால் ஒன்றை மாத்திரம் தந்நாடு, தன் சமயம் என்றெண்ணிப் பிறரை இகழ்வதும் வெறுப்பதும், அறியாமையும் வேண்டாவினைக்கு வித்திடுவதுமாம்.

6. தென்னிந்தியா—பெண்

தசமியுடம்பில் உயிர்த்தெழுந்த ரோகிணிக்குக் கொஞ்சநேரம் ஒன்றுமே புலப்படவில்லை. சிறுகச் சிறுக மூளையில் உணர்ச்சி தட்டிய போது தோன்றிய முதல்எண்ணம் மகளைக்கொன்ற பாதவிப்பு. அதற்குள் கூட்டம் கூடிவிடவே, அதைப் பற்றி ஆலோசிக்க அவளுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. முன்னம் எடுத்த சதுர்த்தியுடம்புக்கு வயது ஆறுயிருந்தது. இப்போது தசமியுடம்புக்கு வயது பத்தாயிருந்தபடியால் இந்த உடம்பை

முழுவதும் வசப்படுத்த முன்னைவிடக் கூடுதல் காலம் சென்றது. வளர வளர ரோகிணி தான் இட்டது சட்டமென்பாள். தன் மனம் போன போக்கிலேயே போவாள். தன்னுடைய சௌகரியம் ஒன்றையே கருதுவாள். பிறருக்கு அதனால் என்ன இடைஞ்சல் நேரினும் கவனிப்பதில்லை.

ரோகிணி அரசன் மனைவியாயிருந்து செய்துவந்த வேலைகள், இப்போது மகளாயிருந்து செய்வதற்கியலாதாயின. ஆதலின், அவளுடைய உதவி அரசனுக்கு இல்லாமற்போகவே, அவனுடைய செய்கைகள் பழைய ஆற்றலுடையனவாகக் காணப்படவில்லை. அத்லாந்தியருக்குக் கீழ்ப்படிந்த நாள் முதலே நாட்டுக்குள் பெருகி வந்த அதிருப்தி இப்போது அரசனுக்கு விரோதமாக மூளவே, அதுகாரணமாக நேரிட்ட போரில் அரசன் தோல்வியடைந்து கொல்லப்பட்டான். அதுகேட்ட அத்லாந்தியத் தலைவன், தன் சேனையொன்றை அனுப்பிக் கலகத்தை அடக்கிக் கபாடபுரத்திலிருந்து வேறு உத்தரவு வருகிற வரை, தன் ஆள் ஒருவனை அதிகாரத்தில் அமர்த்தினான். கலகத்தில் இறந்த அரசன் மகனாகிய அசுபதி விரும்பியிருந்தால், கப்பத்தைக் கட்டிவிட்டுப் பட்டத்தைப் பெற்றிருக்கலாம். ஆயினும், தன் உத்தம மனைவியாகிய கார்த்திகையோடும் குலகுருவாகிய மீனதேவரோடும் கலந்ததில், அரசு கைக்கொள்ளவேண்டுமென்றால் அதிருப்தியுற்ற குடிகள் அநேகரை அத்லாந்திய சைனியத்தின் உதவியால் சம்மாரஞ்செய்யாமல் தீராதென்று அறிந்தான். ஆகவே அந்தப் பாவமும் அதனால் பெறப்படும் பதவியும் தனக்கு வேண்டாமென்று அசுபதி ஒதுங்கிவிட்டான்.

இந்தத் தீர்மானம் ரோகிணிக்கு மிகுந்த மனக் கலக்கத்தை உண்டு பண்ணிற்று. ஆயினும் அசுபதிக்குத் தாயாயிருந்தது போய் இப்போது அவன் தங்கையாயிருந்தபடியால், அவளால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. ஆகவே, ‘வெறும் வாயை மெல்லுவதைவிட ஒரு வாய் அவல் மேன்மை’ யென்ற எண்ணத்தோடு, புதிதாய் வந்த அதிகாரியை வலைக்குள்போடுவதெனத் தீர்மானித்தாள். வனப்பும், நற்குலப்பிறப்பும், புத்திக்கூர்மையும், மூன்று தலைமுறை அனுபவமும் உடையவளாகையால், பொற்கபாடபுரத்திலிருந்து பதிவான அதிகாரி வரும்போது தன் பதவி போய்விடுமென்று கைப்பட்டவனை மணந்துகொள்ளாமலே கடத்திவந்தாள். ஏறக்குறைய இரண்டாண்டுகள் கழிந்தபின் பொற்கபாடபுரத்திலிருந்து சுமார் முப்பதாட்டைப் பிராயமுடைய சித்திரை என்பவன் பதிவான கவர்னராக வந்துசேர்ந்தான். அவனும் மணமாகாதவன். இந்தச் சித்திரையே எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாரசீகநாட்டில் ரோகிணி காதல்

கொண்ட மைத்துனியென்று அறியவும். அக் காதல் காரணமாக வாழையடி வாழையாக விளைந்துவரும் துன்பங்களையும் ஓர்ந்து கொள்ளவும். இப்போது அச் சித்திரையே ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் ஆறுகைப்பிறந்து பழவினையால் இவர்களைச் சந்திக்க வந்து சேர்ந்தான். அதிகாரத்தில் அவாமிஞ்சிய ரோகிணியும் காலந்தாழ்க்காமல் அவனைக் கைப்பற்றத் தொடங்கினாள். ஆனால் சித்திரையோ உல்லாச மொன்றுமின்றி ஆழ்ந்த கருத்துடையவனாயிருந்தான். ரோகிணி கற்ற வித்தை யெல்லாம் அவனிடம் பலிக்காமற் போயிற்று. அவன் ஒழுக்கத்தையும் மன உறுதியையும் கண்டு முதலில் அவள் அச்சங்கொண்டாள். பின்பு அக் குணங்களை வியந்து பலமான காதல் வாய்ப்பட்டாள். அது முதல் தன் வித்தைகளை விட்டு இயற்கையாக நடக்கவே, அவளுடைய இயற்கைவனப்பையும் புத்தி சாதுரியத்தையும் உள்ளபடி கண்ட சித்திரையும் அவள் மேல் காதல்கொண்டான். இருவர் மனத்தையும் அறிந்த அசுபதியும் அவர்கள் திருமணத்திற்குச் சம்மதிக்க, ரோகிணி, மலையிற் பிறந்தது முதல் அன்றைய வரை ஒரே தொடர்பான அறிவோடு, மூன்றுந்தரம் மனைவியானாள்.

ரோகிணிக்குக் கோரின வரம் கிடைத்ததும், எண்ணாயிரம் ஆண்டுகளாக உறங்கிக் கிடந்த அவள் மனச்சாக்ஷி குற்றப் பத்திரிகை வாசிக்கத் தொடங்கிற்று. சித்திரை கடவுளிடம் பய பக்தியும் மனிதரிடம் ஒழுக்கமு முடையவன். தீச்செயல்களையும் அவற்றைப் புரிவோரையும் வெறுப்பவன். அவனை நன்கு அறிய அறிய ரோகிணிக்குக் காதல் ஒரு புறமும், தன் குற்றத்தை அறிந்தால் அவன் என்ன செய்வானோ என்ற பயம் ஒருபுறமும் ஏற்பட்டன. ஒரு சமயம் ஒன்றையும் ஒளியாமல் சொல்லிவிட எண்ணுவாள்; அதனால் அவன் காதலை இழந்துவிடுவோமென்று தயங்கி அடக்கிக்கொள்வாள். மறுமுறையும் பழைய எண்ணமே கொள்வாள். இங்ஙனம் இருதலைக்கொள்ளி எறும்புபோல மனம் ஊசலாட, அகத்து அடைபட்ட கவலை ஆளையுருக்க, ரோகிணி நாளுக்கு நாள் இளைக்கத் தொடங்கினாள். அவளைப் பலமுறை கேட்டும், அரண்மனை வைத்தியரிடம் காட்டியும், அவளுக்கு யாதொரு குறைவுமில்லாமல் நடந்தும், ஒன்றும் பலன் பெறாமையால் அவள்மேல் ஆர்வங்கொண்டிருந்த சித்திரையும் அடங்காக் கவலைகொண்டான். அதைக் கண்ட ரோகிணி இன்னது செய்வதென்றறியாமல் மீன தேவரிடம் சென்று ஆலோசிக்கத் தீர்மானித்தாள்.

மீனதேவர் கல்வி கேள்விகளாலும் அறிவொழுக்கங்களாலும் உத்தமராகிய ஒரு ஞானசிரியர். தவத்தில் மிக உயர்ந்தவர்.

அரச குடும்பத்திற்கு நெருங்கிய உறவினரும் குலகுருவுமானவர். அப்படியிருந்தும் அவருடைய சத்திய நிலையைக்கண்டு பயந்து (இந்நாள் வரை அவரிடம் நெருங்காமலே) ஒதுங்கி வந்த ரோகிணி, இப்போது தன் கவலையைத் தீர்க்கக்கூடியவர் அவர் ஒருவரே எனத் தீர்மானித்தாள். அவரிடம் சென்று ஆதிமுதல் ஒன்றையும் ஒளியாமற் சொல்லவே, அவர் திடுக்கிட்டார். செய்தது பெரிய பாதகமென்று வருந்தினர். மந்திரவாதியின் பந்தத்தை எளிதில் விலக்க ஒண்ணுதென்று பயந்தார். விலகாதவரை அது மேலும் மேலும் பாதகம் செய்யவே தூண்டுமென்று எச்சரித்தார். அதனுல் மீளாநரகத்தில் அழிந்து போவது உறுதியென்றும் சொன்னர். உண்மையாக விடுதலையடையவேண்டுமென்ற ஆவா அவளுக்கு இருக்குமானுல், அவள் மரகதக்கல்லை வேருெருவர் கைப்படாமல் கடலில் எறிந்துவிட்டு, கணவனிடம் எல்லா நிகழ்ச்சிகளையும் எடுத்துச் சொல்லி; அவனையும் அவனுக்குப் பிறந்த ஆறு பிள்ளைகளையும் விட்டொதுங்கித் துறவியாகித் தவங்கிடக்கவேண்டுமென்றும், அப்போது அதற்குரிய முறைகளை உபதேசிக்கத் தான் தயாராயிருப்பதாகவும் தெரிவித்தார். இவற்றைக் கேட்டதும் ரோகிணிக்கு மனத்தில் இடிவிழுந்தாற் போலாயிற்று. அவளுக்கு என்ன துன்பம் வரினும் கணவனையும் மக்களையும் விட்டுப் பிரியத் துணிவு வரவில்லை. ஆயினும் வேறு எவ்விதத்திலும் இப்பந்தம் நீங்காதென்று கேட்டு, அவர் சொற்படியே நடப்பதெனத் தீர்மானித்தாள். உடனே அவருடன் கடற்கரைக்குச் சென்று மரகதக்கல்லைத் தன்னுல் எறியுமளவு கடலுக்குள் ஓங்கி எறிந்து விட்டாள். அவரும் அவளுக்குக் காப்பாகச் சில மந்திரங்களை உபதேசித்து (அவள்மேல் உச்சாடனஞ்செய்து) அவளை ஆசீர்வதித்து, எல்லாவற்றையும் கணவனிடம் சொல்லும்படி வீட்டுக்கனுப்பி விட்டார்.

கதை முழுவதையும் கேட்டதும் சித்திரை உள்ளம் உடைந்தது; மனம் குழம்பியது; அறிவு கலக்கமுற்றது; நெடு நேரம் ஒன்றும் செய்யத்தோன்றுமல் அவன் பிரமைகொண்டிருந்தான். தன் அருமை மனைவி இவ்வளவு கொடுமை இயற்றக் கூடியவளென்று அவனுல் நம்பமுடியவில்லை. கடைசியில், தன்னை விடக் கூடுதலாய்த் தன் மனைவி வருந்துவதைக்கண்டு, அவளைத் தேற்றி யழைத்துக்கொண்டு, மீனதேவரிடம் சென்றுன். சமுத்திரத்தில் கல்லை எறிந்துவிட்டது சரியென்றும், ஆனுல் தன்னை விட்டு ரோகிணி பிரிந்து போவது முறையல்ல வென்றும் அவரோடு சித்திரை வாதாடினுன். தங்கள் ஆறு குழந்தைகளையும் பாதுகாக்க வேறு ஆளில்லை என்றுன். மனைவியை எப்போதுமே பாதுகாக்க வேண்டியது கணவன் கடமையாக விருக்க, இப்போர்ப்

பட்ட ஆபத்துக்காலத்தில் கை விடுவது நீதியாகாதென்றான். இன்னும் பல பல எடுத்துச் சொல்லிப் போராடினான். அத்தனையும் கேட்டுவிட்டு, சித்திரை சொல்வதெல்லாம் சரியேயாயினும் இந்தக் கட்டத்திற்கு அவை ஒன்றும் பொருத்தமாகாதென்றும், ரோகிணி பேராபத்திலிருக்கும்போது தன் சௌகரியத்தையும் பிள்ளைகள் சௌகரியத்தையும் பெரிதாகப் பாராட்டுவது முறையல்லவென்றும், அவள் செய்த குற்றங்களுக்கு அவளே பரிகாரம் செய்யவேண்டுமாகையால் தன் சொற்படி நடப்பதானால் தன்னால் கூடிய உதவி செய்வதாகவும் சொல்லி, அவர்களை அனுப்பிவிட்டார் மீனதேவராகிய பெரியார்.

வேறு வழியில்லை யென்று கண்டு கணவனையும் மக்களையும் விட்டுப் பிரிவதாகத் தீர்மானித்தாள் ரோகிணி. தன் தோழி பௌர்ணமியிடம் குழந்தைகளை ஒப்புவித்தாள். அவளை மணந்து கொள்ளும்படி சித்திரையை வேண்டினாள். குழந்தைகளை அவள் பாதுகாப்பில் விட உடன்படினும், ரோகிணிக்குத் தான் துரோகம் பண்ணுவதில்லை யென்று சித்திரை அந்த வேண்டுகோளை மறுத்துவிட்டான். ரோகிணி அரண்மனைக்குரிய ஆடையாபரணங்களைக் களைந்து, சந்நியாசக் கோலம் பூண்டு, ஊருக்கு வெளியேயிருந்த ஒரு குகையில் போய் மீனதேவர் உபதேசப்படியே தவங் கிடந்தாள்.

அன்று முதல் மந்திரவாதியின் தொந்தரவும் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் அது நாள் முழுவதும் இருந்து கொண்டேயிருந்த தென்னலாம். மாந்திரீகன் எதிரே தோன்றி, தவத்தை நிறுத்தும் படிக்கும் தனக்கு அடிமைப்படும் படிக்கும் வற்புறுத்துவான், பயமுறுத்துவான். அவனை ரோகிணி மனோபலங் கொண்டு எதிர்ப்பாள். அதனால் அடிக்கடி மூர்ச்சையாவாள். மீனதேவரும் வந்து தைரியம் ஊட்டுவார். மீனதேவர் அனுமதியின் பேரில், மாதம் ஒரு தடவை சித்திரையும் மனைவியிடம் வந்து அவளைத் தேற்றி, வேண்டிய சௌகரியங்கள் செய்துவிட்டுப் போவான். இவற்றைத் தவிர மற்ற நேரமெல்லாம் தனக்கும் மாந்திரீகனுக்கும் நடக்கும் மனப்போரில் சற்றேனும் ஓய்வில்லாமல் அலுத்துச் சலித்துத் தனியே கிடந்து தயங்கினாள். அவ்வாறு நாளாக நாளாக அவளுக்கு மனோவலிமை கூடிற்று. அது கூடக் கூட மாந்திரீகனுடைய சக்தி குறையத் தொடங்கிற்று. கடைசியாக அவனுடைய பயமுறுத்தலைக் கவனியாமலே இருக்கக் கற்றுக்கொண்டாள். அது கண்ட கருந்தொழில் வல்லானும் அவளை விட்டு விலகிவிட, மீனதேவர் வந்து அவளைப் புகழ்ந்து, "நன்று செய்தாய். இனி இந்தத் துன்பம் இராது. மேல் நீ மேன்மை பெறுவாய்" என்று ஆசீர்வதித்து,

வித்தகச் சித்தர் கணத்தவராகிய தன் குருநாதருடைய ஆசியை யும் கூறிச் சென்றார். பின்னர், ரோகிணி குகையிலேயே தங்கி முப்பதாண்டுகள் தவஞ்செய்து, பெரிய துறவியென்ற புகழுடன் மரித்தாள். சித்திரையும் தன் வேலையை விட்டு விலகி, தன்னைப் பிரியாத அசுபதியையும் இட்டுக் கொண்டு தன் ஊராகிய பொற் கபாடபுரம் போய்ச் சேர்ந்தான். அவன் மக்களெல்லோரும் இங்கேயே தங்கிவிட்டார்கள். ரோகிணிக்குச் சித்திரையிடம் பிறந்த மக்களுள், அமாவாசன் என்றவன் அவ்வூரில் வேசையா யிருந்த அஷ்டமியை மணந்து குடும்பத்திற்குப் பெருங்குறைவை உண்டு பண்ணினன். அவள், அவன் உடலையும் செல்வத்தை யும் கெடுத்துவிட்டுச் சில நாளில் வேறொரு பணக்கார வாலிப வியாபாரியோடு ஓடிவிடவே அது, சம்பந்தப்பட்ட எல்லோருக் கும் வசையையும் கேவலத்தையும் மனக்கவலையையும் உண்டு பண்ணியது. ரோகிணிக்குப் பாரசீகத்தில் அஷ்டமச்சனியாகப் பிறந்திருந்த அஷ்டமியை நேயர்கள் அறிவார்கள். அங்கு அவன் ஆணாகவிருந்தான். அமாவாசனுடைய பழைய தொந்தங்களை யும் கொடி வழியிற் காண்க. இவ்வாறு முடிவுற்றது இந்த அதிசயப் பிறப்பு.

குறிப்புகள்: ஆரம்ப முதல் இதுவரை சொல்லியவற்றிலிருந்து வினையும் அதன் பயனும் ஒருவாறு உணரப்படும். அவற்றை நன்றாய் விளக்குவதற்கு ஒரு அட்டவணை சேர்க்கப்பட்டிருக்கிறது.

வினையும் பலனும்

மானிடரெல்லோரும் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று கருவிகளால் வினைகளை இயற்றுவர். அவ்வினைகள் இருவகைப்படும். மக்கள் இறந்தபின், (1) தன்னல வினைகளை புவர்லோகத்தில் அனுபவித்து, அங்கும் இறந்து, (2) பிறர்நல வினைகளை ஸுவர், மகர் லோகங்களில் அனுபவித்துப் பின் பூலோகத்தில் பிறப்பர்.

(1) புவர்லோக வாழ்க்கை

தன்னலங் கருதியவினை
(இவை சிற்றின்பம் கொடுப்பவை)

I. உடம்பால் அனுபவிக்கப்படும் சிற்றின்ப முயற்சிகள்.

- கொலை, களவு, கள், காமம், வஞ்சகம், சூதாட்டம், பொய் முதலியவற்றால் வாழ்வது.
  - அதமம்
  - இறந்தபின் புவர்லோக அடிப்பாகமாகிய நரகத்தில் துன்பப்படுவது இவற்றின் பலன்.
- நியாய வழியில் பணந்திரட்டி, மனைவி மக்களோடு சுகித்து, எஞ்சிய நேரத்தைச் சீட்டாட்டம் முதலிய வீண் விளையாட்டுக்களில் போக்கி, வேறு மன முயற்சியில்லாதிருத்தல்.
  - மத்திமம்
  - இறந்தபின் புவர்லோக மத்தியபாகத்தில் பிரவர்த்தியின்றி நேரம் போகாது மனவேசடைப்படுதல் இவற்றின் பலன்.

II. மனத்தால் அனுபவிக்கப்படும் சிற்றின்ப முயற்சிகள்.

- புகழையோ மோக்ஷத்தையோ விரும்பி, அதற்காகக் கற்றல், கேட்டல், கடவுள் தொழுதல், தருமஞ்செய்தல், சித்திரம், சங்கீதம் பழகல் முதலிய நல் வினைகள் செய்தல்.
  - உத்தமம்
  - இறந்தபின் புவர்லோக மேல்பாகங்களில் மிக இன்பகரமாய் மேற்சொன்ன முயற்சிகளிலேயே அமர்ந்திருத்தல் இவற்றின் பலன்.

இந்தப் புவர்லோக வாழ்க்கை தீர்ந்தபின் உயிர்கள் சொர்க்கலோகம் செல்லும் (P. T. O.)

(தொடர்ச்சி)

(2) சோர்க்கலோக வாழ்க்கை

பிறர்நலங் கருதிய வினை
(இவை சொர்க்க இன்பம் கொடுப்பவை)

இலாபம் கருதாது உடை, உணவு, மருந்து முதலியவற்றால் பிறர் உடல் நலங்கருதல்; அவ்வாறே சமயம், சாஸ்திரம், சங்கீதம், சித்திரம் முதலியவற்றால் பிறர் மனநலம் பேணுதல் எல்லாம் இவற்றுள் அடங்கும்.

I. கைம்மாறு கருதாமல் உற்றார், உறவினர், ஜாதியார், சமயத்தார் முதலிய தம்மக்கள் பேணுதல்.

(அன்பு)

அதமம்

சுவர்க்கலோக அடிப்பாகத்தில் சொல்லொணு இன்பம் இவற்றின் பலன்.

II. அவ்விதமே தமர், பிறர் என்ற வேற்றுமையின்றி எல்லா உயிர்களையும் ஒன்றுபோல் ஓம்புதல்.

(அருள்)

மத்திமம்

சுவர்க்கலோக மேல்பாகங்களிலும் மகர்லோகத்திலும் நெடுங்காலம் பேரின்பம் இவற்றின் பலன்.

III. தானற்றவிடம் பூரணம்: அது இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலை.

(அருட்கருவி, இறைவாகனம்)

உத்தமம்

இதுவே முத்தி என்ற பேரின்பம். என்றும் மாறாத பேரின்பக் கடலில் ஆழ்வதே இதன் பலன்.

I, II. அதம, மத்திம உயிர்கள் சொர்க்க, மகர்லோக வாழ்க்கை தீர்ந்து உலகத்தில் திரும்ப வந்து பிறப்பர்.

III. உத்தமர் உலக நன்மைக்காகத் தாமாக வந்து பிறந்தாலன்றி இவருக்கு மேற்பிறவி யில்லை.

குறிப்பு : (1) சிற்றின்பம் என்பது அனுபவிக்கப்படும்போது இன்பமாகத் தோன்றி பின்னால் துன்பத்தைக் கொடுப்பது. சொர்க்க இன்பம், துன்பமற்ற சுகத்தையே கொடுப்பினும் நிலையாதது. முத்தியின்பம் என்பது என்றும் ஒரே படித்தாக நிற்கும் பேரின்பம்.

(2) ஆசையுள்ளவரை பிறவி வந்தேதீரும். அவ்வாசை தனக்காயினும் பிறர்க்காயினும் ஒன்றே. தானற்ற விடத்தேதான் பிறவியறும். "தான்" என்ற தன்மையைத் தெரிந்தோரிடம் தெளிவாகக் கேட்டுக் கொள்க.

கோடி வழி—IV

தென்னிந்தியா — பெண்.
கி. மு. 21540 — கி. மு. 21504.
வயது—36 — பின் பிதுருலகவாசம்—: இல்லை.

அவிட்டம் : தமிழ்ச் சீமாட்டி.
வேலைக்காரிகள் : ரோகிணி, குரு.

ரோகிணி : குறத்தி. (தகப்பன்) மூலம்.
(தாய்) ரேவதி. (தமையன்) மிருகசீரளன்.
(கணவன்) துவாதசன் (சிற்றரசன்)
(ஆண்மக்கள்) மங்களன், ஆயிலியன்.
(பெண்மக்கள்) சனி.

துவாதசன் : (சிற்றரசன்): (மனைவி I) ரோகிணி.
(மனைவி II) ஆனி. (அரசகுமாரி).
(ஆனிவயிற்று மகன்) பூரம்.
(ஷை மகள்) சதுர்த்தி.

மிருகசீரளன் : (குறவன்) : (மனைவி) துதிகை (சீமாட்டி).

குரு : (கணவன்) வெள்ளி, (சீமான்).

கோடி வழி—V

தென்னிந்தியா — பெண்.
கி. மு. 21504 — கி. மு. 21456.
வயது—48 — பின் பிதுருலகவாசம் : இல்லை.

ரோகிணி : (சதுர்த்தி உடம்பில்) (கணவன்): கிருதிகன் (சிற்றரசன்).
(ஆண்மக்கள்): அசுபதி, பஞ்சமி, ஆதி.
(பெண்மக்கள்): தசமி, புனர்பூசம், புரட்டாசி.

கோடி வழி—VI

தென்னிந்தியா — பெண்.
கி. மு. 21456 — 21392.
வயது—64 — பின் பிதுருலகவாசம்—1775 ஆண்டுகள்.

ரோகிணி : (தசமி உடம்பில்) (கணவன்) சித்திரை (அத்லாந்தியப் பிரபு)
(ஆண்மக்கள்) அனுஷம், அமாவாசன், வியாழன், மகம்.
(பெண்மக்கள்) வைகாசி, சுவாதி.

பௌர்ணமி : தோழி—ஷை பிள்ளைகளை வளர்த்தவள் : பின்னர் மருமகள்.
(கணவன்) ஆதி (ரோகிணியின் மகன். V. பார்க்க.)

மீன தேவர் : ஞான குரு.

சிங்க தேவர் : கடல்கொள்ளப்பட்ட போஸிதானிஸ் கண்டத்தில், பொற்கபாடபுரத்திலிருந்து அன்று ஆண்டுவந்த அத்லாந்தியச் சக்கரவர்த்தி.

குறிப்புகள்: (2) இன்று தமிழகத்தின் தலைநகராயுள்ளது சென்னைமா நகரம். அங்குள்ள அடையாற்றங்கரையில் கடலோரத்தில், சர்வதேச சங்கமாகிய தியஸாபிகல் சங்கத்தின் தலைமைக் காரியாலயம் அற்புதமான மிகப் பெரும் ஆலமரமொன்றின் அடியில் அருளும் சாந்தியும் பொழிந்துகொண்டு மிக அழகாக அமைந்திருக்கின்றது. நம்மில் இந்துக்கள் காசியைக் கொண்டாடுவது போன்றும், மகம்மதியர் மெக்காவைக் கொண்டாடுவது போன்றும், உலகின் பல நாடுகளிலும் பரந்து சிதறிக் கிடக்கும் தியஸாபிக்கல் சங்கத்தினருக்கு இவ்விடம் ஒரு புண்ணிய யாத்திரை ஸ்தலமாக இருந்துவருகின்றது. அங்குத் தங்கியிருந்து அதனைப் புனிதப்படுத்திய அனுபூதிமான்கள் பலருள் வங்கப்பணி முனிவர் ஒருவர். அவர் (C. W. Leadbeater) C. W. லெட்பீற்றர் என்ற ஆங்கிலேய சித்தர். அவர் சித்திரகுப்தர் கணக்குச் சுவடியெனப் படும் ஆகாயத் திரைப்படத்தை ஆராய்ந்து பல மறுபிறப்பு வரலாறுகளை வெளியிட்டுள்ளனர்.

அவற்றுட் சில தென்னிந்தியாவை யொட்டியனவாயிருந்தும், முனிவர் நெற்றிக்கண்ணால் தாம் காண்பவற்றைக் கூறிக்கொண்டு வருங் காலத்து, உடனிருந்து சுருக்கெழுத்தில் வரைந்தவர் யாவரும் அவ்வப் போது அங்குத் தொண்டாற்றிவந்த ஐரோப்பிய, அமெரிக்கராயிருந்தபடியால், அவர்கள் தமிழ் நாட்டைப்பற்றி ஒன்றும் அறியாதவராய், அதனால் தமிழ் மக்களின் பண்பாட்டையோ அவர்களது பண்டைய வாழ்க்கை முறை, அரசியல், சமயம் முதலிய துறைகளைப்பற்றியோ வினவித் தெரிந்துகொள்ள மாட்டாதவராய், தெரிந்துகொள்ள ஆவலுமற்றவராய் இருந்துபோயினர். அதனால் தமிழ்மக்களுக்குக் கிடைக்கக்கூடிய பொக்கிஷமொன்று தற்சமயம் தவறிவிட்டதென்னலாம். பிறரால் வேண்டி வினவப் படாமல் வங்கப்பணி முனிவர் தாமாகவே வெளியிட்ட அன்றைய (சுமார், கி. மு. 22,000) தமிழ் நாட்டைப் பற்றிய சில குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன.

"இந்தியாவில் அன்று பழக்கத்திலிருந்த மொழி சமஸ்கிருதமல்ல: [வேறு என்ன மொழியென்று வங்கப்பணி முனிவர் கூறவில்லை (A. C.)] சமயக் கிரியைகளெல்லாம் 'த் தௌ' என்ற மந்திரத்தோடு தொடங்கப் பட்டன, 'ஓம்' என்ற இக்காலத்துப் பிரணவத்தோடல்ல" [சீன தேசத்தில் "லௌ ட் ஸ் ஸே, கண்பூஷியஸ்" என்ற அனுபூதி மகான்கள் எழுதியுள்ள சமய நூல்களில் பரம்பொருளுக்குப் பெயர், "த்தௌ" என்பதே. அப் பெயர் அங்கு இன்னும் அனுபவத்திலுள்ளது. (A. C.)]

"கர்மம், மறுபிறப்பு என்ற கொள்கைகள் மக்களுக்குள் எங்கும் காணப்பட்டன. அன்றைய நாட்டிற்கு சமஸ்தான குருவாயிருந்த மீன தேவர் என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ள மகான், அதிகார முத்தர் குழாமாகிய வித்தகச் சித்தர் கணத்தை நன்கறிந்திருந்தனர். அவர்களோடு தொடர்புடையவராகவு மிருந்தனர். 'தத் த்வம் அஸி— அதுவாக நான் உளேன்' என்பது போன்ற பல மகா வாக்கியங்கள் அன்றும் உபயோகத்திலிருந்தன. மீனதேவர் ஒரு உபதேசத்தின் போது, 'நாம் பயிலக்கூடிய நற்குணங்களிலெல்லாம், நாம் அடையக் கூடிய ஆன்ம சாதனங்களிலெல்லாம், மிகமிக மேலானதும் முக்கிய மானதுமாக உள்ளது 'நீயலாற் பிறிது மற்றில்லை, ஒன்று நீ அல்லை அன்றி ஒன்றில்லை' என்ற உண்மையை அனுபவமாகப் பெறுதலே,' என்ற கருத்தைக் கூறுகின்றனர்."

"வேறொரு சமயத்தில் அவர் கூறுவது, 'மரத்தை வெட்டியெறி, அம் மரத்தின் உயிராகுவதே அது; கல்லை உடைத்தெறி, அக் கல்லின் துகள்களை ஒன்றுகூட்டி அணைத்து நிற்பதே அது; கதிரவனுடைய உயிராயிருப்பதும் அதுவே. மேகத்தின் தணுப்பிலும், கடலின் கொந்தளிப்பிலும், வானவில்லின் அழகிலும், பர்வதத்தின் மகிமையிலும் உள்ளதும் அதுவே' என்பன போன்ற பல தத்துவோபதேசங்களாம். இவை மரணத்தைப்பற்றி அவர் செய்த உபன்னியாசத்திலிருந்து பொறுக்கப்பட்டவை. அவர் ஜனங்களுக்கு வாசித்துக் காட்டிய ஒரு நூலில் இன்று 'கடோபநிஷத்திலுள்ள பல கருத்துக்கள் காணப்படுகின்றன.' "நேரியது ஒன்று, இன்பகரமாவது மற்றொன்று. இவ்விரண்டில் நேரியதைப் பற்றுவதே நன்மை தருவது. இன்ப வழியைப் பற்றுகிறவன் லக்ஷியத்தைவிட்டு விலகியவனுவான். இன்பமும் நேர்மையும் எல்லா மனிதருக்கும் எதிர்ப்படும். அறிவாளி இன்பத்தைவிட நேர்மையே மேலென்று கொள்வான். மூடனே இன்பத்தைக் கடைப்பிடித்துத் துன்புறுவான்."

"ஒருவன் கொல்லப்பட்டால், கொல்லப்பட்டவன் நானேயானல் என்னைக் கொன்ற வாளும் நானே; உண்மையில் கொல்பவனுமில்லை, கொல்லப்பட்டவனுமில்லை; எனெனில் எல்லாம் ஒன்றே. முதல் என்பது மில்லை, கடையென்பது மில்லை; வாழ்வுமில்லை, சாவுமில்லை; எனெனில் யாவும் அவனிடத்தில் ஒன்றேயாம்."

"மீனதேவர் கைவசம் பல சுவடிகள் காணப்படுகின்றன. அவை ஒன்றும் ஆரியருடையவையல்ல. மேலே சொன்ன கருத்துக்கள் கொண்ட நூல் இன்றைய கடோபநிஷத்தின் மூலமெனத் தோன்றுகிறது. அது பொற்கபாடபுரத்தில் நெடுங்காலத்திற்கு முன் அவதரித்திருந்த அதிகாரமுத்தர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளது. அதில் அன்று நச்சிகேதன் கதை காணப்படவில்லை. அது பின்னர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இந்த நூலும் இதுபோன்ற பெருந்திரளான பல தத்துவ நூல்களும் பொற்கபாடபுரத்தில் ஒரு பெரிய நூல்நிலையத்தில் காணப்படுகின்றன. அவை யாவும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அங்கு சேமிக்கப்பட்டுக் கையாளப்பட்டு வருவதாகக் காணப்படுகிறது."

"ஒரு பெரிய ஆலயமொன்று காணப்படுகின்றது—(இந்தியாவில்). அங்கே விக்கிரகங்கள் ஒன்றுமேயில்லை. அந்த மதம் சூரிய வழிபாடென்று சொல்வதற்கில்லை—இயற்கையின் சக்தி வழிபாடென்னலாம். ஆலயத்திற்கு வெளியே கற்சிலையாக ஒரு பெரிய ரிஷபம் இருக்கின்றது. அது கோவிலை நோக்கியிருக்கிறது. கோவிலின் உள்ளே நோக்கிக்கொண்டிருக்கிறது. உள்ளே சென்றால் அங்கே ஒரு புதுமாதிரியான அமைப்புக் காணப்படுகின்றது—உயர்த்திவைக்கப்பட்ட பீடத்திற்குப் பதிலாக ஒரு சவுக்கமான பள்ளம் காணப்படுகிறது. அது அழகான பீங்கான் ஓடுகளால் பாவப்பட்டிருக்கிறது. அதன் மத்தியில் வேறொரு பள்ளமும் அதைச் சுற்றிக் கைபிடிக் கிராதியும் இருக்கின்றன. அந்த நடுப் பள்ளத்தின் மையத்தில் ஒரு சலவைக்கல் உள்ளது. அதை மிக்க பரிசுத்தமுடையதாகக் கொண்டாடுகிறார்கள். அக் கல்லில் ஒரு யந்திரம் வரையப்பட்டுள்ளது. அது இன்னதென எனக்கு விளங்கவில்லை. அந் நடுப்பள்ளத்திற்குள் ஜனங்கள் பூக்களை விசிறி வழிபடுகிறார்கள்."

"வேறொரு பெரிய ஆலயத்தில் பல விக்கிரகங்கள் காணப்படு கின்றன. அவை ஆலய மதிலோடு சேர்த்துக் கட்டப்பட்ட சிறுசிறு கோவில்களில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு வழிபடும் மக்கள் உடை முன் கூறிய ஆலயத்து மக்கள் உடைபோலில்லை. இங்கு அர்ச்சகர்களும் பூஜாரிகளும் உள்ளனர். முன் சொல்லிய ஆலயத்தில் அர்ச்சகர் யாருங் கிடையாது. இந்த விக்கிரக ஆலயத்துள்ள உருவங்கள் யோகாசனத்தில் வீற்றிருக்கின்றன. அவற்றிற்கு இருகரங்களுக்கு மேற்பட்ட கைகள் இல்லை. சில உருவங்கள் அம்மணமாக உள்ளன; அதாவது திகம்பர உருவங்கள். மற்றவற்றின் தோளில் ஒரு முடிச்சிட்ட உத்திரீயம் உள்ளது. இது இன்றைய ஜைன மதத்தின் பழைய அமைப்பா யிருக்கலாம்; உருவங்கள் ஜீன தீர்த்தங்கரரா யிருக்கலாம்."

"இந்தியாவின் வடக்கே வெகு தொலைவில் உள்ள ஒரு பெரிய ஆலயத்தில் லிங்கம் காணப்படுகின்றது. அங்குள்ள மக்கள் திரிமூர்த்தி களை வழிபடுகிறார்கள். ஆனால் அவர்களின் பெயர்கள் இன்றையப் பெயர்கள் அல்ல (அன்றையப் பெயர்களைக் கூறாது விட்டது வருத்தத்தைத் தருகிறது [A. C.]) வடக்கே ஒரு பெரிய குகைக் கோவிலில் ஒரே தலையில் மூன்று முகங்களைக் கொண்ட ஒரு பிரமாண்ட மான திரிமூர்த்தி உருவம் பாறையில் செதுக்கப்பட்டுளது. மூன்று முகங்களும் மூன்று திக்குகளை நோக்குகின்றபடியால் அங்கங்கே தொழுபவர்களுக்கு அந்த முகம் மாத்திரம் காணப்படுகின்றது."

"தென்னிந்தியாவிலும் இந்தத் திரிமூர்த்தி உருவ வழிபாட்டை யுடைய ஒரு மிகப்பெரிய ஆலயம் தென்படுகின்றது. அம் மூர்த்தியைப் பற்றி அம் மக்கள் என்ன கருத்துக் கொண்டுள்ளார்களென்று அங்குள்ள அர்ச்சகர் மனத்தோடு ஒன்றிநின்று ஆராய்ந்தோம். 'சராசரங்களுக் கெல்லாம் உள்ளுறைபவன், அவற்றினூடே தன் உயிரைச் செலுத்து பவன்' என்று அவர் கருதினர். மற்றொரு அர்ச்சகர் மனத்தை ஆராய்ந்தபோது, அந்த மூன்று மூர்த்திகளையும் பற்றி, அவர், 'மடையைத் திறப்பவர், வெள்ளத்தை விடுபவர், கதவை அடைப்பவர்' என்று பொருள் கொண்டனர். தற்காலத்தில் பெருவாரியாகக் காணப் படும் பல திருக்கரங்களைக்கொண்ட விக்கிரகங்கள் ஒன்றேனும் இங்கும் காணப்படவில்லை."

"எங்கும் நிறைந்துள்ள ஓர் ஒளிப்பிரவாகம்—ஜோதிசாகரம் இருப்பதாகவும், அதுவே உயிரென்றும் அன்பென்றும் வாழ்வென்றும் சாவென்றும் அந்த அர்ச்சகர் மனதில் காணப்படுகின்றது. ஐம்புலக் காட்சியெல்லாம் மாயையென்றும், அநித்தியமென்றும் இந்த ஜோதி சாகரமே நித்தியமும் உண்மையுமென்றும் அவர்கள் கொள்கின்றனர். 'நாம் இந்த ஜோதிசாகரத்துள்ளே வாழ்கின்றோம். ஆயினும் அதை அறிகின்றோமில்லை. நாம் அதில் நின்றும் வேறுபட்டுப் பிரிந்திருப்பதாக நினைக்கின்றோம்; ஆனால் நாம் ஒவ்வொருவரும் அந்த ஒளிக்கடலில் ஒவ்வொரு நீர்த்துளியே யாவோம். மக்களே, இந்த ஐம்புல மயக்கத் தைக் கடந்து அப்பாற்செல்லுங்கள்; சராசரங்கள் யாவற்றினுள்ளும் இந்த ஒளி அந்தரியாமியா யிருப்பதை அனுபவத்தால் அறியுங்கள். அப்போது இந்த வேறுபட்ட உருவங்களெல்லாம் வெவ்வேறு நீர்த் துளிகளே என்பதை உணர்வீர்கள். அவை கடலில் அமிழும்போது எல்லாம் ஒன்றேயாகும். நாமே நமக்குப் பகைவரும் நட்டாரும். நம்முடைய மனவேதனைகளுக்கும் துன்பங்களுக்கும் நாமே காரணம்' என்பன அர்ச்சகர்கள் சாதாரண மக்களுக்கு உபதேசிக்கும் சமய

உரைகள். 'ஒளியாலே ஆனவரே, ஒளியாகவே இருப்பவரே' என்று தொடங்கும் பிரார்த்தனை ஒன்றும் அங்கு நடமாடுகிறது."

"மேற்சொன்ன யாவும் சாதாரண மக்களுக்குப் படிப்பிக்கப் படுபவை. அன்றி, வேறு நிவிர்த்தி மார்க்கத்திற் செல்வோரும் முத்தி நெறியில் நடப்போரும் முத்தரும் சித்தரும் முனிவர்களுமாய் உள்ளவர் விஞ்ஞான அறிவிலும் சமய சாஸ்திர நுணுக்கங்களிலும் யோகப் பயிற்சியிலும் வல்லவராய்க் காணப்படுகின்றனர்."

மேற்சொல்லப்பட்டவை வங்கப்பணி முனிவருடைய வாக்குகள். அவருடைய ஆங்கில நூலிலிருந்து மொழிபெயர்ப்பு. ஆரியமின்றி இந் நாட்டின்கண் நாகரிகமென்பதே இல்லையென்று வாதாடும் கூக்குரற் கூட்டத்தாருக்கு, மேலே கூறப்பட்டுள்ளவை தமிழ்க்கோட்டிகொண்ட திராவிடன் ஒருவனால் எழுதப்பட்டதெனத் தோன்றுவது இயல்பு. ஆனால் வங்கப்பணி முனிவர் (Bishop C. W. Leadbeater) உள்ளத்தில் உலகப் பொதுமக்களாயினும், பிறப்பில் அவர் ஆங்கிலேயர். அதனால் முதல்தர ஆரியரே யாவர். அவருடன் துணையாக நின்று அவ்வப்போது இந்த நெற்றிக்கண் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவர் உலகப் பிரசித்தி பெற்ற (மற்றொரு ஆரிய) ஆங்கில மூதாட்டியாகிய அன்னை வசந் தம்மையார் (Dr. Annie Besant) ஆவர். மேலே சொல்லப்பட்டுள்ள உண்மைகள் அம்மையாருடைய அனுமதி பெற்றவையுமாம்.

7. பாக்ற்றியா—ஆண்

கி. மு. 19617—கி. மு. 19546.

வயது: 71 - பின் பிதுருலகவாசம்: 1245 ஆண்டுகள்.

ரோகிணி முற்பிறப்பில் முப்பதாண்டுகள் இயற்றிய தவத்தின் பலனாக நெடுங்காலம் மேலுலகங்களில் தங்கி, 1775 ஆண்டுகளுக்குப்பின் கி. மு. 19,617-ல், பாரசீக நாட்டுக்கு வடக்கே, பிற்காலத்தில் பாக்ற்றியா என்று பெயர் வழங்கப்பட்ட நாட்டில், துரானிய மக்களுக்குள்ளே, சோமன் என்பவனுக்குப் பௌர்ணமி வயிற்றில் மகனாகவந்து பிறந்தான். பௌர்ணமியே தென்னிந்தியாவில் தோழியாயிருந்து ரோகிணி துறவியாகும் போது அவள் மக்களைப் பாதுகாத்து, அவள் பெரியமகன் ஆதியைப் பின்னால் மணந்துகொண்டவள். அவள் இப்போது ரோகிணிக்குத் தாயானாள். முந்திய குறத்தமையன் மிருகசீரளம், இப்போது தங்கையாகவும், மகனாயிருந்த அனுஷம் இப்போது தமையனாகவும் வந்து பிறந்தார்கள். பழைய தொடர்பால், அவர் தம்முள் அன்புமிக்கிருந்ததென்பது சொல்லாமலே விளங்கும். தொடுத்து ஐந்துமுறை பெண்ணாய்ப்பிறந்த ரோகிணிக்கு இப்போது ஆணுடம்பு வாய்த்தது. சோமனுடைய குடும்பம் ஒரு காலத்தில் செல்வம் மிகுந்து, ஊரில் உயர்ந்த மதிப்படைந்திருந்தது. இப்பொழுது, பழைய மதிப்பொன்றைத் தவிர செல்வம் மிகவும் சுருங்கிவிட்டபடியால், சோமனுக்கும் அவன் மூத்த

மகனுன அநுஷத்திற்கும் பழைய செல்வத்தை எப்படிப் பெறுவதென்ற ஒரே கவலேயே உறுத்திக்கொண்டிருந்தது. வியாபாரம் ஒன்றைத்தவிர வேறு வகையில் பணந்திரட்ட வழியில்லாதிருந்தது அந்தநாடு. ரோகிணி வயது வந்தவுடன் அவ்விதம் முயற்சி செய்ய அதிக அவாக்கொண்டான். அது தம் குடும்பத்திற்கு இழிவென்று கருதிய மூத்தோர் அதைத் தடுத்துவிட்டார்கள். மக்கள் சம்பந்த வகையால் செல்வத்தை மீட்டிவிடலாமென்று தகப்பனுக்கிருந்த நம்பிக்கையும், முற்றுப்பெருமற் போயிற்று. ஆகவே தகப்பனும் ஆண்மக்கள் இருவரும் தங்கள் அவாவை நிறைவேற்ற வழிகாணுமல் மனதைப் புண்படுத்திக்கொண்டேயிருந்தார்கள்.

அவ்வூரில் புதன் என்ற ஏழை மனிதன் ஒருவன் இருந்தான். அவன் வனங்களிற்சென்று வேட்டையாடிக் காலங் கழிப்பவன். அவன் வறுமை மிகுதியால் நோயில் அழுந்திக் கிடந்தகாலத்தில் அவனுக்கு உதவி செய்த ரோகிணியிடம் மிகுந்த நன்றி மறவாதவனுயிருந்தான். வடநாடுகளில் சென்று வேட்டையாடி வரும்போது, ஒருநாள் மலேக்குள் ஓரிடத்தில் ஒரு பெரிய புதையல் அகஸ்மாத்தாய்ப் புதனுக்குத் தென்பட்டது. பலருடைய உதவியின்றி அதை வெளியே எடுக்கக் கூடாமையால், அதில் ஒரு சிறிது மாத்திரம் கைப்பற்றிக் கொண்டு, தன் ஊர் சேர்ந்து கூலியாட்களேத் திரட்டிப்போகலாமென்று வரும் வழியில், ஏதோ ஆபத்து நேரிட, அதினின்றும் மீளாதவனுய் அவன் இப்போது சாகக்கிடந்தான். அவனுடைய ஒரே மகள் வடக்கே வெகுதூரத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவளுக்கே அந்தப் புதையலேச் சேர்ப்பிக்கவேண்டுமென்ற ஆத்திர மிகுதியால், அந்த ரகசியத்தை வெளிச்சொல்லப் பயந்தவனுய், நம்பிக்கையான ஆள் வேறுகிடையாமல், தனக்கு முன்னே உதவி செய்த ரோகிணிக்குச் சொல்லியனுப்பினுன். ரோகிணி சென்று கதை முழுவதையும் கேட்டதும், அவனுக்கு அவாவும் அதிசயமும் ஆத்திரமும் ஒன்றுபோல் பொங்கின. ரோகிணி கூலியாளுடன் சென்று புதையலே எடுத்துச் சிறு பாகத்தைத் தனக்கு வைத்துக்கொண்டு, பெரும் பாகத்தைத் தன் மகளுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற ஒப்பந்தத்தின் பேரில், புதன் புதையலிருக்கு மிடத்தின் அடையாள முழுவதையும் அவனிடம் சொன்னுன். சாகக்கிடந்த புதன் முன்னிலேயில் ரோகிணி இவ்வாறு ஒப்பந்தஞ் செய்துகொடுத்த போதிலும், அதிர்ஷ்டவசத்தால் புதையல் அகப்பட்டால், ரோகிணி அதைத் தானே அபகரிக்க வேண்டுமென்று மனதில் தீர்மானித்துக் கொண்டான்.

ரோகிணி தன் வீடுவந்து விபரம் முழுவதையும் பெற்றோரிடம் சொன்னபோது தகப்பனும் தமையனும் சிறிதும் நம்பாமல், "வெறும் வேடன் வார்த்தையைக்கேட்டு அப் புதையலைத் தேடிச்செல்வது மூடத்தனமும் வீண் முயற்சியுமாகும்," என்று சொல்லிவிட்டார்கள். அதனால் ரோகிணி சிறிதுநாள் அமைதியாயிருந்து பார்த்தான். அவ்விதம் இருக்க முடியாததுகண்டு தன்னால் சேகரிக்கக்கூடிய கூலியாட்களைக் கொண்டாவது புதையலைத் தேடுவதெனத் தீர்மானித்தான். தகப்பனும் தமையனும் எவ்வளவு தடுத்தும் கேட்கவில்லை. அவர்கள் உதவியில்லாமல் இவனுக் கூலியாட்களை அதிகம் திரட்டமுடியாமையால் தன்னைப்போல அவாவும் துணிவும் கொண்ட சிலரை மாத்திரம் இட்டுக்கொண்டு புதையலைத் தேடி வடநாடு சென்றான்.

சென்றவர்கள் காடும் மலையும் கடந்து நெடுநாள் தேடி அலைந்தார்கள். அவர்கள் ஆகாரமில்லாமலும் தண்ணீரில்லாமலும் பட்ட அவஸ்தைகளுக்கு அளவில்லை. எவ்வளவு அலைந்தும் புதன் சொன்ன அடையாளங்கள் ஒன்றும் தென்படவில்லை. இப்படி அலுத்திருக்கும் சமயம் ஒரு கொள்ளைக்கூட்டம் அவர்களைக் கண்டு கைப்பற்றித் தங்களுக்கு மூட்டைசுமக்க அவர்களை அடிமைகளாக்கிக் கொண்டனர். அக் கூட்டத்தார் வெறும் முரடர்கள். நிலையான இடமின்றிக் குழுவர்கள்போலத் தங்கள் குடிசைகளைத் தூக்கிக்கொண்டு ஊரூராய் அலைபவர்கள். அம் மூர்க்கர்கள் இவர்களைப் படுத்திய பாட்டில் ரோகிணியைத் தவிர மற்ற எல்லாரும் ஒவ்வொருவராய் இறந்துபோனார்கள். ரோகிணி மாத்திரம் பன்னிரண்டு வருஷம் அவர்கள் கையில் பெருந் துன்பம் அனுபவித்து அரை உயிராய் அடிமைத்தொழில் செய்துகொண்டிருந்தான். புதனை ஏமாற்ற நினைத்ததற்கு இது தக்க தண்டனையென்றே கொள்ளவேண்டும்.

ரோகிணி பதினெட்டு வயதிலேயே மங்களத்தை மணந்திருந்தான். அவன் புதையல் தேடிப் புறப்படும்பொழுது அவனுக்கு வயது முப்பது. அதற்குள் மூவர் ஆண்களும் ஒரு பெண்ணும் அவனுக்குப் பிறந்திருந்தனர். நெடுங்காலம் அவனைப் பற்றி ஒரு செய்தியும் கிடையாமற்போகவே அவன் குடும்பத்தார் அவன் இறந்ததாகக் கருதி அழுதுகொண்டிருந்தனர். ஆனால் அவனது இரண்டாம் மகன் புனர்பூசம் மாத்திரம், யார் என்ன சொல்லினும் நினைக்கினும் தன் தகப்பன் திரும்ப வருவானென்ற நம்பிக்கை நீங்காமலே இருந்தான். தகப்பன் வெளிச்செல்லும்போது அவனுக்கு எட்டுவயதேயாகையால், தனக்குப் பிராயம் வந்தவுடன் தகப்பனைத்தேடப் புறப்படுவதாகச் சொல்லுவான். அவ்விதமே பதினெட்டு வயது ஆனதும்,

பாட்டனிடமும் பெரியதகப்பனிடமும், தகப்பனைத் தேட வேண்டிய உதவி செய்யும்படி மன்றாடினான். அவர்கள் "உன் தகப்பனும் எங்கள் சொல்லைக் கேளாமல் வெளியிறங்கினான். எங்கேயோ இறந்தான். நீயும் தேடிப்போவது வீண் வேலையாகும். உன்னை நாங்கள் அனுப்புவது உன்னைக் கொல்வதாகத்தான் முடியும்" என்று சொல்லி அவன் கேட்டதை மறுத்துவிட்டார்கள். வேறுவழியில்லாமல் தன் தமையனாகிய வியாழனைக் கூட வரும்படி அவன் கெஞ்சிக்கேட்டான். தமையனுக்கு முழு நம்பிக்கையில்லையாயினும், தம்பியினுடைய ஆவேசத்தில் சிறிது உறுதிகொண்ட அவன், தான் சமீபத்தில் அமாவாசையை மணந்து பிள்ளைகுட்டிக்காரனாய்விட்டபடியால் குடும்பத்தை விட்டுச் செல்லமாட்டாதவனாய், தன் தம்பிக்கு வேண்டிய கூலியாட்களையும் துணைகளையும் தயாரித்துக் கூட அனுப்பினான்.

புனர்பூசத்திற்குத் தகப்பனை எங்கு தேடுவதென்ற அபிப்பிராயமேயில்லை. தகப்பன் போகும்போது அவன் சிறுபிள்ளை. ஆகையால் தகப்பனை அடையாளங்கூடத் தெரியுமோ என ஐயுற்றான். ஆயினும் கூட்டாளிகளின் உதவியால் கண்டுகொள்ளலாமென்ற தைரியத்துடன் புறப்பட்டான். அவனுக்குப் புதையலைப் பற்றிக் கவலையேயில்லை. தகப்பனைக் கண்டால் போதுமானதென்பதே அவனுடைய தீர்மானம். ரோகிணிக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டுக் கைகாலொடிந்து எவ்வூரிலாவது கிடக்கவோ அல்லது அலைந்து திரிகிற கொள்ளைக்கூட்டங்களில் அகப்பட்டு அடிமையாயிருக்கவோ வேண்டுமேயன்றி இறந்திருக்கமாட்டானென்பது அவனுடைய பூரணமான நம்பிக்கை. ஆகையால் சிறுவயதிலிருந்தே சுற்றுப்புறநாடுகளில் வழங்கப்படும் பாஷைகளையும் பழக்கவழக்கங்களையும் அவன் கற்று வந்தான். அவை இப்போது மிகவும் உபயோகப்பட்டன. தகப்பனைத் தேடித் திரிகையில் வழியில் வேறுகூட்டங்களைக் குறுக்கிடும்போது, தன் ஆட்களை எங்கேயாவது ஒளித்துவைத்துவிட்டு, மற்றவரைப் போல வேஷங்கொண்டு அவரிடம் தகப்பனைப்பற்றி ஆராய்வான். இவ்விதம் இரண்டு வருஷம் தேடி அலுத்தபோது ஒரு கூட்டத்தில் தகப்பனை மிகுந்த பிரயாசத்துடன் அடையாளங் கண்டுபிடித்தான்.

பன்னிரண்டு வருஷம் ரோகிணியும், இரண்டுவருஷமாகப் புனர்பூசமும் அங்குள்ள காடு, மலை, வனம், வனாந்தரங்களிலெல்லாம் சுற்றித்திரிந்ததிலிருந்து, அவர்களுக்குத் தெரியாத மலை இடுக்குகள் கிடையாது. ரோகிணி அடிமையாய் அலையும் போது புதையலிருந்த இடத்தையும் கண்டுபிடித்திருந்தான். ஆகையால் சமயங்கண்டு கொள்ளைக்காரர் அறியாமல் தகப்பனும்

மகனும் இரவே நடந்து, அருகே மறைந்திருந்த தமது கூட்டத்தாரை இட்டுக்கொண்டு புதையலிருக்குமிடம் வந்து சேர்ந்தார்கள். புதையலைத் தோண்டிக் கண்ணுல் கண்டதும் அவர்கள் அடைந்த துன்பங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்தன. மனது குதூகலங்கொண்டது. இளைத்துச் சலித்த ரோகிணியும் திரும்ப உயிர்த்தான். புதையல் மிகுந்த பளுவாயிருந்தமையாலும், அந்த நாட்டில் அலைந்து திரியும் கொள்ளைக்காரருக்கு மறைத்து அதை எளிதில் கொண்டுவர முடியாமையாலும், ஊர் வந்து சேர அவர்கள் கடினமான முயற்சி எடுக்க வேண்டியிருந்தது. பகீரதப் பிரயத்தனத்தின் பேரில் புதையலோடு ரோகிணியும் புனர்பூசமும் வீடுவந்து சேர்ந்தபோது, அவர்கள் குடும்பத்திற்கும் ஊராருக்கும் உண்டான அதிசயமும் சந்தோஷமும் சொல்லுந் தரத்தனவன்று.

இந்த நற்காலம் வருமுன் ரோகிணியின் தகப்பன் இறந்து போனுன். இழந்துபோன செல்வாக்கொன்றே இறக்கும்வரை அவனுக்குக் கவலை யளித்தது. இப்போது ரோகிணியின் தமையன் அனுஷமே குடும்பத் தலைவனுயிருந்தான். கொண்டுவந்த புதையலை வந்தோரனைவருக்கும் செழிக்கக் கொடுத்த பின்பும் அவர்களிடம் பெருஞ்செல்வம் மீந்திருந்தது. அந் நாளில், பாரசீகர்களுக்கும் இந்நாட்டு மக்களுக்கும் அடிக்கடி நடந்த போர்களில், நாடு பாரசீகர் கைவசப்படுமென்று கண்ட பல குடும்பங்கள், தம் ஊரைவிட்டுச் சீன தேசத்திற் சென்று வாழத் தொடங்கினுர்கள். அனுஷமும் ரோகிணியும் அவன் மக்களாகிய வியாழனும் புனர்பூசமும் இதைப்பற்றித் தீர ஆலோசித்து, தாமும் குடும்பத்தோடு ஊரைவிட்டு வெளியேறத் தீர்மானித்தார்கள். கூடவரத் தயாராயிருந்த பெருங்கூட்டத்தோடு அவர்கள் தமது செல்வத்தையும் ஆடுமாடுகளையும் திரட்டிக் கொண்டு, மெள்ள மெள்ள நகர்ந்து, சீனதேசத்தின் தென் பாகத்தில் செழிப்பான ஒரு பிரதேசத்தில் குடியேறினுர்கள்.

அவ்விடத்தில் தங்கள் செல்வ மிகுதியால் பெரிய நாட்டாண்மைக் காரரானுர்கள். அனுஷம் அவ்வூருக்குத் தலைமை அதிகாரியாக அரசனுல் நியமிக்கப்பட்டான். இவர்களோடு பூர்வ சம்பந்தப்பட்ட பலரும் நாளாவட்டத்தில் இக் குடும்பத்தில் வந்து பிறந்தார்கள். ரோகிணிக்குப் பூட்டன் பூட்டியாக வந்தவர் அசுபதியும், சித்திரையும். அவரில் சித்திரையும் ரோகிணியும் பிரியாத நண்பரானுர்கள். ரோகிணி மலையில் அடிமையாக அலைந்த காலத்து அவன் பட்ட அனுபவங்களைக் கேட்பதிலேயே சித்திரை பொழுதுபோக்குவான். ரோகிணி தனது எழுபத்தோராவது வயதில் இறந்தபோது அவனுக்காக

அதிகம் துக்கம் கொண்டாடியவன் சிறு பையனாகிய சித்திரையே. புதையலுடன் வீடுவந்த ரோகிணி, அன்றுமுதல் சாகும் வரையில் சுகமாகவே வாழ்ந்துவந்தான். இறந்தபின், 1245 ஆண்டுகள் கழித்துத் திரும்பவும் பிறந்தான்.

குறிப்புகள் :—"வினையும் பலனும்" என்ற தலைப்பின்கீழ் வினையினுடைய ஒருவகைப்பலன் முன்னே கூறப்பட்டது. அது அப் பிறப்பிலேயே விளையும் பலன். ஆனால் வினையினுடைய பலன்கள் பலவாகையால் அவற்றையும் ஒருவாறு அறிதலே ஒழுக்கத்திற்குகந்த அடிப்படையாகும்.

ஒரு மனிதன் மலையடியில் நின்று உரக்கக் கூவுவானானால் அவ்வினையின் முதற்பலன் அவன் காதுக்குக் கேட்கும் தொனி. அது இனிய குரலாயிருப்பின் செவிக்கின்பமாகவும், தீக்குரலாயிருப்பின் அருவருப்பாகவும் இருப்பது இரண்டாவது பலன். மூன்றாவது, அவன் குரல் வலுக்கவோ தொண்டை கட்டவோ செய்யும். இவை மூன்றும் பிறருடைய இடையீடின்றித் தனக்குத் தானே உண்டாகும் பலன்கள். அக் குரல் மலையிற்போய்த் தட்டி எதிரொலியாக வருவதும், மறைந்து நிற்கும் மனிதர் மிருகங்கள் காதிற்பட்டு அவர்களை அழைப்பதும், பிறரைத் தாக்கி அவரிடமிருந்துவரும் பலன்கள். அவ்விதமே மனிதன் செய்கின்ற வினைகள் யாவும் முக்கியமான நால்வகைப் பலன்களைக் கொடுக்கும். அவற்றுள் மூன்று தமக்குத் தாமே நேர்வனவும் நான்காவது பிறரிடமிருந்து திரும்புவனவும் ஆம்.

மக்களுடைய எல்லா வினைகளும் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று கருவிகளால் இயற்றப்படும். அவற்றுள் அப் பிறப்பிலேயே அனுபவிக்கப்படும் பலன்கள் முன்பு கூறப்பட்டவை. மேற் பிறவிகளில் வரும் பலன்கள் அடியில் காட்டப்பட்டிருக்கின்றன.

	கருவி	நல்வினை, தீவினைகள்	மேற் பிறப்பில் வரும் பலன்கள்
1	அறிவு	நல்லெண்ணங்கள் தீய எண்ணங்கள்	மனச்சாந்தம் மனக்கவலை
2	இச்சை	விருப்பு—அன்பு வெறுப்பு—பகை	சந்தோஷம் துக்கம்
3	செயல்	நற்செயல், இனியசொல் கொடுஞ்செயல் கொடுஞ்சொல் }	இடம், பொருள், ஏவல் முதலிய சௌகரியங்கள், } வறுமை, வியாதி முதலியன.

மூன்றாவது பலன் "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது. "சுடுகாடு மட்டும்" என்றால் மனிதன் இறந்தவுடனே எல்லாம் நின்றுபோமென்பது பொருளல்ல. கற்றுக்கொண்ட அப் பழக்கம் சுட்டெரிக்கப் படும்வரை ஒவ்வொரு பிறவியிலும் அது வந்து கொண்டே யிருக்குமென்பதே அந்தப் பழமொழிக்கு ஆழ்ந்த

பொருள். கோபம் பழகினவன் அக் கோபத்தைச் சுடுகாடேற்றுகிற வரை எத்தனை பிறப்பானாலும் கோபத்தையுடையவனாகவே இருப்பான். பழகிக்கொண்ட கொடுஞ்சொல் அதற்குச் சுடுகாடு வரும்வரை திரும்பப் பிறந்துகொண்டேயிருக்கும். இந்த மிருக குணங்களைக் கடவுள்முன் பலியிடவேண்டுமென்று சொன்ன உத்தம கருத்துக்களையே திரித்தறிந்து தற்கால இந்துக்கள் உண்மை உணராதவராய், ஒன்றுமறியாதனவும் ஒரு பாவமுஞ் செய்யாதனவும் ஒருவரிடஞ் சொல்ல வாயுமில்லாப் பிராணிகளான ஆடு, மாடு, கோழிகளை ஆலயங்களில் கொன்று ஆயிரக்கணக்காகக் கொலை பாதகம் செய்கிறார்கள். தமையன், தன் தம்பியைத் தகப்பன்முன் வெட்டுவானானால் அது எவ்வளவு கொடுந் தொழிலாகக் கருதப்படும்! கடவுளுடைய மக்களாகிய வாயில்லாப் பிராணிகளை, மூத்த சகோதரராகிய மனிதர் ஆதரிப்பதற்குப் பதிலாக, அருளே உருவாகிய ஆண்டவன் சன்னிதியிலும் அம்மையார் சன்னிதியிலும் கொண்டு வெட்டுவது கொடிய பாதகத்திலும் பாதகம். அவர்களுக்கு ஆண்டவன் அருள் எங்ஙனம் சித்திக்கும்? அறியாமல் தீயில் கையிட்டாலும் கை வெந்துபோவதுபோல, அறியாமையினால் மிருகபலி கொடுப்பினும், அந்தப் பாதகப்பலன் வராமற்போகாது.

தீய பழக்கங்கள் திரும்ப வருவதுபோலவே நற்பழக்கங்களும் சுடுகாடு செல்லும்வரை தொடுத்து வந்துகொண்டேயிருக்கும். அன்பும் அருளும் பழகினவன் அடுத்த பிறப்பிலும் அதே பழக்கமுடையவனாவதுமல்லாமல், அவற்றை எளிதில் விருத்தி பண்ணவும் செய்வான். கள்ளும் கஞ்சாவும் பிரியப்பட்டு உண்ட ஒருவன் அடுத்த பிறப்பில் சிறுபிள்ளையாயிருக்கும்போதே அப்பழக்கத்தையுடையவனாவான். சாத்வீக உணவால் உடம்பைப் பேணிய ஒருவன், மறுபிறப்பில் மது மாமிசத்தைக் கண்டவுடன் வெறுப்பெய்தி ஓட்டம் பிடிப்பான். இவ்விதமே சூதாட்டம், வேசிப்பழக்கம், ஆலயந்தொழுதல், பரோபகாரஞ் செய்தல் முதலிய எல்லாப் பழக்கங்களும் ஆகும். இப் பிறப்பில் இவற்றைப் பயின்றவருக்கு மேற்பிறப்பில் இவை எளிதில் கைகூடும். அறிவுடன் உற்று நோக்கின் இப் பலன்கள் சாதாரணமாய் நம்மைச் சுற்றியுள்ள மக்கள்பால் எங்கும் காணப்படும் பள்ளியில் படிக்கும் சிறுவர், ஒரே வகுப்பில் ஒரே ஆசிரியனால் பயிற்றப்படினும், சிலர் எளிதில் கணிதத்திலும், சிலர் வேறு சாஸ்திரங்களிலும், சிலர் கவி எழுதுவதிலும், சித்திரவேலையிலும், சங்கீதத்திலும் தேர்ச்சி காட்டுவதையும், மற்றும் சிலர் எவ்வளவு முயற்சி செய்யினும் இவையொன்றும் மூளைக்குள் ஏறமாட்டாமல் வருந்துவதையும், பள்ளிகளில் மழைக்கொதுங்கியவரும் அறிவார்கள். அதற்கு ஒரே காரணம் அவரவர் முற்பிறப்புப் பழக்கங்களேயாகும். இந்தப்பாடங்களைப் புதிதாய்ப் பழகுவோர், முயற்சிக்குத் தக்கபடி அந்தப் பிறப்பிலேயோ பல பிறப்புகளுக்குப் பின்னாகவோ அதே தேர்ச்சியைக் காட்டுவர். இது இயற்கை விதியே தவிர வேறில்லை. இவ்விதியே மனிதருடைய அறிவு, இச்சை, செயல்களில் காணப்படும் மேடு பள்ளங்களுக்குக் காரணமாகும். "தவமும் தவமுடையார்க் காகும்" என்ற விதியே இது.

பிறரைத் தாக்கித் திரும்புவதாகிய நான்காவது பலன் பொதுவினையென்றும் சிறப்புவினையென்றும் இருவகைப்படும். அவை வேறிடத்திற் சொல்லப்படும்.

இனி, வினை இயற்றும்போது கருவிகள் தனித்தோ ஒன்றுக்கு மேற்பட்டோ சேர்ந்து இயங்குமாகையால், பலனும் அதைப் பொருத்தே

யிருக்கும். ஒரு பிச்சைக்காரனிடம், அவன் கூக்குரலுக்குப் பயந்து ஏதாவது கொடுத்தனுப்பிவிட்டால் அது செயல் என்ற ஒரு கருவிமாத்திரம் செய்த நல்வினை. அது "அருளாதான் செய்யும் அறம்." அதற்குத் தேகசுகம் மாத்திரம் பலனாக வருமே தவிர, சந்தோஷமாவது மனச்சாந்தியாவது பலனாக வராது. ஒன்றும் கொடுக்க இயலாத எளியவன் இரக்க வார்த்தை மாத்திரம் சொல்லி அனுப்பிவிட்டால், அது இச்சை மாத்திரம் செய்த நல்வினை. அதன் பலன் சந்தோஷம் மாத்திரமே. பிச்சையும் இடாமல் இரக்கமுங் காட்டாமல் "அங்கயீனமில்லாதவன் பாடுபட்டுண்ணாது பிச்சையெடுத்துச் சோம்பேரியாய்த் திரிவானானால், இன்றைப்போல் அடுத்தபிறப்பிலும் அவன் வறியனாவான்," என்று உண்மையுடன் அறிவுறுத்தி அனுப்பிவிடின் அது அறிவு மாத்திரம் செய்த நல்வினை. அதன் பலன் சாந்தம் மட்டும். இரக்கப்பட்டு அவனுடைய அவசியத்தை அறிந்து ஆகாரமோ, அரிசியோ, துணியோ கொடுத்தனுப்பினால், அது இச்சையும் செயலும் சேர்ந்து இயற்றிய வினை. இரண்டுடன் அறிவும் உறுத்துவானாகில், அது மூன்று கருவிகளும் சேர்ந்து செய்த உத்தம நல்வினை. இவற்றின் பலன்களும் அந்தக் கருவிக்குரியவையே வந்தெய்தும். பொதுவாக, மன இரக்கமில்லாமல், புகழுக்கு மாத்திரம் ஒருவன் நன்மை செய்வானானால், அவனுக்குத் தேகசுகம் மாத்திரம் கிடைக்கும். இன்பமாவது அமைதியாவது ஏற்படாது. இரக்கத்துடன் கொடுப்பானானால் இன்பமும் எய்தும். பகுத்தறிவுடன் கொடுப்பானானால் சுகமும் சந்தோஷமும் சாந்தமும் ஒருங்கே எய்தி மூன்று கருவிகளும் ஒன்றாக இயங்கியதைக் காட்டும். இந்த விதியை நன்கறிந்தவர் தமக்கு நல்வினை செய்வதற்கில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. ஆணாயினும், பெண்ணாயினும் மானிடராய்ப்பிறந்த ஒவ்வொருவருக்கும் அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று கருவிகளும் அமைந்தேயிருக்கின்றன. செயலுக்கு வேண்டிய இடம், பொருள், ஏவலில்லாத மக்கள்,

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் ;
வீழ்க தண்புனல் ; வேந்தனும் ஓங்குக ;
ஆழ்க தீயதெலாம் ; அரன் நாமமே
சூழ்க, வையகமுந் துயர் தீர்கவே.

என்ற திருப்பாசுரத்தையோ அல்லது இதுபோன்ற வேறொன்றையோ அன்போடு, அறிவோடு, அடிக்கடி அகத்துள் ஓதி அண்டத்தை ஆசீர்வதிப்பாரானால், இது அறிவுக்கருவியால் செய்யப்படும் உத்தம நல்வினையாகும். இது யாவருக்கும் இயலும். இதற்கு இடம், பொருள், ஏவல் யாதொன்றும் வேண்டுவதில்லை. இன்சொல் வழங்கலும் இரக்கங்காட்டலும் இவ்விதமே. அவை இச்சைக்கருவியின் நல்வினைகள். இவை எல்லோருக்கும் கூடும். திருமூலர் சொல்லியபடி,

யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை ;
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை ;
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி ;
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே.

வேண்டுவது மனம் ஒன்றே ; மனமுண்டானால் இடமுண்டு.

மேற்சொல்லியவற்றை விபரமாய்க் கற்றவர், விரும்பிய பலனைத் தீர்மானித்து, அதற்குவேண்டிய வினைகளையுந்தெரிந்து, வயிற்றுப

பாட்டுக்கு உழைக்கும் நேரந்தவிர மற்றநேரத்தை வெட்டியாய்ப் போக்காமல், தாம் தீர்மானித்த வினைகளை இயன்றமட்டும் செய்துவருவாரானால், பலன் ஒன்று, பத்து, நூருகப் பெருகிக்கொண்டே போகும். இது வெறும் கட்டுக்கதையல்ல. கற்றோர் அறிவுக்குப் பொருத்தமாகும் கடவுள் நியதியே இது. முயன்று முத்திபெறுக.

கோடி வழி: VII.

ரோகிணி (ஆண்): (தகப்பன்) சோமன். (தாய்) பௌர்ணமி (தமையன்) அனுஷம் (தங்கை) மிருகசீரஷம். (மனைவி) மங்களம். (மகன்) வியாழன், புனர்பூசம்.

புதன்: புதையல் காட்டும் ஏழை மனிதன்.

வியாழன்: (மனைவி) அமாவாசை. (மகன்) மகம்

மகம்: (மனைவி) சுவாதி (மகன்) சித்திரை, அசுபதி. (மகள்) வைகாசி, மார்கழி.

8. மொராக்கோ—ஆண்.

கி. மு. 18301—கி. மு. 18234.

வயது: 67—பின் பிதருலகவாசம்: 1006 ஆண்டுகள்.

கி. மு. 18301. கி. மு. என்பது கிறிஸ்து பிறக்கு முன்; அதாவது, இன்று நடக்கும் ஆங்கில ஆண்டை மேற்சொன்ன தொகையுடன் கூட்டினால், கி. மு. வருஷம் இன்றைக்கு எவ்வளவு காலத்திற்கு முன்னென்பது பெறப்படும். ஆங்கில ஆண்டு கி. பி. எனப்படும்; அதாவது கிறிஸ்து பிறந்த பின் தொடங்கியது. கி மு. 18301 என்பது (18301+1937) கூட்டி இன்றைக்கு 20238 வருஷங்களுக்கு முன்னாகும். அக் காலத்தில், ஆப்பிரிக்காவின் வடபாகத்தில் இன்று பெரிய மணற் பரப்பாயிருக்கும் சஹாரா என்ற பாலைவனம், அன்று பெருங் கடலாயிருந்தது. அதில் பல தீவுகளிருந்தன. அவற்றில் அரபியர்கள் குடியேறியிருந்தனர். அம் மக்களுள், தற்காலம் மொராக்கோ எனப்படும் நாட்டுக்கருகிலிருந்த ஒரு பெரிய தீவில், ரோகிணி ஒரு செல்வாக்குடைய குடும்பத்தில் வந்து ஆணாய்ப் பிறந்தான். அவன் தகப்பன் பெரிய வியாபாரி. பெரிய தனவந்தன். அநேக மரக்கலங்களையுடையவன். இவ்வளவு சௌகரியங்களோடு பிறந்தும், முந்திய பிறப்பில் முன்னேற்றங்காட்டிய ரோகிணி இப்போது நடந்த முறையிலிருந்து, அவன் கால் இன்னும் நல்வழியில் நிலைபெறவில்லையென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. மிகவும் சிறுவயதிலேயே கீழ்மக்களைத் தோழமை கொண்டான். வேசியர் வீடுதோறும் அலைந்தான். அதுகண்ட பெற்றோர் அந்நாட்டு வழக்கத்திற்கு மாறாக அவனுக்குச் சிறு

வயதிலேயே மணஞ்செய்து வைத்தார்கள். அவ்வூரிலேயே முன்னைய சதுர்த்தியும் ஐப்பசியும் பெண்களாகப் பிறந்திருந்தார்கள். அவருள் இப்போது மனைவியாக வந்தவள் சதுர்த்தி. அவள் ரோகிணி சம்மதத்தின்பேரில் மணஞ்செய்யப்பட்டவளல்ல. நமக்குள்ளிருக்கும் முறையே அவருக்குள் அக்காலத்திலிருந்தது. அதாவது பிள்ளைகள் மனதைக் கலக்காமலே, பெற்றோர் மணமக்களைத் தீர்மானிப்பார்கள். அவ்விதம் மனைவியாக வாய்த்த சதுர்த்தியோடு ரோகிணியும் கூடியிருந்து பல பிள்ளைகளைப் பெற்றுனுயினும், ஐப்பசியம்மாளைச் சந்திக்க நேர்ந்த நிமிஷத்தில், தன் குடும்பத்தை அறவே மறந்துவிட்டான்.

ஐப்பசி ஒரு பொதுமகள்; மிக அழகுடையவள்; தன்னை விரும்பிய பலருள்ளும் பொருள் அதிகம் கொடுப்போரையே காதலிப்பவள். ரோகிணி வேண்டிய அளவு பணம் கொடுத்த போதிலும், அவள் அவ்வூர் தலைமை அதிகாரி மகன் மூலம் என்பவன் கூடுதல் பணமும் செல்வாக்கும் உடையவனுக இருந்தபடியால், ரோகிணியை உபேக்ஷித்து அவனைக் கைப்பற்றினுள். அதுகண்டு வெறிகொண்ட ரோகிணி, ஒருநாள் பூங்காவனத்தில் மூலமும் ஐப்பசியும் உலாவிக்கொண்டிருக்கும்போது மூலத்தின் மேல் பாய்ந்தடிக்க, அவன் கீழே விழுந்து இறந்தான். ஐப்பசி பயந்து மூர்ச்சையானுள். அவள்மேலிருந்த மோகத்தில், மூலம் இறந்ததையும் கவனியாமல், ஐப்பசியைத் தூக்கித் தோளில் விட்டுக்கொண்டு ரோகிணி அடுத்திருந்த மலைச்சாரிவில் ஓடும்போது, ஐப்பசி மூர்ச்சை தெளிந்து ஒலமிட்டு உடம்பை உதறவும், இடுக்கான பாதையாயிருந்தபடியால் ரோகிணிக்குக் கால் சறுக்கி இருவரும் தலைகீழாக உருண்டார்கள். ரோகிணி ஒரு புதரில் பட்டுத்தங்கிவிட்டான். ஐப்பசியோ அடிவாரம்வரை உருண்டு பலத்த அடிபட்டு உயிரற்ற பிணம்போலக் கிடந்தாள். ரோகிணி புதரை நீங்கிக் கீழேயிறங்கி ஐப்பசியைப் பார்த்துத் திகில் கொண்டு நிற்கையில், கூக்குரல் கேட்டு ஓடிவந்த பலர் நெருங்குவதைக் கண்டு, மூலத்தைக் கொன்ற குற்றத்திற்குப் பயந்து, தப்பித்துக்கொள்ள எண்ணித் தலைகால்தெரியாது கடற்கரையை நோக்கி ஓடினுன். அவர்களும் இவனைத் தொடர்ந்து விரட்டினுர்கள். முன் சொன்ன சஹாராக் கடலில், கரையிலிருந்து சற்று தூரத்தில், தன் தகப்பனுடைய மரக்கலம் ஒன்று செல்வதைக் கண்ட ரோகிணி, உயிரையும் பொருட்படுத்தாமல் உள்ளே குதித்து நீந்தத்தொடங்கினுன். ரோகிணி கை கால் ஓய்ந்து நீரில் முழுகுந்தறுவாயில், மரக்கலத்திலிருந்து சிலர் நெருங்கி அவனை உயர எடுத்தார்கள். பின் விளைந்ததை நினைக்

கும்போது அவன் அப்போதே இறந்திருப்பின் மிக மேன்மையா யிருந்திருக்கும். ஆனால் வினையின் வழியைக் கண்டவர் யாவர்? ஐப்பசி இறக்கவில்லை யென்று அறிந்திருந்தால் ரோகிணி ஊருக்கே திரும்பியிருப்பான். மூலத்தைக் கொன்ற குற்றத்தை எவ்விதமாவது நிவிர்த்தி செய்துகொள்ளலாமென்று தோன்றினும், ஐப்பசி இறந்த பின் அவனுக்கு ஊர் செல்ல விருப்பம் வரவில்லை. ஆகையால் கடல் யாத்திரையாகப் பல ஊர் சென்று சாவதானமாகத் தன்னூடு திரும்பலாமென்று தீர்மானித்துக் கொண்டான்.

எங்குப் போயினும் தன் நிழல் தன்னைவிட்டு நீங்காதது போல அவனுடைய ஆக்கக்கேடும் கூடவே சென்றது. மரக்கலம் சின்னாளில் அத்லாந்திக் மஹாசமுத்திர மத்தியில் பெரிய புயல் வாய்ப்பட்டுக் கீழே முழுகிவிட்டது. கப்பலில் இருந்த எல்லாரும் இறந்துபட்டார்கள். கொலைபாதகனைக் கடல் கூட விழுங்க மறுத்ததுபோலும். ரோகிணி மாத்திரம் ஒடிந்த மரத்துண்டொன்றைப் பற்றிக்கொண்டு மிதந்தான். அவன் நெடு நேரம் அலைகளால் அங்குமிங்கும் உந்தப்பட்டு பிரக்ஞையற்றவனாய் ஒரு கரையில் கொண்டு ஒதுக்கப்பட்டான். அறிவு வந்து கண்ணைத் திறந்தபோது அது மனிதரே யில்லாத பாழிடமென்று புலப்பட்டது. அங்குமிங்கும் அலைந்து பார்த்தான். கூச்சலிட்டான். மரங்களிலும், மேடுகளிலும் ஏறி நாலாபக்கமும் நோக்கினான். காட்டு மிருகங்களையுங் கனிவகைகளையுங் கண்டானே யொழிய, வேறு ஆதரவு கொடுக்கக் கூடியது அவனுக்குத் தென்படவில்லை. கடைசியாகக் கால் கை ஓய்ந்து, பசி ஒரு பக்கம் பிடிக்க, வேறு போக்கில்லாமல் மிருகங்களையும் பறவைகளையும் பிடித்துத் தின்று, காட்டுமிராண்டிபோலக் காலங்கழிக்கலானான்.

நாள் செல்லச் செல்ல அவ்வழி மரக்கலங்கள் செல்லும் மார்க்கமல்ல வென்று அவனுக்குத் தென்பட்டது. தன் கப்பல் வந்ததுபோல வேறேதாவது வழி தப்பி வந்தாலொழியத் தனக்கு ஊர் திரும்ப வழியில்லை யென்று கண்டான். உணவு தேடவும் உறங்கவும் வேண்டிய வேலைகளைத் தவிர வேறு ஒருவித வேலையும் இல்லாமையால், இரவும் பகலும் தான் செய்த தப்பொன்றையே எண்ணி யெண்ணி ஏங்கலானான். எந்த விதத்தில் ஆலோசிக்கினும் எல்லாம் தன் மூர்க்கத்தனத்தாலேயே நேர்ந்ததெனக் கண்டான். தனக்குப் பிறவியில் வாய்த்த சகல சம்பத்துகளையும் எண்ணி வருந்துவான். பெற்றோர் ஆக்கிவைத்திருந்த நன்னிலையில் ஒரு முயற்சியும் இல்லாமலே சுகமாக வாழ்ந்திருக்கலாமென்று கவலுவான். பிரியப்பட்டவரோடு சேரப் பொது

மகளிர்க்கு உரிமை யிருக்கும்போது அவர்களைக் கேட்கத் தானுர் என அறிவு தெளிவான். பிராயமும் அழகும் பதவியும் வாய்ந் திருந்த மூலத்தைக் கொன்றதற்குப் பதிலாகத் தானே இறந் திருந்தால் இந்தத் துன்பம் வந்திராதென்று இரங்குவான். ஐப்பசியும் அவனேடு இன்பமாய்ச் சுகித்திருப்பாளென்று எண்ணுவான். அவளுடைய விருப்பத்தைக் கவனியாத தன் காதல் என்ன காதலென்று நொந்துகொள்வான். ஐப்பசி உயிரோடிருந்து தன் கைவசப்பட்டிருந்தாலும் தன்னை வெறுப் பாளே தவிரத் தழுவியிருக்கமாட்டாளென்று சந்தேகிப்பான். இவ்விதம் ஓயாத கவலையும் உறங்காத் துன்பமுமாய் இருபது வருஷங்கள் ஏகாந்தத்திலிருந்து கொண்டு, தன் பழைய நினைவு, இச்சை, செயல், ஒவ்வொன்றையும் ஆராய்வானுனன். ஆருக் கவலையினல் அவன் துரும்பாய் இளைத்து இயற்கை வயதை விட மிகவும் கிழவனுகக் காணப்பட்டான். நாளாக நாளாக ஊர் திரும்புவோமென்ற நம்பிக்கை அவனுக்கு ஒழிந்ததாயினும், எப்போதாயினும் காப்பாற்றப்பட்டால் இனிக் குற்றமே செய்வ தில்லையென அடிக்கடி சபதம் செய்துகொள்வான். அவன் துன்பத்தை அறிந்தவர், அதைவிடக் கடினமானதும் கொடி யரைச் சீர்திருத்துவதுமான வேறு தண்டனையை யாரும் விதித் திருக்க முடியாதென்பதை ஒப்புவர்.

இவ்விதமாகக் கவலைப்பட்டு எல்லா நம்பிக்கையும் அற்றி ருக்கும்போது அவனுக்கு நற்காலம் பிறந்தது. ஒரு நாள் கொடுங் காற்றல் ஒதுக்கப்பட்ட மரக்கலமொன்று கண்ணெட் டும் தூரத்தில் செல்லக்கண்டான். கண்டதும் அடங்காத ஆவ லோடும் தன் முழுவலிமையோடும் முயற்சி செய்து அக் கப்பலின் கவனத்தையும் கவர்ந்தான். தன்னைப்பாராது சென்று விடுமோ என்று திகில் கொண்டிருக்கும்போது மரக்கலம் தன்னை நோக்கி வர, மனந்தேறினன். கப்பலும்வர அதிலேறிக் கொண்டான். கப்பலிலிருந்தோரிடம் தன் கதை ஒன்றையும் எடுத்துச் சொல்ல இயலவில்லை. அவர்களும், செல்லும் வழியில் ஆப்பிரிக்காக் கரையில் அவனை இறக்கிப் பணமொன்றுங் கொடுக்காமல் ஏகிவிட் டார்கள். ஆகையால் ரோகிணி கைச் செலவுக்கு வகையில்லாமல், தன் மொராக்கோ நகரத்தை நோக்கிக் கால்நடையாக நடக்கத் தீர்மானித்து, மெள்ள மெள்ள நடந்து, வழியிலுள்ள ஊர்களில் பிச்சை யெடுத்துக்கொண்டு, களைப்பினலும் பலவீனத்தினலும் பல இடைஞ்சல்பட்டுக் கடைசியாய் ஊர்வந்து சேர்ந்தான்.

அங்கு ரோகிணியை யாரும் அறிந்து கொள்ளவில்லை. அவ னும் தன்னை இன்னுனென்று தெரிவித்துக்கொள்ளப் பயந்து அன்னியன் போலவே தன் குடும்பத்தைப்பற்றி விசாரித்தான்.

தலைமை அதிகாரி ஊரைவிட்டே சென்று விட்டதாகத் தெரிந்தது. ஆகையால் கொலைக்குற்றத்திற்கு அஞ்சவேண்டியதில்லையென்று கண்டான். ஆனால் தன் மனைவி மக்கள் சென்ற இடம் அறிய எவ்வளவு முயன்றும் அவனால் கண்டுபிடிக்க இயலவில்லை. கடைசியாய்ப் பழைய ஐப்பசியின் குடும்பத்தில் யாரோ ஒரு நொண்டிப்பெண் இருப்பதாகவும், அவள் ஊரைவிட்டு ஒதுங்கிக் குடியிருப்பதாகவுங் கேள்விப்பட்டு, அவளிடம் விசாரிப்போமென்று அவளைத்தேடிச் சென்றான். அவளுடைய குடிசையை அணுகும்போது பழைய ஐப்பசி போலவும் அவளைவிட வயது முதிர்ந்தவளாகவும் ஒரு பெண்ணைத் தூரத்தில் கண்டு, ஐப்பசி இறந்துபோனபடியால் அது அவள் மகளாயிருக்குமென்று ஐயுற்று அவளை நெருங்கினான். அவள் இவனை அடையாளங் கண்டு வரவேற்கவே, இருவரும் களிப்புற்று ஐப்பசி வீடு சென்று நெடுநேரம் அளவளாவினார்கள்.

ஐப்பசி தான் அடிபட்டு மூர்ச்சையானதைத் தவிர இறந்து போகவில்லையென்றும், பட்ட அடியால் கால் நொண்டியானபடியால் அதுமுதல் காதலர் ஒருவரும் தன்னை விரும்பாமல் விலகி விட்டார்களென்றும், தான் அதுமுதல் ஒதுக்கமாய்க் குடியிருந்து வருவதாகவும் சொன்னாள். தான் அடிக்கடி அவனை நினைத்த தாகவும், அன்று சரியாய் நடந்திருந்தால் யாருக்கும் ஆபத்து நேர்ந்திருக்காது என்றும், தான் செய்தது பெரிய குற்றமென்று உணர்வதாகவும், அவள் ரோகிணியிடம் சொன்னாள். இரவும் பகலும் இருபது வருஷமாகத் தான் ஓயாது அனுபவித்த நரகத் துன்பத்தையெல்லாம் ரோகிணியும் அவளிடம் எடுத்துச் சொல்ல, இருவரும் சமாதானப்பட்டுக்கொண்டார்கள்.

அன்று முதல் ரோகிணியின் மனைவி மக்களைத் தேடுவதில் ஐப்பசியும் இயன்ற உதவியெல்லாம் செய்தாள். என்ன செய்தும் இருவர் முயற்சியும் பயன் பெறவில்லை. சதுர்த்தியும் மக்களும் எங்கு சென்று குடியேறினார்களென்பது புலப்படவேயில்லை. ரோகிணி மிகவும் பலங்குன்றியிருந்ததாலும், அவனைப் பாதுகாக்க வேறு ஆளில்லாததாலும், இருவருமாக ஆலோசித்து, தாம் கலியாணம் செய்து கொள்வது உத்தமமெனத் தீர்மானித்து, மணந்துகொண்டார்கள். ஐப்பசியிடமிருந்த கொஞ்சத் தொகையைக் கொண்டு ரோகிணி ஒரு சிறிய கடை நடத்தி, அதன் வருவாயிலிருந்து சாகும்வரை திருப்தியாய் அவளோடு காலங்கழித்தான். செழிப்பில்லையாயினும் வறுமையின்றி வாழ்ந்து ரோகிணி அறுபத்தேழாவது வயதில் இறந்தான். 1006 வருஷம் மேலுலகங்களிலும் இருந்தான்.

குறிப்புகள் :—துன்பமின்றி மனிதன் முன்னேற்றமடைய முடியாது. ஒரே துன்பத்தைத் திரும்பத்திரும்ப அனுபவிப்பது மடமையேயானாலும், துன்பமே முத்திநெறிக்கு இன்றியமையாத துணை. துன்பப்படாதவன் பிறருடைய துன்பத்தை அறியமாட்டான். அறியாதபோது அன்னியர்மேல் அன்பு பிறக்காது. அந்த அன்பின்றி முத்தி கைகூடாது. துன்பப்பள்ளியில் படித்தவனுக்கே மேற்பிறப்புக்களில் மனச்சாக்ஷி வலுவுடையதாயிருக்கும். உள்ளதை வைத்துக்கொண்டு சோம்பேறியாய் உலகசுகத்தில் சமாதானப் பட்டிருப்போனுக்கு அந்தப் பிறவி பாழாம். அது திருப்தியல்ல, தமோகுணம் அவாமிகுதியால் ஓடியாடி முயற்சிக்கும் ரஜோ குணத்தவன், இவனைவிட மேலானவன். ஏனெனில், முயற்சியில் நஷ்டமும் துன்பமும் எய்தும்போது, தன் முயற்சியை சாத்வீக வழியில் திருப்பி மற்றவனுக்கு முன்னதாக அவன் நற்பதவி பெறுவான்.

அனுபவித்த துன்பங்களால் மேற்பிறப்புக்களில் உண்டாவது மனச்சாக்ஷி.

அனுபவங்களால்	ஷை உண்டாவது அறிவு.
காரிய சித்திகளால்	ஷை ஷை பிரவர்த்தியில் உற்சாகம்.
அடிக்கடி உண்டாகும் ஒரே நினைவால்	ஷை அதற்கேற்ற குணம், சுபாவம், இயற்கை—திருட நினைத்தவன் பின்பிறவியில் திருடுவான். உதவ நினைத்தவன் உதவுவான்.
அடிக்கடி உண்டாகும் ஒரே ஆசையால்	ஷை அவ் இச்சையைப் பூர்த்திபண்ணும் சக்தி, சாமர்த்தியம், ஆற்றல்.
நற்செய்கைகளால்	ஷை இடம், பொருள், ஏவல், முதலிய சௌகரியங்கள்.
துற்செய்கைகளால்	ஷை ஷை ஷை அசௌகரியங்கள்.
பிறர் நலம் பேணும் விருப்பத்தால்	ஷை ஷை விவேகம்.
பிறர் நலம் பேணும் செய்கையால்	ஷை மனம், மொழி, காயம், மூன்றிற்கும் இன்பம்.

இத்தனை கருவிகளும் மனிதனைப்பிறந்த ஒவ்வொருவன் கையிலும் உள்ளன. விருப்பமுள்ளவற்றை அததற்குரிய முறையை அனுசரித்து அடைந்துகொள்வது அறிவுடைமை. முறையறியாமல் செய்யும் முயற்சிகள் வீணாகும். முறையுடன் பயிரிடுபவன் நிறைந்த விளைவை யெடுப்பதும், முறையறியாது பயிரிட்டவன் நெல் விளையுமாயினும் குறைந்த நெல்லையே கொள்வதும் சாதாரண அனுபவம். ஆகையால் இருட்டு வீட்டில் குருட்டெருமைபோல் முட்டாமல், அறிந்து முயல்க.

இப் பிறப்பிலும் இதற்கடுத்த பிறப்பிலுமிருந்து ரோகிணியானவன் பட்டுப்படிக்கும் ஆன்மாவேயன்றிப் பார்த்தோ கேட்டோ படிக்கும் ஆன்மா வல்லவென்று நினைக்கவேண்டி யிருக்கிறது. இரண்டு பிறப்புக்களிலும் அவன் நல்ல இடங்களில், நல்ல குடும்பங்களில் பலவகையான வசதிகளுடன் பிறந்திருந்தும், ஆசை மேலிடும்போது எல்லாக் கட்டுப்பாடுகளையும் துறந்து எந்தத் தீயதொழிலையும் கைக்கொண்டு ஆசையைப் பூர்த்திபண்ண முனையும் மூர்க்கத்தனம், பண்டு பாரசிக வாழ்வில்

இருந்தது போலவே பன்னீராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் காணப் படுகின்றது. அவன் தீவினைப் பலன்களும் தாமதமின்றிக் கைமேலேயே கிடைத்துவிடுகின்றன. இப் பிறப்பில் இருபது வருஷ ஒண்டி வாழ்க்கை யாலும் அடுத்த பிறப்பில் அடிமை வாழ்க்கையாலும் தீவினை ஒருவாறு அனுபவித்துத் தீர்க்கப்படுகின்றது. அத்துடன் இந்த இரண்டு பிறப்பு களிலும் முன்னைத் தொடர்புள்ள மேன்மக்கள் யாருங் காணப்படவு மில்லை. அவர்களா லேற்படும் அனுகூலங்களும் அமையாது போனது அவன் பிராரத்தவினை காரணமாக விருக்கவேண்டும். ரோகிணியின் வரலாறுகளையும், ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள வேறுபலருடைய வரலாறுகளையும் கூர்ந்து படிப்போர்க்குப் பலபல வாழ்க்கை உண்மைகள் விளங்கவரும்.

கோடி வழி—VIII

ரோகிணி : (மனைவி) (1) சதுர்த்தி
(ஆண்) (2) காதற்கிழத்தி ஐப்பசி
மூலம் : ஐப்பசி காதலன்.

9. போஸிதானிஸ் தீவு—ஆண்

கி. மு. 17228—கி. மு. 17137.

வயது : 91 - பின் பிதுருலகவாசம் : 1447 ஆண்டுகள்

ஒருபுறத்தில் வட அமெரிக்கவும் தென் அமெரிக்காவும் மற்றொருபுறத்தில் ஐரோப்பாவும் ஆப்பிரிக்காவும் இருக்க, இடையிலுள்ளது அத்லாந்திய மகாசமுத்திரம். அது முன் னொரு காலத்தில் நாடாயிருந்தது. லக்ஷக்கணக்கான ஆண்டு களுக்கு முன் அத்லாந்தியக் கண்டம் வளர்ந்து செழித்தோங்கி மிகவும் உன்னதமான மேம்பாடும் நாகரிகமும் அடைந்து அக் காலத்து உலகம் முழுவதையும் அதிகாரத்துடன் ஆண்டு வந்தது. கோட்டைவாயிற் கதவுகளெல்லாம் ஆணிப்பொன்னால் அமைக்கப்பட்டிருந்த படியால், சக்கரவர்த்தியின் இருப்பிட மாகிய தலைநகரானது பொற்கபாடபுரம் என்ற பெயர் பெற் றிருந்தது. லக்ஷக்கணக்கான ஆண்டுகள் அதிவுன்னத நிலைமையி லிருந்த அக் கண்டம் நாளடைவில் ஆழிவாய்ப்பட்டு அழிந்து போயிற்று. நாம் இங்கு சொல்லப்போகிற காலத்தில் அவ்வளவு பெரிய கண்டத்தில் மிகுந்திருந்தது, போஸிதானிஸ் என்ற ஒரு பெருந் தீவேயாகும். தீவேயாயினும் அது ஒரு சிறு கண்டம் போன்று பெரியது. அதன் தென்பாகத்தில் அக்காடியர் என்ற அத்லாந்திய வகுப்பார் குடியிருந்தனர். அவர்கள் கைத்தொழிலிலும் வியாபார முறையிலும் பேர் பெற்ற வர்கள். அவர்கள் மத்தியில் கி. மு. 17228-இல், ஒரு பெரிய வர்த்தகன் வீட்டில் ரோகிணி ஆணாய்ப் பிறந்தான். சிறு

வயதிலேயே வியாபார முறைகளெல்லாம் கற்பிக்கப்பட்டான். இரத்தின வியாபாரத்தில் மிகவும் தேர்ந்தான். மலிந்த இடத்தில் வாங்கிக் குறைந்த இடத்தில் விற்பதில் சமர்த்தனுனன். அவனிடம் மிகுந்த பிரியங் கொண்டிருந்த தந்தையானவன், அவன் புத்தி நுட்பத்தைக் கண்டு மெச்சி, சிறு வயதிலேயே அவனைக் கடையிலிருத்தி, வருவாயிலும் ஒரு பங்கை அவனுக்கு ஈந்து வந்தான். ஆயினும் சிற்றின்பக் கடலில் சிறுவயதிலேயே மூழ்கிவிட்ட ரோகிணி, தகப்பன் கொடுத்த பணம் செலவுக்குப் போதாமல், தகப்பனை யறியாமலே கடையிலும் கொள்ளை யடிக்கத் தொடங்கினுன்.

தகப்பன் மகனைப் பூரணமாய் நம்பியிருந்தான். ஆகையால் சிறு களவுகள் கண்டுபிடிக்கப்படாமலே போயின. அவ் வூரில் பழைய அஷ்டமியும் பொதுமகளாய் வந்து பிறந்து, முன்னைய குணத்திலாவது சமர்த்திலாவது ஒரு சிறிதும் குறையாமல் வாழ்ந்து வந்தாள். அவள் கையில் ரோகிணியும் சென்று சிக்கினுன். அக் கைக்குப் போட்டிகளும் பல இருந்தன. அவள் "சிறு தொகைகளைக் களவுசெய்வதில் என்ன ஆண்மை யிருக்கிறது. குட்டுப்பட்டால் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும்" என்று அடிக்கடி ரோகிணியை ஏளனம் பண்ணுவாள். அவள் மாயத்தில் அழுந்திக்கிடந்த ரோகிணியும் அவள் தன்னை விட்டு விலகாதிருக்கும் பொருட்டு, ஒரு கப்பல் வர்த்தகனிடம் வரவேண்டிய பெருந் தொகையை வாங்கிக் கடைக்கணக்கில் வரவு வைக்காமல் அஷ்டமிக்காகச் செலவிட்டான். அது விபரம் அறியாத தகப்பன் வர்த்தகனை நெருக்கவும், நடந்த களவு வெளியாகுமென்று கண்ட ரோகிணி கலக்கமுற்று அஷ்டமியிடம் சென்று கலந்தான். ரோகிணி பணம் பெற்றதற்கு அதைக் கொண்டுவந்த வாலிபனைத் தவிர வேறு சாக்ஷியில்லாதிருந்தது. அவன் அவர்கள் கடையிலேயே வேலைபார்த்துவந்த சதயமென்பவன். அவனை அப்புறப்படுத்திவிட்டால் சந்தேகம் அவன் மேலாகிவிடுமென்று, அஷ்டமி அதற்கு வேண்டிய ஆலோசனையைச் சொல்லி ரோகிணியைத் தேற்றினுள்.

கப்பல் வர்த்தகம் மிகுந்திருந்த அந்த நாட்டில் கடற் கொள்ளையும் மிகுந்திருந்தது. கப்பலோட்டுவதற்குக் கூலியாட்களை நம்பாத அக் கொள்ளைக்காரர், அகப்பட்ட மனிதரைப் பிடித்தும் விலைக்கு வாங்கியும் அடிமைகளாக்கிக் கைகால்களில் விலங்கிட்டு மரக்கலங்களில் ஏற்றித் தண்டு வலிக்கும்படி செய்வார்கள். அந்த அடிமைகளை மிருகங்களிலும் கேவலமாய் நடத்துவார்கள். முனங்கினுலும் இரத்தம் ஆறுகவோட அடித்துத் துன்புறுத்துவார்கள். அவர்கள் நிலைமையைக்

கொடிய பாதகருக்குக் கடவுளால் அமைக்கப்பட்ட தண்டனை யென்று சொல்லவேண்டுமே தவிர வேறு அதை விவரிக்க முடியாது. சதயத்தையும் அப்படி அடிமையாக விற்றுவிடுவ தென்று அஷ்டமியும் ரோகிணியும் தீர்மானித்தார்கள்.

சதயத்தின் தங்கையுடனும் ரோகிணி உறவாயிருந்தபடியால் இந்த ஏற்பாட்டை அவன் விரும்பவில்லையாயினும், தன் தலையைத் தப்பிக்கும் வழி வேறில்லாமையாலும் அஷ்டமியிடம் கொண்ட மையலினாலும் சதயத்தைப் பிடித்து அடிமையாக விற்று ஊரிலிருந்தே கடத்திவிட்டான். சந்தேகமும் பழியும் சதயத்தின் மேலாயிற்று. ரோகிணி தற்பொழுது தப்பினு னாயினும் அவன் நிலைமை அத்தோடு நிற்கவில்லை. அஷ்டமியம்மாள் மினுக்குக்கும் பிலுக்குக்கும் அவனால் இரைகொடுக்க முடியவில்லை. கடைப்பணமும் கொள்ளை போய்க்கொண்டேயிருந்தது. கடைசியாய் அது மிகவும் அதிகப்பட்டு இனி ஒளிக்க முடியாதென்ற நிலைமைக்கு வந்துவிட்டது. அந்தக் கோப வெறியில் ரோகிணி சென்று அஷ்டமியைத் திட்டினான். எண்ணெய் வற்றியபோது அணைந்துபோகும் விளக்குப்போல, அலைந்த ஆடவர் பணம் வற்றியபோது அன்னியராகவே அவரைப் பாவிக்கும் வேசையர் மனத்தை ரோகிணி நன்றாய் அறியவில்லை. தன்னை வைத்துக் காப்பாற்றத் திறமில்லையாயின், திறமுள்ள செல்வர்கள் வேண்டியமட்டும் வேறு காத்திருப்பதாக அஷ்டமி அவன் முகத்திற்கு நேரேயே சொன்னாள். இருவருக்கும் பெரிய கலகம் உண்டாயிற்று. கொஞ்சநாளாக ரோகிணி அனுபவத்தில் அலுத்துப்போயிருந்த அஷ்டமி இதுதான் சமயமென்று தன் மற்றக் காதலரைக் கொண்டு ரோகிணியையும் பிடித்துப் பழைய கடற்கொள்ளையரிடமே அடிமையாக விற்றுவிட்டாள். உயர்குலத்திற் பிறந்து செழிப்பில் வளர்ந்து இருபத்தாறு வயதுடைய இளமை நீங்காத ரோகிணி, கைகால்களில் தளையிடப்பட்டுக் கள்வர் நாடு சென்றபோது, அங்கு சதயத்தை நேரே கண்டான். பாம்பைக் கண்ட கீரிபோல அவன் ஓடோடியும் வந்து ஒரே அடியில் இவனைக் கொன்றுவிடத் தீர்மானித்துத் தன் விலங்கால் நையப்புடைத்தான்.

கைகால் உதவியில்லாத ரோகிணி கூக்குரலிடவும், அது கண்டு ஓடிவந்த கள்வர்கள் உண்மையைக் கேட்டறிந்து, தகுந்த முறையில் அவர்களைத் தண்டிக்கக் கருதி இருவரையும் ஒரே தண்டில் பூட்டி வலிக்கும்படி செய்தார்கள். அதுமுதல் இருவரும் இரவும் பகலும் அடுத்தே இருக்கவேண்டி வந்தது. அதனால் அவர்கள் பகையும் கொழுந்துவிட்டெறிந்து கொண்டேயிருந்தது. ஒருவரை யொருவர் ஏசுவதும் பேசுவதும் கடிப்பதும்

விலங்கிட்ட கைகளால் பறண்டுவதும், சண்டை அதிகப் பட்டபோது கள்வர் சவுக்கால் இரத்தம் பீறிட அடிபட்டு அலறுவதுமாகப் பன்னிரண்டு வருஷம், ஒரு வியாழவட்டம், நித்தியகண்டம் பூரணயுசாக இருவரும் அக் கொடுநரகில் காலந் தள்ளினர்கள். ரோகிணிக்குச் சதயத்துடன் போராடும்போது மூர்க்கம் சற்றும் தணியாதிருப்பினும், கள்வர் கையில் சவுக்கடி படும்போது, ஒரு குற்றமும் அறியாத சதயம் தன்னலும் தனது மிருகத்தன்மையான வேசியர் காமத்தினுலுமே துன்பப் படுகிருனென்றும், அதற்குத் தான்படும் தண்டனை போதா தென்றும், அவன் மனத்தில் ஒரு உணர்ச்சி உண்டாகி வளர்ந்து கொண்டே வந்தது. ஆகவே நாள் செல்லச்செல்ல அவனுக்குப் புறத்தில் அடியும் உதையும் அகத்தில் மனச்சாக்ஷியின் இடியு மாக வருத்த, வேதனைப்பட்ட அவன் வாழ்வு அவனுக்குப் பூலோக நரகமேயாயிற்று.

பன்னிரண்டாண்டுகளுக்குபின் இருவருக்கும் நற்காலம் பிறந்தது. மரக்கலம் வேகமாகச் செல்லும்போது இவர்கள் பற்றி யிருந்த தண்டு ஒருநாள் நடுவில் ஒடிந்துபோகவும், ஒடிந்த முனை சதயத்தின் வயிற்றைக் கீறுமுன், ஓரத்திலிருந்த ரோகிணி தன்னை யறியாமலே தண்டை நிறுத்த முயன்றான். அதனல் அவன் மார்பிற்கும் தோளிற்கும் ஆபத்து நேரவும், சதயம் தன்னுயிர் காப்பாற்றப்பட்டதைக்கண்டு ரோகிணியிடம் நன்றிகொண்டு அவ்வளவு காலத்திற்குப்பின் அவனேடு முதல்முதலாகப் பரிந்து பேசினன். அன்றுமுதல் இருவருடைய பகையும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத்தொடங்கிற்று. ரோகிணி தன் குற் றத்தை ஒத்து மன்னிப்புக்கேட்டான். தன் வினைக்குப் பிறரை நோவதேன் என்று சதயமும் சமாதானப்பட்டான். அவ்விதம் நண்பராகிய இருவரும் அன்றுமுதல் கள்வரிடமிருந்து எவ்விதம் தப்புவதென்று ஆலோசிக்கலானர்கள். இரண்டு வருஷமாக ஒரு வழியும் அமையாமல், கடைசியாய் ரோகிணி அடிமைப்பட்ட பதினலாவது வருஷத்தில், தங்கட்கு மிஞ்சிய வலுவையுடைய கப்பலொன்றைக் கள்வர் தாக்கவே, அந்த எதிரிகள் கப்பலை அருகாகப்பாய்ச்சித் தமது மரக்கல முனையால், மரமறுக்கும் வாளைப்போல இவர்கள் தண்டுகளை அறுத்துவிட்டார்கள். ஒடிந்த தண்டுகளால் அடிபட்டு உயிர் நீங்கிய அடிமைகள் பலர். கடலில் இறந்தவர் பலர். உயிரோடு நீரில் தள்ளப்பட்டவர் சிலர். அச் சிலருள், ஒன்ருய்ப் பிணைக்கப்பட்டிருந்த ரோகிணியும் சதயமும் ஆவர். சதயத்திற்குப் பலமான காயம்பட்டிருந்தது. மிதந்து கிடந்த மரத்துண்டொன்றைப் பற்றிய ரோகிணி சதயத்தையும் இழுத்துக்கொண்டு மிகுந்த முயற்சியாலும் அலையின் உதவியா

னும் வெகு தூரத்திலிருந்த கரையை அடைந்தான். அங்கு நின்ற செம்படவருடைய உதவியால் சதயத்தை ஒரு குடிசையில் கொண்டு சேர்த்துத் தானுஞ் சோர்ந்து வீழ்ந்தான்.

சதயத்திற்கு நோய் நீங்க ஒரு வருஷத்திற்குமேல் ஆயிற்று. அதுவரையில் ரோகிணி மீன்படவரிடம் கூலிவேலை செய்து சதயத்தையும் பாதுகாத்து வந்தான். சதயம் குணப்பட்ட பின்பும் உடம்பு மிகவும் இளைத்துக் காலிலும் ஊனப்பட்டிருந்தபடியால் அவ்விடத்தில் பிழைக்க வழியில்லையென்று இருவரும் அவ்வூரைவிட்டு வடக்கு முகமாய் மெள்ள மெள்ள நடந்து, போகும் மார்க்கத்தில் பிச்சையெடுத்துண்டு, தலைநகராகிய பொற் கபாடபுரத்தை அடைந்தார்கள். அங்கு அவர்களைக் கண்டு இரக்கங்கொண்ட ஒரு தட்டான் ரோகிணியைத் தன்னிடம் கூலிவேலைக்கமர்த்திக்கொண்டான். அப்போது ரோகிணிக்கு வயது 42. இருவரும் கள்வர் கையிலிருந்து தப்பி வருஷம் இரண்டாயிற்று.

முதலில் பரிதாபத்தால் ரோகிணியைக் கூலிவேலைக்கு வைத்துக்கொண்ட தட்டான், கொஞ்ச நாளில் அவன் புத்திக் கூர்மையையும், ரத்தினப் பரிசோதனையில் அவனுக்கிருந்த தேர்ச்சியையும் கண்டு வியப்புற்று, கொஞ்சம் விடுமுதல் விட்டு அவனைப் பங்காளியாக்கி ரத்தின வியாபாரம் செய்யத் தொடங்கினான். தட்டான் இறக்கும்வரை பத்தொன்பது ஆண்டுகள் இருவரும் ஒன்றாக வியாபாரம் செய்தார்கள். ரோகிணியின் ஆதரவில் எல்லாச் சௌகரியங்களோடும் பாதுகாக்கப்பட்டு வந்த சதயமும் இதற்குள் இறந்துவிட்டான். தட்டான் இறந்த பின் ரோகிணி தனியாகவே கடையை நடத்திக் கொஞ்சம் பணமும் சேர்த்து மரியாதையாகக் காலந்தள்ளும்போது, பத்தாவது வருஷத்தில் கடையிலிருந்த வேலையாள் ஒருவன் செய்த மோசத்தினால் அவன் உள்ள பொருளையும் இழந்து கடையையும் நிறுத்த வேண்டியதாயிற்று. முன்னைய வறுமையும் வந்தெய்தியது. அப்போது எழுபத்தொரு வயதுவாய்ந்த ரோகிணி அதற்குமேல் வேலை கிடைக்கமாட்டாமல், வேறு போக்குமில்லாமல், திரும்பவும் பழைய ஓட்டையே எடுத்து, ஊரில் இரந்துண்டு, 91 வயதுவரை ஆண்டியாய் அலைந்து, அணைப்பாருமின்றி அழுவாருமின்றி இறந்தான்.

குறிப்புகள் :—இப் பிறப்புக்களை யெல்லாம் விரிவாய் எழுதவதென்றால் ஒவ்வொன்றும் ஒரு பெரிய நாவலாகிவிடும். இவ்விதம் இருபத்து நான்கு பெருநூல்கள் எழுதுவது இயலாத காரியம். ஆகையால் ஒவ்வொன்றிலும், கற்போர் அறிவையும் ஒழுக்கத்தையும் விருத்தி பண்ணுவதற்கான வினை, வினையின் பலன், வினைவிளையும் விதமாகிய காரண காரிய முறை, பிறப்புக்களிலுள்ள ஆண், பெண் ஆகிய உடம்பு மாறுதல்

கள், உறவுமுறை மாறுதல்கள் முதலிய போன்ற குறிப்புகளையே எடுத்துக் காட்ட இயலும்.

செழிப்பிலும் செல்வத்திலும் பிறந்து பின்னால் வறுமை வாய்ப்பட்டு வயிற்றுக்கில்லாமல் ஓடெடுத்து ஊரூராய் ஆண்டியாய்த் திரிவோரை இன்றும் காணலாம். ஆனால் அந் நிகழ்ச்சியின் உட்பொருளை உணர்ந்தோரைக் காண்பதோ அரிதாகும். நல்ல நிலைமையில் பிறந்த ரோகிணி காமப்பித்தால் மயங்கி, தன்னுடைய இச்சை நிறைவேறுவதற்காக, வேண்டுமென்றே செய்த கொடுமைகள் பேய்த்தொழிலேயன்றி மனிதத் தொழிலல்ல. இதனை ஒப்புக்கொள்ளும் பலரும் வேண்டுமென்று யாதொரு கொடுமையும் செய்யாராயினும், தங்களை அறியாமலும் ஆலோசனையின்றியும் அநேகங் கொடுமைகளை நாள்தோறும் இயற்றி வருகின்றார்கள். அவற்றுள் மிகவும் முக்கியமானது பிறரைப் பற்றி அவதூறு பேசுதல். நாலு பேர் கூடிய இடத்தில் வெறும் நேரப் போக்குக்காகப் பேசுவது இது. எதற்காகப் பேசினும் அவதூறு அவதூறே. சொல்லியது உண்மையாயிருப்பினும் அதன்பலன் பிறருக்கு நோவே. அதற்குரிய பலனும் பேசியவனுக்குத் துன்பமே.

இனி, நமது நாட்டில் ஏழைமக்களிடம் பழகுவோருக்கு, அவர்கள் கைக்கும் வாய்க்குமாகக் காலங்கழிப்பது எளிதில் புலப்படும். அநேகருக்கு ஒரு ஆடையன்றி உடைமாற்றுக்கு வேறு ஆடையிராது. குளிர் காலங்களில் மழையில் நனைந்தாலோ துணியை நனைத்துக் குளித்தாலோ அவர்கள் படும்பாடு கடவுளே அறியவேண்டும். அநேகருக்கு அன்றன்றைக்கு அரிசி வாங்கியே காலங் கழியவேண்டும். ஒருநாள் வேலைக்குச் செல்லாவிட்டாலும் நோய் நொடிப் பட்டாலும், நன்மை தின்மைக்காகக் கடன் பட்டுவிட்டாலும், அப்புறம் அம் மக்கள் கதி அதோகதிதான். இவையெல்லாம் அவர்கள் தீவினையின் பலனாயிருக்கலாம். ஆயினும் அவர்களை வேலை வாங்குவோர் அவர்கள் துன்பங்களையறியாமல் காலா காலங்களில் சம்பளங் கொடுக்காது அவர்களைக் கடன்பட வைக்கின்றனர். அதனால் கையில் காசு கொடுத்து மலிவாக வாங்கக்கூடிய உணவுப் பொருள்களையும் கடனாகக் கூடுதல் விலைக்கு வாங்கி அவ் வறியோர் கூடுதல் வறுமையை அடைகின்றார்கள். அவ்விதமே உடலும் உயிரும் ஒன்றிநிற்கப் போதாத கூலி கொடுப்போர் ஊரில் சம்பளம் என்ன போடுகிறார்கள் என்று அவர்கள் கவனிப்பதைத் தவிர கூலிக்காரர் படும் கொடுந் துன்பங்களை அவர்கள் அறிவதில்லை. அதே மாதிரி நாட்டு வழக்கமென்றும் மதக் கொள்கையென்றும் சொல்லி அறியாமையால் ஆதிதிராவிடரையும் மற்றும் தாழ்ந்த மக்களையும் இந்துக்கள் படுத்தும் துன்பம் என்னென்றுரைக்க முடியும். இம்மாதிரிக் கொடுமைகள் இன்னும் பல நடக்கின்றன. இவற்றையெல்லாம் அறிந்து செய்யினும் அறியாமற் செய்யினும், கொடுமை கொடுமையே. அதன் பலன் வறுமையும் துன்பமுமே. அதை அறியாமலே, அநேகர் கவலையின்றி மேற்சொன்ன, எளிதில் மாற்றக்கூடிய கொடுமைகளை இன்னும் இயற்றி வருகிறார்கள். எந்தச் செய்கையையும், அதன்பலன் இன்னதென்று ஆராய்ந்து இயற்றுவது, நன்மையைத் தழுவவும், கொடுமையை நீக்கவும் இடந்தரும். அப்போது அறியாமற்செய்யும் கொடுமையும் அதன் நிழலாகவருந் துன்பமும் வாராதொழியும்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்."

"தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயா தடியுறைந் தற்று"
என்பனவே இயற்கை (இறை) நியதிகள்.

IX. கோடி வழி

ரோகிணி: (காதலி) அஷ்டமி.
(கூட்டு அடிமை) சதயம்.

10. தார்த்தாரி—ஆண்

கி. மு 15690—கி. மு. 15632.

வயது: 58—பின் பிதுருலகவாசம்: 1125 ஆண்டுகள்.

கி. மு. 15690. இமயமலைக்கு வடக்கிலுள்ள மத்திய ஆசியா; தார்த்தாரி நாடு. அத் தார்த்தாரிய மக்களிற் பெரும்பாலார் நிலையான குடியில்லாதவர். ஆடுமாடுகளை இட்டுக்கொண்டு மேய்ச்சல் தேடி அலைபவர். ஆயினும் அரசன், தலைநகர், பல பேரூர்கள், சிற்றூர்கள் எல்லாம் அமையப்பெற்றவர். ஆடை யாபரணப் பகட்டுடையவராயினும் கல்வி சிறிதும் இல்லாதவர். அவர்கள் அலைச்சலுக்கும் ஆபத்துக்களுக்கும் ஏற்ப, ஆண் மக்கள் எல்லோரும் யுத்தப்பயிற்சியுடையவர்கள். அம் மக்களுக்குள் பிறந்த சித்திரையம்மாள் புனர்பூசத்தை மணந்து பல மக்களைப் பெற்றிருந்தாள். அவருள் ஒரு பெண்ணாகிய மகம் வியாழனை மணந்து ஒரு மகனையும் இரண்டு பெண்களையும் ஈன்றாள். அஸ்தம் என்ற அந்த மகன் அவ்விடத்து ஒரு பேரூருக்கு மேலதிகாரியாயிருந்தான். அவ்வூரில் இவனுடைய தாயாதியரே பிரதானமக்கள். அவருள் கட்சி இரண்டு. இரு திறத்தாரும் செல்வமும் செல்வாக்குமுடையவர்கள். பரம்பரை விரோதிகள். அவருள் ஒரு கட்சிக்குப் பிரதானியாயிருந்த அஸ்தத்திற்கு, ஐப்பசி வயிற்றில் ரோகிணி மூத்த மகனாய் மேற் சொன்ன ஆண்டில் பிறந்தான். கொடிவழி VII-VIII ஒப்பிடுக.

அவனுடைய கல்வி முழுவதும் ஆயுதப்பயிற்சியே. நடக்கத்தொடங்கும்போதே குதிரையேற்றமுங் கற்பிக்கப் பட்டான். வளர வளர வில்லும் ஈட்டியும் வாளும் கதையும் அவன் கையில் கொடுக்கப்பட்டன. பதினாறு வயதாகு முன் ரோகிணி இவை எல்லாவற்றிலும் தேர்ந்திருந்தான். இத்துடன் பழைய பயிற்சியாகிய சரசவித்தையிலும் ஆசானில்லாமலே தேர்ச்சியுற்றான். அவ்வூரில் ஒரு பெண்மணி இருந்தாள். அவள் பெற்றோரறியாமலே ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு அந்தரங்கமாக அவனோடு கூடிக்குலாவி வந்தாள். அப்போது ரோகிணி அவள் கண்ணுக்

குத் தென்படவே அவன் மேல் காமுற்று முந்தியவனை விரட்டி விட்டு, தன்னுடைய வித்தையால் ரோகிணியைக் கையிலாக்கிக் கொண்டாள். அந்தம்மாள் பெயர் அஷ்டமி. அவளுக்கு எப்பொழுதும் விலையுயர்ந்த ஆடையாபரணங்களே அணியத் தகுவன. உயர்ந்த உணவுகளே உடம்புக்கு ஏற்பன. மாளிகைகளும் பணியாளருமே மனதுக்கு உகந்தன. முற்பிறப்பு மாதிரி வருவாய்க்கு வகையில்லாதிருந்த ரோகிணி, இப்போது பெற்றோரை எதிர்பார்த்தே ஏதாவது வசூல் செய்யவேண்டியிருந்த படியால், அதில் போதிய பலன் கிடைக்காமல், காமவெறி கொண்டிருந்த நம் கதாநாயகன் ஒடுவில் போன 9-வது பிறப்புத்தொழில்களையே கைக்கொள்ளும் கட்டத்திற்கு வந்து சேர்ந்தான்.

ரோகிணி ஒருநாள் அடுத்த ஊருக்குப் போய்த் திரும்பி வரும் வழியில், தனக்கு முன்னாக ஒரு மங்கையும் அவள் பணிப்பெண்ணும் குதிரையேறிச் செல்லக்கண்டான். அதனால் தன் குதிரையைக் கொஞ்சம் பின்னாலேயே நடத்திவரும்போது திடீரென்று கூக்குரல் கேட்கவும், விரைந்து சென்று திருடர் இருவர் முன்னாலேகும் மங்கையை நிறுத்தி அவள் ஆபரணங்களைப் பறிக்கப்போவது கண்டு, அவர்கள் மேல் பாய்ந்து ஒருவனை அடித்து வீழ்த்தினான். மற்றவன் ஆபத்துக் கண்டு ஓடிவிட்டானாயினும், அம்மங்கை மூர்ச்சையாவதை அறிந்து கிட்டச்சென்று அவளைக் கீழே விழாவண்ணம் தாங்கினான். அவளைத் தொடவும் அவனுக்கு உடம்பெல்லாம் பரவசமாயிற்று. அவள் வனப்பைக் கண்டு மயங்கினான். அவள் பயந்தீர்ந்து கண்ணை விழிக்கவும் அவள் காதற்கடலில் ஆழ்ந்தான். அவன் காலத்தாற் செய்த உதவிக்கு அவள் நாணத்துடன் நன்றி கூறியபோது அவனுக்குண்டான ஆனந்தத்திற்கு அளவுகிடையாது. அவளும் அவனுடைய ஊருக்கே போவதை அறிந்து, அவ் இருவருடனும் சென்ற அரைமணி நேரமும் அவனுக்குத் தரையில் நடந்ததாகவே நினைப்பில்லை. ஊரையடுத்ததும் அவள் பிரிந்துபோக எத்தனிப்பது கண்டு தானும் மரியாதையுடன் விலகி நின்றான். வழியனுப்பும்போது அவள் பெயரை மாத்திரம் அறிய விரும்பவும், அவள் தங்கள் பரம்பரை விரோதியாகிய தலைவன் மகள் பௌர்ணமி என்றறிந்தான். அது கேட்டதும் அவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. இரண்டு குடும்பத்தாரும் ஒருவரையொருவர் வீதியில் கண்டாலே வெட்டுக் குத்து ஆரம்பிப்பர். அப்படியிருக்க ஒருவருக்கொருவர் சம்பந்தமாவது! எனெனில் அவளைக் கண்டது முதல் அவளை மனைவியாகப் பெறுவதே தான் உலகத்திற் பிறந்த பலன் என ரோகிணி தீர்மானித்திருந்தான். அது முற்றுப் பெறுதென்று புலப்பட்டதும் அவன் புத்தி

பேதுற்று, ஒன்றும் செய்யத் தோன்றாமல் நெடுநேரம் அலைந்து அலுத்து மனஞ்சோர்ந்து வீடு சென்றான்.

நாளாக நாளாகப் பௌர்ணமியை ஒரு நொடிகூட மறக்க முடியாதவனானன். ரோகிணி அவளை ஒருதரமே கண்டிருந்த போதிலும் அவள் உருவம் கல்வெட்டுப்போல அவன் மனத்துள் செதுக்கப்பட்டிருந்தது. அவள் கற்பையும் நாணத்தையும் ஒழுக்கத்தையும் எண்ணி எண்ணி அவள் எங்ஙனம் தனக்குக் கிடைக்கப்போகிறாளென்று ஏங்கினான். அழகிலும் பெண்மையிலும் தன் மனதுக்குத் தெய்வப் பெண்ணென்றே தோன்றின பௌர்ணமியைக் கண்டபின், மானம் மரியாதை சற்றுமின்றித் துணிவும் வஞ்சகமுமே உருவாக வாய்ந்த அஷ்டமியை அருவருத்தான். அவளிடம் செல்லாததுகண்டு அஷ்டமி சந்தேகங்கொண்டு அவனைத் தேடித் தேடி ஆளனுப்ப, மனக்கவலை மிகுந்தவன் கள், கஞ்சா முதலிய மயக்க மருந்தால் அதனை மறப்பது போல ரோகிணியும் அவளுடைய மயக்கத்தில் பௌர்ணமியை மறக்க முயன்றான். எனினும் அவன் மனம் அவளிடம் ஈடுபடவில்லை. "அவளை இனித் தொடுவதே பௌர்ணமிக்குத் துரோகஞ் செய்ததுபோலாம்" என்ற எண்ணமே அவனுக்குண்டாயிற்று. அவனுடைய ஆர்வமற்ற மனப்பான்மையையும் மறதியையும் கண்ட அஷ்டமி, காரணம் அறியாமல் அவனுடன் அடிக்கடி போராட, அவனும் அவளிடம் செல்வதை நிறுத்திக் கொண்டான்.

இனிப் பௌர்ணமியைப் பிரிந்து வாழ்வது இயலாதென்று கண்ட ரோகிணி, தன் தகப்பனிடம் சென்று, நடந்தவற்றை வெளியிட்டு, அந்தப் பெண் தனக்குக் கிடையாதவரை தான் உயிரோடிருப்பது அரிதென்று தீர்மானமாய்ச் சொன்னான். கேட்ட தகப்பன் முதலில் ஒன்றும் நம்பவேயில்லை. நம்பின பிறகு மகன் பைத்தியங்கொண்டானென்றே நினைத்தான். சொப்பனத்திலும் நினைக்கக் கூடாத ஒரு செய்கையை இவ்வளவு துணிவுடன் எப்படித் தன்னிடம் சொல்லலாமென்று மகனைத் திட்டினான்; தன் முன் நிற்கவொட்டாமல் விரட்டிவிட்டான். ஆயினும் தன் சொல்லை ரோகிணி மதியாமலும், பரம்பரைப் பகையைப் பாராட்டாமலும், "தன் காதலியை இனி ஒரு தடவையாவது காணலாமா" என்ற ஆவலுடன் அவள் வீட்டுக் கொல்லைப் புறத்திலேயே அவன் மறைவாய்த் திரிவதாகக் கேட்டறிந்த தகப்பன், தன் இனத்தார் அவமதிப்புக்குப் பயந்து, மகன் தாயபாகத்தை மறுத்து, அவனையும் வீட்டை விட்டு விரட்டிவிட்டான். ஆகவே ரோகிணி உண்ணவுமின்றி உடுக்கவுமின்றி, விரும்பிய பெண் கிடைக்க வகையுமின்றித் தெருவில் நின்று திகைத்தான்.

முன்னைய ஒன்பது பிறப்புக்களையும் விட இது மிகவும் உன்னதமான நிலையே. உண்மைக்காதலுக்காகக் கூத்தியாளைக் கைவிட்டுத் தன் ஒழுக்கத்தைச் சீர்படுத்திக்கொண்டதே உத்தமமான செய்கை. அத்துடன் தன் மானம், மரியாதை, வீடு வாசல், சொத்து, சுகம், எல்லாவற்றையும் தனக்குக் கிட்டாத ஒரு பெண்மேல் வைத்த அன்புக்காக ஒருவன் இழக்கத்துணிவது மிகவும் மேலான உயர்குணமாகும். இவ்விடத்தில் வாசகர்கள் காதலுக்கும் காமத்திற்கும் உள்ள வேற்றுமையை உணர வேண்டும். காதலுக்காக ஒருவன் தன்னையும் தனதெல்லாவற்றையும் இழக்கத்துணிவது பக்தியில் ஒரு வகையாம். அது மனிதஉருவம் ஒன்றில் கடவுளைக்காண்பதாம். காமம் என்பது தனக்குக் கிடைக்கும் சிற்றின்பங்கருதி வெறிகொண்டு தன் கையில்உள்ளன உரியன எல்லாவற்றையும் அடைந்தவர் காலில் கொட்டிவிட்டு, அவருக்காக மேலும் தீ வழியில் இறங்கத் தயாராயிருப்பதாம். இக் காதல் மிகுதியால் நல்வினையே உண்டாகும். தீமை சிறிது காணப்படினும் அது காமக்குறியாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இது ஒக்கும்.

தகப்பன் துரத்திவிடவும், ரோகிணி தன் குதிரையையும் ஆயுதங்களையும் மாத்திரம் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியே இறங்கினன். பௌர்ணமி தன்னைப்பற்றி என்ன நினைக்கிருளென்று அறியவேண்டியது முதல் வேலையென்றும், அவளுக்குத் தன்மேல் பிரியமில்லையாயின் அப்புறம் வேற்றூர் சென்று வேட்டையாடியோ, யுத்தங்களுக்குச் சென்றோ காலங் கழிப்பதென்றும் அவன் தீர்மானித்துக்கொண்டான். தன் காதலியைக்காண முயலும்போது எதிரிகள் கண்டு தன்னை வெட்டிக் கொன்றுவிட்டால் அதுவும் நன்மையே என்று கருதினன். அவ்விதம் முரட்டுத்துணிவுடன் தெருவில் நிற்கும்போது அதிர்ஷ்டவசமாகப் பௌர்ணமியின் வேலைக்காரி குரு அவ்வழியே சென்றாள். ரோகிணியைக் கண்டதும் பழைய நன்றியுடன் அவள் அடுத்துவர, அவளிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தனக்கு வேண்டியவற்றையெல்லாம் அவன் கேட்டறிந்தான். அவளும், தன் தலைவி கள்வர் கையிலிருந்து விடுபட்டதைப்பற்றி அடிக்கடி பேசுவதாகவும், ரோகிணியின்மேல் மிகுந்த நன்றியோடிருப்பதாகவும் சொன்னாள். குடும்பத்திற்குள்ளிருந்த நெடும் பகைமையினால் பெற்றோரிடம் கள்வரைப்பற்றிச் சொன்னபோதிலும் ரோகிணியைப்பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை யென்றாள். ரோகிணிக்குப் பிரியமுண்டானல் பகைவர் கண்படாத இடத்தில் இருவரையும் சந்திக்கச் செய்யலாமென்றும் சொன்னாள். இதுகேட்ட ரோகிணி, தான் இதுவரைபட்ட கஷ்ட நஷ்டங்களெல்லாம்

இந்த ஒரு அதிர்ஷ்டத்திற்கே விலையாகாதென்று களிகூர்ந்தான். கடைசியாகப் பூங்காவனமறைவில் பௌர்ணமியைக் கண்டதும், அவள் முகக்குறியால் அவளும் தன்மேல் கொண்டிருந்த காதலை உணர்ந்து அடங்காத ஆனந்தங்கொண்டான். அக் காதலானது, ஆறாவது பிறப்பில் பௌர்ணமி தனக்கு அந்தரங்கத்தோழியாகவும் அப்புறம் மருமகளாகவும், ஏழாவது பிறப்பில் அன்புமிக்க தாயாகவும், இன்னும் முந்திய பிறப்புக்களில் பலவித உறவுகளாகவும் இருந்து, இருவருக்குள்ளும் தொன்றுதொட்டு விளைந்த அன்பின் பலன் என்பதை அவன் சிறிதும் அறிந்திலன். அறியாமலே அவள் காலில் முழுந்தாள் பணிந்து தன்காதல் முழுவதையும் எடுத்துச்சொன்னான். அதற்காகத் தன் வீடுவாசல் எல்லாம் இழந்து இப்போது நிற்கும் நிலையையும் சொன்னான். அவள் தன்னை ஒப்புக்கொள்ளும் பாக்கியம் எவ்விதம் அடையலாமென அறிய விரும்பினான். கையில் ஒன்றுமின்றி அவளைக்கொள்ள வழியின்மையால் தான் சென்று சம்பாதித்து வரும்வரை காத்திருக்கலாகுமாவென்று கேட்டான். பௌர்ணமி காத்திருக்கத் தயாராயிருப்பினும், நெடுநாள் காத்திருக்கத் தன் பெற்றோர் இடங்கொடாரென்பதைத் தெரிவித்தாள். ஆகையால் காலந் தாழ்க்காமல் பௌர்ணமி தகப்பனை ரோகிணி சென்று காண்பதென்றும் அதன் பலனையறிந்து மேல் யோசிப்பதென்றுந் தீர்மானித்து இருவரும் பிரிந்தார்கள்.

ரோகிணியின் முதல் எண்ணம், பௌர்ணமி தகப்பனை ஏமாற்றிவிடலாமென்பது. அவன் தன் தாயபாகத்தை இழந்ததைத் தெரிவியாமல், பௌர்ணமியை மணந்து, பரம்பரைப் பகையையும் மறந்து, இனி ஒத்துவாழும் விருப்புடன் தன் தகப்பனே தன்னை அனுப்பினான் என்று சொல்ல நினைத்தான். உடனே, "இவ்வளவு வஞ்சகன் உத்தமியாகிய பௌர்ணமியைத் தொட அருகனல்லன்" என்று அந்த எண்ணத்தை அப்போதே மாற்றிவிட்டான். ஆகவே தனது உண்மை நிலையில் சென்று தன் காதலியிருந்த சிறு கோட்டை போன்ற மாளிகையின் மதில் கதவைத் தட்டினான். அதுகேட்ட காவலாளர் கதவைத் திறந்தனர். அவரிடம் தன் பெயரைச் சொல்லவும் மாளிகை வேலையாளருக்குள் பெரும் பரபரப்புண்டாயிற்று. ஒண்டியாய் வந்த அவன் துணிவைக்கண்டு அவர்கள் அதிசயித்தார்கள். அவன் இரண்டாய்த் துணிக்கப்படுவது உறுதியென்றார்கள். ரோகிணி விரும்பியபடியே அவனைத் தலைவன்முன் கொண்டு விடவும், தான் இன்னானென்றும் பௌர்ணமி மேற்கொண்ட காதலால் அவளை மணக்க விரும்பி வந்ததாகவும் துணிந்துரைத்தான். இந்தச் சொல் பௌர்ணமி தகப்பனைத் தூக்கிவாரிப்போட்டது.

அந்தச் சிறுபயல் துணிந்து சொல்வது உண்மையோ, அல்லது மாருகத் தோன்றுவது தன் செவியின் குற்றமோ என ஐயுற்ருன். ரோகிணிக்குப் பித்துப் பிடித்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். இல்லையெனின் அவ்விடத்திலேயே அவனை வாளுக்கு இரையாக்கியிருப்பான். பித்தனென்ற நினைப்பில் அவனை வெளியே விரட்டி இனிமேல் மாளிகையை அணுகா வண்ணம் எச்சரித்து ஓட்டிவிட்டான்.

ரோகிணி, தலை பிழைத்தது தாலிப் பாக்கியமென்று சந்தோஷங் கொண்டான். மேற் செய்யவேண்டுவது ஆலோசிக்கு முன் சாப்பாட்டுக்கு வகைதேடுவது அவசியமென்று அறிந்து, உபயோகமுள்ள ஒரு தொழிலும் கற்பிக்கப்படாத ரோகிணி ஊருக்குச் சுற்றுப்புறத்தில் வேட்டையாடிக் காலங்கழிக்கலானுன். ஊடேயூடே ஊருக்குள் வருவதும், மற்றக்காலங்களில் வேட்டையாடித் திரிவதுமாக அவன் கொஞ்சநாள் போக்கினுன். திரும்பவும் தன் காதலியைச் சந்திக்கக் கிடையா விடினும், அவள் வேலைக்காரி குருவை அடிக்கடி கண்டு பௌர்ணமிக்குத் தன் காதல் கனியை அனுப்பிக்கொண்டிருந்தான். இப்படி நாளைக் கடத்துவது ஆபத்தென்று கண்ட வேலைக்காரி, பௌர்ணமியைக் கடத்திக்கொண்டு எங்கேயாவது செல்லாவிடின் ரோகிணியின் கதி இலவுகாத்த கிளிபோலாகுமென்று எச்சரித்தாள். தன் காதலிக்குத் தக்க இடம் அரண்மனையாயிருப்பத் தனக்குக் குடிகஞ்சிக்கும் வகையில்லையே என்று அவன் ஏங்க, அதைப் பௌர்ணமியுடன் கலந்து "அன்பிருக்கும் இடத்தில் குடிசையும் அரண்மனையாம், கூழும் அமிர்தமாம்" என்று வேலைக்காரி வந்து தெரிவித்தாள். ஆகவே, குருவினுடைய உதவியைக்கொண்டு, யாருமறியாமல், ரோகிணியும் பௌர்ணமியும் ஊரைவிட்டு நடந்தார்கள்.

மறுநாள், மகள் காணுமற்போனது கண்டு கோபவெறி கொண்ட தகப்பன், அவளைத்தேடி எங்கும் ஆளனுப்பினுன். ரோகிணியுடன் ஓடிவிட்டாளென்று அவன் அறிந்திலன். வீடு விட்டு ஒன்றிரண்டு நாளாகிவிட்டபடியால் தேடிச்சென்றவர் அவளைக்காணுது திரும்பினர். கரந்து சென்ற காதலர் இருவரும் நெடுந்தூரம் குதிரைகளை நடத்தி, ஆடு மேய்த்துத்திரியும் ஒரு கூட்டத்தாருள் மறைந்து, தங்கள் விலையுயர்ந்த குதிரைகளையும் பௌர்ணமி ஆபரணங்களையும் விற்றுச் சில ஆடுமாடுகள் வாங்கி அவர்களோடு அலைந்து யாதொரு கவலையுமின்றி மிகவும் சந்தோஷமாய்க் காலங்கழித்தார்கள். அந்நாட்டு நாகரிகத்தில் முதன்மையராய், பிறவி முதலே மிகுந்த செல்வராய் பலபணியாளருடன் சுகவாசிகளாய் வாழ்ந்திருந்த இருவரும் தமக்குள்

கொண்ட காதல் காரணமாக, வெறும் ஆடுமாடுகளோடு ஆடு மாடுகளாக, வீடுவாசல்களின்றிச் செல்லும் இடங்களில் சிறு குடிசைகளை அமைத்துக்கொண்டு, அங்குள்ள மேய்ச்சல் காடு தீர்ந்தவுடன் அடுத்த காடு தேடிச்செல்லும் மக்களுக்குள், திருப்தியோடிருந்தார்களானால், பழைய ரோகிணி இவ்வளவு தூரம் தன்னை மறந்தது மிகவும் அதிசயிக்கத்தக்கதே. பௌர்ணமியின் தூயதன்மையையும், வேசையர் வாய்ப்பட்ட வீணனாகிய தனக்காக, அவள் பெற்றோரையும் செல்வத்தையும் விட்டு வந்ததையும் எண்ணி எண்ணி ரோகிணி தன் மனைவியைத் தெய்வமாகவே கருதுவான். கள்வரிடமிருந்து தப்புவித்த தைரியத்தையும், தனக்காக அவன் தாயபாகத்தையும் உதறி, உயிரையும் பொருட்படுத்தாமல் தன் மாளிகை தேடி வந்ததையும் நினைத்து நினைத்து, பௌர்ணமி கணவன்மேல் ஆர்வங்கொள்வாள். இப்படி இன்பகரமாக வாழ்ந்து மூன்று மக்களையும் பெற்றார்கள். அவர்களில் மூத்தவன் பழைய அமாவாசன்.

அந்நாளில் அவர்கள் தங்கியிருந்த இடத்தருகே இரண்டு ஊரார் தமக்குள் போர்புரிந்துகொண் டிருந்தார்கள். போர் வீரனாகவே பயிற்றப்பட்டிருந்த ரோகிணியும் அதில் கலந்து கொள்ளப் பிரியப்பட, அவனை விரும்பி ஏற்றுக்கொண்ட ஒரு திறத்தாருடன் கூடிச் சண்டைக்குச் சென்றான். அவன் பக்கம் வெற்றிபெறவும், அதில் அகப்பட்ட பெருங்கொள்ளையில் ரோகிணிக்கும் ஒரு தக்க பங்கு கிடைத்தது. அத்துடன் அவ்வூரிலேயே தங்கி, வீடு வாசல்கள் அமைத்து, சீக்கிரத்தில் செல்வத்திலும் செல்வாக்கிலும் உயர்ந்தான். அங்கு வேறிரு மக்களையும் பெற்றான்.

இதற்கிடையில் ரோகிணியும் பௌர்ணமியும் ஒன்றாக ஓடிவிட்ட வரலாறு அவர்கள் ஊருக்கு எட்டியது. ரோகிணியின் குடும்பத்தாருக்கு உண்டான கோபத்திற்கு எல்லையில்லை. பரம்பரைப் பகையாளி வீட்டில் பெண்ணெடுத்துத் தங்களை மானபங்கப் படுத்தியதாக மனம் நொந்தார்கள். தங்களுடைய கௌரவம் முழுவதும் அழிந்துபோனதாகக் கொதித்தார்கள். உயிர்ப்பழி யொன்றே இந்த மானபங்கத்திற்குப் பரிகாரம் என்று கருதிய ரோகிணியின் தகப்பனாகிய அஸ்தன் தன் இளையமகன் ராகுவை ஏவி, ரோகிணி எவ்விடத்திலிருப்பினும் எவ்விதத்திலேனும் அவன் தலையை வாங்கிவரும்படி அனுப்பி விட்டான். ராகுவும் நெடுங்காலமாக நாடுங் காடும் அலைந்து அலுத்துக், கடைசியாகத் தமையன் இருக்கும் ஊர் வந்து சேர்ந்தான். அவ்வூரார் தக்க வலிமையுள்ள வீரராயும் கடும்போர் மக்களாயும் இருந்தபடியாலும், அவர்களுக்குள் ரோகிணியும்

ஒரு இனத்தவனாகவே கருதப்பட்டபடியாலும், அவனை நேரே எதிர்த்து ராகுவுக்கு ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆதலின், அவ்வூர்க்கருகாமையிலிருந்த ஒரு திருடர் கூட்டத்தில் கலந்து, தக்க சமயம் பார்த்துக் காத்திருந்தான்.

ரோகிணியிருந்த ஊரையடுத்து ஒரு பள்ளத்தாக்கு. அதைச்சுற்றி நாலுபுறமும் மலைகள். பள்ளத்தாக்கிலிருந்து வெளிக்கிளம்பும் நதிக்கரை யொன்றே உள்ளே செல்லும் வழி. அந்த வழியைக் குறுக்கே அடைத்து அரணாக்கி, உள்ளே ஒரு கொள்ளைக்காரக் கூட்டத்தார் குடியிருந்து வந்தனர். நதிக்கரை வாயில் நன்கு காக்கப்பட்டிருந்தபடியால், அத் திருடரை உட் சென்று ஒருவருக்கும் வெல்லமுடியாதிருந்தது. ராகு இவர்க ளுடைய உதவியைக்கொண்டு ரோகிணியைக் கொலை செய்து விடுவதென்று தீர்மானித்துக்கொண்டான். ஒரு நாள் ரோகிணி தனியாக அவ்வழியே செல்வதைக்கண்டு மாறு வேஷங்கொண் டிருந்த ராகுவும் வேறிரண்டு திருடரும் அவனைத் தாக்கினார்கள். ரோகிணி நல்ல பயிற்சியுடைய போர்வீரனாகையால், ஒருவனைக் கொன்று, மற்ற இருவரையும் காயப்படுத்தி விரட்டினான். தனக்கும் கொஞ்சம் காயம்பட்டதாயினும் தன்னைத் தாக்கின வன் தம்பி என்று கண்டிலன். கொள்ளைக்காரர் எப்போதும் போலத் திருட எத்தனித்ததாக எண்ணினனே யொழியத், தன்னைப் பழிவாங்கத் தம்பி வந்திருப்பதாகச் சொப்பனத்திலும் அவன் நினைக்கவில்லை. ஆகையால் அவன் இதை ஒரு பொருட் டாகக் கருதாமல் அஜாக்கிரதையாக இருந்துவிட்டான். ஒரு நாள் ரோகிணியும் மனைவியும் வெளிச்சென்றிருக்கும்போது, அவர்கள் மூத்த மகனாகிய ஏழு வயதான அமாவாசன் காணமற் போயினன். ஊரெங்கும் தேடியும் தென்படவில்லை. அவனே அருமை மகனாகையால் நேரமாக ஆகப் பெற்றோர் இருவரும் சொல்லொணாத் துயரமடைந்தார்கள். பௌர்ணமி புழுப்போலத் துடிப்பதைப் பொறுக்கமாட்டாத கணவன், பையன் உயிரோ டிருப்பானானால், அவனை எவ்விதத்திலும் கொண்டு வருவே னென்று ஒரு பெரிய சபதம் செய்து, வெளியே புறப்பட் டான்.

ரோகிணி வேட்டையில் மிகுந்த பழக்கமுள்ளவனாகையால், அடித்தடம் முதலியவற்றால் பையன் மறைந்த மார்க்கத்தை அறிய உன்னி வீட்டின் நாலா பக்கமும் கூர்ந்து நோக்கிவரும் போது, கதவண்டையில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு இரும்புக் கவட்டில் ஒரு ஊதாநிறக் கந்தல் துண்டும், தன் மகன் அணிந் திருந்த உடையில் அறுபட்ட நூல்களும், தொங்கிக்கொண்டி ருந்தன. அந்தக் கவடு தோளெடுப்புக்குமேல் தொங்கிக்

கொண்டிருந்தபடியால், பையனை வாயை அடைத்து யாரோ தோளில் தூக்கிக்கொண்டு போயிருக்கவேண்டுமென்றும், அப்போது திருடன் கைச்சட்டையிலிருந்த ஊதாத் துண்டும், பையன் உடையிலிருந்த நூல்களும், இரும்புக்கவட்டால் இழுபட்டுக் கிழிந்தவை என்றும் அநுமானித்தான். ஊதாத் துணியை எடுத்துச் சோதிக்கும்போது, அதில் நாவுரி போன்ற ஒருவகை முள் இலை ஒட்டிக்கொண்டிருந்தது. அது திருடர் வசிக்கும் மலையரணுக்கு வெளியே, ஆற்றோரத்தில், ஒரு சதுப்பு நிலத்திலேயே வளர்வது. ஆகையால் மகன் திருடர் வசமேயிருப்பதாகத் தீர்மானித்தான். ஆயினும், அவர் இருக்கும் அரணுக்குள்செல்ல அவ்வூரில் யாருக்கும் துணிவில்லை. முயற்சிப்பவர் உயிரோடு திரும்பாரென்பது உறுதி. வேறு விதத்தில் அவர்களைத் தாக்க வழியும் அறிந்திலர்.

"மனமுண்டானால் இடமுண்டு" என்றபடி, ஆத்திரம் மிகுந்த ரோகிணி, எவ்விதத்திலும் வழியமைக்க வேண்டுமென்ற உறுதியுடன், தனியே யாருங்காணாமல் திருடர் மலையைச் சுற்றிவரும்போது, மலையுச்சிக்குக் கொஞ்சம் பிரயாசையோடு ஏறக்கூடிய வழியொன்றைக் கண்டுபிடித்தான். உடனே, இன்னின்னவிதத்தில் எதிரிகளைத் தாக்கவேண்டுமென்பது அவனுக்கு விளங்கிற்று. திரும்ப ஊருக்குள்வந்து மிகுந்த பொருளைக் கொடுத்து, துணிவும் தீரமும் உள்ளவராக ஒரு கூட்டம் போர் வீரரைத் தயாரித்தான். அந் நாட்டில் யாரும் பார்த்திராததான நூலேணி ஒன்றையும் தயாரித்தான். அதாவது, இரண்டு பலத்த கயிறுகளைச் சட்டமாகவும் இடையில் கம்புகளைப் பழுவாகவும் வைத்துக் கட்டிச் சுருட்டிக்கொண்டான். எண்ணெய்ப் பந்தங்களும் பலவற்றைத் தயாரித்துக்கொண்டான். இன்னும் போருக்கு வேண்டிய வில், வாள், கவண் முதலிய ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, இரவே சென்று, முன் பார்த்துவைத்திருந்த வழியாக மலைமேலேறினார்கள். விடியுமுன் உச்சிக்குச்சென்று பல பெருங்கற்களை உருட்டி உயரக் குவித்தார்கள். எல்லா ஏற்பாடும் பூர்த்தியாகுமுன், பள்ளத்தாக்கில் திருடன் ஒருவன் மலையுச்சியில் மனிதரைக் கண்டுவிடவே, அவன் கூக்குரல் கேட்டுத் திருடர் பலர் விழித்து வெளியே ஓடிவரவும், ரோகிணி ஏற்பாட்டின்படி ஆற்றின் குறுக்கேயிருந்த அரண்வாசலில் ஒரு கூட்டம் அவரை வலிந்து தாக்கிற்று. பாரக்கற்களைக் கீழே உருட்டியும், பந்தங்களைக் கொளுத்தித் திருடர் கூரைகளில் வீசியும், மலைமேலிருந்த மனிதரும் தாக்கினர். பள்ளத்தாக்கில் பெருங் குழப்பமாயிற்று. வீடுகள் பற்றியெரிந்தன. கற்களால் பலர் சதைந்தனர். வில்லையும் அம்பையும் தவிரத் திருடருக்கு

வேறொன்றையும் உபயோகிக்க வழியில்லை. மேல் நின்றவர் பாறைகளுக்குப்பின் பதுங்கிக்கொண்டபடியால், அவையும் அதிகப் பலன்படவில்லை. இதற்குள் ரோகிணி, உயரப் பிணித்திருந்த நூலேணியைக் கீழே வீசித் தானே முதலில் அதன்வழியாக இறங்கி, அதை இழுத்து அடியில் இறுகக் கட்டிவிட்டான். மேலிருந்தவரெல்லோரும் மொலேலென்று உள்ளே இறங்கி வரவும், பள்ளத்தாக்கில் இருதிறத்தாருக்கும் மல்யுத்தம் தொடங்கிற்று. எதிர்பாராமல் தாக்கப்பட்டபடியால், கள்வர் நிலைக்க முடியாமல் எல்லோரும் இறந்துபட்டார்கள்.

கலகத்தினிடையில் முன்கண்ட ஊதாத் துணிக்காரன் தென்படவே, ரோகிணி ஓடிச்சென்று ஒரே வெட்டில் அவனை வீழ்த்தினன். அவன் முகத்தை மறைத்திருந்த தலைப்பாகையை இழுக்கவும், தன் கையால் இறந்தவன் தம்பியெனக்கண்டு மனம் பதறினன். எனினும் மகனைக்காணும் ஆவலில் அங்குத் தாமதிக்காமல் குடிசைகளைச் சென்றுதேட, அமாவாசன் யாதொரு ஆபத்துமின்றி உயிரோடிருக்கக்கண்டு அடங்காத மகிழ்ச்சி கொண்டான். மகனை மார்போடணைத்துத் தோளிலேற்றி, அவனைப்போலவே அடைபட்டிருந்த பிள்ளைகள், பெண்கள்பலரையும் விடுவித்து, ஊர்வந்து பௌர்ணமிகையில் மகனை ஒப்புவித்தான். அதுவரை எல்லாம் இன்பகரமாகவே நடந்ததெனினும், தம்பியைக்கொன்ற கவலை ரோகிணியை அன்றுமுதல்பிடித்தது. உடன்பிறந்தோரைக் காரணமின்றிக் கொல்வது அந்நாட்டில் நிந்திக்கப்பட்ட ஒரு குற்றம். ராகுவானவன் தமையனைக் கொல்ல வந்தானென்பது யாருக்குந் தெரியாது. அறியாமல் கொன்றது குற்றமாகாதென்று பௌர்ணமி எவ்வளவோ தேற்றியும் அவன் மனம் சமாதானப்படவில்லை. அத்துடன் "உடன்பிறந்தானைக் கொன்ற பழியன்", என்று அவ்வூரார் ரோகிணியைக் கண்டு ஒதுங்கத் தொடங்கவும், கணவனும் மனைவியும் அவ்வூரை விட்டுக் கிளம்பிவிடுவதென்று தீர்மானித்து, இருவரும் தமது உறவினரைப் பிரிந்து நெடுநாளாகிவிட்டபடியால் தாங்கள் பிறந்த நாடே செல்வதென்று புறப்பட்டார்கள். ரோகிணி வெளியில் சொல்லாவிடினும், மனதுக்குள் "தகப்பனிடஞ் சென்று தன் குற்றத்திற்குப் பரிகாரமாகத் தன்னையே ஒப்புக் கொடுத்துவிடுவோம்" என்ற எண்ணத்திலேயே ஊரை நோக்கினன்.

ராகு தமையனைத் தேடிப் புறப்பட்டதற்குப் பின், பரம்பரைப் பகையாளர் இரு 'குடும்பத்தாருக்கும் நேர்ந்த சச்சரவொன்றில், ரோகிணி வகையார் ஆண்மக்கள் அநேகமாய் இறந்து போனர்கள். ரோகிணியே இப்போது குடும்பத்தில் மூத்தவனாக மிஞ்சினவன். ரோகிணியும் மனைவி மக்களும் ஊர் வந்து செய்

தியை அறிந்ததும், குடும்பச் சொத்தை முதலில் கைப்பற்றினர்கள். தம்பியைக்கொன்ற விபரத்தை வெளியிடுவதில் யாதொரு உபயோகமு மில்லையென்று எடுத்துக்காட்டி, பௌர்ணமி அப்பேச்சை நிறுத்திக் கொண்டாள். தன் குடும்பத்தார் இழந்த மானத்தைக் காப்பாற்றும்பொருட்டுப் பௌர்ணமி வீட்டாரைப் பழி வாங்கவேண்டியது பெரியகடன், என்று தன் இனத்தவர் எவ்வளவு சொல்லினும் ரோகிணி அதைச் செவிக்கொள்ளவில்லை. அதற்குக் காரணமும் பௌர்ணமி என்பது சொல்லாமலே விளங்கும்.

ரோகிணி 58-வது வயதுவரை உயிரோடிருந்தான். பிறந்த ஊர் திரும்பியபின் அதிக அலைச்சல் திரிச்சலின்றி ஒருமாதிரி அமைதியாகவே காலங்கழித்து, ரோகிணி முன்னும் பௌர்ணமி பின்னுமாக, இடையீடு அதிகமின்றி, இருவரும் விண்ணுலகஞ் சென்றார்கள்.

குறிப்புகள்: கோடிவழி அட்டவணையைக் கூர்ந்து நோக்குவோருக்கு ஒரு உண்மை நன்கு புலப்படும். அதாவது, உற்றார் உறவினர் தமக்கு எவ்வளவு தீமைகள் செய்யினும், அவற்றைப் பொறுமையோடு சகிக்கவேண்டு மென்பதே. நாம் செய்யும் வினைகள் இருவகைப்படும்: ஒன்று பொதுவினை, மற்றது சிறப்புவினை. நெருங்கிய பழக்க மில்லாதோருக்குச் செய்த சிறுவினைகள், பின் தொடர்பில்லாமல் அப்போதே மறக்கப்படுமாகையால், அவை பொதுவினைகள். வீட்டில் வருகிற பிச்சைக்காரனைப் பார்த்து "தடிபோலிருக்கிறனே, சோம்பேறி" என்று நினைத்தாலும், அதற்காக அவனை வெறுத்தாலும், வெறுப்பினல் அவனை ஏசிப்பேசி விரட்டினாலும், அது பொதுவினையாகும். அதற்குப் பதில் வேறு யாராவது, எப்போதாவது காரணமில்லாமலே நம்மை ஏசிப்பேசி அவமானப்படுத்தி விடுவார்கள். அமைதியான தடாகத்தில் ஒரு சிறு கல்லும் அசைவை உண்டுபண்ணுவது போல நம்முடைய ஒவ்வொரு நினைவும் வாக்கும் செய்கையும், எவ்வளவு அற்பமாயினும், அதற்குத் தக்க பலன் கொடாமற் போகாதென்பது உறுதி. மேற்சொன்ன சிறுவினைக்குப்பதில், அப் பிச்சைக்காரன் வாழ்நாள் முழுவதும் இன்பமோ துன்பமோ எய்தும்படியான ஒரு பெருவினையைச் செய்துவிட்டால், அது உடனே சிறப்புவினை யாகிவிடும். அதாவது அவனே திரும்ப நேரேவந்து அதற்குரிய கடனைத் தீர்க்க வேண்டிவரும். அந்தப் பிச்சைக்காரனுக்கு மிகுந்த செல்வத்தைக் கொடுத்துவிட்டால், அல்லது அவன் கால் கையை ஒடித்துவிட்டால், அது சிறப்புவினை. அவன் திரும்பக் கடன் தீர்க்க வரும்போது, நெருங்கிய பழக்கத்தினல் மேலுக்கு மேல் கொடுக்கல் வாங்கல் வளருமாகையால், அவன் நன்மைக்கோ, தீமைக்கோ நம் உற்றார் உறவினருள் ஒருவனுய்விடுவான். சிறப்புவினை வரும் வேறுவழி, இருவருக்குள் நெருங்கிய தொடர்பு. பல நூல்கள் பின்னிப் பலத்த கயிறுவதுபோல அடிக்கடி பழகுவதால், பல சிறு வினைகள் கூடிப் பலமான நட்பு வெறுப்புக்களும், வாஞ்சைகளும், விரோதங்களும், காதல்களும், சண்டைகளும், பந்தாட்டம்போலத் திரும்பத் திரும்ப நேரிட்டு, ஒரு கூட்டத்தாருக்குள் உள்ள வினைத் தொடர்புகளை, யானைகட்டும் கயிறுபோலப் பலப்படுத்திவிடும்.

அவர்களே, நமது பிறப்புகளில் திரும்பத் திரும்ப வரும் மனைவி மக்களாகிய உற்றாரும், சுற்றத்தாராகிய உறவினரும். ஆகாத மனைவி மக்களும் சுற்றத்தாரும் நமது தீவினைப்பலன். அன்புடைய மனைவி மக்களும் சுற்றத்தாரும் நமது நல்வினைப் பலன். "உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம், உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்பது உடன் பிறந்தாருடைய குற்றமல்ல. அவர்கள் நமக்கு வியாதியாக வருவது, முற்பிறப்புகளில் நாம் அவர்களுக்குச் செய்த தீவினையின் விளைவே தவிர, அவரைக் குறை கூறுவது அறியாமை. எனெனில், ஒரு உடற்பிறப்புக்கு வியாதியாக வருபவன் மற்றொரு உடற் பிறப்பிற்கு மருந்தாக இருப்பது உலக அனுபவம். ஆகையால், நம் மனைவி மக்கள், சுற்றத்தார், நமக்கு நன்மை செய்யும்போது, அதை மிகுந்த நன்றியுடன் ஏற்று, பதிலுக்குப் பன்மடங்கு அதிகமாக அவர்களுக்கு நன்மைசெய்தும், அவர்கள் நமக்குத் தீமை செய்ய நேரிட்டால், நாம் முன் அவர்களுக்குச் செய்த தீவினைக்கடன் கொடுபடுகிறதென்று மிகுந்த பொறுமையுடன் சகித்து, மேலுக்கு நாம் நன்மையை மாத்திரமே செய்வோமானால், சீக்கிரத்தில் நமது பழவினைகள் தீர்ந்து, சமுசார பந்தம் நீங்கிப், பேரின்பம் பெறுவோம். வினைக்கடன்கள் தீருகிறவரை, எத்தனை தடவை நாம் குடும்பத்தை வெறுத்துச் சன்னியாசிகளாய் அலைந்தாலும், திரும்பவும் அவர்களுக்கிடையில் வந்து பிறக்காமல் தீராது. இந்த உண்மையை உணராது, அவர்கள் நன்மை செய்யும்போது மாத்திரம் நாமும் அன்புசெய்து, அவர்களால் தீமை நேரும்போது அவரை வெறுத்துப் பழிக்குப் பழிவாங்க முயல்வது, ஒரேகுளத்தில் வளைய வளையவந்து சேற்றைக் கலக்கி நீரில் முழுகிப்போவது போலாம். வலைக்குள் அகப்பட்ட பறவை அறிவோடு வெளியாக முயலவேண்டும். அல்லாமல் சிறகையும் காலையும் போட்டடிக்குமானால், கண்ணி இறுகிப் பின்னல் அதிகப்படும். செய்த வினைகளைத் தாமே அனுபவியாமல் தப்பிக் கொள்ளலாமென்று ஒருவரும் நினைக்கவேவேண்டாம். கடவுளுடைய நியதி மனிதனுடைய சட்டங்கள்போலல்ல. எவராலும் அதை ஏமாற்றமுடியாது. இயேசுகிறிஸ்துநாதர் சொன்னபடி, "கடவுள் ஏமாந்து போகமாட்டார். அவனவன் விதைத்ததை அவனவன் அறுத்தே தீரவேண்டும்" என்பதே உண்மை. இந்த உண்மையை அறிந்து, உற்றார் உறவினருடன் தம் ஒழுக்கத்தை அவ்வுண்மைப்படி அமைத்து, இந்நூலைக் கற்போர் மேன்மை பெறுவாராக.

கோடி வழி—X

அஸ்தம்: (தகப்பன்) வியாழன். (தாய்) மகம். (மனைவி) ஐப்பசி (மகன்) ரோகிணி, ராகு. (மகள்) சனி.

ரோகிணி: (மனைவி) பௌர்ணமை. (மகன்) அமாவாசன்.

சனி: (கணவன்) உத்திரம். (மகன்) அவிட்டம். (மகள்) ஆனி.

புனர்பூசம்: (மனைவி) சித்திரை. (மகள்) மகம்.

நவமி: (மனைவி) பரணி. (மகள்) ஐப்பசி.

அஷ்டமி: வேசி.

தரு: பௌர்ணமி வேலைக்காரி.

11. கானடா — ஆண்

கி. மு. 14507 — கி. மு. 14451

வயது : 56 - பின் பிதுருலகவாசம் : 780 ஆண்டுகள்

வட அமெரிக்காவில், இப்போது கானடா என்ற நாட்டின் தென்பாகத்திலுள்ள பல பெரும் ஏரிகள், பண்டு இன்னும் பெரியவைகளாயிருந்தன. பதினாறுயிரம் ஆண்டுகளுக்குமுன் இவற்றையடுத்துக் குடியிருந்தவர்கள், இக்காலத்து எஸ்கிமோ போன்ற ஒருவகை ஜாதியார். கறுத்துக் குள்ளமான, பலத்த, உடம்பை உடையவர். ஊரென்று ஓரிடமில்லாதவர். குழுவர் போன்று குடிலைத் தூக்கிக்கொண்டு இடம் இடமாய் வேட்டை தேடி அலைபவர். குளிர்மிகுந்து எங்கும் பனி மூடிய காலத்தில் தெற்கு நோக்கியும், வேனிற்காலத்து வடக்குநோக்கியும், கூட்டம் கூட்டமாய்ச் சென்று சஞ்சரிப்பவர். அக் கூட்டம் ஒன்றின் தலைவனுக்குப் பிறந்த சித்திரை என்பவள், செவ்வாய் என்பவனை மணந்து ரோகிணியையும், அவனுக்கு ஏழு வயதாகுமுன் இரட்டையும் ஒற்றையுமாக வேறு ஆறு பிள்ளைகளையும் பெற்றெடுத்தாள். செவ்வாய் வெறும் முரடன். யார் எக்கேடு கெட்டாலும் தன் சௌகரியம் குறையாமல் நடக்கவேண்டுமென்ற ஒரே கொள்கையை உடையவன். குடும்பம் பெருகப் பெருக, தான் ஒருவன் வேட்டையில் கொண்டுவருவது வயிற்றுக்குப் போதாமைகண்டு, சித்திரையம்மாளைத் தினந்தோறும் அடிப்பதும் துன்பப் படுத்துவதுமானான். தாயையும் தனக்கிளையோரையும் நேசித்த ரோகிணி, தன் தகப்பன் கொடுமையைக்கண்டு முதலில் அவனுக்குப் பயந்து, வயதாக வயதாக அவனை வெறுக்கத் தொடங்கினான்.

கொஞ்ச நாளில், செவ்வாய் வேறொரு பெண்ணைக்கண்டு காமுற்று, சித்திரையை வீட்டைவிட்டு விரட்டி மற்றவளை மணந்துகொண்டான். அந்தஅம்மாள் முன்னைய அஷ்டமி. ஊர் வழக்கப்படி பிள்ளைகள் செவ்வாயுடனே இருந்தனவாகையால், மணமாகுமுன் அப் பிள்ளைகளைப் பாதுகாப்பதாக ஒப்புக்கொண்ட அஷ்டமி, வீடுவந்ததும் அவர்களை வெறுத்து அடித்துத் துன்புறுத்தலானாள். ரோகிணிக்குத் தகப்பனையும் மாற்றாந்தாயையும் தின்றுவிடலாமென்றிருந்தது. வயிறுநிறைய உண்ண வீட்டில் உணவில்லை. தாய்க்குப்பின் அவனை ஆதரிப்பாரும் இல்லாமையால், அவன் கிடைத்த இடத்தில் களவு செய்யத் தொடங்கினான். அடங்கிக்கிடந்த அவன் மிருகத்தன்மை யெல்லாம் மேலெழும்பின. யாரைக் காணினும் வெறுப்புற்றான். தாய்மேலிருந்த பற்றும் நீங்கிவிட்டது. தனக் கிளையோரையும் பகைத்

தான். மனங்கொண்டதே மாளிகையென்று நடந்தான். முறை யல்லாதவற்றைச் செய்யும்போது யாராவது தடுத்தால், அவர் களிடம் கொடுமையாய் நடப்பான். வேறு கூட்டத்தில் சென்று சேர்ந்துகொண்ட சித்திரை யம்மாள், இடையில் பிள்ளைகளைக் காண அவாக்கொண்டு திரும்பியபோது, அஷ்டமி ஏவலின்படி பிள்ளைகளை வீட்டில் மறைத்து அவளை வீட்டை யணுகா வண்ணம் செவ்வாய் விரட்டிவிட்டான். பொறுமையில் சிறந்த சித்திரையும், மனம்புழுங்கித் தன்னையே நொந்துகொண்டு பிள்ளை களைப் பாராமலே சென்றுவிட்டபடியால், அவள் அன்பினுல் ரோகிணி மாறுதலடைவதற்கும் இடமில்லாமற் போயிற்று.

ரோகிணிக்குப் பதினறுவயதாகும்போது அவன் தகப்பன் கரடி ஒன்றினல் பெரும் காயமடைந்து வீட்டுக்குத் தூக்கிவரப் பட்டான். அவன் குணப்பட நெடுங்காலஞ் செல்லுமென்று கண்ட அஷ்டமி, வீட்டில் கிடந்த பொட்டுப் பொடிகளையும் ஆயுதங்களையும் பொறுக்கிக்கொண்டு, செவ்வாயை அவன் தலை விதிப்படி நடக்கட்டுமென்று ஒண்டியாய்க்கிடத்தி வேெருரு இளைஞனேடு ஊரைவிட்டே ஓடிவிட்டாள். செவ்வாயுடன் பேச்சுவார்த்தை யில்லாத ரோகிணியும், தகப்பனிடம் தனக்குக் கடமையில்லையென்று கைவிட்டு ஒதுங்கிக்கொண்டான். இளகிய நெஞ்சையுடைய சித்திரைமாத்திரம், செவ்வாய் ஆபத்தில் கிடப் பதைக் கேட்டதும் விரைந்தோடி வீடுவந்து அவனுக்கு வேண் டிய சிகிச்சைகளைச் செய்துவந்தாள். செவ்வாய்க்குப் பாடுபார்ப் பதிலும், மற்றப்பிள்ளைகளைப் பாதுகாப்பதிலும், எல்லோருக்கும் உணவு தேடுவதிலும், சித்திரை படுஞ் சங்கடங்களையெல்லாம் ரோகிணி கண்டபோதிலும், அவன் தாய்பேரிலும் நம்பிக்கை யற்று, அவள் அன்புக்குங் குழையாமல், மாதக் கணக்காக வீட்டுக்கு வராமலே ஊருக்குள் திரிவான். வேட்டையில் கிடைத்ததை வீட்டுக்குக் கொண்டுவராமல் அவன் விரும்பிய இடத்தில்கொண்டு கூட்டாளிகளுடன் உண்பான். பட்டினி கிடக்கும் தாயையாவது இளையோரையாவது சிறிதும் கருதுவ தில்லை. அதோடு நில்லாமல், அவ்வளவு இளம்பருவத்திலேயே அவன் அண்டைவீட்டிலிருந்த சதுர்த்தியென்ற சிறுமியைக் கற்பழித்துவிடவும், அது ஊரில் பெருங்குழப்பத்தை உண்டு பண்ணவே, எல்லோரும் பொதுக்கூட்டம் கூடி, இருவரும் சிறுவ ராயிருப்பினும் வேறு வழியில்லையென்று ரோகிணியைப் பலவந் தப்படுத்தி இருவருக்கும் மணம் முடித்து வைத்தார்கள். வீட்டி லுள்ளவருக்கே முன்னம் உண்ண வகையில்லாதிருக்கும்போது, சதுர்த்தியையும் கொண்டுவந்து கூடச் சேர்த்து, ரோகிணி வெளிக்கடந்து பழையபடியே பொறுப்பில்லாதவனுய் ஊருக்குள்

திரிவானாயினான். சிக்கிலிருந்து தேறிய தகப்பன் இதனால் மிகக் கோபங் கொண்டானாயினும், பண்டைய வலுவில்லாமையால் ரோகிணியை ஒன்றுஞ்செய்ய இயலாதிருந்தான். சித்திரை மாத்திரம் அன்புமிகுதியால் எல்லாவற்றையும் சரிப்படுத்திக் குடும்பச்சுமையைக் கூடியவரை வகித்துவந்தாள். ரோகிணி, காமமுற்றபோது மனைவியைத் தேடிவருவதும், மற்ற வேளைகளில், தான் விரும்பாத பாரத்தைத் தலையில் ஊரார் ஏற்றிவிட்டார்களென்று பிறரை நொந்துகொண்டு வெளியே அலைவதுமாகக் காலங்கழித்தான். கடைசியாக இருபத்துநான்கு வயதாகும் போது பெற்றோரையும் மனைவியையும் தான் பிறந்த கூட்டத்தையும் விட்டு வேறிடம் சென்றான்.

சென்ற இடத்தில் ரோகிணி வேட்டையில் வல்லவனானான். வேட்டைத் தோல் வியாபாரத்திலும் அவன் வல்லவனானான். அதிலிருந்து, செல்வாக்கில் உயரவேண்டுமென்ற ஆவல் அவனுக்குண்டாக, அதற்குரிய வழியென்றுன்னி அவ்வூரில் ஒரு பெரிய வீட்டுப் பெண்ணை மணந்துகொண்டான். அந்த அம்மாள் பெயர் ஆனி. அவள்மேல் அவன் காதல்கொள்ளவில்லையாயினும் அவளிடம் பிறந்த இரு மக்களிடமும் மிகுந்த அன்பு வைத்திருந்தான். அவர்களில் ஒருவன் முன்வினைத் தொடர்ச்சியுள்ள தசமி. பெற்றோரையும் பழைய மனைவியையும் மறந்து இவர்களுடன் சுகமாகவே வாழ்ந்தானாயினும், இந்த நற்காலம் நிலைக்காமல், குழந்தைகள் ஏழும் ஐந்தும் வயதாயிருக்கும் போது ஆனி உயிர்துறந்தாள். அதனால் பிள்ளைகளைப் பாதுகாக்க ஆளில்லாமல் கவலைகொண்டிருக்கும்போது, அவன் பிறந்த கூட்டத்தார் அவ்வழியேவர, அவருள் தகப்பன் இறந்துபோனதையும் தாயும் மனைவியும் தரித்திரதசையில் காலங்கழிப்பதையும் கேள்வியுற்று, ரோகிணி குழந்தைகளை இட்டுக்கொண்டு அவர்களிடம் சென்றடைந்தான். தன் மூத்த மகன் மேல் நீங்காத பற்றுவைத்திருந்த சித்திரை, ஆவலோடு அவனையும் பிள்ளைகளையும் ஏற்றுக்கொண்டாள். ரோகிணியும் பழைய மனைவியை ஏற்றுக்கொண்டான்.

குடும்பச் சுமையாலும் வறுமைப் பிணியாலும் முன்னமேயே தளர்ந்துவிட்ட சித்திரை, ரோகிணிக்கு முப்பத்துநாலாவது வயசில், "கணவனும் மகனும் தன்னுடைய அன்பை ஏற்று ஆதரவடைந்தார்கள்" என்ற திருப்தியுடன் உயிர்நீத்தாள். ரோகிணியும் சதுர்த்தியுடன் இருபதாண்டுகளுக்கு மேலாகவே சுகமாக வாழ்ந்திருந்து, அவனுடைய 56வது வயதில் இறந்தான்.

குறிப்புகள்: பள்ளியில் சேர்ந்த பையன், ஒவ்வொரு வகுப்பிலும் தவறாமல் தேறிக்கொண்டே போவானாயின், மிகுந்த துன்பமின்றிப்

படிப்புமுடிந்து பலனடைவான். உலகப்பள்ளியிலும் ஆன்மா ஒவ்வொன்றும் கற்கவேண்டிய பாடங்கள் அறிவு, அன்பு, ஆற்றல் என மூன்றும். அறிவாவது உலக அறிவும் ஒழுக்க ஞானமும். அன்பாவது நீ, நான் என்ற வேற்றுமையில்லாது எல்லா உயிர்கள்மேலும் ஒன்றுபோல் கொண்ட காதல். ஆற்றலாவது அடைந்த அறிவையும் அன்பையும் செய்கைப்படுத்தும் வலிமை. பொதுவாக அறிவைப் பெருக்குவது ஆணுடம்பு; அன்பைப் பெருக்குவது பெண்ணுடம்பு. அததற்குரிய ஆற்றலும் முயற்சிக்குத் தக்கபடி இரண்டு உடம்பிலும் பெருகும். மேல் வகுப்பு எய்த எய்த, ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி, எந்த உடம்பாயினும் மூன்றும் ஒன்றுபோல் பெருகும். இந்த முறையைக் கல்வி கேள்விகளால் நன்கறிந்து, தான் இருக்கும் வகுப்பையும் ஆராய்ந்து, நேரத்தை வீண்போக்காமல், தனக்குப் பழவினையாலமைந்த இடம், பொருள், ஏவலுக்குள் எய்துமட்டும் மேற்சொன்ன அறிவையும் அன்பையும் ஆற்றலையும் பெருக்க முயற்சிப்பவன், ஒவ்வொரு பிறப்பிலும் உயர்ந்துசென்று, மேன்மையுற்று முத்திநிலையை அடைவான். அல்லாமல், தன்நிலையில் அதிருப்தியுற்றவனாய், "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்ற பொய்த்தோற்றம் போலப் பிறருடைய நிலையைக்கண்டு அவாவி வாழ்நாளை வீண்போக்குபவன், விரும்பியநிலை வந்தெய்தும்போது வேறு நிலையை அவாவுவான். ஏனெனில் உலகநிலை எத்தன்மைத்தாயினும், அது நிலையாதது; நிலையுள்ள இன்பத்தைக் கொடுக்க மாட்டாதது. ஆகையால், உலக சௌகரியத்தினால் பேரின்பத்தை அடையலாமென்ற மயக்கத்தில், உள்ள சௌகரியத்தை உபயோகப்படுத்தாமல் இறப்பவன், கீழ் நிலைகளில் மாறிமாறிப்பிறந்து, வினை என்னும் ஆசானால் விரட்டியடிக்கப்பட்டு, கண்ணீரும் கம்பலையுமாய்ப் பாடத்தைக் கற்பான். அது ரோகிணியின் சரித்திரத்தில் நன்கு புலப்படும். கற்போர் தமது வாழ்நாளிலும் இங்ஙனம் நேராது காத்துக்கொள்வாராக. மேற்சொன்ன பாடங்கள் வேண்டாமென்று ஒதுங்கிக்கொள்வது யாருக்கும் இயலாது. அது மனிதன் கையிலில்லை. எல்லா ஆன்மாக்களும், ஏன், அண்ட பிண்ட சராசரங்கள் யாவுமே பரிணமமுறை, அல்லது விகாசமுறை (Evolution), என்ற வளர்ச்சிமுறைக்குக் கட்டுப்பட்டனவாம்.

கோடி வழி—XI.

ரோகிணி : (தகப்பன்) செவ்வாய்.
(தாய்) சித்திரை. (மாற்றாந்தாய்) அஷ்டமி.
(மனைவிகள்) 1. சதுர்த்தி, 2. ஆனி. (மகன்) தசமி.

12. போஸிதானிஸ்தீவு—பெண்

கி. மு. 13671—கி. மு. 13633.

வயது : 38 - பின் பிதுருலக வாசம் : 1543 ஆண்டுகள்

கி. மு. 13671-சுமார் 3600 வருஷங்களுக்குமுன் ஆணாகப் பிறந்து, அஷ்டமிக்காகச் சதயத்தை அடிமையாக விற்று, பின் தானும் அவளால் அடிமைப்பட்ட போஸிதானிஸ் பெருந் தீவிலேயே, இப்போது ரோகிணி பெண்ணாகவந்து பிறந்தாள்.

அத்ரியின் பலபாகங்களில் பலவகைச் சாதியார் வாழ்ந்து வந்தனர். அவருள், ரோகிணி முன்பு பிறந்தது அக்காடியர் என்ற மக்கள் கூட்டத்தில்; இப்போது பிறந்தது தலவத்லியர் என்ற வேறொரு பிரிவினருள். எல்லோரும் அத்லாந்திய மக்களே. மேற்சொன்ன ஆண்டில் ஆயிலியன் அந்த தலவத்லியருக்கு அரசனாயிருந்தான். அவன் மனைவி கேட்டையம்மாள். அவர்களுக்குப் பிறந்த பெண்குழந்தை ரோகிணி, அரசகுடும்பத்திற் கேற்ப மிகுந்த அழகுள்ளவளாயிருந்தாள். ஆயினும் சிறு பிள்ளை முதலே யாருக்கும் கட்டுப்படாதவள். அவள் பிடித்ததையே முறண்டிச் சாதிப்பாள். அவளுக்கொரு தமையன் இருந்தான். அவன் அதற்கு ஒருபடி மேற்போனவன். யார் சொல்லையும் கேட்காத ரோகிணி அண்ணனை மாத்திரம் தெய்வம்போலக் கொண்டாடுவாள். அவன் இட்டது சட்டம். அவன் சொன்ன படியெல்லாம் ஆடுவாள். ஆயிலியனுக்குப் பின் பட்டத்திற்கு வரவேண்டிய அந்த அண்ணன், செவ்வாய் என்ற பேரால் அழைக்கப்பட்ட பண்டைய ஆன்மா.

அரசனாயிருந்த ஆயிலியன் மக்களிடம் அன்புடையவனல்லன்; மிகுந்த கண்டிப்புடையவன்; நீதிமானென்று தன்னைப் புகழ்ந்துகொள்பவன்; அவன் மனைவி கேட்டை மிகுந்த அமைதியானவள்; மந்தபுத்தி யுடையவள். அத்தகைய பெற்றோரை அடைந்த தமையனும் தங்கையும் அந்த உறவுடன் நில்லாமல், சிறுவயதிலேயே தம்பதிகளானார்கள். ரோகிணிக்கு வயது பதினாறுக்குமுன் இந்த வெட்கங்கடந்த வாழ்க்கைக்கேடு வெளிப்படவும், நாடெங்கும் பெருத்த மானக்கேடாயது. அரசனாவது மனைவியாவது அறிவுடையோராயிருந்திருந்தால், அரவமில்லாமல் இந்தக் கேவலத்தை அரண்மனைக்குள்ளேயே அடக்கியிருக்கலாம். அதல்லாமல், அரசன் மிகவும் நீதிமானென்ற பெருமைப் பேய் கையிலகப்பட்டு, வேண்டாத கோபங்கொண்டு, ஊரெங்கும் பறைசாற்றி, மகளைத் தண்ணீரில்லாக் காட்டில் கொண்டு வெட்டிவிடவும், மகனை நாட்டைவிட்டு ஓட்டிவிடவும் உத்தரவிட்டான். அதை மாற்ற அதிகாரமில்லையாயினும், ரோகிணியின் அழகினும் இளமையினும் மோகங்கொண்டிருந்த தமையன், அவள் கொல்லப்படவாவது, தான் அவளை விட்டுப் பிரிந்திருக்கவாவது, முடியாதென்று தீர்மானித்துக்கொண்டான். அதற்கிணங்க, கொலையாளிகளுக்குப் பெரும் பொருளைக் கைக்கூலி கொடுத்து, அருகாமையிலிருந்த ஆரணியத்தில் ஒளித்திருந்து ரோகிணியைக் கைப்பற்றிக்கொண்டு கடந்துவிட்டான்.

இருவரும் மனிதர் நடமாடாக் காடுதேடி அடைந்தார்கள். நீரோடையருகில் ஒரு மரக்குடிசை அமைத்தார்கள். செவ்வாய்

வேட்டையாடுவான். ரோகிணி கன்னி கட்டுவாள். கானக் குறவர்போல, கவலையின்றிக் கிடைத்ததை உண்பதும், சிற்றின்பந் துய்ப்பதுமாக இருவரும் வாழ்ந்து வந்தார்கள். அரண்மனையில் தன் அழகைக் கண்டு வியந்தோரும், இட்ட ஏவலைச் செய்வாரும், இப்போதில்லாமையால் ரோகிணி சில சமையங்களில் வருத்த முறுவாள். செவ்வாய், நாட்டில் கிடைக்கும் சௌகரியங்க ளில்லாமைபற்றிச் சில சமயங்களில் நொந்துகொள்வான். அந்த வேளைகளில் இருவரும் பிணங்கிக்கொள்வார்கள். எனினும் ஒருவரையின்றி மற்றவருக்குத் துணையில்லாமையால், ஒற்றுமை யாகவே இன்புற்றிருந்தார்கள். கொஞ்சநாளில் தலைமகன் சித்திரை வந்து பிறந்தான். சீக்கிரத்தில் வைகாசி யென்ற பெண்ணும் பிறந்தாள். பிள்ளைகளைப் பாதுகாப்பதிலும் அவர் கள்மேல் வைத்த அன்பிலும் ரோகிணி அரண்மனையை முற்றும் மறந்துவிட்டாளாயினும், செவ்வாய்க்கு நாளாக நாளாக அந்தக் கானக்குறவர் வாழ்க்கை ஒத்துவரவில்லை. அத்துடன் வேறு தோழமையுமில்லாமையால், "ஒரு பெண்ணுக்காக நாட்டையும் இழந்து, வாழ்க்கை யின்பத்தையும் துறந்து, வேட்டையாடி வயிறு கழிப்பதைவிட, இறந்துபோவது மேலெனக்" கருதத் தொடங்கினான். ஆகவே இருவருக்கும் சச்சரவுகள் அதிகப்பட் டன. கடைசியாய், ரோகிணியிடம் ஒன்றும் சொல்லாமல் செவ்வாய் காடு மலைகளைக் கடந்து, கடற்கரையோரஞ் சென்று, அந்நிய நாட்டிலிருந்து வந்திறங்கியதாகப் பாவித்துக் கொண்டு, தகப்பன் பாதத்தில் சென்று பணிந்து, "ரோகிணி போன இடம் தனக்குத்தெரியாதென்றும், தான் தனியே கடல் கடந்து அந்நிய நாடுகள் சுற்றிப்பார்த்து வருவதாகவும், சிறு வயதில் அறியாமல் தவறிழைத்துத் தண்டனைபட்ட பலனைக, இனித் தகப்பன் சொல்லைக் கடப்பதில்லை என்று சபதம் செய்திருப்ப தாகவும்" ஏமாற்றம் பண்ணினான். கோபந்தணிந்திருந்த ஆயிலியனும், மகனை ஏற்றுத் திரும்பவும் இளவரசாக்கி, உயர் குலத்தில் ஒரு பெண்ணை மணஞ்செய்து வைத்தான்.

தமையன், தன்னை அருங்கானகத்தில் ஒண்டியாய்த் தவிக்க விட்டுச் சென்றதையறிந்தபோது, ரோகிணியின் மனநிலை எவ்வா றிருந்திருக்குமென்று, அனுமானித்துக்கொள்ள வேண்டியதைத் தவிர எழுத இயலாது. கொண்ட சினமுந் துயரமும் கொஞ்சம் அடங்கினதும், மேலுக்குக் கவலைப்பட வேண்டிய காரணங்கள் எவையென்று ஆராய்ந்தாள். காட்டுப்பழங்கள் பறித்தும், கன்னி கட்டியும், கிழங்குகள் தோண்டியும், ஒன்றுக்கும் குறை வில்லாமல், தனக்கும் தன் இரு அருமைப் பிள்ளைகளுக்கும், எப்போதும் போலப் பசியாற்றிக் கொள்ளலா மாகையால், அது

கவலைப்பட வேண்டிய காரியமில்லையென்று கண்டாள். ஆனால் செவ்வாயின் உதவியால், தன் மகன் சித்திரைக்கு அரச குலத்திற்கு வேண்டிய வித்தைகள் கற்பித்து, கிழட்டரசன் ஆயிலியன் இறந்தபின் செவ்வாய்க்குக் கீழ் அவனை இளவரசாக்கிப் பார்க்க, அவள் நெடுநாளாகக் கொண்டிருந்த அவாவுக்கே இப்போது இடைஞ்சல் ஏற்பட்டது. சித்திரை பிறந்த நாள் தொட்டு அவனுடைய பிற்கால வாழ்வில் கவலைகொண்டிருந்த ரோகிணிக்கு, இது ஒரு பெரிய துர்ப்பாக்கியமாகக் குறுக்கிட்டது. நாட்டில் எங்கும் அவள் சென்று தங்குவதற்கு வழியில்லை. எவராவது அடையாளங் காணின், அது அரசன் காதுக்கு எட்டி அவள் உயிர்போவது திண்ணம். அத்துடன், காடு வந்து நெடுங்காலமாய்விட்டபடியால், அணிவதற்குத் துணிமணியும் இல்லை. அன்னையும் தங்கையும் ஆளுக்கொரு ஆடையை மாத்திரம் சேமித்து வைத்து, காட்டிலிருக்கும்போது தோல்களையும் பனை ஓலைகளையும் முடைந்து உடுத்தி வந்தார்கள். அவற்றில் செவ்வாய் ஒரு ஆடையைக் கொண்டு சென்றான்.

தான் செய்த குற்றத்திற்காகச் சித்திரை எவ்விதத்திலும் குறைவுபடக்கூடாதென்று தீர்மானித்திருந்த ரோகிணி, மிஞ்சியிருந்த ஒரு ஆடையை அணிந்து, பிச்சைக்காரி மாதிரி வேடங் கொண்டு, கையிலுள்ள தோல்களை நெடுந்தூரத்திலுள்ள சிறு கிராமங்கள் தேடி விற்று, துணிமணிகள், ஆகாரப் பொருள்கள் வாங்கிவந்து, பிள்ளைகளை நாட்டில் வளர்க்கிற விதத்தில் வளர்க்கத் தொடங்கினாள். ஒருதரம் சென்ற ஊருக்கு மறுதரம் செல்லாள். சில சமயம் குழந்தைகளைக் கூட்டிச்செல்வாள். சில சமயம் தனியே செல்வாள். இவ்விதமாக மிகுந்த பிரயாசையோடு தன் பிள்ளைகளுக்கு நாட்டு முறைகள் பழக்கி வைத்தாள். குழந்தைகளின் புத்திக் கூர்மையையும் எளிதில் கற்றுக்கொள்ளும் சாமர்த்தியத்தையும் கண்டு சந்தோஷப்பட்டுக்கொள்வாள். தகப்பன் இறந்ததும் தன் ஊர் சென்று குழந்தைகள் உரிமையைக் கைப்பற்றலாமென்று கருதினாள். கொஞ்ச நாள்வரை தமையன் திரும்ப வருவானென்று எதிர்பார்த்தாள். தன்னைத் தேடாவிடினும் பிள்ளைகளைத் தேடுவானென்று எண்ணினாள். நாளாக நாளாக அது வீணெண்ணமென்று விட்டுவிட்டாள். முந்திய பிறப்பில் எஸ்கிமோ ஜாதியில் தகப்பனாயிருந்த செவ்வாயைத் தான் படுத்திய பாடெல்லாம் இப்போது புலப்பட்டால், இவ்வித வீணெண்ணங்களுக்கு இடமிருந்திராது. என்ன பிரலாபித்தாலும் செய்த கருமம் யாரைத்தான் விடும்? இவ்விதம் மக்களைப் பாதுகாப்பதிலும், அவர்கள் நன்மையைக் கருதி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஊரூராய்ப் பயந்தொதுங்கித் திரிவ

திலும், ரோகிணிக்கு உடம்பு இளைத்துக் களைத்துச் சின்னாளில் உயிராபத்தான நோயும் கண்டது. சாவு நெருங்கியதை அறிந்த ரோகிணி, மக்களை அழைத்து அருகிருத்தி அவர்கள் பிறப்பு வளர்ப்பு முழுவதையுஞ் சொல்லி, மகனை எவ்விதத்திலும் பட்டத்தைப் பெற முயற்சிக்க வேண்டுமென்று சபதஞ்செய்யச் சொன்னாள். தங்கையைப் பாதுகாக்கும்படி அவனிடம் ஒப்பு வித்து, ரோகிணி உயிரையும் உலகக் கவலையையும் ஒருங்கே நீத்தாள். தாயைத் தவிர வேறு தாரகமில்லாதிருந்த மக்களிரு வரும் மிகவும் தயங்கினார்கள்; அழுதார்கள், விழுந்தார்கள், மனங்கொண்ட மட்டும் புலம்பிவிட்டுத் தாயைக் குடிசைக் குள்ளேயே தோண்டிப் புதைத்தார்கள். அல்லும் பகலும் அந்த ஆரணிய முழுவதும் ரோகிணி கூடவே அலைந்த மக்களுக்கு, இப்போது எங்கிருப்பினும், எத்திசை நோக்கினும், எம்மரத்தை அண்டினும், தாயின் அருவுருவே கண்ணுக்குப் புலப்படுவதைக் கண்டு, அவள் இறந்த பின் அரைநொடிகூட அங்குத் தாமதிக்க மனமில்லாராய், இருவரும் உடனே புறப்பட்டுப் பாட்டனார் ஊரை நோக்கி நடந்தார்கள். மெள்ள மெள்ள வழி நடந்து ஆயிலியன் நகரஞ் சேர்ந்து, அவன் சாகும் வரை மறைவாக இருக்கக் கருதி, வயிற்றுப்பிழைப்புக்கு வேண்டிய வேலையில் சித்திரை அமர்ந்து தங்கையையும் காப்பாற்றி வந்தான். ஆனால் திரும்பவும் முன்னைப் போல, ரோகிணியும் மக்களும், அவர்க ளொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது.

இளவரசாகிய செவ்வாய் ஒரு யுத்தத்திற்குச் சென்று வெற்றியுடன் திரும்பினான். அதற்காகத் தலைநகரில் ஒரு பெரு விழாக் கொண்டாடப்பட்டது. அதில், பல பந்தயப் போட்டி களில் நீர்விளையாட் டொன்று. காட்டில் வளர்ந்த சித்திரை, இயற்கையாகவே இதில் தேர்ந்திருந்தபடியால், வேடிக்கையாகக் கூடக் கலந்துகொண்டான். அப்போது அவன் இடுப்பில் பச்சை குத்தப்பட்டிருந்த செம்பாம்படையாளம் வெளிக்குக் காணவும், வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த கும்பலுக்குள் பெரிய பரபரப்பு உண்டாயிற்று. அவர்கள் சித்திரையைப் பிடித்துக்கட்டி, ஆயிலி யன் முன் கொண்டுவிட்டார்கள். ஏனெனில் அந்த நாட்டுக் கொடி அரவக்கொடி. அரசனுக்குப் பிறந்த முதல்மகனுக்கு அந்த அடையாளம் இடுப்பில் பதிக்கப்படுவது அந்நாட்டு முறை. பின்வரும் பாத்தியதைக்கு அது முன்னடையாளமாகவும், மற்ற வரிடம் காணின் அது ராஜத் துரோகமாகவும் அவருக்குள் கருதப்பட்டது. செவ்வாய் தனக்கு மூத்தமகன் பிறந்தபோது, தன்னாட்டு முறைப்படி அந்த அடையாளத்தைத் தீட்டியிருந் தான். கிழட்டரசன் உண்மையைக் கேட்டுத் தெளிந்து, செவ்

வி. ப—7

வாய் ஏமாற்றியதை அறிந்து, அவன்மேல் சீறிவிழுந்து, சித்திரையைச் சிறையிலிட்டு, கொண்ட கோபம் பொறுக்காது, இருந்த இருப்பிலேயே உடம்பெல்லாம் வியர்த்துப், பக்கவாதம் பிடித்துப் பேச்சு மூச்சின்றி இறந்தான். பழைய குற்றத்தில், செவ்வாயிடமிருந்து பட்டத்தைத் துறந்து விடுவதாக அரசன் வாக்கு வாங்கியிருந்தபடியால், இப்போது செவ்வாய் பதவியே ஆபத்திலாயிற்று. ஆயினும் செவ்வாய் பல பெருமுயற்சிகளாற் பட்டத்தைக் கைப்பற்றி, இளையாளும் அவளைச் சார்ந்தோரும் செய்த சூழ்ச்சிகளுக்கெல்லாம் தப்பி, சித்திரையையும், ரோகிணி மனம் போல இளவரசாக்கினன். பின் நிகழ்ச்சிகளில் ரோகிணிக்கு ஒரு சம்பந்தமு மில்லையாகையால், அவை விரிவாய் எழுத இடமின்றி விடப்பட்டன.

எஸ்கிமோ கூட்டத்தில், செவ்வாயும் சித்திரையும் பெற்றோராயிருந்தபோது, ரோகிணி அவர்களுக்குச் செய்த தீங்குகளெல்லாம் அடுத்த பிறப்பிலேயே விளைந்துவிட்டன போலும். செவ்வாயால் மானபங்கமும், காட்டில் மிகுந்த மனத்துன்பமும் அடைந்தும், சித்திரையை வளர்க்கவேண்டிய முயற்சியில் தன் உயிரையே கொடுத்தும், ரோகிணி கொண்டகடன் தீர்த்தாளென்று நினைக்கவேண்டியிருக்கிறது. பெண்ணுடம்புக் கேற்ற அன்பும் பெரிதும் வளர்ந்து பொலிவுற்றது. இளம்பருவத்தில் முப்பத்தெட்டு வயதிலேயே இறந்துபோன போதிலும், மேற்சொன்ன அன்பின் பலனை 1543 வருஷம் மேலுலகங்களில் தங்கினள். இதற்கு முந்தின பிறப்பில் 56-வயதுவரை உயிரோடிருந்தும், இறந்தபின் 780 வருஷமே ஒய்வெடுத்தவன், இப்போது குறைந்த வயதில் இறந்து, இருபங்கு காலம் சொர்க்க இன்பம் பெற்றதற்குக் காரணம், தன் மக்களுடைய நன்மையைக் கருதி, தன் உயிரையும் பொருட்டாக்காமல், அவர்களுக்கு ஊழியம் பண்ணினதேயாகும். பிறபுண்ணியங்கள் செய்ய இயலாதோரும் "தனக்குப் போகத் தானம்" என்ற பழமொழியின் உண்மையான பொருளை அறிந்து, தான் கடமைப்பட்டிருக்கும் குடும்பத்தை யாவது உண்மையோடு பாதுகாப்பின், அதற்குரிய உத்தமபலனை அடைவார்கள். இது எல்லோருக்கும் எளிதில் ஆவதொன்று; இயற்கையாகவே அன்பு உந்துதலால் என்க.

குறிப்புகள்: இறந்தபின் இன்னின்ன இன்பந் துய்க்க வேண்டுமென்ற ஆவலுள்ளவர்கள், பக்கங்கள் 52, 53-லுள்ள கட்டத்தை நன்றாய் ஆராய்ந்து, அதற்குவேண்டிய முயற்சியை உலகத்திலேயே செய்துகொள்ள வேண்டும். இறந்தபின், பூவுலகில் செய்த வினைக்குப் பலனை அனுபவிப்பதேதவிரப், பெரும்பாலாருக்கு மேல்முயற்சி செய்ய இயலாது. ஆகவே, உலகத்தில் ஒன்றுஞ்செய்யாமல் சோம்பேறியாயிருந்துவிட்டு, சொர்க்கத்தில் சுகமாயிருக்கலாமென்று எண்ணுவது வீண் எண்ணம்.

உலகமக்களுக்குள், வயிற்றுப் பிழைப்பிற்கு வகைதேட நேரம் போதாமல் இருப்பவரே அநேகர்.

"இலர்பல ராகிய காரணம், நோற்பார்
சிலர் பலர் நோலா தவர்."

என்றபடி அது அவர்செய்த பழவினைப்பலன். எனினும், கொஞ்சநேரமாவது ஓய்வில்லாமலிருப்பவர் யாரும் இரார். அந்த நேரத்தை, வெட்டிப் பேச்சிலும், சீட்டாடுதல் முதலிய வீண் விளையாட்டுகளிலும் போக்காமல் தாம் விரும்பிய பலனுக்கு வேண்டிய முயற்சிகளில் செலவிடுவாரானால், இறந்தபின் அதற்குத் தக்க பலனும், அடுத்த பிறப்பில் கூடுதல் இயற்றச் சௌகரியங்களும் அமையும். அல்லாமல், உள்ளநேரத்தை வீணுக்குபவர்கள், வரும்பிறப்பில் அதையும் இழந்து அல்லற் படுவார்கள்.

கொடிவழி—XII

ஆயிலியன் :— அரசன். (மனைவி) கேட்டை. (மகன்) செவ்வாய் (மகள்) ரோகிணி.

செவ்வாய் :— (1) இளவரசன். (சோர மனைவி) உடன் பிறந்த தங்கையாகிய ரோகிணி (மகன்) சித்திரை (மகள்) வைகாசி.
(2) அரசன். (2வது மனைவி மகன்) பங்குனி.
(3) சித்திரைக்குப் பட்டங்கட்டிவிட்டு, சன்னியாசியானான்.

சித்திரை :— (மனைவி) அசுபதி (மீனதேவர் மகள்) (ஆண்மக்கள்) விருச்சிக தேவர், விசாகம், சுவாதி, இடப தேவர் முதலியோர் (மறுமகளில்) புனர்பூசம் முதலியோர்.
(பெண்மக்கள்) கார்த்திகை, பஞ்சமி, மகம், மார்கழி. முதலியோர். (மறுமகனில்) அமாவாசன், துவாதசன் முதலியோர்.

பங்குனி :— அரசகுமாரன். சித்திரையுடன் ராஜ்யத்துக்குப் போட்டியிட்டுத் தோற்றவன்.

கேது :— பங்குனிக்கு உளவாயிருந்த ஓர் அரண்மனை மூதாட்டி.

13 பெரு—பெண்

கி. மு. 12090—கி. மு. 12005

வயது : 85-பின் பிதுருலகவாசம் : 2319 ஆண்டுகள்

நமக்குக் கீழ்ப் பூமியாகிய தென் அமெரிக்காவில், இப்போது பெரு என்று வழக்கப்படும் நாடானது, பண்டு பதினையாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், மிகுந்த விஸ்தீரணமும் இன்றுங் காண்பதற்கு அருமையான உயர்ந்த நாகரிகமுமுடைய உன்னத நாடாயிருந்தது. அந்நாளில் அந்நாடெங்கும் வறுமையென்பதே கிடை

யாது. சோம்பேறியுங் கிடையாது. இருபது வயது முதல் நாற்பது வயது வரை ஒவ்வொருவரும் ஊர் நன்மையின் பொருட்டு அவரவருக்கு ஏற்ற ஏதாவது ஒரு தொழில் செய்தே தீரவேண்டும். பத்துத் தலைக்கட்டுக்கு மேல்மணியம் ஒருவன். பத்து மணியக்காரருக்குமேல் ஒரு சிறு தலைவன். பத்துச் சிறு தலைவருக்கு மேல் ஒரு பெருந்தலைவன். அவருக்குமேல் கிராமத்தலைவன். அவருக்குமேல் நகர்த்தலைவன். அவருக்கு மேல் நாட்டுத் தலைவனாகிய அரசன். இத் தலைவர் யாவரும் மிகவும் கவனமாய்ப் பயிற்றப்பட்டு, எப்போதும் தங்களுக்குட்பட்ட ஆதீனத்தில் யாத்திரை செய்து கொண்டேயிருப்பார்களாகையால், நாட்டின் மூலை முடுக்குகளுங்கூட மிகுந்த பொறுப்புடனும் நீதியுடனும் ஆளப்பட்டு வந்தன. அவர்களுள், பிள்ளைகளுக்குக் கலியாணமானவுடன், அவர்கள் பெற்றோரை விட்டுப் பிரிந்து, தனிக்குடித்தனம் பண்ணவேண்டுமென்பது சட்டம். மணமானதும் அவர்களுக்குத் தனிவீடும் நிலமும் சர்க்காரால் கொடுக்கப்படும். ஒவ்வொரு அறுவடையின் பின்னும் ஒவ்வொரு வீட்டிலுள்ள புள்ளிகளுக்குத் தக்கபடி நிலம் விதித்துக் கொடுக்கப்படும். நாற்பது வயதுக்கு மேற்பட்டவருக்கும், அதற்கு முன் பிணிவாய்ப்பட்டவருக்கும், சர்க்கார் செலவிலேயே உணவும் மற்ற எல்லா சௌகரியங்களும் செய்து வைக்கப்படும். அவ்வளவு சாலச் சிறந்த நாகரிகத்தில், ஒரு பெருந் தலைவனாயிருந்த வியாழனுக்கு மகம் என்ற மனைவி வயிற்றில், ரோகிணி பெண்ணாகப் பிறந்தாள். அது கி. மு. 12090. அவளுடன் பழைய கர்மதொந்த முன்னோர் அநேகர் உறவினராகப் பிறந்திருந்தார்கள். அவர்களில் சித்திரை, அமாவாசன், பௌர்ணமி, என்ற மூவர் ஆண் பிள்ளைகள், இவளோடொத்த விளையாட்டுப் பிள்ளைகளாகக் காணப்படுகின்றனர். மற்றையோரைக் கொடிவழி அட்டவணையில் கண்டுகொள்க. அந் நாட்டு வழக்கப்படி, இருபது வயது வரை, ஆண்களும் பெண்களும் கட்டாய இலவசப் படிப்புக் கற்பிக்கப்படுவார்கள். அது 12 வயது வரை ஆரம்பக் கல்வியும் அதற்கு மேல் அவரவர் வாழ்க்கைக்கு வேண்டிய தொழிற்கல்வியுமாக இருக்கும். 20 வயதானதும் அவர்களுக்கு மணஞ்செய்து கொள்ளும் உரிமை கொடுக்கப்படும். மணந்து கொள்வது பெற்றோர் ஏற்பாட்டைப் பொறுத்ததல்ல. அவரவர் காதலையே பொறுத்தது. ஜாதி வேற்றுமையாவது மத வேற்றுமையாவது கல்வி வேற்றுமையாவது அம் மக்களுக்குள் இல்லாதிருந்தபடியால், ஆண்களும் பெண்களும் மணப்பிராயம் வந்தபோது அவர்கள் மனஞ்சென்ற இடத்தில் மணந்து கொள்வதற்குத் தடையொன்றுமில்லாதிருந்தது. கலியாணத்திற்குச் செலவு, வைம்மை, வரிசை முதலிய இடைஞ்சல்கள் ஒன்றுமே கிடையா. நகர்த்தலைவன்,

ஒவ்வொரு ஆண்டிலும், இருபது வயதான பேருக்கெல்லாம் ஒரு அறிக்கையனுப்பி, இன்ன தினத்தில் அவ்வூருக்குத் தான் வருவதாகவும் வேண்டுவோர் அன்றைக்கு மணஞ்செய்து கொள்ளலாமென்றும் செய்தியனுப்புவான். தமக்குள் தீர்மானஞ் செய்திருந்த மணமக்கள் குறித்த தினத்தில் தலைவன் முன்னேகவும், அவன் இருவர் கைகளையும் பிணைத்து ஆசிகூறி, அவர்கள் பெயரை ஏட்டில் பதிந்துகொண்டு போய்விடுவான். ஊர்த் தலைவன், அவர்களுக்கு வேண்டிய வீடு, நிலம் முதலியவற்றை ஏற்பாடு செய்து அவர்களை வேறே குடியமர்த்தி வைப்பான். பிள்ளைகளைப் படிக்கவைப்பதும், அவர்களைச் சிறுவயது முதலே கூர்மையாய்க் கவனித்து, அவர்கள் எந்தெந்தத் தொழிலுக்கு உரியவர் என்று தீர்மானிப்பதும், அதற்குத் தக்க கல்வியைக் கொடுத்து, அந்தந்த வேலையில் இருபது வயதாகும்போது அமர்த்தி வைப்பதும், அரசனுடைய கடமையாகையால் பெற்றோருக்குப் பிள்ளைகளைப் பெறவேண்டியதைத் தவிர வேறு பொறுப்போ, செலவோ கிடையாது. பார்த்தோர் பொறாமை கொள்ளும்படியான இவ்வளவு சௌகரியம் வாய்ந்த சமூகத்தில் யார்தான் இன்பகரமாய் வாழமாட்டார்கள்? அழகுவாய்ந்த ரோகிணியும் அமாவாசனுக்கு வாழ்க்கைப்பட்டுக் குடும்பத்தில் சாதாரணமாகக் காணப்படும் சிறு சுகதுக்கங்களைத் தவிர, மற்றப்படி திருப்தியாகவே வாழ்ந்து, தன் உற்றார் உறவினருக்கும், நாட்டிற்கும் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச்செய்து அன்பு, அறிவு, ஆற்றல் மூன்றிலும் முன்னேறினளென்றே சொல்லவேண்டும். குடிகளுடைய வறுமை, வியாதி, மடைமை இவற்றை நீக்கவேண்டியது அரசனுடைய கடமையென்ற அந்த நாட்டில், சமூக நன்மையே குடிகளுடைய கடமை யென்றும் கருதப்பட்டு வந்தது. அக் கடமையைச் சரிவரச் செய்து அதனல் ரோகிணி மிகுந்த நல்வினைக்கும் ஆளானள்.

மூத்தமகன் தசமி யுத்தத்திற்குச் சென்று கொல்லப்பட்டபொழுது ரோகிணி மிகவும் துன்பப்பட்டாள். சர்க்கார் ரசாயன சாலையில் வேலை செய்துவந்த அவள் கணவன் அமாவாசன், விளக்கெரிக்கும் வாயுவொன்று கண்டுபிடித்த காலத்தில், அது வெடித்து அதனல் மிகுந்த காயப்பட்டுச் சாவானே பிழைப்பானே என்று கிடந்தபொழுது, அக் காரணத்தால் சில காலம் துன்புற்றாள். சித்திரையும் ரோகிணியும் சிறு வயதாயிருக்கும்போது, இருவருங் கைகோர்த்துக்கொண்டு அமைதியாயிருப்பாரானல், முற்பிறப்பில் அவர்கள் வசித்த காடும் மலையும் கண்முன் தோன்றும். அப்போது தாங்கள் கண்டவற்றை விபரமாய் ஒப்பிட்டுக் களி கூறுவார்கள். வயசாக வயசாக அக் காட்சி

குறைந்து, கடைசியாய் நின்றுபோயிற்று. சிறுவயசில் அதன் உண்மையை அவர்கள் அறியாராயினும், பிறருடன் இல்லாத அனுபவம் ஒன்று தமக்குள்ளிருப்பதாக அறிந்து, ஒருவரை யொருவர் மிகவும் நேசித்தார்கள். நாலைந்து வயதுக்கு மூத்த சித்திரை மாத்திரம், வயது வரும்போது ரோகிணியை மணந்து கொள்ளத் தீர்மானித்திருந்தான். இயற்கையில் மிகவும் கூச்ச முடையோனாகிய சித்திரை இதைப்பற்றி ஒன்றுந் தெரிவியாமல், அடுத்த நாட்டை அடக்குவதற்காக அரசன் அனுப்பியபடி சேனையோடு சென்றுவிடவும், அந்த இடையில் மணப்பிராயம் வந்த ரோகிணி அவன் திரும்ப வருமுன் அமாவாசன் விருப்பப் படி அவனை மணந்துகொண்டாள். சித்திரை திரும்பியதும் அது கண்டு மிக வருந்தினனாயினும், வேறு மணஞ் செய்வதில்லை யென்று கொஞ்சநாள் இருந்துவிட்டு, பெற்றோர் விருப்பத்திற் கிணங்க அமாவாசன் தங்கையை மணந்து வாழ்ந்தான். ரோகிணிக்கு 77 வயசாகும்போது சித்திரை சாகக் கிடந் தான். சாகுந்தறுவாயில் ரோகிணி அவன் கையைப்பற்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். நெடுங்காலமாய் இல்லாதிருந்த பழைய காட்சிகள் அப்போதுந் தோன்றியதுமல்லாமல், தென் தமிழ் நாட்டில், மீனதேவர் முன்பாக, மரகதக்கல்லைக் கடலுக் குள் எறிந்துவிட்டுக் கணவனும் மனைவியும் அவருடன் வாதாடிய காட்சிகளெல்லாம் காணப்பட்டன. அறிவில் மிகுந்திருந்த சித் திரை, அவை முற்பிறப்பின் அனுபவங்களாயிருக்க வேண்டு மென்று ரோகிணிக்கு எடுத்துச் சொல்லி, இருவருக்கும் உள்ள நெடுங்காலத் தொடர்பின்படி, இறந்த பின்னும், மேலுலகில் அவளை எதிர்பார்த்திருப்பதாகச் சொல்லிச் சென்றான். அப் படியே சில ஆண்டுகளுக்குப் பின்னால், ரோகிணி மரண தறுவாயி லிருக்கும்போது, சித்திரை தனது நுண்ணுடம்பில் சமீபத்தில் காத்திருப்பதைக் கண்டு, அவளும் சந்தோஷமாய் உயிர் நீத் தாள். அவள் இறக்கும்போது வயது 85. இறந்தபின் 2379 வருஷம் மேலுலகங்களில் இருந்தாள். அந் நெடுங்கால இன்ப அனுபவமொன்றே அவள் இப் பிறப்பில் செய்த நல்வினைக்குப் போதிய சான்றாகும்.

கோடி வழி—XIII

வியாழன்: (மனைவி) மகம். (மகன்) புனர்பூசம். (மகள்) ரோகிணி மார்கழி, அநுஷம்.

ரோகிணி: (கணவன்) அமாவாசன். (மகன்) தசமி.

பழைய உறவினர் பெரும்பாலார் தகப்பன் உடன்பிறந்தார், தாயார் உடன் பிறந்தார், அவர்கள் மக்கள் மறுமக்கள்மார், வேறு பல பந்துக்க ளாகவும் தோழமைகளாகவும் காணப்படுகின்றனர்.

14. சீறு—பெண்

கி. மு. 9686—கி. மு. 9673.

வயது : 13 - பின் பிதுருலகவாசம் : 70 ஆண்டுகள்

இப் பிறப்புக் கதை மிகவும் சுருக்கம். கி. மு. 9686-சீன தேசத்தின் மத்தியில் ஒரு பெரிய நகரம். அதில், தக்க செல்வாக்கும் உயர்ந்த மதிப்பும் உடைய ஒரு மாண்டரின். மாண்டரின் என்பது இக் காலத்து கவர்னர் போன்ற ஒரு நகர்த்தலைவன். அரசனால் நியமிக்கப் படுபவன். அந்த மாண்டரினுக்கு ஒரு பொது நிறப் பொத்தைப் பெண் குழந்தை. அதுவே ரோகிணி. சீனதேசத்தில் அக்காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வியே பெரிதாகக் கருதப்பட்டது. ஐந்து வயதாகுமுன்னமே பாடந் தொடங்குவார்கள். மிகவும் சிறு வயசிலேயே பாரதம், ராமாயணம் போன்ற அந் நாட்டுப் பெருங் காவியங்களைப் பொருள் தெரியாமலே ரோகிணி பாராமல் ஒப்புவிப்பாள். விளையாட்டென்பது மிகவும் சுருக்கம். பெற்றோரிடம் பிள்ளைகள் மிகவும் பணிவாய் நடந்துகொள்ள வேண்டுமே தவிர அன்பாய்ப் பரிமாறுதல் அந் நாட்டு முறைப்படி குற்றம். ஆகையால் சிறு குழந்தையிலேயே, ரோகிணி அன்புக்கு வெளிப்போக்கில்லாமல், அவள் மனத்தில், திருப்தியுறாத வாஞ்சை யொன்று குடிகொண்டிருந்தது. கொஞ்ச நாளில் அண்டை வீட்டில் பிறந்திருந்த தசமியைக் கண்டாள். அவள் ரோகிணிக்கு இரண்டு வயசு மூத்த குழந்தை. இருவரும் இணைபிரியாத தோழிகளானார்கள். தசமியைப் பிரிந்து வீட்டுக்கு வரமாட்டாமல் ரோகிணி அநேக நாள் இரவு அவள் கூடவே தங்குவாள். இவ்வளவு கல்விக்கிடையில் நீந்தப் பழகுதல் அவசியமான வித்தையொன்றாகக் கருதப்படவில்லை போலும். ஏனெனில், ரோகிணி பதின்மூன்றாவது வயதில் ஆற்றில் தவறி விழுந்து இறந்துபோனாள்.

தசமியைத் தவிர வேறு பழைய கூட்டாளிகள் யாருங் காணப்படாமையாலும், மிகவுஞ் சிறு வயதிலேயே இறந்து போனமையாலும், ஏதாவது பொதுவினைகளை அநுபவித்துத் தொலைப்பதற்காக, இப் பிறப்பு ஏற்பட்டிருக்குமென்று நினைக்க வேண்டியிருக்கிறது. தசமி XIII-வது கொடிவழியில் மகன்.

குறிப்புகள் : தற்காலம் நமது நாட்டில் பெண்கல்வி யிருக்கும் நிலைமையை எண்ணி, இங்கு ஒருவார்த்தை சொல்லத் தோன்றுகிறது. ஆண் பிள்ளைகளைப் பள்ளிக்குப் போகும்படி வற்புறுத்துகிற பெற்றோர்கள், பெண் பிள்ளைகளைப் பற்றி ஒன்றும் கவனிப்பதில்லை. ஆகவே பெண் குழந்தைகள் பள்ளியில் சேர்பவர் சுருக்கம். சேர்ந்த அச் சிலரும் பெற்றோருடைய உபேட்சையால் ஒழுங்காய்ப் பள்ளிக்கூடம் வருகிறதில்லை.

அவர்கள் வீட்டிலும் படிக்கிறதில்லையாகையால், பெண்கள் படிப்பு ஒரு விதத்திலும் விருத்தியாகாம லிருந்து வருகிறது. இதைத் தாய்மாரிடம் தெரிவித்தால், அவர்கள் குழந்தைகளைக் கண்டிக்காதது மாத்திரமன்றி, அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கென்றும், பெண்கள் என்ன உத்தியோகத்திற்குப் போகப் போகிறார்களென்றுஞ் சொல்லிப், பெண் மக்களாகிய தங்கள் மதிப்பைத் தாங்களே தாழ்த்திக் கொள்ளுகிறார்கள்.

“கல்வியின் உபயோகம் உத்தியோகம்” என்பது பாழாய்ப்போன இன்றைய இந்தியா நாட்டிலேயே பரவியிருக்கிறது. உலகத்தைக் கை வசப்படுத்தி ஆளுகின்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் சர்க்கார் சம்பளத்தை விரும்புவோர் மிகச் சிலரே யாவர். எம். ஏ., பி. ஏ., பட்டம் பெற்ற பெரும்பாலார் வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முதலிய பல துறைகளில் இறங்கி, கல்வியால் அகன்ற தமது அறிவைக்கொண்டு தக்கபொருள் ஈட்டி, இன்பமாய் வாழ்வதே அந்நாட்டு நாகரீகமுறை. “கல்வியின் பலன் அறிவு” என்பதை அவர்கள் நன்குணர்ந்திருக்கிற படியால், அவர்களில் ஆணும் பெண்ணும் ஒன்றுபோல் உயர்தரக் கல்வி கற்று, அகிலமெங்கும் பரவி, நம்போன்ற அறிவிலிமக்களை அடக்கி ஆளுகின்றனர். ஆகவே உத்தியோகம் பெறாதவற்குக் கல்வி உபயோகமில்லை யென்று கருதுவது, நமக்கும் நம் நாட்டுப் பண்டைய நாகரிகத்திற்கும் பெரும் இழுக்காகும்.

பெண்கல்வி அவசியமில்லையெனக் கருதும் பெற்றோர்கள், இந்நூலிலிருந்து பெண்கள் எப்போதும் பெண்ணாயிராரென்றும், ஆண்கள் எப்போதும் ஆணாயிராரென்றும், அறியவேண்டுவது முதல் குறிப்பு. அறிவு விசாலப்பட வேண்டிய ஆன்மாக்களாகிய நாம் ஆணாகக்கற்றும், பெண்ணாகக் கல்லாது பேதுற்றும் இருப்போமானால், நமது பிறவிகளில் பேர்பாதி வீணாகிப் போமென்றறிவது இரண்டாவது குறிப்பு. ஆகவே நாம் பூரண அறிவுபெற்று முத்தியடையுங்காலம் மேற்சொன்ன மூடக் கொள்கையால் இரட்டிப்படும்.

மேலும் இன்று நமது பெண் குழந்தைகளாயிருக்கும் ஆன்மாக்கள், நாளை நமக்குத் தகப்பனாகவும் தாயாகவும் வரலாமென்று இந்நூலி லிருந்து காணப்படும். நம்மால் அறிவு விருத்தியடையாத அந்தப் பிள்ளைகள் நமக்குப் பெற்றோராகும்போது, அந்த நாழிகொண்டே நமக்கும் படியளப்பார்கள். அதாவது, அந்த மூட அறிவிலேயே நம்மையும் வளர்ப்பார்களேயன்றி, வேறு அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஆகையால், நம்முடைய பிள்ளைகள் நன்மையைக் கவனிக்காவிடினும், மேற்பிறவிகளில் நமக்கு ஆகவேண்டிய நன்மையைக் கருதியாவது, ஆண் மக்களுக்கும் பெண்மக்களுக்கும் அறிவை விருத்தி செய்யவேண்டியது அவசியம். அத்துடன், மேலே சொல்லப்பட்ட “தன்வினை தன்னைச் சுடும்”, “அளந்த நாழி கொண்டே திரும்ப அளக்கப்படும்”, என்ற உண்மைக்கிணங்க, பெற்றோர் தம் மக்களுக்குச் செய்யாமல் தவறிய பொறுப்பும் கடமையும் திரும்ப அப்பெற்றோர்கள் தலையிலேயே சுமத்தப் படும்.

பூரண அறிவும், பூரண அன்பும், பூரண ஆற்றலும் பெறும்வரை, மனிதனுக்குப் பிறவியும், அதனாலாகும் துன்பமும் நீங்கப்போவதில்லை. இதில் ஆண் பெண் என்ற வேறுபாடு கிடையாது. இம்மூன்றும் பூரண மாவதற்குக் கல்வியே பிரதானம். கல்வியின்றி அறிவில்லை. அறிவில்லா தவர்கள் பிறவித் துன்பங்கள் சேரும்போது, பகுத்தறிவற்ற மிருகங்

களைப்போல, மாறிமாறி அதே துன்பங்களில் அகப்பட்டு உழல்வாரே யன்றி, அவற்றினின்றும் விடுபடும் வகையறியார்கள். ஆகையால் அறிவின்றி அனுபவத்தின் பலன் இல்லை. அனுபவமின்றி ஞானமில்லை. ஞானமின்றி முத்தியாகிய பேரின்பமில்லை. ஆதலின், ஆணாயினும் பெண்ணாயினும், கல்வியற்றார் நற்கதியடையாரென்பது, இந்நூல் கற்போருக்கு நன்கு விளங்கும்.

கோடி வழி—XIV

ரோகிணி: சினப் பெண்.

தோழி: தசமி.

15. போஸிதானிஸ் தீவு—பெண்

கி. மு 9603—கி. மு. 9564

வயது: 39 - பின் பிதுருலகவாசம்: 1239 ஆண்டுகள்

அத்லாந்திய சமுத்திரத்தின் மத்தியில் பண்டொரு காலத்து உயிர்த்திருந்து இப்போது அழிந்துபோன போஸிதானிஸ் என்ற பெருந்தீவைப்பற்றி, முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அத் தீவிலிருந்த மக்களனைவரும் அத்லாந்திய வகுப்பினரேயாயினும், அவருக்குள்ளும் பல பிரிவுகளிருந்தன. கடலிலும் கரையிலும், வெகுவாய் வியாபாரத் தொழிலைக் கைக்கொண்டு, அத் தீவின் தென்பாகத்திலிருந்த மக்கள் சிவந்த மேனியர். மத்தியபாகத்திருந்து, அத் தீவின் பெரும்பாகத்தையும், ஒருபான்மை மற்ற நாடுகளையும் ஆண்டு அதிகாரஞ் செலுத்தியவர் தால்த்தக்கியர் என்பவர். அவர்கள் பார்வைக்கு வனப்புடையரேனும் கறுப்பு நிறத்தவர். வடபாகத்தில், மலைத்தொடரிலுள்ள சரிவுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் வாசஞ் செய்து விவசாயமும் ஆனிரைபோற்றலும் தொழிலாகக் கொண்டு, ஒரு மாதிரிச் சுயேச்சையாய் வாழ்ந்து வந்தவர் வெள்ளை நிறத்தவர். அவ் வெள்ளை மனிதருக்குள் ஒரு பள்ளத்தாக்கில் அசுபதி பரம்பரைத் தலைவனாயிருந்தான். அவனுக்கு வைகாசியிடம் சித்திரை பெண்ணாகப் பிறந்திருந்தாள். அதற்குப் பதினைந்து வருஷத்திற்குப் பின்னால், அங்கிருந்து நூறு மைலுக்கப்பாலிருந்த வேறொரு பள்ளத்தாக்கில் அதே மாதிரித் தலைவனாயிருந்த பூரம் என்பவனுக்குச் சப்தமி வயிற்றில் ரோகிணியும் பெண்ணாகப் பிறந்தாள். அது கி. மு. 9603.

ரோகிணி ஒரே பெண். தகப்பன் அவளைக் கண்மணிபோலப் பாவித்தான். தாய் அதினும்மேலாக அவளிடம் அன்பு பாராட்டினாள். ரோகிணி சிறுவயதிலேயே குதிரை யேற்றத்தில் கைதேர்ந்திருந்தாள். மலைநாட்டுப் பிரயாணத்திற்குக் குதிரையே வாகன

மாயிருந்தபடியால், அவ் விடத்து ஆண்களும், பெண்களும், குதிரையேறக் கற்றிருந்தார்கள். பெரிய தனவந்தனாகிய அவள் தகப்பன் பூராம், மிகுந்த நிலங்களையும் ஆடு, மாடு, குதிரை மந்தைகளையும் அவற்றிற்கு வேண்டிய கூட்டமான வேலைக்கார ரையும் உடையவனாயிருந்தான். அவர்கள் எல்லோரும் ரோகிணி காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யத் தயாராயிருந்தார்கள். அத்துடன் அவள் மிகவும் அழகான பெண்ணாகவுமிருந்தாள். இவ்வளவு அனுகூலங்களும் ஒன்றுபோல் ஏற்படவே, ரோகிணி யின் கர்வமும் மனமுரண்டும் பூரண பலத்துடன் வெளிக்கிளம் பின. அவள் இட்டது சட்டம். யாராவது எதிர்த்தால் அவளுக் குண்டாகும் கோபத்திற்கு அளவு கிடையாது. யாராவது ஒன்று சொன்னால், அது நியாயமென்றே அவள் மனத்துக்குத் தெரிந்தபோதிலும், பிறர் என்ன சொல்லுகிறது தானென்ன கேட்கிறதென்று அதற்கு நேர் விரோதமாகவே நடப்பாள். பதினாறு வயதாகுமுன்னமே அவளைக் காதலித்துவந்த அநேக வாலிபருக்கு ஒன்றுபோல் பொய்யாசை காட்டி, அவர்களுக்குள் சண்டைகள் மூட்டி வேடிக்கை பார்த்ததில் அதிலொருவன் இறக்கும்படியும் நேர்ந்தது. அதற்காகப் பலரால் பழிக்கப்பட்ட போது, தன்னை எப்படிக் குற்றஞ் சொல்லலாமென்று அவர்கள் மேல் சீறி விழுந்தாளே யொழியத் தன் குற்றத்திற்காக மன மிரங்கவில்லை. இப்படியிருக்கும்போது உண்மையாகவே ஒரு இளைஞன் மீது அவளே காமுற்றாள்.

அவன் குணத்திலும் செல்வத்திலும் தக்கவன். அவனை மாத்திரம் ரோகிணி மணந்திருப்பாளாகில், பத்தாவது பிறப்பில் பௌணர்மியை மணந்து தன் உத்தம குணங்களெல்லாம் வெளி வரப் பெற்ற மாதிரி, அவன் சேர்க்கையால் முரண்டுகள் நீங்கி அன்பு பெருகி மேன்மையுற்றிருப்பாளென்பது உறுதி. ஆனால் வினைவழி வேறாயிருந்தது; அவர்கட்குள் காதல் முறுகிக் கடி மணம் ஆகுமுன் காலன் வந்து குறுக்கே நின்றான்.

மேற்சொன்ன மலைநாட்டு வெள்ளை மனிதர் மத்திய நாட்டுத் தால்த்தக்கியருக் குட்பட்டவராகப் பாவிக்கப்பட்ட போதிலும், அநேகமாய்ச் சுயேச்சையாகவே வாழ்ந்து வந்தார்கள். மலைநாட் டில் மக்கள் வசித்த பள்ளத்தாக்குகள் ஒன்றிற் கொன்று வெகு தூரத்திலிருந்தமையாலும், ஒவ்வொன்றும் ஒரு சிற்றூராகவே யிருந்தபடியாலும், ஓரிடத்திருந்து மற்ற ஊருக்குச் செல்லும் வசதியொன்றும் இல்லாமையாலும், அங்குப் பதிவான சேனைகளை நிறுத்தி அவரை அடக்கியாள வழியில்லாதிருந்தது. அது காரணமாக, மலை நாட்டார் கட்டவேண்டிய கப்பத்தொகையைப் பற்றியும் அதைப் பிரிக்கவேண்டிய விதத்தைப் பற்றியும் அடிக்

கடி வழக்குகள் நடந்து கொண்டேயிருக்கும். அவை முற்றும் போது தால்த்தக்கியர் படையெடுத்து வந்து ஏதாவது ஒன்றிரண்டு பள்ளத்தாக்குகளைப் பாழ்படுத்திக் கொள்ளையடித்து, நேர்ந்த சண்டையில் ஆண் மக்களைக் கொன்று, அகப்பட்ட பெண்களைப் பிடித்துப் போய் அடிமையாக விற்றுவிடுவார்கள். அப் பேர்ப் பட்ட கட்டமானது திடீரென்று ரோகிணியினுடைய ஊருக்கு வந்து சேர்ந்தது. ரோகிணியின் தகப்பன் பூரம் இருந்த பள்ளத் தாக்கு எதிர்பாராத நேரத்தில் தாக்கப்பட்டது. அதில் பூரமும், ரோகிணியின் காதலனும் இன்னும் பலரும் யமனுலகு சென்றார் கள். வாலிபப் பெண்களெல்லாரும் கைதியாக்கப்பட்டு, அரசன் இருப்பிடமாகிய பொற்கபாடபுரத்தில் தால்த்தக்கியருக்கு அடி மையாக விற்கப்பட்டார்கள். அதில் ரோகிணியம்மாளை விலைக்கு வாங்கிய சீமான் கேட்டை என்ற ஓர் பிரபு. (கொடிவழி I பார்க்க).

கேட்டை மிகுந்த செல்வமுடையவன். ரோகிணிக்குத் தகப்பன் வயது கொண்டவன். செல்வத்திற்கேற்ப அநேகம் கறுப்பு மனைவிகளையு முடையவன். அவருள் அஷ்டமியும் நவமி யும் இருவர். அம்மாதிரியே அநேக வெண்ணிற அடிமைகளை யும் மனைக்கிழத்திகளாக உடையவன். அவருள் சித்திரையம் மாள் ஒருத்தி. ரோகிணி வருவதற்கு ஒருமாதம் முன்னதாக அசுபதியும் சித்திரையும் இருந்த பள்ளத்தாக்கும் தாக்கப்பட்டு, அவளும் பிடிபட்டு இந்தக் கேட்டையாலேயே அடிமையாக வாங்கப்பட்டதும், இவ்விதம் ரோகிணியும் சித்திரையும் சந்திக்க நேர்ந்ததும், பழைய கர்மபந்தமே யாகவேண்டும். கேட்டைவீட் டில் முதல் முதலாக ரோகிணியும் சித்திரையும் சந்தித்தபோது, புதிதாய் வாங்கப்பட்ட அடிமைகளுக்குள் இருவரும் வெண்மைய ரென்ற பந்தம் முதலில் அவர்களைக் கவர்ந்தது. தனது அடிமை நிலையின் அல்லலைக் கண்டதும் சித்திரையைத் தாய்போலப் பற்றலானாள் ரோகிணி. தன்னுடைய நிலைமையை அதிகம் பொருட்படுத்தாத சித்திரையும் இளமை நீங்காத ரோகிணியைப் பற்றிப் பெரிதும் கவலைப்படலானாள்.

அக்காலத்து அவ்விடத்து முறை நூதனமாகவே காணப்படு கின்றது. வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு உணவு முதலிய கொடுத்து உபசரிக்கிற மாதிரி, அடிமைப் பெண்கள், முதலாளி யிடம் வந்த நண்பர் எல்லோராலும் பொது மக்களாகவே நடத் தப்பட்டும் அனுபவிக்கப்பட்டும் வந்தனர். கேட்டைக்கு நண்ப ராகப் பல காவாலிப் பிரபுக்கள் இருந்தனர். அவருள் அஸ்தமும் ஐப்பசியும் கேதுவும் ஆகிய மூவரும் பழவினைமக்களாகக் காணப் படுகின்றனர். அவர்களும் மற்றுமுள்ள நண்பர்களும் எல்லோரும்

ஒருங்கே ரோகிணிமீது மோகங் கொண்டனர். சித்திரையும் புதிய அடிமையேயாயினும், அவள் வயதில் மூத்தவள். ஊரிலேயே மணமாகி இரண்டு மக்களையும் பெற்றிருந்தவள். ஆகையால் அவளை நாளொன்றுக்கு ஒருவர், இருவரைத் தவிர அதிகமாய்த் தேடுவாரில்லை. ரோகிணியோ கன்னிகழியாப் பெண். கட்டழகுடையவள். பதினெட்டைப் பிராயத்தாள். அவள் பெருமையும் விருப்புமே கண்டோர்மனதில் காமத்தை மூட்டும். அத்துடன் அடிமை; சொன்னபடி நடக்க வேண்டியவள். மீறினால் பலவந்தத்தில் முயங்கப்பட வேண்டியவள். ஆகையால் கேட்டைக்கும் அவன் நண்பர் பலருக்குமே ஒவ்வொருநாளும் ரோகிணி இடங் கொடுக்கவேண்டி வந்தது.

உயர்குடியிற் பிறந்து ஒருவருக்கும் கீழ்ப்படியாதவளாய் வளர்ந்து அநேக வேலையாட்களையும் காதலரையும் கைக்குள் அடக்கி யாண்டு மேனி கசங்காப் பூங்கொடி போன்ற பெண்ணாயிருந்த ரோகிணி, இந்த அருவருப்பான மக்களால் மரப்பாவை போல் நடத்தப்படவே, அவள் பட்ட வேதனைக்கும் பரிதவிப்புக்கும் திகிலுக்கும் அளவேயில்லை. அவள் பெருமையும் முரண்டும் இருந்த இடமே தெரியாமல் நசுங்கிப் போயின. ஆண்குரல் கேட்குமுன் தன்னை யறியாமலே அங்கம் பதறிக் கீழ்ப்படியத் தொடங்கினள். ஒருவாரமாகு முன் புத்தி சுவாதீனமற்ற நிலைக்குப் பாதி வந்துசேர்ந்தாள். தற்கொலை செய்துகொள்ள அவ்வாரத்திற்குள் இரண்டுதரம் முயன்றாள். புது அடிமைகள் வந்ததும், விரும்புவாரற்றுப் போன பழைய பெண்களில் பொறாமை மிகுந்த அஷ்டமியும் நவமியும் எரிகிற தீபத்திற்கு எண்ணெய் ஊற்றிவந்தார்கள். ஆண்மக்களை யருகே கண்டாலும் ரோகிணியிடஞ் செல்லத் தூண்டுவார்கள். ஆகவே, ரோகிணிக்குக் கேட்டை வீடு அருநரகில் வடிகட்டின பெரு நரகமாயிற்று.

இவ்வளவு அனுபவத்தின் பின்னரே ரோகிணி சித்திரையை முதல் முதலாகச் சந்திக்க நேர்ந்தது. சந்தித்ததும் மேலே சொன்னபடி ரோகிணி சித்திரையைத் தாய்போலப் பற்றினள். தானும் பெண்ணாகையாலும் வந்தவுடனே எல்லா அக்கிரமங்களையும் அனுபவித்திருந்தவளாகையாலும் சித்திரையம்மாள் ஒன்றும் கேளாமலே ரோகிணி நிலையை நன்கறிந்தாள். வயதாகி மணமுடிந்து உலக அனுபவமும் உடம்பைப்பற்றி அலட்சியமும் இயற்கைச் சகிப்பும் உடையவளாயிருந்த சித்திரையும் வந்தவுடன் மிகவும் துன்புற்றாளெனினும் ரோகிணி மாதிரிக் கொடுமையை உணர்ந்திலள். அந்த அனுபவத்தால், ரோகிணியை அவள் இப்போது தாய்போலப் பாதுகாக்க முயன்றாள். ரோகிணியைக் கூடிய வரை தேற்றினள். அவளைத் தேடி வரும் ஆண்

மக்களுக்கு இயன்றவரை சாக்குச் சொல்லி, ஒப்புக்கொள்வோரிடம் தன் உடம்பையே தத்தம் செய்வாள். இதற்கு முன்னமேயே தப்ப வழி தேடிக்கொண்டிருந்த சித்திரைக்கு ரோகிணி படும் இம்சையைக் கண்டதும், அந்தஎண்ணம் ஆயிரமடங்கு அதிகரித்தது. ரோகிணியோ நாளுக்கு நாள் மெலிந்தாள். நிழலைக் கண்டால் நடுங்குவாள். அரவங் கேட்டால் அஞ்சியோடி ஒளிவாள். ஆண்மக்களைக் கண்டால் அங்கமெல்லாம் பதறி அழுவாள். சித்திரையிடம் மாத்திரம், தான் பிறந்தது முதல் இதுவரை உணர்ந்திராத பேரன்பும் நன்றியும் காட்டினாள். நன்னிலையிலிருக்கும்போது வெளிக் கிளம்பாத நன்றியும் அன்பும் இத்தனை வேதனைப்பட்டு வந்து பிறக்க வேண்டியதாயிற்று.

தான் எவ்வளவு பாதுகாப்பினும் கேட்டை வீட்டில் ரோகிணி நெடுநாள் உயிர்த்திராளென்று சித்திரை கண்டாள். தப்பி ஓடுவதும் எளிய காரியம் அல்ல. அந் நாட்டில் எங்கேயாவது அடையாளம் கண்டுவிட்டால், அவ்வடிமைகள் பிடிபட்டு உடனே சொந்தக்காரருக்கு அனுப்பப்படுவர். அங்கு ஈன இரக்கமின்றிச் சித்திரவதை செய்து கொல்லப்படுவர். அத்துடன் கேட்டை வீடும் கோட்டை போன்றதாகையால், அதைக் கடந்து வெளிச்செல்ல முயல்வதே ஆபத்தான காரியம். எல்லாவற்றையும் ஆலோசித்து ஆதியில் சித்திரையம்மாள் தனக்கு விதித்த விதி இவ்வளவுதானென்று திருப்தியாயிருக்கத் தீர்மானித்திருந்தாள். ஆனால் ரோகிணி அவ்விடத்தில் அறிவையோ உயிரையோ இரண்டிலொன்றை இழந்துவிடுவது திண்ணம் என்று கண்டதும், தன் உயிரைப் பெரிதாகப் பாராட்டாத சித்திரையானவள், வீட்டிலிருந்து சாவதைவிட வெளிக்கிளம்பிச் சாக நேர்ந்தாலும் அது மேன்மையெனக் கருதினாள். சித்திரை இயற்கையாகவே கருணைக் குணமுடையவள்; தன் சௌகரியங்களைப் பொருட்படுத்துபவளல்ல; வருவனவற்றையெல்லாம் பொறுமையாய்ச் சகிக்கும் பெருங் குணமுடையவள். அறிவிலும் கூர்மையுடையவள்; ஆய்ந்து பதற்றமின்றிக் காரியம் முடிக்கும் பான்மையுடையவள்; ஆகையால், "கேட்டை வீட்டில் கேடுறுவதோ உறுதி. வெளியே தப்பித் திரும்பப் பிடிபட்டாலும் அக் கேட்டுக்குமேல் ஒன்றும் நேரப்போவதில்லை. ஆயினும் ஒரு சமயம் உயிரோடும் தப்பலாம். ஆகவே முயற்சி செய்வதே மேன்மை" எனத் தீர்மானித்து, அதற்கு வேண்டியன அந்தரங்கமாகத் தயார்பண்ணித் தக்க காலம் நோக்கிக் கொண்டிருந்தாள். முதலாவது தடை அவர்கள் வெண்தோல். தால்த்தக்கியர் மிகவும் நாகரிகமுற்றிருந்தபடியால், அவர் பெண்கள் இக்காலத்து நாகரிக முதிர்ந்த மக்களைப்போல முகத்தில்

பௌடர், பசை முதலிய பூசிவந்தார்கள். அவை கறுப்பு நிறத்தை வெளுப்பாக்க அமைந்தவையானபடியால் தங்கள் தூய்ய வெண்ணிறத்தை மட்டுப் படுத்துமென்று சித்திரையம்மாள் கண்டு அவற்றில் வேண்டிய அளவு தயாரித்துக் கொண்டாள். ஆண் துணையில்லாமல் அந் நாட்டில் பெண்கள் வெளியே நடமாடுவது ஆபத்தான காரியமாகையால், தான் ஆண் வேடம் பூணவேண்டிய அவசியத்தையறிந்து தன்னுடைய வைப்பாளரில் ஒருவனுடைய உடைகளைக் களவுசெய்து ஒளித்து வைத்துக் கொண்டாள். ஒருநாள் ஒரு பெரிய விருந்து நடக்கும்போது கேட்டை வீட்டில் கூட்டங் கூடியிருக்கையில், சித்திரை அவசரம் அவசரமாகத் தனக்கும் ரோகிணிக்கும் உடம்பில் பௌடரையும், பசையையும் தடவி, தான் ஆண் உடை உடுத்து, ரோகிணியைத் தால்த்தக்கியச் சீமாட்டிபோல அலங்கரித்து அவர்களைப்போல் முகவலையிட்டு மூடி, அவளைக் கை பிடித்துக் கொண்டு தைரியமாய்க் கூட்டத்திற்குள் நடந்தாள். பெருங் கூட்டத்தில் தம்மை யாருங் கவனியாதது கண்டு தங்கள் மாறு வேடம் ஒப்பேறுமென்ற தீர்மானத்துடன் நேரே வீதியை நோக்கி நடந்தாள். இருவருக்கும் உடம்பெல்லாம் நடுக்குற்றதாயினும் தம்மைக் கண்ட வீட்டு வேலைக்காரரே, “யாரோ பிரபுக்கள் விருந்துக்கு வந்தவர்” என்று தலைவணங்கி வழிவிட்டு விலகுவதைக் கண்டதும் கொஞ்சம் பயம் நீங்கி யாராலும் தடையில்லாமல் வெளிவீதி வந்தார்கள்.

சித்திரைக்கும் ரோகிணிக்கும் அவ்வூர் முன்பின் அறிமுகமில்லை. அவர்கள் முதற்கவலை எந்தவிதத்திலும் ஊர்மதிலைக் கடந்து விடவேண்டுமென்பது. இரண்டாவது, தாம் இளைத்துப் போகுமுன் கேட்டை வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் எட்டலாமோ, அவ்வளவு தூரம் அகன்றுவிட வேண்டுமென்பது. இருவருக்கும் சோரநாயகர் பலர் இருந்தாராயினும், அடிமைப் பெண்களாகையால் அவரைக் கலப்பாரைத் தவிரக் காசு கொடுப்பார் அவருள் யாரும் இருக்கவில்லை. அதை நன்கறிந்த போது, வழிச்செலவுக்காகச் சித்திரையானவள் தான் மலைநாட்டில் அணிந்திருந்த சில சிறிய ஆபரணங்களை ஒளித்துக் கைவசம் வைத்திருந்தாள் அவற்றை இப்போது ஒரு காசுக் கடையில் விற்று, பெறுமான விலைக்கு மிகக் குறைவாகவே கடைக்காரன் கொடுத்தபோதிலும், அவனுடன் வாதாடப்பயந்து கிடைத்ததைப் பெற்றுக்கொண்டார்கள். ரோகிணியைவிடச் சித்திரை நிலைமையே மிகவும் கடுமையாயிருந்தது. நடையிலும் குரலிலும் ஆண்பிள்ளைபோலப் பாவனை காட்டுவது அதிக முயற்சியாலேயே ஆகவேண்டியிருந்தது. ஆயினும் தன் சாமர்த்தியத்தால் ஒரு

விதமாகச் சமாளித்த போதிலும் மனதுக்குள் கலக்கத்திற்குக் குறைவில்லாமலே நடந்தாள். சில நாழிகை நடந்த பின் இளைத்திருந்த ரோகிணி கால் தளர்ந்து மேல் நகர முடியாதானாள். சித்திரையும் அவள் வருத்தத்தை யறிந்த போதிலும், தால்த்தக்கிய பிரபுக்கள் தெரு வீதியில் உட்காருவது சந்தேகத்திற்கு இடங்கொடுக்குமாகையால் ரோகிணியை உட்கார வொட்டாமல் பலவந்தப்படுத்தி இழுத்துக்கொண்டே போனாள். தலைநகரைக் கடந்து வெளியேறிச் சற்று தூரம் சென்றபின் ஒரு சோற்றுக் கடையடைந்து இருவரும் வயிறாரப் புசித்தார்கள். கொஞ்சம் இளைப்பாறி இருட்டுகிறவரை பின்னும் மெல்ல மெல்ல நடந்தார்கள். அன்றைய இரவு மாறுவேடத்தோடு மக்களுக்கிடையே வதியப் பயந்தவராய், ஒதுங்கின தொழுவொன்றில் உறங்கி யெழுந்தார்கள். மறுநாளும் பகலெல்லாம் பையப் பைய நடந்து இரவு ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். அங்கு வந்த மனிதரெல்லாரும், இவரைத் தால்த்தக்கிய பிரபுக்களென்று தக்க மரியாதை செய்தாராயினும், "இத்தகைய சீமான்கள் சாமான் தட்டுமுட்டில்லாமல், வேலைக்காரருமின்றிக் கால்நடையாய் வரக் காரணமென்ன," வென்று பேசத் தொடங்கினார்கள். அதுமுதல் சத்திரங்களில் தங்குவதை நிறுத்தி அக்கம் பக்கத்தில் இரவைக் கழித்தார்கள். இவ்விதம் நடந்து செல்லும்போது, நாளாக நாளாகக் கையிலிருந்த காசு குறையத் தொடங்கிற்று. வேலை செய்து பிழைக்க வகையும் அறியவில்லை. அத்துடன் அவர்கள் உடையும் வேலைக்காரருக்கு ஒத்ததாயில்லை. அதனால், ஓர் ஊர்வழியாகச் செல்லும்போது சிறு துணிக்கடை ஒன்றை யடைந்து, சித்திரையானவள் ஒரு நாடக விளையாட்டுக்காக வேலைக்காரர் உடைகள் வேண்டுமென்று வாங்கி, தாம் திரும்ப வரும் வரை தங்கள் விலையுயர்ந்த ஆடைகளைப் பணையமாகக் கொடுத்து, வேலைக்காரர் உடையில் சித்திரையும் ரோகிணியும், கணவனும் மனைவியுமாக உல்லாசமாய் வெளியேறினார்கள்.

இவ்விதம் மாற்றிய உடைகள் ஒருவிதத்தில் உபயோகமாயிருந்தாலும் வேறுவிதத்தில் இடைஞ்சலைக் கொடுத்தன. முதலாவது, இவர்கள் இருவரும் உயர்குடிப் பிறந்தோராகையால், முன்னைய உடை அவர்கள் முகச்சாயலுக்கு ஒத்திருந்தது. அத்துடன் பிரபுக்களென்று எல்லோரும் பயந்து ஒதுங்கினார்கள். அவர்கள் கால்நடையாகச் செல்வதைக் கண்டு அநேகர் சந்தேகமுறினும் உயர் குலத்தோரிடமிருந்த பயத்தினால் அவர்களிடம் மரியாதைக் குறைவாக நடக்க யாருக்கும் துணிவு பிறக்கவில்லை. எப்போதும் மதிப்பாகவே நடத்தப்பட்டார்கள். இப்போது

சாதாரண மக்கள் உடையில், அவர்கள் அவமதிக்கப்பட்டு, அடிக்கடி ஏச்சும் பேச்சும் கேட்க வேண்டி வந்தது. அத்துடன் சீமான்களைப் போன்ற முகத் தோற்றமும் தேகவனப்பும் சாவதான நடையும் அவற்றோடு பொருந்தாத வேலையாட்கள் உடையும் காணும்போது, கையிலிருந்த சொத்துக்களை விரயஞ் செய்து வறியோரான காவாலிகளென்றே கண்டோர் இவர்களைக் கருதினார்கள். ஒருநாள், வழியே சென்றுகொண்டிருந்த சீமான் ஒருவன், ரோகிணி முகத்தை வலைமூடி ஒதுங்கியபோது கண்டுவிட்டு, அவள் அழகில் மோகப்பட்டு வகைத்தப்பான வார்த்தைகள் பேசினான். சித்திரையும் தடுக்காய் அவனை அதட்டிப்பேச அவன் ஒதுங்கினவன்போலப் போய்விட்டபோதிலும், மறைவாகப் பின்னாலேயே வந்து மறுநாளிரவில் ரோகிணிமேல் கை போட்டான். சித்திரை, பெண்களுக்குள் பலசாலியே யானாலும் ஆண்பிள்ளையை எதிர்க்கும் வலிமையில்லாமல், வேறு அவனை விரட்ட வழியுங்காணமல், அவன் இடுப்பிலிருந்த கைவாளையே உருவி அவனைக் குத்தவேண்டி வந்தது. ஆத்திரத்திலுண்டான துணிவால் அவ்விதம் செய்துவிட்ட போதிலும், பாமரமக்கள் பிரபுக்களைக் கொல்வது அந்நாட்டில் மிகப்பெரிய குற்றமாகையால், அன்றிரவு முழுதும் வழிநடந்து மறுநாள் பகல்முழுதும் ஒளித்துக் கிடந்தார்கள். அவ்விதமே இரவு நடப்பதும் பகலில் ஒளிப்பதுமாகச் சிலநாள் கழித்து, அப்புறம் பெரும் பாட்டைகளை விட்டொதுங்கி மறைவாகவே வழிநடந்தார்கள். இப்படியாகப் பல மாதங்கள் நடந்து பட்டினியும் பசியும் கிடந்து பல துன்பங்களும் அனுபவித்து, "எதிரிகள் கையில் பட்டுவிடுவோமோ" என்று ஈரலைக் கையில் பிடித்தவர்களாய்க் கடைசியில் தமது சாதியார் வசிக்கும் மலையடிவாரம் வந்து சேர்ந்தார்கள். அது முதல், யாத்திரையின்போது நாள்தோறும் கவனமாய்ப் பூசிவரவேண்டி யிருந்த முகப்பசையைப் பற்றிய இடைஞ்சல் அவர்களுக்கு ஒய்ந்தது. ஆயினும் மாறுவேடத்தை மாற்றக்கூடிய கட்டம் வரவில்லை. இருவரும் முகத்தையும் உடம்பையும் நன்றாய்க் கழுவிவிட்டாரேனும், அவ்விடம் தால்த்தக்கியர் ஆளுகைக்கு முழுதும் கட்டுப்பட்டதாகையால் அங்குத் தங்குவதும் ஆபத்தென்றறிந்து மேல் ஆலோசிக்கலானார்கள். ரோகிணி வழிநடையாலும் தூய காற்றாலும் உடம்பு முன்போலத் தேறிவிட்டாளெனினும் மனப்பயம் சிறிதும் நீங்காமலே யிருந்தாள். எதிரே யாரையும் காணும்போது, "அடையாளமறிந்து கேட்டைவீட்டுக்கு அனுப்பப்படுவோமோ," வென்ற திகில், மனதில் உதித்துக் கொண்டேயிருந்தது. நிர்ப்பயமாக வாழ வேண்டுமானால் அவர்களுக்கு இரண்டே வழிகள் புலப்பட்டன. உள்மலை சென்று தம் மக்களில் சுயாதினமுடைய கூட்டத்தைக் கண்டு

பிடிக்க வேண்டியதொன்று, அல்லது தமது மதத்தைச் சேர்ந்த மடங்களில் ஒதுங்குவதொன்று என அறிந்தார்கள். எது மேன்மையெனத் தீர்மானமில்லாமலே சில நாள் வழிநடக்கும் போது, வெள்ளை மக்களுடைய கன்னியாஸ்திரி மடமொன்று தூரத்தில் தென்படவும், ரோகிணி முகத்தில் அவளை யறியாமலே எழுந்த இன்பக் குறியைக் கண்டு, தன்னை மறந்து பிறர் நலத்தையே பேணுபவளான சித்திரையம்மாள் தற்காலம் மடத்திலேயே தங்குவதாகத் தீர்மானித்தாள். ஏனெனில், சித்திரையின் இரண்டு பெண் மக்கள், சிறுமிகள், உள்மலையில் தால்த்தக்கியர் சேனை சென்று அடையக்கூடாத ஓரிடத்தில், அவள் தமையன் தங்கியிருந்த ஊரில் வளர்ந்து வந்தார்கள். சித்திரையின் தகப்பன் அசுபதியின் ஊர் தாக்கப்படுமென்றறிந்தபோது, அப் பிள்ளைகள் மாமன் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். சித்திரையும் கூடப் போகும்படி கட்டாயப்படுத்தப்பட்ட போதிலும், தன் கணவனை விட்டுப் பிரிய மறுத்துவிட்டதாலும் கணவனும் தகப்பனும் போரில் தோல்வியடைந்து இறந்துபோனதாலும், அவள் இவ்விதம் அடிமைப்பட நேர்ந்தது. ஆகவே, அம் மக்களைத் தேடி யடையவே அவளுக்காசை இருப்பது இயல்பே ஆயினும், எது நேரினும் பொறுமையுடன் சகிக்கும் சாந்தமும் பிறர் நலங்கருதும் தன்மையும் பெரிதும் பெற்றிருந்த சித்திரையானவள், ரோகிணியை நன்னிலையில் வைக்கவேண்டுவதே தன்னுடைய முதல் கடமையாகக் கருதினாள். அதனால் மற்ற ஆலோசனைகளை விட்டு இருவரும் மேற்சொன்ன மடத்தை நோக்கி நடந்தார்கள்.

அது பெண்கள் மடம். ஆண்கள் உட்செல்லுவதற்குப் பல கட்டுப்பாடுகளை உடையது. ஆனால் முற்றிலும் கன்னியாஸ்திரீ மடமல்ல. பெண்மக்களில் கன்னிகளும் மணமானவரும் மக்களைப் பெற்றவரும், உலகத்தில் வெறுப்புற்ற எந்தப் பெண்களும் அத்தகைய மடங்களிற் சென்று சேர அவர்கள் மதம் இடங்கொடுத்தது. அம்மாதிரியே உலகப் பற்றுத் திரும்பினவர்களுக்கு வெளிச்செல்லவும் அது அனுமதி கொடுத்தது. அம் மடங்களிற் பல, ஏராளமான சொத்துக்களை யுடையவை. தால்த்தக்கியர், இவர்கள் மதத்தில் எவ்விதத்திலாவது தலையிடவோ இவர்கள் மடங்களிலும் ஆலயங்களிலும் உள் நுழையவோ கூடாதென்ற கட்டுப்பாடு, அவர்கள் உடன்படிக்கையில் அமைந்திருந்தபடியால். அம் மடங்களின் சொத்துக்களும் உரிமைகளும் அழிபடாமல் அந்த வெள்ளை மக்களுக்கு நன்மை பயந்து வந்தன. இதே நிபந்தனைகளோடும் மதக் கொள்கையோடும் ஆண்களுக்கும் தனி மடங்கள் அங்கங்கே அம் மலை நாடுகளில்

சிதறிக் கிடந்தன. இங்கு குறிப்பிட்ட மடமும் அதனை அடுத்திருந்த ஆண்மக்கள் மடமும் அந் நாட்டிலேயே மிகவும் பெரியவை. இரண்டு மடங்களும் சேர்ந்து ஒரு சிறு ஊராகவே இருந்தன. சுற்றிப் பெரிய கோட்டை மதிலிருந்தது. கோட்டைக்கு வெளியே கூப்பிடு தூரத்தில் சாதாரண மக்கள் வசிக்கும் ஊரான து இருந்தது. ஊரார் யாரும், அழைக்கப்படாமல் இக் கோட்டைக்குள் வருவதில்லை. அவ்வளவு மதிப்புடன் கருதப்பட்டார்கள் மடத்துச் சன்னியாசிகளும் சன்னியாசினிகளும். இம் மடங்களுக்குள், பரோபகார முயற்சிகள் மிகுதியும் போற்றப்பட்டு வந்தன. சிலர் கோட்டைக்குள் பயிரிடல், தோட்டமிடுதல் முதலிய தொழில் செய்தனர்; சிலர் தவங் கிடந்தனர்; சிலர் கல்வி கேள்விகளில் ஆன்ம முன்னேற்றத்திற்கு மனஞ் செலுத்தினர்; மற்றும் பெரும்பாலார் உடைகளும் உணவுப் பொருள்களும் தயார்செய்து கோட்டைக்கு வெளியிலிருந்த ஏழை மக்களுக்கு உதவினர். வேறு சிலர் அவர் நன்மைக்காக வைத்தியசாலை நடத்தினர். இம் மடத்தாருக்குள் நமக்கு அறிமுகமுள்ள பழைய நண்பர்கள் அநேகர் காணப்படுகின்றனர். இத்தகைய மடங்களில் சில தீயோரும் காணப்படினும், பெரும்பாலார் கல்வி கற்றுத் தவம் பயின்று நல்வினைகள் செய்து பரோபகாரிகளாய் இன்பமாகவே வாழ்ந்து வந்தார்கள். மிகவும் இழிநிலையடைந்த அக் காலத்திய அத்லாந்திய நாகரிகத்தில் இவை போன்ற மடங்களே நல்லொழுக்கக் களஞ்சியங்களாகக் காணப்பட்டன.

தற்கால சாந்தியாக அம் மடத்தில் தங்கத் தீர்மானித்த சித்திரையம்மாள், ஆணுடையிலிருந்தபடியால் கொஞ்சம் முயற்சியுடன் உட்சென்று, மடத்துத் தலைவியைக் காணத் தனது அவாவைத் தெரிவித்தாள். மடத்துத் தலைவி பௌர்ணமி; அவள் கம்பீரத் தோற்றமும் முதிர்ந்த வயதும் கருணையொழுகு பார்வையுமுடையவள். சித்திரை தான் ஆண்பிள்ளையல்லவென்று தெரிவித்ததும், அவள் புன்முறுவல் பூத்து, அவர்கள் கதை முழுவதையும் ஆதியோடந்தமாக வினவினாள். அப்போது பௌர்ணமி சித்திரைக்குச் சிற்றப்பன் மனைவியென்றும் சித்திரை பிறக்கு முன்னமே மடத்துக்கு வந்துவிட்டதாகவும் புலப்பட்டது. பௌர்ணமி இருவர்மேலும் இரக்கங் கொண்டு, வேண்டுங்காலம் மடத்திலேயே தங்கும்படி அனுமதித்தாள்; அங்கிருக்கும்வரை யாரும் வந்து அவர்களை அடிமைகளாகக் கைப்பற்றமாட்டார்களென்று உறுதி சொன்னாள். தலையிலிருந்த பெரும்பாரம் இறங்கியதும், அதுவரை அடக்கி வைத்திருந்த கவலையினால் சித்திரை அன்றிரவே காய்ச்சலில் விழுந்தாள்.

சித்திரை நெடுநாள் சீக்காய்க் கிடந்தாள். அவளுக்கு வேண்டும் பணிவிடை பார்த்துக் கொண்டு, அவளை விட்டுப் பிரியாமலே ரோகிணியும் காவலிருந்தாள். இருவரும் இணை பிரியா நண்பரானுர்கள். பிரிய நேரிடின் மனஞ் சஞ்சலப்படு வார்கள். அவர்கள் கொண்டிருந்த திகிலும் கேட்டை வீட்டு நடபடிக்கைகளின் அருவருப்பும் மனத்தைவிட்டு நீங்குவதற்கு நெடுங்காலஞ் சென்றது. அவை நீங்குவதற்கு அனுகூலமாகப் பௌர்ணமியம்மாள் சில பிரார்த்தனைகளையும் தியான முறைகளை யும் கற்பித்தாள். இரண்டு வருடம்வரை அவர்களுக்குத் தனித் திருக்க முடிவதில்லை. தியானத்திற்கு அமர்ந்தால் அவ்வேளைகளில் பழைய திகிலும் அருவருப்பும் மனத்தில் நுழைந்து அவர்களைப் பேய் கொண்டவர்களைப் போலாக்கும். உடனே எழுந்தோடி ஏதாவது பிரவர்த்திகளில் ஈடுபடுவர். இத்தொந்தரவு சித்தி ரையைவிட ரோகிணிக்கே கூடுதலாக இருந்தது. சில சமயங் களில் ரோகிணி கோட்டிக்காரிபோல ஓடிவந்து சித்திரையைக் கட்டிக்கொண்டு விம்மிவிம்மி அழுவாள். ஐந்து ஆண்டுகளுக்கு மேலாயின, ரோகிணிக்கு இதன் கடுமை குறைய. ஆயினும் நரம் புத் தளர்ச்சியும் மனப் பயமும் சாகும்வரை இருவருக்கும் நீங்காமலேயிருந்து வந்தன. களைப்பாறிச் சில நாளில் தங்க ளூரைத் தேடிப் புறப்படலாமென்று தங்கிய இருவரும், இப் போது அஃது உத்தமமல்லவெனக் கண்டார்கள். அவர்கள் வீடு வாசல்களெல்லாம் முன்னமேயே அழிந்துபோயின. உற்றார் உறவினரும் போரில் மாண்டனர். வழியோ மிகவும் ஆபத் துடையது. ஆகையால் மடத்தில் தங்கிவிடுவதே மேன்மை யென இருவரும் தீர்மானித்தார்கள்.

அத்லாந்திய நாகரிகம் உச்ச நிலையிலிருந்து கீழிறங்க இறங்க, அத்லாந்திய மக்களும் தவமந்திரம் மறந்து அவமந்திர மாகிய மாந்த்ரிகத்தையும் சூனிய வித்தைகளையும் கைக்கொண்ட னர். அந் நாட்டுப் பிற்கால மதமாகிய வெள்ளையர் மதத்தில் இவை இகழப்பட்டபோதிலும், சன்னியாசிகளிற் சிலர் இவற்றை யும் அப்பியசித்து வந்தனர். அவருள் ஒருவன் அருகிலிருந்த ஆண்கள் மடத்தில் ராகு என்ற சன்னியாசி. அவன் ரோகிணி யைப் பார்க்க நேர்ந்தபோது அவள் "மெஸ்மரிஸம்" என்ற மனோவசியப் பழக்கத்திற்குத் தகுந்த பாத்திரமென்று கண்டான். கண்டதும் அவளிடம் கேட்டான். கேட்டதும் அவள் சித்திரை யைக் கலக்காமல் சொல்ல முடியாதென்றாள். இருவரும் சித்தி ரையைத் தேடி அவளை வினவினார்கள். சித்திரைக்கு ராகு முகத்தைப் பார்த்ததும், அவளையறியாமலே ஒரு சந்தேகமும் அருவருப்பும், அவன் தீயோனென்ற அனுமானமும் மனத்தில்

தோன்றவும், அவள் திகைப்பைக் கண்ட ராகு, அவர்களை முதல் முதல் தன் தியான அறையை வந்து காணுமாறு வேண்டிக் கொண்டான். ராகுவின் அறை, எலும்புகள், மண்டையோடுகள், மற்றும் பல அருவருப்பான சாமான்களால் அலங்கரிக்கப் பட்டு, இருண்டு, உட்செல்வோரை உடனே பயப்படுத்தத் தக்க தாயிருந்தது. அறையின் மத்தியில் ஒரு பீடத்தில் பெரிய தூபக்கப்பரை யொன்றிருந்தது. சித்திரையும் ரோகிணியும் உட்சென்றதும் ராகுவானவன் கப்பரையில் நெருப்பை நிரப்பி அதில் தூபப்பொடியையிட்டு மந்திரிக்க, மேலெழுந்த புகையில் பயங்கரமான ஒரு பெரிய உருவம் மிதந்தது. அது அடித் தொண்டையில், குழிந்த குரலில், "ராகுவின் மனோவசிய மந்திரத்தால் ரோகிணிக்கு நன்மையே உண்டாகுமாகையால் அவள் அதை அப்பியசிக்கட்டும்" என்று உத்தரவு கொடுத்தது. புகை மறையவும் அவ்வுருவமும் மறைந்துவிட்டது. பெண்கள் இருவரும், அதிசயித்தார்களென்றால் மாத்திரம் போதாது; மிகப் பயந்தார்கள். சித்திரைக்குச் சந்தேகம் அதிகப் பட்டதே யொழியத் தணியவில்லை. ஆயினும் இருவரும் தெய்வ உத்தரவை மறுக்க அஞ்சினார்களாகையால், அதுமுதல் ரோகிணியை ராகுவானவன் தன்னுடைய அறைக்கு வருவித்துப் பலதடவை வசியஞ் செய்து, நாளடைவில் சித்தியும் பெற்றான். சித்திரை மாத்திரம் எப்பொழுதும் கூடவேயிருந்து வந்தாள்.

ரோகிணி வசியத்தால் போதமற்றுக் கிடக்கும் வேளைகளில், பக்கத்து ஊரிலுள்ள செல்வர்கள், ஆண் பெண்களுடைய அந்தரங்கங்களை அவளைக் கேட்டு ராகு அறிந்துகொள்வான். பின் அவற்றைக் கொண்டு அம் மக்களைப் பயமுறுத்தி அவர்களிடமிருந்து பணம் பெறுவான். வறியவர்களிடம் அவர்கள் ரகசியங்களைச் சொல்லி, தனக்குத் தெய்விக சக்தி வாய்ந்திருப்பதாகக் காட்டி, அவர்களைப் பயப்பட வைப்பான். ஆனால் ராகு எவ்வளவு வேண்டிக்கொண்ட போதிலும் சித்திரையைப் பிரிந்து ரோகிணி தனியேவர மறுத்துவிட்டாளாகையால் அவளை முழுதும் கைவசப்படுத்த அவன் ஆலோசனை செய்தான்.

நாளாக நாளாக ரோகிணியை, தன்னிடம் வராமலிருக்கும் போதே குறித்த நேரங்களில் வசியம் செய்து புத்தி மயக்கச் சக்தி பெற்றான். அப்புறம் குறித்த நேரமின்றி இரவிலும் பகலிலும் எந்த நேரமாயினும் வசியப்படுத்தவும் பலம் பெற்றான். அப்போது சித்திரைக்கு மிகவும் மனக்கலக்கம் உண்டாயிற்று. ரோகிணி வரவரத் தன்னைவிட்டுப் பிரிந்து ராகு கைவசமாவதைக் கண்டாள். அவள்மேலிருந்த அன்பு மிகுதியால்

ராகுவின் தொழில் தீமையே பயக்குமென்று தனக்குள் உணர்ந்து, ரோகிணி மயக்கத்திற் கிடங்கொடாதிருக்கும் உபாயங்களைத் தேடினாள். அது கண்ட ராகு, திரும்பவும் தெய்வவாயிலாகச் சித்திரையை அடக்கக் கருதி, முன்போலத் திரும்பவும் தூபமிட்டு உருவத்தை வருவித்துப் பேசுவித்தான். இதற்கிடையில் பல சன்னியாசிகளுடன் பழகி அறிவிலும் கல்வியிலும் கொஞ்சம் முதிர்ந்திருந்த சித்திரை, இது ஏமாற்றமாயிருக்கலாமென்று சந்தேகித்து, மனத்தில் பயந்தபோதிலும், நடப்பதையெல்லாம் கூர்மையாகக் கவனிக்கத் தொடங்கினாள். ராகு ஒரு வட்டமிட்டு, அதனுள் இருவரையும் நிற்கச்செய்து, "வெளியே விலகினால் தெய்வம் கோபித்துக்கொண்டு பேசா"தென்று சொல்லியிருந்தான். தூபம் எழும்பும்போது அந்த உருவம் தோன்றலும் குறையும்போது அது மறைதலுங் கண்ட சித்திரை வட்டத்தை விட்டு வெளியே கொஞ்சம் விலகி நோக்கினாள். தூபம் மிகுதியாயினும் குறைவாயினும் உருவமே காணப்படவில்லை. உடனே சந்தேகம் தீர்மானமாகி, சித்திரை அறையின் நாலாபக்கங்களையும் உற்றுநோக்கவும், எங்கும் அறை இருளாகவே யிருந்தபோதிலும், கண்மறைவில் ஒரு பெரிய கண்ணாடியையும், அதன்முன் தான் பார்த்த உருவம்போன்ற பொம்மையையும், அதில் ஒளி படும்போது நிழல் கண்ணாடியில் விழுந்து அதிலிருந்து புகையில் ஏதோ தந்திரத்தால் மாயமான உருவம் காணப்படுவதையும் அறிந்தாள். அதனால் மனப்பயம் சற்று நீங்க, தெய்வ வாக்கு ராகுவின் சத்தம்போலக் காதுக்குக் கேட்டது. உருவம் பேசும்போதெல்லாம் ராகு மிகவும் பயந்தவன்போலச் சுவரோடு முகத்தை அழுத்திக் கொள்வதையும் கவனித்து, முன்பு இருவருக்கும் பயத்தை அதிகப் படுத்திய அந்த அபிநயம், இப்போது குழாய்வழியாக ராகுவே பேசுகின்றானென்ற சந்தேகத்தைச் சித்திரைக்குக் கொடுத்தது. ராகு கொடியோனுகையால் அவன் முன்பு ஒன்றும் வெளிக்காட்டாமல், ரோகிணியையும் இட்டுக்கொண்டு சித்திரை தன் மடம் வந்து சேர்ந்தாள். மறுநாள் ராகு இல்லாத சமயம் பார்த்து அவன் அறைக்குட்சென்று பாவையும் கண்ணாடியும் எடுபட்டுப் போனதைக் கண்டு, சுவரெல்லாம் தடவித் தடவிச் சோதித்தாள். ஓரிடத்தில் ஒரு மறைவுக்குள் ஒரு சிறிய துவாரம் தென்பட்டது. கொஞ்சம் துணிவுகொண்டு அதில் வாயைவைத்துப் பேசினாள். கிணற்றுக்குள்ளிருந்து பேசுகிறமாதிரி தன் சத்தமே திரும்ப வருவதைக் கேட்டுத் தானே திடுக்கிட்டாள். திரும்பத் திரும்பப் பேசிப்பார்த்தாள். ஐயமொன்று மில்லை. பின்னுந் தேடிக் குரல் வெளிக்கிளம்பும் மற்றத் துவாரத்தையும் கண்டு பிடித்தாள். அதன்வழியாகப் பேசினால், முன்னைய துவாரத்து

வழியே குரல் வருவதையும் கண்டாள். உடனே ஓடோடியும் வந்து ரோகிணியுடன் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமற் சொன்னாள். ரோகிணிக்கு இதனால் பெரிய மனப்பாரம் இறங்கியது போலாயிற்று. ராகுவினிடம் இனிமேல் செல்வதில்லை யென்று உறுதிபண்ணினளாயினும், தமக்கு மிஞ்சின வல்லமையொன்று ராகுவினிடம் இருப்பதாக இருவருமே அறிந்தார்கள். ஆகையால் அவனோடு நேரே முரண்டிக்கொள்ளப் பயந்து, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அவன் அறைக்குச் செல்வதை நிறுத்திப் பார்த்தார்கள். அவன் தொந்தரவு பின்னும் அதிகப்படவே "இனி இந்த வசியம் கூடாதென்று கணக்கன்ட" தாகச் சாக்குச் சொல்லி ஒதுங்கிக்கொண்டார்கள்.

ராகு அவ்வளவு எளிதில் நீங்குபவனல்லன். தூரத்திலிருந்தே ரோகிணியைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தான். அவளுக்குத் தன்னையறியாமலே அடிக்கடி அயர்வுண்டாயிற்று. அதைத் தடுக்கும்படி சித்திரை பக்கத்திலிருந்து ஊக்கமூட்டுவாள். இவ்விதம் சதா ஏற்பட்ட மனப்போரால் ரோகிணிக்குப் பழைய நரம்புத் தளர்ச்சியும் சுகக்கேடும் திரும்புவதைக் கண்டு கலக்கமுற்ற சித்திரையம்மாள், ராகுவை எவ்வளவு வேண்டியும் அவன் கேளாமையால், இனிக் கொடுமுயற்சி செய்யாமல் தீராதென்று நிச்சயித்து, தன் மடத்துத் தலைவியாகிய பௌணர்மியிடஞ்சென்று எல்லாவற்றையும் ஒளியாமற் சொன்னாள். தங்கள் ஆவலாதிக்காக ராகு தண்டிக்கப்பட்டால், அவன் தங்களை உயிரோடு விடமாட்டானென்றும் ஆகையால் தங்கள் பேர் வெளிவரக் கூடாதென்றும் வேண்டிக்கொண்டாள்.

ஆண்கள் மடத்துக் கதிபதி பௌர்ணமியின் தமையனான சுக்கிரன். பௌர்ணமியம்மாள் நடந்தவற்றை ஒன்றும் சொல்லாமல் ராகுவின் அறைக்குள்ளிருக்கும் சூத்திரக் கருவிகளைப் பற்றிய குறிப்பை மாத்திரம் தமையனுக்கு எழுதி யனுப்பினாள். அவன் திடீரென்று அறை முழுவதையும் சோதித்து ஏமாற்றுதலை யெல்லாம் கண்டுபிடித்து, ராகுவை மடத்தை விட்டு வெளியேற்றி, அதனால் கபடங் கண்டுபிடிப்பதில் மேதாவி என்ற பெயரும் பெற்றான். ராகு சென்றவிடம் தெரியாதெனினும், அங்கிருந்துகொண்டும் ரோகிணியைத் தொந்தரவு செய்வது கண்ட சித்திரை, ரோகிணிக்கு மயக்கம் நேரும் காலங்களில், அவள் பிரியப்பட்டுக் கற்றுத்தேர்ச்சியுற்றிருந்த யாழையெடுத்து அவள் கையில் கொடுத்து, அதனை மீட்டிக் கடவுளைத் தொழுது வசியத்தை எதிர்க்கச் சொல்வாள். அச் சமயங்களில் அவள் யாழொலி கேட்டவர்கள் அப்படியே சொக்கி நிற்பார்கள். இமை கூட அசையாமல் இன்புற்றிருப்பார்கள். ரோகிணியோ கையால்

யாமை வருடுவதைத் தவிர வேறுவகையில் உணர்ச்சியற்றவளா யிருப்பாள். ஒருவரையும் அடையாளங் காணாள். காது கேளாள். உடம்பைத் தொட்டால் ஒன்றும் உணராள். இன்று நெற்றிக் கண்ணால் ஆராயும்போது, பின்வரும் அவசியங் கருதி, கந்தரு வன் ஒருவன் அவள் மூலமாக யாழ் வாசித்தது அறியப்படுகிறது. இந்த அநுபவம் ஒருநாள் நேரின், அதன்பின் அநேக நாள்வரை ராகுவின் உபத்திரவம் அணுகாது. இப்படியே இரண்டாண்டு கழிய ராகுவின் ஆட்சி முழுதும் நீங்கியது.

தற்கால ஆரிய நாகரிகம் நெடுங்காலத்துக்குமுன் பிறந்து, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து, இப்போது உன்னத நிலைபெற்று உலகமுழுவதும் பரவி வருகிறமாதிரி, அத்லாந்திய நாகரிகமும் கடல் கொள்ளப்பட்ட அத்லாந்தியக் கண்டத்தில் பிறந்து, லட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து, அக்காலத்து உலகம் முழுவதும் பரந்து, பல்லாயிரக் கணக்கான காலம் உச்ச நிலையில் நின்று, மூப்பெய்தி, "தோன்றியது அழியாமல் தீராது" என்ற நியதிப்படி, கடல் அலைபோலக் கீழிறங்கத் தொடங்கியது. உத்தம குணங்களும் கொள்கைகளும் மாறி, மாந்தரிகமும் சிற் றின்பத் தேட்டமும் கொடுஞ் செயல்களும் பெருகவே, அக் கண்டம் கடல் கொள்ளப்பட்டு ஒழிந்தது. அதில் மீந்தவை, ருதம், தைத்தியம், என்ற இரு பெருந் தீவுகள். அவையும் கேடு காலமுற்று எண்பதிணாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடல் கொள் ளப்பட்டபோது, போஸிதானிஸ் என்ற பாகமே மீந்திருந்தது. கேட்டை வீட்டுச் செயல்களும் ராகுவின் மாந்தரிகத் தொழில் களும் அன்று அத் தீவிருந்த நிலைமையை மிகமிகச் சிறிதே விளக்குவன. அதில், மலைநாட்டு வெண்ணிற மக்கள் நகர மாந்த ரல்லாமையாலும், மலை, வனம் முதலிய இயற்கைப் பொருள்களி னிடையே வசித்து வந்தமையாலும், உணவுக்காக நெற்றிவேர்வை நிலத்தில் விழப் பாடுபடவேண்டி யிருந்தமையாலும் ஒருவாறு உத்தம ஒழுக்கத்தை அநுசரித்து வந்தார்கள். அவருள் நல்வினை யுடையவர் தப்பிக்கொள்ளும் வண்ணம், மடங்கள், முனிவர், ஆலயங்கள் மூலமாக, "போஸிதானிஸ் தீவானது முழுதும் அழியுங்காலம் அடுத்து விட்ட"தென்று, வித்தகச் சித்தர் கணத் தாரால் வெள்ளைமக்களுக்கு வெளியிடப்பட்டது. அப்போது சித்திரையும் ரோகிணியும் மடத்தை அடைந்து இருபதாண்டுக ளாயின. அந்த எச்சரிக்கை நிறைவேறும் நாள் நெருங்கிவிட்டதை யறிந்த பௌர்ணமி, மடத்திலுள்ள சன்னியாசினிகளை ஒன்று கூட்டி, "தங்கைமார்களே, நமது நாட்டுக்குப் பிரளய காலம் அடுத்துவிட்டது. போஸிதானிஸ் இன்னும் சில நாட்களில் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். அப்போது நமக்குள்

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இராது. இங்குள்ள பொன்னும் பொருளும் உபயோகமற்றுப்போம். இவ்வளவு வயசுக்குமேல் எனக்கு வேறுநாடு சென்று வாழ வேண்டுமென்ற அவா சிறிதும் இல்லை. ஆகையால் என் மேலுள்ள அபிமானத்தால் என்னோடு தங்கி இறப்பதே கடமை யென்று கருதாமல், தப்பிக்கொள்ள விரும்புவோர் வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு, உங்களுக்காகத் தயாராக வைத்திருக்கும் மரக்கலங்களிலேறிக் கடல் கடந்து வேறு நிலங்களுக்குச் செல்வீராக," என்று அன்புடன் அவர்களை ஆசிர்வதித்தாள். அவள் சொற்படியே பாதிப்பேர்வரை பதினொரு பெரிய மரக்கலங்களிலேறி ஆப்பிரிக்காவின் வடபாகத்தை நோக்கி வெளியேறினார்கள். இறக்கும்போது குடும்பத்தோடு இருக்க வேண்டுமென்று கருதிய சில சன்னியாசினிகள் தம்தம் ஊர்களுக்குச் சென்றார்கள். எஞ்சி நின்ற ஒரு பெருங்கூட்டம் பௌர்ணமி கூடவே தங்கிவிடத் தீர்மானித்து, தங்கள் முடிவைக் களிப்புடன் எதிர்பார்த்திருந்தனர். அவருள் ரோகிணியும் சித்திரையும் இருவர். சித்திரைக்கு அப்போது வயது 54. அவ்வளவு வயசுக்குமேல் அவள் எங்கும் போக விரும்பவில்லை. பௌர்ணமியைப் பிரியவும் பிரியப்படவில்லை. 39 வயது வாய்ந்த ரோகிணியும் சித்திரையை விட்டுப் பிரிந்து வாழ முடியாதென்று தீர்மானித்தாள். மேற்சொன்ன தீர்க்க தரிசன முன்னெச்சரிக்கையில் நம்பிக்கை கொண்ட வெள்ளை மக்களில் பலர் பல ஊர்களிலுமிருந்து திரள் திரளாகக் கப்பல்களேறி ஆப்பிரிக்காவையும் ஐரோப்பாவையும் அடைந்தார்கள். கடைசியாகப் பிரளயதினம் அடுத்தது.

மடத்திலுள்ள எல்லோரும் எந்த நேரத்திலும் தமக்கு அழிவு வருமென்று எதிர்பார்த்திருந்தபோதிலும், முதல் அதிர்ச்சி கண்டதும் அங்கம் பதறி, மனங்கலங்கி, வெட்டவெளி தேடித் தோட்டத்தை நோக்கி ஓடிவந்து ஒன்று கூடினார்கள். எங்கும் இருண்டது. அண்டம் வெடித்து அதிர்ந்தது. பூமி பிள்ளைத் தொட்டில்போல ஆடியது. மலைகள் பிளந்தன. மதில்களும் மாளிகைகளும் தவிடுபொடியாக நொறுங்கின. தரையெங்கும் பெரும் பிளவுகளாக வெடித்து அவற்றிலிருந்து கடல் நீரும் பூகம்பங்களும் மேலெழும்பின. இந்தக் கோர சப்தங்களால், மனிதருடைய பதைபதைப்பும், மனைவியைத் தேடுவோரும் மக்களைத் தேடுவோரும் இட்ட கதறுதல்களும் வெளிக்கிளம்ப வகையின்றி மாண்டன. அன்றைய நிகழ்ச்சியைத் தெய்வப் புலவரைத் தவிர வேறு யாராலும் வருணிக்க முடியாது. பௌர்ணமியம்மாள், தோட்டத்தில் எல்லோரையும் நிறுத்தித் தைரியங்கூறி, ரோகிணியை விளித்து ஆசீர்வதித்து, அதற்கு முன்

உலகத்தில் யாரும் கேட்டிராதவண்ணம் யாழை வாசிக்கும்படி ஏவினள். யாழைக் கையில் பிடித்ததும் ரோகிணியும் அவதார மூர்த்தியாகவே காணப்பட்டாள். அவள் கம்பீரத்தைக் கண்டு, எல்லோரும் பயம் நீங்கி அதிசயித்தார்கள். ரோகிணியை நெடு நாள் பழக்கிவைத்திருந்த கந்தருவன் இப்போது அவள் உடலில் ஆவேசித்து யாழை வாசிக்கவும், அதனின்றும் பௌர்ணமி ஆசீர் வதித்தபடி உலகோர் யாவரும் கேட்டிராத இசையின்பம் எங்கும் பரந்தது. வானத்து இடிக்கும் பூமியதிர்ச்சிக்கும் மேல் அது பொங்கியது. அவ்வொலி கேட்டோர் அனைவரும் தானற்ற துரிய நிலையில் அசைவற நின்றார்கள். கடல்நீர் மொரோ வென்று உள்வந்தபோது அவர்கள் அனைவரும் பெருமூச்சுக்கூட விட மறந்தவராய் மேலுலகஞ் சென்றார்கள். பெரும்பாலும் அவர்கள் உத்தம துறவிகளாகவும் யோகியராகவும் இருந்தபடியால், அவர்களைப் பாதுகாத்த கந்தருவன் புவர்லோகத்திலும் யாழிசையுடனேயே அத் துறவிகளை அழைத்துச் சென்று அவ்வுலக மேற்பாகத்திற் சேர்த்தான். அங்கு உலகநிலை மறந்து அனைவரும் ஆனந்தமாக அமர்ந்தார்கள்.

இவ்விதம் கி. மு. 9564-ல், அஃதாவது, இன்றைக்கு ஏறக் குறையப் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன், அத்லாந்திய மகா சமுத்திரத்தின் மத்தியில், அநேக ஆயிரம் மைல் பரப்புடைய சிறுகண்டம் போன்றிருந்த போஸிதானிஸ் தீவானது, இருந்த இடமே தெரியாமல் கடலில் முழுகி அழிந்தது. அது காரணமாக உண்டான கடல் கொந்தளிப்பினாலும் பூமி அதிர்ச்சிகளினாலும் அன்று உலகில் நேர்ந்த பல மாற்றங்களில், இமயமலை மிகமிக மேலெழும்பியது. சீனதேசத்து மத்தியிலிருந்த பெருங் கடல் வறண்டு கோபி வனமாயது. வட ஆப்பிரிக்காவில் சஹாராக் கடல் வறண்டு, அவ்விடம் கொடிய பாலைவனமாயது. எகிப்து தேசம் நீரில் மூழ்கி நெடுநாளைக்குப்பின் மேல் தோன்றியது. ஐரோப்பாவிலும் ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் கடற் பிரதேசங்களெல்லாம் நீரில் மூழ்கிக் கோடிக் கணக்கான ஆடவரும் பெண்டிரும் பிள்ளைகளும் மாண்டார்கள். கடற்கரைப் பட்டினங்களெல்லாம் எங்குமே மாற்றமடைந்தன.

பண்டொரு காலத்து ரோகிணிக்குத் தமையனாகப் பிறந்து அவளைப் பெண்டு கொண்டவனாகிய செவ்வாயும் இப்போது ஒரு தால்த்தக்கியப் பிரபுவாகப் பிறந்திருந்தான். முன்னைய அரசன் ஆயிலியனே இப்போதும் அவனுக்குத் தகப்பனாயிருந்தான். ரோகிணியுடன் பிடிக்கப்பட்ட திருவாதிரை என்றவள் ஆயிலியனால் அடிமையாகவாங்கப்பட்டாள். அவள் ரோகிணியின் சிற்றப்பனாகிய மிருகசீரளத்தின் மகள். ஆனால் அவள், பூர்வ புண்ணிய

வசத்தினால், சித்திரையும் ரோகிணியும் அடைந்த கதியை அடையாமல் கண்டவுடனேயே செவ்வாயால் காதலிக்கப்பட்டு, அவனுடைய முறண்டுப்பிடியால் அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அவனால் மணந்து கொள்ளப்பட்டாள். அடிமைப் பெண்களின் கொடிய நிலையை நன்கறிந்திருந்த திருவாதிரை அந்நாகத்தில் விமாவண்ணம் தன்னை மீட்டிய செவ்வாயிடம் மிகுந்த நன்றியும் அன்பும் பாராட்டி வந்தாள். தங்கள் நாடு கடல்வாய்ப் படுங்காலம் அடுத்தபோது, தன்னுடைய ஆலயத்திலிருந்து தனக்கு வந்த எச்சரிக்கையைச் செவ்வாயிடம் எடுத்துச் சொல்லி, "சமயமுள்ளபோதே வேண்டியவரையும் வேண்டியவற்றையும் கைக்கொண்டு வேறுநாடு சென்று வாழ்வோ" மென்று கணவனை வேண்டினாள். "பேதைப் படுக்கும் இழவூழ்" என்றபடி நல்விதி யில்லாத செவ்வாய் தன்னுடைய மனைவியை நோக்கி நகைத்து, "வித்தகச்சித்தர் கணத்தைக் கண்டவர் யார், கேட்டவர் யார்! உங்களுடைய குருக்கள்மார் கோட்டிக்காரரானது பற்றியே நீங்கள் எங்களுக்கு அடிமைகளாக வாழ்கின்றீர்கள். உனக்கு அன்னிய நாட்டில் யாத்திரை செய்யவேண்டுமென்ற அவா இருக்குமானால் இப்படி வெறும் பயமொன்றும் போடாமல், எவ்வளவுகாலம் வேண்டுமானாலும் விருப்பமுள்ள இடத்திற்குச் சென்றுவா. நீ அலைந்து அலுத்துத் திரும்ப வரும்போது நான் இறந்துபோவதற்குப் பதில் இதே நிலையில் சௌகரியமாயிருப்பதைக் கண்டு நீயே வெட்கப்படுவாய்," என்று ஏளனமாகப் பேசிவிட்டான். ஆயினும் திரள் திரளாக மக்கள் மரக்கலங்களேறி, ஆப்பிரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும், உயிர் தப்பும் பொருட்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு சொன்னாலும் செவ்வாய் நம்பாததைக்கண்டு, அவனுடனேயே இறந்துவிடத் தீர்மானித்துத் திருவாதிரையும் வெளியேற மறுத்து விட்டாள். குறிப்பிட்ட காலத்தில் பூமியில் அதிர்ச்சி கேட்டதும், திருவாதிரை சொன்னது உண்மையென்று செவ்வாய் அவளை மெச்சிக் கொண்டான். வித்தகச் சித்தர் கணத்தை ஏளனம் பண்ணியது தவறென்றும் ஒப்புக்கொண்டான். தால்த்தக்கியரில் பெரும் பாலார் அவ்விதமே இறந்தார்கள். உலகச் சிற்றின்பமே உண்மை நெறியெனக் கொண்ட அம் மக்களுக்கு வித்தகச் சித்தரைப்பற்றியே நம்பிக்கையற்றிருந்தது. ஆகையால் அப்பெரியார் உளரென்றுவது அவர்கள் வரும்பொருளுரைக்க வல்லவரென்றுவது அவர்கள் ஒப்புவதற்கு வழியில்லாதிருந்தது. ஆகவே, கண்டதே காட்சியென்ற கொள்கையைக் கொண்டிருந்த அம்மக்கள் அதற்குரிய பலனையே அனுபவித்தனர்.

குறிப்புகள்: எல்லாம் வல்ல ஈசனுக்கு மனிதனை ஒரு சிறிது ஒப்பாக்கும் சக்திகள் அஷ்டமகா சித்திகள் எனப்படும். அவற்றை

முயன்று பெற்றோர் சாதாரண மக்களுக்குக் கடவுளாகவே காணப் படுவர். அச் சித்திகளுள் ஒன்றிலோ பலவற்றிலோ பயின்று, பூரண மாகவோ அறைகுறையாகவோ பலன் பெற்றோர் சித்தர் என்று சொல் லப்படுவார்கள். அவர் சாதாரண சித்தரென்றும் ஞானசித்தரென்றும் இருவகைப்படுவர். பயின்ற சித்திகளைத் தந்நலங்கருதி உபயோகிப் பவர், சாதாரண சித்தர். இவர் ஆரம்பத்திலேயே தீவினையிலிறங்கி ஒரு சித்தியிலும் பூரணம் பெறாமல் தம் வினைப்பலனாகிய துன்பத்துட் பட்டு உழலுவர். இவரே சிறியோரும் வலியோருமாகிய பலதிறப்பட்ட மாந்தரீகரும் சூனியக்காரருமாவர். அன்றித் தனக்கென வாழாது உலக நன்மை கருதிச் சித்திகள் பயிலுவோர் ஞான சித்தரெனப்படுவர். அவருள் ஏற்பட்ட சங்கமே வித்தகச் சித்தர்கணம். வித்தகம் மெய்ஞ் ஞானம்.

என்றும் அழிவில்லாத பேரின்பமே எல்லா உயிர்களும் நாடுவன. பகுத்தறிவின்றி அவைகள் உலகச் சிற்றின்பங்களைத் தேடி உழன்ற போதிலும் உயிர்களின் நாட்டம் பேரின்பமே யாகும். உண்மையான அந்த இன்பமே முத்தியின்பம். அதனை அடைந்தோர் முத்தரெனப் படுவர். அம் முத்தி, யான் எனது என்னும் செருக்கறுத்து; காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றின் நாமமேயில்லாதபடி கெடுத்தோருக்கே கைகூடும். இந்தச் செருக்கறுத்தலும் மூன்றன் நாமங் கெடுத்தலும் அவரவரே செய்து கொள்ள வேண்டுவதைத் தவிர வேறு எவராலும் மற்றொருவருக்குச் செய்ய இயலாது. அவ்விதம் முத்தியடைந்தவர், பிறப்பு இறப்பைக் கொடுக்கும் காரணங்களில் நின்றும் நீங்கி, என்றும் பேரானந்தத்தில் அழுந்தியிருப்பர். அம் முத்தருள் ஒரு சிலர், யான் எனது என்னும் செருக்கும்; காமம், வெகுளி, மயக்கும் நீக்கமுயலும் காலத்து அதோடு அமையாது, ஆண்டவன் திருஉள்ளத்தை உலகில் நடத்தி வைக்கவேண்டுமென்னும் உறுதியையும் கைக்கொள்வர். அப் போது அதற்குவேண்டிய ஆற்றல், சித்திகளின்றி அமையாதென்று அனுபவ மூலமாக அறிவர். பக்குவங் கண்டு குருநாதர் காட்டும் பயிற்சி களால், கடுமுயற்சிகள் செய்து, இத்தகையோர் சித்தியும், முத்தியும் சேர அடைகுவர். அவர் உலகத்தைப் புரக்கும் உத்தம அதிகாரிகளாகிய அதிகார முத்தரெனப்படுவர். அவர் குழாமே வித்தகச் சித்தர்கணம். அவரே உண்மையான இறைவாகனங்கள். இறைவன் கருத்தை இம்மி •விலகாது உலகில் நடத்துபவர்கள். அவருடைய அற்புத வல்லமைகள், அவருள் ஒருவராகிய தாயுமானுரால் வெகு அழகாக வருணிக்கப் பட்டிருப்பினும் அவை உண்மைக்கு மிகவும் குறைந்த வையே யாகும். ஏனெனில் அவ்வல்லமைகள் வாக்குக் கெட்டா தவை. அந்தச் சித்தர் கணத்துட் சேர்ந்தவரே, நமது புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் வசிஷ்டர், விஸ்வாமித்திரர், வியாசர், பராசரர், மைத்திரேயர், அகஸ்தியர் முதலிய முனிபுங்கவர்கள்.

வித்தகச் சித்தர்கணத் தலைவர் சனத்குமாரர். அவர் என்றும் பதினறு வயதுடைய இளங்குமரர் என்றும் குமரக் கடவுளின் அம்ச மென்றும் நம் புராணங்கள் கூறுகின்றன.

“பகவான் ஸனத்—குமாரஸ்—த:ம் ஸ்கந்த இத்யா சக்ஷதே—த:ம் ஸ்கந்த இத்யா சக்ஷதே.” என்று கூறுவது சாந்தோக்கிய உபநிடதம் 7—(26-2). அது “பகவான் ஸநத் குமாரர்—அவரை ஸ்கந்தர் எனக் கூறுவர்.” என்று பொருள்படும். அந்த பகவான் கையில் இந்த உலகம் ஒரு சிறு பந்தேயாகும். அவருடைய நுண்ணுடம்பு நமது எழுல

கங்களையும் ஊடுருவி அவற்றிற்கு அப்பாலும் பரந்திருக்கும். ஆகவே அவரறியாமல் உலகத்தில் ஒரு தூசிகூட அசையாது. அவரையன்றி இந்த ஏழு உலகங்களிலும் ஒன்றும் இயங்காது. அவர் ஒரு நினைப்பால் நாடுகளை ஆக்குவர்; ஒரு நினைப்பால் அழிப்பர். காலங்கண்டு அவற்றை ஆக்குவதும் அழிப்பதும் அவரே. கடல்களைப் பெருக்குவர், வற்றவைப்பர். மக்களைத் தோற்றுவிப்பர், மறைவிப்பர். இவையெல்லாவற்றையும் ஆண்டவன் திருவுள்ளத்திற் கேற்பவும் அவரவர் இருவினைக்கேற்பவும் புவுலகுக்கிறைவனாகிய அவர் நடத்தி வருவார். அவர் கையின்கீழ், உலகம் முழுவதையும் ஒருங்கே ஆள்பவர் மூவர். காலத்திற்கேற்ப அரசியல் துறைகளை ஆக்கியும் அழித்தும் சீர்திருத்தியும் செய்து வருபவர் மனு ஆவர். அவராலும் அவர் அனுப்பும் மாணாக்கராலும் நாடுகள் நாகரிக முறும், தாழும். புதிய அரசாட்சி முறைகள் கையாளப்படும், பழையன கழியும். புதிய ஜாதி உடம்புகள் தோன்றும், இளைத்த மனிதவர்க்கம் மறையும். அதிகம் கேடுறாத நாடுகளும் அரசாட்சி முறைகளும் சீர்திருத்தப்படும்.

அவ்வண்ணமே கல்வித் துறையிலும் சமயத் துறையிலும் அம்முத் தொழில் புரிந்துவருபவர் மகாகுரு, ஜகத்குரு எனப்படுவர். புதிய மதங்கள் தோன்றலும் பழையன மறைதலும் உறங்கிக்கிடந்தவை உயிர் பெறலும் அவராலும் அவர் மாணாக்காராலுமே யாம்.

எஞ்சிய கலைஞானம், கைத்தொழில், உலக அறிவு முதலியவற்றிற்கு அதிபதி மகாச் சோகான் எனப்படுவர். இப்போதைய மனு, வைவஸ்வத மனு. இப்போதைய மகா குரு, மைத்திரேய பகவான். இப் பெரியாருக்குக் கீழ் ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு கண்டத்திற்கும், ஒருவரோ பலரோ சித்தர் கணத்தவர் இருந்து, இறைவன் உள்ளத்தை நடத்தி வருவர். இந்தியாவை இப்போது ஆண்டுவருபவர் அகஸ்திய முனிவர் எனப்படுவர். இதை விரிக்கின் பெருகுமாதலால், விபரமாய் விரும்புவோர் வல்லோர்வாய்க் கேட்டுக்கொள்க.

வித்தகச் சித்தர்கணத் தலைவரையும் அவர் செய்யும் பணிகளையும் அறியாதார், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப அரசியல்களும் மதங்களும் ஒருவராலேயே அமைக்கப்பட்டிருப்பதை உணராமல், "என் நாடு மேல், உன் நாடு கீழ்", "என் மதம் மேல், உன்மதம் கீழ்", என வேற்றுமை பாராட்டிக் கலகம் விளைப்பது அன்றாருக்குத் தீவினைக்கே ஏதுவாகும் அம்மாதிரியே அப் பெரியார் அமைத்த உத்தம நீதிகளையும், முறைகளையும், பின் வந்த மக்கள் சுயநலத்தால் கூட்டியும் குறைத்தும் எழுதி வைத்து, அதனால் நேரும் பழி பாவங்களை அப் பெரியார்மேல் ஏற்றுவதும் மிகப் பெருந் தீவினையாகும். இக் குறைபாடுகளை அறிந்து ஒழுகுவதே அறிவுடைமை

கோடி வழி—XV

ரோகிணி: (பெண்)—(தகப்பன்) பூரம். (தாய்) சப்தமி. (காதலன்) திங்களன் (போட்டிக் காதலர்) ஷஷ்டி, பரணி முதலியோர். (ஷஷ்டி பரணியால் கொல்லப் பட்டவன்.)

சித்திரை: (பெண்)—(தகப்பன்) அசுபதி. (தாய்) வைகாசி.

திருவாதிரை: (பெண்)—(தகப்பன்) மிருக சீரஷம். (ரோகிணியின் சிற்றப்பன்.)

கேட்டை: தால்த்தக்கியப் பிரபு. (காதற் கிழத்திகள்—அடிமைகள்) அஷ்டமி, நவமி, சித்திரை, ரோகிணி முதலியோர். (கேளிக்கைத் தோழர்கள்) அஸ்தம், ஐப்பசி, கேது முதலியோர்.

செவ்வாய்: தால்த்தக்கியப் பிரபு (தகப்பன்) ஆயிலியன் (அடிமை மனைவி.) திருவாதிரை.

பௌர்ணமி: கன்னியா ஸ்திரீ மடத்துத் தலைவி. சித்திரையம்மாள் சிற்றப்பன் மனைவி.

சுக்கிரன்: பௌர்ணமியின் தமையன். சன்னியாசி மடத்துத் தலைவன்.

ராகு: ஷை மடத்துச் சன்னியாசிகளில் ஒருவன். ரோகிணியை வசியப்படுத்துகிறவன்.

16. எற்ரூரியா—பெண்

கி. மு. 8325—கி. மு. 8260.

வயது: 65 - பின் பிதுருலகவாசம்: 1502 ஆண்டுகள்.

இன்றைக்குப் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஈரோப்பில் இற்றலிதேசத்து மேற்குக் கரையில் எற்ரூரியா என்ற பிரதேசம். அதில் இப்போதைய குரோஸட்டோ என்ற ஊரின் பக்கம். அது மிகவும் வளம்பொருந்திய பூமி. எங்குத் திரும்பினும் கொடி முந்திரிப் பந்தரும் கனிமரங்களும் பழச் செடிகளும் பார்வைக்கு மனோகரமா யிருக்கும். அத்துடன் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் அவ்வூரார் தேர்ந்தவராயிருந்தனர். அங்கு புதன் என்பவன் ஒரு பிரபல வர்த்தகனும் பெரிய நிலச்சுவானும் ஆவன். அவனுக்கு மூவர் பெண்மக்கள். அவருள் கி. மு. 8325-ல் தலைப்பெண்ணாகப் பிறந்தவள் ரோகிணி. புதன் தன் பிள்ளைகளிடம் பிரியமுள்ளவனா யிருந்தானாயினும், பிரவர்த்தியில் மிகவும் ஈடுபட்டவனாகையால், அத்துறையில் தன்னுடன் உழைக்க ஆண்மக்களில்லையென்ற கவலை கொண்டவன். ஆகையால் ரோகிணிக்கு வயது வந்ததும் அவளைத் தக்க வரனுக்கு மணஞ்செய்து கொடுத்து மருமகனைத் துணைக்கு வைத்துக் கொள்ள ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். தகப்பன் நோக்கத்தைச் சிறு பிள்ளை முதலே நன்கு அறிந்திருந்த ரோகிணி அவ்வெண்ணத்தை முற்றும் அங்கீகரிக்கவில்லை யாயினும், அதற்காக வீண் கவலைப்படாமல் தன் சிற்றன்னை மகளாகிய சுவாதியுடன் சந்தோஷமாகவே வளர்ந்து வந்தாள்.

அவ்வூரில் ராகு ஒரு சிறு வியாபாரியாயிருந்தான். அவன் முந்திய சன்னியாசிப் பிறவியிலுள்ள ஆற்றலில் ஒன்றும் குறை

யாதவனாகவேயிருந்தான். அவனுடைய சாமர்த்தியத்தையும் ஊக்கத்தையும் கண்ட புதன், அவனே தன் வர்த்தகத்தை விருத்தி பண்ணுவதற்குத் தகுதியான தோழனென்று கருதினான். ஆனதால் ரோகிணிக்கு வயது பதினேழானதும் அவள் தகப்பன், ராகுவின் 45 வயசையும் மிகையெனக் கருதாமல், தன் பெண்ணை அவனுக்குக் கொடுத்து அவனை வியாபாரத்தில் பங்காளியாக்கிக் கொண்டான். ரோகிணி ராகுவினிடம் பிரியப்படவில்லையாயினும் தகப்பன் சொல்லைத் தட்டாமல் அவனை மணந்துகொண்டாள். ராகுவும் ரோகிணியிடம் அன்பு பாராட்டவில்லையாயினும் அவளிடம் கொடுமையாய் ஒன்றும் நடந்து கொள்ளவில்லை. ரோகிணியையோ அவள் மனப்பாங்கையோ புதனும் ராகுவும் சிறிதும் கவனித்தவரல்லர். வியாபாரத்தை விருத்திபண்ணுவதில் தகப்பனுக்கும், அவ்வளவு பெரிய வர்த்தகனிடம் பங்காளியாக வேண்டுமென்ற அவா ராகுவிற்கும் இருந்ததால், அவையே அந்தச் சம்பந்தத்திற்குத் தூண்டு கருவிகளாயிருந்தனவே தவிர, வேறு அன்பாவது அபிமானமாவது அந்தக் கலியாண விவகாரத்தில் இடம்பெறவில்லை. என்றாலும் மருமகன் சாமர்த்தியங்கண்டு மெச்சிக்கொண்ட மாமன், சிறிது காலத்தில் கடையிலிருந்து பெருந்தொகைகள் காணாமற் போவதைக் கண்டான். வெகு சிக்கிரத்தில் ராகுவின் தொழில் முறையும் சாமர்த்தியமும் முறை கடந்ததாகவும் மனச்சாட்சிக்கு மிஞ்சியதாகவும் அறிந்தான். அதனால் கொஞ்சநாளில் இருவருக்கும் பெரிய மனஸ்தாபம் உண்டாக, ராகு கோபித்துக் கொண்டு ரோகிணியுடன் மாமன் வீட்டைவிட்டு வெளியேறினான். ரோகிணியும் கூடச்செல்வதைப் புதன் ஆக்ஷேபித்த போதிலும், சட்டப்படி அதைத் தடுக்க அவனுக்கு இயலவில்லை. ஒருபிடியுங் கொடாமல் ராகு தன் வஞ்சகத் தொழிலை நடத்தி வந்தானாகையால், புதன் எவ்வளவு விரும்பின போதிலும் ஏமாற்றத்திற்கு சாக்ஷிவிடவாவது அதன் மூலம் தன் மகளுடைய மணத்தை ரத்துச் செய்யவாவது அவனுக்கு மார்க்கங் கிடைக்கவில்லை. வெளியேறின ராகு வேறொரு தெருவில் வியாபாரந் தொடங்கி மாமனிடம் பறித்த பணத்தைக்கொண்டு பழைய ஒழுங்கற்ற முறைகளிலேயே அதைப் பெருக்கி வந்தான்.

தனி வியாபாரந் தொடங்கினது முதல் அதில் அதிகக் கருத்துச் செலுத்தின ராகுவுக்கு ரோகிணியைக் கவனிக்க அவகாசங் கிடைக்கவில்லை. அதனால் தன்னை நேசிப்பார் யாருமின்றி ஒண்டியாய் நேரம் போக்கின ரோகிணியும், சோற்றுக்கில்லாச் சோம்பேறியாய் அடுத்த வீட்டில் வசித்துவந்த அனுஷமும், ஒருவரை யொருவர் கண்டு காதல் கொண்டார்கள்.

காதல் களவொழுக்கமாக மாற, அவர்கள் கொஞ்சிக் குலாவுவதற்கு ராகுவின் வீடு இடைஞ்சலாயிருப்பதைக் கண்டு, இருவரும் கணவனுக்குத் தெரியாமல் கையில் கிடைத்த தட்டுமுட்டுகளை எடுத்துக்கொண்டு, ஊரைவிட்டோடிப் பக்கத்தூரில் தங்கி, அன்றன்று கிடைக்கும் வேலைகளில் அமர்ந்து, மிகவும் சந்தோஷமாய்க் காலங்கழித்து வந்தார்கள். இதனால் அவமானமும் ஆங்காரமும் கொண்ட ராகு அவர்கள் சென்றவிடமறியாவிடினும் கண்ணுக்குத் தென்படின் சரியானபடி பழிவாங்குவதாகச் சபதஞ் செய்து கொண்டிருந்தான். இதைக்கேட்ட புதன் புளகாங்கிதங் கொண்டு, ராகுவை மேலும் கேவலப்படுத்தவெண்ணித் தன் மகளும் அவள் கள்ளக்காதலனும் திரும்ப வருவாராயின் தன் வீட்டிலேயே அடைக்கலம் புகலாமென்று பகிரங்கப்படுத்தினான். அது கேள்விப்பட்ட இளையோர் இருவரும் அப்படியே வீடு வந்து சேர அவர்கள் புதனால் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள். ராகுவுக்குண்டான கோபத்திற்களவில்லை. தன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதற்காகச் சர்க்கார் மூலம் நடவடிக்கை தொடங்கும் போது அவன் வியாபாரத்தில் செய்த சில பெரிய ஏமாற்றங்கள் வெளிப்படவே, அரசாங்கத்தார் அவன் சொத்தைப்பறித்து அரசுரிமைகளை நீக்கி அவனையும் நாட்டை விட்டு வெளியேற்றினார்கள். ரோகிணியின் மனமும் இதனால் ரத்தாகிப் போகவே அவள் அனுஷத்தை முறைப்படி மணந்து கொண்டாள்.

புதிய மருமகன் ராகுவைப்போல உலகப்பிரவர்த்திகளில் கூர்மையோ உற்சாகமோ அற்றவனாயிருந்தாலும், தன்னாலியன்றவரை உண்மையாய் உழைத்துப் புதனோடு வியாபாரத்தைக் கவனித்து வந்தான். ரோகிணியும் அவனும் மிகுந்த அன்பாயும் இன்பமாயும் காலங்கழித்தார்கள். ரோகிணி அநேக வழிகளில் முற்பிறப்புக்களைவிட இப்போது முன்னேறியிருந்தாள். அவளுடைய பிடிவாத குணம் அதிகங் குறையாமலேயிருந்தபோதிலும், கொடுங்குணங்களில் அநேகம் சுடுகாடு செலுத்தப்பட்டு, அவளுடைய அன்பு மிகவும் மேம்பட்டு வளர்ந்திருந்தது. அனுஷத்தை மணந்து கொஞ்சநாளில் அமாவாசனென்ற மகனையும், தசமி யென்ற மகளையும் பெற்றாள். அமாவாசன் அழகான பையன். சிறுவயசிலேயே மிகவும் புத்திசாலியாகக் காணப்பட்டான். பெற்றோரும் பாட்டனும் அவனைப் பெருமையாகப் பாராட்டி வந்தார்கள். ஆனால் பிறந்தது முதலே இளைத்திருந்த தசமி ஏழு வயசில் இறந்துபோகவும், அதனால் ரோகிணியடைந்த துன்பத்தை ஆற்ற யாராலும் முடியவில்லை. அவள் சிற்றி மகளும் தோழியுமான சுவாதி, வியாழனை மணந்து பெற்ற நாலு மக்களில்

சித்திரை என்ற பெண் தசமி வயதாயிருந்தபடியால், இரு குழந்தைகளும் எப்போதும் ஒன்ருகவே விளையாடிக்கொண்டிருப்பார்கள். தசமி இறந்த காலத்தில் ஊரில்கண்ட கொள்ளை நோயில் சுவாதியும் அவள் கணவனும் ஒன்ருக இறந்து போகவே, ரோகிணியானவள் தாய்தகப்ப னில்லாப் பிள்ளையாகிய சித்திரையைத் தமையன்மாரிடம் கேட்டுப்பெற்று, அவளைத் தன் குழந்தையாகவே கருதித் துன்பம் ஒருவாறு தணிந்தாள். பூர்வ சம்பந்தச் சித்திரையும் ரோகிணியைத் தாயாகவே கருதி நேசித்து வந்தாள். மகள் இறந்தது முதல் ரோகிணி அமாவாசன் மேல் வைத்த அன்பு பத்து நாளுகப் பெருகியது. சித்திரையும் அமாவாசனும் எப்போதும் ஒன்ருகவே திரிவதும் ஆடுவதும் பாடுவதும் கண்ட பெற்ருேர்கள், அவர்கள் பின்னல் மணந்து தங்கள் மனத்தைக் களிப்பிப்பர் என்று கருதிச் சந்தோஷப்பட்டார்கள்.

ஆனல் "தானென்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்த" தென்ற மாதிரி, இரண்டு குழந்தைகளும் வழக்கம்போலொரு நாள் கடற்கரையில் ஒரு பாறைப் புறத்து விளையாடிக்கொண்டிருக்கும் போது, அமாவாசன் கால் சறுக்கிக் கடலுக்குள் விழுந்து நீரில் மூழ்கி இறந்தான். அது செவிக்கெட்டியபோது ரோகிணி வெறிகொண்டவளானள். தன்னையே மறந்து தலைவிரிகோலமாய்க் கதறிக் கொண்டு கடற்கரையை நோக்கி ஓடினள். அங்கு அமாவாசன் உடம்பை நீரில் நின்றும் எடுத்து அவள் முன் இட்டபோது மகன் இறக்கவேயில்லை யென்று அலறினள். அவனுயிரைக் கொண்டுபோகுந் துணிவுடைய தெய்வமும் உண்டோ வென்று அகங்காரத்துடன் பழித்தாள். மகன் உயிர்த்தெழாதவரை தான் உயிர்வாழ்வதில்லையென்று சபதஞ் செய்தாள். அவ்வூர் ஆலயத்தில் குருக்களாயிருந்த கார்த்திகை வந்து "எல்லாம் பழவினைப்படி நடக்குமென்றும் இறப்பது உலக இயல்பு தானென்றும் கடவுள் கட்டளைக்குக் கீழ்ப்படிவதே மனிதருக்கு முறையென்றும்," ஆறுதல் சொன்னவரிடம் ரோகிணி சீறி விழுந்து, ஒரு கடவுளுக்கும் தான் பணிவதில்லை யென்று கூறிக் காளிதேவி மாதிரி பொங்கி எழுந்து தன் மகன் உயிர் திரும்ப வருக என்று ஒரு அகோரமான பிரார்த்தனையால் கட்டளையிட்டாள். அவள் குரலையும் உக்கிரத்தையும் கேட்டு அங்கு நின்ற எல்லோரும் நடுங்கினர்கள். தெய்வமே நடுங்கிற்றென்று சொல்லவேண்டியதும் வந்தது. ஏனெனில் எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் அமாவாசன் கால் கைகள் முதலில் அசையத் தொடங்கின. பின் உடம்பு சூடு கொடுத்தது. மூச்சு வந்தது. சற்றுநேரத்தில் இறந்தவன் தலை தூக்கி எழுந்து உட்கார்ந்தான். ரோகிணி அடங்கா மகிழ்ச்சியுடன் சிரிப்பதும்

அழுவதுமாய் அவனை மார்போடு சேர்த்துத் தழுவிக்கொண்டாள்.

அமாவாசனே முற்றிலும் மாறியவனுகக் காணப்பட்டான். அங்கு நின்ற ஒருவரையும் அவன் அடையாளங் காணவில்லை. கண்களில் எப்போதும் உள்ள அன்புபோய், இப்போது வெறுத்த பார்வையாக எல்லோரையும் நோக்கினுன். இறந்த பின் தன்னைத் திரும்ப வருத்தியவர் யாரென்று அவன் கோபப்படுவதாகச் சிலர் கருதினுர்கள். அன்புமிகுதியால் அழுகையும் சிரிப்புமாய் அவனைச் சேர்த்து ஆர்வத்துடன் அணைத்துக் கொண்ட தாயை உதறியெறிந்தான். அதைப் பெரிதாகப் பாராட்டாமல் எல்லோரும் அவனை வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். நாளாக நாளாக, பெற்ருேர் பெருமையுடன் பாராட்டிய அவனுடைய நற்குணங்களுக்குப் பதிலாக, இப்போது கோபமும் குரங்குப் பிடியும் பொய்யும் களவும் சூதும் புரட்டுகளுமே அவனிடம் காணப்பட்டன. தகப்பன் அறியாமலும் ஊரார் இகழாமலும் இருக்கும் பொருட்டு அவன் களவு செய்த இடங்களில் ரோகிணியே இரகசியமாய் ஈடுகொடுத்து வந்தனள். வீட்டிலும் அவன் சித்திரையையும் ரோகிணியையும் பலவிதங்களில் இம்சைப் படுத்தலானுன். அவன் குண வேறுபாட்டைக் கண்டது முதலே, திரும்ப உடலில் புகுந்தது பழைய அமாவாசனல்லவென்றும், கொலையுண்ட இழிகுலத்துப் பேயென்றும் தகப்பனுகிய அனுஷம் சொல்லிவந்தான். ரோகிணி இதை ஒப்பவில்லையாயினும், தான் செய்த அபசாரத்திற்குத் தெய்வம் சரியானபடி தண்டித்து விட்டதென்று பூரணமாய் உணர்ந்து, வெளிவிடாவிட்டாலும் மனதில் மிகவுந் துன்பப்பட்டாள்.

மகன் பெரியவனுகுமுன் அனுஷம் இறந்துவிட்டான். அது முதல் அமாவாசனை அடக்குவார் யாருமில்லை. தகப்பனும் பாட்டனும் பாடுபட்டு விருத்தி பண்ணியிருந்த வியாபாரத்தை அவன் அழித்தான். வீட்டுச் சொத்து முழுவதையும் பாழ்படுத்தினுன். தாழ்ந்த குலத்திற் பிறந்த மூலம் என்ற ஒரு வேலைக்காரப் பெண்ணைக் கற்பழித்து அதனுல் ஏற்பட்ட அவதூற்றைப் பெருமையாய் ஊரெங்கும் எடுத்துப்பேசி, அவனைக் கண்டிப்போரிடம் அவளை மணந்து கொள்ளப் போவதாகவும் சொன்னுன். குலமென்றும் குடும்பமென்றும் அந்தஸ்தென்றும் அவன் சிறிதும் கவனிக்காதவனுயினும், உண்மையில் மூலத்தை மணந்துகொள்வதாக அவனுக்கு எண்ணமில்லை. உயர் குலத்துப் பிறந்த ரோகிணி இச் சம்பந்தத்தை ஒப்பமாட்டாளாகையால், அக் காரணத்தைக் கொண்டு அவள்மேல் பழி சுமத்தவே இவ்விதம் சூழ்ச்சி செய்தான். அதை யறியாத ரோகிணி, குலத்திற்கு

மானக்கேடுண்டாவதைப் பற்றி வெறுத்துப் பேசவும், தன் தாய் மூலத்தின்மேல் பகை கொண்டிருப்பதாக எங்கும் பறை சாற்றினான். இப்படி எல்லா எச்சரிக்கைகளும் செய்தபின், ஒருநாள் மூலத்தை இரகசியமாய் இரவில் தன் வீட்டிற்கு வரும்படி ஏற்படுத்தி, அடுத்த ஊர் போவதாய் அயலாரிடஞ் சொல்லிவிட்டு, தன் வீட்டண்டையே ஒரிடத்தில் மறைந்துகொண்டான். ஒன்று மறியாத மூலம் ஊரடங்கிய பின் வரவும், அவனை ரோகிணியின் கத்தியொன்றால் தன் வீட்டு நடையிலேயே வெட்டி வீழ்த்தி, ஆயுதத்தையும் அங்கேயே எறிந்துவிட்டு, மறைந்திருந்த அமாவாசன் இரவே அயலூர் சென்றான். காலையில் ஊரெங்கும் பெருஞ் சந்தடியாயிற்று. பல நிமித்தங்களுஞ் சேர்ந்து ரோகிணிமீதே பெருத்த சந்தேகத்தை உண்டுபண்ணிய தாயினும், அதிகாரிகள் நடத்திய விசாரணையில் அவளைக் குற்றப்படுத்த ஒரு ஏதுவும் கிடைக்கவில்லை. ரோகிணி வீட்டு நடையில் கொலை நடந்ததே அவள்மேல் குற்றமில்லையென்பதற்குப் பலமான சாக்ஷியாயிற்று. ஆயினும் உண்மைக் குற்றவாளிக்குத் துப்பு அகப்படவுமில்லை. ஆகவே குற்றம் புலப்படாமலே போயிற்று. ரோகிணி அரச தண்டனைக்குத் தப்பினளாயினும் ஊர் வசைக்குத் தப்ப முடியவில்லை. நெடுங்காலம் வரை அவளை நன்மை தின்மைக்கு யாரும் அழைப்பதில்லை. தன் மகனே இக்கொலை புரிந்தவனென்று நன்கு தெளிந்த ரோகிணி, அவனைக் காக்கும்பொருட்டு மௌனமாகவே இருந்துவிட்டாள். யாதொரு சந்தேகமும் எண்ணாத சித்திரை மாத்திரம், தன் சுவீகாரத் தாய் நிரபராதியென்பதை நிரூபிக்கக் கொதித்துக் கொண்டேயிருந்தாள்.

வெளியூர் சென்ற மகன் திரும்ப வந்து வீட்டில் அரைகுறையிருந்த பொருள்களையும் விரயஞ்செய்து சித்திரையையும் ரோகிணியையும் வறுமையில் வருந்தவிட்டுத் தான் செல்லுமிடஞ் சொல்லாமலே சென்றுவிட்டான். இதற்குமுன் கொஞ்சநாளாக, சித்திரைமேல் காதல் கொண்டிருந்த அவள் உறவினனாகிய வைகாசி, தன்னை மணந்துகொள்ளும்படி அவளை அடிக்கடி வேண்டிக் கொண்டிருந்தான். சித்திரையும் அவனிடம் காதலுடையவளாகவே இருந்தாள். இருவர் குடும்பங்களும் அவர்கள் மணத்திற்கு இசைந்தேயிருந்தன. ஆயினும் தன் தாயைப்பற்றிய பழிமொழி நீங்கும்வரை; சித்திரை மணஞ்செய்ய மனதில்லாதவளாய்க் கடத்தி வந்த படியால், இப்போது வீட்டு வறுமையையும், ரோகிணிமேலுள்ள வசை நீங்க வகையில்லாமையையும், வைகாசி பரிந்து எடுத்துச் சொன்னதின் பேரில், இருவரும் மணந்துகொண்டார்கள். அதுமுதல் வைகாசியும் அழிந்துபோன வியாபாரத்தைத் திரும்பவும் படிப்படியாக

விருத்திபண்ணினன். ரோகிணியும் வறுமை நீங்கிச் சித்திரை பெற்ற பிள்ளைகளை வளர்ப்பதிலேயே பொழுதைப் போக்கி அந்த அன்பினல் இறக்கும்வரை இன்பமாகவே வாழ்ந்து வந்தாள்.

அப்போது வயது சென்றவராயும் யோகம்பயின்று சூட்சும திருஷ்டியுடையவராயும் பல சிஷ்யருடன் ஆலயப்பூசை நடத்தி வந்தவருமாகிய கார்த்திகை என்பவர், ரோகிணியிடம் வந்து, அமாவாசன் உடம்பில் புகுந்தது அஷ்டமனென்றும், அவன் இழிகுலத்திற் பிறந்து கொலை களவு முதலியவற்றில் பயின்று அக்கொலையாலே மாண்டு பேய்வடிவமாகத் திரிந்தபோது, ரோகிணியின் விவேகமற்ற செய்கையால் அவள் மீதிருந்த பழம் பகையைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு அந்த உடலில் புகுந்துகொண்டானென்றும் எடுத்துச் சொன்னர். அதற்கு நெடுங்காலத்திற்கு முன்னேயே ஊரைவிட் டகன்ற அமாவாச னைப்பற்றி அரைகுறை கவலை வைத்திருந்த ரோகிணி, இது கேட்டது முதல் அக் கவலையும் நீங்கினள். அவள் இறந்தபோது அவளுக்கு வயது அறுபத்தைந்து. இறந்து திரும்பப் பிறக்க 1502-ஆண்டுகளாயின.

கோடிவழி: XVI

பௌர்ணமி: (மகன்) ஆதி (மகள்) சுவாதி.

ஆதி: (மகன்) திருதிகன், மேடதேவர்.

திருதிகன்: (மனைவி) துவாதசி.

சுவாதி: (கணவன்) வியாழன். (மகள்) புரட்டாசி, சித்திரை. (அக்காள்மகள்) ரோகிணி.

ரோகிணி: (தகப்பன்) புதன். வியாபாரி. (கணவன்) 1. ராகு. 2. அனுஷம். (மகன்) அமாவாசன் (மகள்) தசமி. (அபிமான புத்திரி) சித்திரை.

அஷ்டமன்: இறந்த அமாவாசன் உடம்பில் புகுந்த இழிகுலப்பேய்.

சித்திரை: (கணவன்) வைகாசி. (மகன்) புனர்பூசம் (மகள்) மகம்.

மகம்: (கணவன்) மிருக சீரஎம்.

மூலம்: அஷ்டமப் பேய் வடிவ அமாவாசன் இழிவுபடுத்திக் கொன்ற கீழ்குலப்பெண்.

கார்த்திகை: பூஜாரி—ஞானி, (மனைவி) பங்குனி.

அஸ்தம்: (மனைவி) பூசம்.

17. தார்த்தாரி—பெண்

கி. மு. 6758—கி. மு. 6706

வயது: 52—பின் பிதுருலகவாசம்: 1077 ஆண்டுகள்

ரோகிணி, பத்தாவது பிறப்பில் காணாமற்போன மகனைத் தேடுகையில், கூடப்பிறந்த ராகுவைக் கொன்ற தார்த்தாரி தேசத்தில், அன்றையிலிருந்து சுமார் பதினாயிர வருஷங்கள் கழிந்திருந்தும், அத் தார்த்தாரியர் இன்னும் அதே நாகரிக நிலையிலேயே இருந்துவந்தனர். முன்போலவே அவர்கள் ஸ்திர வாசமின்றி ஊருராய் அலைந்து வந்தனர். ஆனிரைகளே அவர்கள் சொத்துக்கள். அவற்றிற்கு மேய்ச்சல் தேடி அலைவதே அவர்கள் வாழ்வு. தோல் வியாபாரமே அவர்கள் தொழில். தங்கள் பாதுகாப்பிற்காக அவர்கள் கூட்டங் கூட்டமாய் ஒரு தலைவன் கீழ் ஒன்றுசேர்ந்து அலைவார்கள். அக் கூட்டமொன்றில் துதிகன் ஒரு சீமான். அவனுக்கு ரோகிணி கி. மு. 6758-ல் மகளாய்த் தோன்றினாள். துதிகன் தலைவனுக்கு நெருங்கிய உறவினன். மிகுந்த ஆனிரைகளையு முடையவன். ஆகவே ரோகிணிக்கு வயதுவந்ததும் தலைவன் மகனாகிய அஸ்தத்திற்கு மகளை மணஞ் செய்து, தன் பேரன்மாரைத் தலைவராக்க அவாக்கொண்டிருந்தான். ஆனால் ரோகிணி சம்பந்தப்பட்ட வரையில் எப்போதும் போலவே, அவள் பெற்றோர் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது. ரோகிணியின் அண்டை வீட்டுக்காரன் அவிட்டம் என்ற வாலிபன்; முன்னம் தென்னிந்தியாவில் மரகதக் கல்லுக்காக ரோகிணியால் கொலை செய்யப்பட்ட கடன்காரன். அவனுக்கு வயசு பதினேழும் ரோகிணிக்குப் பதினைந்தும் ஆகுமுன்னரே இருவருக்கும் களவொழுக்கம் ஏற்பட்டு ரோகிணிக்கு வயிறு வாய்த்தது. இது வெளி வந்தபோது ஊரில் பெரிய மதிப்புக் குறைவும் அவமானமும் ஏற்பட்டது. தகப்பன் அடங்காக் கோபங் கொண்டான். கள்ளக் கணவனைக் கண்டு பிடிக்கக் கூடியவரை முயன்றான்; ரோகிணியை அடித்தான்; திட்டினான்; பயமுறுத்தினான். என்ன இம்சைசெய்தும் ரோகிணி உண்மையைச் சொல்ல மறுத்துவிட்டாள். "தன் பேரிலும் குற்றமிருக்கும் போது பிறரைத் துன்பத்திற் குள்ளாக்கு வானேன்" என்ற அவள் தீர்மானம் அவளுடைய பெருங் குணத்தையும் முன்னேற்றத்தையும் நன்கு தெரிவிக்கும். அவிட்டமும் பயந்து மிகவும் கோழைத்தனமாக மௌனமா யிருந்துவிட்டான். அதனால் அநேகர்மேல் சந்தேகம் பிறந்தபோதிலும், அவிட்டத்தின் சிறு வயதை எண்ணி அவனை யாரும் சந்தேகிக்கவில்லை. கள்ளக் கணவனைக் கண்டு பிடிக்காததால் ரோகிணி

அம் மக்களுக்குள் உடைந்த பாண்டமானாள். அதனால் அவள் வாழ்வு முழுவதும் பாழ்பட்டபடியால், அவிட்டத்திற்குச் செல்ல வேண்டிய பழைய கடன் இப் பிறப்பில் தீர்ந்தது போலும்.

ரோகிணிக்குத் தசமி யென்ற பையன் பிறந்தான். இத் தசமியும் முன்னம் தென்னிந்தியாவில் ரோகிணியால் கொலை யுண்டது ஞாபகமிருக்கலாம். தகப்பனில்லாப் பிள்ளையெனவே உற்றாரும் ஊராரும் அக் குழந்தையை இழிவாகவே எண்ணினார்கள். அதைப் பரிகரிக்கவேண்டிய வகைக்கு ரோகிணி தன் உயிரையானாலும் கொடுக்கத் தயாராயிருந்தாள். தலைவனுடைய சம்பந்தம் விட்டுப்போனதைக் கண்ட துதிகன், மகளிடம் மிகுந்த வெறுப்புக்கொண்டான். தாயும் பிள்ளையும் வீட்டில் அவமதிப்பாக நடத்தப்பட்டார்கள். குடும்பத்தார் அவளைப் பெரிய காற்கட்டாக எண்ணினார்கள். செல்வத்தில் பிறந்து வனப்பும் இளமையும் வாய்ந்திருந்தும் அவை ஒன்றும் பலன் படாமல் ரோகிணி காமத்தினால் கால் தவறிக் கதிகெட்டுப் பரதவித்தாள். இக் கொடுந் துன்பத்தில் கொஞ்ச நாள் கழிந்த பின், அவளைத் தேடி ஒரு மணமகன் வந்தான். அவன் மிகவும் எளியவன். ரோகிணியுடன் பள்ளியில் படித்தவன். அவன் நெடுநாளாக ரோகிணியிடம் காதல்கொண்டிருந்தான். ஆயினும் இருவருக்கும் இருந்த பதவி வித்தியாசத்தில் அவளை மனைவியாகப் பெறலாமென்று சொப்பனத்திலும் நினைத்திருந்ததில்லை. தசமி பிறந்த ஐந்தாவது வருஷத்தில், செழிப்பிற்கு வகையில்லையாயினும் மனைவியுடன் வயிறார உண்ணலாமென்ற நிலைமை அவனுக்கு வந்ததும், அவன் ரோகிணியிடம் சென்று தன் நெடு நாளைய காதலைத் தெரிவித்தான். அவளை மனைவியாக விரும்பத் தக்க பதவி தனக்கில்லையாயினும், அவள் படுந் துன்பத்தை மாற்றக் கிடைப்பதே தனக்குப் பெரிய பேறென்றுந் தெரிவித்தான். செயலாயிருப்பின் ரோகிணி அவனை ஏறிட்டுக்கூட நோக்காளாயினும், தன்னுடைய சீரழிந்த நிலையில் அவன் தன்னைக் காதலித்ததே அதிசயமென்றுணர்ந்து, அவனிடம் மிகுந்த நன்றி பாராட்டி, அவனை மணந்துகொள்ளச் சம்மதித்தாள். அக் கணவன் பண்டைய மங்களன்.

அவன் ரோகிணியையும் அவள் மகனையும் மிகுந்த அன்புடன் பாதுகாத்து வந்தான். ரோகிணியும் அவனோடு திருப்தியாகவே வாழ்ந்தாளாயினும் ஐந்து வருஷம் அவளடைந்த அவமானத்தால் மனமுடைந்தவளாகவே யிருந்தாள். அத் தீமையும் நன்மை பயக்காமலில்லை. அதனால் பிறர் துன்பங் கண்டவிடத்துத் தன் துன்பத்தை நினைந்து அவரிடம் கருணை கொண்டாள். அக் கூட்டத்தாரில் தன்னைப்போல் அநாதைப்

பட்டவரிடம் அனுதாபங் கொண்டு, தன் கணவனிடமும் அப் பெண்களுக்காகப் பரிந்துபேசித் தன்னால் கூடிய விதங்களிலெல்லாம் அவர்களை ஆதரித்து வந்தாள். ரோகிணியைப் போல இழுக்குப்பட்ட பெண்களில் மூலம் என்றவள் ஒருத்தி. அவள் பெற்றோர் மிகவும் கல்நெஞ்சராய் வேறொரு கணவன் வரும்வரை அவளை வீட்டில் வைத்துக் காப்பாற்றாமல், சோறுங் கூறையுமின்றி அவளை வெளியே துரத்திவிட்டார்கள். ரோகிணிக்குக் குடும்பம் பெருகி, அவர்கள் வரவு விட்டுச் செலவுக்கே போதாதிருந்தும், மூலத்தையும் அவள் குழந்தையையும் தமராகவே கருதித் தன்னுடன் தங்கும்படி செய்தாள். ஆயினும் மூலத்திற்கு ரோகிணியிடம் ஏதோ திகிலொன்று இருந்து கொண்டேயிருந்தது. மூலம் முதலாவது பிறப்பில் ரோகிணிக்கு மனைவியாயிருந்து அவனால் கொலையுண்டவள். ரோகிணி இப்போது அவளிடம் எவ்வளவு அன்புடனும் ஆதரவுடனும் ஒழுகினும், மூலம் தன்மேல் சந்தேகமும் பயமும் கொள்வதைக் கண்டு, அவை பழைய வினையின் பலனென்றறியாத ரோகிணி, தானும் அவளைப்போல் ஒரு காலத்தில் தவறி நடந்தவள் தானென்றும் அதனால் அவளைக் குற்றவாளியென்று தான் கருதவில்லையென்றும் மூலத்தைத் தேற்றினான். பழகப் பழக மூலத்திற்கும் இவள்மேல் அன்பும் நம்பிக்கையும் பிறக்கவே, தன்னைக் கற்பழித்தவன் தலைவன் மகனாகிய அஸ்தமென்று அந்தரங்கமாய் ரோகிணியிடம் வெளியிட்டாள். அந் நாட்டு முறைப்படி, கபடஞ் செய்தவன் இன்னானெனத் தெளிவிக்கக் கூடுமானால் அவனுக்கே அவன் கற்பழித்த பெண்ணை மணஞ் செய்துவிடுவது வழக்கம். ஆனால் மூலமோ சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். அஸ்தம் உயர் குடும்பத்தவன். அவருக்குள் சம்பந்தம் வழக்கமில்லை. அத்துடன் அஸ்தம் தலைவன் மகன்; தகப்பனுக்குப் பின் தலைவனாக வேண்டியவன். சமீபத்தில் ஒரு உயர் குலத்துப் பெண்ணோடு வெகு விமரிசையாக மணஞ் செய்விக்கப்பட்டவன். ஆகையால் உண்மையை வெளியிடுவதால் அனுகூலமிராதென்று ரோகிணி கண்டாள். மேலும், தன்னையே ஒரு காலத்தில் மணஞ் செய்யக் கருதியிருந்தபடியால், அந்த எண்ணம் நிறைவேறாத பொறாமையினால் தான் பொய் சொல்வதாக எல்லோருங் கருதுவார்களென்றும் உணர்ந்தாள். ஆயினும் எவ்விதத்திலாவது மூலத்திற்கும் அவள் குழந்தைக்கும் வகைதேடி வைக்க உறுதிகொண்டாள். மூலத்தின் தொடர்பை முந்திய பிறப்பிலும் பார்க்க.

அவ்வூரில் ராகுவென்ற ஒரு மாந்தரீகன் இருந்தான். அவன் கோரின வரமெல்லாங் கொடுக்கக்கூடியவனென்று பேர்

பெற்றவன். ஆகையால் இரண்டு பெண்களும் அவனிடஞ் சென்று ஆலோசனை செய்தார்கள். எல்லாவற்றையுங் கேட்டறிந்த ராகு, தக்க பொருள் கொடுக்கின் அரசன் மகனை மூலத்தின் காலிலேயே வந்து விழும்படி அடிமைப்படுத்துவதாக உறுதி சொன்னான். அதுவே சுருக்க வழியென்று இருவரும் ஒத்துக் கொண்டார்கள். அதற்குவேண்டியபொருளை விரயஞ்செய்ய வகையில்லாதிருந்தும், மூலம் நன்றாயிருந்தால் போதுமென்ற ஒரே நோக்கத்துடனிருந்த ரோகிணி, தன் கணவனிடம் கேட்டு உள்ளது உரியதை யெல்லாம் திரட்டி மாந்தர்கனிடம் கொண்டுவந்து ஒப்படைத்தாள். அவன் இருவரையும் தன் குடிசைக்கழைத்து, நாலுநாட்பட்ட பிணமொன்றை அவர்கள்முன் புகிடத்தி, அகோரமான கிரியைகளையும் மந்திரங்களையும் நெடுநேரமாகப் பிரயோகித்தான் கிரியைகளைக் கண்டதுமே இருவரும் நடுங்கினார்கள். ஆயினும் ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டென்றபடி, பல்லைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ராகு பல மந்திரங்களை உச்சரித்தான்; பல பலிகள் கொடுத்தான்; பல நிறமான தூபங்களை யிட்டான்; உயிர் வாதைப் படுபவன்போல உடம்பை யெல்லாம் நெளித்தான். நெடுநேரமான பின்பு கீழே கிடந்த பிரேதமானது தீக்கங்கு போன்ற கண்களொடு மெள்ள மெள்ள எழுந்து உட்காரவும், அது கண்ட இரண்டு பெண்களும் உயிரற்ற மரம்போலானார்கள். பிரேதமும் மெள்ள எழுந்து தள்ளாடித் தத்தளித்துக்கொண்டு தங்களை நோக்கி நகருவதைக் கண்டு, இருவரும் உடம்பெல்லாம் வியர்த்து, மூளைகலங்கி, சவத்திற் கப்பாலிருந்த ஒரே கதவை அடைய வழியுமறியாமல் பயத்தால் பல்லோடு பல்லடிக்க நின்றார்கள். நாற்றமடைந்திருந்த பிணமானது அதற்குள் ரோகிணியை நோக்கிக் கையை விரித்துக் கொண்டு வந்தது. ராகுவும் மிகவும் பயந்தவனாய்த் தரையில் குப்புறப் படுத்துக்கொண்டான். இரண்டு பெண்களும் வீறிட்டார்கள். அப்போது மந்திரசக்தி மாத்திரம் முறிந்திராவிட்டால் இருவரும் மூளை கலங்கி மாண்டேயிருப்பார்கள். நற்காலமாகப் பிணம் ஆவேசம் நீங்கித் தரையில் விழுந்தது. அது பட்டு ரோகிணியும் கீழே விழுந்தாள். அவள் தன்னை விடுவித்துக்கொண்டு எழுந்திருக்குமுன் குப்புறக் கிடந்த ராகு பெரிய ஏக்கக் குரலோடு கேட்போர் ரத்தம் சுண்டும் வண்ணம் ஓலமிட, திடீரென்று அவன் மனித உடம்பு மாறி, ஓநாய்போல உருவெடுத்துக் குரைத்துக்கொண்டும் ஊளையிட்டுக்கொண்டும் ஒரே பாய்ச்சலாய் வெளியே பாய்ந்து ஓடிவிட்டான். இரண்டு பெண்களும் தப்பினோம் பிழைத்தோமென்று தள்ளாடித் தள்ளாடி வீடுவந்து சேர்ந்தார்கள். அன்றே இறக்காதது தமது புண்ணியமென்று கருதினார்கள். சில நாளில் திரும்ப வந்த ராகு, மறுபடி

யும் பொருள் கொடுத்தால் எவ்விதத்திலும் காரியசித்தி கொடுப்பதாகச் சொன்னாயினும், இரண்டு பெண்களும் "இனி ஒரு மந்திரவாதியையும் அண்டுவதில்லை" யென்று சபதஞ் செய்துவிட்டார்கள்.

இந்தக் கோரமான அனுபவத்தில் ரோகிணி உடல்நலமிழந்தாள். ஆயினும் மூலத்திற்கு வேண்டிய முயற்சியை நிறுத்தவில்லை. வேறு வழியொன்றுமில்லாதது கண்டு, தானே அஸ்தனிடம் நேரே சென்று வாதாடத் தீர்மானித்தாள். அது எளிதில் கூடுங் காரியமல்ல வாயினும், நெடுநாள் மாறிமாறி யோசித்து மிருந்த துணிவு கொண்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஒருநாள் அவனிடஞ் சென்றாள். தனது உறவினனாக முன்பு பழகியிருந்த அவனைக் கண்டதும், தன் பழைய துன்பமெல்லாம் ஒருங்கே ஞாபகத்திற்கு வர, தான் பட்ட பாட்டையெல்லாம் அவனிடம் எடுத்துச் சொல்லி, அதைவிடக் கீழான நிலையிலிருக்கும் மூலமும் அவள் குழந்தையும் படும் பாட்டையுஞ் சொல்லி, அவர்களுக்கு ஒரு நிவிர்த்தி பண்ணும்படி அவனிடம் வெகுவாக மன்றாடினாள். அவளுடைய உருக்கத்தையும் துயரத்தையும் கண்ட அஸ்தம் மனமிளகி, மூலத்திற்குத் தான் செய்த அபராதத்தை ஊரறிய ஒப்புக்கொண்டு, அவளுக்கு வேண்டிய மட்டும் சீதனங் கொடுத்து, அடுத்த ஊர் வாலிபனொருவனுக்கு அவளை மணஞ் செய்தும் வைத்தான். ரோகிணி மூலத்தை முதலாவது பிறப்பில் கொன்ற கடனும், பின்னால் மொராக்கோவில் திரும்பவும் கொன்ற கடனும் இத்துடன் தீர்ந்திருக்கலாம். இவ்வித முயற்சிகளையே இறக்கும் வரை கைக்கொண்டு மிகவும் இளைத்தவளாய், ரோகிணி 52-வது வயதில் இறந்தாள். தகப்பனில்லாக் குழந்தையாகிய தசமியையும் நல்ல நிலைமையில் வைப்பதற்கு அரும்பாடு பட்டபடியால், அவனிடம் கொண்ட கடனையும் ஒருவாறு தீர்த்தாள். இந்த நற்காரியங்களெல்லாம் மறுபலன் எதிர்பாராமலும் மிகுந்த தியாகத்துடனும் செய்யப்பட்டபடியால், பழவினை தீர்க்க வந்த பிறப்பென்றே இதை ஒருவாறு சொல்லலாம். அனுபவிக்கிற முறையில் அனுபவித்தால், தீமையும் நன்மை பயக்குமென்று இதனால் பெறப்படும். அல்லாமல் தன்னைக் கெடுத்த அவிட்டத்தைப் பழிவாங்குவதே முறையென்று அவள் கொடியெடுத்திருப்பின், அத் தீவினை மேலுக்கு மேல் விளைந்து கொண்டே போயிருக்கும். அத்துடன் தன்னை அவமதித்த ஊராரிடமும் பகையெடுத்து மனிதர்மேல் அன்பென்னுந் தாளை அடைத்திருப்பின் அதுவும் மேலுக்குமேல் தீமையையே பயந்திருக்கும். இரண்டுமின்றித் தன் குற்றத்தைத் தானே ஏற்றுப்

பிறரைக் காட்டிக் கொடுக்காது பொறுத்தும், தன் போன்ற துர்ப்பாக்கியரைத் தன் வறுமையையுங் கவனியாது தற்காத்தும் வந்தது, அவளுக்குப் பெரும் புண்ணியத்தை ஈந்தது.

கோடிவழி: XVII

ரோகிணி: (பெண்) (தகப்பன்) துதிகன். (கள்ளப்புருஷன்) அவிட்டம். (ஷை மகன்) தசமி. (பின் வந்த கணவன்) மங்களம்.

அஸ்தம்: சிற்றரசன் மகன்.

மூலம்: கீழ் குலப்பெண். (கற்பழித்தவன்) அஸ்தம்.

ராகு: மந்திரவாதி.

18. இந்தியா—பெண்

கி. மு. 5629—கி. மு. 5527

வயது: 62—பின் பிதுருலகவாசம்: 1552 ஆண்டுகள்

பண்டே புண்ணிய பூமியென்று பெயர் பெற்றிருந்த இந்தியாவில், வடக்கே இப்போதைய ஜெய்ப்பூரில், மலையும் நதியும் வளமும் அழகும் பொருந்திய ஒரு பாகத்திற்கு அரசனயிருந்த துவாதசன் மகளாய், சோமம்மாள் வயிற்றில், கி. மு. 5629-ல் ரோகிணி மறுபடி பிறந்தாள். துவாதசன், பல பளிங்கு மாளிகைகள் அரண்மனைகள் யானைகள் குதிரைகள் ஒட்டைகள், அவற்றிற்குத் தகுந்தபடி அநேகம் பரிவாரங்கள் எல்லாவற்றையும் உடைய ஒரு சிற்றரசன். அழகில் மிக்க ரோகிணியும் அவளுடைய தமக்கையாகிய உத்திரமும், பொன்னுபரணங்களும் பொன் முகபடாங்களுமணிந்த பெரிய யானைகளிலேறி அடிக்கடி அரசனுடன் ஊர்வலம் வருவார்கள். இயற்கையாகவே கீழ்நாட்டு அரண்மனைகளில் காணப்படும் ஆடம்பரங்களும் தோரணைகளும் செழிப்பும் அவளைச்சுற்றி நிறைந்திருந்தனவாயினும், ராஜ்யக்கவலையும் வேட்டைப்பிரியமுமுடைய துவாதசன் ஆண்மக்களுக்கே ஆசைகொண்டபடியாலும், தாயாருக்கு அரண்மனை அமுல்களையும் சச்சரவுகளையுங் கவனிப்பதற்கே நேரம் போதாமையாலும் ரோகிணி பெற்றோரால் அதிகம் கவனிக்கப்படாமலே வளர்ந்து வந்தாள். ஆகையால் அவள் மனத்தில் நிறைந்திருந்த அன்பும் வெளிப்போக்கில்லாமலே அடங்கிக் கிடந்தது.

ரோகிணி பிறந்தவுடன் கணிக்கப்பட்ட ஜாதகத்தில், அவள் முற்பிறப்புகளில் மிகுந்த துன்பங்களனுபவித்ததாகவும் மேற் பிறவிகளில் அதிக மேன்மையை அடையப்போவதாக

யும், பழவினைக் கடன் பாக்கி ஒன்று இந்தப் பிறப்பில் நேரு மென்றும், அதைச் சரிவரத் தீர்ப்பாளானால் அடுத்த பிறப்பில் ஆண்மகனாய்ப் பிறந்து முத்திநெறியில் கால்வைக்க அவகாசம் பெறுவாளென்றும், அரண்மனை ஜோசியர்கள் சொல்லியிருந் தார்கள். அவையனைத்தும் பலிதமான முறையிலிருந்து எண்ணா யிரம் ஆண்டுகளுக்குமுன் ஜோதிட சாஸ்திரம் இருந்த உயர்நிலை புலப்படும்.

ரோகிணியின் ஊருக்கு, மேற்கு வெகுதூரத்திலிருந்த கத்தியவார் என்ற பெரும் பிரதேசத்துக்கு, அரசன் பிரதமன் என்பவன். அவனுக்குத் தலைக் குழந்தைகள் சித்திரை என்ற ஆணும் அசுபதி என்ற பெண்ணுமாகிய இரட்டையர்கள். அந்தச் சித்திரைக்கு ரோகிணியினுடைய தமக்கை உத்திரத்தைப் பெண்கேட்டுத் தூதர் வந்தனர். அவளை அடுத்த ஊர் அரசனுக்கு மணம் பேசித் தீர்மானித்திருந்தபடியாலும், கத்தியவார் சம்பந்தம் சிற்றரசனாகிய துவாதசனுக்குக் கிடைத்தற்கரிய தொன்றாகையால் அதை இழக்க மனதில்லாதபடியாலும், பெற்றோர் இருவரும் தமக்குள் ஆலோசித்து இளைய மகளாகிய ரோகிணியைத் தூதுவரோடு அனுப்புவதென்றும், அவளை அங்கீ கரிக்கவில்லையாயின் அவள் ஊருக்குத் திரும்பிவிடலாமென்றும் உறுதிபண்ணினார்கள். வந்த தூதுவரும் இந்த ஏற்பாட்டிற்கு இசைந்தனர். ரோகிணி இதை ஒருவிதத்திலும் ஒப்பவில்லையா யினும் அவளுடைய மனதை யாருங் கலந்தவரில்லை. பண்டைப் பெருங்குடும்பத்தில் வாழ்க்கைப்படுவது தனக்குப் பெருமை யென்று அவள் நன்கு உணர்ந்தாள். ஆனால், முன்பின் தெரியாத இடத்தில்போய் அவமானப்பட நேர்ந்தால், கன்னிப்பெண்ணாகிய தனக்கு அது பெருங் கேவலமென்றும் அவள் பயந்தாள்.

அவள் பெற்றோர் இவை யொன்றையுங் கவனிக்கவில்லை. கொடுக்கல் வாங்கலுக்குரிய பொருள்களாகக் கருதப்பட்ட பெண் மக்களை, அவ்வளவு தூரம் பாராட்டுவது நமது நாட்டில் இன்றுபோலவே அன்றும் வழக்கமில்லாதிருந்தது. ஆகையால் அரண்மனையாரெல்லோரும் ஒன்றுதிரண்டு "பெற்றுப்பெருகி நன்றாயிருக்க" வென்று அவளுக்கு ஆசிகூறி, வேண்டிய சீதனங் களுடன் கத்தியவார் தூதுவரோடு அவளையனுப்பிவிட்டார்கள். கத்தியவார் நாட்டிற்கு நெடும்பயணம். போகும் வழியெல்லாம் ரோகிணிக்கு மிகுந்த மனப்பதற்றம். அரசகுமாரன் எப்பேர்ப் பட்டவனோ தெரியாது. அவளுக்குப் பழக்கமுள்ள அரசிளங் குமாரர் யாரும் உத்தம புருஷர் என்பதற்கில்லை. சித்திரை யும் அவர்களைப்போல் இருந்தாலும் போதுமென் றெண்ணினாள் ரோகிணி. அவன் தன்னை விரும்புவானோ அல்லது திரும்ப

அனுப்பிவிடுவானே என்று அடிக்கடி சந்தேகிப்பாள். ஊரை அடுக்க அடுக்க உடம்பெல்லாம் பதறலானுள். தாய்வீடு திரும்பி விட்டால் போதுமென்று தயங்கத் தொடங்கினுள். அவ்வளவு கலக்கத்துடன் அரண்மனை சேர்ந்த ரோகிணி அரசகுமார ஞகிய சித்திரையைக் கண்டதும், ஊரென்ற ஞாபகமே அவ ளுக்கு மறந்துபோயிற்று. கண்டவுடனே இருவரும் ஒருவர் மேலொருவர் காதல்கொண்டார்கள். தமக்குள் நெடுநாளைப் பழக்கமுடையவர்போல எண்ணங்கள் எழுவதைக்கண்டு இரு வருமே அதிசயித்தார்கள். இருவரும் பண்டுமுதலே ஒரு கழனி யில் விளைந்த பயிரென்பதை அப்போது அறிந்திலர்.

இருவரும் தம்மில் அன்பு பூண்டதைக்கண்டு அகங்களித்த பெற்ருேர்கள், நல் முகூர்த்தத்தில் சித்திரைக்கும் ரோகிணிக் கும் வெகு விமரிசையாகப் பல தேசத்து அரசர்கள் முன்பு திருமணம் நடத்தினுர்கள். ரோகிணியின் அகத்தடங்கிக் கிடந்த அன்பானது சித்திரையைக் கண்டதுமுதல் சூரியனைக் கண்ட செந்தாமரைபோல மலரத்தொடங்கிற்று. அவன் விரும் புவதெல்லாம் அவளுக்கும் பிரியம். அவனுக்கு வேண்டாதன வெல்லாம் அவளுக்கும் வெறுப்பு. சித்திரை சமணமதத்தில் பிறந்தவன்; ரோகிணி இந்து மதத்தில் பிறந்தவள். பெண் தீர் மானமாகும்போதே, அவரவர் மதத்தை அவரவர் கைக்கொண் டொழுகுவதற்கு இடைஞ்சலிருக்கக் கூடாதென்பது ஒப்பந்த மாகையால் இருவரும் அவரவர் மதத்தையே அனுசரித்து வந் தாரேனும், சித்திரைமேலுள்ள அன்பால் ரோகிணி சமண மதத்தை நன்கு ஆராய்ந்து அவராலயத்திலும் தொழத்தொடங் கினுள். சித்திரையும் இந்து மதத்தை ஆராய்ந்து அடிப்படை யில் இரண்டு மதங்களும் ஒன்றேயென்று தீர்மானித்து, ரோகி ணியுடன் இந்துக் கோவிலிலும் சென்று தொழுவான்.

இப்படி இருவரும் மிகுந்த அன்னியோன்னியமாகவும் இன்பகரமாகவும் வாழ்ந்துவரும்போது, ரோகிணிக்குப் பதி னேழாவது வயதில், மணமாகி ஒரு வருஷத்தில், அஷ்டமன் என்ற ஆண் குழந்தை பிறந்தான். அரண்மனை ஜோசியரும் பதிவுபோல அவனுக்கு ஜாதகங்கணித்தனர். தம் இளவரச னுக்குத் தலைக்குழந்தையாய், பின்னுல் தமது நாட்டுக்கரசனுய் வரவேண்டிய அக் குழந்தை மூர்க்கன் என்றனர். அக் குழந்தை யால் அவனுக்கும் பிறருக்கும் பெருந்துன்பமே பெருகு மென் றனர். அந்திய காலத்தில் சீர்திருந்த ஓர் அவகாசங் கிடைக்கு மென்றும் அப்போது சரியாய் நடந்து கொள்வானுனுல் அன் றைக்கு உத்தமனுகலாமென்றும் கிரக நிலையில் காணப்படுவதாக வும் கூறினர்.

குழந்தை வளரவளர, ஜோசியர்கள் சொன்ன குறிகளும் ஒவ்வொன்முகத் தலைகாட்டின. சமண மதத்தில் மிகவும் பிரதானமான கொள்கை ஜீவகாருண்யம். ஈ, எறும்புகூடக் காலால் மிதிபடச் சம்மதிக்க மாட்டார்கள் அம்மதத்தவர். அஷ்டமனே சிறுபிள்ளை முதலே ஜீவ இம்சையே தன் விளையாட்டுத் தொழிலாகக் கைக்கொண்டான். எவ்வளவு தடுத்தும் பயமுறுத்தியும் அவை யொன்றும் பயன்படாமல், வயதாக வயதாக மக்களையும் துன்புறுத்தத் தொடங்கினனே யொழிய, அவன் ஒருவிதத்திலும் மாறுதலடையவில்லை. கொடுங்குணம் அவனுக்குக் கூடப் பிறந்ததாயிருந்தது. மானம் மரியாதைகளை முழுதும் கைவிட்டான். யோக்யதை சிறிதும் அற்றவனுனன். இவையெல்லாம் பெற்ருேர் மனத்தை மிகவும் புண்படுத்திய போதிலும், பொறுமையே உருவாயிருந்த சித்திரை அவனுக்கு அடிக்கடி அறிவுறுத்தி அவனை அன்பாகவே நடத்தி வந்தான். நன்மக்களாக அவருக்கு வேறு பிள்ளைகள் பின்னல் பிறந்தபோதிலும், பட்டத்திற்குரியவனுகிய அஷ்டமன் ஒழுக்கங் கடந்தவனுகத் திரிவது அவருக்கு ஓயாத கவலையாக இருந்தது. எனினும் சித்திரைக்கும் ரோகிணிக்கும் உள்ள காதல் மாத்திரம் குறையாமலே இருந்து வந்தது. அரசர் பல மனைவியரைக் கொள்வதே நாட்டு முறையெனினும், பலரும் பெண்கொடுக்க விரும்பினரேனும் சித்திரை அம்முறையை அனுசரியாமலிருந்ததே அக் காதலுக்குப் போதிய சான்ருகும்.

உரிய காலத்தில், சித்திரையின் தகப்பன் பிரதமன் இறந்தான். சித்திரையும் முடி சூட்டப் பெற்ருன். இளவரசியாயிருந்து இப்போது ராணியாகிய ரோகிணி, தன் புதிய பதவியை மிகுந்த கண்ணியத்துடனும் பொறுப்புடனும் வகித்து, வயதிற்கு மிஞ்சின புத்திசாலியென்று பேர் வாங்கினுள். அடிக்கடி யுத்தத்திற்காக வெளிநாட்டிற்குச் செல்லவேண்டியிருந்த சித்திரையும் அக்காலங்களில் அரசியல் பொறுப்பை ரோகிணியினிடமே ஒப்புவித்துப் போவான். அவளும் மிகுந்த சாமர்த்தியமாகவும் எல்லோரும் மெச்சும்படியாகவும் அக் கடமையைச் செலுத்தி வந்தாள். வெளியே சென்ற கணவனை நெடுங்காலம் காணுதிருத்தலாலுள்ள கவலையும், மூத்தமகன் அஷ்டமன் செய்யும் அட்டூழியங்களால் உண்டான கவலையுந் தவிர, வேறு விதத்தில் ஒரு குறைவுமில்லாமலே காலங் கழித்து வந்தாள். அஷ்டமனும் வயசாக வயசாகக் கொலை, களவு, காமம், கள்ளுண்டல், பொய் மொழிதல், முதலிய எல்லாத் துறைகளிலும் கைதேர்ந்தான். தகப்பனுக்கு மாத்திரம் கொஞ்சம் ஒதுங்குவதைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சாமலே அடங்காமாரியென நடந்து வந்தான். பெற்ருேரைத் தனக்கு மாற்ருராகவே வெறுத்தான்.

அப்படி யிருக்குங் காலத்தில் சித்திரைக்கு எட்டின தாயாதி யொருவன் அரசுரிமை தன்னுடையதென்று வாதாட, அவனோடு கூடிய பகைவரில் அஷ்டமனுஞ் சேர்ந்து, தகப்பனுக்கு விரோதமாகச் சூழ்ச்சிசெய்தான். சித்திரைக்குப் பின் தனக்குக் கிடைக்கவேண்டிய பட்டத்தைத் தானே எதிரியிடம் ஒப்புவிக்க ஒத்துக்கொண்டானால், அஷ்டமன் மனப்பாங்கு அஃதொன்றாலேயே நன்கு புலப்படும். அவருக்குள் நேர்ந்த போரில் எதிரி முறிபட்டு ஓடவும், அஷ்டமன் மாத்திரம் பிடிபட்டு அரண்மனைக்குக்கொண்டுவரப்பட்டான். மதப்பற்று மிகுதியாகவுடைய சித்திரையும் ரோகிணியும், பிறர் குற்றம் பொறுத்தலை மிக உன்னத ஒழுக்கமாகக் கொண்டாடும் சமணக் கொள்கையின்படி, பெற்றோருக்கும் நாட்டுக்கும் ஆபத்தை வருவித்த தம் மகனை அன்போடு மன்னித்ததைக் கண்டு, அஷ்டமன் சற்று மனந் திரும்பி நாணங் கொண்டவனைச் சிலகாலம் நடந்தானெனினும், பிறவிக் குணம் மட்டைவைத்துக் கட்டினாலும் மாறாதென்றபடி, கொஞ்சநாளில் திரும்பவும் பழைய முறையிலேயே இறங்கினான். அவனுடைய களவொழுக்கத்தால் ஊரில் சில கலகங்களும் அரச குடும்பத்திற்கே இழுக்கும் நேர்வதைக்கண்ட சித்திரை தன் மகனைக் கண்டிக்கவும், அதனால் இடைஞ்சற்பட்ட அவன் வைப்பாட்டி யொருத்தி, தகப்பனைக் கொன்றுவிடும்படி அவனை ஏவ, அச்சூழ்ச்சி கண்டு பிடிக்கப்பட்டபடியால், அஷ்டமன் நாட்டை விட்டோடித் தன் ஊரைப் படையெடுக்கத் தயாராயிருந்த அடுத்த நாட்டரசனோடு கலந்துகொண்டான்.

சித்திரை பழகிய போர்வீரன், பல யுத்தங்களிற் சென்று புகழ்பெற்றவன், தக்க சைனியமும் தைரியமும் உடையவன், போரில் இதுவரை தோல்வியுறாதவன். ஆயினும் அவனுடைய நாட்டு அரண் வலியும் படைவலியும் அவை சம்பந்தமான அந்தரங்கங்களும் அஷ்டமனால் எதிரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டபடியால், இப்போது எதிரிமுன் எதிர்த்து நிற்கமுடியாமல் போனான். ஆரம்பத்தில் சில சிறிய சண்டைகள் தோல்வியுற்றன. பல கட்டங்களில் தனது நாட்டின் கிடப்பையும் மற்ற உளவுகளையும் அஷ்டமனால் அறிவிக்கப்பட்ட எதிரிகள் முன்பு, சித்திரை நிற்கமாட்டாமலே பின் வாங்க வேண்டி வந்தது. கடைசியாக இரு கட்சியாருக்கும் அவரவர் முழுவலியுடனும் நடந்த பெரும்போரில், அஷ்டமன் கையாலேயே சித்திரை அடிபட்டுக் கீழே விழுந்தான். காயம் மிகவும் பலமாயினும், சித்திரை அதைப் பொருட்படுத்தாமல் உடனே ஒரு பல்லக்கிலேறி அங்கிருந்தே சண்டையை நடத்தி வெற்றிபெற, பெருந்தோல்வியுற்ற எதிரிகள் நாலா பக்கத்திலும் விழுந்தோடுகையில், அஷ்ட

மன் ஒரு போர்வீரன் கைப்பட்டு அரசன் முன்பு இழுத்துவரப் பட்டான். எல்லோரும் அரண்மனை வந்ததும், இவ்வளவு கால மும் மகன் ஒழுக்கக் கேடுகளையும் இடுக்கண்களையும் பொறுமை யுடன் பொறுத்து வந்த ரோகிணி, இப்போது கணவனுடைய ஆபத்தான நிலையைக் கண்டதும், அதுவும் அம் மகனுலேயே ஏற்பட்டதென்றறிந்ததும், அவன் முகத்திலேயே விழிக்க மறுத்துவிட்டாள். சகிப்பும் சாந்தமும் மிகுந்திருந்த சித்திரை, மனைவியைச் சமாதானப்படுத்தும்வரை அஷ்டமனை ஓரிடத்தில் அடைத்து வைக்கச் செய்து, மேலுக்காவது அவன் ஒழுக்கத் தில் திருந்துவானுனல் பழையபடி தன் அன்புக்கும் அரசுக்கும் பாத்தியனுவானென்றும் அவனுக்குத் தெரிவித்தான்.

அஷ்டமனுக்குத் தன் கையால் தகப்பன் அடிபட்டு விழுந் ததைக் கண்டவுடனேயே மனம் மிகவும் பேதுற்றது. யுத்தக் களத்தில் நிற்கமாட்டாமல் ஓடத் தொடங்கினன். பிடிபட்ட போது தகப்பன் கையினுல் மாண்டுபோவதே மன அமைதியாகு மென்று கருதினன். நாடு முழுவதும் தன்னைப் பகைப்பதை அறிந்தான். தான் பட்டத்திற்கு வரினும் அமைதியாய் ஆள முடியாதென்றுங் கண்டான். குடிகளுடைய வெறுப்பையும், அவர்கள் கண்டங் கண்டமாகத் தன்னை வெட்டத் தயாராயிருப் பதையும், அரசனுக்குப் பயந்து அவ்விதம் செய்யாதிருப்பதை யும் நன்ருய் அறிந்திருந்தும், அவனுக்கே தன்னுல் மரணபத்து நேர்ந்தும், அவற்றையொன்றும் பொருட்படுத்தாமல் தன்னை யும் மன்னித்து, குடிகளையும் சமாதானப்படுத்தி, திரும்ப வும் தன்னை அரசனுக்கி வைக்கலாமென்று ஆவல் கொண்ட சித்திரையின் பேரன்பைக் கண்டு, அஷ்டமனுடைய கல்நெஞ்சு இளகாமலிருக்க முடியவில்லை.

தகப்பன் வார்த்தையைக் கேட்ட அஷ்டமன் மனங் குழைந்து அழுதான். பெற்றோர் பாதத்தில் விழுந்து புரண் டான். அவர்கள் காலைப் பற்றிக் கொண்டு தன்னை மன்னிக்கும் படி பலவாருகப் புலம்பிக்கேட்டான். தான் செய்த பாதகங் களுக்கப்புறம் அவர்களுடன் தாமதிக்க அருகனல்லனென்றும் அதனுல் தனக்கு ஒரு அனுமதி மாத்திரம் கடைசியாய் அவர் கள் கருணை செய்ய வேண்டுமென்றும் பிரார்த்தித்தான். தான் நாட்டைத் துறந்து காடு சென்று காவியுடுத்துத் தவஞ்செய்ய இடங்கொடுக்க வேண்டுமென்பதே அவன் வேண்டிக் கேட்ட கடைசி அனுமதி. அந்தச் செயலையன்றித் தன் பாவத்திற்கு வேறு பரிகாரமில்லையென்றும், தன் தம்பி திருவோணம் பட்டத் திற்கு எல்லாவிதத்திலும் தகுதியுடையவனென்றும் மிகத் தாழ்மையாய்த் தெரிவித்தான். சித்திரை ஒரு வகையாக அதை

ஒப்பினபோதிலும், அரண்மனைப் புரோகிதராகிய பிராமணர்கள் அஷ்டமன் சன்னியாசங்கொள்ள அருகனல்லனென்றும், அரண்மனையிலேயே தங்கி இல்லற தர்மத்தை ஒழுங்காக நடத்தி, தான் கொண்டது தற்கால வைராக்கியமல்லவென்று மெய்ப்பித்த பின்னரே துறவறம் பூணலாமென்றும், அவன் வேண்டுகோளை மறுத்துவிட்டனர். அஷ்டமனுக்கு அது மிகவும் வெறுப்பாயிருந்தபோதிலும், அவர்கள் சொல்லுக்கிணங்கி, குடிகள் தன்மேல் கொண்டிருந்த பெரும்பகையை மாற்றுவதே தன் முதல் கடமையாக ஒழுகத் தொடங்கினன்.

முன்னே புறங்கொடுத் தோடிய பகைவர்கள், சித்திரை மரண காயப்பட்டுக் கிடப்பதைத் கேள்வியுற்று, சிறிது காலத்தில் புதிய படைகளைத் திரட்டிக்கொண்டு திரும்பவும் போருக்கு வந்தனர். அப்போது அவர்களை எதிர்க்கும் பொறுப்பு இயற்கையாகவே அஷ்டமனுடையதாயிற்று. ஆனால் அவனுடைய முன்னைய புத்தியீனத்தால் நாட்டின் ஆபத்தான பாகங்களெல்லாம் பகைவருக்குத் தெரிந்திருந்தபடியால், அவர்களை எதிர்த்துப் போர்புரிவது அவனுக்கும் அருமையாய்விட்டது. கடைசியாய் அவர்களைத் தோற்கடிக்க ஒரே வழியைத் தவிர வேறில்லையென அஷ்டமன் கண்டான். பகைவர் வரும் வழியில் ஒரு ஒடுங்கிய கணவாயிருந்தது. அதில் எதிர்த்து நிற்பவர் உயிர் பிழைத்துத் திரும்பாரெனினும், அவ்விடம் தவிறிவிட்டால் நாடு எதிரிகளுடையதென்று அவனுக்குப் புலப்பட்டது. புலப்பட்டதும் தன்னுயிரைக் கொடுத்தாயினும் அதை முற்றுவிக்கத் தீர்மானித்தான். தன்னைப்போலவே சாகத்துணிந்த ஓர் கூட்டத்தைத் திரட்டினன். ஆபத்திலும் யாவர்க்கும் முன்னணியாய் நின்று, நினைத்தபடியே எதிரிகளை முறியடித்து, நேர்ந்த போரில் தானும் தீரமான தனது சிறு சேனையுடன் யுத்த களத்தில் மாண்டான்.

அஷ்டமன் காயப்பட்டு வீழ்ந்தபோது தாயாராகிய ரோகிணியின் பெயரைச் சொல்லிக்கொண்டே வீழ்ந்தான். உயிர் தப்பி ஊருக்குச் செல்வோரிடம், தாயாருக்குச் செய்த அபராதங்களையெல்லாம் அத்தோடாவது மன்னிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டதாக அவளிடம் சொல்லச் சொன்னன். ஆனல் அதே சமயத்தில் சித்திரையும் சாகக்கிடந்தமையால், அதற்குக் காரணனாகிய அஷ்டமன் தன்னுயிரைத் தியாகஞ் செய்த முறையை ரோகிணி பெரிதாகப் பாராட்டவில்லையாயினும், அவன் தீரத்தையும், துணிவையும், யுக்தியையும், ராஜ்யத்தைக் காப்பாற்றிய விதத்தையும், நாடு முழுவதும் மெச்சிப் பலபல தெம்மாங்குகளாலும், சிந்துகளாலும், பெருங் கவிகளாலும், அவன் புகழை ஊரார் நெடுங்காலம் கொண்டாடினர்கள்.

சித்திரை தன் மரணத்தறுவாயில் ரோகிணியைப் பலவாறாகத்தேற்றி, அவளுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி, இறந்த பின்னும் தான் அவளுடனேயே இருப்பதாகவும், இரண்டாவது மகன் திருவோணத்திற்கு நாடாளும் அனுபவம் உண்டாகும் வரையில் இன்னின்ன முறையில் அவனைப் பழக்க வேண்டுமென்றும் எடுத்துக்கூறி உயிர்நீத்தான். ரோகிணியும் அவற்றின் படியே நடந்து, இருபத்தொரு வருஷம் மகனுடன் நாட்டுக் காரியங்களைச் செவ்வையாக இயற்றி, தனது அறுபத்திரண்டாவது வயதில், திருவோணன் நீதியுடன் அரசாள்வானென்ற திருப்தியுடன் விண்ணுலகஞ் சென்றாள். சித்திரையிடத்திலும், அஷ்டமன் செய்த அக்கிரமங்களைப் பொறுத்த காலங்களிலும் அவள் காட்டிய அன்பினாலும், நாட்டை நெடுங்காலம் திறமையுடன் சித்திரை காட்டிய நெறியிலேயே ஆண்டு வந்த ஆற்றலினாலும், சித்திரையுடைய ஞானப்பற்றைக் கண்டு தானும் அவனுடன் சாஸ்திரங்களை ஆராய்ந்த அறிவினாலும், ரோகிணி மிகுந்த முன்னேற்றமடைந்து ஆதியில் ஜாதகம் குறிப்பிட்ட படியே அடுத்த பிறப்பில் அருமையான சந்தர்ப்பங்களை எய்தலானாள்.

குறிப்புகள்: ஒரு பிறப்பு ஒரு கண்டத்திலும் நாட்டிலும் அடுத்த பிறப்பு வேறு கண்டத்திலும் நாட்டிலும், ஒருதரம் நாகரிகத்திலும் மறுதரம் அநாகரிகத்திலும், அப்படியே உயர்குலத்திலும் இழிகுலத்திலும் கறுப்பு மனிதரிலும் வெள்ளையரிலும் பலவாறாகப் பிறப்பதில் ஏதாவது முறையுண்டோவெனச் சிலர் ஐயுறலாம். அம் முறையின் முழுவிபரங்கள் நம் சிற்றறிவுக் கெட்டாதனவாயினும் அதன் முக்கியமான மூன்று பொது விதிகள் எல்லோராலும் எளிதில் அறியக் கூடியவையாம். மலையேறிச் செல்கின்ற மனிதனுக்கு முதல் அவசியம் என்னவென்றால், முன் வைத்த காலைப் பின் வைக்காமல், நேர்முகமாகக் காலை எட்டும் மட்டும் நீட்டி வைத்து ஏறுதலாம். ஆனால் அவன் மலை மீதிருக்கும் குறிக்கோளை மறந்தோ அல்லது விளையாட்டுப் புத்தியினாலோ வேறு காரணத்தாலோ நின்ற நிலையிலேயே நேரத்தைப் போக்கியும், காலை அப்புறம் இப்புறம் விலகி அடிவைத்தும், சாவதானமாகச் செல்வானானால், எட்டு மட்டும் ஏறாமல் அரைகுறையாகவே முன்னேறுவான். அத்துடன் காலில் இருப்பு விலங்கையும் தரித்துக்கொள்வானானால், அந்த அரைகுறை அடியும் நினைத்த இடத்தில் வைக்கமாட்டாமல் கால்விலங்கு இடங்கொடுக்கிற இடத்திலேயே அவன் வைக்கவேண்டி வரும். அம் மாதிரியே சிற்றின்பத்திலும் உலகத் துன்பத்திலுமிருந்து பேரின்பத்தை நோக்கி முயற்சிக்கும் ஆன்மாக்கள் நிலையும் ஆகும். அன்பு, அறிவு, ஆற்றல் மூன்றிலும் பூரணம்பெற்றுப் பேரின்பமடைவதே மனிதப் பிறப்பின் குறிக்கோள். ஆனால் ஆன்மாக்கள், குறிக்கோளை நன்கு உணராமையாலும் ஊக்கமின்மையாலும் வேறு பல காரணங்களாலும் கையில் கிடைத்த இடம், பொருள், ஏவல்களைப் பூரணமாக உபயோகப்படுத்தத் தவறிவிடுகிறபடியால், அவர்கள் வினைப்பலனுக்குத் தக்கபடி ஒரு குணத்தில் மேல் வகுப்பிலும், வேறு குணத்தில் நின்ற நிலையிலும் அல்லது கீழ் வகுப்புகளிலுமாக ஊசலாட நேருகிறது.

அதனால் அவர்கள் முதல் நியதிப்படி எல்லாப் பாடங்களிலும் மேல் வகுப்பிற்குச் செல்ல அருகராகாமல், பிறக்கவேண்டிய இடம் பேதப் பட்டுப் பிறப்பார்கள். அத்துடன், அவர்கள் கால்விலங்காகிய கர்ம தொந்தம் பழைய உற்றார் உறவினர் பிறந்திருக்குமிடம் இழுத்துச் செல்லுமாகையால், இரண்டாவது இடமும் பின்னும் பேதமடைகிறது. எனவே, ஒவ்வோர் ஆன்மாவும் அன்பிலும் அறிவிலும் ஆற்றலிலும் மேல்வகுப்பிற்குச் செல்ல வேண்டியதே மறுபிறப்பின் முதல் நியதி. அவரவர் நிற்கும் வகுப்புப் பாடங்களை அரைகுறையாகவோ, பூரண மாகவோ, கூடுதலாகவோ கற்பதைப் பொறுத்து, அதற்குத்தக்க பலன் கிடைக்குமிடத்தில் பிறப்பது இரண்டாவது நியதி. இவையிரண்டும் மேன்மையாகவே அமையப் பெறினும் பழைய கடன்காரர் வேறிடத் திற்கு இழுப்பாராகுல் அவருடன் சென்று பிறப்பதே மூன்றாவது நியதி. இம் மூன்றுஞ் சேர்ந்து தொகுக்கப்பட்ட இடமே அடுத்த பிறப் பிற்குத் தீர்மானிக்கப்பட்ட இடம். ஆகையால் ஒவ்வொருவரும், பிறந் திருக்கும் இடத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்தும், எஞ்சிய நோத்தில், "ஒல்லும்வகையால் அறவினை ஓவாதே செல்லும் வாயெல்லாம்" மனம்மொழி மெய்களால் இயற்றியும், பந்தத்தில் பிணை பட அவசியம் நேரின் மேன்மக்களுடன் பிணைபட்டும் உயிர் வாழ்வாரா யின், பிறவித் துன்பம் விரைவில் நீக்கி, முத்தியின்பம் விரைவில் கைகூடும்.

கோடிவழி—XVIII

துவாதசன் : சிற்றரசன்—(மனைவி) சோமன். (மகள்) உத்திரம், ரோகிணி.

உத்திரம் : (கணவன்) பரணி.

ரோகிணி : (கணவன்) சித்திரை. (மகன்) அஷ்டமன், திரு வோணம்.

திருவோணம் : (மனைவி) அத்தை மகள் விருச்சிகதேவி.

பிரதமன் : அரசன்—(மனைவி) திருதிகை. (மகன்) சித்திரையும் (மகள்) அசுபதியும் இரட்டைப் பிள்ளைகள்.

அசுபதி : (கணவன்) மார்கழி. (மகன்) வைகாசி, மகம், தசமன் (மகள்) சுவாதி, விருச்சிகதேவி.

தும்பதேவர் : மலைக்கோவில் அர்ச்சகர்—ஞானி. (மகன்) மீனதேவர், கர்க்கடகதேவர். கார்த்திகை, விசாகம். (மகள்) பௌர்ணமி, அனுஷம். இவர்கள் யாவரும் ஆலய உதவிகள்.

19. எகிப்து—ஆண்

கி. மு. 4015—கி. மு. 3944

வயது : 71—பின் பிதுருலகவாசம் : 1208 ஆண்டுகள்

ஆழ்ந்த ஆற்றொழுக்குப் போன்ற அமைதி உடையது இந்து நாகரிகம். ஆர்ப்பாட்டமும் களியாட்டும் மிகுதியாகக்கொண்டது எகிப்தியர் பழைய நாகரிகம். வெளித் தோற்றம் அவ்வித வேற்றுமையாகக் காணப்பட்ட போதிலும், இரு நாட்டிலும் கடமையே பிரதானமாகக் கொள்ளப்பட்டது. சென்ற பிறப்பில் வடஇந்தியாவில் பெண்ணரசியாய்ப் பிறந்திருந்த ரோகிணி நாகரிக முதிர்ச்சியில் அன்றைய உலகத்தில் உச்சத்திலிருந்த எகிப்து நாட்டில், அரச குடும்பத்தைச் சார்ந்த ஒரு கிளையில் கி. மு. 4015 ஆண் பிள்ளையாக அடுத்த பிறப்பெடுத்தான்.

உத்தமமான அனுகூலங்களையெல்லாம் ஒருங்கே உடையதாயிருந்தது இந்தப் பிறப்பு. தொடுத்து ஏழு பிறப்புப் பெண்ணாயிருந்து ரோகிணி இப்போது ஆணாய்ப் பிறந்தது மல்லாமல், நாகரிக முதிர்ந்த நாட்டில் உயர்குடிப் பிறப்பும் அதற்கேற்ற கல்வியும் செல்வமும் செல்வாக்கும் அவனுக்கு ஒருங்கே அமைந்திருந்தன. அத்துடன் அந்நாட்டு மதமும் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்தது. ஒழுக்கத்தாலும் அறிவாலும் உயர்ந்த முனிவர்கள் பலர், நாட்டின் பல இடங்களிலும் மடங்களமைத்து, தகுதியும் விருப்பமுமுடைய மக்களுக்கு வீடுபேற்றிற்கு வேண்டிய தவநெறியையும் யோகமுறைகளையும் பயிற்றக் காத்திருந்தனர். ரோகிணியும் தவநெறிக்குத் தக்கோனென அம் முனிவர்களால் கருதப்பட்டனன். அவனது பெற்றோரும் அவன் அவ்விதம் முன்னேற வேண்டுமென்று மிகுந்த அவாவுடையோராயிருந்தனர். முற்பிறப்பில் ஜோசியர் சொன்ன நன்னிமித்தங்களெல்லாம் சொல்லிய வண்ணமே இப்போது அமைந்திருந்தன. அவ்வளவு அனுகூலங்களையும் அவன் எவ்விதம் பயன்படுத்தினனென்பது பின்னால் தெரியவரும்.

இப் பிறப்பில் ரோகிணிக்குத் தகப்பனாக வாய்ந்தவன் அனுஷம்; தாயார் அமாவாசை. இருவரும் பழவினைச் சுற்றத்தாரே. அண்டை வீட்டில் ஒரு பெரிய உத்தியோகஸ்தன் இருந்தான். அவனுடைய மூத்த புதல்வன் சித்திரை. அவன் ரோகிணிக்கு 21 வயது மூத்தவன்; ஆயினும் பழவினைத் தொடர்பால் அவ் இருவருக்குள்ளும் மிகுந்த அன்பு ஏற்பட்டிருந்தது. சித்திரையின் தம்பி வைகாசியும், ரோகிணியும், ஒத்த வயது

டையவராகையால் எப்பொழுதும் ஒன்ருக விளையாடிக்கொண் டிருப்பர். சித்திரையும் அவர்களுக்கு அடிக்கடி கதை சொல்லு வதும் விளையாட்டுக் காட்டுவதுமாயிருப்பான்..

அந் நாட்டில், செல்வம் மிக்காருடைய மாளிகைகளெல்லாம் அழகான தோட்டங்களினிடையே அமைக்கப்பட்டிருந்தன. தோட்டங்களில், ஈஞ்சு போன்ற பலவகைப் பனைகளும் தாமரைத் தடாகங்களும் பளிங்கு மண்டபங்களும் நிறைந்திருக்கும். உஷ்ண பூமியாகையால், சிறு பிள்ளைகள் அதிகமாக உடை ஒன்றும் தரிப்பதில்லை. தடாகங்களில் அடிக்கடி முழுகுவதும் நீந்துவதும் தோட்டங்களில் ஓடியாடுவதுமே அவர்களுடைய முக்கியமான விளையாட்டு. இயற்கையாகவே அந்த நாடு வெண்மணல் பிர தேசம். அக்காலத்து மனிதர் அணிவதும் வெள்ளை உடையே. அவர்களும் ஒவ்வொரு நாளும் மூன்று முறை துணியைக் களைந்து விடுவார்களாகையால் நாடெங்கும் பகல் முழுவதும் அவை வெளுத்து உலர்த்தப்பட்டிருக்கும். அதனுல் எங்கு பார்க்கினும் தரையெல்லாம் ஒரே வெண்மை மயமாகக் காணப் படும். உடம்பையும் நாட்டையும் மிகவும் சுத்தமாகப் பேணி வந்தார்கள் அக்காலத்து எகிப்தியர். அம் மக்களுக்கிடையில் ரோகிணி மிகுந்த சிறப்புடன் வளர்க்கப்பட்டு வந்தான். அவ னுடைய இயற்கை நற்குணங்களும் அன்பும் அவன் பெற்ருேரு டைய கூரிய அறிவினுல் விருத்தி செய்யப்பட்டு வந்தன.

ரோகிணியின் தகப்பன் மிக்க செல்வாக்குடையவனுகை யால், அவனைக் காணப் பல மடங்களிலிருந்தும் பல பெரியாரும் வருவது வழக்கம். ரோகிணி சிறு பையனுயிருக்கும்பொழுது அவனைக் கண்ட ஒரு மடாதிபதி அவனுக்கு யோகியினுடைய கண்கள் அமைந்திருப்பதாகவும் அவ்விதம் வாய்ப்பது அருமை என்றும் சொல்லி வைத்தார். அதுமுதல், ரோகிணி யோக முறையில் பயின்று மேன்மைபெற வேண்டுமென்பதே அவன் பெற்ருேருடைய பேரவாவாயிருந்தது. தமக்கு ஒரே மகனுயிருந் தும் வேண்டிய செல்வங்களுமிருந்தும் அம் மகன் மணம்புரிந்து சிற்றின்பம் அனுபவிப்பதைவிட இளந்துறவியாய் மடத்தை யடைந்து முத்திநெறி பயில்வதே மேன்மையெனப் பெற்ருேர் கொள்வாராயின், அக்காலத்து மக்களது மனப்பான்மையும் மதப்போக்கும் மிகவும் அதிசயிக்கத்தக்கவையே யாகும். இக் காலத்துப் பெற்ருேரைப் போலத் தமது மனத்திருப்தியே பெரி தென்றெண்ணுமல், தம் மக்கள் முன்னேற்றமே பெற்ருேர் கடமையென்று அவர்கள் கொண்டாரெனத் தெரிகிறது. வளர வளர, பெற்ருேருடைய அவாவை அறிந்த ரோகிணியும் அதே அவாவை மேற்கொண்டான்.

ரோகிணிக்கு எட்டு வயதாயிருக்கும்போது அவன் தகப்பனும் சித்திரையும் அரசனுடைய ஏவலால் எகிப்துக்குத் தெற்கிலுள்ள நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றனர். அவ்விடம் பிடிபட்டு எகிப்துக்குக் கொண்டுவரப்பட்ட கைதிகள் பலருள் ஒரு வாலிபப் பிரபு ஒருவர் இருந்தார். அவர் தமது நாட்டிலிருக்கும்போதே அவ்விடத்து உத்தமமுனிவராகிய சிங்கதேவரிடம் ஞானநெறி பயின்று தவம் பழகி வந்தவர். அவர் பெயர் மீனதேவர். சித்திரையும் ரோகிணியும் அவர்கள் குடும்பத்தாரும், மீனதேவரைக் கண்டதும் பூர்வ சம்பந்தத்தால் அவரிடம் வசியப்பட்டு, அவரிடம் பாடங்கேட்டும் அவரை ஆதரித்தும் வந்தார்கள். அந் நாட்டு மடங்களில் புறநாட்டாரை அங்கிகரிப்பதில்லையாயினும், மீனதேவர் அம் மடமொன்றில் சேர ஆசைப்படுவதைக் கண்டு, ரோகிணியின் தகப்பனும் பெருஞ் செல்வாக்குடைய பிரபுமாயிருந்த அநுஷம் கடுமுயற்சிகள் செய்து அவருக்குவேண்டிய அனுமதி பெற்றுக் கொடுத்தான். அவர், ரோகிணியும் அவன் பெற்றோரும் கொண்டிருந்த நோக்கத்தை நன்கறிந்திருந்தபடியால், பாலகனாகிய ரோகிணியை ஒருநாள் மடியில் வைத்துக்கொண்டு, சமீபத்தில் தாம் சேரப் போகிற மடத்தைப் பற்றியும், அங்குள்ள கல்வியின் அருமையையும் ஆலயங்களின் பெருமையையும் அவ்விடத்துத் திருவிழாக் கொண்டாட்டங்களில் மாணவருடைய அலங்கார உடைகளையும் களியாட்டுக்களையும் மனங்கவர எடுத்துச் சொல்லி, ரோகிணிக்குத் தன்னோடு தங்கப் பிரியமுண்டோவென்று கேட்டார். எல்லாவற்றையும் கூர்மையாய்க் கேட்டுக்கொண்டிருந்த ரோகிணி, பதிலுரைக்குமுன் எதிரே ஒரு வண்ணாத்திப் பூச்சி பறக்கக் கண்டு, மடியிலிருந்து திடீரென்று குதித்து ஓடிவிட்டான். மீனதேவர் முகஞ்சிவந்து "இது முன்னறிகுறியா யிருக்குமோ" என்று சிரித்துக்கொண்டார்.

மீனதேவர் சேர்ந்த மடம் அந் நாட்டிற்கே பிரதான மடம் ஆகும். அம் மடத்திற்சேர்ந்த சிறிது காலத்தில் ரோகிணியும் அம் மடத்திலேயே கல்வி கற்கச் சென்றான். ஆரம்பத்தில் அவன் பகல் முழுவதும் மடத்தில் தங்கி, இரவு தோறும் வீட்டுக்குத் திரும்புவான். நாளாக நாளாக மாதக் கணக்காக அவன் மடத்திலேயே தங்கலானான். அவனுடைய பதினைன்காவது வயதில் ஒருநாள், நடு இரவில் அவனுக்கு மீனதேவரிடம் செல்லவேண்டுமென்ற அடக்கமுடியாத அவா திடீரென்று தோன்றிற்று. அந் நேரத்தில் மீனதேவரின் அறைக்குச் சென்று அவரைத் தட்டியெழுப்புவது மிகவும் அசம்பாவிதமென்று அவனுக்கு எவ்வளவு தோன்றின போதிலும் அவன் கொண்ட ஆசையை அடக்க

முடியவில்லை. கடைசியாக, படுத்திருக்கமுடியாதென்று கண்டு, மிகுந்த மலைவுடன் எழுந்துபோய் மீனதேவர் அறைக் கதவை மெதுவாகத் தட்டினன். "உள்ளே வா" என்ற தீர்க்கமான ஒரு குரல் கேட்டது. ரோகிணி உடம்பு பதறிக்கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்றபோது, மீனதேவர் புன்சிரிப்புடன் மிகவும் கம்பிரமாய்ப் படுக்கையி லுட்கார்ந்திருக்கக் கண்டான். "உடனே வராமல் இவ்வளவு நேரம் ஏன் தாமதித்தாய்" என்று மீனதேவர் அவனைக் கருணையுடன் வினவினர். ரோகிணி நடந்தது முழுவதையும் சொன்னன். ரோகிணியின் பக்குவத்தைச் சோதிப்பதற்குத் தூரத்திலிருந்து அவனுக்கு மனத்தந்தி அனுப்பியதாகவும், அதில் அவன் தேறியபடியால் அவனுக்கு மனமுண்டானல் பிராயம் வரும்போது தாமே அவனைச் சிஷ்யனுக ஒப்புக்கொள்வதாகவும், மீனதேவர் ரோகிணியினிடம் சொன்னர். அது கேட்டு ரோகிணிக்குண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. தான் கோரியிருந்த வரம் கைகூடிற்றென்று அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினன். மறுநாள் இதைக் கேட்ட சித்திரையும் அடங்கா மகிழ்ச்சி கொண்டு ரோகிணியை வாழ்த்தினன்; இப்பேர்க்கொத்த பாக்கியம் தனக்குக் கிடையாமையை எடுத்துக்காட்டி ரோகிணியை நன்கு முயற்சிக்கும்படி ஊக்கப்படுத்தினன். ரோகிணியின் பெற்றோரும் இச் சம்பவத்தைப் பெரிதும் கொண்டாடினர்கள்.

ரோகிணி சிஷ்யனுவதற்கு இன்னும் நாலு வருஷகாலம் இருந்தது. அவன் வளர வளர அவனுடைய சினேகிதர்களும் பெருகினர்கள். அவரிற் பலர் பழவினைத் தொடர்பாளர். அவர்களுள் அஷ்டமன், நவமி, ரேவதி, சனி, இவர்கள் பிரபலமாகக் காணப்படுகின்றனர். அவர்களுடன் மிருகசீரளம் என்ற பெண்ணும் அடிக்கடி காணப்படுகின்ருள். அவள் உயர் குலத்தில் பிறந்த ஓர் அழகுடைய மங்கை. இவர்கள் எல்லோரும் நம் இளஞ் சன்னியாசியை அடிக்கடி ஏளனம் பண்ணுகிருர்கள். முற்பிறப்புகளில் இவர்களுடைய பழக்கத்தால் ரோகிணி அனுபவித்த துன்பங்கள் வாசகர்களுடைய நினைவிற்கு வரலாம். இப்பொழுதும் அந்த விட்டகுறை தொடர்ந்தே வந்தது. "இளமையும் செல்வமும் அமைந்திருக்கும்போது ஒருவன் உலக இன்பங்களைத் துறக்க வேண்டுமானல் அவன் பேடி" யென்று பேசுவார்கள். இயற்கையில் இவர்கள் தீயோரல்லராயினும் காதல், கவருடல், கள்ளுண்டல் இவைகளை உலக முறையென்று கைக்கொண்டவர்கள். அவற்ருலடையப்படும் ஆனந்தங்களை அவர்கள் அடிக்கடி ரோகிணி முன் பெரிதும் புகழுவார்கள். "கரைப்பார் கரைத்தால் கல்லுங்கரையும்" என்றபடி ரோகிணி மனமும்

கொஞ்சம் கொஞ்சமாகப் பேதுற்றது. ஆலய நியதிகள் கடினமாகத் தோன்றின. சுயேச்சையாகத் திரிவதே சுகவாழ்வெனத் தோன்றத் தொடங்கியது. மிருகசீரளத்தின் மேல் கொஞ்சம் மயக்கமும் ஏற்பட்டது. கடைசியாக, எல்லோரும் எத்தனையோ ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த சுதினம் வந்தபோது, மீனதேவர் எத்தனை எடுத்துச் சொல்லியும் கேளாமல், தனக்கும் தவநெறிக்கும் வெகுதூரமென்று கூறி ரோகிணி மடத்தை விட்டு வெளியேறி விட்டான். அதுகண்ட மீனதேவரும் சித்திரையும் ரோகிணியின் பெற்றோரும் அடைந்த வருத்தத்திற்கு அளவில்லை. ஆயினும், அவர்கள் என்ன செய்யக்கூடும்! குதிரை முன் கொள்ளைத்தான் வைக்கலாம்; தின்னவேண்டியது குதிரையல்லவா! ரோகிணி இவற்றை யொன்றும் பொருட்படுத்தவில்லை. புதிதாய்க்கிடைத்த சுதந்திரத்தில் தன் கூட்டாளிகளுடன் சிற்றின்பத் துறையிலிறங்கிவிட்டான். ஆயினும் சில மாத அனுபவத்தில் அவனுக்கே பகுத்தறிவுக்கண் திறந்தது. பெரிய புதையலொன்றை இழந்துவிட்டதாக அவனுக்குத் தென்பட்டது. உலக இன்பம் வெறுப்பாயிற்று. அதன் நிலையாமை கண்டு மனம் வருந்தினான். தோழருடன் பிணங்கினான். இழந்ததை நினைந்து நினைந்து மனம் புழுவாகத் துடித்தான். திரும்பவும் ஆலயத்திற்குள் பிரவேசிக்க ஆத்திரங்கொண்டானாயினும், பிரமசரியம் தவறிவிட்டபடியால் அங்கு அவனுக்கு இடமில்லாமற் போயிற்று. இனி அவனுக்கு மணஞ் செய்து வைப்பதே மேன்மையெனப் பெற்றோர் கருதியதும், அது கேள்விப்பட்ட அந்நாட் டரசன், முன்னமேயே ரோகிணியை நன்கறிந்திருந்தானாகையால் தன் மகளை அவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லியனுப்பினான். அப் பெண்மணியின் பெயர் பௌர்ணமி.

திருமணம், அவ்விருவருக்கும் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. பண்டை உறவினளாகிய பௌர்ணமியின் மேல் மிகுந்த காதலோடு ரோகிணி வாழ்ந்துவந்த போதிலும், தான் செய்த தவற்றை நினைந்து அடிக்கடி அந்தரங்கமாக வருந்துவான். பழைய மடத்திற்கு ஒருகால் சென்றபோது, முன்பு அவனைக் கொண்டாடின மடாதிபதி இப்போது மௌனமாய் அவனை ஏற்று, "இப் பிறப்பில் வாய்த்திருந்த சௌகரியங்களெல்லாம் திரும்பவும் வாய்க்க இனி எத்தனையோ ஆயிர ஆண்டுகள் செல்லும்" என இகழ்ச்சியாகக் கூறினார். அப்போது அருகில் நின்ற மீனதேவர், "எவ்வளவு காலமானாலும் அவன் பக்குவப்படும்போது நான் ஒப்புக்கொள்ளத் தயாராயிருப்பேன்," என்று தேறுதல் சொன்னார். மீனதேவரைத் தெய்வம்போலப் பாவித்துவந்த ரோகிணிக்குத் தான் தவறிழைத்தது முதல் அவ

ரைக் காண்பதே துன்பமாய் விட்டது. அவரைக் காணும்போ தெல்லாம் அவமானம் மேலிட்டு ஒதுங்கிக் கொள்வான்.

மணமானபின் ரோகிணி பட்டாளத்திலும் அரசாங்கத் திலும் பல உத்தியோகங்களை வகித்து வந்தான். அவன் மனைவி ஒரு மகனை ஈன்று சிறுவயதிலேயே இறந்தபடியாலும், ரோகி ணியின் 48-வது வயதில் அவனுடைய சிறந்த நண்பனுகிய சித்திரையும் இறந்து போனபடியாலும், அவன் தன் பிற்கால வாழ்வை மிகவும் ஒண்டியாகவே கழித்தான். உடம்பனுவத்திற்கு ஒரு குறைவுமில்லாதிருந்த போதிலும், மனதுக்கு யாதொரு சமா தானமுமில்லாமல் அவன் 71 வயதுவரை யிருந்து, இறுதியில் விண்ணுலகெய்தினன். முன் 12-வது பிறப்பில் 38-வயதில் இறந்தும், 1543 ஆண்டுகள் விண்ணுலகில் கழித்தவன், இப்போது 71 வயது வரை இருந்தும். 1200 வருஷங்களில் திரும்பப் பிறந்ததிலிருந்து அவன் வாழ்வின் சீரழிந்த பலன் நன்கு புலப் படும். "உள்ளவருக்கு மேலும் கொடுக்கப்படும்; இல்லாதவரிட மிருந்து உள்ளதும் எடுக்கப்படும்." என்று கிறிஸ்து நாதர் உபதேசித்தபடி, கிடைத்த சௌகரியங்களை நல்வழியில் உபயோ கப் படுத்தாதவன் அவற்றை இழந்து தவிப்பான். உபயோகப் படுத்துபவன் மேலும் மேலும் அனுகூலங்களைப் பெற்று முன்னேறுவான். அவை சிற்றின்பச் சௌகரியங்களாயினும் சரி, பேரின்பச் சௌகரியங்களாயினுஞ் சரியே; இதுவே மனித னுடைய ஏற்றத்தாழ்ச்சி நியதி; தான் தான் தேடிக் கொள்ளும் தலைவிதி; இது அடுத்த பிறப்பில் நன்கு புலப்படும்.

கோடிவழி. XIX.

ரோகிணி : (தகப்பன்) அநுஷம். (தாய்) அமாவாசை (காதலி) மிருக சீரளம் (மனைவி) பௌர்ணமி. (மகன்) சுவாதி.

அசுபதி : (எகிப்தியப் பிரபுவின் பெண்) (தாய்) புனர்பூசம். (தமையன்) விருச்சிக தேவர். (கணவன்) ராகு. (மைத் துனர்கள்) அசுபதிக்காக மணம்புரியா திருந்துவிட்ட சித்திரை, வைகாசி (சித்திரை தம்பி).

வைகாசி : (மனைவி) செவ்வாய்.

மீனதேவர் : சமயகுரவர் - சன்னியாசி. (மாணவர்கள்) மங்களன், சித்திரை, அசுபதி, வைகாசி முதலியோர்.

ரோகிணிக்குத் தோழர் மைனர்கள் : அஷ்டமன், நவமி, ரேவதி சனி முதலியோர்.

20. தென்னாப்பிரிக்கா—ஆண்.

கி. மு. 2736—கி. மு. 2688.

வயது: 48—பின் பிதுருலகவாசம்: 809 ஆண்டுகள்.

முந்திய பிறப்பில் ஆப்பிரிக்காவின் வடபாகத்தில் எகிப்து தேசத்தில் உத்தம நாகரிகத்தில் உயர்குலத்தில் செல்வத்திலும் செல்வாக்கிலும் பிறந்த ரோகிணியானவன் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளத் தவறிய குற்றத்தினால், இப்போது ஆப்பிரிக்காவிலேயே தென்கோடியில் ஆடுமாடு மேய்த்துத்திரியும் ஒரு அராபியர் கூட்டத்தில் ஆணுடம்பில் பிறந்தான். விவசாயமும் வியாபாரமும் ஒரு சிறிது அவருக்குள் வழங்கினவாயினும், அவருட் பெரும்பாலார் வேட்டையிலும் ஆடுமாடுகள் பேணுவதிலுமே காலங்கழிப்பவர்கள். போரிலும் சிறந்த வீரர்கள்; வில்லும் அம்பும் உபயோகிப்பாரேனும் ஈட்டியும் வாளுமே அவர்கள் முக்கிய ஆயுதங்கள். சூரியனைத் தொழுபவர்கள். மக்கள் பொதுவாக உயரமும் அழகும் உடைய உருவத்தினர். அவருக்குள் ரோகிணி கி. மு. 2736-ல் பிறந்தான். தகப்பன் கொஞ்சம் நிலங்களும் ஆடுமாடுகளும் உடையவன்; நல்ல வேட்டைக்காரன்; சிறிது வியாபாரமும் செய்பவன். ரோகிணியினுடைய பயிற்சி முழுவதும் அந்நாட்டு வாழ்க்கைக்கு வேண்டிய அப்பியாசங்களாகிய குதிரையேற்றம், வில்வித்தை, வாள்வித்தை, வேட்டையாடும் விதங்கள் இவற்றைத்தவிர வேறு நாகரிகக் கல்வியொன்றும் அங்குக் காணப்படவில்லை. காயங்களுக்கு வேண்டிய சிகிச்சை முறைகளும் கற்பிக்கப்பட்டன. எல்லாவற்றிலும் முக்கியமாகக் கருதப்பட்டது கீழ்ப்படிதல். சிறுவயதில் பெற்றோர் ஆசிரியர் ஆணைக்கும், பின்னால் அரசனாணைக்கும் யாதொரு அட்டியன்னியில் கீழ்ப்படிதலே உத்தம ஒழுக்கமாக வற்புறுத்தப்பட்டது. இக் குணம் படிப்பதற்கே இவ்வான்மா இவ்விடம் வந்து பிறந்தது போலும். ஏனெனில் ரோகிணிக்கு உடன்பிறந்தோர் பலரிருந்தபோதிலும் பழைய பந்தக்காரர் அவருள் அதிகமாகக் காணப்படவில்லை. ஒரு தம்பி ராகு. ரோகிணிக்கு அடிமைப் பையன் அஷ்டமன். அவ்விடத்து அரசன் சதுர்த்தி. குரு என்பவளும் அவ்வூரில் பிறந்திருந்தாள். மற்றையோர் முன் பழக்கக்காரராகக் காணப்படவில்லை.

இவருள், ரோகிணிக்கு அஷ்டமன்மீது அன்பு அதிகம்; அரசனிடம் பக்தி அதிகம்; குருவின்மேல் காதல் அதிகம். அஷ்டமனும் ரோகிணியும் ஒரே வயதினர். ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்த மகனுக்கு ஓர் அடிமை வைத்துக்கொள்ள உரிமையுண்டு. அந்த முறைப்படி ரோகிணிக்கு அடிமையாக

விலைக்கு வாங்கப்பட்டவன் அஷ்டமன். அவனும் ரோகிணிக்காக உயிரையும் கொடுக்கத் துணிந்தவன். ஆனால் அந் நாட்டில் உயிர் அதிக விலையுள்ளதாகப் பாராட்டப்படவில்லை. ஆயினும் அவன் ரோகிணி காலால் இட்ட வேலையைத் தலையால் தாங்குவான். என்றும் பிரியாது அவன் நிழல்போல அலைவான். இரண்டு தடவைகளில் தன் உயிரையே ஆபத்திலாக்கி ரோகிணியைக் காப்பாற்றினான். ரோகிணி தகப்பனோடு அடிக்கடி வேட்டைக்குச் சென்று வல்லவனானான்; யுத்தத்திலும் நிபுணனானான்; தகுந்த பருவத்தில் குருவின்மேல் காதலும் கொண்டான். ஆனால் அவன் தம்பியாகிய ராகுவும் அவள்மேல் காதல்கொண்டபடியால், அது காரணமாகத் தமையன் தம்பிக்குள் விரோதம் ஏற்பட்டது. குரு உண்மையில் ராகுவையே விரும்பினாளாயினும், தகப்பனுடைய உடைமையில் பெரும்பாகம் மூத்த மகனாகிய ரோகிணிக்கே கிடைக்குமாகையால் அதைக் கருதித் தமையனை மணந்துகொண்டாள். அதையறியாத ரோகிணியும் கொஞ்சகாலம் குடும்ப வாழ்க்கையில் சுகமாகவே வாழ்ந்து வந்தான். என்றாலும் தான் வாழ்வது வெறும் மிருகவாழ்வே யென்றும், வேறு உத்தம வாழ்க்கை ஒன்றிருக்கவேண்டுமென்றும், அவனையறியாமலே ஏதோ ஓர் அதிருப்தி மாத்திரம் பூர்வ வாசனையால் அவன் மனத்துக்குள் சதா இருந்துகொண்டே இருந்தது.

இப்படியிருக்கும்போது நாட்டில் ஒரு கலகம் உண்டாயிற்று. ரோகிணி அரசனைச் சார்ந்தவனாகையால், குருவின் காரணமாக அவனோடு பிணங்கிய ராகு கலகக்காரரைச் சேர்ந்துகொண்டான். கடைசியாய்க் கலகக்காரர் வெற்றி பெறவே, அரசனும் அவனைச் சேர்ந்தவர்களும் நாட்டைவிட்டு ஓடிப் பலநாட் பயணத்திற் கப்பாலிருந்த ஒரு பெரிய குகையில் போய்த் தங்கும்படி நேரிட்டது. ரோகிணியும் மனைவியை விட்டுவிட்டுக் கூட ஓடும்படி நேர்ந்தது.

அரசனும் அவனைச் சேர்ந்தோரும் நாலு வருஷ காலம் வரை குகையைச் சுற்றியுள்ள காடுகளில் வேட்டையாடி அங்குள்ள மக்களோடு குலாவிக் குடியிருந்து வந்தார்கள். குகை மிகவும் விஸ்தீரணமானது. பல சிற்றூர்கள் உள்ளேயே அமையப்பெற்றது. அவற்றில் நிகிரோவர் போன்ற ஒருவகைக் கறுப்பு மனிதர் கூட்டங்கூட்டமாக வசித்து வந்தனர். அவர்கள் வசித்த குகையானது மலைக்குள் எட்டாத தூரம் செல்வதாகவும் அங்கே சூரிய ஒளியே கண்டிராத ஒரு ராக்ஷச மக்கள் குடியிருப்பதாகவும் அக் கறுப்பு மனிதர் அடிக்கடி சொல்வார்கள். அதைச் சோதித்தறிய ரோகிணிக்கு ஆவலுண்டாயிற்று. அதற்

காக அவனும் அவனைப்போலத் துணிவுகொண்ட வேறு சிலரும் ஒருநாள் குகைக்குள் நெடுந்தூரம் சென்று சுற்றிப்பார்த்து வருகையில், ஒரு பள்ளத்தில் வெள்ளத்தால் சேர்க்கப்பட்ட மாணிக்கத்திரள் ஒன்றைக் கண்டார்கள். அவர்கள் அதைப் பொறுக்கிக்கொண் டிருக்கும்போது தற்காலம் அழிந்துபட்டுப் போனதான "டைனோ ஸார்" என்ற காண்டா மிருகமொன்று அவ் வழியேவர, யானையைவிட எட்டுப்பத்து மடங்கு பெரியதும், பத்துப் பன்னிரண்டு முழம் நீண்ட கூரிய கொம்புகளும் உடம்பெங்கும் மூடிய சடைமயிருங்கொண்ட அந்தப் பயங்கரமான மிருகத்தைக் கண்டதும், அவர்கள் எல்லோரும் திகில் கொண்டு உடல் நடுங்கிப் பதறிவிழுந்து, உயிர்தப்பினால் போதுமென்று ஒரே ஓட்டமாய்த் திரும்பி, வழி தவறி, கல்லிலும் காட்டிலும் இடறிவிழுந்து, பலநாள் பட்டினிப்பசி கிடந்து எலும்புந் தோலுமாய் இருப்பிடம் வந்து சேர்ந்தார்கள். இந்தப் பயங்கரமான மிருகத்தைப் படங்களிலும் அதன் எலும்புக் கூட்டைச் சில காட்சிச்சாலைகளிலும் (Museum) இன்றுங் காணலாம்.

தாங்கள் வசிக்கும் இடம் வந்து மாணிக்கக் கற்களைச் சாவதானமாகச் சோதித்துப் பார்க்கும்போது, அதிலிருந்த பெரிய வயிரமொன்றைக் கண்டு ரோகிணிக்கு ஓர் எண்ணம் உதித்தது. அரண்மனையில் பரம்பரையாக அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாள் இருந்து வந்தது. அது முழுவதும் பொன்னாலாக்கப்பட்டுப் பெரிய வயிரக் கல்லால் இழைக்கப்பட்ட கைப்பிடியை உடையதாய் மந்திரவாளென்று பெயர் பெற்றிருந்தது. அவ் வாளை யுடையவனே கடவுளா லேற்படுத்தப்பட்ட அரசன் என்ற மூடக்கொள்கையும் அந்நாட்டு மக்களிடம் குடிகொண்டிருந்தது. முன்பு கபடமாய்க் கலகக்காரர் அவ் வாளைக் கைப்பற்றியதாலேயே அரசன் தோற்கவும் நேர்ந்தது. ஆகையால் புதிதாய்க் கண்டெடுத்த பெரிய வயிரத்தால் அம்மாதிரி வாளொன்று பணி செய்து, அதைக் கையில் கொண்டு அரசன் திடீரென்று நாட்டில் தோன்றுவானானால், தன் ஊரார் அதை உண்மை வாளென்று நம்பி அவனைப் பின்பற்றுவாரென்றும் கள்ளத் தலைவன் ஓடிவிடுவானென்றும் ரோகிணி அரசனுக்கு அந்தரங்கமாகத் தெரிவித்தான். அரசன் அதை உண்மையென்று ஒப்புக்கொண்டானாயினும், அவனும் மூடக்கொள்கையில் மூழ்கியிருந்தபடியால், மந்திரவாள் மாதிரி வேறு வாள் செய்வதே தெய்வத்திற்குச் சம்மதமாகாதென்று பயந்தான். அதனால் வேறு தீங்குகளும் நேருமென்று அச் சூழ்ச்சிக்கு அவன் ஒப்பவில்லை. அவ்விதமாயின் அந்தக் குகை வாழ்க்கையைவிட, மந்திரவாளைத் திருட முயற்சிப்பதே மேன்மையென ரோகி

னிக்குத் தோன்றியது. அரசனும் பலவாறு சந்தேகமும் பயமும் கொண்டு கடைசியாக ஒருவாறு அதற்கு இணங்கவே, ரோகிணி தன் இலேபிரியா அஷ்டமனே மாத்திரம் அழைத்துக்கொண்டு தான் பிறந்த ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

இருவரும் மாறு வேடம் பூண்டு பல நாள் நடந்து தங்கள் நகரம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் மந்திரவாளைக் கைப்பற்றக் கூடிய சமயம் வாய்க்குமுன் மாதக் கணக்காகக் காத்திருக்க வேண்டிவந்தது. அநேக ஆபத்துக்களுக்கும் உட்படவேண்டி வந்தது. இதற்கிடையில் தன் மனைவி தன் தம்பியுடன் வாழ்வதாக ரோகிணி கண்டு பிடித்தான். ரோகிணி இறந்து போனதாக ராகுவும் குருவும் எண்ணிக்கொண்டார்கள். அவர்கள் விருப்பமும் அங்ஙனம் இருந்தபடியால் வேறு விசாரணை யின்றியே அவன் இறந்திருப்பானென்று அவர்கள் எளிதில் நம்பிக்கொண்டார்கள். அதுமுதல் ராகு குருவைக் கைப்பற்றிக் கொண்டு இருவரும் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வந்தனர். ரோகிணி இதை அறிந்ததும் வீரா வேசங்கொண்டான். அடங்கிக் கிடந்த பழைய ஆங்காரமெல்லாம் வட்டிமுதலோடு அவனிடம் மூண்டது. அந்த க்ஷணமே பழிவாங்கத் துடித்தான். உடனே அவர்கள் முன் சென்று தன்னை இன்னுனென்று அறிவித்து இருவர் கழுத்தையும் அரிந்துவிட வேண்டுமென்று ஆத்திரங் கொண்டான். தன் உயிர் அவனுக்குப் பெரிதாகத் தோன்ற வில்லை. ஆனால் தான் பழிவாங்கத் தலைப்பட்டால், தான் கோரி வந்த காரியம் முடிவு பெறுதென்பது அவனுக்குப் பெருந் தடையாயிருந்தது. ஒரு புறம் ராஜவிசுவாசம் மனதை இழுக்க, மனைவியும் தம்பியும் சதி செய்த ஆங்காரம் மற்றொரு புறம் இழுக்க, ரோகிணி கோட்டி கொண்டவன் போலானன். இரண்டு நாள் இரவும் பகலும் ஊணும் உறக்கமும் இன்றி, மாறி மாறி இதனையே எண்ணியெண்ணி, மத்திலகப்பட்ட தயிர்போல மனங் குழம்பிக்கொண்டு, இருந்த இரையிலேயே தரையில் குந்தி யிருந்தான். இரண்டுநாள் வரையில் அவன் கோரிவந்த காரியம் தோற்றுப் போகும்போ லிருந்தது. கடைசியாக ராஜவிசுவாசம் ஜெயித்தது. "அரசனேடு திரும்பிவந்தால் தம்பி காரியத்தை அன்று ஒரு கை பார்த்துக்கொள்ளலாம். அரசன் தவறிவிட்டால், தானே தனியாகத் திரும்பலாம். அப்போது ராஜத் துரோகம் ஏற்படாது," என்று அவன் தீர்மானித்தான். இதற்கு முன் பல பிறவிகளிலும் மனம்போன போக்கே போய்க்கொண் டிருந்த ரோகிணிக்கு இது ஒரு மாபெரும் வெற்றியேயாகும்.

குகையிலகப்பட்ட மாணிக்கக் கற்களைக் காவலாளருக்குக் கைக்கூலியாகக் கொடுத்தும் வேறு பல சூழ்ச்சிகளாலும் கடு

முயற்சிகள் செய்து வெகுகாலம் காத்திருந்து கடைசியாக ரோகிணி மந்திரவாளைக் கைப்பற்றினான். அந்த இரவிலேயே இருவரும் ஊரைவிட்டுத் தங்கள் அரசனிருக்கும் திசையை நோக்கி நடந்தார்கள். ஆனால் அவர்கள் துரதிர்ஷ்டவசமாக ரோகிணி ஏற்பாடு எவ்விதமோ தவறிப்போய் வாள் களவு போனது மறுநாளே கண்டு பிடிக்கப்பட்டது. உடனே ஊரெங்கும் பெருங் குழப்பமாயிற்று. புதிய அரசன் பயப்படத் தொடங்கினான். ஊராரும் சந்தேகங் கொள்ளத்தொடங்கினார்கள். நாலா திக்கிலும் காவலாளர் அனுப்பப்பட்டனர். ரோகிணியும் அஷ்டமனும் எவ்வளவு ஒளிந்துமறைந்து ஓடியும் மறுநாள் இரவே காவலாளர் கைப்பட்டனர். இருவரும் அவரை எதிர்த்துப் பொருத போதிலும் பிடிபட்டுக் கட்டப்பட்டார்கள். ஆனால் அந்த இடம் நடுவனமாயிருந்தபடியால், மேலே செல்ல மனமின்றி இரவு அந்த இடத்திலேயே காவலாளர் தங்கிவிட்டனர். அந்த மதிகேடு அஷ்டமனுக்கு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. வேட்டைப் பழக்கத்தாலும், ரோகிணிமேல் கொண்ட அன்பினாலும் புத்திக் கூர்மை பொருந்திய அவன், விடியுமுன் சாமர்த்தியமாகத் தன்னையும் ரோகிணியையும் கட்டவிழ்த்துக் காவலாளரையும் உறக்கத்திலேயே கண்டதுண்டமாக்கி வாளையும் திரும்பக் கைப்பற்றினான். ஆனால் காவலாளரை எதிர்த்தபோது இருவருக்கும் படுகாயம் ஏற்பட்டதனாலும் வேறே கூட்டங்களும் அவர்களைத் தேடி அவ்வழியே திரிந்ததனாலும் உடனே மேற்செல்லமாட்டாமல் சில தினங்கள் ஓரிடத்தில் ஒளிந்துகிடந்து, காயத்தினாலும் பசியினாலும் மிகவும் இளைத்துமெலிந்து பதறிப்பதறி ஒளிந்தொளிந்து உயிரைக் கையிற்பிடித்துக்கொண்டு, இருவரும் பல நாளைக்குப் பின் தமது அரசனிருக்கும் இடம் வந்து சேர்ந்தனர்.

வாளைக் கண்டதும் அரசன் ஆனந்தங் கொண்டான். அவனும் மற்றையோரும் ரோகிணியை மிகவும் கொண்டாடினர்கள். எல்லோரும் குதூகலமும் ஊக்கமும் கொண்டார்கள். ரோகிணிக்கு உடம்பு தேறியதும் மந்திரவாளுடன் அரசனும் அவனுடைய ஆட்களும் தம் நாட்டின் மேல் படையெடுத்துச் சென்றனர். வாள் களவு போனதை ஊரார் அறிந்தபொழுதே கள்ளத் தலைவன் பலங்குன்றிப் போனபடியால், பழைய அரசனை எதிர்த்து நிற்கமாட்டாமல் அவன் ஓடிவிட்டான். நடந்த சிறிய அமளியில் ரோகிணி பலமான அடிபட்டுக் கீழே வீழ்ந்தான். அவனைக் காப்பாற்றும் பொருட்டுக் குறுக்கிட்ட அஷ்டமன் அடிபட்டு இறந்தான்.

அரசன் நாட்டைக் கைப்பற்றியதும் ரோகிணிக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்து அவனை உயர்ந்த பதவியில் வைத்தான்.

ரோகிணியின்முன் கொண்டுவரப்பட்டபோது ராகுவாவது குருவாவது உயிர்தப்புவோமென்று எண்ணவேயில்லை. ஆயினும் தன் மனைவியின்மேல் காதல்கொண்டிருந்த ரோகிணி, அவர்கள் செய்த துரோகத்தையும் குற்றத்தையும் எடுத்துக்காட்டி, வாய் கொண்டமட்டும் கண்டித்து, தம்பியை நாட்டைவிட்டுச் செல்லும்படி ஏற்பாடு செய்து, மனைவியைத் திரும்பவும் கைக்கொண்டான். தம்பியைப் பழிவாங்கப் பூரண அதிகாரம் கையில் கிடைத்தும் அவனை மன்னித்து உயிரோடுவிட்டது ரோகிணிக்கு மிகவும் உத்தமமான முன்னேற்றமென்று கொள்ள வேண்டியது. ஆயினும் தன் மனைவி நாணயங் கெட்டவளென்று கண்டு கொண்டபடியால், அவளுடன் ஊருக்குள் குடியிருக்க விருப்பமின்றி மலையடிவாரத்தில் ஒரு மடம் போன்ற கட்டிடத்தில் வசித்து வந்தான். இவ்வாறு அரசனுக்கு அடுத்த நண்பனாய்க் குடியிருந்து சிறிது காலத்திற்குப்பின், தன் 48வது வயதில் பக்கத்து ஊராரோடு நடந்த போர் ஒன்றில் யுத்தகளத்திலேயே மாண்டான்.

குறிப்பு: உலகத்தில் மனிதனிடத்துக் காணப்படும் குணங்கள் மூன்றாகும். அவை அறிவு, இச்சை, செயல் என்பன. இவை எல்லா மனிதருக்கும் பொதுவாக உள்ளன. புறப் பொருள்களைக் காணும் போது இச்சை நிகழும். இச்சைப்பட்ட பொருளை அடைவதற்கு அறிவு வழிதேடும். மனிதன் அந்த வழியில் நடந்து ஆசைப்பட்ட பொருளுக்கு முயற்சிக்கும்போது செயல் உண்டாகும். இம் மூன்றும் முதலில் சிற்றின்ப முயற்சியில் முளைத்து, சுயநலங்கருதி உழைக்கும். அதனால் பிறருக்குத் துன்பமுண்டாகும். அதன் பலனாகப்,

> "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்."

என்றபடி தனக்கும் துன்பங்கள் வந்து நேரும். அவ்விதத் துன்பங்களை அடிக்கடி அனுபவிப்பதனால், மேற் சொல்லிய மூன்று குணங்களும் சிறிது சிறிதாகப் பக்குவப்பட்டு, நல்வழியில் திரும்பும். மனிதன் இம் மாதிரி படிப்படியாக முன்னேறித் தன் குணங்களில் முதிர்ச்சி பெறுவான். அறிவினுடைய முதிர்ச்சி ஞானமாகும். இச்சையினுடைய முதிர்ச்சி பக்தியும் அன்புமாகும். செயலினுடைய முதிர்ச்சி பரோபகாரமாகும். இந்த முதிர்ச்சிகள் மூன்றும் முற்றுப் பெறுகிறவரை, ஒவ்வொரு மனிதனும் மாறி மாறி உலகில் பிறந்தும் இறந்தும் பிறவிப் பிணியில் உழலுவான். இம் மூன்று குணங்களின் முன்னேற்றத்திற்கும் முதிர்ச்சிக்கும் எவ்வளவுக் கெவ்வளவு சாதகங்கள் ஏற்படுகின்றனவோ அது நல்ல பிறப்பாகும். சாதகங்கள் அமையாமலோ அல்லது பாதகங்கள் ஏற்படவோ செய்யுமாயின், அது தண்டனையாகக் கிடைத்த பிறவியாகும். ரோகிணி முந்திய பிறப்பில் வாய்த்த அனுகூலங்களையெல்லாம் அசட்டை செய்த காரணமாக, இப்போது மிகத் தாழ்ந்த பிறவியெடுத்தானென்றே சொல்லவேண்டும். அவன் பிறந்த அரபி மக்களுக்குள் ஞானமென்றாவது பக்தியென்றாவது ஒன்றுங் காணப்படவில்லை. வேட்டை

யாடுவதும் பெண்டுபிள்ளைகளோடு வாழ்வதும் பக்கத்து ஊராரோடு இயன்றபோதெல்லாம் போர் புரிவதுந் தவிர வேறு உத்தம முயற்சி ஒன்றிலும் அம் மக்கள் ஈடுபட்டதாகக் காணப்படவில்லை. ரோகிணி போர் முனையில் வீரனாயிருந்தானாயினும் அந்த அரபியர் போரில் கொண்ட களிப்பும் திருப்தியும் அவனுக்கு ஒரு நாளும் இருந்ததில்லை. உயர்நல வாழ்வு இன்னதென்று அறிய வழியில்லாமலும் மிருக வாழ்வு போன்ற தனது வாழ்வில் பூரண திருப்தியில்லாமலும் ரோகிணி இவ் வாழ்வு முழுவதையும் கழித்தான். அவனுடைய பழவினைக் கூட்டாளி களிலும் மேற்சொன்ன நால்வரேயன்றி வேறு யாரும் இப் பிறவியில் அவனுடன் காணப்படவுமில்லை.

கோடிவழி—XX

சதுர்ந்தி: அரசன்.
ரோகிணி: (தம்பி) ராகு. (மனைவி) குரு (அடிமை) அஷ்டமன்.

21. பெர்ஸியா—ஆண்

கி. மு. 1879—கி. மு. 1862.

வயது: 17—பின் பிதுருலக வாசம்: 341 ஆண்டுகள்.

ரோகிணி திரும்பப் பிறந்தது பாரசிக நாடு. ஆண்டு கி. மு. 1879. உடம்பு ஆணுடம்பு. தகப்பன் ஆனி; தாயார் அஸ்தம். ரோகிணி தலைமகனாயினும் பெற்றோரால் அதிகமாகப் பாராட்டப் படவில்லை. அன்றையப் பாரசிக நாடு எல்லாத் துறைகளி லும் உயர்ந்த நாகரிகமுடையதாயிருந்தது. ஆனி பெரிய வர்த்த கன்; பணக்காரன்; பிரவர்த்தி மிகுதியால் மக்களையாவது மனைவியையாவது கவனிக்க நேரமில்லாதவன். ரோகிணிக்கு ஒரு தம்பியும் தங்கையும். இருவரும் பழைய கடன்காரர். அவர் களைப் பாராட்டுவதிலேயே அஸ்தம் நேரம் போக்குபவள். ஆதலால், ரோகிணி மிகுந்த ஆசை பாசமுடைய குழந்தையா யிருந்தும் அவனுடைய அன்பைக் கவரும் கருவியொன்றும் இல்லாமலே அசட்டை செய்யப்பட்டு வளர்ந்து வந்தான். பெற்றோருடைய கவனக்குறைவால் அவனுடைய இந்தப் பிறப் பும் முன் பிறப்பைப் போல அதிருப்தியாக முடியுமென்றே தோன்றியது. அப்போது அவனுடைய ஏழாவது வயதில் எதிர் பாராத சம்பவமொன்று ஏற்பட்டது.

ஆனியும் வேறு இருவரும் வியாபாரத்தில் பங்காளிகளா யிருந்தனர். அவர்களும் ரோகிணிக்குப் பல பிறவிச் சம்பந்த முடையோரே. வியாபாரம் பெருகி வந்தபடியால் ராஜ்ஜியத்தின் வெளிநகரொன்றில் ஒரு கிளை ஸ்தாபிக்க அவர்கள் தீர்மானித்

தார்கள். ஆனியானவன் ஒன்றிரண்டு வருஷம் அங்கே தங்கி அதை ஆரம்பித்து விருத்தி செய்துவிட்டுத் திரும்புவதாகச் சம்மதித்தபடியால், அதற்கு வேண்டிய சரக்குகளை ஒட்டைகளின்மேலேற்றிக் கொண்டு, மனைவி மக்களுடனும் பல வேலைக்காரருடனும் ரோகிணியின் ஏழாவது வயதில் வெளியூர் புறப்பட்டான். அவர்கள் பல ஊர்கள் கடந்து ஆள் சஞ்சாரம் அதிகமில்லாத ஒரு காட்டுப்பாதையில் செல்லும்போது, அந் நாடுகளில் இன்றைக்கும் சுயேச்சையாய்ச் சுற்றித்திரியும் பெடுயின் என்ற கொள்ளைக்காரரில் ஒரு கூட்டம் அவர்களைக் கண்டு தாக்கிற்று. ஆனியும் அவனுடைய ஆட்களும் தைரியத்துடன் எதிர்த்தபோதிலும், கொள்ளைக்காரர் மிக்க பலமுடையோராயிருந்தபடியால் அவர்கள் ஆண்மக்கள் அனைவரையும் வெட்டி வீழ்த்திவிட்டுப் பெண்களையும் பிள்ளைகளையும் தமது உடைமைகளாகக் கைப்பற்றவும், அஸ்தம் தன் இளைய பிள்ளைகள் இருவரையும் பிரிக்கவொட்டாமல் தழுவிக்கொண்டு மன்றாடினாள். அச்சமயம் அவ்வழியாய் வரநேர்ந்த வேறொரு கூட்டம், நடப்பதைக் கண்ணுற்று உதவிக்கு ஓடிவருவதைக் கண்டு, கொள்ளைக்காரர் அஸ்தத்தையும் சிறு பிள்ளைகளிருவரையும் குத்திக் கொன்றுவிட்டு, சரக்குகள் ஏற்றியிருந்த ஒட்டகைகளைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள். அவர்கள் பதறியோடின ஓட்டத்தில், ஒட்டகையிலிருந்து நழுவி விழுந்த ரோகிணியைக் கவனிக்க வழியில்லாமற் போயிற்று. ஆகவே புதிய கூட்டம் கொள்ளைப்பறியிடத்தை அடைந்தபோது, பயந்து குற்றுயிராய்ப் பதுங்கிக் கிடந்த ரோகிணியைத் தவிர வேறு ஒருவரும் பிழைத்திருக்கவில்லை. வந்த தலைவன் பரிதாபங் கொண்டு ரோகிணியை எடுத்து மார்போடணைத்து மெள்ள மெள்ளப் பயத்தைத் தெளிவித்தான். அவன் பெயர் சித்திரை.

ரோகிணி ஏழு வயதுப் பையனென்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுவரை துன்பமொன்றும் அறியாமல் செல்வமாய் வீட்டில் வளர்ந்து வந்த குழந்தையாகையால், திடீரென்று பெற்றோரையும் இழந்து அதுவரை கண்டிராத கோரசம்பவத்தைக் கண்டதும் அவன் வெயிலிடைப்பட்ட புழுப்போலத் துடித்தான்; வெகுநேரம் தேம்பித் தேம்பி அழுதான். சித்திரையைக் கொடிபோலப் பற்றினான். கடைசியாய் இளைப்படைந்து சித்திரை மார்பில் சாய்ந்தவாறே தூக்கமடைந்தான். சித்திரையும் அவனைக் கம்பளத்தில் கிடத்தி அவ்விடத்திலேயே கூடாரமடித்து இரவைக் கழித்தான். காலையில் எழுந்தபோது, பழைய தொந்தத்தின் பலனாக இருவருக்குள்ளும் மிகுந்த வாஞ்சையும் நம்பிக்கையும் இயற்கையாகவே தோன்றி விளங்கின.

சித்திரை அரேபியாவில் ஒரு சிற்றரசன். அவனுக்கு இளமையிலேயே சமயக் கல்வியிலும் சாஸ்திரக் கல்வியிலும் யோக அப்பியாசங்களிலும் அவா ஏற்பட்டபடியால், அரேபியாவின் உள்நாட்டில் பேர்பெற்ற மந்திரவாதிகளும் ஞானிகளும் இருப்பதாகக் கேள்வியுற்று அவ்விடம் சென்றான். அங்கு பண்டைய பூசம், ஆபிலியன், மூலம் முதலியோர் பிறந்து பெரிய அப்பியாசிகளாயிருந்தனர். ஆனால் அவருடைய முறை வாம மார்க்கமெனக் கண்ட சித்திரை அதில் வெறுப்புற்று ஊருக்குத் திரும்பிவந்து, பாரசீக நாட்டில் உத்தம யோகிகள் இருப்பதாகக் கேள்விப்பட்டபடியால் தன்னுடைய அரசுரிமையைத் தம்பியாகிய சுவாதிக்குக் கொடுத்துவிட்டு, யாத்திரைக்கு வேண்டிய சாமான்களை ஒட்டகைகளிலேற்றிக் கொண்டு பாரசீக நாட்டை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில் நடந்ததே மேலே சொன்ன சம்பவம். சன்னியாசியாகி யோகம் பயிலும் விருப்பத்தால், தன்னை ஆர்வத்துடன் காதலித்த செவ்வாய் என்ற பெண்ணையும் மணந்துகொள்ள மறுத்து, அரச பதவியையும் தம்பியிடம் கொடுத்துவிட்டுத் தனியே சென்ற சித்திரைக்கு ரோகிணியைப் பற்றிய பொறுப்பு அவனையறியாமலே அவன் மனத்தைக் கவர்ந்தது. அது பண்டைப் பற்றின் பலன் என்பதை அன்று அவன் அறிந்திலன்.

இதுவரை அதிகமாய்ச் சீராட்டப்படாத ரோகிணி சித்திரை அன்பில் திளைக்கவும், சூரியனைக் கண்ட தாமரைபோல அவன் மனம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அவனுடைய அறிவும் அன்பும் விசாலப்பட்டன. நெடுநாள்வரை, பெற்றோர் இறந்த கோர சம்பவம் நினைவிற்கு வரும்போதெல்லாம் காக்கைவலி போன்ற இழுப்பினால் துயரப்படுவான். கொடுஞ்செயலாவது ரத்தக் கோரையாவது காண அவன் சகிப்பதில்லை. அச்சமயங்களில் "தனக்கு என்ன ஆபத்து வரினும் பிறரோடு போர்புரிவதில்லை" யெனச் சபதம் செய்வான். சித்திரையும் தான் போகும் இடங்களுக்கெல்லாம் அவனையும் பிரியாமற் கொண்டுபோய் அவனுக்குக் கல்வியும் கற்பித்துவந்தான். அவர்களுடைய யாத்திரையில் ரோகிணியினுடைய ஊருக்கு வர நேர்ந்தபோது சித்திரை ஆனியினுடைய சொத்துக்களைப் பற்றி விசாரிக்கலானான். "அவை முழுவதும் வியாபாரத்திலேயே முடக்கப்பட்டிருப்பதாகவும், ரோகிணி அவர்களோடு தங்கி வியாபார முறைகளைக் கற்பதானால் அவனையும் பங்காகச் சேர்த்துக்கொள்ளலாமே தவிர வேறு தொகை கொடுக்க வழியில்லை," யென்றும் பங்காளிகள் சொல்ல, சித்திரையாவது ரோகிணியாவது ஒருவரையொருவர் பிரியச் சம்மதமற்றவராய்ச் சொத்துரிமையைக் கைவிட்டு அப்பால் சென்றார்கள்.

சித்திரை அநேக ஆலயங்களையும் மடங்களையும் ஆசிரமங்களையும் ஆராய்ந்து நோக்கி, கடைசியாய்த் தனக்கு மனமொத்த ஒரு மடத்தில் தங்கத் தீர்மானித்தான். வேலையாட்களை அவரவர் ஊருக்கு அனுப்பி வைத்து ஒட்டகை முதலியவற்றையும் விற்றான். அவனுடைய ஞானசிரியர் சொற்படி சன்னியாசியாவதே அவனுக்கும் சம்மதமாயினும் தெய்வ சங்கற்பத்தால் ஏற்பட்ட ரோணியின் பொறுப்பைக் கைவிட அவனுக்கு மனம் வரவில்லை. உண்மை ஞானிகள் தங்கள் ஞானத்தை விற்க மாட்டார்களென்பதையும் பரோபகாரமாகவே பக்குவிகளுக்கு உபதேசிப்பரென்பதையும் அறியாத சித்திரை, தன்னைச் சிஷ்யனாக ஒப்புக்கொள்ளும் ஆசிரியருக்குச் சமர்ப்பிக்கவென்று பல ஆபரணங்களும் மாணிக்கங்களும் கொண்டு வந்திருந்தான். அவை இப்போது உபயோகப்படாமற் போக, இவர்கள் இருவருடைய மிகச் சுருக்கமான உலக ஆவசியங்களுக்கு அவை நெடுநாள் வரை போதுமானவையா யிருந்தபடியால், உணவுக்காக வேறு உலக முயற்சியில் பிரவேசிக்காமல், சித்திரை ஞான ஆராய்ச்சியிலும் யோக அப்பியாசங்களிலும் நேரத்தைச் செலவிட்டான்.

சித்திரை தனது உபயோகத்திற்காகப் பல நூல்களைப் பார்த்தெழுதவேண்டி வந்தது. அச்சும் தாளுமில்லாத அக்காலத்தில், நூல்கள் பதனிட்ட மரப்பட்டையிலும் தோலிலும் கையால் எழுதப்பட்டன. சித்திரை எழுத்து அழகாயிருந்தபடியால் அவனுடைய பகர்ப்புகளுக்கு மிகுந்த தேவை உண்டாயிற்று. பகர்ப்பெழுதுவதில் சித்திரைக்கும் இயற்கைப் பிரியமிருந்தபடியால் நாளாவட்டத்தில் இத் தொழிலே அவர்களுக்கு நல்ல வருமானத்தைக் கொடுத்தது. ரோகிணியும் அழகாக எழுதக் கற்றுக் கொண்டதோடு, யாழிலும் வீணை போன்ற அந்நாட்டு இசைக் கருவியிலும் மிகத் தேர்ச்சி பெற்றான். அதனால் ஆலயக் கிரியைகளில் அவனுடைய உதவி மிகவும் விரும்பப்பட்டது. இருவரும் மிகவும் இன்பமாகவும் கவலையின்றியும் நற்கருமத்திலேயே காலங்கழித்து வந்தார்கள்.

ரோகிணி காளைப்பருவமெய்திய காலத்து அங்குள்ள வாமமார்க்க ஆலயப் பூஜாரியொருவன் அவனைக் கண்டு, அவன் தம் ஆலயத்திற்கு மிகுதியும் பயன்படுவானென்று கருதினான். அப்பூஜாரிகள் பலவகையான சூனிய வித்தைகளாலும் மந்திரங்களாலும் பாமரமக்களை வசப்படுத்திப் பணம் பறித்துச் சிற்றின்ப வழிகளில் உபயோகித்து வந்தனர். அவருள் பிறந்திருந்த நவமி என்ற இளமங்கை ரோகிணியைக் கைப்பற்றும்படி தூண்டப்பட்டாள். உண்மையை அறியாத ரோகிணியும் கொஞ்சங் கொஞ்சமாக அவள் வலையில் சிக்கி வரும்போது நவமியிடம்

சந்தேகங் கொண்ட சித்திரை ரோகிணியை எச்சரித்தான். சித்திரையிடம் அந்தரங்க பக்தியும் அன்பும் உடையானேனும் நவமி தன்னைக் கெடுக்க வந்திருக்கிறளென்ற சந்தேகத்தை ரோகிணி ஒப்பவேயில்லை. அதனால், நவமி சம்பந்தப்பட்ட வாம மார்க்க ஆலயத்தின் அந்தரங்கக் கிரியை ஒன்றை, மிகுந்த பிரயாசைப்பட்டு ஒரு ஒளி மறைவு தேடி அங்கு ரோகிணியை நிறுத்திக் காட்டியபோது, அவன் அவ்விடத்தில் நடந்த ஆபாசங்களைக் கண்டு அருவருத்து உளம் பதறி அச்சமெய்தினன். அந்தக் கூட்டத்தில் கூடியிருந்த நவமியும் அவள் செய்கைகளும் அவனைத் திடுக்கிடச் செய்தன. அவற்றை நோக்கிக் கொண்டிருக்கும்போது, இம்மாதிரியான கிரியைகளுக்கிடையில் ஒரு பிணம் உயிர்த்தெழுந்து நடப்பது போலவும் மந்திரவாதி ஓநாயாக மாறி ஊளையிட்டுக்கொண்டு வெளியே பாய்ந்து மனிதரைப் பிடுங்கித் தின்பதுபோலவும் அவன் அகக்கண்ணுக்குத் தோன்றின. இவை பூர்வ ஞாபகமென்று அவன் அறியவில்லையாயினும் அன்றோடு நவமி மேலிருந்த மயக்கம் முழுவதும் அவனுக்கு மாறிவிட்டது. சித்திரையின் அன்பில் அவன் ஈடுபட்டிராவிடில், அவன் உண்மை அறியாமல் நவமியைத் தொடர்ந்து, சூனிய வித்தையில் இறங்கிப் பாவ மூட்டைகளை மிகுதியும் திரட்டி முன்னைப் பிறப்பைக் காட்டிலும் தாழ்ந்த நிலை எய்தியிருப்பானென்பது உண்மை. தான் ஒரு பெரிய ஆபத்தினின்றும் தப்பியதைக் கண்டுபிடித்த ரோகிணிக்குச் சித்திரை மீதிருந்த பக்தியும் விசுவாசமும் அன்பும் முன்னையினும் ஆயிரமடங்கு அதிகப்பட்டன. அவனிடம் பூரண நம்பிக்கை கொண்டான். அவனை மீறியதற் கஞ்சி அவன் காலில் விழுந்து பலதடவை மன்னிப்புக் கேட்டான். சித்திரை சொல்லை எவ்விதத்திலும் தட்டுவதில்லையென்று உறுதிபண்ணிக் கொண்டான்.

அவர்களுடைய இன்பகரமான இந்த வாழ்வு நெடுங்காலம் நடைபெறவில்லை. சித்திரை அவ்வூரில் தங்கியிருந்தபோதிலும், சுற்றியுள்ள பல ஆலயங்களும் மடங்களும் அவனுக்குப் பழக்கமாய்விட்டபடியால் அடிக்கடி அவ்விடங்களுக்குப் பிரயாணம் செய்து வருவான். ஒட்டகையும் கழுதையுமே அங்கு அக்காலத்துச் சவாரி மிருகங்கள். இவர்கள் இருவரும் எப்பொழுதும் கழுதை மேலேயே பிரயாணஞ் செய்வார்கள். ஒருசமயம் தனி வழியே போய்க்கொண்டிருக்கும்போது கொள்ளைக்கூட்டமொன்று இவர்களைத் துரத்தவே, இருவரும் கழுதைகளை விரட்டிக்கொண்டு வேகமாய் ஓடினார்கள். அப்பொழுது திருடர்கள் எறிந்த ஈட்டியொன்று சித்திரையைத் தாக்கிக் கீழே வீழ்த்த, அவன் தன்னை விட்டுவிட்டு ஓடிப்போகும்படி ரோகிணியை

எவ்வளவு வேண்டியும் ரோகிணி கேளாமல் கூடவே நின்றுவிட்டான். அவன் பழைய சபதத்தை எண்ணித் திருடருடன் போராடவுமில்லை. ஆகவே, ஒரு கருணையுமில்லாத அந்தக் கொள்ளைக்காரர் கையினல் இருவரும் துண்டுதுண்டாக வெட்டப்பட்டு இறந்தார்கள். அப்போது ரோகிணிக்கு வயது 17, சித்திரைக்கு 45. உயிருடன் இருக்கும்போது இணைபிரியாமலிருந்தது போலவே இறக்கும்போதும் அவ் இருவரும் ஒன்றுகவே இறந்தார்கள். இவ்வாறு அவர்கள் பிரிவினைத் துன்பம் இல்லாத பாக்கியசாலிகளானர்கள்.

கோடிவழி XXI

ஆணி:	(அரபி வியாபாரி) (மனைவி) அஸ்தம். (மகன்) ரோகிணி, பரணி.
ஷஷ்டி, ஏகாதசி:	ஆணி பங்காளி வியாபாரிகள்.
உத்திரட்டாதி:	(அரபிச் சிற்றரசன்) (மகன்) சித்திரை, சுவாதி.
செவ்வாய்:	(பெண்) சித்திரையைக் காதலிப்பவள்.
பூசம்: ஆயிலியம்: மூலம்:	சித்திரையுடன் கற்றகுப்தவித்தை மாணவர்கள்.
நவமி:	சூனியவாதிகள் ரோகிணிக்கு அனுப்பிய மோகினி.

22. ஆசியா மைனர்—ஆண்

கி. மு. 1521—கி. மு. 1490

வயது: 31—பின் பிதுருலகவாசம்: 991—ஆண்டுகள்

மிகவும் சிறுவயதில் இறந்த ரோகிணி, சீக்கிரமாகவே திரும்பவும் வந்து பிறந்தான். ஆசியாக் கண்டத்திற்கும் ஐரோப்பாக் கண்டத்திற்கும் இடையிலுள்ளது "டார்டனல்ஸ்" என்ற ஜலசந்தி. அதன் கரையில் அக்காலத்தில் அகாடி என்ற பெரிய துறைமுகப் பட்டணமொன்று இருந்தது. அங்கு அன்னிய நாட்டு வியாபாரமும் அதன் மூலம் பணச்செழிப்பும் நாகரிகமும் மிகுந்திருந்தன. அவ்விடத்துப் பெரும்பாலான குடிகள் தவிட்டு நிறமுள்ள அத்லாந்திய வகுப்பினர். அவர்கள் நாகரிகம் மிக்குடையவராயிருந்தாராயினும், தற்காலத்து நமது நாட்டில் வழங்கி வரும் காளி, மாடன் போன்ற கொடிய தெய்வங்களைக் கொண்டாடி மிருக பலி முதலியவற்றையும், மிகுதியும் சூனியமந்திர தந்திரங்களையும் கையாண்டு வந்தார்கள். அந் நாட்டில் குடியிருந்த மற்றொரு சாரார் வெண்மை நிறமுள்ள கிரேக்கர்கள். அவர்கள் கிரீஸ்தேசத்திலிருந்து வந்து குடியேறியவர்கள். கப்பல் வர்த்தகத்தில் கைதேர்ந்தவர்கள். அவர்களே அப் பட்டணத்தை

ஆண்டு வந்தார்கள். அவர்கள், கிரீஸ் தேசத்து முக்கிய தெய்வங்களுள் ஒன்றாகிய அதினி என்ற சந்திராதேவியை வழிபட்டு வந்தார்கள். கடற்கரையில் ஒரு குன்றின்மேல் அமைக்கப்பட்டிருந்த வெண்பளிங்கு ஆலயத்தில் அத் தேவி மிகுந்த பக்தியுடனும் உத்தமக்கிரியைகளுடனும் போற்றப்பட்டு வந்தாள். அவ்விடத்துக் குருவாகவும் பூஜாரியாகவும் இருந்தவர் மீனதேவர். இன்று புகழ்மிக்க ஜீவன் முத்தராய் இமயமலையில் வசிக்கும் அவர் அன்றைக்கே முத்திநெறியில் மிகுந்த முன்னேற்றமடைந்து பெரிய சித்தபுருஷராய் விளங்கினார். அவருடைய ஆலயத்தின் கர்ப்பக்கிரகத்தின் அடியில் பாறையில் குடைந்தெடுத்த குகையொன்றிருந்தது. அங்கு உள்ளே செல்ல மார்க்கமொன்றுமில்லாதிருந்தும் அந்தக் குகையின் மத்தியில் வாடா விளக்கொன்று எப்போதும் ஒளி வீசிக்கொண் டிருந்தது. ஆலயக் குருக்களில் சித்திகள் பெற்றிருந்த பலர், அடிக்கடி அங்குச் சந்தித்து, மீனதேவருடைய குருவும் இந்தியாவில் இமயமலைச் சாரலில் தவஞ்செய்துகொண்டிருந்தவருமாகிய துருவமகரிஷி என்ற ஒரு மகானால் தத்துவோபதேசஞ் செய்யப்பட்டு வந்தனர். ஆதலால் அக் குகையில் மகத்தான சக்தியொன்று எப்போதும் நிறைந்திருந்தது. ஆலயத்திலும் அச் சக்தி எங்கும் பரவியிருந்தது. தமது சித்தி வல்லமையினால் குகைக்குள் செல்ல வல்லவரே அங்குச் சந்தித்துக்கொண்டிருந்தனர்.

குகைக்குமேல் தேவி விக்கிரகத்தின் முன்பாக ஒரு சிம்மாசனம் அமைக்கப்பட்டிருந்தது. அது வெகு காலத்திற்கு முன் எரிநக்ஷத்திரமாகப் பூமியில் விழுந்த ஒரு பெரிய உருக்குக்கல்லால் ஆக்கப்பட்டது. உயர்ந்த குடும்பங்களில் பிறந்த உத்தம கன்னியர் பதின்மர் எப்போதும் ஆலயத்தில் தொண்டாற்றி வந்தனர். குறிப்பிட்ட தினங்களிலும் திருநாட்காலங்களிலும் அவருள் ஒருவர் சிம்மாசனத்தில் அமர்ந்து மூர்ச்சையாய் விடுவர். அப்போது அவர்கள் வாயிலாகப் பலருக்கும் உபதேசங்களும் உத்தரவுகளும் சாதாரண ஜனங்களுக்கு நற்போதனைகளும் வழங்கப்படும். மீனதேவர் குருவாயிருந்த காலத்து, கார்த்திகை, திரயோதசி, கேது முதலிய பழைய நண்பர் பலர் கன்னிகாஸ்திரீகளாகக் காணப்படுகின்றனர். மணப் பருவம் வந்த காலத்து இவர்கள் தம் வீடு சென்று கலியாணம் பண்ணிக்கொள்வது வழக்கம். யோகாப்பியாசத்தில் சித்திபெற்ற சில பெண்கள் கலியாணம் பண்ணாமல் ஆலயத்திலேயே தங்கிவிடுவார்கள். ஆலயத் தொண்டில் இருக்கிற காலத்தில் இந்தக் கன்னியர்கள் மிகுந்த பய பக்தியுடனும், கன்லியத்துடனும் ஜனங்களால் போற்றப்பட்டு வந்தனர்.

இந்தக் கிரேக்க மக்களுக்குள் கி. மு. 1521-வது ஆண்டில், மீனதேவர் குருவாயிருந்த காலத்தில், புதன் என்ற பணக்கார வர்த்தகனுக்குப் பௌர்ணமியம்மாளிடம் ரோகிணி ஆண் குழந்தையாகப் பிறந்தான். அவனுக்குப் பழவினைப் பந்த முடையோரில் இருவர் சகோதரராகவும் மூவர் சகோதரிகளாவும் பிறந்தனர். தசமியும் மிருக சீரஷமும் சகோதரிகளாகக் காணப் படுகின்றனர். அளவுக்கு மிஞ்சின பெயர்களால் கற்போருக்கு மனக்குழப்பம் உண்டாகாதிருக்கும் பொருட்டு, தொந்தக்காரர் பலருக்கும் இந்நூலில் பேர்கள் வழங்கப்படவில்லை. அம் மக் களுக்குள், பையன்களும் பெண் குழந்தைகளும் யாதொரு பேத மின்றியே நன்றாகக் கல்வி கற்பிக்கப்பட்டனர். புதனானவன் பிரவர்த்தியில் மிகுந்த ஊக்கமுடையவன்; மத விஷயங்களில் பற்றுடையவனல்லன். பௌர்ணமியம்மாள் மிகுந்த மதப் பற் றும் தத்துவ ஆராய்ச்சியும் உடையவள். கல்வியில் நன்கு தேர்ச்சிபெற்ற ரோகிணி தகப்பனுடைய உலக ஆற்றலிலும் தாயி னுடைய தத்துவ ஆராய்ச்சியிலும் ஒன்றுபோல் திறமை காட் டினான். அவன் சிறு வயதிலிருந்தே மீனதேவரிடம் தன்னை யறியாமலே ஒரு அந்தரங்கப் பற்றுடையவனானான். ஆலயத்தில் தொழ விரும்பாத காலத்தும் அவரைக் காணவேண்டுமென்ற அவாவால் அடிக்கடி ஆலயத்திற்குச் செல்வான். இவ்விதம் கல்வி கற்றுமுடிந்து வாலிபப் பருவம் வந்ததும், ரோகிணி தகப்ப னுடன் வியாபாரத்திலிறங்கினான். அதில் ஊக்கமுண்டாக உண்டாக அவனுக்கு உலகப் பற்று மிகுதியாயது. பணந் திரட்டப் பெரிதும் ஆசைகொண்டான். அப்போது பழைய நல்வினை வசமாக அவனுக்கும் அவனோடு பழவினைத் தொடர் புடைய சுவாதிக்கும் பழக்கமுண்டாயிற்று.

பூரட்டாதி என்பவன் அவ்வூர்த் துறைமுகத் தலைவனாயிருந் தான். அவனுடைய மகன் சுவாதி ரோகிணிக்கு நாலு வயது இளையவனாயினும் அடிக்கடி இருவரும் துறைமுகத்தில் சந்தித்ததி லிருந்து அவருக்குள் பழவினைப் பற்று மேற்கொண்டது. சுவாதி சிறு வயதிலிருந்தே உலகப்பற்று அதிகமில்லாதவன்; மத விஷயங்களிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் மிகுந்த சிரத்தை யெடுப்பவன். அவனுடைய தொடர்பு அதிகப்பட அதிகப்பட ரோகிணியும் சுவாதியும் தங்களுடைய மதத்தைப் பற்றியும் தத்துவ சாஸ்திரங்களைப் பற்றியும் அடிக்கடி தர்க்கம் பண்ணு வார்கள். அதிலிருந்து ரோகிணிக்கும் உண்மையறிவு மேலிட்டு வியாபாரப்பற்று நாளாவட்டத்தில் குறைந்து கடைசியாய் உலகப் பிரவர்த்தியே வெறுப்பாகத் தோன்றியது. அப்போது அவன் மீனதேவரிடம் சென்று அவர் பாதத்தில் விழுந்து, "நான்

குடும்பத்தைத் துறந்து ஆலயப்பணிவிடையில் என் ஆயுள் முழுமையும் செலவிட அநுமதியளியும்'' என்று வேண்டினன். அவரும் தேவியைக் கேட்டுப் பதிலளிப்பதாக அவனை அனுப்பி விட்டார். சில நாட்களில் அவன் ஆலயத்திற்கு அழைக்கப் படவே, அங்கு சிம்மாசனத்திலிருந்த கன்னிகையின் மூலமாகப் பின்வருமாறு உத்தரவு பிறந்தது: "உன்னுடைய இப்போதைய இச்சை முற்றுப்பெறுங்காலம் இன்னும் வரவில்லை. முன்னொரு காலத்தில் உன்னுடைய குருநாதர் உன்னை விரும்பி அழைத்தார்; அப்போது நீ மறுத்துவிட்டாய். இனியும் அவர் உன்னை அழைக்குங் காலம் வரும். அதை எதிர்பார்த்து, இப்போது நீ நன்றாய் உழைப்பாயானால், உன்னால் உலகம் ஆசி யடையும்,'' என்பதே அந்த வரம்.

அது ரோகிணியின் மனதில் ஆழப் பதிந்தது. ஆலயத்திற் சேர அனுமதி பெறவில்லையாயினும் அதிகமான நேரத்தைக் கல்வி கேள்விகளில் செலவிடுவதெனத் தீர்மானித்தான். அவனுடைய மாறுதல்களைக்கண்டு அவன் தகப்பன் அதிசயங் கொண்டபோதிலும் அவன் தாயார் அவனைத் தேற்றிவந்தாள். இரண்டு மூன்று முறை அவன் காதல்கொண்டானெனினும், குடும்பவாழ்வு தன் படிப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் இடைஞ்சல் உண்டாக்குமென்று கலியாணம் பண்ண மறுத்துவிட்டான். இப்படிச் சன்மார்க்க முறையில் வெகுவாகக் காலங்கழித்து வரும்போது அவனுடைய முப்பத்தோராவது வயதில் அவனுடைய பட்டணம் படையெடுக்கப்பட்டது.

தவிட்டுநிற அத்லாந்திய மக்கள் கிரேக்கரை விரட்டிவிட்டு சுயராஜ்யம் பெற ஆவல் கொண்டனர். தம் வலிமை கொண்டு அது கூடாதது கண்டு, அந்நாட்டுக்கு வடபாகத்து வசித்து வந்த விலித்தியர் என்ற முரட்டு ஜாதியாரைப் படையெடுத்துவர ஏவினர். இது நடக்கப்போவதைக் கன்னிகாஸ்திரிகள் மூலமாய் முன் கூட்டியே அறிந்த பூசாரிகள், அச் செய்தியை வெளியில் பரப்பலாகாதென உத்தரவு பெற்றிருந்தபடியால், அதை யாரிடமும் சொல்லாமலும், தாம் மாத்திரம் தப்பிக்கொள்ள மனமில்லாமலும் அங்கேயே தங்கிவிட்டனர். படையெடுத்து வந்த முரடர் முதலில் கிரேக்கரைக் கொள்ளையடிக்க ஏவப்பட்ட போதிலும் அகப்பட்ட ஆதாயத்தையும் அத்லாந்திய மக்களுடைய பலக் குறைவையும் கண்டதும் யாதொரு வேற்றுமை பாராட்டாமல் ஊர் முழுவதையுமே கொள்ளையிட்டார்கள். அந்தக் கலகத்தில் சுவாதியானவன் இருபத்தேழாவது வயதிலும் ரோகிணி முப்பத்தோராவது வயதிலும் போர் முனையிலேயே கொல்லப்பட்டனர். சுவாதி, கி. மு. 593-ல், புத்த பகவான்

காலத்தில், "சட்டமாணவகன்" என்ற பையனாக இந்தியாவில் காசியில் பிறந்து, பகவானால் ஆசிர்வதிக்கப்பெற்று, பதின்மூன்று வயதுப் பையனாயிருக்கும்போது திருடரால் ஒரு காட்டில் அடித்துக் கொல்லப்பட்டான். அப்புறம் இருவரும் திரும்பவும் ஒரே காலத்தில் கிரீஸ் தேசத்தில் பிறக்க நேர்ந்தது.

மீன தேவரும் ஷித்தியர் படையெடுப்பில் கொல்லப்பட்டா ராயினும், கடலில் முழுகிச் செத்த ஒரு செம்படவ வாலிப னுடைய உடலில் தம் சித்தி வல்லமையினால் உடனே புகுந்து, இந்தியாவில் இமயமலைச்சாரலில் தவம் புரிந்து வந்த தமது குருநாதரை நோக்கி நடந்து, வழியில் பாரசீக நாட்டில் சில காலம் தங்கிப் பார்ஸி மதத்தை மிகவும் விருத்திபண்ணி, கடைசி யாக இந்தியாவில் தம் குருநாதர் ஆசிரமத்தை அடைந்தார்.

கோடிவழி—XXII

தும்பதேவர்: (ஆலய குருக்கள்) (மனைவி) கன்னிதேவி (மகன்) மீன தேவர், பூரட்டாதி.

மீனதேவர்: (ஆலய குருக்கள்.) (மகன்) இடபதேவர். (மகள்) தனு தேவி, ஆடி.

பூரட்டாதி: (துறைமுக அதிகாரி) (மனைவி.) தை. (மகன்) சுவாதி: (மகள்) மாசி.

கார்த்திகை:
திரயோதசி:
கேது: } ஆலய—தேவகன்னியர். (Vestal Virgins).

கார்த்திகை: (தகப்பன்) ஆவணி (ஆலய குருக்கள்)

புதன்: (பெரிய வர்த்தகன்) (மனைவி) பௌர்ணமி, (மகன்) ரோகிணி, (மகள்) தசமி, மிருகசீரஷம்.

பரணி, சனி: முதலியோர் பெரிய வியாபாரிகள்.

பல்லாயிர வருஷத்து உற்றார் உறவினர் பெரும்பாலார் மூன்றுதலை முறைக்குள் பெருங்கூட்டமாக இங்குக் காணப்படுகின்றனர். ஆங்கில நூல் (Alcyone) அசுபதி புராணம் பார்க்க.

23. கிரீஸ்—ஆண்

கி. மு. 499—கி. மு. 423

வயது: 76—பின் பிதுருலகவாசம்: 2020 ஆண்டுகள்.

கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் ஐரோப்பாவில் கிரீஸ் தேசம் ஒன்றே நாகரீகம் முதிர்ந்த நாடாயிருந்தது. அக் காலத் தில் அதனை யொத்த நாகரிகம் ஆசியாவில் பாரசீகம், இந்தியா, சைனா முதலிய நாடுகளில் பரவியிருந்ததைத் தவிர, ஐரோப்பா வின் இதரபாகங்களும் அமெரிக்காவும் இருளால் மூடப்பட்டுக்

கிடந்தன. அக்காலத்திய இங்கிலாந்தியர் தோலுடுத்துக் காவியும் கொழுப்பும் அரைத்து உடம்பெங்கும் பூசிக் காட்டுமிராண்டிகளாய் அலைந்து வந்தனர். கிறிஸ்துநாதருக்குப்பின் விளைய வேண்டிய நாகரிகத்திற்காக அந் நிலங்கள் தரிசாகப் போடப்பட்டிருந்தன வென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் அன்றைய ஐரோப்பிய வர்த்தக முழுவதும் அந்தக் கிரீஸ் தேசத்திற்கும் ஆசியாவுக்கும் இடையிலேயே நடந்து வந்தது. அந்த கிரேக்க மக்கள் தமிழ்நாட்டில் யவனரென்று அழைக்கப்பட்டார்கள்.

அத்தகைய கிரீஸ் தேசத்தில் ஆதென்ஸ் பட்டணம் நடுநாயகமானது. அதில் பெரிக்ளீஸ் காலம் என்று சொல்லப்படுவது மிகவும் பிரபலமானது. அதுவே மேற்சொன்ன கி. மு. ஐந்தாவது நூற்றாண்டு. அக் காலத்தில் அப் பட்டணத்தில் ஒருங்கே பிறந்திருந்த புலவர்களும் பாவலர்களும் ஓவியர்களும் சிற்பிகளும் ஞானிகளும் படைத்தொழில் வல்லோரும் இன்றும் உலகோரால் வியக்கப்படுகின்றனர். அவர்கள் ஆக்கிய ஞான நூல்களும் நாடகங்களும் காவியங்களும் ஆலயங்களும் சித்திரங்களும் பளிங்குச் சிலைகளும் வெண்கலப் பதுமைகளும் இன்றும் புகழப்பட்டுப் போற்றப்படுகின்றன.

அந்த நாட்டில் கி. மு. 499-ல் சித்திரை என்ற ஒரு பெரிய வீட்டுக்காரனுக்கு ரோகிணி மிகவும் அழகான பையனைப் பிறந்தான். அந்நாட்டு மக்களெல்லோருமே மிகவும் வனப்புடையவர். அவர்கள் தங்கள் உடம்பை இறைவனது ஆலயமாகவே பாவித்து வந்தவர். "இலங்குமுடல் உயிரெல்லாம் ஈசன்கோயில்" என்பதே அவர்கள் கொள்கை. ஆகையால் உடம்பைத் தூய்மையுடன் பேணிப் பலவிதமான களியாட்டுகள், தேகாப்பியாசங்கள், பந்தயப் போட்டிகள் முதலியவற்றால் அவற்றை அழகாகப் பயிற்றுவித்துப் பார்வைக்கு அவர்கள் தேவலோகத்து மக்களாகவே காணப்பட்டனர். அத்துடன் இயற்கையாகவே மிகவும் சந்தோஷமும் உலக வாழ்க்கையில் உற்சாகமும் உடையவர்கள். உயிரோடிருக்கும் வரையில் உலகமும் சொர்க்கமே என்று கருதுபவர்கள். ஆடல்பாடல்கள், தொட்ட எதையும் அழகுபடுத்தல் இவற்றைப் பெரிதும் பாராட்டுபவர்கள். அத்தகைய வித்தைகளில் அநேகர் கைதேர்ந்தவர். அம் மக்களுக்குள் பிறந்த ரோகிணியும் யாழ்வாசிப்பதிலும் இசை பாடுவதிலும் சித்திரம் சிற்பம் இரண்டிலும் களியாட்டங்களிலும் போட்டிப் பந்தயங்களிலும் ஒன்றுபோலத் தேர்ச்சியுற்றவனானான். அக் காலத்துப் போட்டிப் பந்தயங்களில் முதற்பரிசாகக் கருதப்பட்டது ஒலிவ இலைக்கிரீடம், அல்லது தலைமாலை. அது அந் நாட்டில் செழிப்பாகவுள்ள

ஒலிவ மரத்து இலைகளால் மாலையாகத் தொடுக்கப்பட்டு முதற் பரிசு பெற்றவனுக்கு ஊராரால் தலையில் அணியப்படுவது. அந் நாட்டுக் கீர்த்திமுறையில் அதுவே மிகவும் உயர்ந்தது. அது நாலு வருஷத்திற் கொருதடவையே கொடுபடுவது. ரோகிணி தனது இருபதாவது வயதில் இப் பரிசைப் பெற்றதிலிருந்து அவன் வல்லமை நன்கு விளங்கும். அத்துடன் அவன் மக்களிடத்தில் மிகுந்த வாஞ்சையும் துன்பங் கண்டவிடத்து அதை நீக்க முயற்சிக்கும் நற்குணமும் உடையவனுயிருந்தான்.

ரோகிணி பிறந்தகாலத்தில் கிரீஸ் தேசம் குடியரசு நாடாயிருந்தது. அன்று மிகுந்த குழப்பமுடைய காலமாயுமிருந்தது. ஏனெனில் கிரீஸ் தேசத்தின் பலபாகங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தனித்தனி சுதந்தரமுடைய குடியரசுப் பட்டணங்களாகவே இருந்து வந்தன. ஆகையால் அவற்றை ஒவ்வொன்றுகக் கைப்பற்றிக்கொண்டால் கிரீஸ் முழுவதும் தம் ஆளுகைக்குள்ளாகுமென்று பாரஸீக நாட்டார் கருதினர். அதனுல் யுத்தங்களும் சண்டைகளும் அடிக்கடி இருவர்க்குள்ளும் நடந்துகொண்டேயிருந்தன. ரோகிணி பிறந்த ஒன்பதாவது வருஷத்தில் லக்ஷம் பேர் கொண்ட பாரஸீக சேனையொன்று, கிரீஸின் வடபாகத்தையெல்லாம் வென்று ஆதன்ஸ் பட்டணத்தை அடுத்தது. அத்தீனியர்கள் தமக்குத் தெற்கேயுள்ள பலரையும் உதவிக்குத் தேடி, வாக்குச் சொன்ன ஒருவரும் சமயத்திற்கு வந்துசேராமையால், அதற்குமேல் தாமதிக்க வகையின்றி, பெண்டுபிள்ளைகளைக் கப்பல் மார்க்கமாய் ஊரைவிட்டு அப்புறப்படுத்திப் பதினுயிரம் போர் வீரரோடு பாரஸீகரை எதிர்த்தனர். அதுவே உலகப் பிரசித்திபெற்ற மாரதான் சண்டை. வட பக்கத்தில் லக்ஷம் பாரசீகப் படை,—தென் பக்கத்தில் பதினுயிரம் அத்தீனியர்,—நடுவில் மாரதான் கணவாய். இக் காலத்திய பீரங்கிகளும் துப்பாக்கிகளும் அன்று இல்லாமையால் ஈட்டியும் வாளும் வில்லுங்கொண்டு எதிர்த்துப் பொருவதே அக்காலத்து முறை. பாரசீகர், தாம் பெருங் கூட்டமென்ற பெருமையில், முன்பின் ஆலோசிக்காமல் முரட்டுத்தனமாகக் கணவாய்க்குள் புகுந்தார்கள். மறுபுறத்தில் அத்தீனிய வீரர்களின் படைகளில், சிலர் குட்டியைப் பாதுகாக்கும் பெண்சிங்கம்போலத் தங்கள் வீடுகளைப் பாதுகாக்க வழியடைத்து நின்றனர். பாரசீக விரர் வரவர அவர்கள் காய்கறி மாதிரி வெட்டப்பட்டனர். சேனை, கணவாய் முழுதும் நிறைந்து நின்றபடியால் அவர்களுக்குப் பின்செல்ல இயலவில்லை. அத்தீனியர் ஒட்டாமையால் முன் செல்லவும் வழியில்லை. ஆகவே களத்திற்பட்ட பாரசீகர் பெருமலைபோலக் குவிந்ததனுல் கண

வாய் முழுதும் அடைபடக் கண்டதும், பின் நின்றவர்கள் பயந்து நாலாபக்கங்களிலும் சிதறினார்கள். அச் சண்டையில் அக்கினியில் இறந்தோர் இருநூறுபேர். பாரசீகரில் மாண்டோர் பல்லாயிரம்பேர். அச் சண்டையில் பொருது புகழடைந்து வீடு திரும்பினவரில் ரோகிணியின் தகப்பனாகிய சித்திரையும் சிற்றப்பனாகிய திருவாதிரையும் முக்கியமானவராவர். திருவாதிரை வரலாற்றைப் பின் பாகத்தில் காண்க.

ரோகிணியின் பத்தொன்பதாவது பிராயத்தில் பாரசீகருடைய அடுத்த படையெடுப்பு நிகழ்ந்தது. அதில் முன்னம் வந்த லக்ஷம்பேருக்கதிகமாக இப்போது பத்து லக்ஷம்பேர் வந்தனர். கரையில் அவர்களை எதிர்த்துப் போர்புரிதல் கூடாதென்று கண்ட கிரேக்கமக்கள், முன்போலவே பெண்டுபிள்ளைகளை ஊரைவிட்டு அப்புறப்படுத்திக் கடல் யுத்தத்திற்குத் தயாரானார்கள். பாரசீகச்சேனை வந்த மரக்கலங்கள் மிகப்பெருங் கப்பல்கள். ஆழ்ந்த நீரிலேயே மிதப்பவை. பெருமிதமாகவே அசையக்கூடியவை. கிரீஸ் தேசத்து நாவாய்களெல்லாம் ஒடுங்கி நீண்டு கரையோரத்திலிருந்த பாறைகளுக்கிடையே செல்லும்படியாக அமைக்கப்பட்டவை. நினைத்த இடத்திற்கு விரால்மீன் போல விரைந்து செல்லக்கூடியவை. அந்த நாவாய்கள் பாரசீகருக்குப் பிடிபடுவதுபோல ஏமாற்றங்காட்டி அவர்கள் மரக்கலங்களைக் கடற்பாறைகளுக்கிடையே தம்மைத் துரத்திவரச் செய்தன. அவ்விதம் அகப்பட்டுக்கொண்ட கப்பல்கள் அங்குமிங்குந் திரும்பமாட்டாமல் திணறவும், கரையிலிருந்தும் தமது சிறிய நாவாய்களிலிருந்தும் யவனர்கள் பாரசீகரைத் தாக்கிப் படுகொலை புரிந்தனர். பாரசீகர் முறிபட்ட கப்பற்போராகிய இது "ஸாலாமிஸ்" என்று பேர்பெற்ற கடற்போர். இதில் ரோகிணியும் கலந்து வீரனென்று விளங்கினான்.

ரோகிணியின் பூர்வதொந்தக் கூட்டத்தார் பலர் இந்தப் பிறப்பிலும் அவனுக்கு உற்றார் உறவினராகப் பிறந்திருந்தனர். அவருள் ஒருத்தியாகிய அனுஷத்தை ரோகிணி தனது இருபத்திரண்டாவது வயதில் மணஞ்செய்து கொண்டான். ரோகிணி செல்வவான் பிள்ளையாகையால் தொழிற்றுறையில் இறங்க வேண்டிய அவசியமற்றவனாய், தனக்கு வயது வந்ததும் அரசியலில் ஈடுபட்டான். அவன் வாலிபப்பிராயத்திலேயே சொற்பொழிவாற்றலில் வல்லவனென்று பேர்பெற்றிருந்தான். இக்காலத்தைப்போலவே அக் காலத்திலும் இரண்டு முக்கிய கட்சிகள் இருந்தன. "பழைய கொள்கைகளே சரியான கொள்கைகள். அவற்றை அனாவசியமாக மாற்றுவது மதியீனம். மாறுதல் அவசியப்படும்போது படிப்படியாக முன்செல்லவேண்டும்."

என்ற நம்பிக்கையையுடைய கன்ஸர்வேட்டிவ் கட்சியும், "உலகம் மாறிக்கொண்டே போகிறபடியால் அதற்குத் தக்கபடி மனிதனும் அவன் அரசியலும் மாறிக்கொண்டேயிருக்கவேண்டியது அவசியம்." என்ற லிபரல் கட்சியும் அக் காலத்தும் இருந்து வந்தன. அவற்றில் ரோகிணி பிந்திய கட்சியைச் சேர்ந்து முதலில் "தெமிஸ்டக்ளிஸ்" என்ற தலைவனுக்கு உதவியாயும், அவன் நாடு கடத்தப்பட்டபோது "பெரிக்ளிஸ்" என்ற உத்தம புருஷனுக்கு உதவியாயும், இருபத்தைந்து வருஷம் உழைத்துப் பலவகை ஆற்றல்களிலும் முன்னேறினன்.

ரோகிணி இதற்கிடையில் ஞான விசாரணையிலும் இறங்கியிருந்தான். உலகத்தில் பிறந்த ஒவ்வொரு பெரிய மதத்திலும் உள்ளதுபோல, அக்காலத்து அந்நாட்டு மதத்திலும் புறச்சமயம், அகச்சமயம் என இருபிரிவுகள் இருந்தன. புறச்சமயம் பல தெய்வங்களையும் புராணக் கதைகளையும் உடையது. அது பாமரமக்களுக்காக அமைக்கப்பெற்றது. அதன் உட்பொருளை விளக்குவதே அகச் சமயம். அது பக்குவமும் ஒழுக்கமும் உடைய ஆள்மாக்களுக்குத் தனியிடங்களில் அந்தரங்கமாக உபதேசிக்கப்படும். ரோகிணியின் தகப்பன் சித்திரை வாலிபப் பிராயமாயிருக்கும்போது, மீனதேவர், பைத்தாகொரஸ் என்ற ஞானசித்தராக அவ்விடத்தில் அவதரித்து, ஞானசாஸ்திரங்களைப் புதுமுறையாக வகுத்துப் பல சிஷ்யர்களுக்கு உபதேசித்து வைத்தார். அவர் இறந்ததும் அவருடைய பிரதம சிஷ்யராகிய விருச்சிகதேவர் அந்தப் பரம்பரையில் ஞானசாரியராக இருந்து பாடம் நடத்தி வந்தார். இருவரும் வீடுபேற்றை அடைந்து இப்போது வித்தகச் சித்தர் கணத்தில் அதிகார முத்தராயிருப்பவர்கள். விருச்சிகதேவரிடமிருந்து கற்றுங்கேட்டும் நன்குதெளிவடைந்திருந்த தமையனும் தம்பியுமாகிய சுவாதியும் ரோகிணியும் கி. மு. 454-இல், அதாவது ரோகிணியின் 45-ஆவது வயதில் மேற்சொன்ன ஞானபரம்பரைத் தலைவரானார்கள். அதுமுதல் தனது 76-ஆம் வயதில் இறக்கும்வரை, ரோகிணி ஞானோபதேசஞ் செய்வதிலும் யோகம் பழகுவதிலும் பரோபகார முயற்சிகளிலும் இடைவிடாது ஈடுபட்டு அன்பிலும் அறிவிலும் மிகமிக விருத்தியடைந்தான். அவனுடைய 69-ஆவது வயதில், ஆதன்ஸ் பட்டணத்தில் ப்ளேக் என்ற மகாமாரி கண்டு ஆயிரக்கணக்காக மக்கள் மாண்டபோது, ரோகிணி தளர்ந்த பருவமாயிருந்தும் தன் மனைவி மக்களுடன் உயிரையும் பொருட்படுத்தாமல் நோய் கண்டவரைக் காப்பதிலும் நோய் பரவவொட்டாமல் தடுப்பதிலும் பெரும்பாடுபட்டுப் புகழும் புண்ணியமும் எய்தினன். இவ்விதம் தன் சொந்த ஒழுக்கத்தாலும் பல துறைகளில் எடுத்

தாக் கொண்ட முயற்சியாலும் மேற்சொன்ன பெரிக்ளீஸ் காலத்திருந்த அநேகம் பெரும் மேன்மக்களோடு பழகிய பழக்கத்தாலும் ரோகிணி மிகுந்த முன்னேற்றமடைந்து, இறந்தபின் 2020 ஆண்டுகள் சொர்க்கலோகத்தில் தங்கினான். அவன் திரும்பப் பிறக்குமுன் கிறிஸ்துநாதர் அவதரித்து, மறைந்து, அவர் ஏற்படுத்திய மதம் ஐரோப்பிய நாடுகளில் பரவி, பழைய கிரேக்க சரித்திரங்களெல்லாம் பழங்கதைகளாக மாறி இருந்தன.

கோடி வழி—XXIII.

சிந்தினா: (மகன்) சுவாதி, செவ்வாய், ரோகிணி, மகம் முதலியோர். (மகள்) திருவோணம் முதலியோர்.

ரோகிணி: (மனைவி) அநுஷம், (மகன்) ஆவணி முதலியோர். (மகள்) தசமி முதலியோர்.
பழவினை உற்ருர் உறவினர் இங்கும் பெருந்திரள். ஆங்கில மூல நூல் காண்க.

24. வெனிஸ்—ஆனி

கி. பி. 1597—கி. பி. 1620.

வயது: 23 - பின் பிதுருலகவாசம்: 276 ஆண்டுகள்.

இதுவரை சொல்லிய நிகழ்ச்சிகளெல்லாம் இயேசு கிறிஸ்து நாதர் உலகில் தோன்றுமுன், அஃதாவது கி. மு. என்று சொல்லப்படும் கிறிஸ்து நாதருக்கு முந்திய காலத்தில் நடந்த சம்பவங்களாகும். இனி வருவன கி. பி. என்ற கிறிஸ்து நாதருக்குப் பிந்திய காலம் நடந்தவைகளாம். அதில் இன்றைக்கு 340 வருஷங்களுக்கு முன், அஃதாவது கி. பி. 1597-ல், ஐரோப்பாக் கண்டத்தில், இத்தாலி தேசத்தில், வெனிஸ் என்ற அழகிய நகரத்தில் ஆனி யென்ற ஒரு பெரும் பிரபுவுக்கு புதனம்மாள் வயிற்றில் ரோகிணி ஆண்மகனாக உற்பவித்தான். பெற்ருேர் இருவரும் பிள்ளையிடம் அன்பாகவேயிருந்தபோதிலும், தகப்பன் ராஜாங்கத்திலும் அது சம்பந்தமான கக்ஷிகளிலும் சூழ்ச்சிகளிலும் பெரிதும் ஆழ்ந்திருந்தபடியாலும், தாயார் நாளொருவிதம் நாகரிகமாக உடுத்துவதிலும் மினுக்குவதிலும் மற்றுள்ள வாலிபப் பிரபுக்களுடன் உல்லாசமாகத் திரிவதிலும் ஈடுபட்டிருந்தபடியாலும், அவர்களுக்கு ரோகிணியைக் கவனிக்க நேரமே கிடைப்பதில்லை. ஆகவே அவன் தன் கிழட்டாயாளாகிய அஷ்டமியாலேயே வளர்க்கப்பட்டான். அஷ்டமி மிகவும் பாசமுள்ள கிழவியேயானலும் வெறும் மூடாத்துமா. படிப்பொன்றுமில்லாதவள். கிறிஸ்து மதத்தைப் பற்றிய அவளுடைய கொள்கைக

ளெல்லாம் மிகவும் அசம்பாவிதமானவை. அக்காலத்து மதம் கிறிஸ்து மார்க்கத்தில் கத்தோலிக்க மதம். அதன் தலைவராகிய போப் என்பவர் அன்று சக்கரவர்த்திகளுக்குச் சமானமான அதிகாரத்தையுடையவர். அவர் மடங்களும் வேதக் கோவில் களும் பணமிகுதியும் செல்வாக்குமுடையனவாயிருந்தன. பாதிரி மார் தெய்வமாகவே மதிக்கப்பட்டு வந்தனர். ஆகவே அக் காலத்து ஐரோப்பிய நாடுகளிலுள்ள பிரபுக்கள் தம் மதிப்புக் குன்றுதிருக்கவேண்டுவோர், அரசனையடுத்துப் படைத் தலைவ ராகவோ அல்லது போப்பை அடுத்துப் பெரிய அத்தியக்ஷக ராகவோ உத்தியோகங் தேடுவதைத் தவிர வேறு பிரவர்த்திகளில் இறங்குவதில்லை. ரோகிணி துணிவும் உரமும் உடையவனு யினும் பிறரைக் கொல்லும் போர்த்தொழிலில் இளமையிலேயே அவனுக்கு வெறுப்பாயிருந்தபடியால், வயது வந்ததும் பாதிரி யாகவேண்டுமென்று தீர்மானித்தான். பட்டாளத்தில் சேர்ந்து குடும்ப அந்தஸ்தைக் குறையவிடாமல் காத்துவருவதற்கு மூத்த மகனொருவன் இருந்தபடியாலும், பாதிரிமாரில் மிகுந்த உன்னத பதவியை எய்தத்தக்க செல்வமும் செல்வாக்கும் பரம்பரையாக உடையோரானபடியாலும் பெற்றோரும் அதை ஆக்ஷேபிக்க வில்லை.

ரோகிணி இனிய குரலை உடையவன். நன்றாகப் பாடுவான். யாழ் வாசிப்பான். அவனுக்கு எழுதப்படிக்கக் கற்பித்தது பாதிரியும் வேதக் கோயில் சாமியாருமாகிய அவன் குடும்பப் புரோகிதர். ரோகிணியும் பாதிரியாவானென்று கேட்டதும் அவர் அந்த ஆசையை உயர்த்திக் கூறிப் பாதிரிமாருடைய பெருமையையும் பதவியையும் அவர் வீரதீரங்களையும் அவர் மோக்ஷத்தில் அடையப்போகும் உன்னத நிலைகளையும் மற்ற மக்கள் இறந்தபின் அனுபவிக்கவேண்டியிருக்குந் துன்பங்களை யும் பற்றிப் பலவாறு அடிக்கடி புகழ்ந்து அவன் மோகத்தை அதிகப்படுத்தினர்.

பிறப்புமுதலே பணமும் செழிப்பும் அவனைச் சுற்றிக் குவிந்திருந்தபோதிலும் இயற்கையாகவே ஆசை பாசமுடைய ரோகிணிக்கு அவன் மனதையும் அன்பையும் கவரக் கூடிய பாத்திரமாக யாரும் அமையவில்லை. மற்ற விஷயங்களில் மூடாத்மாவாயிருந்த அஷ்டமியென்ற கிழட்டாயாள், ரோகிணியி னுடைய இந்த மனக்குறையை எவ்விதத்திலோ உணர்ந்திருந் தது, அவளுக்குத் தன் வளர்ப்பாளன் மீதிருந்த அந்தரங்க அன்புக்குப் போதிய சான்றாகும். ஆகையால் அஷ்டமி அவ னுக்குத் துணைதேட ஆரம்பித்தாள். ரோகிணி ஆலயப்பிரவேசக னைச் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கும்போது அவனுக்கு வயது

பதினேழு. பெரிய பணக்கார வர்த்தகனொருவன் அவன் அண்டை வீட்டுக்காரன். அக்காலத்து முறைப்படி அவன் பிரபுக்களுக்கு மிகவும் தாழ்ந்த குலத்தவன்; அவருடன் சம்பந்தஞ்செய்ய அருகனல்லாதவன். வர்த்தகமும் கைத்தொழிலும் மிகவும் இழிவான வேலைகளாகக் கருதப்பட்ட காலம் அது. அந்த வியாபாரிக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் ரோகிணிக்கு ஒரு வயது இளையவள். அவளுக்கு மத விஷயமாகப் பல காரியங்கள் அறியவேண்டுமென்ற அவா அஷ்டமியம்மாள் முயற்சியால் உண்டாயது. பக்கத்து வீட்டில் ஒரு பிரவேசகன் இருக்கும் போது இந்த அவாவைத்தீர்க்க வேறு யாரைத் தேடவேண்டும்! ஆகவே அஷ்டமியம்மாள் காரணமாக ரோகிணியும் அந்தம்மாளும் அடிக்கடி சந்திக்கலானார்கள். அந்த மங்கை பெயர் மிருகசிரளம்.

இருவர் குலத்திற்குமுள்ள ஏற்றத் தாழ்வு நோக்கி அவர்களுக்குள் ஏதாவது காதல் ஏற்படுமென்று ஒருவரும் எண்ணவில்லை. இருவரும் மிகவும் சிறுவயதாயிருந்தமையால் வேறு விதமான ஆபத்து நேருமென்றும் யாரும் பயப்படவில்லை. பிறருடைய எண்ணங்களுக்குமாறாக, அவருக்குள் முதலில் முகப் பழக்கம் மாத்திரம் ஏற்பட்டு, அது நட்பாக மாறி, நாளாவட்டத்தில் காதலாகிக் களவொழுக்கமாயிற்று. மிருகசிரளத்திற்கு வயிறுபெருக்கவே எல்லாம் வெளியாகி, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் துன்பமும் மானக்கேடும் மனஸ்தாபங்களும் நேர்ந்தன. மிருகசிரளத்தின் பெற்றோர் அவளை மிகவும் கொடுமையாய் நடத்தினார்கள். அந்தத் துன்பம் பொறுக்காமல் அவள் ஆற்றில் விழுந்து இறந்தாள். அவள் தகப்பன் பெரிய வியாபாரியாகையால் இந்தச் செய்தி ஊரெங்கும் பரவிப் பெருங்கிளர்ச்சியை உண்டு பண்ணிற்று. அதனால் ஆபத்து நேரிடுமென்று பயந்த ரோகிணி வீட்டார் அவனை இரவே கடத்தி, பாடுவா என்ற அடுத்த நகரத்து மடமொன்றில் கொண்டு அடைத்துவைத்தார்கள்.

ரோகிணி நெடுநாள் வரை தன் காதலி தற்கொலை செய்து கொண்டதைப் பற்றி மிக வருந்தினான். பிறர் என்ன எண்ணினும் அவனுக்கு எதுவும் குற்றஞ்செய்துவிட்டதாகவே தோன்றவில்லை. "காரணமில்லாத குலவேற்றுமையைக் கைவிட்டு இருவரையும் மணஞ்செய்து வைத்திருந்தால் எல்லாம் ஒழுங்காயிருந்திருக்கு"மென்று நினைத்துத் துயரடைந்தான். ஆயினும் மடத்திற்சென்று அடைபட்டுப்போனபடியால், அங்குள்ள பாதிரிமார் தன் அறியாச் செய்கையின் பாபகரத்தைப் பற்றி அடிக்கடி சொல்லும்போது, அதுவே உண்மையாயிருக்குமென்று

படிப்படியாக நம்பிக்கொண்டான். அவர்களுடைய அக்காலத்துத் தவமுறை மிகவும் கோரமான முறை. நெடுநாள் தொடர்ச்சியாய் உபவாசமிருப்பார்கள். மற்ற நாள்களில் ஒருவேளை உண்பார்கள். மனசிலாவது வாக்கிலாவது செய்கையிலாவது சிறிய குற்றம் நேர்ந்துவிட்டதாக அவர்கள் நினைத்தாலும் அதற்குப் பரிகாரமாக இரும்புச் சங்கிலிகொண்டு தங்களை அடித்துக் கொள்வார்கள். முள்ளால் உடம்பைக் கிறிக்கொள்வார்கள். இன்னும் அநேக விதமான கொடிய தண்டனைகளை அவர்களே விதித்துக்கொள்வார்கள். உடம்பைத் துன்பப்படுத்திய அளவுக்குத் தக்கபடி, இறந்தபின் உத்தம பதவி கிட்டுமென்று அவர்கள் நம்பினார்கள். ரோகிணியும் தன் பாபச் செயலுக்காக இந்தக் கொடிய விதிகளையெல்லாம் ஐந்தாண்டுகள் அந்த மடத்திலனுபவித்து, உடம்பும் மனமும் மிகவும் இளைத்துத் தனது 23-வது வயதில் மரித்தான்.

பண்டைப் பாவங்களுக்குப் பரிகாரமான இந்தச் சிறிய வாழ்வு கழிந்து, ரோகிணியானவர் இப்போது வடஅமெரிக்காவில் ஐக்கிய மாகாணத்தில் ஆங்கிலேயருக்குள் கி. பி. 1896-ல் "தியாசஃபி" சங்கத்தைச் சேர்ந்த ஒரு பக்திமானுடைய வயிற்றில் ஆண் பிள்ளையாகப் பிறந்து, ஆறாயிரம் ஆண்டுகளுக்குமுன் எகிப்து தேசத்தில் பக்குவக் குறைவால் தவறவிட்ட சந்தர்ப்பத்தைத் திரும்பவும் நல்வினையால் பெற்று, அதே குருநாதர் திருவடியை யடைந்து அவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உத்தம சிஷ்யராய், முன் சொன்ன வித்தகச் சித்தர் கணத்துள் ஒருவராவதற்குமுயன்று முன்னேறி வருகின்றனர். இந்நூலை அன்போடு படிப்போரும், அவரவர் நல்வினையாலும் அம் மகான்களருளாலும் அந்த அரிய பதவியைச் சீக்கிரம் அடுப்பாராக.

கோடிவழி XXIV

ஆனி: (வெனிஸ் நகரத்துப் பிரபு) (மனைவி) புதன். (மகன்) ரோகிணி.

ரோகிணி: (செவிலித் தாய்) அஷ்டமி (தற்கொலை செய்துகொண்ட காதலி) மிருகசீரளம்.

முடிவுரை

இவ்வரலாற்றுப் புனைபெயர்களில் மநரதேவரும் மனதேவரும் நெடுங்காலத்திற்கு முன்னரே ஜீவன் முத்தராகி வித்தகச் சித்தர் கணத்துப் பெரியாராய், மநுவென்றும் தேவரபியென்றும் இரண்டு மகரிஷிகளாக இந்து புராணங்களிற் சொல்லப்பட்டு, இப்போதும்

இந்திய உடம்பெடுத்து மோரிய மகரிஷியென்றும் கூட்ஹுமி மகரிஷியென்றும் பெயருடன் இமயமலையில் தங்கியிருக்கின்றனர்.

சென்ற சிலகாலமாக உலகமெங்கும் கடவுளில் நம்பிக்கை யற்று, ஆஸ்திகங் குறைந்து நாஸ்திகம் பெருகி, உலகச் சிற்றின் பங்களே ஒப்பற்ற இன்பங்களென்று கருதப்பட்டு, மண்ணாசை பொன்னாசையால் மக்கள் போர்புரிந்து மடிவதையும், முத்தி நெறியறியாத மூர்க்கத்தனத்தால் துன்புறுவதையும் கண்டு பரிதாபமுற்று, "கள்ளத்து அலைவர் துயர் கருதி, தம் கருணை வெள்ளத்து மிக அலைபவராகிய" அம் மகான்கள் இருவரும், வித்தகச் சித்தர் கணத்தாருடன் ஆலோசித்து, ஒளிமழுங்கிக் கிடந்த முத்திநெறியைத் திரும்பவும் உலகுக்கு விளக்கும் பொருட்டு, கி. பி. ஆண்டு 1875-ல் "தியஸாஃபிக்கல் சங்கம்" என்று ஒரு சங்கத்தை நிறுவினார்கள். அதன் தலைமையிடம் சென்னைக்கடுத்த அடையாற்றில் உள்ளது. அப் பெரியார் காட்டிய முறைப்படி அச் சங்கத்தை உலகில் பிறப்பித்துப் பெரிதும் வளர்ப்பதற்குத் துணைக் கருவியாயிருந்தவர், ரஷியா வில் பிறந்த பிளாவட்ஸ்கியம்மையாரும் அமெரிக்காவில் பிறந்த ஆல்காட் துரையுமாகிய இருபெரியார்களுமாவர். அவர் இருவரும் மோரிய மகரிஷியின் சிஷ்யர்கள்; இந் நூலில் விசாகம், உத்தி ராடம் என்ற புனை பெயர் கொண்டவர்கள். அவருக்குப்பின், அச் சங்கத்தைச் செழிப்பிலும் செல்வாக்கிலும் உயர்த்தியவர் கள், இங்கிலாந்தில் பிறந்த அனிபெஸன்ட் அம்மையாரும் லெட்பீட்டர் துரையும் ஆவர். இவர்கள் இந் நூலில் கார்த்திகை, சித்திரை என்ற புனை பெயர்களை முறையே கொண்ட ஆன்மாக் கள். இவர்களே பிளாவட்ஸ்கியம்மையார் எழுதிய கடுமையான நூல்களை எளிதில் பொருள் புரியும்படி சிறுசிறு நூல்களாக்கி யும், தமது யோகப்பயிற்சியால் ஆராய்ந்து வேறுபல நூல்களை எழுதியும் "தியாஸஃபி" என்ற திவ்யஞானத்தை உலகமுழு தும் பரப்பினவர்கள். இவர்கள் நால்வரும் வித்தகச் சித்தர் கணத்து உத்தம புருஷரேயாயினும் அதன் அடிப்படியிலுள்ள வர்கள். உலகம் புகழினும் இகழினும் ஒன்றையும் பொருட் படுத்தாமல் உலக நன்மைக்காகத் தம் குருநாதரிடும் உத் தரவுகளை இன்றும் என்றும் இயன்றவரை இயற்றத் தயாரா யிருப்பவர்கள். அவரால் இயற்றப்பட்ட நூலொன்றின் பொருளே இந்த நூலில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

"தியாஸஃபி" என்பது "திவ்ய ஞானம்" என்று பொருள்படும். "தியஸாஃபிக்கல் சங்கம்" என்பது "திவ்ய ஞானசபை"யாகும். "தியாஸஃபி" என்ற திவ்யஞானம் ஒரு தனி மதமல்ல; உலகத்திலுள்ள உண்மை மதங்களுக்கெல்லாம்

அடிப்படையான நியதிகளைக் கூறும் முறையே அது. கறி வகைகள் பலவாயிருந்தாலும், உப்பு, புளி, மிளகாய் முதலியன அவற்றிற்கு அடிப்படையாயிருப்பதுபோலவும், கட்டிடங்கள் மாடமாளிகைகளாகவும் கூடகோபுரங்களாகவும் சிறு குடிசைகளாகவும் இவ்வாறு பலவகைத் தோற்றங்களாயிருந்தாலும், கல், மண், செங்கல், சுண்ணும்பு முதலியன அவற்றிற்கெல்லாம் அடிப்படையாயிருப்பது போலவும், எல்லா மதங்களுக்கும் அடிப்படையாகச் சில உண்மைகள் இருந்துவருகின்றன. அவை நாட்டிற் கேற்பவும் காலத்திற் கேற்பவும் அங்குள்ள மக்களின் அறிவுக்கேற்பவும் நானுவிதமாகச் சொல்லப்பட்டிருக்கும். சில மதங்களில் சில உண்மைகள் மாத்திரம் காணப்படும். சிலவற்றில் பல காணப்படும். "ஒழுக்கம் விழுப்பந் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஒம்பப்படும்" என்ற உண்மையைக் கடைப்பிடித்த மதங்களெல்லாம் உண்மை மதங்கள். அவையெல்லாம் முற்றறிவுடைய ஞானிகளால் ஏற்படுத்தப்பட்டவை. அவற்றுள் சில மதங்கள் பின்வந்த சிற்றறிவுடைய மக்களால் அதிகம் மாற்றப்படாமலிருக்கும். சில அதிகம் மாறிப் பல மூடக்கொள்கைகளைக் கொண்டிருக்கும். மதஸ்தாபகர்கள் கேட்போர் செவியில் விதைகளை இட்டுச் செல்வதைத் தவிர நூலொன்றும் எழுதுவதில்லை. நூலாக விளைவவெல்லாம் பின்வந்த மக்களால் எழுதப்படுபவை. அம் மக்கள், மதஸ்தாபகர்களுக்கு அறிவில் ஒப்பாகாராகையால், எழுதப்படும்போது சிறிதாவது மாற்றம் அடையாத மதம் ஒன்றுமே இராது. "தியாஸஃபி" என்ற திவ்யஞானத்தைக் கற்றறிந்தவர்கள், அம் மதங்களிலுள்ள பதர் நீக்கி நெல்லைப்பொறுக்கி, உண்மை மதங்களெல்லாம் முத்திக்குரிய மார்க்கங்களென உணர்ந்து, அவற்றைச் சமரசத்தோடு நோக்கி, எல்லோருடனும் சகோதரராக ஒழுகுவார்கள். ஆகையால் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற பேருண்மைக்கு எதிரிடையான ஜாதி, சமயவேற்றுமைகளின்றியும், வெள்ளைக்காரர் கறுப்பு மக்கள் என்ற வித்தியாசமின்றியும், ஆண் பெண் என்ற பாகுபாடின்றியும், சகோதரத்துவமொன்றை மாத்திரம் ஒப்புக்கொள்வோர் எல்லோரும் அச் சங்கத்தில் அங்கத்தினராதற்கு உரியவர்கள். அச் சங்கநூல்களைக் கற்று அவற்றின்படி ஒழுக முயலுவோர், மிகவும் பரந்த நோக்கத்தை அடைவதுமல்லாமல், அவர்கள் மனத்தூய்மைக்கும் முயற்சிக்கும் ஏற்றபடி விரைவிலோ காலஞ்சென்றோ முன்சொன்ன இரு மகரிஷிகளாலும் சிஷ்யர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அப்பெரியார் உதவியுடன் முத்திநெறியில் நடந்து, பிறவித்துன்பத்தில் நின்றும் நீங்குவர்.

ஓம் சாந்தி—சாந்தி—சாந்தி.

ரோகிணி நாடக பாத்திரங்கள் சில

மூலநாற்பெயர்		தமிழ்ப்பெயர்
Alcyone	....	அசுபதி
Alastor	....	ஆயிலியன்
Aldebaran	....	அமாவாசன்
Albireo	....	ஆதி
Achilles	....	அனுஷம்
Aglaia	....	அஸ்தம்
Arcturus	....	ஆவணி
Athena	....	தனுதேவர்
Auson	....	மாசி
Atlanta	....	திங்கள்(ன்)
Apis	....	ஏகாதசி
Apollo	....	ஆபோகி
Alces	....	நீலாம்பரி
Amal	....	கமாஸ்
Adrona	....	அடாணு
Aries	....	குரஞ்சி
Aurora	....	ஆரபி
Beatrix (Bee)	....	புரட்டாசி
Bellatrix	....	புனர்பூசம்
Brihat	....	கர்க்கடகதேவர்
Betelgeuse	....	பூரம்
Corona	....	பிரதமன்
Cancer	....	மூலம்
Cygnus	....	மங்களம்
Castor	....	ஞாயிறு
Chameleon	....	சனி
Concord	....	தை
Calyx	....	கலியாணி
Cetus	....	நாட்டை
Cyr	....	ஸாரங்கா
Dabhne	....	நவமி
Epsilon	....	ஐப்பசி
Eta	....	கேட்டை
Egeria	....	மிருகசீரஎம்
Erato	....	(திரு)-ஆதிரை(வரலாறு-II)
Eudoxia	....	திரயோதசி

Fides	ஆடி
Fomal (hart)	திருவோணம்
Gamma	அஷ்டமன்
Heraklcs	கார்த்திகை
Helios	பௌர்ணிமை
Hebe	பரணி
Hermin	சிரவாணி
Iota	அவிட்டம்
Kappa	குரு
Jupiter	சிங்கதேவர்
Juno	உத்திரம்
Leo	திருதிகன்
Lacey (Lacerta)	ரேவதி
Lomia	சோமன்
Lili	துதிகை
Laxa	வெள்ளி
Mars	மகரதேவர்
Mercury	மீனதேவர்
Mizar	மார்கழி
Mira ...	மகம்
Mu	புதன்
Markab	மந்தாரி
Melete	மணிரங்கு
Myna	மோகனம்
Nu	ஆனி
Neptune	இடபதேவர்
Osiris	மேடதேவர்
Orion	ரோகிணி (வரலாறு-I)
Phocea	பூசம்
Polaris	பூராடம்
Pollux	பங்குனி
Proteous	பூரட்டாதி
Pallas	பைரவி
Pindar	பிலஹரி
Rhea	வராளி
Sigma	சதுர்த்தி
Surya	மைத்திரேயபகவான்
Siriūs	சித்திரை (நெற்றிக்கண் ஆராய்ச்சியாளர்)
Selene	சுவாதி

Saturn	....	கும்பதேவர்
Scorpio	....	ராகு
Siwa	....	சுக்கிரன்
Sagitarius	....	சப்தமன்
Spica	....	சந்திரன்
Stella	....	ஷஷ்டி
Sirona	....	ஸரஸாங்கி
Theodorous	....	துவாதசன்
Theseus	....	தசமி
Thetis	....	கேது
Tolosa	....	தன்யாசி
Uranus	....	விருச்சிகதேவர்
Ulysses	....	உத்திராடன்
Ursa	....	செவ்வாய்
Vajra	....	விசாகம்
Vega	....	வைகாசி
Venus	....	மிதுனதேவர்
Vesta	....	வியாழன்
Vulcan	....	துலாதேவர்
Viraj	....	கன்னிதேவர்
Walter	....	உத்திரட்டாதி
Yajna	....	பஞ்சமி
Zeta	....	சதயம்

வினையும் பயனும்

அல்லது

மறுபிறப்பு வரலாறுகள்

★

2. திருவாதிரை

(ERATO)

★

மொழிபெயர்த்தவர் :

C. T. ஆறுமுகம், M. Sc.

Indian Customs Service

1954

முன்னுரை

திருவாதிரை என்ற புனைபெயர்பெற்ற இந் நூலுடைத் தலைவர் இங்கிலாந்தில் கி. பி. 1850-ல் பிறந்து 1933-ல் இறந்து போன ஜாண் வார்லி (John Varley) என்ற புகழ்பெற்ற ஓவியராவர். வார்லியின் தகப்பனாரும் பாட்டனாரும் தலைசிறந்த ஓவியராயிருந்தனர். அப் பரம்பரையிற் பிறந்த இவரும் சிறு வயது முதலே சித்திரக் கலையில் ஈடுபட்டவராய், முதலில் இங்கிலாந்தில் கலைபயின்று, பின்னர் ஐரோப்பாவிலுள்ள பல முக்கிய சித்திரக் கலைக்கூடங்களிலும் கற்றுத் தேர்ந்தனர். அவர் 24 வயது வாலிபராயிருக்கும்போதே, சிறு மரக்கலமொன்றைச் சமைத்து, எகிப்து தேசத்திற்குப் போய் நீல நதியில் சஞ்சரித்துக்கொண்டு இரண்டாண்டுகள் படம் வரைந்து கொண்டிருந்தார். அப்போது பல சமயங்களில் அங்குள்ள குகைகளிலும் அரபியரிடையிலுமே வசித்து வந்ததால், அரபு பாஷையில் மிக நிபுணராயினர். பின்னர், எகிப்து தேசத்தின் பல பாகங்களிலும், துருக்கி, ஆசியா மைனர், சீனா, ஜப்பான், இந்தியா, இலங்கை, ஸிஸிலி, மொராக்கோ முதலிய நாடுகளிலும் ஐரோப்பாவின் பல நகரங்களிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்து ஆங்காங்கே பல படங்களை வரைந்தனர். இந்த விரிவான யாத்திரையால் அவர் சுமார் பத்துக்கு மேற்பட்ட பாஷைகளில் நல்ல விற்பன்னராயிருந்தார். அவர் மரக்கலங்களிற் கொண்டிருந்த பழக்கத்தால், அவற்றைத் திறம்படவும் அழகுடனும் வரைவதில் வல்லவராயிருந்தனர். அவர் காலை மாலை நேரங்களின் ஆகாயத் திரையை வர்ணிப்பதிலும், மக்களைக் கூட்டமாக அமைத்து எழுதுவதிலும் மிகத் திறமைசாலியென ஒப்புக்கொள்ளப் பட்டவர். கவிதா உணர்ச்சி ததும்பும் அவருடைய படங்கள் உலகின் பல கலைக்காட்சி மண்டபங்களிலும் (Museums), அரசர்கள், பிரமுகர்கள் வீடுகளிலும் இன்று போற்றப்பட்டு வருகின்றன.

ஜான் வார்லி தனது 26-வது வயதில் மற்றொரு பிரபல ஓவிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணியை மணந்து கொண்டனர். இவர்களுக்கு இரண்டு பெண் மக்கள் உள்ளனர். வார்லி தம்பதிகள் பாரமார்த்திகத் துறையில் மிகுந்த ஈடுபாடுள்ளவர்கள். உலக சமயங்களைப்பற்றி அறியும் ஆர்வமுடையவராய்ப் பல நூல்களை ஆராய்ந்து வந்தனர். அதனால், கி. பி. 1875-ல் ஆரம்பிக்கப்பட்ட தியஸாஃபிக்கல் சங்கத்தில் (Theosophical Society) அதன் ஆரம்பத்திலேயே அங்கத்தினராயினர்.

பின்னர் ஒரு சமயம்—(1894 மே மாதம்)—மேற்படி சங்கத்துப் பிரமுகர்களில் ஒருவராகிய C. W. லெட்பீற்றர் துரைமகனுர் (C. W. Leadbeater) இவருடைய வீட்டில் விருந்தினராகத் தங்கியிருந்தனர். லெட்பீற்றர் என்ற பெரியார் கி. பி. 1847-வது ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தவர். இளமையிலேயே அவர் ஒழுக்கம், வைராக்கியம் முதலிய உயர் குணங்களும் வீட்டு நெறியில் பற்றும் உடையவராயிருந்தமையால், தம் கல்வி முடிந்ததும் கிறிஸ்தவ சாமியாராயினுர். அவ்வேலையில் சிறிது காலம் இங்கிலாந்து மக்களுக்குச் சேவை செய்து கொண்டிருந்தபோது, பூர்வவாசனை இழுத்துவர, தியஸாஃபிக்கல் சங்கத்தில் அங்கத்தினராகி, இந்தியாவுக்கு வந்து, இமய மலையிலுள்ள ஒரு மகரிஷியின் சிஷ்யனுய் யோகம் பயின்று, சூட்சும திருஷ்டி என்ற நெற்றிக்கண் பார்வை போன்ற பல சித்திகளைப் பெற்றிருந்தனர் அவர் வார்லியின் வீட்டில் தங்கியிருந்த போது, ஒரு நாள் இரவு வார்லி தனக்குத் தீவிர உணர்ச்சியை உண்டுபண்ணிய கனவொன்றைக் கண்டு, காலையில் எழுந்ததும் அதை லெட்பீற்றரிடம் கூறி, அதன் காரணத்தை அறிய விரும்பவே, லெட்பீற்றர் துரை அதை நெற்றிக்கண்ணுல் ஆராய்ந்தபோது, அது வெறும் கனவல்லவென்றும், வார்லியின் நெடுங் காலத்துக்கு முந்திய பிறப்பொன்றின் நிகழ்ச்சியின் ஞாபகமென்றும் காணப்பட்டது. அந்தப் பிறப்புக்களைப்பற்றி அறிய வார்லி ஆவற்படவே, இந்த வரலாறுகள் ஆராய்ந்து கூறப்பட்டன. அவற்றை வார்லி தன் கைப்படக் குறித்து வைத்துள்ளனர். அது ஆங்கில நூலாக வெளிவந்துள்ளது.

அதனைத் தமிழில் மொழிபெயர்த்துதவிய என் தங்கை மகன் திருவாளர் C. T. ஆறுமுகம் பிள்ளைக்கு எனது நன்றி உரியதாகின்றது.

A. Chockalingam.

திருவாதிரையின் 17 பிறப்புகள்

	காலம்	பிறப்பிடம்	பால்	வயது	இருபிறப்புக்கும் இடையே ஆண்டுகள்
1	கி. மு. 19,245	கால்டியா	ஆண்	76	2022
2	,, 17,147	எகிப்து	,,	72	1787
3	,, 15,288	போலிதானிஸ் தீவு	,,	44	498
4	,, 14,746	எஸ்கிமோ	பெண்	55	653
5	,, 14,038	வடஅமெரிக்கா	,,	62	1187
6	,, 12,089	பெரு	,,	85	2367
7	,, 9,637	சீனு	,,	12	22
8	,, 9,603	போலிதானிஸ் தீவு	,,	39	995
9	,, 8,569	எற்ரூரியா	,,	59	1053
10	,, 7,457	ஜப்பான்	,,	65	1513
11	,, 5,879	எகிப்து	ஆண்	75	1772
12	,, 4,032	இந்தியா	,,	45	1829
13	,, 2,158	அரேபியா	,,	68	1517
14	,, 573	பாரசிகம்	,,	12	41
15	,, 520	ஆதென்ஸ்	,,	71	1952
16	கி. பி. 1,503	ஜெர்மனி	,,	19	328
17	,, 1,850	இங்கிலாந்து	,,	83	—

1. காலிடியா — ஆண்

கி. மு. 19245—கி. மு. 19169—வயது 76

திரு. லெட்பீற்றர் சொன்னதாவது :

நீர் கூறுங்காலத்தைக் கவனிக்கும்போது, ஓர் ஆலயத்தின் தட்டட்டியில் உம்மைக் காண்கின்றேன். நீர் உமது கைகளை உயர்த்தி நக்ஷத்திரங்களை நோக்கிப் பிரார்த்திக்கின்றீர்; அவற்றை ஆளும் சக்திகளையுங் கிரக நாதர்களையுந் தொழுவதே உம்மைச் சார்ந்த மக்களது முக்கிய வழிபாடு. அவர்கள் மதம் தூயது; உத்தமமானது; உயர்ந்து பரந்த கொள்கைகளுடையது; ஒப்புயர்வற்ற ஓர் சக்தியையும், அதற்குக் கீழ்ப் பட்ட பல முகூர்த்தங்களையும் ஏற்றுக்கொள்வது; விரிவானதும் அலங்காரமானதுமான கிரியைகளை யுடையது; நிறைந்த விஞ்ஞான அறிவை அடிப்படையாகக் கொண்டது. அதிற் பலியீடு பெரும்பாலும் புஷ்பாஞ்சலியே.

இருண்ட வெண்கல நிறம், அங்குள்ள மக்கள் அனை வருக்கும் இயல்பாயுள்ள ஒளிவீசுங் கருமையான கண்கள், நீண்ட கூரிய மூக்கு, கறுத்துச் செறிந்த தாடி, இவையுடைய நெட்டை மனிதராய் நீர் தோற்ற மளிக்கின்றீர். நீர் மிகுந்த விஞ்ஞான அறிவுடையவர்; வான நூலையும், பூமி கிரகங்கள் நக்ஷத்திரங்கள் இவற்றின் சலனத்தைப் பற்றியும் செவ்வனே அறிந்திருக்கின்றீர். உம்மிடம் பலவகைக் கருவிகள் காணப்படு கின்றன. அவை நுண்ணியவை யெனத் தோன்றவில்லை; ஆனால் சரிவரக் கணிக்கப் பயன்படுகின்றன. உமது ஆராய்ச்சி, கிரகங் களின் அவ்வப்போதைய நிலைகளைக் கண்டறிவதும், குறிப்பிட்ட இடங்களுக்கு அவை வருங் காலத்தைக் கணக்கிடுவதுமேயாம். இது அக்கால மதசம்பந்தமான சடங்குகளையுங் கிரியைகளையும் ஒட்டியது. அங்கு உபயோகிக்கப்படுங் கருவிகளில் ஒன்றை இதோ காண்கின்றேன்—உலோகத்தால் ஆகிய அரை வட்டம்; அது 180 சரிசமபாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதன் மேல் ஒரு முள்; அம்முள்ளுடன் ஒரு கண் துவாரம். இக் கருவி உமது தேவைக்குகந்தபடி பயன்படுகின்றது. விநோத முறை யில் அமைக்கப்பட்ட நீர்க்கடிகாரமும் அங்கு காணப்படுகின்றது. கிண்ணமொன்றில் நீர் நிறைவதால் அது அமிழும் முறை இதிற் கையாடப்படுகின்றது. (தமிழ்நாட்டில் வழங்குந் தண்ணீர் முறைச் சிரட்டைபோன்றது). இக் கருவியில் நீரைத் திரும்பவும் நிரப்பும் முறை நல்ல யுக்திகரமானது.

நீர் பக்திமான்; உம் மதத்தில் முழு நம்பிக்கையுடையவர்; தியான சக்தியுடையவர்; ஊணுறக்கமின்றி ஓரிராப் பகல் முழுதுஞ் ஜெபம் பண்ண வல்லவர். நீண்ட கோலொன்றைக் கையிலேந்தி நிற்கின்றீர்; அதை ஒரு நக்ஷத்திரத்தை நோக்கி நீட்டிப் பின் அந் நக்ஷத்திரத்தின் அடையாளத்தை ஆலயத் தட்டட்டியின் வெண்தரையில் வரைகின்றீர். [அவ்வடையாளம் விளைந்த நான்கு (4) போலிருக்கின்றது]. நீர் வரைந்த படம் மின்னுகின்றது. கோல் நுனியிலுள்ள பிலெண்ணை போன்றவொரு பொருளாலேயே அவ்வொளி உண்டாகின்றது. இப் பொருள் நிப்பாஷாணத்தால் ஆனதல்ல; ஆனால் அதைப் போலவே ஒளி விளைவுள்ளது.

நீர் பலிபீடத்தின்மீது அழகிய செந்தழல் ஒன்று ஆக்குகின்றீர். தழலின் நிறம் ஒரு குறிப்பிட்ட நக்ஷத்திரத்தின் ஆவாறென சம்பந்தமான நிறம் உமது கைக்கோலையாட்டி, இத் தழலை எழும்பவுந் தணியவுஞ் செய்ய வல்லவரா யிருக்கின்றீர். இயற்கைப் பொருள்களை அடக்கியாளவல்ல அத்தகைய பல சக்திகளையும் நீர் அறிந்தவர் போல் தோன்றுகின்றீர். நாளடைவில் நீர் தலைமைப் பூசாரியாகி, "மாகியர்" (MAGYOR) என்றுயர்ந்த பதவியை யடைகின்றீர். உமது கிரியாங்க உடைகள் பளபளப்பாகப் பல வர்ணங்களுடையதாய் அற்புதமாயிருக்கின்றது—தலையிலே வெண்ணிறத் தகட்டாலான மூன்றடுக்குக் கிரீடம்; பட்டுஞ் சரிகையுஞ் சேர்ந்து நெய்தது போன்ற வெண்ணிற அங்கி பலநிறக் கதிர்களால் நீலம், சிவப்பு எனப் பலவித வர்ணத்தில் பளபளக்குந் தன்மையுடையது.

நீர், உயர்ந்த பீடங்களிலும் கோவிற் படிகளிலும் நின்றுகொண்டு திரள்திரளான அடியார்களுக்குப் பிரசங்கஞ் செய்கிறீர். மக்கள் பக்தியுடையவர்; சாந்த குணத்தவர்; இனிய தன்மையுடையவர்; அவசியம் நேரிடும்பொழுது நன்கு போர் செய்யுந் திறமுடையவராயினும் இயற்கையில் போர்ப் பிரியரல்லர். அவரது போர்மக்கள் நல்ல வீரர்கள்; அவர்கள் சைனியங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். நான் காணும் வீரர்கள் ஈட்டிகளையே ஆயுதமாக வைத்திருக்கின்றனர். அவர்களது போர்க்கொடி மஞ்சள் உலோகத்தாற் செய்த யாழ்போன்றவொரு தகடு: அதையொரு கம்பியிற் பொருத்திக் கையிலேந்திச் செல்லுகின்றனர். மிக நுணுக்கமாக வரையப்பட்ட வெள்ளி யேடுகளிலிருந்து நீர் அங்குத் திரண்டிருக்கும் மக்களுக்கு வாசிக்கின்றீர்; அவ் வேடுகளின் எழுத்தும் மொழியும் தென் அமெரிக்கக் கல்வெட்டிலுள்ளவற்றைப்போலக் காணப்படுகின்றன. அவற்றிலுள்ள வாக்கியங்கள் நல்ல நீதி யுணர்ச்சியும்

நெறியுமுடையவை. (குறிப்பு: விக்கிரகங்கள் எவையுங் காணப்படுவதாக மிஸ்ற்றர் லெட் பீற்றர் சொல்லவில்லை). இந்த வெள்ளியேடுகள் வாரினாற் கட்டப்பட்டிருக்கின்றன: தகட்டின் பழமையால் வெள்ளியே கறுத்துப் போயிருக்கிறது. (இவை அத்லாந்தியரைச் சார்ந்தவையாயிருக்கலாம்). இவை மிகுந்த பயபக்தியுடன் போற்றப்படுகின்றன.

நீர் ஆலயத்தை ஒட்டிய வீடொன்றில் வசிக்கின்றீர். அவ் வீடு செங்கற் சுண்ணாம்பு பூசப்பட்ட பெருந் தூண்கள் தாங்கும் முன்முகப்புக் கொண்டது. அங்கு மரங்களையுடைய தோட்டமொன்று இருக்கிறது. நீர் விரும்பும் பல பூச்செடிகளும் ஆங்குண்டு. அங்கே சுவரில் ஒருவகை ரோஜாச் செடி படர விட்டிருக்கின்றீர்; அது பூத்துக் குலுங்கும்போது சுவரில் கோலமிட்டதுபோலத் தோன்றுகின்றது. அழகிய வெண்பூக்கள் சிலவும் தோட்டத்திலுள்ளன. (என்ன மாதிரி உணவுண்கின்றேன் என்று நான் கேட்கவே சொன்னதாவது) பலவகைக் கறிகள் உமக்குப் படைக்கப்படுவதைப் பார்க்கின்றேன்: அவற்றுளொன்று மங்கல் நிற மாமிசக்கறி: வெள்ளாட்டுக்கறியோ அல்லது அதைப் போலவுள்ள தொன்றோ, நிச்சயமில்லை. வெட்டி யுண்ணக் கத்தி வைத்திருக்கின்றீர்: ஆனால் கவர்முள் (fork) காணப்படவில்லை. சோளம் போன்ற ஒருவகைத் தானியக் கஞ்சியை ரொட்டித்துண்டுகளோடு கோரிக் குடிக்கின்றீர். (இத் தானியம் இன்றுள்ள சோளமல்ல; இதனினும் மிகப் பொடியானது) வெனீஷியன் கிண்ணம்போல, சித்திரங்களும் சிறந்த வேலைப்பாடுமுள்ள பீங்கான் கோப்பைகளில் கரும்பும், மஞ்சள் நிறப் பேரீச்சம்பழமும் சேர்த்துச் செய்யப்பட்ட ஷர்ப்பத்துகளைக் குடிக்கின்றீர்.

உமது வாலிபப் பருவத்தில் ஒரு கட்டிடச் சுவரைப் பளிங்குத் துண்டுகளால் அலங்கரித்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. அழகிய பளபளப்பான வர்ணங்களால் ஒரு வேட்டைக் காட்சியை வரைந்து கொண்டிருக்கின்றீர். உமது சித்திரங்கள் இங்கிலாந்தில் பொருட்காட்சிசாலைகளில் வைத்திருக்கும் அம் மாதிரிப் படங்களைவிட மிக உயர்ந்தவை. அச் சித்திர வேலை சிறு சிறு பளிங்குத்துண்டுகளால் ஆக்கப்படுவது. பளபளக்கும் பச்சையும் கட்டி மஞ்சளும் முக்கியமாய்க் காணப்படும் நிறங்கள். படத்திலுள்ள மக்கள் செந்தவிட்டு நிறமாய், அத் தேசாசாரப்படி வெட்டப்பட்ட கறுத்த தாடியுடையவராயிருக்கின்றனர். மானொத்த சில மிருகங்கள் மீது ஈட்டிகளை எறியும் பாவனையில் படந் தீட்டப்பட்டிருக்கின்றது. அதிலுள்ள வானம் பசுமையான ஊதாத்துண்டுகளால் ஆக்கப்பட்டிருக்

கின்றது. சித்திரமோ, பளபளப்பாய், அலங்காரமாய், இயற்கையோ டியைந்ததாயிலங்குகின்றது. நீர் வேலை செய்யும்போது உமது பக்கத்தில் இப் பொடிப் பொடி ஓட்டுத் துண்டுகளின் குவியலொன்று கிடக்கின்றது.

நீர் எப் பிராயத்திலேயோ மணஞ் செய்திருக்கின்றீர்: அது தலைமைப் பூசாரியாவதற்கு முன்னமேயே நடந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. உமக்கு ஒரு மகனுமுண்டு. அவன் ஆலயத்தின் கற்றுக்குட்டிகளில் ஒருவன். இக் காட்சி அமைக்கப் பட்டுள்ள நாடு பரந்து விரிந்த சமவெளியாயிருக்கிறது. நிலம் வண்டல் மண்; இதனிடையே வளைந்து திரிந்து செல்லும் நதியொன்று; அதற்குமப்பால் வெகு தொலைவில் ஒரு கடல். உமது ஆலயத்திற்கும் வீட்டிற்குஞ் சற்று தூரத்தில் மிகப் பெரிய நகரமொன்றிருக்கிறது. உயர்ந்து கனத்த சுவர்களாலான செங்கல்வீடுகள் செறிந்த நகரமது; அங்கு ஆட்கள் அங்குமிங்கும் நடமாடுகின்றனர். நகரில் உயர்ந்து விளங்குவது ஒரு ஆலயம்; அது தட்டுத்தட்டாகவும், மேடைமேடையாகவும் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு மேடையும் ஒவ்வொரு நிறத்தில் கட்டப்பட்டதுபோல் தோன்றுகிறது. ஆனால் நிறங்கள் நாட்பட்டு மங்கி இருப்பதால் அவற்றின் வேறுபாடுகள் நன்கு புலப்படவில்லை. இங்குச் சிற்சில பாகங்கள் ஒருவகைத் தகட்டாற் பொதியப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் செம்பு, பித்தளை, வெண்கலம் போன்ற உலோகங்கள் இழைப்பு வேலையொத்த அலங்காரங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. (என் வினவிற்கு விடையாக) நான் காணும் நகரம் ஆற்றினோரத்தில் அமைந்ததல்ல; அங்குக் கால்வாய்களுங் காணப்படவில்லை. ஆனால் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன.

குறிப்புக்கள்: பல கேள்விகளின் பலனாகவே சொன்னதாவது: "அந் நாடு கால்டியா அல்லது அதைச் சார்ந்தது என்பது உறுதியே. நாம் பார்ப்பது மிகமிகப் பழங்காலம். ஏனெனில் அதனோடு ஒப்பிடும் போது "பெர்ஸிப்பொலீஸ்" போன்ற பழங்கால நகரங்கள் கூடச் சமீப காலத்தில் உள்ளவைபோல் தோன்றுகின்றன. இக் காலம் 20,000 முதல் 30,000 ஆண்டுகள் வரை முற்பட்டதாயிருக்கலாம்." லெ: மேலும் சொன்னதாவது:

சில காலங்கழித்துக் காணும்போது, நீர் வெண்மையான தாடியுடைய கிழவனுயிருக்கின்றீர். அமைதியாய் வாழ்கின்றீர். பலராலும் நன்கு மதிக்கப்படுகின்றீர். உமது மரணம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. உமதுடல் வெண்துகில் உடுத்தப்பட்டு மஞ்சத்தில் கிடத்தப்பட்டிருக்கின்றது. பெருந்திரளான மக்கள் உமது அறைக்குள் வந்து உம்மைத் தரிசனஞ் செய்துவிட்டு, அவர்களுக்காக வரிவரியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள வெண்பொடி தூவிய ஒருவகை அப்பத்தை உமது இறுதியுபசாரமாக எடுத்துச் செல்லுகின்றனர். செல்லும்போது

"உமது மேலுலகப் பயணம் இன்பகரமாயிருக்கட்டும்" என்று வாழ்த்துகின்றனர். மரணத்தின் பின்னும் மக்கட்கொரு வாழ்வுண்டென்பது அவர்களது உறுதியான நம்பிக்கை; மரணம் அஞ்ச வேண்டியவொன்றென்று அவர்கள் கருதவில்லை. உமதுடம்பு மரக்கலத்தில் எடுத்துச் செல்லப்பட்டுக் கடலிலோ, அல்லது அதில் கொண்டு சேரும்படியாக அதையடுத்த வளைகுடாவிலோ நீருள் ஆழ்த்தப்படுகின்றது. பக்தி சிரத்தையாய், நல்லொழுக்கத்துடன் நீர் உலகில் வாழ்ந்து வந்ததன் பயனாக நெடுங்கால மேலுலக வாழ்வு உமக்குச் சித்திக்கின்றது.

பிறப்பு: 19245 கி. மு. இறப்பு: 19169 கி. மு.	வயது 76 ஆண்டுகள்
இறந்தபின் ஏற்பட்ட, புவர்லோக, சுவர்லோக வாழ்வுகள்	2022 ஆண்டுகள்

2. அரேபியா—ஆண்

கி. மு. 17147—கி. மு. 17075

அடுத்தபடியாக நீர் ஒரு கூடாரத்தில் கைக்குழந்தையாகக் காணப்படுகின்றீர். அங்குள்ள மக்கள் தேசாந்திரிகள்: ஒட்டகங்களும், ஓயாத அலைச்சலைக் காட்டுஞ் சின்னங்களும் அங்குக் காணப்படுகின்றன. சிறிது காலத்தில் அங்கு ஏதோ குழப்பங்கள் ஏற்பட்டு, அம் மக்கள் எகிப்து தேசத்திற்குச் சிறைப்படுத்திக் கொண்டுபோகப்படுகின்றனர். அங்கு அந் நாட்டின் மேல்பாகத்திலோ அல்லது மத்திய பாகத்திலோ நீர் அடிமையாக விற்கப்படுகின்றீர். உம்மை அடிமையாகக் கொண்ட அந்த எகிப்தியக் குடும்பத்திற்கு நீல நதிக்கரையில் ஒரு பெரிய வீடும் பண்ணையும் இருக்கின்றன. அவர்களால் நீர் நன்கு ஆதரிக்கப்படுகின்றீர். உமக்கு ஒன்பது வயதாகும்போது உம் முதலாளியின் மகனுக்கு விளையாட்டுத் தோழனாகின்றீர். நீங்கள் தேகப் பயிற்சி அதிகமாகச் செய்கின்றீர்கள். இருவரும் முதலாளியின் மகளோடு அண்டையிலுள்ள ஒரு முதியவரிடஞ் சென்று கல்வி கற்று வருகின்றீர்கள். நீர் குடும்பத்தவரில் ஒருவராகவே நடத்தப்படுகின்றீர். அவர்களைப் போலவே உடையும் அணிந்திருக்கின்றீர். சில காலத்திற்குப் பின் குடும்பத் தலைவன் இறக்கின்றான். அவனது வருவாய் சீர்கேடானதினாலோ அல்லது சொத்துக்கள் அபகரிக்கப்பட்டதாலோ குடும்பம் எளிய நிலைமைக்கு வந்துவிடுகிறது. அப்போது உமக்கு 24 அல்லது 25 வயதிருக்கலாம். நீங்கள் எகிப்தின் அப் பாகத்தை விட்டுவிட்டு, நீல நதி வழியாக இறங்கி அதன் முகத்துவாரத்தை யடுத்த பட்டணமொன்றில் குடியேறுகின்றீர்கள். அங்குள்ள வீடுகள் மிகவும் சாதாரணமானவை. "எகிப்து தேசத்து மாடமாளிகை

கள்" என்ற புகழ்ச்சிக்கு ஒரு விதத்திலும் ஒவ்வாதவை. உம்முடைய தோழனிடத்திலும் (சிரளம்) அவன் சகோதரியிடத்திலும் (ஸாரங்கா) நீர் மிகுந்த அன்புடையவராயிருக்கின்றீர். உங்களுக்கிடையில் காதல் நாடகமும் நடந்து வருவதாகத் தெரிகின்றது. (அம் மங்கை இப்போது உலகில் பிறந்திருப்பதாகவும் தனக்கு அறிமுகமானவரென்றும் மிஸ்றர் லெட்பீற்றர் கூறுகின்றார்.) புதிய ஊருக்கு வந்தது முதல் எழுத்தாளராய்ப் பொருளீட்டி நீரே குடும்பத்தைக் காப்பாற்றுகின்றீர். பத்திரங்களையும், நிலச் சொத்துக்களின் விவரப் படங்களையும் நீர் நகலெடுக்கின்றீர். இம்மாதிரியான வேலை உமக்கு அதிகங் கிடைக்கின்றது. உம்முடைய தோழரோ ஒரு வேலையுஞ் செய்வதாகத் தோன்றவில்லை.

உமக்கு ஒரு முதியவரது பழக்கம் ஏற்படுகின்றது. அவரிடம் நேர்த்தியான ஒரு கைச்சுவடி நூல் நிலையம் இருக்கின்றது. நெடுநாளாக அவர் ஒரு சரித்திர நூல் எழுதிக்கொண்டிருக்கின்றார். அவர் பெரிய கல்விமான்; அவர் சொல்ல நீர் எழுதுகின்றீர்; நிலையத்திலிருக்கும் நூல்களில் அவர் விரும்புபவற்றைத் தேடி எடுத்துக்கொடுக்கின்றீர். இவ்வாறு ஒன்பது, பத்து ஆண்டுகள் கழியும்போது அந்தப் பெரியவர் இறந்துபோகின்றார்; அவரது நூல் நிலையம் உம் வசமாகின்றது. கொஞ்சம் சொத்தும் அவர் உமக்குக் கொடுத்திருக்கின்றார். அவர் எழுதி வந்த சரித்திர நூலை முற்றுவிக்கும்படியான நிபந்தனை இருப்பதால் பல ஆண்டுகளாக நீர் அந்த வேலையில் ஈடுபடுகின்றீர்.

எகிப்து நாட்டில், சமாதானம் நிலவிய இந்தக் காலத்தில், ஆராய்பவர் மனத்திற்கு இன்பத்தைத் தரும் ஒரு சாந்தியும் சாவகாசமும் நிறைந்திருந்தன. அக்காலத்து மக்கள் கள்ளங்கபடறியாதவர், கனிந்த முகத்தினர், எதைப் பற்றியும் பரபரப்படையவால்லர். நீர் எழுதும் பெரிய நூல் மிகுந்த சுவையுடையது. அவதார புருஷர்களான அந் நாட்டு மன்னர்களின் சரித்திரமே அது. பிரமிட்கள் பலவற்றையும் பற்றிக் கூறுவது: அவற்றிற்கெல்லாம் நில விவரப் படங்களும் இருக்கின்றன. இப்போது பெரிய பிரமிட் என்று சொல்லப்படுவது உள்ளே அறைகளும் நடைபாதைகளும் நிறைந்து சல்லடைக் கண்போலக் காணப்படுகின்றது.

உமது நூல் எழுதி முடிக்க அநேகம் ஆண்டுகள் ஆகின்றன. நூல் முடிவுற்றதும் அதன் நகலொன்றை அக் காலத்து அரசனுக்குச் சமர்ப்பிக்க உமது வனப்புடைய வாலிப மக்களில் ஒருவன் ராஜதானிக்குச் செல்லு

கின்ருன். அரசனே அந் நகலைக் கொண்டுவரும்படி உத்திரவு இட்டிருப்பதாகத் தெரிகின்றது. அரசன் கொலுக் கூட்டித் தனது சிம்மாசனத்திலமர்ந்து அந் நூலை வரவேற்கின்ருன். அது பின் அரசாங்கச் சாசனங்களோடு சேர்க்கப்படுகின்றது. இம் மகன் அக் காலத்தில் ஒரு முக்கியமான உத்தியோகத்திலிருக் கின்ருன். அரசன் (ஃபேரோவா) உம்மை ராஜதானிக்கழைக் கின்ருன். அங்குள்ள நூல் நிலையத்தில் ஒரு வேலையை ஏற்றுக் கொள்ளும்படி உம்மைக் கேட்டுக்கொள்கிருன். நீர் வயதாய் விட்டதாய்க் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகின்றீர். ஆனல் உமது மறுப்பிற்கு உண்மைக் காரணம் அதுவல்ல. நீர் ஒதுக்க மான சுபாவமுடையவராதலால் அரசவையின் ஆரவாரமும் நகர்ப்புற வாழ்க்கையும் உமக்கு வெறுப்பாயிருப்பதே இதற்குக் காரணம். அச் சரித்திர நூல் உம்முடையதல்லவென்றும், உம் முடைய தலைவர் எழுதிவைத்த குறிப்புக்களைத் தொகுத்ததும் பகர்த்தியதுமே உமது வேலையென்றும் பிறருக்கு அறிவிக்க நீர் ஆத்திரப்படுகின்றீர்.

நீர் உமது ஊருக்குத் திரும்பி வருகின்றீர். உமது வீட்டி லிருந்து சிறிது தூரத்தில் உமது பண்ணை நிலம் இருக்கின்றது. அங்கே விவசாயம் நடைபெறுகிறது; மீன் வளர்க்கக் குளங் களும் இருக்கின்றன. நீர் அடிக்கடி அங்கேயே இருக்கிறீர். காலக்கிரமத்தில் நீர் மரித்துப் போகின்றீர். ஆனல் உமதுடல் பரிமளத் தைலங்களால் பதனப்படுத்தப் படவில்லை. (Embalm) உம்முடைய முன்னைய முதலாளியின் மகனும் மகளும் உமது பொறுப்பிலேயே வளர்ந்தார்கள். நீர் உயிரோடிருக்கும்போது யாவராலும் நன்கு மதிக்கப்பட்டிருந்தீர். நீர் கல்வியில் மிகுந்த முயற்சியுடையவர்; மதப்பற்றுள்ளவர்; மரணத்திற்கஞ்சாதவர். சாவஞ்சாமை அந் நாட்டில் அக் காலத்தில் அனைவருக்கும் பொதுக் குணம். இப் பிறப்பு திட்டமாய் ஒரு நல்ல பிறப்பே. மிகுந்த இடைஞ்சல்களுக்கிடையே ஆரம்பித்தபோதிலும், பல கடுமையான துயரங்கள் நேர்ந்தபோதிலும் முடிவு நல்ல அனுகூலமாகவே தோன்றுகிறது. இறந்த பின் நீண்டகால மேலுலக வாழ்வும் சித்திக்கின்றது.

பிறப்பு :	17147 கி. மு.	வயது
இறப்பு :	17075 கி. மு.	72 ஆண்டுகள்.

மேலுலக வாழ்வு 1787 ஆண்டுகள்.

குறிப்புகள்: முதலாளி மகன் - மிருகசீரஎம். முதலாளி மகள் - ஸாரங்கா.

3. போஸிதானிஸ் தீவு—ஆண்

கி. மு. 15288—கி. மு. 15244

இப் பிறப்பு மிக மிக மோசமானது: பார்ப்பதற்கே மனம் நடுங்குகின்றது; அதை ஆராய்வதற்கே அருவருப்பாயிருக்கிறது. முந்திய இரண்டு உத்தம பிறவிகளுக்குப் பின் இது எப்படி நேருமென்றே அறியமுடியவில்லை. பிறந்த நாட்டைக் கண்டு பிடிப்பதே பெரும் பிரயாசமாய் விடுகின்றது. கொஞ்சம் தேடிய பின் அது போஸிதானிஸ் தீவு என்று தெரியவருகின்றது.

இங்குக் காணப்படுவது மிக உயர்ந்த வொரு நாகரிகம். கம்பீரமான கட்டிடங்கள்; லண்டன் மாநகரம் போன்ற பெரியதோர் தலைநகரம்; எகிப்தில் இன்று காணப்படும் பிரம்மாண்டமான பாழ்ங் கோவில்களையுந் தோற்கடிக்கும் அருமை பெருமை வாய்ந்த கோட்டை கொத்தளங்கள், கொலுக்கூடங்கள்; வேறு, பெரிய பாலங்கள்; மிகவும் அழகிய சிற்பவேலைகள் கொண்ட மாடமாளிகைகள். இச் செழிப்பிற்கும் மட்டற்ற செல்வத்திற்கும் அடுத்தடுத்து மனத்தால் நினைக்கவொண்ணாத ஒரு அஷ்டதரித்திரம். இதில் அழுந்திய பாமர மக்கள் ஆப்பிரிக்காவின் லெமூரிய நீகிரோவர், மற்றும் அன்றைய உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்த சிவப்பு மக்கள், மஞ்சள் மக்கள் எல்லோரையுங் கொண்டது. இவையன்றி அத்லாந்திய ஆதிமக்களைக்கொண்ட ஒரு அடிமை ஜாதியார் அடக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டவராய் அங்கு காணப்படுகின்றனர். தீயொழுக்கம், மிதமிஞ்சிய செல்வ வாழ்க்கை, ஈனஇரக்கமற்ற சுயநலம், சிற்றின்ப போகம், கொடுமை இவையே அங்குள்ளவரின் இயற்கைக் குணங்களாய்க் காணப்படுகின்றன. இழிவான பலவித மாயா மந்திரங்களும் அங்கு அப்பியசிக்கப்படுகின்றன. இக் காலத்தில் அங்கு ஆண்டு வந்த செந்நிற மக்கள் இறுமாப்புந் தந்நலமுங் கொடுங் கோன்மையு முடையோராயிருந்தனர். நல்லோர் என்று சொல்லத்தக்கவராக விரலிலெண்ணக் கூடிய ஒரு சிலரைத் தவிர ஏனையோரனைவரும் எவ்வகையிலும் எவ்வளவு கேவலமாயிருக்கக் கூடுமோ அவ்வளவு கேவலமான நிலையில் ஆழ்ந்திருந்தனர். உமது துர்ப்பாக்கியமான இந்தப் பிறப்பு இத்தகைய நகரிலே நேர்ந்தது.

உம்முடைய பெற்றோர் (தந்தை: புதன்—தாய்: மந்தாரி) நல்ல பணக்காரர்: உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். உமது தந்தையார் லாபந் தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமானவர்; சத்தியத்திற்குப் பயந்தவரல்லர். தயை தாக்ஷணியமின்றிக் கிடைத்த

வற்றை யுரிஞ்சுந் தங்கலந் தவிர அதற்கு மேற்பட்ட கொள்கை யொன்றும் அறியாதவர். உம்முடைய பன்னிரண்டாவது வயது வரையில் நீர் மகிழ்ச்சியோ, மனச் சாந்தமோ இல்லாத சிறுவனாக வாழ்ந்து வந்தீர். உம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கை முறைகளில் உம்மையறியாத ஓர் அதிருப்தியும் மனச் சடைவும் இருந்து வந்தன; அதைவிட உயர்ந்த வோர் நிலையைப்பற்றி உமக்குத் தேட்டமுமிருந்தது. உமக்கு வாலிபம் நீங்கி வயது வந்த பின்னர்தான் உம் தந்தையின் பிரவர்த்தியில் ஊக்க முண்டாகின்றது. அவரது வேலைத் திறமைகளையுஞ் சூழ்ச்சி களையும் மெச்சவுந் தொடங்குகின்றீர். பெருஞ் செல்வம் உம் மிடமிருப்பதால் பெரும்பாலும் சோம்பேறிகளும், தீயோரும், சுயநலத்தவரும் உமக்குத் தோழராகின்றனர். இவரினுங் கீழ் மக்களான முகஸ்துதி செய்வோரும் அண்டிப் பிழைப்போரும் எப்போதும் உம்மைச் சுற்றியிருக்கின்றனர். உம்மீது உண்மை யான காதல் கொண்ட வொரு மங்கையைச் சீர்குலைத்துப் பின் வெறுத்து அவளை விலக்கிவிடுகின்றீர். அது காரணமாகப் பெருந்துன்பத்திற்காளான அவள் இளம் பருவத்திலேயே தற் கொலை செய்துகொள்ளுகிறாள்.

உமது சுற்றுப்புற உலகப்போக்கின் நெருக்கடியும், பொது ஜன வாழ்க்கை முறையும் உமது இனத்தாரைவிடவோ, பொது மக்களைவிடவோ உயரவொட்டாமல் உம்மைத் தடுத்தனவெனி னும், உமக்கும் அவருக்கும் ஒழுக்கத்தில் ஏற்றத்தாழ்வொன்று மில்லை யெனினும், அத்தகைய வாழ்க்கை முறையில் உமக்கு ஓர் உண்மையான வெறுப்பும், கழிவிரக்கமும் நீங்காதிருந்தன. இந்த ஒன்றே இவ்வளவு குழப்பத்தினிடையிலும், இத்தகைய இழிவாழ்க்கையின் நடுவிலும் உம்மை அறவே கொடியோனாக் காமல் காத்தது.

மற்றப்படி உமது ஒழுக்கமும் நாணயமும் பாதளமெட் டின. பழிபாவங்களுக் கஞ்சாதவராய், தொழில் முறையில் சத்தியமென்பது இம்மியளவு மில்லாமல் தருணம் வாய்த்தால் எவரையுங் கவிழ்க்கத் தயாராகவு மிருக்கின்றீர். பின்னர் சுய நலத்திற்காகச் சில மந்திரங்களையுங் கையாளுகின்றீர். உமக்கு மனமகிழ் வென்பதே இருந்ததில்லை ; இருந்திருக்கவும் முடியாது. பதிலாக உள்ளுணர் வொன்று உம்மை எள்ளி யிகழ்ந்தது. உமது நடுப் பிராயத்தில் ஒரு தெருச் சண்டையில் பலத்த காயமடைந்து நெடுநாள் சீக்காய்க்கிடக்கின்றீர். உமது சுயநல நண்பரெல் லோரும் உம்மைத் தனியே விட்டுவிட்டு ஒதுங்கி விடுகின்றனர். நீர் உமது பழைய கேவல வாழ்வை யெண்ணி மனம் புழுங்கி,

இனித் திருந்தப்போவதில்லை யென்று ஏக்கங்கொண்டு ஈனத் தனமாக வுயிரை மாய்த்துக் கொள்ளுகின்றீர்.

இந்தச் சீர்கேடான உயிர் வாழ்க்கையின் பயனாக நெடுங் காலம் புவர் லோகத்தில் அவதிப்பட்டபின், நல்வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற எண்ணமாவதிருந்தமையால் சுவர்க்க லோகத்தையுங் கொஞ்சம் எட்டிப் பார்த்தீர். உமது நடையில் அரைகுறையாக மழுங்கிக்கிடந்த நல்வினைப்பயனை அங்கே அனுபவித்தீர்.

எல்லாவற்றையுங் கவனிக்கும்போது அன்று நீர் வேறு விதமாக வாழ்ந்திருக்கவே முடியாதென்று இப்பொழுது எண்ண வேண்டியிருக்கிறது. நமது அறிவிற் கெட்டியவரையில் உம்முடைய பிறப்பு வளர்ப்பையும், தீமையே வடிவெடுத்தாற் போன்றவையும், பலவித வலி பொருந்தியனவுமான சக்திகள் உம்மைச் சுற்றிச் சூழ்ந்திருந்ததையுங் கவனிக்கும்போது உம்மிடம் இதைவிட உயர்வான வாழ்க்கையை எதிர்பார்க்க முடியாது என்றே சொல்லவேண்டியிருக்கிறது. இப்பிறப்பு ஒரு கடுமையான சோதனையாயிருக்கலாம்; ஆயினும் வேறுவிதமான உயர் பயனைக் கர்ம தேவதைகள் எதிர்பார்த்திருந்தாரெனவே தோன்றுகின்றது. தற்செயலாக நீர் வெற்றிபெற்றிருப்பீராயின் அஃது அளவிலடங்கா நற்பயனைக் கொடுக்கும் அரிய செயலாக அமைந்திருக்கும்.

பிறப்பு : 15288 கி. மு. } வயது 44
இறப்பு : 15244 கி. மு. }
மேலுலக வாழ்வு. 498 ஆண்டுகள்
குறிப்பு : தகப்பன் — புதன்
தாய் — மர்தாரி

4. எஸ்கிமோ — பெண்

கி. மு. 14746—கி. மு. 14691

அடுத்த பிறப்பில் நீர் மங்கல்நிறமுள்ள ஒரு சிறு பெண் குழந்தையாகக் காணப்படுகின்றீர். குடிசை யொன்றின் நடுவில், கடலிற் பொறுக்கப்பட்ட சிராய்கள் எரிந்து கொண்டிருக்கும் நெருப்புக்குழியருகே, ரோமத்தோலுடுத்து வெறுங்காலோடு விளையாடிக் கொண்டிருக்கின்றீர். நீர் இருக்குமிடம் வட அமெரிக்கா. (கிழக்குக் கரையாயிருக்கலாம்). அங்கு வசிக்கும் மக்கள் அத்லாந்திய வகுப்பின் முதற்கிளையைச் சேர்ந்தவராகத் தோன்றுகிறது. அவர்கள் வாழ்க்கையுந் தோற்றமும் இன்றைய

எஸ்கிமோ ஜாதியாரைப் போலவே இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் உறைபனியும் மூடுபனிக்கட்டியுந்தாம். பயிர் பச்சையொன்றுந் தென்படவில்லை. சின்னஞ்சிறு குளிர்ப் பிரதேச பிராணிகளைத் தவிர வேறு மிருகங்களை காணப்படவில்லை. உணவுப்பொருள்கள் பெரும்பாலும் மீனும் ஸீல் என்ற நீர்நாயுமே.

குடிசைக்குள் வாயுவானது கோடரிகொண்டு வெட்டத் தக்க திண்மையாயிருக்கிறது. மீனெண்ணெயின் முடை நாற்றமும், புகையும் பிறவுஞ்சேர்ந்து அக் காற்று மூச்சுவிடத்தக்கதாயில்லை. குடிசைச் சுவர்களில் ஈரரிப்பால் நீர் வடிகிறது. பாத்திர பாண்டங்களோ, சாமான் தட்டுமுட்டுகளோ எவையுமில்லை. கோடைக்காலத்தில் குளிர் அவ்வளவு கொடுமையாக இல்லை. வெள்ளை நிறமான ஒரு சிறு பிராணியின் ரோமத்தை உட்புறமாக உடுத்தி மேலே நீர்நாய்த்தோலை யணிந்திருந்த போதிலும் நீர் வெறுங்காலோடேயே பனிமூடிய தரையில் விளையாடித் திரிகின்றீர். நீர்நாய்த்தோலைச் சுரண்டிவிட்டுக் கொழுப்பைத் தடவிக் கல்லாலுங் கட்டையாலும் அடித்துப் பதனிடுகிறீர்கள்.

அந்த மக்கள் அன்புடையவர்; கள்ளங்கபடறியாதவர்; காட்டுமிராண்டிகளேயல்லர். சில நாகரிகச் சின்னங்களும் உடையவரே. அவர்கள் வாழ்க்கையோ கடுமையானது; சீதோஷ்ண நிலையோ கொடுமையானது ஆயினும் அவை தாங்க முடியாதனவென்று அம் மக்கள் கருதியதாகத் தெரியவில்லை. குழந்தை வளர்ந்து வருகின்றது; அதனிடம் சில சூக்ஷ்ம சக்திகள் காணப்படுகின்றன. சிற்சில சமயங்களில் பல தோற்றங்கள் அதன் கண்ணுக்குத் தென்படுகின்றன. குளிர் காலங்களில் நெருப்பைச்சுற்றி யிருந்துகொண்டு அம் மக்கள் மந்த சுரமாகச் செய்யும் பாராயணங்களில் குழந்தை உவகையுடன் சேர்ந்து கொள்ளுகின்றது. அங்கு ஒரு வைத்திய மாந்தரிகன் (ஷாமான்) இருக்கிறான். அவன் ரோம அங்கியில் பலநிறப் பொருட்கள் பல தொடுக்கப்பட்டிருக்கின்றன. அவனிடமிருந்து நீர் சில பாக்களைக் கற்றுக்கொள்ளுகின்றீர். அவற்றின் பொருளை நீர் நன்கறியாவிட்டாலும், பிற்காலத்தில் அவை உமக்கு ஒரு மனநிம்மதியைக் கொடுக்கின்றன. இயற்கை வனப்பிலும், ஆகாயம் பூமி இவைகளில் ஏற்படும் மாறுதல்களிலும் நீர் இன்புறுவது உமது இனத்தாரில் அநேகமாய் யாரிடமுங் காணப்படாத ஒரு தனிக்குணம். கறுத்த கூந்தலுங் கண்களும், குள்ளமாய் உரத்துத்தடித்த உடலும், உவகை பூத்த உருண்டை முகமுமுடைய பெண்ணாக நீர் வளர்கின்றீர். பனி

மூடிய தரையில் ஸ்லெட்ஜ் வண்டியை யிழுக்கும்போதும் கடற் கரையில் ஒதுங்கிய மரக்கட்டைகளைப் பற்றும்போதும் உல்லாச மாக நீர் பாடிக்கொள்கிறீர். பனிக்காலத்தில் கால்கள் நீர் நாய்த் தோல்களால் வளையவளையச் சுற்றப்பட்டுத் துணி மூட்டைகள் போலக் காணப்படுகின்றன. ஸ்லெட்ஜ் வண்டிகள் எலும்புகளைச் சேர்த்துக் கட்டிச் செய்யப்பட்டிருக்கின்றன.

நீர் பெரியவளாகி மணஞ்செய்து கொள்கிறீர். ஆனால் நீர் விரும்பிய மனிதனையல்ல. இது கொஞ்சம் மன வருத்தத் தைக் கொடுத்தபோதிலும் குடும்ப வாழ்க்கை முறைப்படி நடைபெறுகின்றது. பல மக்களைப் பேணவேண்டிய பொறுப் பும் வந்து சேருகின்றது. உமது ஜாதியர் அனைவரும் மூட்டை முடிச்சுக்களையெல்லாம் பனிவண்டிகளிலேற்றி இழுத்துக் கொண்டு தெற்கு நோக்கிப் பயணமாகின்றனர். தேவதாரு மரங் கள் நிறைந்ததும் வேனிற்காலத்தில் உறைபனி இல்லாததுமான ஒரு நல்ல பிரதேசத்தை வந்தடைகின்றனர். உமது எஞ்சிய வாழ் நாட்கள் இங்கேயே கழிகின்றன. நீர் இறந்தபோது உமதுடம்பு உட்கார்ந்திருக்கும் பாவனையிலேயே புதைக்கப்படுகிறது.

பிறப்பு:	14746 கி. மு.	வயது 55 ஆண்டுகள்.
இறப்பு.	14691 கி. மு.	
மேலுலக வாழ்வு		653 ஆண்டுகள்.

5. வட அமெரிக்கா — பெண்

கி. மு. 14038—கி. மு. 13976

குறைந்தகால மேலுலக வாழ்க்கைக்குப் பின் திரும்பவும் பூமியில் வந்து பிறக்கின்றீர். பிறந்த இடம் முன்னைய இடத் திற்கும் தெற்காகும்: அஃதாவது இன்றைய அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தென்பாகத்தில் மெக்ஸிக்கோ குடாக்கட லுக்கு மேலுள்ள ஓர் இடம். அங்கு அன்றையக் கடற்கரை யமைப்பு வேறுவிதமாயிருக்கிறது; ஆழம் குறைவு; வளைவு களுஞ் சுருக்கம். அங்குள்ள பெரிய நதியும் அதன் கீழ்ப்பகுதி யில் வேறுவிதமாகவே காணப்படுகின்றது. இதற்குச் சற்று வடக்காக நீர் பிறக்கிறீர்.

உமது பெற்றோர் உண்ண உடுக்கக் குறைவில்லாதவர்: வேளாண் மக்களையொத்த மரபினர்; அந் நாட்டுப் பழங்குடி மக்களைச் சேர்ந்தவர். இவர்கள் வேறொரு செவ்விந்திய மக்க ளால் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் வென்றடக்கப்பட் டனர். வெல்லப்பட்டாலும், இவர்கள் அதிகமாக அல்லற்படுத்

தப்படவில்லை. ஆண்டுவரும் மக்களுக்குத் தாழ்ந்தவராய், ஒரு தனிப்பட்ட வகுப்பினராய் வாழ்ந்து வந்தனர்.

நீர் அழகான பெண்ணாகவே வாழ்ந்து வருகின்றீர்: படிப்பில் மிகுந்த ஊக்கமுடையவர். விசித்திரமான பகற்கனவு காண்பவர். நீர் படிக்கும் பழைய நூல் ஒரு நூதனமான சித்திர வரிவடிவத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு பகுதி புராணக் கதைகளையும், மற்றொரு பகுதி அறவுரைகள், பழமொழிகள், நீதி வாக்கியங்கள் ஆகிய இவற்றையுங் கொண்டது. உமது பதினாறும் வயதையொட்டி, உம்முடன் ஒரு வாலிபன் காணப்படுகின்றான். அவன் வனப்பும் வீரியமும் வாய்ந்த இளைஞன். விலையுயர்ந்த பலநிற இறகுகளால் அலங்கரிக்கப் பட்ட அங்கியும், இறக்கைத் தலைப்பாகையும் அணிந்திருக்கின்றான். அவன் உம் மக்களை வெற்றிகொண்ட உயர்குலத்தவன். அவனுடன் சம்பந்தம் செய்வது உசிதமாகாதென்று உமது பெற்றோர் எண்ணுவதால் அவனையவர் விரும்பவில்லை. ஆயினும் அச்சத்தினாலோ அல்லது கட்டாயத்தினாலோ உங்களுக்குள் மணம் நடக்கிறது. பலதார மணம் அந் நாட்டு வழக்கம் முந்திய மனைவி உமக்குச் சக்களத்தி யொருத்தி—வீட்டிலிருக்கின்றாள். இயற்கையாக அவள் உம்மை வெறுப்பதோடு, சமயம் வாய்க்கும் போதெல்லாம் உமக்கு இடைஞ்சலுண்டாக்குகின்றாள்.

உம் கணவனிடம் நீர் உள்ளன்புடையவர்: இவ்வன்பு கடைசி வரையில் நீடித்திருக்கின்றது. உம் கணவன் கெட்டவன் என்று கூறுவதற்கில்லை. அவன் ஒருநிலை யில்லாத தன்னலப் பிரியன். தன் திருப்திக்காகவும் வேண்டாத் தொல்லையை விலக்கவும் வேண்டி ஏவினபடி எந்த வழியிலும் நடப்பவன்: உமக்கு மூன்று குழந்தைகள் பிறந்திருக்கின்றன; எல்லாம் மிகுந்த அழகுடையவை. மூவரிலும் அழகன் மூத்தவன். கணவனையும் குழந்தைகளையும் மகிழ்விப்பதிலும் அவர்களுக்கு வேண்டுவன செய்வதிலும் நீர் ஈடுபட்டிருப்பதாய்த் தெரிகிறது.

சுமார் 21 அல்லது 22 வயதாகும்போது உமக்குத் துன்பம் தொடங்குகின்றது. ஏதோ உலக இலாபத்தை உத்தேசித்தோ, அல்லது நிலைத்த பற்றில்லாத இயற்கைக் குணத்தினாலோ உம் கணவன் திரும்பவும் மணந்துகொள்ள விரும்புகின்றான். ஆனால் அந் நாட்டு முறைப்படி ஒருவனுக்கு இரண்டு மனைவிகளுக்கு மேல் இருக்க இடமில்லை: முதல் மனைவிக்கோ தனிப்பட்ட உரிமை இருப்பதாகத் தெரிகின்றது: எனவே உம்மை நீக்கி விடத் தீர்மானிக்கின்றனர். உமது குழந்தைகளையாவது உமக்

குக் கொடுக்கும்படி நீர் மன்றாடிக் கெஞ்சுகின்றீர்: அதுவும் பலிக்கவில்லை. கடைசியாகப் பலவந்தமாக ஊரைவிட்டுத் துரத்தப்படுகின்றீர். மேடு பள்ளமான பெரும்வெளி வழியே பல நாட்களாகக் கொண்டுசென்று, நெடுந்தூரத்திற்கப்பாலுள்ள ஓர் ஊரில் உம்மை விட்டுவிடுகின்றார்கள். இங்கு நீர் உடல் நலம் அறவே கெட்டு மனமேங்கித் தவிக்கின்றீர்.

கடைசியில், உமது குழந்தைகளைக் காண வேண்டுமென்ற ஆசை அடக்க முடியாததாகின்றது. வழியில் வேண்டும் ஆகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு உம் கணவன் ஊருக்குப் புறப்படுகின்றீர். நீர் வந்தவழியே திரும்புவதற்கு ஏதோ இடைஞ்சலிருக்கின்றது. குடிதண்ணீர் வசதிக்குறைவோ அல்லது புல்வெளியில் தெளிவான பாதையின்மையோ அதற்குக் காரணம்; எனவே ஒரு சுற்றுவழியாக நடக்கவேண்டி வருகிறது. அதில் ஒரு பகுதி காட்டுப்பாதை. இவ் வழிநடை ஒரு மாதத்திற்குமேல் பிடிக்கிறது. அதனால் உணவுப் பொருள் தீர்ந்துபோகவே, பல நாள் காய் கிழங்குகளையுண்டு செல்லுகின்றீர். இவ்விதமாக நடையலுப்பு, உணவின்மை, வெயில், மழை, மனத்துன்பம், உடல் இளைப்பு எல்லாமாகச் சேர்ந்து, நீர் உம்முடைய பழைய ஊரையடுக்கும்போது உம்மை நோயில் தள்ளிவிடுகின்றது. அது நீங்கிப் பின் உமது குழந்தைகளைப் பார்க்க முயல்வதற்கு நெடுநாட்களாகின்றன.

மூன்றும் மனைவி உம்மைக்கண்டு விரட்டிவிடுகின்றாள்; பல சமயங்களிலும் இவ்வாறே நடைபெறுகின்றது. முடிவில் உம் கணவனைச் சந்திக்கின்றீர். அவனோ கடைசி மனைவியின் வலையிலிருக்கின்றான்; தொந்தரவை விரும்பாதவன்; அதனால் நீர் அங்கிருந்து திரும்பவும் விரட்டப்படுகின்றீர். ஊரருகாமையிலேயே நீர் தங்க முடியாதபடி ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதன்பின் நீர் பிறந்த ஊரை நோக்கிச் செல்லுகின்றீர். அங்கு உம் தாயோ தந்தையோ தென்படவில்லை. ஒரு வேளை இறந்து போயிருக்கலாம். இங்கே நீர் தங்கிவிடுகிறீர். ஆண்டுகள் கழிகின்றன. குழந்தைகளைத் தேடித்தேடி ஓயாத ஏக்கமும் அழுகையுமாயிருக்கின்றீர். கடுமையான நோயினால் அவதிப்படுகின்றீர். அது குணமடைந்தபின், நீர் சிறு பெண்ணாயிருக்கையில் படித்துவந்த நூலைத் திரும்பவும் எடுத்து மிகுதியாகக் கற்கின்றீர். அதிலுள்ள நீதி வாக்கியங்களிற் சில உம்மை மிகுதியுங் கவர்கின்றன. தனக்கு வருந்துன்பம் பிறர் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவேண்டும் என்பது போன்றபல நீதி மொழிகள் அதிற் காணப்படுகின்றன. அன்றுமுதல் நீர் அறப்பணிகளில் ஈடுபடுகின்றீர். கொடுப்பதற்கு அதிகமொன்று

மில்லையாயினும் நீர் வெறும் ஏழையாகவுங் காணப்படவில்லை; ஆனாலும் உமதுடைமை மிகச் சுருக்கமே. மற்றப்படி, துன்பமோ நோயோ காணுமிடங்களிலெல்லாம் நீர் துணை இருக்கின்றீர்; ஏழைமக்களிடையே குடியிருந்து அவர் களுடைய நன்மைக்கு இடைவிடாது பாடுபடுகின்றீர். எல்லோரும் உம்மை உயர்வாக மதித்துப் பெரிதும் போற்றுகின்றார்கள்; நீர் இறக்கும்போது ஒரு பெரிய மகானாகக்கூடக் கருதப் படுகிறீர்.

பிறப்பு : 14038 கி. மு.
இறப்பு : 13976 கி. மு. } வயது 62
மேலுலக வாழ்வு 1837 ஆண்டுகள்

6. பெரு — பெண்

கி. மு. 12089—கி. மு. 12004

சென்ற பிறப்பில் உமது அறவாழ்க்கையின் பயனாகவும், நீர் செய்த புண்ணியத்தின் பயனாகவும் நெடுங்காலம் சுவர்க்க இன்பம் அநுபவித்த பின், அதே அமெரிக்க நாட்டில் பழைய இடத்திற்குத் தெற்கில் திரும்பவும் பெண்ணாகவே வந்து பிறக்கின்றீர். [பிறந்த இடத்தைத் திட்டமாகக் கண்டு பிடிப்பதில் திரு. லெட்பீற்றருக்குக் கொஞ்சம் பிரயாசம் ஏற்படுகின்றது. ஆயினும் அவருக்கு இப் பிறப்பில் அறிமுகமான நாடாகவும் அது தோன்றுகிறது. சிறிது ஆராய்ச்சியின் பேரில், அது தென் அமெரிக்காவிலுள்ள பெரு என்ற தேசத்தில் கஸ்கோ என்ற நகரம் என்று கண்டு பிடிக்கிறார்.]

அமைப்பாலும், சீதோஷ்ண நிலையாலும் இது மனித வாழ்க்கைக்கு மிகவும் ஏற்ற இடம். இங்கு எல்லாம் ரமணீயமாயிருக்கின்றன. உத்தம அரசியல் முறை—அதற்கு ஈடு உலகில் எங்கும் நான் கண்டதில்லை. கள்ளங் கபடற்ற திருப்தி நிறைந்த மக்கள். இங்கு வறுமையில்லை; கொலை களவாதிய கொடுமையுமில்லை. அனைவருக்கும் போதிய உணவும் உடையுமுண்டு. உணவு, பழவகைகளும் ஒருவிதக் கோதுமையாற் செய்யப்பட்ட பல நிறங்கொண்ட பலகாரங்களுமே. உடைகள் சிறந்த தோற்றமும் அழகிய நிறங்களுங் கொண்டவை. நிறங்களில் ஒரு இளநீலம் மிகவும் அழகாயிருக்கின்றது. [அங்குள்ள மிருகங்களைப் பற்றி நான் விசாரித்தேன். ஒட்டகையினத்தைச் சார்ந்த "லாமா" என்னும் மிருகத்தின் முன்னோர் மந்தை மந்தையாக மலைகளில் காணப்படுகின்றன. அவற்றின் பால் மிகுதியும் உபயோகப்படுகின்றது. அவை பார்வைக்கு இன்றைய "லாமாக்

கள்" போலில்லை. சுமைதாங்கி மிருகங்கள்—ஒருவகை மிகப் பெரிய வெள்ளாடு—விநோதவடிவமான சும்மாடுகளைத் தூக்கிச் செல்லுகின்றன.]

உமது பெற்றோர் செல்வமும் செல்வாக்கு முடையவர். நீர் ஓர் அழகான பெண். நன்கு ஆதரிக்கப் படுகின்றீர். மிகக் கவனமாக வளர்க்கப்பட்டுக் கல்வி கற்பிக்கப்படுகின்றீர். உம்மைச்சுற்றி எப்போதும் இரண்டு வேலைக்காரர்கள் அலைகின்றார்கள் உமக்கு எல்லாக் கல்வித் துறைகளிலும் பாடங் கற்பிக்க ஆசிரியர்கள் வருகின்றனர். நீர் இயற்கையாகவே கல்வியில் மிகுந்த ஊக்கம் காட்டுகின்றீர். சங்கீதத்திலும் சித்திரக் கலையிலும் நல்ல திறமையுடையவரா யிருக்கின்றீர். பீங்கான்போல் தோன்றும் ஒருவகை மெல்லிய தகடுகளில் நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அத் தகடுகள் வளையக் கூடியவை; எழுத்துக்கள் வரையப்பட்டு உலையில் காய்ச்சப்படுகின்றன. இத் தகடுகள் 18 × 6 அங்குல அளவுடையனவாய்,ப்ளாற்றினத்தின் நிறமுடைய ஒருவகை உலோகத்தால் செய்யப்பட்ட ஐந்தங்குல உயரமுள்ள பெட்டிகளில் அடுக்கி வைக்கப்படுகின்றன. கொம்புகளில் செதுக்கப்பட்ட பூவேலைகள் இப்பெட்டிகளை அலங்கரிக்கின்றன; இவை ஆணிகளோ பசையோ இன்றி இப் பெட்டிகள்மீது இலைக்கப்படுகின்றன. இத் தகட்டுப் புத்தகங்கள் அகலத்தில் கோர்க்கப்படுகின்றன. எழுத்துவரி நீளப்போக்கில் அமைந்திருக்கின்றது. எழுத்துக்கள் சில இடங்களில் பளிச்சென்று விளங்கும் அழகிய வர்ணங்களால் தீட்டப் பட்டிருக்கின்றன. இவையன்றி வேறு குறைந்த அளவுள்ள நூல்களும் காணப்படுகின்றன. சில நூல்கள் உலோகத் தகட்டிலான அட்டைகளையுடையன.

நம் மடந்தை ஓவியமும் இசையும் பயிலுகின்றாள்; ஓவியக்கலையில் நல்ல ஆற்றலுடையவளா யிருக்கின்றாள். படமெழுதும் முறை புதுமாதிரியா யிருக்கின்றது. படத்தின் வரி வடிவத்தை முதலில் வரைவதாய்த் தெரியவில்லை. பதிலாகச் சித்திரத்தின் உடலே சாயத்தால் மிகத் திறமையாகத் தீட்டப்படுகின்றது. மிகுந்த பளபளப் புள்ள வர்ணப்பொடியை உடன் காயும் உபகரணத்தோடு அவசியம்போலக் கலந்து படம் தீட்டுகின்றனர். நாருடைய மரக்குச்சியின் நுனியை மயிர்போல மெதுவாகச் சதைத்து அதையே வர்ணந்தீட்டும் தூரிக்கோலாக (brush) உபயோகிக்கின்றனர். தூரிக் கோல்முனை முக்கோணவடிவுடையது. எனவே ஒருச்சாய்த்துப் பிடித்து மெல்லிய கோடுகள் வரைவதற்கும் அஃது உதவுகின்றது. நிறங்களில் ஊதாக்கள் உன்னதமாய் ஒளிர்கின்றன. இன்றைய ஊதா நிறங்கள் ஒன்றும் அவற்றிற் கிணையாகா. மிக அழகிய கருநீலமொன்றும்,

இளஞ் சிவப்பொன்றும் நடமாடுகின்றன. அவை போன்றவை இக் காலத்தில் காணப்படவில்லை. நிறங்களெல்லாம் ஆகாய வானத்தில் காணப்படும் நிறங்களைப்போல மின்னுகின்றன. அவற்றைத் தடவியபின் எளிதில் காயக்கூடிய மினுக்கெண்ணெய் (வார்னிஷ்) ஒன்றைத் தடவி விடுகிறார்கள். இதனால் படம் கேடின்றித் தண்ணீரால் கழுவப்படக் கூடியதாகின்றது.

நம் மங்கை தன் வேலைப்பாட்டில், முக்கியமாக வானத்தைச் சித்திரிக்கும் வன்மையில், நன்கு திருப்தியுறவில்லை. அதில் தேர்ச்சிபெற மிகக் கவனமாய் உழைக்கின்றாள். கட்டிடங்களும், மற்றப் பொருட்களும் நிறத்திலும் தோற்றத்திலும் இயற்கைப் பொருட்களைப்போலத் தோன்றுமாறு வரையப்படுகின்றன. இவ் விஷயத்தில், இன்று நமக்கு அறிமுகமாயுள்ள பண்டைய அமெரிக்கக் கலைப்பொருட்களைவிட இவை மிக உயர்ந்தனவாகவே விளங்குகின்றன. சில சமயங்களில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பொடிகளால் பளப்பளப்பான ரேக்கு எழுத்துக்கள் எழுதுகின்றாள். இவற்றில் சிவந்த செம்புநிறமொன்று மிக நேர்த்தியாயிருக்கின்றது.

தங்கமும் வெள்ளியும் நவரத்தினங்களும் எங்கும் அபரிமிதமாய் நடமாடுகின்றன. உமது வீடு வார்ப்புவேலைகள், கடைசல் வேலைகள் மற்றும் அலங்காரங்கள் இவைகளால் கண்கொள்ளாக் காட்சியாயிருக்கின்றது. ஆலயங்கள் பிரம்மாண்டமாயிருக்கின்றன. ஆனால் நீள அகலத்திற் கேற்றபடி உயரமில்லை. அவற்றின் பல பாகங்கள் உயர்ந்த மாற்றுத் தங்கத் தகடுகளால் பொதியப்பட்டிருக்கின்றன. அரைக்காலங்குலங் கனமுள்ள தங்கத் தகடு வேய்ந்த பூவேலைகளும் சுவரை அலங்கரிக்கின்றன. உமது மேனி இளஞ்சிவப்புத் தவிட்டு நிறமாயிருக்கின்றது. கன்னத்தில் சிறிது கூடுதல் சிவப்பு. நீரும் உம் மூத்த மகனும் ஒரே முகச்சாயல் உடையவர்கள். நீர் நல்ல மனமும் அன்பும் உடையவர். உம் தங்கையொருத்தியிடம் மிகுந்த பக்ஷமாயிருக்கின்றீர்.

நீர் பிறந்திருப்பது அத்லாந்தியரின் மூன்றாவது கிளையான தால்த்தக்கிய ஜாதியில். அங்குள்ள மக்கள் உம்மைவிடச் சற்றுக் கறுத்தவர். அதிலும் ஆண் மக்கள் கொஞ்சங் கூடுதல் கறுப்பு. நீர் பலவிதமான பிராணிகளைச் செல்வமாக வளர்க்கின்றீர். அவற்றுள் அற்புதமானது உமது பூனைக் கூட்டம். அவை நீண்ட உரோமங்களையும் பலவித நிறங்களையுமுடையவை. முற்றும் ஊதா நிறத்தில் ஒன்று; ஏகதேசம் சிவப்பானதொன்று; அன்றி மஞ்சள், ஆரஞ்சு முதலிய நிறங்களிலுஞ் சில. உம்மிடம் அபூர்வமான பறவைக் கூட்டமும் இருக்கின்றது. அவற்றின் கூடுகள்

கட்டித் தங்கக் கம்பிகளாலானவை. அநேகம் பறவைகள் நான் பார்த்திராதவை. கண் கவரும் நிறங்களுடையவை. மணியோசை யிடும் "காம்பனிரோ" போன்ற வெள்ளைப் புறுவொன்று எனக்குத் தெரிந்தது. பூனைகள் உயர்ந்த நாகரிகமொன்றின் உச்ச நிலையில் எதிர்பார்க்கப் படுவதற் கேற்றவாறு அமைந்திருக்கின்றன. அவை, வீட்டுப் பிராணிகளையும் பறவைகளையும் வெவ்வேறு இனங்களாகப் பிணைத்தும் இணைத்தும் புதிய இனங்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டும் நீண்ட கால அளவை அறிவிப்பன.

ஆண்டுகள் கழிகின்றன. நீர் உமது பந்துக்களுள் ஓர் அழகிய குமாரனை மணந்து கொள்ளுகின்றீர். அவன் உம் தகப்பன் இறந்ததும், அவர் பார்த்து வந்த அதிபதி வேலையை யேற்று வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வைக்கின்றான். அங்குக் கொடுங் குற்றங்கள் இல்லாமையால் சமூகக் கட்டுப்பாட்டைத் தவிர வேறு தண்டனை யென்பதே இல்லை.

சங்கீதத்தில் அம் மக்களின் சுரவரிசை நம்முடையதைப் போல் அமைக்கப்படவில்லை. ஆயினுமது செவிக்கின்பமாயிருக்கிறது. இசைக் கருவி ஹார்மோனியத்தில் ஒருவகை போன்றது. நாதம் உலோகத் தகடுகளின் சலனத்தால் உண்டாகிறது. சுருதிக்கட்டைகள், விரலால் அழுத்தப்படும் உலோகத் தகடுகள்.

உமது வாழ்க்கை மிக இன்பகரமாகவே நடைபெறுகின்றது. உம் கணவர் செய்யும் எல்லா வேலைகளிலும்—உத்தியோக நிமித்தமாகப் பங்கெடுத்துக் கொள்ளும் சமய சம்பந்தமான கிரியைகளிலும் அரசியல் சம்பந்தமான கிரியைகளிலும்—நீர் சேர்ந்துழைக்கின்றீர். உமக்கு மணமாகிப் பன்னிரண்டு வருஷங் கழிந்தபோதிலும், நீர் முன்னைய இளமைத் தோற்றத்தை இழக்கவில்லை. உம் கணவர் சிறிது வயதானவராய், சாந்தமுடையவராகக் காணப்படுகின்றார்.

அந் நாட்டு மதம் சூரியமூர்த்தி வணக்கம். "அவரே அனைத்தையும் அளிப்பவர். அவரிடமிருந்தே அனைத்தும் வருகின்றன" என்பது அதன் கொள்கை. இறைவனே தேவையறிந்து ஈவார் என்ற நம்பிக்கை இருந்தபடியால், அம் மதத்தில் புகழ்மாலை தவிரப் பிரார்த்தனைகள் ஏதுமில்லை. மரணத்தின் பின்னும் ஒரு வாழ்வுண்டென நம்பப்பட்டது. இறப்பு உயர் வாழ்க்கைக் கொருபடியென்றும், இறந்தவர்க்கழுவது இறைவன் மனத்தைப் புண்படுத்துவதென்றுங் கருதப்பட்டது. இறைவனுக்கு "இண்ட்டி" என்று பெயர். மக்கள் தம்மை "இண்ட்டிப் கூரி"—"ஆரிய புத்திரர்"—என்றழைத்தனர். ஜனங்கள்

"அரசன் மக்கள்" என்றும் அழைக்கப்பட்டனர். அவ்விதம் நடத்தவும் பட்டனர்.

உம் கணவரும் நீரும் எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டும் நேசிக்கப்பட்டும் வாழ்கின்றீர்கள். மக்களது நன்மையைக் கருது வதிலேயே உங்கள் வாழ்நாள் கழிகின்றது. பிற்காலத்தில் நீர் பாட்டுப் பயிலுவதாகவோ படமெழுதுவதாகவோ தெரியவில்லை. ஆனல், மிகமிக வாசிக்கின்றீர். உமக்கு முன்னதாகவே உம் தங்கை முதிய வயதில் இறந்து போகின்றாள். அவளும் இன்ப கரமாகவே வாழ்ந்திருந்தனள். உம் கணவரது உத்தியோக காலத்தில் பெரிய இடையூறான பூமியதிர்ச்சி யொன்று நேர, அதனல் பெருவாரியான மக்கள் விடுவாசலற்றுத் தவிக்கின்ற னர். மிகுந்த ஊக்கத்தோடும் இதை நிவர்த்திக்க நீங்கள் இரு வரும் பாடுபடுகின்றீர்கள். அச் சமயத்தில் அம் மக்களனை வருக்கும் உண்டியும் உறையுளும் உதவி எல்லாம் ஒழுங்காகிற வரை அவர்கள் எல்லோரையும் ஆதரிக்கின்றீர். நீரும் உம் கணவரும் என்றும் இணைபிரியாது ஒருவருக்கொருவர் மிகுந்த பற்றுதலுடன் நீண்ட காலம் வாழ்கின்றீர்கள். அவர் இறந்த அன்றே நீரும் இறந்து போகின்றீர். இறந்ததும் புவர் லோகத் தில் சற்றுந் தாமதியாமல், நேரே சொர்க்கலோகஞ் சென்று, அங்குப் பன்னெடுங்காலம் இன்பந்துய்க்கின்றீர். இதைவிட மேலான பிறப்பு உமக்கு வாய்க்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. இஃது எல்லாவிதத்திலும் பூரணமான பிறப பென்றே தோன்றுகிறது. [இங்கு ரோகிணி 13-வது பிறப்பை நோக்குக. (பக்கம்-99) அங்கு இருவரும் ஏககாலத்தினர்.]

பிறப்பு: 12089 கி. மு.
இறப்பு: 12004 கி. மு. } வயது 85

மேலுலக வாழ்வு 2367 ஆண்டுகள்.

குறிப்புகள்: கணவன் — மணிரங்கு (இன்றைய 20-வது நூற் றாண்டு மனைவி).

7. சீனதேசம்—பெண்

கி. மு. 9637—கி. மு. 9625

பின்னும் பெண்ணாய் நீர் பிறக்கின்றீர்: இத் தடவை அது மத்திய சீனவில். இங்குள்ள மக்கள் அறிவற்ற, கடினமான ஒழுக்கமுடையவர். அளவிகந்த கட்டுப்பாடுடையவர்; அன்றே பழமையான நாகரிகமுடையவர்; நெறிவழி நிற்பவர்; பழக்க வழக்கத்தினின்றும் பிறழ்விக்க முடியாதவர்; பொதுவாக நல்ல வர்; சாந்தகுணமுடையவர்; நல்லெண்ணமே நிறைந்தவர்.

நீர் கல்வியில் கருத்துள்ளவராய்க் காணப்படுகின்றீர். கல்வி கற்பிக்கவும்படுகின்றீர். முற்காலப் படவெழுத்துக்களுக்கும், இக் காலச் சீன எழுத்துக்களுக்கும் இடையிலுள்ள ஒரு வித வரிவடிவங்களால் புத்தகங்கள் எழுதப்படுகின்றன. புத்தகமெழுதக் காகிதம் உபயோகிக்கப்படுகின்றது. மக்கள் பழைய துரானிய வம்சத்தவர்.

உமது குடும்பத்தார் செல்வமுடையவர்; உம்மைச் செவ்வனே வளர்க்கின்றார்கள். பன்னிரண்டாம் வயதில் நீர் பரந்த முகமும், விநோதப் பார்வையும் உள்ள மகிழ்மகவாயிருக்கின்றீர். எனினும் நீர் நோயுற்று இறந்துபோகின்றீர். புவர்லோக வாழ்வு மிகச் சுருக்கமானது. சுவர்க்க லோகத்தையும் எட்டிப் பார்க்கின்றீர்.

பிறப்பு: 9637 கி. மு. }
இறப்பு: 9625 கி. மு. } வயது 12

மேலுலக வாழ்வு 22 ஆண்டுகள்.

8. போஸிதானிஸ் தீவு—பெண்

கி. மு. 9603—கி. மு. 9565

இதன் பின் சீனாவிலிருந்து கடல்வழி வெகுதூரமுள்ள ஒரு மலை நாடான திபகற்பத்தில் நீர் தோன்றுகின்றீர். உமது நாட்டினர் வெள்ளையர்; உமது குடும்பம் உயர்ந்தது; உம் தந்தை ஒரு தலைவர். வேட்டை, மீன் பிடித்தல், மலையேறுதல் இவற்றைத் தொழிலாகக் கொண்டவரும் நீண்ட கரிய மூக்குடையவருமான வீர மக்களிடையே, நீர் மீண்டும் ஒரு பெண்ணாகவே பிறந்து, வலிவும் வனப்பும் சுறுசுறுப்புமுள்ள ஒரு மங்கையாக வளர்ந்து வருகின்றீர். செமித்தியர், ஆரியர் என்ற இரு கிளை மக்களுந் தோன்றிய வெள்ளை அத்லாந்திய வம்சத்தைச் சேர்ந்தவர் நீர். இவ் வம்சத்தவர் செந்நிறத் தால்த்தக்கிய மக்களால் வெல்லப்பட்டு, மலைநாட்டிற்குத் துரத்தப்பட்டவர். இது போஸிதானிஸ் என்ற நாட்டின் வடவெல்லை. இங்குள்ள மலைகள் இன்று உலகிலுள்ள மலைகள் யாவற்றிலும் உயர்ந்தவை.

இங்கு நீர் மடந்தைப் பருவம் வரை அஞ்சாத நீச்சாளியாக வளர்ந்து வருகின்றீர். (இது நீச்சுப்பழக்கம்—உமது தனிக் குணம்போற்றோன்றுகிறது.) உடன் பிறந்தோருடன் வேட்டையாடுவதும் மீன் பிடிப்பதுமாகக் கவலையற்று ஓடித் திரிகின்றீர். தெற்கேயுள்ள அத்லாந்திய மாநகரும், நாடும் இப் பிரதேசத்தை யடைய வெகுநாட்களாகவே ஆசையுற்றிருந்தது. தம்மைவிட

எண்ணிக்கையாற் குறைந்த இவ் வீரமக்களுடன் அத்லாந்திய நகரமக்கள் ஓயாது போரிட்டு வருகின்றனர். இங்குள்ள அசாதாரண உலோகச் செல்வமே இதற்குக் காரணம்.

கடைசியாக உமக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கும்போது, தெற்கேயுள்ள கீழ்நாட்டு மக்களால் உமது ஜாதியினர் தோற்கடிக்கப்படுகின்றனர். கையில் கிடைத்த ஒவ்வொரு மனிதனுங் கொல்லப்படுகின்முன். உமது குடும்பத்தினர் எல்லோரும் மடிகின்றனர்; நீர் போஷிதானிஸ் என்ற மாநகருக்குச் சிறையெடுத்துச் செல்லப்படுகின்றீர்.

நீர் முன்னொருகால் அங்குப் பிறந்ததற்குப் பின் எல்லாம் வர வர மோசமாகி வந்துள்ளது. தீக்குணம் வெற்றிக்கொடி நாட்டியது; நேர்மையென்ற எண்ணமும் அறியப்படாதிருந்தது; தீவினை தலைவிரித்தாடியது. போஷிதானிஸ் தன்னிறுதிக் காலத்தை யெட்டிக்கொண்டிருந்தது. மன்னர் முற்றுங் கொடியராய் மாயாமந்திரங்கள் பலவற்றையுங் கையாண்டனர். கொடுமையுங் கொடுங்கோன்மையும் எங்கும் நிறைந்துள்ளன. நீர் ஒரு செல்வந்தனால் விலைக்கு வாங்கப்படுகின்றீர். உமது பிறப்பின் பெருமையால் அக் குடும்பத்தில் நன்ருய் நடத்தப்படுகின்றீர். அக் குடும்பத் தலைவரின் மகன் உம்மீது காதல் கொண்டு உம்மை மணக்கின்முன். கடுமையும் இழிவுமுற்ற அடிமை நிலையில் வைக்காமல் அதனின்றும் மீட்டதற்காக நீர் அவனிடம் நன்றியுள்ளவளாயிருக்கின்றீர். உம் கணவன் கெட்டவன் என்று சொல்வதற்கில்லை. அவன் நிலையற்றவன்; தன்னலமிகுந்தவன்; செல்வந்தன்; சோம்பேறி; கருணையற்ற காரியங்களைத் தானே செய்பவனல்லன்; ஏதோ ஒருமாதிரி தாராள மனப்பான்மையுடையவன். உதாரணமாக, உமக்கு அந் நகரம் அணுவளவும் பிடிக்கவில்லை யென்றும், உங்கள் மலைத் தென்றலுக்காய் நீர் ஏங்குகின்றீர் என்றுங் கண்டு உம்மைக் குன்றுகளுக்கிடையே யுள்ள தனது கிராம வீட்டில் வசிக்க அழைத்துச் செல்லுகின்முன். அங்கு அனைத்தும் அபாரமாய் அமைந்திருக்கின்றன. ஆனால் தோட்டங்களும், நிலத்தோற்றமுஞ் செயற்கை முறையால் அமைக்கப்பட்டிருந்தமையால் நீர் நகரத்தைவிட அவை சிறிதுஞ் சிறந்தவையல்லவென்று எண்ணுகின்றீர்.

காலப்போக்கிலும் உம் கணவன் குணம் திருந்தவில்லை; அவன் காமநெறியில் காலங்கழிக்கலானான்; உமக்குச் சிறிதும் பிடிக்காத மக்கள் பலரும் அவனைச் சூழ்ந்திருந்தனர். குடிப்பதாலும், போதை மருந்துகள் உண்பதாலும் விரைவில் ஊதிப் பருத்தான். இதன் பின் உமக்கு அவனிடம் மதிப்பொன்றும்

இல்லாதிருந்தது. எனினும் ஒருவகை நன்றியும் அன்புமே உங்களிருவரையும் பின்னும் பிணைத்திருந்தன நாளடைவில் அவன் மந்திர தந்திரங்களையும் மேற்கொண்டான்-பலவித மாயா மந்திரங்கள் அங்குப் பெருவாரியான மக்களிடையே பழக்கத்தி லிருந்தன; அவை எல்லோருக்குமே ஒருவாறு தெரிந்திருந்தன. மிகச் சிறுதொகைக்கும் இவற்றைக் கற்பிக்க வல்லோர் எங்கும் நிறைந்திருந்தனர். எனவே ஓர் ஆசானைக் கண்டுபிடிப்பதில் கஷ்டமொன்றும் இல்லாதிருந்தது.

ஏறக்குறைய இக் காலத்தில் வெண்முடியுந் தாடியுமுடைய முதியவரொருவர் உம்மைக் காணவருகின்றார். அவர் உங்கள் ஜாதியில் ஒருவகைப் பூசாரி அல்லது சோதிடராயிருந்தவர்; முன்னைய படுகொலையினின்றுந் தப்பியவர். உங்கள் ஜாதி மக்கள் அனைவரினும் உயிரோடிருப்பவள் நீர் ஒருத்தியே. உம் மிடம் அந் நாடு சீக்கிரத்தில் அழியப்போவதாய் அறிந்ததாகக் கூறுகின்றார். அங்குள்ள அட்டூழியத்தை இழித்துரைக்கின்றார்; கண்டிக்கின்றார். நீர் அவர் கூறுவதைக் கேட்கின்றீர்; அவரை நம்புகின்றீர். சமயமுள்ளபோதே அந் நாட்டைவிட்டகலும்படி எச்சரிக்கின்றார். இதை நீர் உம் கணவனிடங் கூறுகின்றீர். இவ் வெச்சரிக்கையால் அவன் நாட்டைவிட்டகல வேண்டுமென்று எல்லா வழியிலும் எடுத்துரைக்கின்றீர். ஆனால் அவனோ இது கேட்டு எள்ளி நகைக்கின்றான். "அம் முதியவனுக்குப் பைத்தியம். ஏதோ காரியமாக உன்னைப் பயமுறுத்துகின்றான்," என்றுகூறி ஒன்றிற்கும் செவி சாய்க்கின்றானில்லை. கணவன் தனியே அழியுமாறுவிட்டுச் செல்ல உமக்குப் பிரியமில்லை. இறுதிவரையிலும் அவனுடனேயே இருக்கத் தீர்மானிக்கின்றீர்; பேரழிவு வந்து அவனுடன் இறக்கும்வரை காத்திருக்க வெண்ணுகின்றீர்.

அப் பயங்கர நாளும் வந்தது. போஸிதானிஸின் அழிவு பெரும் பயங்கரமாயிருக்கின்றது. ஒரு பெரும் பகுதியான நிலம் பட்டென்று பாதாளம்வரைப் பாய்கின்றது; கடல் பொங்கி நிறைகின்றது; மாபெரும் அலையொன்று மண்ணை விழுங்கு கின்றது; நிலந் தாழ்ந்துகொண்டே யிருக்கின்றது; மிகுந் திருந்த பகுதி முழுதுங் கரைந்துருகிப் போவது போலத் தோன்றுகின்றது. எங்கெல்லாம் மரக்கலங்கள் அழிவுறு திருந்தனவோ அங்கெல்லாம் மக்கள் அவற்றிலேறினர்; ஆனால் தண்ணீர்க் கொந்தளிப்பினால் அனைவரும் அழிந்தனர். மிகப் பெரிய மலையுச்சிக்கும் பனிபடர்ந்த பாகங்களுக்கும் ஓடிய ஒரு சிலர் உயிர்தப்பினர். இவ்வழிவு முழுவதும் சுமார் இரு பத்திநான்குமணி நேரத்திற்கதிகம் நீடிக்கவில்லை. ஆனால் நிலந்

தாழ்வது முற்றும் நிற்பதற்கும், நீர்க்கொந்தளிப்படங்குவதற்கும் நூறுண்டுகளுக்கு மேலாயிற்று. இது 11,458 ஆண்டுகளுக்குமுன் நடந்தது; இங்ஙனமாக உமதுஇவ் வாழ்வு முடிந்தது. [இங்கு ரோகிணியின் 15-வது பிறப்பை (பக்கம் 105) நோக்குக. இருவரும் அங்கு ஏககாலத்தவர்.]

பிறப்பு : 9603 கி. மு.
இறப்பு : 9564 கி. மு. } வயது 39 ஆண்டுகள்

மேலுலகவாழ்வு : 995 ஆண்டுகள்.

குறிப்புகள் : விலைக்கு வாங்கிய சீமான் (மாமன்) } ஆயிலியன்
கணவன் - செவ்வாய்.

திருவாதிரையின் முதல் எட்டுப் பிறப்புக்கள்

ஒரு மதிப்புரை

(C. W. லெட்பீற்றர்)

இப் பிறப்பின் இறுதியோடு திருவாதிரையின் ஆத்மவளர்ச்சியின் அம்சமொன்று அணிவுற அமைந்ததெனத் தோற்றுகிறது. ஓர்வித வளர்ச்சிச் சோதனையின் வெற்றியை இதில் நாம் காண்கின்றோம். கால்டியாவிலுள்ள முந்திய பிறப்பில் அவரது சூழ்நிலை நல்வாழ்க்கைக்கு எல்லா வகையிலும் ஏற்றதாயமைந்திருந்தது. மறையவர் மரபிலே பிறந்தார்; ஒழுக்கஞ் சிறந்த உத்தமரிடையே உலவினர்; செவ்விய நடையினைச் செகத்தோர் அவரிடம் எதிர்பார்த்தனர்; எவ்வகையிலும் இந்நெறியே எளிதமையும் நெறியாக்கப்பட்டது. பெரிதும் நெறிபிறழ்வது பிரயாசமாயிருந்திருக்கும்; அதற்குத் தீநெறியொழுக்கத்திண்மை யொன்று வேண்டியிருந்திருக்கும். ஆனல் நல்வசமாக நம் ஆதிரைக்கு அத் திண்மையில்லை. எனவே விதிவசத்தால் விழுமியவராயிருந்தார்.

இப் பிறப்பில் பயிற்றிய நன்னெறி இரண்டாம் பிறப்பில் சோதிக்கப்படுவதைக் காணலாம். இங்குள்ள சுற்றுப் போக்கு முந்தியதைப்போல் முற்றுமியைந்ததல்ல. இதையெதிர்க்கு மாற்றல் ஆதிரைக்கிருந்ததா? ஆம்; இருந்தது. இக் கடுஞ் சோதனையில் அவர் வெற்றிபெற்ருர். அதனுல் அவர் ஆத்மசக்தியதிகரித்தது.

மூன்ரும் பிறப்பிலோ முந்தியதிலுங் கடிய சோதனை காத்திருந்தது. எவ்வகையிலும் இழிநிலையெய்திய ஒரு நாகரிகத்திடையே அவர் அமிழ்த்தப்பட்டார். இந்நிலையில் நல்வாழ்க்கை

நடத்துவது, கால்டியாவில் மறையவராய் முறைதவறி வாழ் வதினுங் கடினமாகும். இவ்வாழ்வு நடத்துவதற்கேற்ற பலம் இவருக்கில்லை. சூழ்வினைக்கடிமையாகி, சூழ்ந்திருந்தோர் வாழ்ந்த விதம் வாழ்க்கை நடத்தினர். அவர்களுக்கது இயற்கையோ டியைந்ததாகவே இருந்திருக்கலாம். ஆனால் இதனினுஞ் சாலச் சிறந்த நெறியொன்றில் நின்றிருந்த இவருக்கு அஃது எத் துணையுந் தக்கதல்ல.

எனவே மறுபிறப்பில் மகிழ்ச்சிசிலை தெற்றெனத் தாழ்ந்தது. இப் பிறப்பில் சிறிதளவு உடல்நலிவு முண்டாயிருந்தது. இதனல் மிகுந்திருந்த வினைக்கடன் சிறிது கழிந்தது; இவரது உள்ளத் திண்மையு முயர்ந்தது. இதற்கடுத்த பிறப்பிலோ, இவருக்கு மிகுந்த உளத்துயரும் உணர்ச்சி நலிவுமுண்டாயிருந்தன. எல்லா வற்றையு மெண்ணும்பொழுது, இவற்றையவர் சீரிய முறையில் செவ்வனே பொறுத்துத் தெளிவுந் திண்மமும் பெற்றுயர்ந்தார்.

புதிதாய்ப்பெற்ற இச் சக்திகளை வாழ்க்கையில் உபயோகிக்க வசதி யளித்தது பெருநாட்டுப் பிறப்பு. இங்கவை இதனல் பின் னும் பெருகியதோடன்றிப் பழக்கத்துடன் பிணைத்துப் பயிற்றவும்பட்டன. எனவே நன்முறையில் உந்தித்தள்ளுமோர் உணர்ச்சியுமுண்டாயிற்று. இதன்பின் பெயரளவிலே பிறந்த பினப் பிறப்பில் எதிர்பார்த்தவற்றையும் இசைவுடன் முடித்த தும், மூன்றும் பிறப்பில் முற்றுந் தோற்றவப் போஸிதானிஸ் நகருக்கே பின்னும் வந்தார்; அப் பயங்கரச் சோதனையில் வெற்றியுற மற்றுமொருமுறையு முயன்றார்.

ஆனல் இவ்விரண்டு முயற்சிகட்குமிடையே கழிந்த பிறப்புக்கள் வீணய்க் கழிக்கப்படவில்லை; அவற்றின் பயனய் அவர் இத் தடவை வெற்றிபெற்றார்; மாபெரும் வெற்றி பெற்றார். புல்லியரிடையே நல்லதோர் வாழ்க்கை நடத்தியது மன்றி அளவிகந்த கடமையுணர்ச்சிக்கு அவ் வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்தார். இவ்வாருகப் பரிணம முறையின் நோக்கம் நிறைவேறியது. எனவே யவர் இனியொரு குணத்தினை இசைவுடனமைக்க ஏற்றவரானர்.

9. எற்ரூரியா—பெண்

கி. மு. 8569—கி. மு. 8510

இப் பிறப்பும் பெண் பிறப்பே. இத் தடவை எற்ரூரியாவில் பிறந்திருக்கின்றர். உமது பெற்றோர் வளம்பெற்ற வேளாண் மையர்; ஆடம்பரமற்ற சௌகரியமான வாழ்க்கை நடத்துபவர்.

உமக்கு சித்திரச் சுவையுண்டு. நெசவுத் தொழிலிலும், அதைப் போன்ற வேறு வேலைகளிலும் திறம்பட நிறங்களைப் பிணைப்பதில் உமது சித்திரச் சுவை வெளிப்படுகின்றது. அவற்றை வாங்க அநேகர் தேடிவருகின்றனர். திராக்ஷைக் கொடி வளர்ப்பது முக்கிய தொழிலெனத் தோன்றுகிறது. எங்கும் திராக்ஷைக் கொடி மயமே. இருபுறம் கைப்பிடி யமைந்த, பல உருவங்களை யுடைய ஜாடிகளும் முக்கியமாய்க் காணப்படுகின்றன.

பக்கத்தில் இம் மரபினரின் பழங்காலக் கோவில்கள் இருக்கின்றன; அவை பிரம்மாண்டமானவை. இவற்றின் பாழ்ச் சின்னங்களையே "ஸைக்லோப்பியன்," சிற்பக் கலையைச் சேர்ந்தவையென்று இன்று வழங்குகின்றோம். இங்குள்ள மக்கள் போர்க்குணமற்றவர்; அன்பு நிறைந்தவர்.

உமது வாழ்க்கை விசேஷ நிகழ்ச்சிகள் அற்றதாயிருக்கின்றது. நீர் வளர்ந்து, மணந்து, பிள்ளைகளைப் பெற்றுப் பேணுகின்றீர். நீர் ஒரு சிறந்த பச்சிலை மருத்துவர். பூக்கள், செடிகள், அவற்றின் தன்மை இவைகளைப்பற்றி நீர் நன்கறிந்திருக்கின்றீர். எனவே, நோய்க்காலங்களில் பலரும் உம்மை வேண்டி நிற்கின்றனர். நீர் நல்லவர்; அக்கம்பக்கத்தோடமைந்தொழுகுபவர்; ஊரோடொத்துவாழ்பவர்; நன்மையே நல்குபவர். இங்ஙனமாக நெடுங்காலம் வாழ்ந்திருக்கின்றீர்.

பிறப்பு: 8569 கி. மு. } வயது 59 ஆண்டுகள்
இறப்பு: 8510 கி. மு. }
மேலுலக வாழ்வு 1053 ஆண்டுகள்

10. ஜப்பான் — பெண்

கி. மு. 7457—கி. மு. 7392

இதற்கடுத்த பிறப்பு சுமார் 9000 ஆண்டுகளுக்கு முந்தியது; பிறப்பிடமோ போஸிதானிஸ் நாட்டின் அழிவால் பாதிக்கப்பட்டதோர் தீவு, இது ஜப்பானுக்குரியதாயிருக்கின்றது. இங்குள்ள மக்கள் உருவத்தில் தற்கால ஜப்பானிய மக்களைப்போல் தோன்றவில்லை. "எயினோ" வம்சத்தைச் சேர்ந்த பலரும் இவர்களிடையே இருக்கின்றனர். இவர்களுக்கு உருண்டை முகம்; இருண்ட முடி; கரிய கண்கள். இம் மக்கள் போதுமென்ற மனத்தினராய், இன்னலிழையாத் தன்மையராய், இன்பமுடன் நல்லதோர் வாழ்க்கை நடத்திவந்தனர்.

இம் மக்களது மதம் எதுவென்று தெளிவாய்த் தெரியவில்லை. மதத்தைப் பற்றி இவர்களிடையே தெளிந்தவோர்

தேற்றமிருப்பதாய்த் தோன்றவில்லை. ஆனால் ஆலயங்கள் அநேக மிருக்கின்றன. பூசாரிகளுங் காணப்படுகின்றனர். நெடுங்கால மாகவே இந்நாடு அமைதியான வாழ்க்கையை அனுபவித்து வந்திருக்கின்றதென்பதற்கு ஏற்ற அடையாளங்களிருக்கின்றன.

உமது வாழ்க்கை சாதாரணமானது. உமக்கு மணஞ்செய்ய வேண்டுமென்ற மனப்போக்கில்லை. எனினும், மணந்து மகிழ் வுஞ் சாந்தமும் நிறைந்தவோர் நல்வாழ்க்கை நடத்துகின்றீர். மக்களைப் போற்றிப்பேணுகின்றீர். அவர்களிடம் அன்பும் ஆதரவுங்காட்டுகின்றீர்.

நீர் பக்திமான், சித்திர வேலையில் சிறந்தவர். நீர் பட்டில் வரையுஞ் சித்திரங்கள் மிக நேர்த்தியானவை. அடிக்கடி ஆலயங்களுக்கு அலங்காரத்திரை வரைவதில் ஈடுபட்டிருக் கின்றீர். இவற்றில் ஒரு தனி நிகழ்ச்சியையோ, தோற்றத் தையோ வரைவதில்லை மனம்போனபடி கையெழுதியது. ஏதோ அழகும் அலங்காரமுமமைந்ததாயிருக்க வேண்டுமென்று மாத்திரமே யெண்ணுகின்றீர். இதன் விளைவு திருப்திகர மாகவும்; மனமகிழ்வளிப்பதாகவும் உள்ளது. உமக்குப் புத்த கங்களின்மேல் பெரும் பிரியம்; நீர் படிக்கின்றீர். மதசம்பந்த மான அப்பியாசங்களில் அதிகச் சிரத்தையெடுக்கின்றீர்.

கணவனிறந்தபின் நீர் ஆலய வேலையில் ஈடுபடுகின்றீர்; ஆலயங்களை அலங்கரிப்பதில் உமது காலங்கழிகின்றது. வாழ் வில் எஞ்சிய பாகம் படிப்பதிலும், படமெழுதுவதிலும் மக்களைப் பேணுவதிலுங் கழிகின்றது. பரபரப்பற்ற, சாந்தமான பிறப்பே யாயினும், இப் பிறப்பு பெரிதும் பயன்பட்டதே.

பிறப்பு : 7457 கி. மு.
இறப்பு : 7392 கி. மு. } வயது 65 ஆண்டுகள்
மேலுலக வாழ்வு 1513 ஆண்டுகள்

11. எகிப்து — ஆண்

கி. மு. 5879—கி. மு. 5804

இதற்கடுத்த பிறப்பு நீலநதியின் முகத்துவாரத்தினருகி லுள்ள ஒரு பெரும் பட்டணத்திலாகும். அப் பட்டணத்தின் பெரும்பாகமும் நதியின் மேற்குக் கரையிலிருக்கின்றது. இங்கே தான் விசாலமான கோவில்களும் பொதுக் கட்டிடங்களும் காணப்படுகின்றன. அதற்கு எதிர் கரையிலும் ஒரு நகரமுண்டு. அது நதியின் போக்குவாக்கிலேயே அமைந்திருக்கின்றது. அடுத் துள்ள ஒரு குன்றின் அடிவாரம்வரை பரந்திருக்கின்றது. குன்றி

லிருந்து கற்கள் வெட்டியெடுக்கப்பட்டிருக்கின்றன. (இக் குன்றுகள் பெரும்பாலும் எகிப்திய பிரமிட்டுகளைக் கட்ட வெட்டியெடுக்கப்பட்ட "டௌரா" வென்னும் குன்றுகளாயிருக்கலாம்.) இந் நகரம் பழங்கால "மெம்பிஸ் நகரம்" என்பது தெளிவு. பிரம்மாண்டமான கோவில்கள் சில, நகரின் உட்புறத்திலும் அதைச் சுற்றிலும் அமைந்திருக்கின்றன. நதியின் கிழக்குக்கரையிலுள்ள நகரம் நெருக்கமற்றது. குன்றினடிவாரம்வரை பரந்திருந்தபோதிலும் மற்றையதைவிடச் சிறியது. இக் குன்றுகள் இக்காலத்தில் "மொஹாட்டம்" மலைத்தொடரென வழங்கப்படுகின்றன.

இத்தடவை நீர் பெயர்பெற்றவோர் செல்வக்குடும்பத்தில் பிறந்திருக்கின்றீர். உம் தந்தை சாந்தமுடையவர்; ஆழ்ந்த ஆலோசனைக்காரர். அவர் அரசவைச் சிற்பி. அரண்மனைகள், பொதுக் கட்டிடங்கள், கோவில்கள் இவற்றைக் கட்டுவதும், பின் அவற்றை நன்னிலையில் வைத்துப் பாதுகாப்பதுமே அவரது வேலைகள். அவர் விசாலமான அழகியவோர் வீட்டில் வசிக்கின்றார். அங்கு நேர்த்தியான நிலாமுற்றங்களும், பரந்த பூந்தோட்டங்களும் இருக்கின்றன: பின்னையவை சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சின்னஞ்சிறு நீர் நிலைகளுண்டு. இவற்றில் குரூரமான, கெட்டகுணமுடைய நீர்ப் பறவைகளும் அன்னங்களும் வாழ்கின்றன. வீடு நகரின் வெளிப்புறத்திலமைந்துள்ளது. நகரத்திற்கும், மேற்கே பரந்து விரிந்த பாலைவனத்திற்கும் இடையிலிருக்கின்றது. இவ் வீட்டில் படுக்கையறைகள் சிறியவை. அவற்றில் ஜன்னல்கள் இருப்பதாய்த் தெரியவில்லை.

உம் தாய் பார்வைக்கு அழகானவள். மதிப்பும் பெருமையும் வாய்ந்தவள் என்பது தெளிவாய்த் தெரிகின்றது. நீர் பெரிதும் பேணப்படுகின்றீர். ஒருவகைச் செவிலித்தாயும் உமக்குண்டு. அவள் குடும்பத்தினரில் ஒருத்தியாகவே கருதப்படுகின்றாள். எனினும் அவள் வேற்று நாட்டினள்; வெண்ணிற மேனியும், பொன்னிற முடியுமுடையவள். நீர் ஒரே துணியாற் செய்த சிறிய வோர் உடை உடுத்தியிருக்கின்றீர்.

சில ஆண்டுகளில் உமக்கொரு தம்பி பிறக்கின்றான். அதன் பின், நீங்களிருவரும் ஒரு கோவிலைச் சார்ந்த கல்விச்சாலையில் கற்கின்றீர்கள். அங்கு பூசாரிகளே ஆசிரியர்கள். கற்கும் முறையோ சில சொற்றொடர்களையும், செய்யுட்களையும் மனனஞ் செய்வதே. உயரங்குறைந்த பெட்டிகளிலுள்ள பொடிமணலில் எழுத்துக்களை யெழுதிப் பழகுகின்றீர்கள். உங்களிருவரது

கல்வியும் வளர்ந்து வருகின்றது. சிற்சில சமயங்களில் நீங்களிருவரும், முதியோர் இருவர் தொடர, நதியின் கிழ்ப்பக்கத்திலுள்ள உங்கள் தந்தையின் பண்ணைக்குச் செல்கின்றீர்கள். அங்கு மீன் பிடிப்பதிலும், காட்டுக்கோழிகளை அம்பெய்து விழ்த்துவதிலும் உமக்குப் பிரியமதிகம். ஒரு ஆச்சரியமான காரியம்! எய்து விழ்த்தியவற்றை யெடுத்துவரப் பூனைகள் உபயோகிக்கப்படுகின்றன. இதிலும், காட்டுக் கோழிகளை வலை விரித்தும் ஏமாற்றியும் பிடிப்பதிலும் நீர் திறம்படைத்தவராயிருக்கின்றீர்.

மற்றவேளைகளில், கட்டிடவேலைகள் நடக்கும் இடங்களுக்கு உம் தந்தையோடு அமைதியாய்ச் சென்று வருவதில் ஆவலுடையவராயிருக்கின்றீர். அவ்வேலையில் அதிகம் ஊக்கங் காட்டுகின்றீர் அதிலும் அலங்கார வேலைகளைப் பற்றி அதிகம் விசாரிக்கின்றீர் சிற்பத்தொழிலும், சிற்றுருவக்கலையும் உம்மைப் பெரிதுங் கவர்கின்றன இத் துறையில் யாருமறியாது சிறிது ஈடுபடுகின்றீர். முதன்முதலாக ஒரு பூனையின் உருவத்தைச் செய்து முடிக்கின்றீர். அது பின்வருங் கலைத்திறனை யெடுத்துக் காட்டுவதாய் இருக்கின்றது. சேனையில் நீர் சேர வேண்டுமென்பது உம் தந்தையின் விருப்பம். ஆனால் உமக்கந்த எண்ணமில்லை. நீர் சித்திரக் கலையிலேதான் சிரத்தையெடுக்கின்றீர்.

இதைப்பற்றி உமக்கும் உம் தந்தைக்குமிடையில் நீண்ட சம்பாஷணைகள் நடக்கின்றன. அவர் தொழிலையே பின்பற்ற அனுமதிக்கும்படி நீர் எடுத்துரைக்கின்றீர். இருந்தாலும், இறுதியில் உம் தந்தையின் விருப்பப்படியே அரசனின் மெய்காப்பாளரின் உபதலைவராய்ச் சேனையில் சேருகின்றீர்; அரசனிடமிருந்து, நேரிலேயே ஆணைகள் பெறுகின்றீர். அரண்மனை விழாக்களில் அரசனது மெய்காப்பாளரிடையே தோன்றுகின்றீர். அரசன் உம்மிடம் மிகுந்த அக்கறை காட்டுகின்றான். அந்த "ஃபரோவா," அழகன். அறிவில் சிறந்தவன். இருமுடியணிந்தவன். அம் முடியின் கிழ்ப்பாகம் சிவப்பு: விதானம்போல் வளைந்த மேல்பாகம் வெள்ளை; அதன்முன் பொன்னாலான ஒரு பாம்புருவமுண்டு. கிரீடம் மிகவுங் கனமானது. நீர் அரசாங்க வேலையாக எகிப்து நாட்டிற்கும், "தீப்ஸ்," என்ற நகருக்குஞ் செல்லுகின்றீர்.

இச் சமயத்தில் நாட்டில் ஒரு பரபரப்புண்டாகின்றது; எங்கும் ஆலோசனைக் கூட்டங்கள் நடக்கின்றன; ஏதோவொரு படையெடுப்பிற்கு யாவருந் தயாராகின்றனர். நகரத் தலைவர்

களுக்குச் செய்தி யெடுத்துச் செல்லுதல், படை திரட்டுதல், படைகளுக்கு உணவும் உடையும் பிறவுஞ் சேகரித்தல், படைக் கலங்கள் பலவுஞ் செய்வித்தல்—இவையே உமது வேலைகள். கடைசியாக மாபெருஞ் சேனையொன்று மன்னனின் தலைமையின் கீழ்ப் புறப்படுகின்றது. "கண்டாரா," நாடு, "சூயெஸ்," பூமிசந்தி இவற்றின் வழியே பாலஸ்தீனத்தை நோக்கிச் செல்லுகின்றது. அக் காலத்தில் நீலநதியிலிருந்து செங்கடலுக்கு ஒரு கால்வாயிருந்தது. நீங்கள் கடந்து செல்லும் நாடு பயங்கரமானது. பாறையும், பருமணலும், திணறுஞ் சூடுடைய பள்ளத்தாக்குகளும் நிறைந்தது. நீங்கள் மிகவுங் கஷ்டப்படுகின்றீர்கள்; தண்ணீர் கிடைப்பது குதிரைக் கொம்பாயிருக்கின்றது. "டெட் ஸீ," (Dead Sea) என்னுங் கடல் உங்கள் பாதையிலிருந்து சற்றுத் தூரத்திலுள்ளது. "ஜார்டன்," நதி அதை வளைந்து செல்லுகின்றது. வழியில் பெரும் பட்டணங்கள் சிலவற்றிற்குஞ் செல்லுகின்றீர்கள்.

இப் படையெடுப்பின் காரணம் இப்பொழுது தெரிகின்றது. இங்குள்ள மக்கள் "அக்லாந்திய," வம்சத்தவர். ஸ்தாவரமின்றி அலைந்து திரியும் மக்களும் அவர்களிடையேயுண்டு. இவர்கள் எகிப்தியரின் நண்பர்களோ அல்லது குடிமக்களோ, தெரியவில்லை. இவர்கள், "கெல்ற்றிக்," ஜாதியரைப் போன்ற தோற்றமுடைய ஆரியவம்ச மக்களது படையெடுப்பினால் மிகவும் துன்பமுற்றிருக்கின்றனர். சில நகரத் தலைவர்களும், எகிப்திய உத்தியோகஸ்தர்களும் கொல்லப்பட்டனர். இதனால்தான் எகிப்திய மன்னன் படையெடுத்து வந்திருக்கின்றான். எகிப்திய வீரர் நல்ல பயிற்சிபெற்றவர்; சிறந்த போர்க் கலங்களுடையவர் ; கூட்டங் கூட்டமாக அணிவகுத்துச் செல்லுகின்றனர். பித்தளைத் தகட்டுக்கவசங்களும், தோலால் பொதியப்பட்ட உலோகத் தகட்டுக் கவசங்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. கேடயங்களிலும் பித்தளை அல்லது உலோகத்தாலான குமிழ்கள் இருக்கின்றன. ஈட்டி, அம்பு, வில், வேல் இவை உபயோகிக்கப்படுகின்றன ; வில்லை மட்டமாகப் பிடித்தபடியே அம்பு விடுகிறார்கள். வில்லாளிகள் தம் வித்தையில் தேர்ந்தவர். ஒரு வகையான பெரிய இருநாண் வில்லுமுபயோகிக்கப்படுகின்றது ; இதை நாணேற்ற மூவர் வேண்டும். ஆனால் அம்பு வெகுதூரம் பாய்ந்து செல்லுகின்றது.

பிரயாணம் மிகவும் நீண்டது; பகைவரையணுக இரண்டு அல்லது மூன்று மாதங்களாகின்றன. அப்புரம் போர் நிகழ்கின்றது. உங்கள் அரசனே ஒரு ஆற்றல்மிகுந்த படைத்தலைவன்; போர்க்கலை நன்கு பயின்றவன் ; மேட்டு நிலமொன்றில் அவன்

தன் வீரரை அணிவகுத்து நிறுத்துகின்றான். அவர்களுக்கு ஒரு பக்கத்தில் சதுப்பு நிலம்; மறுபக்கத்தில் பாறைகள் நிறைந்த புதர்க்காடு. அகழ்தோண்டுதல், மதில் எழுப்புதல் முதலிய சூழ்ச்சிகள் பெரிதும் உபயோகிக்கப்படுகின்றன.

எகிப்திய வீரர் சிறந்த பயிற்சியும், கட்டுப்பாடும் நிறைந்தவர். ஒரே கூட்டமாகச் செல்பவர். "கெல்ற்றிக்" ஜாதியரோ சிறுசிறு கூட்டங்களாக மின்னல்போற் பாய்ந்து தாக்குகின்றார்கள்; அவர்கள் வல்லமையுடைய வீராதி வீரர் களே; எனினும் அவர்களால் எகிப்தியப் படையைச் சிறிதுங் குலைக்க முடியவில்லை. இருதிறத்தாரிடையும் பலர் மடிகின்றனர். எனினும் இறுதியில் "கெல்ற்றிக்" வீரர்கள் தோற்றோடுகின்ற னர்; எகிப்தியர்கள் விரட்டிகொண்டு பின்தொடர்கின்றனர்.

கருங்கடல் வரையிலும், பகைவர் துரத்தியடிக்கப்படுகின் றனர். இங்கு ஒரு பெரும் பட்டணம் முற்றுகை இடப்பட்டுப் பிடிக்கப்படுகின்றது; முற்றுகையில் பல இயந்திரங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

இரகசியச் சுரங்கமொன்று தோண்டி முடித்து, மதிற் சுவரைத் தரைக்குள்ளிருந்தும், புறத்திருந்துந் தாக்கி நகரத் தைப் பிடிக்கின்றனர். பெரும்பொருள் கொள்ளையிடப்படு கின்றது. போர்க் கருவிகள், கவசங்கள், பொன், வெள்ளி அணிகலங்கள்—இவற்றோடு கைதிகளும், அடிமைகளும் பிடிக்கப் படுகின்றனர். இக் கொள்ளையில் உமக்குக் கிடைத்த பங்கு இரண்டு அடிமைகள். இச் சண்டையில் நீர் சிறிது காயமடை கின்றீர்; உமது கடமையைச் செவ்வனே செய்கின்றீர்; உத்தியோக உயர்வுங் கிடைக்கின்றது. எனினும் உமக்குப் போர்த்தொழில் சிறிதும் பிடிக்கவில்லை.

சண்டை முடிந்து சமரசம் நிலவுகின்றது. நாட்டெல்லையும் நிர்ணயிக்கப்படுகின்றது. வேந்தனும் அவனது வீரரும் வேறு வழியாக நாடு திரும்புகின்றனர். இவ்வழி கடலோரமாக, வணிகத்தால் வளம்பெற்ற "ஃபினீஷியன்," நகரங்கள்வழியாகச் செல்வது படையில் ஒரு பகுதி, இந்நகரங்கள் ஒன்றில் கப்பலேறி "எகிப்து," திரும்புகின்றது. இப் பகுதியில் வேந்தனும், அவன் ஏவலர் பலரும் நீரும் உண்டு.

வெற்றிக்கொடி நாட்டி வீடு திரும்பும் வீரர்களுக்காகத் தலைநகரில் விழாக்கள் பல நடக்கின்றன. நீரோ பட்டாளத்தை விட்டு விலகி, சிற்பத்தொழிலில் சிந்தனைகொண்டு அதைக் கற்க வூருராய்த் திரிகின்றீர். முதன்முதலில் களிமண்ணுருவங்களே

அதிகம் செய்கின்றீர். பின்னர் கல்லிலும், பளிங்கிலும் உளி கொண்டு உருவங்கள் செதுக்குகின்றீர். இது மிகவுந் தொந்திரவைக் கொடுக்கின்றது. எனினுஞ் சீக்கிரத்தில் இதிலும் வல்லவராகின்றீர். உட்கார்ந்திருக்கும் நிலையில் அரசனது உருவஞ் செதுக்கி அதையவனுக்களிக்கின்றீர். அதையவன் ஏற்றுக்கொள்கின்றான். உம் தந்தைக்குப்பின் அவருத்தியோகத்தை உமக்களிப்பதாய் வாக்களிக்கின்றான்.

இக் காலத்தில் நீர் மணம்புரிகின்றீர். உமது குடும்பத்தாரே பெண்ணை நிச்சயிக்கின்றனர். உம் மனைவி ஒளஎழில் வாய்ந்த இளமங்கை; உயர்ந்த குடும்பத்தவள்; உம்மை வியந்து போற்றுபவள்; உமது கலைத்திறனைப் பற்றிப் பெரிதாய் என்னுபவள். நீர் பிராணிகளின் உருவங்களையுண்டாக்குவதில் தனித் திறமையுடையவராயிருக்கின்றீர். பாயப் பதுங்கும் சிங்கமொன்றின் சிலையில் உயிர்க்களை ததும்புகின்றது. கரும் பளிங்கில் சமைத்த யானை யொன்று இயற்கையளவுள்ளது. அநேகமாக அது இன்னும் இருக்கிறதென்றே தோன்றுகிறது.

உமக்கொரு மகன் பிறக்கின்றான். அவன் சிறு குழந்தையாயிருக்கும்போது, "ஐஸிஸ், ஹோராஸ்," என்ற தேவியும் குமாரனுஞ் சேர்ந்த சிலையொன்றைச் செய்கின்றீர். இதற்கு மாதிரி உம் மனைவியும், மகனுமே. மகனோ இளவயதில் இறந்து போகின்றான். இஃது உமக்கும், உம் மனைவிக்கும் மிகுந்த மனத் துயரம் விளைவிக்கின்றது. அவன் தூங்கும் பாவனையில் ஒரு சிலை சமைத்து அதைக் கோவிலுக்கு அர்ப்பணஞ் செய்கின்றீர். அவனுக்குப் பதிலாக வேறொரு மகவைத் தரவும், அவனை மறுவுலகில் கவனித்துக் கொள்ளவும் கடவுளை வேண்டுவதற்காகவே இக்காணிக்கையைச் செலுத்துகின்றீர்.

சில ஆண்டுகளில் மக்கள் நால்வர் பிறக்கின்றனர்—இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள். புதுக் கோவில்கள் கட்டுவதிலும், கோவில்கள், கட்டிடங்கள் இவற்றைப் பெரிதாக்குவதிலும் அவற்றிற்கு வேண்டிய "பிளான்"—வரைப்படங்கள்—தயாரிப்பதிலும் வேந்தனது வீரச்செயல்களையும், வெற்றிப் போர்களையும் சிறு உருவங்களாகச் செதுக்குவதிலும் நீர் ஈடுபட்டிருக்கின்றீர். அவற்றில் கழிந்த படையெடுப்பில் நடந்த சம்பவம் ஒன்று சித்திரிக்கப்பட்டுள்ளது. "ஃபரோவா" ரதத்திலிருக்கும் பொழுது பகைவர் அவனைச் சூழ்ந்துகொள்ளுகின்றனர். பகைவர் தலைவன் ஒருவனோடு, ஃபரோவா நேர் நின்று போர்புரிகின்றான்: வெற்றி பெற்று வெளிப்படுகின்றான். இவையன்றி இன்னும் பல சிற்பங்களுமிருக்கின்றன.

"ஃபரோவா" இறக்கின்றான். ஆடம்பரத்துடன் புதைக்கப்படுகின்றான். சிறிது காலத்திற்குள்ளாகவே உம் தந்தையும் இறக்கின்றார்: உரிய சடங்குகளுடன் அடக்கஞ் செய்யப்படுகின்றார். சவம் உருக்குலையாதிருக்க விலையுயர்ந்த தைலங்கள் தடவப்படுகின்றன: சில திரவங்கள் ஊசி கொண்டு உடம்பில் ஏற்றப்படுகின்றன. சவப்பெட்டி பலவகை நிறங்களாலும், பொன்னிறப் பொடிகளாலும் அழகுறத் தீட்டப்படுகின்றது. சவத்துணிக்கும் பொன்னிறப் பொடி பூசப்படுகின்றது. உம் தந்தையின் வேலையை நீர் ஏற்கின்றீர். அமைதியாக, கடும் வேலையில் காலத்தைக் கழிக்கின்றீர். எப்பொழுதுஞ் சிலைகள் செய்து கொண்டேயிருக்கின்றீர். இச் சமயத்தில்தான், இப்பொழுது பாரிஸ் மாநகரிலுள்ள பொருட்காட்சி சாலையில் வைத்திருக்கும் எழுத்தாளனின் (Scribe) சிலையைச் செதுக்குகின்றீர். அக்காலத்தில், அது ஏனைய சிலைகளுடன் பொதுத் தோட்டமொன்றிலுள்ள ஒரு கூடத்தில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பலரும் போற்றிப் புகழ்ந்தனர்.

ஆண்டுகள் செல்கின்றன. நீரும் முதுமைப் பருவமெய்துகின்றீர். ஒரு கிழத் தலைமைப் பூசாரி உமக்கு நெருங்கிய நண்பர். அவர் உமக்குச் சில இரகசியங்களைச் சொல்லிக்கொடுக்கின்றார். அவரையும், அவரைப் போன்ற சில நண்பர்களையும் நீர் அடிக்கடி வீட்டிற்கழைக்கின்றீர். அங்கு நீங்கள் தத்துவ விசாரணையில் ஈடுபடுகின்றீர்கள். அக் கிழப்பூசாரியின் தலைமையில் சில மாயமந்திரங்களையும் படிக்கின்றீர்கள். சிறிது காலத்தில், உம் மனைவி இறக்கின்றாள். இப்பொழுது ஒரு ஆச்சரியமான நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அவள் எப்பொழுதும் உம்மருகிலேயே இருக்கின்றாள்: அவள் அவ்விதமிருப்பதை உமக்கறிவிக்கவும் முயலுகின்றாள். அவளிருப்பதை நீரும் ஒருமாதிரி உணருகின்றீர். ஆனால் அவளை நீர் கண்கூடாகக் காண்பதில்லை. உமது கடைசிச் சிலையாக உம் மனைவியின் உருவத்தைச் செதுக்குகின்றீர். நீர் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொழுதும் அவள் உம்முடனேயே இருக்கின்றாள். நாளடைவில், நீர் முதுமையால் பின்னும் பலவீனமடைகின்றீர்: மனவமைதியுடன் மறுவுலகடைகின்றீர். நீர் இறக்குந் தறுவாயில், உம் பிரிய மனைவி முறுவல் பூத்து நிற்கக் காண்கின்றீர்: அவளை நோக்கிக் கைகளை நீட்டிக்கொண்டே தலையணையிற் சாய்கின்றீர்; அரவமின்றி ஆவி பிரிகின்றது. இப் பிறப்பில் உம் பெயர் "யூசென்ரா."

மேலுலக வாழ்க்கை மிகவும் நீண்டது. எனினும் கால்டியப் பிறப்பிற்குப் பின் கிடைத்ததைப்போல் அவ்வளவு நீண்டதல்ல.

ஒரு வேளை உலகச் சரிதத்தில் சிற்சில சமயங்களில் நீண்டகால தேவலோக வாழ்க்கை கிடைக்கவேண்டுமென்ற விதியொன்றுண்டோ என்னவோ தெரியவில்லை. ஏனெனில் இப் பிறவிக்கு உமது கால்டியப் பிறப்பிற்குப் பின் கிட்டியதைவிடக் கூடுதல் கால தேவலோக வாழ்க்கை கிடைக்க வேண்டியதே முறை.

பிறப்பு: 5879 கி. மு. } வயது
இறப்பு: 5804 கி. மு. } 75 ஆண்டுகள்
மேலுக வாழ்க்கை 1772 ஆண்டுகள்.

குறிப்புகள்: மனைவி—மணிரங்கு (இன்றைய 20-வது நூற்றாண்டு மனைவி).

12. இந்தியா—ஆண்

கி. மு. 4032—கி. மு. 3987

கற்செறிந்த கண்கவரும் பள்ளத்தாக்கு; ஐந்து வாசல்களமைந்த மதில் சூழும் மாநகரம்: பரந்த தோட்டம் பக்கத்தமையப் பெற்ற சிறந்தவோர் வீடு. இங்கேதான் அடுத்த பிறப்பில் ஆண் மகவாய்த் தோன்றுகின்றீர். இந்நகரம் ராஜபுதனத்திலுள்ள பழங்கால ஆஜ்மீர் ஆகும். உம் தந்தை ஒரு தலைவர். பெருஞ் செல்வம் படைத்தவர். வீட்டின் விசாலத் தன்மை இதை வெளிப்படுத்துகின்றது. பூந்தோட்டங்கள் வெகுதூரம் பரவியிருக்கின்றன. திரளான வேலைக்காரர்கள் வீட்டில் காணப்படுகின்றனர். நீங்கள் போர்வீரரான க்ஷத்திரிய வம்சத்தவர். கீர்த்தியும், நேர்த்தியும் வீரமும் அழகும் பொருந்தியவோர் வம்சமது. அதில் உங்கள் குடும்பந் தொன்றுதொட்டே சிறப்புஞ் செல்வாக்குமுடையது. உம் தந்தையொரு சேனாதிபதி. பொதுவாக நல்லவர்; மதப்பற்றுடையவர்; ஆனால் ஏனைய மதத்தினரை யாதரிப்பவரல்லர்: திறம்பெற்ற மூர்க்க வீரர் அக் காலமோ சண்டையும் பூசலும் நிறைந்ததாயிருக்கின்றது. எங்கும் போர் முரசதிர்கின்றது.

உமக்கு ஏழெட்டு வயதிருக்கும்போது நீர் பூந்தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கின்றீர்; ஆடம்பரத்துடனேயே வாழ்கின்றீர்; பச்சைக்கல் பதித்த பொன்னாபரணம் கழுத்தில் கிடக்கின்றது. அஃது எங்காவது பகைவர் நாட்டில் பறிக்கப் பட்டதாயிருக்கலாம். நீர் கல்வி கற்க ஆரம்பிக்கின்றீர்; மணற் பெட்டியில் எழுதிப் படிக்கின்றீர். உங்களைச் சார்ந்த கிழப் படைவீரனொருவன் குதிரையேற்றம், வாள் வித்தை, படைக்கலப் பயிற்சி இவற்றை உமக்குப் பயிற்றுவிக்கிறான். பன்னீராட்டைப் பிராயத்தில் நீர் கணித சாஸ்திரங் கற்கின்றீர். அதைப்பற்றி

யுள்ள பல செய்யுட்களை மனனம் செய்கின்றீர். உம் தாய் யாவரையுங் கவருங் குணமுள்ளவள். அவள் அடிக்கடி உமது மதப் பயிற்சியைக் கவனித்துக்கொள்கிறாள். "உலகப் பொருளும் புகழும் நிலையற்ற" தென்னும் எண்ணத்தையுமக்குப் புகட்டுகிறாள். ஆனால் உமது மனமோ போர்க்கருவிகளிலேயே ஈடுபடுகின்றது. போர்ப்படைகளும் புரவியும் உம்மைப் பெரிதும் மகிழ்விக்கின்றன. குதிரைகள் மெலிந்த மேனியும் உடற்றிறமும் திண்ணமுமுடையவை. உம் தாய், இச்சக்திகளால் பாதிக்கப் படா வண்ணங் காக்கமுயலுகிறாள். அவள் மிக நல்லவள்; வைதிகக்காரி; மதச் சடங்குகளைக் கவனமாய் நடைமுறையில் நடத்துபவள்.

உமக்கொரு தம்பி இருக்கின்றான். அவன் மேல் உம்க்குப் பிரியமதிகம். அவனை நீர் கவனமாய்க் காக்கின்றீர்.

உமது பதினாலாம் வயதில் நீர் குதிரையேற்றத்திலும் போர்ப் பயிற்சிகளிலும் காலத்தைக் கழிக்கின்றீர். பதினாறு, பதினேழு வயதாகும்பொழுது, தந்தையுடன் போர்க்களம் செல்லுகின்றீர். இப்பொழுது பல நாடுகளின் மன்னாதி மன்னன் யார் என்பது பற்றியோர் போர் நிகழுகின்றது. போர் முறை மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது. மந்திரங்கள் பலவும் உபயோகிக்கப்படுகின்றன. அவற்றின் தன்மையை முழுவதும் கிரகிக்க முடியவில்லை. ஒரு சமயம், போர்க்களத்தில் தலைவன் ஒருவன் அம்பேந்தி வீரரின்பின் பாறையொன்றில் நிற்கின்றான். அம் பெய்யும் பொழுது கையிலுள்ள கோலினால் ஏதோவொரு அடையாளமிடுகின்றான். இதனால், அம்புகளின் வேகமும் எண்ணமும் அதிகரிக்கின்றன. இச் சமயத்தில் ஏதோ ஒன்றை உச்சரிக்கவுஞ் செய்கின்றான். இத்தகைய இரட்டிப்பு வேலை இம் மந்திரங்களில் மிகவும் முக்கியமானது. வில் வீரர் எவிய அம்புகளைவிட, அவற்றால் விழும் வீரர்களின் எண்ணம் மிகவும் அதிகமாயிருக்கின்றது. இத்தகைய மந்திரங்களை எதிரிகளும் உபயோகிக்கின்றனர். சில சமயங்களில் பெரும் புயற்காற்றொன்று அம்புகளைப் பின் தள்ளுகின்றன. சில சமயங்களில் மூடுபனியால் முற்றும் மறைக்கப்படுகின்றது. இம் மந்திரங்கள் தெய்வீகமானவையாய்த் தோன்றவில்லை. வெறுந் தந்திரங்களெனவே தோன்றுகின்றன.

இரு திறத்துள்ள போர் வீரரும் தைரியசாலிகளே. தற்கால ராஜபுத்திரரைப் போலவே தோற்றமுடையராயிருக்கின்றனர். நீர் மாநிற மேனியும், உயர்ந்த உருவமும், விரைந்த செய்கையும், சிறந்த உடையுமுடையவர். அழகிற் சிறந்த அணியொன்று

உமது தலைப்பாகையை அலங்கரிக்கின்றது. இரண்டாண்டுகள் சதா போரிடுவதிலேயே கழிகின்றன. நீர் போர்ச் செயல்களிலேயே புதைந்திருக்கின்றீர்; சண்டையே உமக்குயிராயிருக்கின்றது. இப்பிறப்பில் நீர் மாண்பும் மனத்திடமுமுடைய போர் வீரராகவுள்ளீர்; போர்த்தொழிலைக் கருத்திற் கொள்வாக் கடமையென்று கருதிய முற்கால எகிப்தியப் பிறப்பிலிருந்து எத்துணை மாற்றம்!

சண்டை ஒருவாறு ஓய்கின்றது. சிறிது காலத்திற்குச் சமாதானம் நிலவுகின்றது. நீர் வீடு திரும்புகின்றீர். உம் தாயுந் தம்பியும் பெருமகிழ்வடைகின்றனர். நாலாண்டுகள் நடக்கின்றன. இச் சமாதான காலத்திலுங்கூட நீர் போர் விளையாட்டுக்களிலேயே காலங் கழிக்கின்றீர். வாள்வீச்சு, குதிரையேற்றம் இவற்றில் சிறந்த செய்கைகள் செய்வதே உமக்குப் பெருங் காரியமாயிருக்கிறது. அரும்பெருஞ் செயல்கள் பலவும் நிகழ்கின்றன. செவ்வையாய்ச் செய்த சித்திர வேலைப்பாடுடைய போர்க் கருவிகளிலுள்ள அன்பொன்றே உமது சித்திரச் சுவையைக் காண்பிக்கின்றது. பொன் வெள்ளி முதலிய நகாசு வேலைகளிலும் உமக்குப் பிரியமதிகம்.

நீர் இளவயதில் மணஞ்செய்யவில்லை. உமக்கு இருபத்தோராம் வயதாகும்போது ஒரு பெண் நிச்சயிக்கப்படுகின்றாள். மணப் பெண் உம்மைவிட இளையவள்; அடக்கவொடுக்கமுடைய இளமங்கை. மணச் சடங்கு ஆடம்பரத்துடன் நடைபெறுகின்றது. விலையுயர்ந்த விருந்தும் களியாட்டங்களும் நடைபெறுகின்றன; வருபவர் யாவரும் விருந்தளிக்கப்படுகின்றனர்; தான தருமங்கள் தாராளமாய் நடக்கின்றன. உணவு மாமிசமற்றதல்ல; பலவகை மாமிசங்களோடு மானிறைச்சியும் உண்ணப்படுகின்றது.

நீர் இப்பொழுது இல்வாழ்க்கை நடத்துகின்றீர். தந்தை வீட்டோடு வாழ்கின்றீர். உம் தம்பி வளர்ந்து பெரியவனாகின்றான். அவன் ஒரு தத்துவ நூல் வல்லவன்; வேதாந்தி: உள்ளன்புடையவன். ஆனால் குயுக்திக்காரன்; மனத்திடமும் உடற்றிறமு மற்றவன்; நிலையற்ற நெஞ்சினன்; முன் கோபி. நீர் அவனை மிகவும் நேசிக்கின்றீர். எல்லா வழிகளிலும் அவனுக்குதவுகின்றீர். முன்னே முடிந்த சமாதானம் நெடுங்காலம் நீடிக்கவில்லை. அடிக்கடி சிறு சிறு பூசல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இவற்றில் உமக்கு ஆபத்தொன்றும் நேருவதில்லை. எனினும் உம் மனைவி கவலையும் மனத்துயருமடைகிறாள் உம் மனைவியின் தந்தையாகிய சக்கரவர்த்தி உம்மை

யும் உம் தந்தையையுங் கூப்பிட்டனுப்புகின்றார். நீங்கள் வட கிழக்காயும், கிழக்காயும் பிரயாணம் செய்து செந்நிறமதிலுடைய ஒரு நகரத்தையடைகின்றீர்கள். அஃது ஒருகால் 'டெல்லி'யாக இருக்கலாம். இதன்பின் மன்னனைக் காணக் காசிக்குச் செல்லுகின்றீர்கள். அக் காலத்தில் காசி "வாரணாசி" என்று வழங்கப் பட்டதெனத் தோன்றுகிறது.

உம்மையும், உம் தந்தையையும், செல்வாக்குடைய இன்னும் மூவரையும், ஒரு தூது செல்லப் பணிக்கின்றார் அவ் வேந்தர். இது மிகவும் முக்கியமான காரியமாகத் தோன்றுகிறது. விலையுயர்ந்த பரிசுக் குவியல்கள் தயாராகின்றன. மிக்க விலையுடைய நுண்ணிய பூவேலை செய்த துணிகளும், அணியாபரணங்களும் ஏராளமாகச் சேகரிக்கப்படுகின்றன. பணியாட்கள் பலர் பின் தொடர, யானை மீதமர்ந்து மேற்கு நோக்கிச் செல்லுகின்றீர்கள். "கட்ச்" வளைகுடாவினருகில் கப்பலேறுகின்றீர்கள். விலை மதிப்பற்ற தந்தமுந் தங்கமும் நிறைந்த கப்பல்கள் மூன்று பிரயாணமாகின்றன. தூதுவர் அனைவரும் ஒரே கப்பலிலிருக்கின்றனர். கப்பல்கள் இக் காலத்திய பாய்மரக் கப்பல்கள் போன்றவை. நீண்ட கடற்பிரயாணத்திற் கவ்வளவு ஏற்றவையல்ல. பாய்மரங்களோ பார்வைக்கழகாயிருக்கின்றன. ஆனால் காரியத்திற் குகந்தவையல்ல.

நீங்கள் வடமுகமாய்ச் சென்று கராச்சியைக் கடந்து, பாரசீக வளைகுடாவை "ராஸ்-எல்-ஹாட்" வழியாகத் தாண்டுகிறீர்கள். வழிமுழுவதும் கரையோரமாகவே செல்லுகின்றீர்கள். உங்களிடம் திசையறியுங் கருவியில்லை, சிலவகைப் பூகோளப் படங்களே இருக்கின்றன. நீங்களிருக்குமிடத்தை ஒருவாறு அறியவுஞ் செய்கிறீர்கள். "ஸொகொட்ரா", "ஏடென்", "பெரிம்" முதலிய நகரங்களைக் கடக்கின்றீர்கள். இங்குள்ள நிலக்கிடக்கை வேறு மாதிரியாக இருக்கின்றது. "பாப்-எல்-மாண்டெப்" ஜலசந்தி கொஞ்சம் விரிந்து தோன்றுகின்றது. ஸோமாலி நாட்டின் கரைவழியாக செங்கடல் கடக்கின்றீர்கள். செழிப்புடைய நகரங்கள் பல காணப்படுகின்றன. இங்கெல்லாம் உணவும் பிறவும் வாங்க இறங்குகின்றீர்கள். இங்குள்ள மக்கள் கலப்பு ஜாதியர். பெரும்பாலும் அரபியரும், சில நீகிரோவரும் காணப்படுகின்றனர்.

"ஸூயஸ்" பூசந்தியிலிருந்து ஒரு கால்வாய் நீலநதிக்கிட்டுச் செல்லுகின்றது. அதிலுள்ள ஏரியொன்றில் கப்பல்களை விட்டு விட்டு, குதிரை ஒட்டகங்கள் இவற்றிலேறி சாவதானமாகச் செல்லுகின்றீர்கள். அக் கால்வாய் நீலநதியில் சேருமிடத்

தில்தான் "மெம்பிஸ்" (Memphis) நகர மிருக்கின்றது. நீங்கள் செல்வதும் இந் நகருக்கே.

நீர் கடைசியாகப் பிறந்தபோதிருந்ததைவிட "மெம்பிஸ்" இப்பொழுது மேலும் பெரிதாகியிருக்கின்றது, முன்னையவற்றை விடப் பிரம்மாண்டமான கட்டிடங்களும் காணப்படுகின்றன. தூதுக் குழுவினரை வரவேற்குங் குழுவினரில் இன்றைய C. W. லெட்பீற்றரும், A. P. சின்னற்றும் காணப்படுகின்றனர்.

நீர் முன்பொரு "ஃபரோவா"விற்கு ஊழியஞ் செய்த காலத்தைவிட இப்பொழுது அரசவை ஆடம்பரம் பன்மடங்கு பெருகியிருக்கின்றது. இந்த "ஃபரோவாவும்" அக் கிரீடத்தைத் தான் அணிந்திருக்கின்றான். எனினும் எல்லாம் பெருகிச் சிறந்து பிரம்மாண்டமாயிருக்கின்றன. அவ் விரண்டு படைத்தலைவர்களும் (C. W. லெட்பீற்றரும், A. P. சின்னற்றும்) உமக்கறிமுகமாகின்றனர். விரைவில் நீர் அவர்களின் நண்பராகின்றீர்: அவர்களிடம் நற்பெயரெடுக்கின்றீர் யாவருஞ் சேர்ந்தே உணவுண்ணுகின்றீர்கள். நீலநதிக்கரையிலுள்ள அரசனது அரண்மனையொன்று தூதுவர்க் களிக்கப்படுகின்றது. இங்கு நீங்கள் தங்குகின்றீர்கள்.

வந்தகாரியம் சாவதானமாகவும், ஆலோசனையுடனும் நடத்தப்படுகின்றது. மாதங்கள் பல கழிகின்றன. நதியில் பிரயாணஞ் செய்வதும் அதன் கீழ்ப்பாகத்தில் வேட்டையாடுவதுமாகக் காலங் கழிகின்றது இப் பொழுதெல்லாம் லெட்பீற்றரும், சின்னற்றும் நெருங்கிய நண்பர்களாயிருக்கின்றனர்.

ஆண்டொன்று கழிகின்றது. தூதுக்குழுவினரும் "ஃபரோவா"விடம் விடைபெற்று விடுதிரும்புகின்றனர். பரிசுப் பொருள்கள் பலவுங் கொண்டு செல்லுகின்றனர்—சிறந்த வேலை நிறைந்த பொருட்கள், பலவிதப் பளிங்காலான பாத்திரங்கள், எழில் பெற்ற விளக்குகள்; கலைத்திறன் ததும்புஞ் சாமான்கள். இங்குள்ள துணிகள் மாத்திரம், இந்தியாவிலிருந்து கொண்டு வந்த துணிகளைப்போல் அத்தனை யுயர்ந்தவையல்ல. இந்தியத் துணிகளில் ஒரு மஸ்லின் மிகச் சிறந்ததாயிருந்தது. பரிசுப் பொருட்களுடன் நல்வாழ்த்துக் கடிதமொன்றும் அரசனுக் கனுப்பப்படுகின்றது. உம் நண்பர் இருவரும் பிரிவுப் பரிசுகளாய், மெருகேற்றிய கல்லாற்செய்த அவர்கள் தெய்வ உருவத்தில் ஓர் தாயத்தும் அவர்கள் சமயச் சின்னமொன்றும் உங்களுக்குக் கொடுக்கின்றனர்.

கால்வாய்க் கரைவழியாக ஏரியையடைந்து, கப்பலேறி, செங்கடல் கடந்து "கட்ச்" துறைமுக மெய்துகிறீர்கள். வழி

யிற்காறுந் துறைமுகங்களிலெல்லாம் இறங்கி அங்குள்ள மக்களோடு சிறிது வியாபாரமுஞ் செய்கின்றீர்கள். "கட்ச்" சிலிறங்கி, வாரணாசிக்குச் செல்கின்றீர்கள். இப் பிறப்பில் உம் பெயர் திருதராஷ்டிரர். [இது கர்மாதிகாரிகளில் ஒருவர் பெயர். மகாபாரதத்தில் வரும் மன்னர்களில் ஒருவரின் பெயருமதுவே.]

உம்மையும் உம் தந்தையையும் மகிழ்வுடன் வரவேற்கின்றனர். நீங்கள் அரசவைக்குத் தினமுஞ் செல்லுகின்றீர்கள். பொழுதைப் புரவியேற்றத்திலும் படைக்கலப் பயிற்சியிலுங் கழிக்கின்றீர்கள். உம் தாயின் ஆதிக்கத்துக்கு இன்னும் நீர் அடங்கி நடக்கின்றீர்; அவள் இப்பொழுது கிழத்தோற்றமடைந்தவள். தம்பியோ இன்னும் பழைய பித்தனாகவே இருக்கின்றான்: நல்லெண்ணமுடையவனேனும், ஒரு மாதிரியான மனப்போக்கு யுடையவனாகவே தானிருக்கின்றான்.

இப்பொழுது உமக்கு வயது முப்பத்திரண்டு. இன்னொரு போர் மூளுகின்றது. பழைய வம்சாவளிச் சண்டையே புத்துயிர் பெறுகின்றது. இத் தடவை உம் தந்தை போர்க்களஞ் செல்லவில்லை. ஆனால் உம் தம்பி உம்முடன் வருகின்றான். இதை யாவரும் ஆட்சேபிக்கின்றனர். நீர் அவனை எவ்வளவு பாதுகாக்கப்போதிலும், ஆணைக்குக் கீழ்ப்படியாமல் ஆத்திரத்துடன் போரிடுவதால் அவன் சதா கவலையைக் கொடுக்கின்றான். போர்க்களத்தில் ஒரு சிறு சண்டையில் அவன் அதிகம் முன்னேறி விடவே எதிரிகளால் சூழப்படுகின்றான். அவனைக் காத்துவர நீர் ஓடுகின்றீர். ஈட்டியொன்றெறியும்போது உமது முழங்கை தாக்குறவே, அது குறி தப்பி முன்னின்ற தம்பியைக் குத்திக் கொல்லுகின்றது.

இதனால் கரைகடந்த துன்ப மெய்துகின்றீர். இத் துரதிர்ஷ்டம் தற்செயலாய் நேர்ந்ததெனினும், உமக்கு இதற்கு மேல் போரிட மனமில்லை. படையை விட்டு விலகி வீடு திரும்புகின்றீர். வீட்டில் யாவருந் துக்கிக்கின்றனர். உம் தாயின் சோகம் ஆற்றவரியது.

இதனால் நீர் மனைவி மக்களை விட்டுத் துறவறம் புகத் தீர்மானிக்கின்றீர். ஆபத்து தற்செயலாய் நேர்ந்ததெனினும், முற்பிறப்பில் செய்த தீவினையால் நேர்ந்ததென்ற எண்ணத்தால், அத் தீவினையை யொழிக்கவே துறவறம் பூணுகின்றீர்.

துறவியினுடையில் காடும் மலையுங் கடக்கின்றீர். காட்டில் கனியுண்டு காலங் கழிக்கின்றீர். மனத்துயரோ மறைந்தபாடில்லை. இவ் வாழ்க்கை உமது முந்திய வாழ்க்கையைவிட எவ்வளவோ மாறுபட்டிருக்கின்றது; இதில் சஞ்சலமும்

வெந்துயரும் உம்மை வாட்டுகின்றன. நீர்: தியானம் பண்ண யெத்தனிக்கின்றீர். ஆனால் மனம் ஒருமுகப்படவில்லை. எண்ண முஞ் சிந்தையுங் கொந்தளிக்கின்றன. இவ் வழி வகையற்ற வாழ்க்கையை உம்மால் பொறுக்க முடியவில்லை. சில வாரங்கள் கழிகின்றன. நீர் வீட்டிலிருந்து வெகு தூரம் வந்தாயிற்று. வடக்குத் திசையாக, பாலைவனமுங் காடுங் கடந்து திரிகின்றீர். வழியிலுள்ள ஊர்களிலும், நகரங்களிலும் சிற்சில சமயம் உணவுண்ணுகின்றீர். இவ் வூர்கள் ஒன்றிற்கொன்று வெகு தூரத்திலுள்ளவை. எண்ணத்திலுங் குறைந்தவை. கடைசியாக நீர் ஒரு துறவி வாழுங் குகையொன்றையடைகின்றீர். அத் துறவி வெகு வயதானவர்.

அவர் உம்மோடு அன்புடன் பேசி, தங்க இடங் கொடுக்கின்றார். நீர் உமக்குற்றவற்றை யுரைக்கின்றீர். அவர் அனுதாபங் காட்டி, துறவற நெறியும் புகட்டத் துணிகின்றார். நீர் அவருடனே வாழ்கின்றீர். கருத்துடனே கற்கின்றீர். இவ் வாழ்க்கை பல ஆண்டுகள் நீடித்திருக்கின்றது.

உங்கள் உணவு காட்டுப் பழங்களோ அல்லது வெகு தூரத்திலிருந்து குடியானவர்கள் கொண்டுவரும் நாட்டுப் பழங்களோதாம். அருகிலுள்ள ஊற்று தண்ணீர் தருகின்றது.

காலங் கழியக் கழிய நீர் மனவமைதி பெறுகின்றீர். எல்லாம் விதி வசமென்ற எண்ணம் வலுக்கின்றது. உம் கூட்டாளி உமக்குப் பல உண்மைகளை எடுத்துரைக்கின்றார். நீங்கள் படிப்பதில் முக்கியமானவற்றிலொன்று இந்துமதத் தத்துவங்கள். இங்ஙனமாகச் சில ஆண்டுகள் கழிய, சுற்று வட்டாரங்களில் தெய்வத்தன்மை பொருந்தியவரென்னும் பெயரோடு இறைவனடி சேருகின்றீர். பார்வைக்கு வயதானவர்போற் றோன்றினும் இறக்கும்பொழுது ஏகதேசம் நாற்பது வயதேயாகின்றது. இவ் வாழ்க்கைக்குப் பின் மிகச் சுருங்கிய காமலோக வாழ்வும், நீண்டதொரு தேவலோக வாழ்வும் சித்திக்கின்றன. இவ் வாழ்க்கையில் ஆத்ம வளர்ச்சி அதிகமிருந்தது. அதிலும் கடைசிக்காலத்தில் நீர் ஜெபம், தியான மந்திரங்களிலும் வல்லவராயிருந்தீர். உம் நண்பரான அம் முதியவர் பாரமார்த்திக வாழ்க்கை தெரிந்தவர். மிகச் சிறந்த அநுபூதிமான்.

பிறப்பு :	4032 கி. மு.	வயது 45 ஆண்டுகள்.
இறப்பு :	3987 கி. மு.	
மேலுலக வாழ்க்கை		1829 ஆண்டுகள்.

குறிப்புகள் : தாய் — மணிரங்கு (இன்றையப் பிறப்பு மனைவி).
தம்பி — மாசி (,, ,, மகள்).
மனைவி — தை (,, ,, மகள்).

13. அரேபியா — ஆண்

கி. மு. 2158—கி. மு. 2090

அடுத்த பிறவியில், நீர் இந்தியாவிற்கு மேற்கேயுள்ள நகர மொன்றில் வாழ்க்கையைத் தொடங்குகின்றீர்: உம் பெயர் "கொலிப்". அந் நகரத்தைச் சுற்றியுள்ள நாடு ஒருபுறம் கடலாலும், மறுபுறம் பாலைவனத்தாலுஞ் சூழப்பட்டது. நாட்டின் நடுவிலும், பாலைவனத்திற்கப்பாலும், செழிப்புள்ள மலைநாடு காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் கடலோரத்தில் காணப்படும் மக்களினின்றும் மாறுபட்டவர். இவர்கள் ஆரிய செமித்தியர். கடல் நாட்டாரோ கலப்பு ஜாதியர். அத்லாந்திய, லெமூரிய இரத்தக் கலப்பால் தோன்றியவர். ஆனால் கலப்பற்ற ஜாதியாரென்று பெருமை கொள்பவர். ஆரியச் செமித்தியர் தம்மிலுந் தாழ்ந்தவர், கலப்புடையவர் என்னு மெண்ணமுடையவர். நாகரிகத்தில் ஆரியச் செமித்தியர் இவருக் கிணையல்லர். வாழ்க்கைமுறைகளை நோக்கும்போது, அவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று கூடக் கருதலாம்.

பாலைவனத்திலோ, தற்காலத்தைப் போலவே, தேசாந்திரிகள் வாழ்ந்து வருகின்றனர். நீர் பிறந்த நகரம் பாலைவனத்திற் கருகாமையில், ஏடென் நகருக்கு வடக்கே யமைந்திருக்கின்றது. அந் நகரத்திற்குத் தென் மேற்கே ஏடெனுக்கருகில் "ஸா-அ-நெ' என்னும் ஒரு நகர மிருக்கின்றது. அது இன்றளவும் அழியாதிருக்கின்றது.

உமது பெற்றோர் இருவரும் ஆரியச் செமித்திய வம்சத்தவர். வாணிபம் நடத்துவதற்காக "நெட்ஜ்" என்னும் உள் மலைநாட்டினின்றுங் கடலோரம் போந்தவர். எனவே மக்கள் பெருங்கிளையில் மூன்று நான்கு என்னும் இரு பிரிவினரின் கலப்பால் வந்தவரும் "ஹிமியா" என்னும் பெயர்கொண்டவருமான கடற்கரை நாட்டினரிடையில் வாழ்ந்து வந்தபோதிலும், நீர் ஐந்தாங் கிளைப் பிரிவினராவீர். நீரும், உமது பெற்றோரும் மற்றவரைவிடச் சற்றே வெளுத்தவர். உங்கள் நாட்டினரின் பெயர் "மொஸ்தாரெப்" என்பதாகும்.

கடற்கரை நகரங்களின் நாகரிகம் உங்கள் நாகரிகத்தினும் மிகமிக மேம்பட்டது. எனினும் நெட்ஜ் நாட்டில் நல்ல மதிலுடைய நகரங்களும், சிற்ப முறைப்படிச் செவ்வனே சமைக்கப்பட்ட கட்டிடங்களும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. பழங்காலப் பெருஞ் சிதைவுகளும், மிகப் பெரிய கற்களாலான வட்டங்களும் இந் "நெட்ஜ்" நாட்டில்தான் காணப்படுகின்றன. இக்கல்

வட்டங்கள் அக் காலத்தில் நீண்ட பாளங்களாயிருக்கின்றன. சிலவிடங்களில் கற்பலகைகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இவ் விணைப்பு முறையும், கல்வட்டங்களும் "ஸ்டோன் ஹெஞ்ச்" என்னுமிடத்திலுள்ளவை போன்றவையே. இவையெல்லாம் அக் காலத்திலேயே அந் நாட்டில் நின்றும் மறைந்துபோன ஒரு பழம்பெரும் மக்கள் பிரிவினருடையது.

உமது நாட்டினரது மதம் தனிப்பட்ட வொன்றல்ல. அது பல மதக்கொள்கைகளுங் கலந்த வொன்றென்பது தெளிவு. ரவி, மதி, விண்மீன், வாயு, வருணன் என்னும் பல தெய்வங்களையுடைய ஒருவகை இயற்கை வழிபாடாகத் தோன்றுகிறது. நீர் வாழும் நகரமான "மாரிப்" நகரின் நாகரிகம் சிறந்ததே.

வட திசையிலுள்ள பாலைவனத்தமைந்த பாழ் நகரமொன்றில் எவரும் அஞ்சும் மாந்தரிகரே வாழ்கின்றனர் என்று சிறுவரான நீரும், உம்மை யடுத்துள்ள மக்களும் நம்புகின்றீர்கள். இது வெறுங் குருட்டு நம்பிக்கையல்ல அம் மாந்தரிகர் "ஆட்" என்னும் பெருமக்கள் கூட்டத்தில் எஞ்சியவர். லெமூரியர், அத்லாந்தியரில் முதல் கிளை வம்சத்தவர் என்னும் இரு பிரிவினருங் கூடிக் கலந்த மக்கள் கூட்டத்தவராதலின் மிகப் பழமையான வம்சத்தவரே. அவர்கள் காட்டுமிராண்டிகளல்லர் ஒரு மாதிரி நல்ல நாகரிகமுடையவரென்றே சொல்லலாம். ஆனால் அத்துணை இனிய தன்மையரல்லர். சூனியத் தொடர்புள்ள வாம மார்க்க மாந்தரிகத்தில் மூழ்கியவரே. இம் மக்களின் கிளைப் பிரிவினர்கள் ஆப்பிரிக்காக் கண்டத்தின் கிழக்குக் கரையில் வாழ்ந்து வந்தனர்.

உம் தாயுந் தந்தையும் அண்டை அயலாருடன் அவ்வளவாகப் பழகுவதில்லை. அவர்களைத் தம்மினுந் தாழ்ந்தவரென்றே யெண்ணினர். ஆனால் அவர்களும் உங்களை அவ்வாறே மதிக்கின்றனர். உங்கள் நிறமும், குலமுமே இவ்வெண்ணத்திற்குக் காரணம்.

சுற்றிலுமுள்ள நாடு செழிப்புடையது: நன்றாய்ப் பயிரிடப் படுவது. திராக்ஷைக்கொடி, கருவாப்பட்டை மரம் முதலியவை செழித்து வளர்கின்றன. இவற்றுள் திராக்ஷை இன்றளவும் வளர்க்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. உம் தந்தை வணிகத்தொழில் நடத்துகின்றார். முற்கூறிய பொருட்களில் தான் முக்கியமாக வியாபாரம். அவற்றை வாங்கி, மரப்பட்டைகளில் பொதிந்து, கடற்கரைக்கனுப்புவதே அவர் தொழில். கம்பளி, பருத்தி யென்னுமிரு நூற்களாலுமான துணிகள் நெய்யப்படுகின்றன. அவை வெகு நேர்த்தியாகச் சாயமேற்ற

வும்படுகின்றன. பெயர் பெற்ற "டமாஸ்கஸ்" நகரத்துவாட்களைப்போலச் சாலச் சிறந்த வாட்களும் வடிக்கப்படுகின்றன. அவை நல்லுறுதியும், மிருதுநெளிவுமுடையவை. அங்கு நல்ல பிங்கான் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. உம் தந்தை நவரத்தின வியாபாரமுஞ் செய்கின்றார்.

பத்தாட்டைப்பிராயத்தில் நீர் கண்ணுங்கருத்துங் குளிர்விக்கும் மகனாய்க் காணப்படுகின்றீர்—நீண்டுருண்ட முகம்; நீண்ட கூரிய மூக்கு: நன்றாய்த் திரண்டமைந்த கைகள்: ஸைரியக்கலப்பற்ற இரத்தம். நீர் மூவேறு மொழிகளில் எழுதவும் படிக்கவும் பழகுகின்றீர். இரண்டு மொழிகளின் எழுத்துக்கள் இடமிருந்து வலமாக எழுத்துக்கள் பின் நோக்கி எழுதப்படவேண்டும் (அரபி பாஷைபோல). இவற்றில் முதலிரண்டு மொழிகளைத்தான் நீர் பெரும்பாலும் உபயோகிக்கின்றீர். சிற்சில சமயங்களில் நீர் அம் மூன்றும் மொழியில் கையெழுத்திடுவதுண்டு. இம் மொழியைக் கருணை பொருந்திய பூசாரியான உம் ஆசிரியரிடமும், உம் தந்தையிடமுங் கற்றுத்தேர்ந்தீர். நீர் உருவக்கணிதம், எண் கணிதம், எழுத்துக்கணிதம் என்னும் பலவகைக் கணிதங்களையுங் கற்கின்றீர். மதப்பயிற்சி அவ்வளவதிகமில்லை. ஏதோ சில பழமொழிகள், நல்லுரைகள், மந்திரங்கள் இவற்றை மனனஞ் செய்வதுதான் உமது மதப்படிப்பு. வடதிசையிலுள்ள "ஆட்" ஜாதி மாந்தரிகர்களுக்குப் பயந்து தற்காப்பாய் இம் மந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. மேற்சொன்ன மாந்தரிகக் கூட்டம் உண்மையில் உள்ளதோ இல்லையோ, உங்களுக்கு நிச்சயமாய்த் தெரியாது. ஆனால் அவர்கள் மனிதரை மயக்கிக் கவர்ந்து செல்வதைப் பற்றிப் பல கதைகளும் நடமாடுகின்றன. அவர்களால் உங்களுக்குப் பயமும் மனத்தடுமாற்றமும் மிக உண்டு.

நீர் வளரவளர, தர்க்கம், வேதாந்தம், யோகநெறி இவற்றால் கவரப்படுகின்றீர். இக் குணம் உமது முந்திய பிறப்பின் தொடர்பாகும். நன்னெறி வழிப்பட்டதன்றாயினும் நீர் கேள்விப்படும் மாந்தரிகத்தைப்பற்றி அறிய ஓரவாப் பிறக்கின்றது. அம் மாந்தரிகம், ஆவிகளையும், அருவுருவச்சக்திகளையும் பூசிப்பதால் கிடைக்கும் தீச்சக்தி யுடையதென்றும், முற்கால மனிதரறிந்தவற்றை அந் நாளிலும் அறிந்தவர் சிலர் இருக்கின்றார்களென்றும் பலவாறாக மக்கள் பேசிக்கொள்கிறார்கள். நீர் உம் தந்தையின் வணிக நிமித்தம் வெளியூர்களுக்குச் செல்லும்போதெல்லாம் அச் சிலரைப்பற்றி யறிய முயலுகின்றீர்.

வடமேற்குக்கரையிலுள்ள "ஸா அநெ" என்னும் நகரத்தில் அத்தகைய மக்களைத் தேடியலைகின்றீர். கடைசியாகத்

தென்னுட்டில் வைத்து அக் கலையில் வல்ல பேராசிரியர் ஒருவரைச் சந்திக்கின்றீர். அவர் இன்னற்படுமோர் ஏழை; மாந்திரிகக் கலையால் பொருட்பயன் பெற்றவரல்லர்: எனினும் தம் சக்திகளில் பெரும் நம்பிக்கை கொண்டவர். அக் கலையின் பழக்கங்களும், கிரியைகளும் வெறுப்பைத்தருவன. உயிர்ப்பலியும், பலவகையான வெறுக்கத்தக்க செயல்களும் அதிலுண்டு. ஒரு வெள்ளாட்டைக் கொன்று, அதன் மாமிசத்தையும் சில பச்சிலைகளையும் ஒரு கந்தல் துணியில் பொதிந்து ஒரு மந்திரக் கவசம் உண்டாக்கப்படுகின்றது. இதற்கு மக்களை மயக்குஞ் சக்தியுண்டு. இக் கலையிலுள்ள சக்திகளெல்லாம் புன்தொழில் பற்றியவையே—ஒரு முழு நகருக்கே நஞ்சிடல், மழை பெய்வித்தல், பெண்களை மயக்கும் மை, முதலியவை; ஒபியா, வூடு என்னுந் தற்கால மாயாமந்திரப் பழக்கங்கள் போன்றவை. இவையெல்லாம் லெமூரியக் கலையறிவில் இழிந்து சிதைந்த வோர் பகுதியாகும். இது உமக்குப் பிடிக்கவில்லை. இக் கலை நுணுக்கங்களையெல்லாம் எழுதியெடுத்தபோதிலும், நீர் அவற்றை உபயோகிப்பதில்லை.

உம்மிடம் கலைச்சுவை மேம்பட்டு நிற்கவில்லை. ஆயினும் உமக்குச் சித்திரத்தில் சிறிது நோட்டமுண்டு. அழகிய பளப்பளப்பான எழுத்துக்களாலான சில கோர்வைகளை நீரே உண்டாக்குகின்றீர். இப்போது அமைதியும் மேன்மையுமுள்ள வாழ்க்கை நடத்துகின்றீர். வாணிகத்தால் பணம் சேர்க்கின்றீர். இல்வாழ்க்கையில் அசாதாரணச் சம்பவம் ஒன்றும் நேரவில்லை. இவ் வமைதி பொருந்திய வாழ்க்கையி னிறுதிக் காலத்தில் சென்ற வொரு பிரயாணம் குறிப்பிடத்தக்கது. வியாபார நிமித்தம் நீர் மிளகும், முத்தும் வாங்க “ஸொகொட்ரா” என்னுந்தீவிற்குச் செல்லுகின்றீர். அங்கு வாழும் மக்கள் ஸோமாலியரைப்போல லெமூரிய வம்சத்தவர். ஏகதேசம் காட்டுமிராண்டிகளைப் போன்றவர். மிளகு, தேங்காய், பேரீச்சம் பழம் இவற்றை விற்பவர். முத்துஞ்சிப்பியும், அழகிய நிறம்படைத்த பறவைத்தோலும் அணிகலன்களாக உபயோகிப்பவர். அதிகம் ஆடையொன்று மணியாதவர். அவர்கள் உம்மிடமிருந்து நல்ல நிறமுந்திறமுமுடைய துணிகளும், வாட்களும், ஒரு மாதிரி முரட்டுப் பீங்கான்களும் வாங்குகிறார்கள். அத் தீவில் மிகப் பழமையான ஸைக்லோப்பியன் கட்டிடங்களின் சிதைவுகள் காணப்படுகின்றன. பழைய லெமூரிய மாந்தரிகமும் சிறிது காணப்படுகின்றது. அவை உம் அறிவை விசாலப்படுத்துகின்றன.

உமது சொந்த நகரில் அரசியல் நடப்பு பின்வருமாறு: அரசாங்கத்தில் அதிகந்தலையிடாத ஓர் அரசனும், ஒரு மாதிரி

யான நியாயாதிபதிகளும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் இருக்கின்றார்கள். ஆனாலும் மக்கள் சுயேச்சையாகவே வாழ்கின்றார்கள். அரசியல் அத்துணை முக்கியமானதாய்த் தோன்றவில்லை. உமது வாழ்க்கையில் சில காடுமுரடுகளும் ஏற்படுகின்றன. ஒரோர் சமயம் சரக்குப்பொதிகள் வழியிற் கொள்ளை போய்விடும்; அல்லது அதுபோன்ற சில விஷமங்களேற்படும் நகரிலுள்ள பெரிய மனிதர்களில் ஒருவராக நீர் மதிக்கப்படுகின்றீர். உம்மிடம் பலரும் ஆலோசனைக்கு வருகின்றார்கள். ஏனையவரைவிட எவ்வளவோ படித்தவர் என்ற பெயரும் உமக்கு ஏற்படுகின்றது. யோக விஷயங்களில் உமக்குப் பெரும் பற்றுதல் உண்டு. வான சாஸ்திரம், ஜோஸ்யம் என்னுமிவற்றில் நீர் தேர்ந்தவர். உமது கல்வியாலும் குணத்தாலும் விவேகியெனப் பலராலும் போற்றப் படுகின்றீர். வடதிசையிலுள்ள மாந்தரிகர்களைத் தேடிக் காண ஆயத்தம் செய்வதில் நீர் உமது வாழ்க்கையில் பெரும் பகுதியைக் கழிக்கின்றீர். பல காரணங்களாலும் இம் முயற்சி அஞ்சத் தகுந்ததெனினும் உமக்கு மந்திரதந்திரங்களிலுள்ள விருப்பமே இதைச் செய்யத் தூண்டுகின்றது.

கடைசியாக முதுமைப் பருவமும் வந்தெய்துகின்றது. நீர் இவ் வாழ்க்கைத் திரையினின்றும் மறைகின்றீர். உமக்கு ஞான உணர்ச்சி அதிகமாய் இல்லாவிட்டாலும், உள்ள உணர்ச்சி சரியான முறையிலேயே அமைந்திருந்தது. உமக்குப் பல மக்கள் பிறந்திருக்கின்றனர்.

பிறப்பு: 2158 கி. மு. } வயது 68 ஆண்டுகள்
இறப்பு: 2090 கி. மு. }
மேலுலக வாழ்வு 1517 ஆண்டுகள்

14. பாரசீகம்—ஆண்

கி. மு. 573—கி. மு. 561

அடுத்ததாக நீர் பிறந்த இடம் பாரசீக சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியோ அல்லது பாரசீக மன்னருக்குக் கீழ்ப்பட்ட ஒரு நாடோவாகும் உங்கள் மன்னர் மேற்றிசையில் வாழும் "ஹொர்மிகான்" என்பவர். உங்கள் நாட்டின் பெயர் "பாக்ட்ரா." உங்கள் நகரமிருப்பது ஆப்கனிஸ்தானத்தின் கிழக்கெல்லையின் அருகுள்ள "பாரோபாமிஸன்" மலைத்தொடருக்கு வடக்கிலாகும். அங்கு வாழும் மக்கள் அக்னி, ரவி என்னுந் தேவதைகளை வணங்குபவர். அவர்களது ஆலயங்கள் அலங்காரமோ, ஆசனங்களோ இல்லாத விசாலமான இடங்கள். அங்குள்ள பூசாரிகள் சிறந்த அறிவாளிகள்.

நீர் "ஸகால்ஸைர்" என்று அழைக்கப்படுகின்றீர். நீரும் உமது சகோதரியும் இரட்டைப் பிள்ளைகள். நீங்கள் பிறந்ததும் உங்கள் ஜாதகம் கணிக்கப்படுகின்றன. சோதிடவல்லுநர் அது துரதிர்ஷ்ட ஜாதகம் என்று சொல்லுகின்றனர். உமது பெற்றோர் செல்வமுஞ் செல்வாக்குங் கல்வியுணர்ச்சியு முடையவர்கள். உங்கள் இருவரில் ஒருவருக்குத் துன்பம் நேரிடும் என்ற எதிர் காலப் பயன் அவர்களைக் கவலைக்குள்ளாக்குகின்றது. இதனால் உங்களிருவரையும் பிரித்துவைத்துத் தனித்தனியே வளர்க்கலா மென்றெண்ணுகிறார்கள்.

உமக்குக் கவனமாகக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. எழுதப் படிப்பது பெரிதுங் கவனிக்கப்படுகின்றது. நீர் செய்யுட்களைப் படிப்பதிலும் எழுதுவதிலும் ஊக்கமெடுக்கின்றீர். உமக்குக் கற்பனையுங் கவிநடையும் மிக எளிதில் தோன்றுகின்றன. உங்களுக்குச் சமய இலக்கியங்களும் புகட்டப்படுகின்றன. நீங்கள் கற்பது ஸோராஷ்ட்ரிய மதம் அதாவது இன்றைய பார்ஸி மதம். நீங்களிருவரும் கனிவும் காண்பதற்கழகுமுள்ள நல்ல குழந்தைகளாகக் காணப்படுகின்றீர்கள் நீர் மாத்திரம், முந்திய பிறப்பிலிருந்த துருதுருவென்று துள்ளி விளையாடும் உல்லாசக் குழந்தைபோலல்லாமல், சாந்தமும், தன்னடக்கமுமுள்ள கல கலப்பற்ற குழந்தையாயிருக்கின்றீர்.

நீரும் உம் சகோதரியும் அதிகமாக உடற்பயிற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இப் பயிற்சி பெரும்பாலுங் குதிரையேற்றந் தான். இதில் நீங்களிருவருந் தேர்ந்தவர்களாகின்றீர்கள். உம் சகோதரி ஆண்களைப் போலவே குதிரைச்சவாரி செய் கிறாள். இருவரும் ஏகதேசம் ஒரே மாதிரி உடையுடுத்தியிருக் கின்றீர்கள்; இருவரும் கால்சட்டை யணிந்திருக்கின்றீர்கள்; நீண்ட தலைமுடியுடையவர்களாயிருக்கிறீர்கள். பத்தாட்டைப் பிராயத்தில் உங்கள் வயதுக்குக் கூடுதலான கல்வியறிவும், கல்விப் பற்றுமுடையவர்களாயிருக்கின்றீர்கள்.

உங்கள் நாட்டு மக்கள் வடதிசையிலுள்ள ஒரு துரானியக் கூட்டத்தின் சூறையாட்டங்களுக்குப் பயந்திருக்கின்றார்கள். அம் மக்கள் தார்த்தாரியர்; கொடுமையுங் கொடூரமும் நிறைந்தவர்; உங்கள் மக்களால் காட்டுமிராண்டிகள் என்று கருதப்படுபவர். அக் கூட்டத்தவரது கொடூரமும், ஜனத்தொகையும் உங்களுக்குச் சதா பயத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது.

நகரையடுத்தொரு ஏரியுள்ளது. அவ் வேரியில் நீரும் உம் சகோதரியும் படகு விடுவது வழக்கம். உங்கள் படகு நல்ல விசாலமுள்ளது. முக்கோண வடிவமான ஒரே ஒரு பாய் மரங்

கொண்டது. வழக்கம்போல் ஒருநாள் நீங்கள் படகுக்காரனுடன் படகு விடுகின்றீர்கள். அன்று கொடுங் காற்றும் நீர்க் கொந்தளிப்புங் காணப்படுகின்றன. திடீரென்று சுழற்றி வீசிய ஒரு காற்றினுல் படகு கவிழ்கின்றது. படகுக்காரனும், நீங்கள் இரு குழந்தைகளும் படகின் ஒரு பக்கத்தில் ஏறியுட்கார முயற்சித்தும் முடியவில்லை; பாய்மரம் நனைவுறவே, அது படகை நீரில் ஆழ்த்திவிடுகின்றது படகுக்காரனுக்கு நன்ருய் நீந்தத் தெரியும். அவன் இரு குழந்தைகளையும் பிடித்துக்கொண்டு கரைக்கு நீந்த முயற்சிக்கின்ருன். ஆனுல் கரையோ ஒரு மைலுக்கப்பாலுள்ளது; தண்ணீரோ கொந்தளிக்கின்றது. எனவே அவன் திரும்ப வேண்டியதாகின்றது. உம் சகோதரியை மாத்திரங்கொண்டு செல்லும்படி நீர் அவனை வேண்டுகின்றீர். ஆனுல் அவன் கேட்பதாயில்லை. கடைசியாக உமது கட்டாயத்தின் பேரில் அவளுடன் கரைக்குப் புறப்படுகின்ருன். மிகப் பெரு முயற்சியால் திணறிக் கரையடைகின்ருன். உம் சகோதரி நினைவிழந்திருக்கின்ருள். அவளுக்கு வேண்டுவன செய்ய ஆட்பிடித்து ஏற்படுத்திவிட்டு, பின்னுஞ் சிலருடன் உம்மைக் காப்பாற்ற ஒரு படகில் வருகின்ருன். ஆனுல் இதற்குள் படகும் குழந்தையும் மறைந்துவிடுகின்றன. உமது ஜாதகமும் பலித்துவிடுகிறது.

நீர் வெளிறிய முகமும், விரிந்த கண்களும், நிறைந்த சாந்தமுமுடைய சிறந்தபிள்ளை. புவர் லோகத்தில் உம்மைச் சில தேவதைகள் காத்துநிற்கின்றன. அங்குள்ள காலமுழுதும் நினைவிழந்த நிலையிலேயே கழிகின்றது. சீக்கிரத்தில் நீர் சுவர்க்க லோகமடைகின்றீர். இங்குள்ள காலம் நீண்டதல்ல. உமது குறுகிய வாழ்க்கைக்குத் தகுந்த காலமே இங்கிருக்கின்றீர்.

பிறப்பு: 573 கி. மு. } வயது
இறப்பு: 561 கி. மு. } 12 ஆண்டுகள்

மேலுலக வாழ்வு—41 ஆண்டுகள்.

சகோதரி (இரட்டைப்பிள்ளை)—மாசி.

15. ஆதென்ஸ்—ஆண்

கி. மு. 520—கி. மு. 449

இங்கு நீர் முற்றிலும் வேருன ஓரிடத்தில் ஒரு வளைகுடாவை யெதிர்த்தமைந்தவோர் வீட்டிலிருக்கின்றீர். (லெட்பிற்றர் இங்கு தாராளமாய்ப் பழகுகின்ருர், ஜான் வார்லி) அவ்விடத்தைச் சுற்றிலுந் தூண்களுள்ளன; அது தற்கால ஏதென்ஸ் நகரமிருக்கும் பகுதியிலுள்ளது. பார்த்தினன்

முதலிய பிரசித்திபெற்ற கட்டிடங்கள் அங்குப் பிற்காலத்தி லேயே தோன்றுகின்றன. இக் காலம் 520 கி. மு. (லெட் பிற்றர் இப் பிறப்பில் என் அண்ணனுயிருக்கின்றார். ஜான் வார்லி) உம் பெயர் அகாதக்லீஸ்.

இங்கு நாம் கூத்துங் கும்மாளமுமாக வளர்ந்து வருகின் றோம். பலவித தேகப் பயிற்சிகளும் செய்கின்றோம். ஓட்டம், சாட்டம், குஸ்தி, வளையமெறிதல் முதலியவற்றில் உற்சாகத் துடன் பங்கெடுத்துக் கொள்கின்றோம். நாடு அழகுள்ளது; சிதோஷ்ணநிலை தற்காலத்தியதினும் மேம்பட்டது. நமது கல்வி கருத்துடன் ஒழுங்காக நடைபெறுகின்றது. நாம் கல்வி கற்பதில் ஊக்கமும் உற்சாகமு முடையவர்கள். புராணக் கதைகளோடு, பழங்காலச் சரித்திரமும் படிக்கின்றோம். சரித்திரம் அத்தனை சரியானதல்ல பழைய ட்ரோஜன் சண்டையைப்பற்றி, ஆவேசத் துடன் அறிகின்றோம். அக் கதையிலுள்ள பல நிகழ்ச்சிகளையும் நடித்துப் பழகுகின்றோம். நமது மதபோதனை சில பழமொழி களே.

"பாலஸ் அதினு" நமது குலதெய்வம். ஆடத்துக் காலங் களில் அவ்வம்மையின் உதவியை நாடும்படி கற்பிக்கப்படுகின் றோம். நமக்கு மறுலோக வாழ்க்கையில் நம்பிக்கையுண்டு; அது ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையென்றே கருதுகின்றோம். நாட்டுமக்கள் சுதந்திரமும், சிநேக குணமும், மகிழ்மனமுங் கொண்டவர்கள். ஆனல் சிறிது கபடமுடையவர்களே. இவ் விள வயதில் நடந்த முக்கிய சம்பவம் நாம் "ஒலிம்பிக்" பந்தயம் என்ற பொது விளையாட்டுக்களில் பங்கெடுத்துக்கொள்வதே யாகும். இவ் விளையாட்டுக்களில் மிகுந்த அக்கரையுடையவர் களாயிருக்கின்றோம். நம் குடும்பம் நன்னிலையிலுள்ளது; நமது முன்னேற்றத்திற்கு வேண்டிய வாய்ப்புகள் தருவது.

நமது பந்துக்களில் ஒருவர் தம்முடைய கப்பலில் நம்மை யொரு கடற்பிரயாணத்திற் கழைக்கின்றார். நாம் நமது தீவுக் கூட்டத்தில் ஒவ்வொரு தீவாகச் சுற்றியலைகின்றோம். கரை சேரும் பொழுதெல்லாம் வியக்கத் தகுந்த கோவில்களையும் விநோதக் கற்சிலைகளையும் ஊன்றிக் கவனிப்பதில் உளமகிழ்கின் றோம். வாணிபத்திற்காகவே நாம் கடற் பிரயாணம் செய்கின்றோ மெனினும் அது மிகவும் சாவதானமாக நடப்பதால், நாம் தங்கும் பலவிடங்களிலுமுள்ள அழகுப்பொருட்களை யனுப விக்கப் போதிய சமயமிருக்கின்றது

இப் பிரயாணத்தின் முக்கிய சம்பவம் "ஸாமாஸ்" நகரில் "பைத்தாகோரஸ்," என்னும் தத்துவஞானியைக் கண்டதாகும்.

மிகுந்த பயபக்தியுடன் நாம் அவரை அணுகுகின்றோம். அவரைக் கண்டு, அவர் பேசுவதையுங் கேட்கின்றோம். அவர் இச் சமயத்தில் முதுகிழவராயிருக்கின்றார். அவர் அந்திய காலத்தினின்றும் அதிகம் முந்தியதல்ல அது. நாம் பிரியும்போது ஆசி கூறுகையில் "நாம் இனியும் சந்திப்போம்," என்று கூறுகின்றார். அவரது சீடர்களில் ஒருவரான "க்லீனியஸ்," என்பவர் நமக்கறிமுகமாகின்றார்; அவரது அன்பையும், சிறந்த புத்திமதியையுங் கிடைக்கும் பாக்கியம் பெறுகின்றோம். "க்லீனியஸ்" புகட்டும் தத்துவ சாஸ்திரத்தில் நமக்குப் பெரிதுங் கவர்ச்சியுண்டாகின்றது. உடனேயே அவரது சீடர்களாகச் சேரவேண்டுமென்று விழைகின்றோம்.

இதற்கவர் அனுமதி கேட்கின்றோம். அவர் கருணையோடு நமக்கு வேண்டுவன கற்பிக்கின்றார். தினமும் அவரின் சீடர்களுடன் அமர்ந்து, அவரது சொற்பொழிவுகளைக் கேட்க அனுமதிக்கின்றார். இந்த அன்றாடச் சொற்பொழிவுகளிலும் பேட்டிகளிலும் அவர் சொல்பவற்றைக் கவனமாய்க் கருத்தில் கொண்டு, அவர் புகட்டும் பேருண்மைகளின்பால் உரத்த உள்ளன்புடையவர்களாயிருக்கின்றோம். இங்கு நாம் மறுபிறவித் தத்துவம், ஒழுக்க நூல், எண்ணங்களின் இரகசியம் இவற்றைக் கற்கின்றோம். நாம் ஊருக்குத் திரும்பவேண்டிய சமயம் அடுக்கின்றது. எனவே, ஓராண்டுப் பிரயாணத்தை இவ்வாறு இன்பமாய்க் கழித்தபின்பு ஏதென்ஸுக்குப் பயணமாகின்றோம்.

க்லீனியஸ் போதித்த கிடைத்தற்கரிய பேருண்மைகளைப் பற்றிய நம் குறிப்புகளையும், அவரது கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றையும் ஏதென்ஸுக்கு எடுத்துச் செல்லுகின்றோம். அக் கருத்துக்களைப் படிப்பதில் மிகுந்த ஊக்கமெடுக்கின்றோம். "பைத்தாகொரஸ்"ஸைப் பின்பற்றுபவர்களை ஏதென்ஸில் தேடிப் பிடித்து அவர்களுடன் அவ்வுண்மைகளை ஆராய்கின்றோம். தீவுகளினிடையில் சுற்றித் திரிந்த காலத்தில் நீர் சிற்பக் கலையில் சாலவுஞ் சிறந்த சிலைகளால் பெரிதும் கவரப்படுகின்றீர். இதனால் நீர் ஒரு சிற்பியாகத் தீர்மானிக்கின்றீர் என்றறியும் பாக்கியமடைந்தோம். உமது நேரமுழுதும் சிற்பக் கலையில் தேர்ச்சி பெறுவதிலும், (Pythagoras) பைத்தாகொரஸ்ஸின் தத்துவங்களை ஆராய்வதிலுமாகக் கழிகின்றது. பிற்காலத்தில் க்லீனியஸ் ஏதென்ஸில் குடியேறுகின்றார்: நாம் அவரது மாணவர்களாகின்றோம். அவரின் போதனைகள் பெரும்பான்மையான மக்களைக் கவருகின்றன.

பாரசிகர்களுக்கும் நம்மவர்களுக்குமிடையேயுள்ள பூசல்கள் இப்பொழுதுதான் தொடருகின்றன. ஓயாத தொல்லையும்

உபத்திரவங்களும் அடிக்கடி உண்டாய்க் கொண்டிருக்கின்றன. கடைசியாகப் பாரசிகப் படையெடுப்புண்டாகின்றது. உலகப் பிரசித்திபெற்ற "மாரதான்" போரில் நாமிருவரும் கலந்துகொள்கின்றோம். இச் சண்டையைப் பற்றிக் கிரேக்கர்கள் எழுதிய குறிப்புக்கள் சற்று மிகைப்படுத்திக் கூறுபவையே. பாரசிகர்கள் எண்ணத்தால் மேம்பட்டவராயினும், கிரேக்கர்களைப் போன்று வென்றுஆண்டு வாழ்வு, அன்றேல் உள்ளது சாவென்னும் இறுதி வீராவேசத்தோடு போரிடவில்லை. அவர்கள் முழுமனதோடும் தாக்கவில்லை. எஃதெப்படியான போதிலும், இம் மாபெரும் போரில் நமது முழு வன்மையையுங் காண்பித்தோம். அநேகமாக எல்லாக் கிரேக்கர்களுமே மிகுந்த வீரத்துடன் போர்புரிந்தனர்.

"ஸாலமிஸ்"ஸில் நடந்த கடற்சண்டையிலும் நாம் போர்புரிந்தோம். இச் சண்டை மிக்க கொடூரமானது. இதில் வீரர்கள் நேர்நின்று ஒருவரோடொருவராய்க் கைகலந்தனர். பகைவர்களின் படகோடு படகாய் ஒட்டி நிறுத்தி, பின் நிற்பவர்கள் எறியீட்டி வீச, அப் பாதுகாப்போடு பகைவரது படகில் குதித்து, வாள் கேடயம் ஈட்டி முதலியவற்றால் போரிட்டோம்.

கொஞ்ச காலம்வரை பாரசிகர்கள் நம்மைச் சும்மாவிட்டார்களில்லை. ஒளிந்து திரிந்து உபத்திரவித்தனர். இதன்பின் நாம் ஏஷ்யாமைனரில் குடியேறிய கிரேக்கர்களுக்குதவியாய் பாரசிகர்களுடன் போரிட்டோம். "பிளாட்டியா"ச் சண்டையிலும் பங்கெடுத்தோம். இப் போராட்டங்களுக்குப் பின் நாம் ஏதென்ஸ் திரும்புகின்றோம்.

நீர் உமது சிற்பத் தொழிலைத் தொடருகின்றீர். பழைய வீட்டிலேயே பெருமுயற்சியிலீடுபடுகின்றீர். சில அழகிய உருவங்களைச் செதுக்குகின்றீர். நாம் இன்னும் க்லீனியஸ்ஸுடன் தொடர்புடையவர்களாயிருக்கின்றோம்: அவரிடம் பின்னும் படிக்கின்றோம். அவர் வீட்டில், அறிவுரைகள் கேட்கவும், ஆராய்ச்சி நடத்தவும் மாணவர்குழாங் கூடுகின்றது. வினைப் பயன், மறுபிறவி என்னுந் தத்துவங்கள் புகட்டப்படுகின்றோம். ["வினைப் பயன்" என்னுந் தத்துவம் அக் காலத்தில் ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்யுந் தத்துவமென்று வழங்கப்பட்டது.]

காலமிஸ் என்ற புனைபெயரோடு மிகச் சிறந்த சிலைகள் சில செய்கின்றீர். வேதாந்த ஆராய்ச்சிக்கு எவ்வளவோ நேரம் செலவிடுகின்றோம். முந்திய பிறப்புக்கள் சிலவற்றில் நாம் ஒன்றாயிருந்தோமென்று க்லீனியஸ் நமக்குரைக்கின்றார். அவற்று

ளொன்றைப் பற்றி விரிவாயெடுத்துரைத்தாரென்றுந் தோன்றுகின்றது. (லெ. எழுபதாம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.) நீர் பின் ஐந்தாண்டுகள் கழித்திறக்கின்றீர். நம் பிரிவு வருத்தந் தருவதல்ல. ஏனெனில் சாவென்பதென்னவென்றும், மேல் வரும் பிறப்புக்களில் நாம் ஒன்றாய்ப் பிறப்போமென்றும் நமக்குத் தெரியும். புவர்லோகத்தில் ஒரு விநாடியுந் தாமதியாமல், தேவலோகத்தில் பன்னெடுங்காலம் வாழ்கின்றோம். உமது தேவலோக வாழ்க்கையினளவு 1952 ஆண்டுகள். [இங்கு ரோகிணியின் 23-வது பிறப்பையும் ஒப்பு நோக்குக. பக்கம் 167. அப்போது ரோகிணி, இக்கதாநாயகனுக்குத் தமையன் (லெட்பீற்றர்) மகன்.]

பிறப்பு :	520 கி. மு.	}	வயது 71
இறப்பு :	449 கி. மு.	}	ஆண்டுகள்.

மேலுலக வாழ்க்கை : 1952 ஆண்டுகள்.

C. W. லெட்பீற்றரின் குறிப்பு

ஓரளவு கீர்த்திபெற்ற கவியான "ஸைமானிடிஸ்" என்னும் நம் தந்தை "இயோஸ்" என்னுந் தீவில் பிறந்தவர். நாம் பிறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் ஏதென்ஸில் குடியேறினர். இந்நூலில் அவரை, 'Appollo" என்ற புனை பெயரால் அழைக்கின்றோம். அவர் தந்தையான "Neptune", என்ற புனைபெயருடையவர் அன்று "லியோ பிரெப்பஸ்" என்னும் பெயர் படைத்தவர். வேதாந்த அறிவிற்கும், சீர்நிறைந்த வாழ்விற்கும் பெயர்போனவர் நம் தந்தையும் ஒரு அதிசய மனிதரே : அவர் பல துறைகளிலும் அறிவும் ஆற்றலுமுடையவர். அவர் கவிஞர் மட்டுமல்ல, ஒரு சிற்பி ; வேதாந்தி ; விஞ்ஞானி. வானநூல், கணிதநூல், இவற்றில் அவருக்குப் பற்றுண்டு. கணிதம், சங்கீதம் இவற்றினிடையிலுள்ள தொடர்பைப்பற்றி ஏதோ சில பல உண்மைகளை யுணர்ந்தவர். ஏழு தந்தி யாழில் எவ்வளவோ நன்றாக வாசிப்பார். பலகாலும், அவரது பாட்டுக்களை அவரே யாழில் வாசிப்பதுண்டு. அடிக்கடி அவர் வெளியூர்கள் செல்வார். சிற்சில சமயங்களில் பல ஆண்டுகள் கூட வேற்றிடங்களில் தங்குவதுண்டு. நம் தாயிறந்த பின்பு அவர் ஸிஸிலித் தீவிலேயே தங்கிவிட்டார். நாம் அவரைக்காண அங்குச் சென்றிருந்தோம். அங்கவர் பலராலும் போற்றிப் புகழப்படுவது கண்டோம். நம் தாய் அவரை எவ்வளவோ வியந்து போற்றினள் ; அவரது வேலையில் முழுமனதுடன் ஒத்துழைத்தாள். அவரின் கற்பனைகளில் சிறந்தவற்றில் சில அவள் தந்தனவென்று அவர் அடிக்கடி சொல்வதுண்டு.

16. ஜெர்மனி — ஆண்
கி. பி. 1503—கி. பி. 1522

இன்றைய வாழ்க்கைக்கு முன் இன்னுமொரு முறை நீர் பிறக்கின்றீர்: பிறப்பிடம் பவேரியா நாட்டில் "டானியூப்" நதிக்கரையிலமர்ந்த "ரெகென்ஸ் பெர்க்" என்று சொல்லப்படும் ராற்றிஸ்பன் நகரம். உமது சித்திரக் கலையுணர்வே உம்மை இத் தடவை இத் தேசத்தூக்கிழுக்கின்றது. உம் தந்தை அச்செழுத்துக்களும், உலோகத் தகட்டுப் படங்களும் (Engraving) உண்டாக்குபவர். அநேகமாக ஆல்பிரெட் ட்யூரரின் (Durer) மாணவராயிருக்கலாம். அவர் பெயர் "ஆல்ப்ரெக்ட் அல்ட்டார் பெர்"; உமது பெயரும் அதுவேயாம். உம் தந்தை சிற்பத்திலுஞ் சிறந்தவரே. ஆனால் உலோகத்தகட்டுப் படங்கள் வரைவது தாம் அவரது தனிக்கலை.

இளவயதிலேயே நீர் உம் தந்தை எழுதுபவற்றை உன்னிக் கவனிக்கின்றீர். சீக்கிரத்திலேயே சித்திரக் கல்வியுங் கலைத்திறனும் பெற்று, உமது பதினைந்தாம் வயதில் தந்தையுடன் நீரும் படமெழுதுகின்றீர். உம் படங்களுக்கும் உம் தந்தையின் படங்களுக்கு மிடையில் அத்துணை வித்தியாசமுமில்லை. உண்மையில் உம் தந்தையின் படங்கள் என்று கருதப்படுவனவற்றில் பல உம்முடையனவே. இருவரும் ஒரே பெயருள்ளவராதலின் படத்திலுள்ள பெயர் ஒன்றேதான். உங்கள் வேலை மிகவுஞ் சிறந்தது; பலரும் போற்றுவது. பழங்காலப் பெரும் படங்கள் பலவற்றை உலோகத் தகட்டால் அச்சிடும் (Engraving) வேலை உம் தந்தைக்குக் கிடைக்கின்றது. இப் படங்களில் சில மதசம்பந்தமானவை. அச்செழுத்துக்களும், அச்சுப் படங்களும் செய்வதில் உமது பொழுது கழிகின்றது. "ஆல்பிரெட் ட்யூரரின்" பேர்போன "சாவுவீரன்" என்னும் படம் உங்கள் இருவராலும் வரையப்படுகின்றது.

உம் மதக்கொள்கைகள் அசாதாரணமானவை. உமது காலத்திற் கெவ்வளவோ முற்போக்கானவை. ஏனெனில் கிருஸ்துவ மதத்தின் பொதுக் கொள்கைகளைக் கையாண்ட போதிலும் . பிற்காலச் சீர்திருத்தக்காரர்களின் கொள்கைகள் போன்றவை பலவற்றையு முடையவராயிருக்கின்றீர்.

பிறப்பு : 1503 கி. பி.	வயது	மேலுலக வாழ்வு :
இறப்பு : 1522 கி. பி.	19 ஆண்டுகள்.	328 ஆண்டுகள்.

குறிப்புக்கள் :—மேற்சொன்ன பிறப்பின் பின் இந்தப் பிறப்பில் கி. பி. 1850-இல் இங்கிலாந்தில் பிறந்தனர். அவ் வாழ்க்கை (பக்கம். 182) முன்னுரையில் கூறப்பட்டுள்ளது. இந்நூலின்படி 17-வது பிறப்பு அதுவேயாகும்.

முடிவுரை

உயர்திரு. C. W. லெட்பீற்றர் துரை (வங்கப்பணி முனிவர்) அவர்கள் தமது நெற்றிக்கண் ஆராய்ச்சியால் (Clairvoyant Investigation) வேறும் சிலருடைய முற்பிறப்பு வரலாறுகளை வெளியிட்டுள்ளனர். அவற்றுள் மிக அருமையும் விரிவும் உடையது ALCYONE என்ற அருபதி புராணம். உண்மையில் அது ஒரு புராணமே. நவீனகாலப் புதைபொருள் ஆராய்ச்சியாளருக்கும் எட்டாத—மிகப் பழங்காலமாகிப் போனதால் எட்டவும் முடியாத—பல அரிய விஷயங்களும் சரித்திர வரலாறுகளும் அந்நூலிலிருந்து தெரியவருகின்றன. இவற்றுள் எதனையாவது என்றைக்காவது யாராவது தமிழ்ப்படுத்த விரும்புவாரானால், அவர்களுக்குப் பயன்படும்பொருட்டு அங்குள்ள ஆங்கிலப் புனைபெயர்களுக்கு இந்நூலில் அமைத்துள்ள தமிழ்ப் புனைபெயர்கள் ஜாபிதா ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இன்றையத் தமிழுலகில் பல அரிய தமிழ் வாரவெளியீடுகள் பலராலும் போற்றிப் படிக்கப்படுகின்றன. அருபதி வாழ்க்கை வரலாற்றில் மாதமொன்றை யாராவது அவற்றில் வெளியிடுவாரானால், அது பலருக்கும் அறிவு விளக்கம் தருவதாயிருக்குமென்று தெரிவித்துக்கொண்டு, அன்னை வஸந்தம்மையாரின் ஒற்றுமைப் பிரார்த்தனையுடன் வாசகர்களிடம் விடைபெற்றுக் கொள்கிறோம்.

UNITY PRAYER

(Dr. Annie Besant)

O Hidden Life! vibrant in every atom!
O Hidden Light! shining in every creature!
O Hidden Love! embracing all in oneness!
May each who feels himself as one with Thee
Know he is also one with every other!

Om Shanti! Shanti! Shanti!

ஒற்றுமைப் பிரார்த்தனை

(அன்னை வஸந்தையார்)

அணுத்தொறும் ஒளிந்துநின் றாடும் பேருயிரே!
உயிர்தொறும் ஒளிந்துநின் றொளிரும் பேரொளியே!
அனைத்தொன்றாய் ஒளிந்துநின் றணைக்கும் பேரன்பே!
உன்னுடன் ஒன்றென உணர்பவர் யாவரும்
உலகொடும் ஒற்றுமை உணர்ந்திட அருளே!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வினையின் பயனே விதி:

அது பற்றிய

இறை நியதிகள்

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை. 1

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 2

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. 3

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 4

இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 5

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. 6

தேங்குவிண் போகமும் சிறந்த முத்தியும்
ஈங்குறும் ஆக்கமும் இனிது நல்கலால்
ஒங்கிய அறத்தினை உளமுன் மூன்றினும்
பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால். 7

மெத்துதிறல் ஆடவரும் மெல்லியல் நல்லாரும்
சித்தமுற நன்கினொடு தீதுசெயல் ஊழே!
உய்த்தபடி யல்லதிலையாம் உழவர் ஒண்செய்
வித்துபயனே யலது வேறு பெறலாமோ. 8

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு. 9

இறந்த பிறப்பில் தான்செய்த வினையைப்
பிறந்த பிறப்பால் அறிக—பிறந்திருந்து
செய்யும் வினையால் அறிக இனிப்பிறந்து
எய்தும் வினையின் பயன். 10

தானே புரிவினையால் சாரும் இருபயனும்
தானே அனுபவித்தல் தப்பாது—தான்நூறு
கோடி.கற்பம் சென்றாலும் கோதையீர் செய்தவினை
நாடிநிற்கும் என்றார் நயந்து. 11

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி. 12

தீங்குவந் தடையுமாறும் நன்மைதான் சேருமாறும்
தாங்கள்செய் வினையினாலே தத்தமக்காய வல்லால்
ஆங்கவை பிறரால்வாரா அமுதம்நஞ்சு இரண்டினுக்கும்
ஓங்கிய சுவையின்பேதம் உதவினார் சிலரும் உண்டோ. 13